வெளியீடு 03-03-2000

Issued 03-03-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


செவ்வாய்க்கிழமை, மே 18, 1999 - தொகுதி 83 - எண் 2

Tuesday, 18th May, 1999—Volume 83 - No. 2



*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

'ative Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[Price Rs. 3.00

**18-05-1999**

**உள்ளடக்கம்**

பக்கங்கள்


1. **வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 15, 16 மற்றும் 21) 169-248

(ஆ) உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன், அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 17 முதல் 20 வரை). 248-680

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

தேனி மாவட்டத்தில் வீரபாண்டியில் சித்திரைத் திருவிழாவின்போது ஏற்பட்ட தீ விபத்து. 681-690

திரு. என்.ஆர். அழகராஜா 681-682

திரு. ஐ. கணேசன் 682-683

திரு. லா. சந்தானம் 684-685

திரு. டி. மணி 685

திரு. சி. வேலாயுதன் 685-687

டாக்டர் க. கிருஷ்ணசாமி 687

திரு. பி.ஆர். சுந்தரம் 687-688

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 688-690

3. **கவன ஈர்ப்பு—**

விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று, அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 54 வரை). 691-764

221,201




பக்கங்கள்.

விதி 110-ன்கீழ் அறிக்கை—

அரியலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தொடங்குவது குறித்து பரிந்துரைக்க முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளது பற்றி முதலமைச்சரின் அறிக்கை. — 764-765

**5. தகவல் கோரல்—** — 765-770

(அ) தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கைக் கோருதல். — 765-767

(ஆ) திரு. தாமரைக்கனி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை. — 767-768

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் — 768-769

(ஈ) கொடுமுடியாறு திட்டம் நிறைவேற்றுதல் — 769-770

**6. அறிக்கைகள் அளித்தல்—** — 770-771

(அ) அவை உரிமைக் குழு — 770-771

(ஆ) மதிப்பீட்டுக் குழு — 771

(இ) பொது நிறுவனங்கள் குழு — 771

**7. அறிவிப்புகள்—** — 772

(அ) தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, *1999*, பேரவையில் அறிமுகம் செய்தல் (ஆ இ). — 772

(ஆ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு மற்றும் நியமனம்— — 853-863

*1.* மதிப்பீட்டுக் குழு - உறுப்பினர்கள் தேர்வு — 853-854

*2.* பொதுக் கணக்குக் குழு - உறுப்பினர்கள் தேர்வு — 855-856

*3.* பொது நிறுவனங்கள் குழு - உறுப்பினர்கள் தேர்வு. — 856-857

*4.* உரிமைக் குழு - உறுப்பினர்கள் தேர்வு — 857-858

*5.* பேரவை அலுவல் ஆய்வுக் குழு - உறுப்பினர்கள் நியமனம். — 858-859


D
V21,2,1996
M19.83.2




பக்கங்கள்.

**7. அறிவிப்புகள்—**தொடர்ச்சி.

*6.* சட்டவிதிகள் ஆய்வுக் குழு - உறுப்பினர்கள் நியமனம். — 859

*7.* அரசு உறுதிமொழிக் குழு - உறுப்பினர்கள் நியமனம். — 859-860

*8.* பேரவை விதிகள் குழு - உறுப்பினர்கள் நியமனம் — 860-861

*9.* அவைக் குழு - உறுப்பினர்கள் நியமனம் — 861

*10.* மனுக்கள் குழு - உறுப்பினர்கள் நியமனம் — 862

*11.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு - உறுப்பினர்கள் நியமனம். — 862-863

*12.* பேரவை நூலகக் குழு - உறுப்பினர்கள் நியமனம் — 863

**8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, *1999*. — 772

**9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, *1999*. — 773-805

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 773, 785, 788, 789, 791, 798-799, 800-805

திரு. ஆர். சொக்கர் — 773-781, 783-785, 790-791, 792, 798

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 780, 782-783

திரு. வி.கே. லட்சுமணன் — 781

திரு. கே. சுப்பராயன் — 782

திரு. மு. அப்பாவு — 785-792

பக்கங்கள்

அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

திரு. சி. வேலாயுதன் 793, 794
திரு. அ.வ. அப்துல் நாசர் 794, 795
திரு. ப. மோகன் கந்தசாமி 796
திரு. சி. ஞானசேகரன் 797, 798
திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் 799, 800
திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் 800

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1999 805, 806
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 805, 806

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 807, 808
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 807-808

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 808-810
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 809, 810

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 810-812
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 810, 811

(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 812-814
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 812,813,814

(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 814-816
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 814, 815

(ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1999 816, 817
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 816, 817





பக்கங்கள்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஐ) தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1999. 818, 819
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 818, 819

(ஒ) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 1999. 819, 829
*மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் 820,825-828
திரு. கே. சுப்பராயன் 820-823,824
திரு. டி. சுதர்சனம் 823-825

(ஓ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1999. 829-833
*மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் 829,831-833
திரு. வி.கே. லட்சுமணன் 829, 830
திரு. சி. ஞானசேகரன் 830,831

(ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 833-836
மாண்புமிகு திரு. கோ.சி. மணி 833,834,835
திரு. சி. ஞானசேகரன் 834

10. அரசினர் தனித் தீர்மானங்கள்— 836-839

(அ) மாநிலங்களின் பொதுக் கடன் மற்றும் அதனோடு தொடர்புடைய இடைநிகழ்வுகள் அனைத்தையும் முறைப்படுத்த இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியான சட்டம் கொண்டுவர நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்தல் 836, 837
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 836, 837

10. அரசினர் தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி. பக்கங்கள்.

(ஆ) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான தமிழ்நாடு சட்டம் 1920-ன் இணைப்புப் பட்டியலில் ஆளுநரால் செய்யப்பட வேண்டிய வரைவுத் திருத்தங்களுக்கு ஒப்புதல் 837-839

மாண்புமிகு திரு. கோ.சி. மணி 838

11. தனி நபர் தீர்மானம்—

தனியார் துறைப் பேருந்து நிறுவனத் தொழிலாளர்கள் மத்திய, மாநில அரசுகள் இயற்றியுள்ள சட்டங்களின் பயன்களைப் பெற முழுமையான செயல்முறை நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க முத்தரப்புக் குழு அமைக்கக் கோருதல் 839-853

திரு. கே. சுப்பராயன் 839-844, 845, 846, 848, 850-853

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் 844-852

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 852-853

12. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்— 864-877

13. அரசினர் தீர்மானம்—

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 878

14. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 879, 880


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 4, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 மே 18, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு."*

மாசற்றவர்களின் உறவை மறக்கவும் கூடாது; துன்பத்தில் துணை நின்றவர் நட்பைத் துறக்கவும் கூடாது.

### 1. வினாக்கள்-விடைகள்

**(அ) உடுக்குறியிடாத வினாக்கள்**
**(பட்டியல் 15, 16 மற்றும் 21)***

1—

**பதினைந்தாம் பட்டியல்**

**வரி விலக்கினால் ஏற்படும் இழப்பீடு**

**வினா எண் 18440—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் வரி விலக்கினால், தமிழக அரசுக்கு ஏற்படும் இழப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மேற்படி பொருட்களுக்கு விற்பனை வரியினின்றும், விலக்களித்ததினால்

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

ரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3150.22 இலட்சம் வருவாய் இழப்பு படுகிறது.

—

### பதிவுச் சான்று ரத்துச் செய்தல்

**வினா எண் 18837—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக விற்பனை வரித் துறை, வியாபாரிகளுக்கு வழங்கும் பதிவுச் சான்றை குறிப்பிட்ட காலக்கெடுவில் புதுப்பிக்கத் தவறினால், எவ்வித முன்னறிவிப்புமின்றி, உரிமம் ரத்துச் செய்யப்படும் என்பதை மறுபரிசீலனை செய்து, பதிவுச் சான்று ரத்துச் செய்யும் முறையை ரத்துச் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஒரு சில பட்டியல் வணிகர்களால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை நிறுத்தவே குறிப்பிட்ட காலக்கெடுவில் புதுப்பிக்காத பதிவுச் சான்றை ரத்துச் செய்யும் சட்டப்பிரிவு உருவாக்கப்பட்டது. இதனை, நீக்கினால் பட்டியல் வணிகம் பெருகும் அபாயம் உள்ளது. ஆயினும், ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து வியாபாரம் செய்து வரும் வணிகர் அல்லது கம்பெனிகள் சட்டம் 1956-ன்கீழ் பதிவு செய்துள்ள வணிகர்கள் விரும்பினால், ஐந்து ஆண்டுகளுக்கான பதிவுக் கட்டணத்தை மொத்தமாகச் செலுத்த வணிக வரிச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, இக்கோரிக்கை ஏற்க இயலாது.

3—

### பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க மாற்றுவழி

**வினா எண் 21980—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல கோட்டாட்சிப் பகுதிகளில் தமிழ் தெரியாத ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் துணை ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளதால் சாதாரண பொதுமக்கள் பிரச்சினைகளைக் கொண்டு செல்ல முடியவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள மாற்று வழி என்ன?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள 73 வருவாய்க் கோட்டங்களில் 9 வருவாய்க் கோட்டங்களில் இ.ஆ.ப. அதிகாரிகள் சார் ஆட்சியர்/உதவி ஆட்சியராகப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 4 அதிகாரிகள் மட்டுமே பிற மாநிலத்தவர்கள். அவர்கள் அனைவரும் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் மொழித் தேர்வில் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற பின்னரே வருவாய்க் கோட்டங்களில் உதவி ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

4—

### தேங்காய் கொப்பரைக்கு வரி விலக்கு

**வினா எண் 22584—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேங்காய் கொப்பரைக்கு முழுமையான வரி விலக்கு அளிக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தேங்காய் கொப்பரைக்கு 4% ஆக இருந்த வரியை, 27-3-1998 முதல் எண்ணெய் பிரித்து எடுப்பதற்கு கொள்முதல் செய்யும்போது மட்டும் 1% ஆக வரி குறைக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த அளவான 1% கொள்முதல் வரி விதிக்கப்பட்டுள்ளதால் இதனை மேலும் குறைக்க அவசியமில்லை.

5—

### நிலத்திற்கு விற்பனை வரியைக் குறைத்தல்

**வினா எண் 22590—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கையினால் செய்யப்பட்ட பவுடர் நீலத்திற்கு விற்பனை வரியை குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கையினால் தயாரிக்கப்படும் நீலப் பவுடருக்கு இருந்த 16 சதவிகித வரியை 6-4-1998 முதல் 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் குறைப்பது என்பது இயலாது

**6—**

**மிதிவண்டிகளுக்கு விற்பனை வரி ரத்துச் செய்தல்**

**வினா எண் 22598—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மிதிவண்டிகளுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை ரத்துச் செய்ய அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்போது இரு சக்கர மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் அதன் பாகங்களுக்கு 4% வரி விதிக்கப்பட்டு வருகிறது. மிதிவண்டிகள் மற்றும் அதன் பாகங்களுக்கு முழு வரி விலக்கு அளித்தால் ஆண்டொன்றுக்கு பல கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படும். அதனால், மிதிவண்டிகளுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை ரத்துச் செய்ய இயலாது.

**7—**

**தலைமையாசிரியர் பணியிடங்களை நிரப்புதல்**

**வினா எண் 5038—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள தலைமையாசிரியர் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அவை எப்போது, நிரப்பப்படும்?





விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக இருந்த 66 தலைமை ஆசிரியர் பணியிடங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் நிரப்பப்பட்டுவிட்டன.

**8—**

**நூலகத்திற்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 7588—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, நெறிப்பறைச்சல் ஊராட்சி, வாவிப்பாளையம் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தொகுதி, நெறிப்பறைச்சல் ஊராட்சி, வாவிப்பாளையம் நூலகத்திற்கு அரசு புறம்போக்கு நிலம், வருவாய்த் துறை மூலம் 174 சதுர மீட்டர் அளவில் வழங்கப்பட்டு, இதில் 352 சதுர அடியில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பில், திருப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டடம் ஒன்று கட்டப்பட்டு, இதில் 18-6-1998 முதல் நூலகம் செயல்பட்டு வருகிறது.

**9—**

**நூலகத்திற்கு கட்டட வசதி**

**வினா எண் 14035—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதிக்கு உள்ளடங்கிய செஞ்சி ஒன்றியத்தில் உள்ள கெங்கவரம் கிராமத்தில், நூலகத்திற்கு கட்டட வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

போதிய நிதி வசதியின்மை காரணமாக மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட செஞ்சி ஒன்றியத்தில் உள்ள கெங்கவரம் கிராமத்தில் தற்போது நூலகக் கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது. எனினும் வரும் ஆண்டுகளில் நிதி ஆதாரத்தில் முன்னேற்றம் ஏற்படுமாயின் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

**10—**

## பெண்களுக்கென பல்தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 17877—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) எடப்பாடி நகரில் பெண்களுக்கென தனியாக ஒரு பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) எடப்பாடியை உள்ளடக்கிய சேலம் மாவட்டத்தில் தற்போது அரசு மானியம் பெறும் ஒரு தொழில் நுட்பப் பயிலகமும், எட்டு சுயநிதி தொழில் நுட்பப் பயிலகங்களும் உள்ளன. இவற்றில் 1998-99ஆம் கல்வியாண்டில், 189 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பெண்களுக்கென தனியாக தொழில் நுட்பப் பயிலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**11—**

## பொது நூலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 21942—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பேரூராட்சி, சிவகுருநாதபுரத்தில் பொதுமக்கள் நன்கொடையாக அளித்துள்ள இடத்தில் பொது நூலகத்திற்குத் தேவையான கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுரண்டை பேரூராட்சிக்கு உட்பட்ட சிவகுருநாதபுரம் கிராமத்தில் அக்கிராம மக்கள் நன்கொடையாக அளித்துள்ள நிலத்தில் அவ்வூர் கிளை நூலகத்திற்காக பொது நூலக இயக்குநரின் நிர்வாக அனுமதியுடன் திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**12—**

## நூலகத்திற்கு நூலகர் நியமனம்

**வினா எண் 21945—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, புதூர் பேரூராட்சி, தவணை கிராமத்தில் உள்ள நூலகத்தில் நூலகர் நியமிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நூலகரை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, புதூர் பேரூராட்சி, தவணை கிராமத்தில் உள்ள நூலகத்தில் பணியாற்றி வந்த மூன்றாம் நிலை நூலகர், ஓய்வு பெற்ற ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்திற்கு மாற்றப்பட்டதால் அந்நூலகத்தில் மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் காலியாக உள்ளது. தற்போது காலியாக உள்ள மேற்கண்ட

மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்திற்கு நூலகர் ஒருவர் கூடுதல் பொறுப்பு நூலகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேற்கண்ட நூலகர் வாரம் 3 நாட்கள் தவணைப் புதூர் கிளை நூலகத்தையும், மீதமுள்ள 3 நாட்கள் அன்னார் பணியாற்றும் மற்றுமொரு கிளை நூலகத்தையும், திறந்து செயல்படுத்த ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியிடம் நிரப்பப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்ப்புற நூலகர்கள் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாய நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். வழக்கில் தீர்ப்பு வரப் பெறாமையால் மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்தைத் தற்போது நிரப்ப முடியவில்லை.

**13—**

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 16284—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேல மற்றும் கீழ அரியப்புரத்தில் மின் அழுத்தக் குறைவைப் போக்க புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல அரியப்புரம் கிராமத்திற்கு தென்காசி 66/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. திரவிய நகர் மின் பாதை மூலமாக மின் விநியோகம் செய்யப்பட்டு வநதது. அதனால் ஏற்பட்ட மின் அழுத்தக் குறைவை போக்கிட மேற்கூறிய கிராமத்திற்கு மிக அருகிலுள்ள கடையம் 66/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து, 12-9-1998 முதல் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தற்பொழுது மின் அழுத்தம் சீராக உள்ளது. கீழ அரியப்புரம் கிராமத்தில் நிலவி வந்த மின் அழுத்தக் குறைவினைப் போக்கிட கூடுதலாக ஒரு 63 கே.வி.ஏ. மின் மாற்றி 11-2-1999 அன்று இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பகுதியில் மின் அழுத்தம் சீரான நிலையில் உள்ளது.



**14—**

**தாய்சேய் நல விடுதி கட்டுதல்**

**வினா எண் 16612—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி, நரியலூரில் தாய்சேய் நலவிடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் வெள்ளாறு ஆரம்ப சுகாதார நிலைய கட்டுப்பாட்டின் கீழ்வரும் பள்ளிப்பட்டி துணை சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. டானிடா திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட இத்துணை சுகாதார நிலையத்தின் கதவு, ஜன்னல்கள் பழுதடைந்துள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் துணை சுகாதார நிலைய பழுதுகளை சரிசெய்ய ரூ. 28.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இத்துணை சுகாதார நிலையம் இதில் சேர்க்கப்படவில்லை. இருப்பினும் வரும் நிதியாண்டில் (1999-2000), துணை சுகாதார நிலையங்கள் பழுதுகள் சரிசெய்ய ஒதுக்கப்படும் நிதியிலிருந்து பள்ளிப்பட்டி துணை சுகாதார நிலைய பழுதுகளுக்கு முன்னுரிமை அளித்து சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15—**

**அலுவலக கண்காணிப்பாளர் நியமனம்**

**வினா எண் 18735—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் காலி பணியிடமாக உள்ள அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடத்தில் ஒருவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு ஆற்காடு திரு. நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் அரசினர் மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 275 புற நோயாளிகளுக்கும் மற்றும் 5 உள் நோயாளிகளுக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுதுள்ள இந்த வேலைப் பளுவினடிப்படையில் இந்த மருத்துவ மனைக்கு தற்போதுள்ள பணியாளர்களே போதுமானதாகும் என்பதால் அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடம் நிரப்பப்படவில்லை.*

**16—**

**மருந்து கிடங்கில் உபகரணங்கள் சப்ளை செய்ய நடவடிக்கை**

**வினா எண் 22469—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர் மாவட்ட தமிழ்நாடு மருந்துக் கழகத்தின் மருந்துக் கிடங்கில் மார்ச் 1998 முதல் பஞ்சு* (Cotton), *கட்டுகிற துணி* (Gauze Bandage Cloth), *குளுக்கோஸ் பாட்டில் மற்றும் டியூப்* (I.V. Set), *ஒரு முறை பயன்படுத்தும் ஊசி* (Disposable Syringe), *ஆகியவை சப்ளை இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1997-98-ஆம் ஆண்டில் பஞ்சு* (Cotton), *கட்டுகிற துணி* (Gauze Bandage cloth), *குளுக்கோஸ் பாட்டில் மற்றும் டியூப்* (I.V. Set), *ஒரு முறை பயன்படுத்தும் ஊசி* (Disposable Syringe) *ஆகியவை வாங்குவதற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்ததால், மேற்கூறியவற்றை தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் வாங்கி விநியோகிக்க முடியவில்லை. எனவே, அவற்றை எல்லா அரசு*



1999 மே 18]

*மருத்துவமனைகளும் நேரேடியாக தாங்களே வாங்கிக் கொள்ளும்படி அரசு ஆணை பிறப்பித்திருந்தது. பின்னர் நீதிமன்றத் தடை நீக்கி விட்டதால் 1998-99-ஆம் ஆண்டில், 1998-ம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் மேற்கூறியவற்றை தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் வாங்கி அரசு மருத்துவமனைகளுக்கு விநியோகித்து வருகிறது. தற்பொழுது, எவ்விதத் தட்டுப்பாடுமின்றி எல்லா மருந்துப் பொருள்களையும் மருத்துவ சேவைக் கழகம் வழங்கிவருகிறது. மேற்கூறிய பொருட்கள் அனைத்தும் தற்போது தஞ்சாவூர் மாவட்ட மருந்துக் கிடங்கில் தேவையான அளவு இருப்பில் உள்ளன.*

**17—**

**ஆக்கிரமிப்பு அகற்றுதல்**

**வினா எண் 13690—திரு. நா. பெரியசாமி :** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பவானிசாகர் - பணியாளர் குடியிருப்பு கூலீஸ் லைன் பகுதி மக்கள் ஆற்றுக்குச் செல்லும் பாதைகளில் ஆக்கிரமிப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதனை அகற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆக்கிரமிப்புகள் ஏதும் தற்போது இல்லை.*

**18—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 19304—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளார் ஒன்றியம், செட்டிக்குளம் கிராமத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளார் ஒன்றியம், செட்டிக்குளம் கிராமத்தில் மந்தைவெளி மற்றும் களம் கால்வாய் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணதாரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட அளவில் நடவடிக்கை ஆய்வில் உள்ளது.

**19—**

**உதவியாளர்கள் நியமனம்**

**வினா எண் 25328—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவியாளர்களாக இருக்கும் (சிப்பந்தி) விடுபட்டுள்ள உதவியாளர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கிராம உதவியாளர்கள் பணி நியமனம் தொடர்பாக தடையாணை இருப்பதால், தற்பொழுது பணி நியமனம் வழங்க இயலாது.

**20—**

**பள்ளிக்குப் புதிய கட்டடம்**

**வினா எண் 7600—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், செருகளத்தூர் ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதியதாக பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1996-97-க்கு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செருகளத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கட்டடம் கட்டும் பணி முழுமையாக முடிக்கப்பட்டு கல்வித் துறையிடம் 5-8-1998 அன்று ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

**21—**

**குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 13947—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாராயணகுப்பம் ஊராட்சி, அப்புநாய்க்கன் பாளையம் மற்றும் அயோத்தி நகர், இளையாங்கன்னி ஊராட்சி காலனி பகுதி, ரெட்டியார் பாளையம் ஊராட்சி, பாம்பனாற்று கரையிலுள்ள குடிசைப் பகுதி மோத்தக்கல் ஊராட்சி காலனி பகுதி ஆகிய குடியிருப்பு பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* ரெட்டியார் பாளையம், பாம்பனாற்று கரையிலுள்ள குடிசைப் பகுதிக்கு மட்டும் நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டில் ரூ.3.23 இலட்சத்திற்கு இக்குடியிருப்புக்கு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 3/99-க்குள் திட்டம் செயலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1999 மே 18

22—

### பள்ளிக் கட்டடம் புதிதாக்குதல்

**வினா எண் 14314—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் ஊராட்சி, ராமச்சந்திரபட்டினம் ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடத்தில் உள்ள பழுதுகளை நீக்கி மேலும் கூடுதலாக புதிய கட்டடம் ஒன்று கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் ஊராட்சி, ராமச்சந்திரபட்டினம் ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் ரூ.20,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அப்பள்ளியின் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு பழைய கட்டடமே போதுமானதாக உள்ளதால் புதிய கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

23—

### நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டட வசதி

**வினா எண் 19217—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டட வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. இருப்பினும், 1999-2000-ம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேராவூரணி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

24—

### ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

**வினா எண் 20968—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், நெய்வேலி மேற்கு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நெய்வேலி மேற்கு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் இந்த ஆண்டில் கட்டுவதற்கு வழிவகை இல்லை. இப்பணியை 1999-2000 ஆண்டில் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

### புதிய பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 21062—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் பேரூராட்சியானது எடப்பாடி நகராட்சியிலிருந்து 6 கி.மீ. தொலை தூரத்தில் உள்ளது. எடப்பாடி நகராட்சி எல்லையில் பேருந்து நிலையம் ஒன்று உள்ளது. கொங்கணாபுரம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கப் போதுமான இட வசதியில்லை. மேலும், அப்பேரூராட்சியில் நிதி வசதியில்லாத காரணத்தினாலும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனத்திடமிருந்து கடன் உதவி பெற்றாலும் அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக்கூட போதுமான நிதி ஆதாரங்கள் இல்லை என்பதாலும் கொங்கணாபுரம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

26—

**பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா எண் 21763—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எடங்கனசாலை பேரூராட்சி, எளம்பிள்ளை–மோட்டூர் என்ற பகுதியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடங்கனசாலை பேரூராட்சியில் எளம்பிள்ளை – மோட்டூர் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கப் போதிய இடவசதி இல்லை. மேலும், பேருந்து நிலையம் அமைக்கப் போதுமான நிதி ஆதாரம் மற்றும் பேருந்துகள் அதிக அளவில் செல்லத்தக்க வசதிகளும் இப்பேரூராட்சியில் இல்லை. எனவே, இதுகுறித்தச் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.



27—

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர்**

**வினா எண் 22448—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியிலிருக்கும் அனைத்து ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

28—

**மலர் ஏல மையம் அமைத்தல்**

**வினா எண் 23000—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் மலர் ஏல மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

29—

**அணை தூரெடுத்து கல்கட்டுமானங்கள் கட்டுதல்**

**வினா எண் 17256—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சியில் உள்ள கொண்டையம்பாளையம் அணை பழுதடைந்துள்ளதைத் தூர் எடுத்து, கல்கட்டுமானங்களைக் கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொண்டையம்பாளையம் ஏரியைத்தான் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகிறார். அணை எனக் குறிப்பிடுவது ஏரியின் கலிங்கு ஆகும். எடப்பாடி தொகுதியிலுள்ள கொண்டையம்பாளையம் ஏரி இந்த நிதி ஆண்டில் 1998-99-ல் எடுத்துக்கொள்ள இயலவில்லை. வருகின்ற நிதியாண்டுகளில் சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின்பேரில் மேற்கண்ட ஏரி தூர் வாருவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**30—**

**ஏரியைத் தூரெடுத்துக் கரையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 17259—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சி, ஆச்சாம்பள்ளி ஏரியைத் தூர்எடுத்து, கல்கட்டுமானங்களைக் கட்டி பலப்படுத்தி கரையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியிலுள்ள ஆச்சாம்பள்ளி ஏரி இந்த நிதி ஆண்டில் 1998-99-ல் எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே, வருகின்ற நிதி ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின்பேரில் மேற்கண்ட ஏரியைத் தூர் வாருதல் பற்றிப் பரிசீலிக்கப்படும்.



1999 மே 18]

**31—**

**பொதுப்பணித் துறை அலுவலகங்களைப் புதிதாகக் கட்டுதல்**

**வினா எண் 21228—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரில் இடிந்துவிழும் நிலையிலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகங்களைப் புதிதாகக் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி நகரில் இடிந்துவிழும் நிலையிலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகங்களை இடித்துவிட்டுப் புதியதாகக் கட்டுவதற்கு செயற் பொறியாளர், கட்டடம், (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், திருவண்ணாமலை அவர்களால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. தலைமைப் பொறியாளரிடமிருந்து இது குறித்துக் கருத்துரு வரப்பெற்றபின் அரசு அதனைப் பரிசீலனை செய்யும்.

**32—**

**தீர்ப்பாயம் ஏற்படுத்தும் திட்டம்**

**வினா எண் 15044—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் மோட்டார் விபத்து வழக்குகள் தீர்ப்பாயம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து மாவட்டங்களிலும் மோட்டார் விபத்து வழக்குகள் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1999 மே 18

33—

### அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பள விகிதம்

**வினா எண் 17204—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் உதவி மேலாளர்களுக்கு அரசாங்கச் சம்பள விகிதத்திலும், மற்ற பணியாளர்களுக்குப் போக்குவரத்துத் துறை சம்பள விகிதத்திலும் சம்பளம் வழங்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஒரே போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் எல்லோருக்கும் அரசாங்கச் சம்பள விகிதத்தில் சம்பளம் வழங்க அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் உதவி மேலாளர்கள் மற்றும் அப்பதவிக்கு மேல்நிலையிலுள்ள அலுவலர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு இணையான சம்பள விகிதம் வழங்கப்படுகிறது.

(ஆ) உதவி மேலாளர் தரத்திற்குக் கீழே உள்ள தொழில் நுணுக்க/நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஊதிய ஒப்பந்தத்தின்கீழ் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழிலாளர் நல ஆணையர்/நிர்வாகம்/தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கிடையே தொழில் தகராறு சட்டப் பிரிவு 12(3)-இன்கீழ் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்படுகிறது. எனவே, இப்பணியாளர்களுக்கும் அரசுச் சம்பள விகிதத்தில், சம்பளம் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

34—

### நகரப் பேருந்தைக் கூடுதலாக இயக்குதல்

**வினா எண் 21967—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து கறம்பக்குடி வரை இரண்டு தடவை மட்டுமே வந்து செல்லும் நகரப் பேருந்து 36-ஐக் கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்பொழுது தட எண் ஏ36 பட்டுக்கோட்டை நகரப் பேருந்து ஒரத்தநாடு - பின்னையூர் - பட்டுக்கோட்டை - 4 நடைகள், ஒரத்தநாடு - வெட்டிக்காடு - கறம்பக்குடி - 4 நடைகள், ஒரத்தநாடு - வெட்டிக்காடு - திருவோணம் - 2 நடைகள், ஒரத்தநாடு - வெட்டிக்காடு (வழி) கருக்காடிப்பட்டி - 4 நடைகள், ஒரத்தநாடு - பேய்க்கரம்பன்கோட்டை - 4 நடைகள் என பல்வழித் தடத்தில் இயக்கப்படுகிறது. இயக்கப்படும் நடைகளை மாற்றி ஒரத்தநாடு - கறம்பக்குடி தடத்தில் கூடுதல் நடைகள் இயக்கினால் பிற ஊர்களுக்கு நடைகள் குறைவு ஏற்படும். மேலும் ஒரத்தநாடு - கறம்பக்குடி தடத்தில் இயக்கப்படும் தடம் எண் ஏ36 நகரப் பேருந்தில் பயணிகள் அடர்வு போதிய அளவிற்கு இல்லை. இத்தடத்தில் இயக்கப்படும் நகரப் பேருந்து தடம் எண் ஏ36-ல் பயணிகள் அடர்வு 50 சதவிகித அளவுதான் உள்ளது. எனவே, தடம் எண் ஏ36 மூலம் கூடுதல் நடைகளை கறம்பக்குடிக்கு இயக்கச் சாத்தியக்கூறு இல்லை.

35—

### புதிய வாகனங்களுக்குப் பதிவுச் சான்றுகள் விவரம்

**வினா எண் 22052—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 1997-98 ஆம் ஆண்டில் எத்தனை புதிய வாகனங்களுக்குப் பதிவுச் சான்றுகள் (Registration Certificate) வழங்கப்பட்டு உள்ளன ?

(ஆ) அதன் விவரத்தை வாகனப் பிரிவு வாரியாக அரசு அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 1997-98 ஆம் ஆண்டில் 17,068 புதிய வாகனங்களுக்குப் பதிவுச் சான்றுகள் (Registration Certificate) வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புதிய வண்டிகளின் வகை வாரியான விவரம்:

| வரிசை எண் | வாகனப் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இரண்டு சக்கர வண்டிகள் | 15,459 |
| 2. | மோட்டார் கார் | 300 |
| 3. | ஜீப் | 159 |
| 4. | நிலைப் பேருந்து | 14 |
| 5. | சுற்றுலாச் சிருந்து | 69 |
| 6. | ஆட்டோ ரிக்ஷா | 26 |
| 7. | சரக்கு வண்டிகள் | 537 |
| 8. | டிராக்டர்ஸ் | 404 |
| 9. | ட்ரைலர்ஸ் | 86 |
| 10. | மற்ற இனம் | 14 |
| | மொத்தம் | **17,068** |

36—

**அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 22522—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி — மேட்டூர் செல்ல பில்லுக்குறிச்சி, பொன்னாக்கவுண்டனூர், ஊத்துக்குளி, மோளப்பாறை, பூலாம்பட்டி வழியாக அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குறிப்பிட்ட வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். அவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கினால் 4 கி.மீ. தூரம் கூடுதலாகும். பயண நேரமும் அதிகரிப்பதால் நேரடிப் பயணிகள் பாதிப்படைவார்கள். எனவே, குறிப்பிட்ட தடத்தில் பேருந்து இயக்கக் கருத்துரு இப்போதைக்கு இல்லை. எனினும், புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்போது குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்து இயக்குவது பற்றி கருதிப் பார்க்கப்படும்.

37—

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 19804—திரு. சி.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், கூடலூர் பகுதியில் கூடலூர்—லந்தக்கோட்டை சாலையில் ஒரு பெரிய பாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இதர மாவட்டச் சாலையான கூடலூர்—லந்தக்கோட்டை சாலையில் கி.மீ. 0/2-ல் பழுதடைந்த குழாய்ப் பாலம் உள்ளது. மழைக் காலத்தில் அதிக நீர் வரத்தால் இச்சாலையில் போக்குவரத்து சிறிது பாதிக்கப்படுகின்றது. இச்சாலையிலுள்ள நீர்வழிப் பாதையில் 30.00 மீட்டர் நீளமுள்ள உயர்மட்டப் பாலம் கட்ட ரூ.50.00 இலட்சம் தேவைப்படும். இதனை அடுத்த பகுதி-2 திட்டத்தில் சேர்த்திட வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

38—

**ஆன்மீக ஆதீனங்கள் விவரம்**

**வினா எண் 18806—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஆன்மீக ஆதீனங்கள் எத்தனை?

(ஆ) அவைகளுக்குரிய சொத்துக்கள் விவரம் என்ன?

(இ) அவைகளின் சமூகப் பணி என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் மொத்தம் 56 ஆன்மீக ஆதீனங்கள் (திருமடங்கள்) உள்ளன.

| | | |
|---|---|---|
| (ஆ) நன்செய் நிலங்கள் | 19,984.29 | ஏக்கர் |
| புன்செய் நிலங்கள் | 36,250.37 | ஏக்கர் |
| மானாவாரி நிலங்கள் | 40.47½ | ஏக்கர் |

(இ) திருமடங்களின் முக்கிய நோக்கம் சமயக் கருத்துக்களைப் பரப்புவதும், திருமடத்தின் பழக்கவழக்கங்களைக் கடைபிடிக்கும் சமயச் சான்றோர்களை ஆதரித்து இந்து மதத்தைப் பரப்புவது ஆகும். மேலும் திருமடங்களின் சார்பில் பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், திருமறை மற்றும் ஆகமப் பள்ளிகள் நடத்தி கல்வி அளிக்கப்படுகிறது. மருத்துவ உதவியும் செய்து தரப்படுகிறது. இந்து சமூகத்தாரிடையே நன்னெறிகளை பரப்புவதற்கும், ஆன்மீகத்தை வளர்ப்பதற்கும் சைவ மற்றும் வைணவப் பெரியோர்களின் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதும், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்ய பிரபந்தம், திருப்பாவை மற்றும் திருவெம்பாவை பாசுரங்களை புத்தகமாகவும் ஒலிப்பேழைகளாகவும் வெளியிடுவதும் முக்கியப் பணிகளாகச் செய்து வருகின்றன. திருமடங்கள் சார்பாக சைவ சமயச் சொற்பொழிவுகளையும் தகுந்த பெரியோர்களைக் கொண்டு நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

**39—**

### குத்தகை விவசாயிகளுக்கு அரசு நிலம்

**வினா எண் 22746—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) கோவில் நிர்வாகத்திற்குச் சொந்தமான நிலங்களை 100 ஆண்டு காலமாகச் சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகளுக்கு அரசு நிர்ணயம் செய்யும் நிலத்தை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குத்தகைதாரர்களுக்குத் திருக்கோயில் நிலங்கள் விற்பனை செய்யப்பட்டால், திருக்கோயில் நலன்கள் வெகுவாகப் பாதிப்படையும். திருக்கோயில்களுக்கு நிலங்களை எழுதி வைத்த அருளாளர்களின் நோக்கம் சிதைந்து போகும். மேலும், இவ்வாறு நீண்டகாலம் சாகுபடி செய்துவரும் குத்தஙகதாரர்களுக்கே திருக்கோயில் நிலங்களை விற்பனை செய்ய வேண்டும் என சட்டத்திலும் விதி ஏதும் இல்லை. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை 100 ஆண்டுகளாகத் தொடர்ந்து சாகுபடி செய்யும் வாய்ப்பு வாரிசுதாரர் என்ற முறையில் வழிவழியாக நீடிக்குமே தவிர, குத்தகை பாக்கி போன்ற காலங்களில் அப்புறப்படுத்தவேண்டியும் இருக்கும். எனவே, குத்தகை விவசாயிகளுக்குத் திருக்கோயில் நிலத்தை விற்பனை செய்ய இயலாது.

**40—**

### தலைவர் தேர்வுச் சட்டம்

**வினா எண் 20473—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பதவிக்கும் இயக்குநர் பதவிக்கும் அத்துறையில் படிப்பறிவு அல்லது அனுபவ அறிவு உடையவர்தான் தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற சட்டம் தமிழக அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1999 மே 18

41—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 20726—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சொந்தக் கட்டடம் இல்லாதவை?

(ஆ) அவற்றைக் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் மகுடஞ்சாவடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு மட்டும் சொந்தக் கட்டடம் இல்லை.

(ஆ) மேற்படி வங்கி சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்ள அடிமனை வேண்டி மகுடஞ்சாவடி ஊராட்சிக்குச் சம்பந்தப்பட்ட சர்வே எண் 259/1-ல், 4-48 ஏக்கரில் 0.50 சென்ட் நிலம் ஒதுக்கீடு செய்து கொடுக்க கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மகுடஞ்சாவடி ஊராட்சி மன்றம் மூலம் விண்ணப்பித்துள்ளது. மகுடஞ்சாவடி ஊராட்சி மன்றமும் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியுள்ளது. நிலம் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும் மகுடஞ்சாவடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்கும்.

42—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்

**வினா எண் 21777—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் உள்ளாட்சி அமைப்பு நிதியுதவி பெறும் பள்ளி, அரசு ஊழியர்களின் சம்பளச் சான்றின் அடிப்படையில் எத்தனை நபர்களுக்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டது?

(ஆ) மொத்தத் தொகை எவ்வளவு ரூபாய்?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் உள்ளாட்சி அமைப்பு நிதியுதவி பெறும் பள்ளி அரசு ஊழியர்களின் சம்பளச் சான்றின் அடிப்படையில் 10 நபர்களுக்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நுகர்வோர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 10 நபர்களுக்கு வழங்கப்பட்ட நுகர்வோர் கடன்களின் மொத்தத் தொகை ரூ.1,55,000/- ஆகும்.

43—

## கூட்டுறவு வங்கிக் கட்டடத்தைச் செப்பனிடல்

**வினா எண் 23059—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெல்லுப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடத்தைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெல்லுப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமாக 1963-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கிடங்கு பழுதடைந்த நிலையில் உள்ளதால் இக்கிடங்கினை இடித்துவிட்டு புதிய கிடங்கு ஒன்றினைக் கட்டித் தருமாறு வங்கியின் நிர்வாகக் குழு தீர்மானம் நிறைவேற்றி, தஞ்சாவூர் சரகத் துணைப் பதிவாளர் மூலம் கூட்டுறவுத் துறை கட்டுமான உதவி செயற் பொறியாளரினால் மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டு, திருச்சி கூட்டுறவுத்

துறை கட்டுமானக் கோட்டச் செயற் பொறியாளரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதைப் பெற்ற பின்னர் வங்கியின் நிதிநிலையினைப் பரிசீலித்து புதிய கிடங்கு கட்டத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

**கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 23060—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கல்விராயன்பேட்டை கிராமத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொதுவிநியோகமுறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை கிராமத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு 1961-62 ஆம் ஆண்டு கிடங்குக் கடன் அனுமதிக்கப்பட்டு, கிடங்கு கட்டப்பட்டு மேற்படி வங்கி சொந்தக் கட்டடத்தில் அலுவலகம், உரக் கிடங்குடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் உறுதியளித்தவாறு 1997-98 ஆம் ஆண்டிற்கு இரும்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டும் திட்டத்தின்கீழ் இவ்வங்கியும் தெரிவு செய்யப்பட்டு கட்டுமானப் பணியும் நடைபெற்று வருகிறது. எனவே, கல்விராயன்பேட்டை கிராமத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தற்போது சொந்தமான இடத்திலேயே அலுவலகம் மற்றும் சொந்தக் கிடங்கு வசதிகளுடன் இயங்குவதாகவும், இரும்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுமானப் பணிகளும் அனுமதிக்கப்பட்டு அவை முன்னேற்றத்தில் உள்ளதாலும் இவ்வங்கிக்கு மேலும் புதியதாகச் சொந்தக் கட்டடம் கட்டும் அவசியம் தற்போது ஏற்படவில்லை.



45—

**இடம் மற்றும் இலவச மனைப் பட்டா**

**வினா எண் 20114—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, தப்பகுட்டை பஞ்சாயத்தில் ஓடைப்புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து அவர்களுக்கு இடம் வழங்கி இலவச மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தப்பகுட்டை கிராமம் ஓடைப்புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள குடிசைப் பகுதியில் வாழும் 105 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.5.45 இலட்சங்கள் செலவில் குடிசைப் பகுதியில் களத்திற்கு உள்ளே (on site) மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் (off site) மேம்பாட்டுப் பணிகள் அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டது. உலக வங்கியின் நிபந்தனைகளின்படி தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும் குடிசைப் பகுதியில் வாழும் குடும்பங்கள் முன்வைப்புத் தொகையாக, ஒரு குடும்பத்திற்காகும், மேம்பாட்டுச் செலவினத்தில் 10 சதவீதம் செலுத்த வேண்டும். இக்குடிசைப் பகுதியில் வாழும் குடும்பங்கள் இம்முன்வைப்புத் தொகையினைச் செலுத்த முன்வராததால் இக்குடிசைப் பகுதியினை தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தி மனைப் பட்டா வழங்க இயலவில்லை. குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கும் திட்டம் தற்போது ஏதும் நடைமுறையில் இல்லை.

46—

**தொழிலாளர் நலன் காக்கும் சட்டத் திருத்தம்**

**வினா எண் 12970—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு நபரின் நிர்வாகத்தில் பல பெயர்களில் விசைத்தறிகள் அனுமதி பெற்று, தொழிற்சாலைச் சட்டத்தை மீறியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிலாளர் நலன் காக்கும் வகையில் சட்டத் திருத்தம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஒரு நபரின் நிர்வாகத்தில் பல பெயர்களில் விசைத்தறிகள் நடத்தப்பெற்று வரும் அனுமதி மத்திய சுங்க வரித் துறையினரால் (Central Excise Department) வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் தனித் தனியாக மின்சார இணைப்புகளும், நகராட்சி/ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து உரிமங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விசைத்தறிகள் மேற்குறிப்பிட்ட துறைகளிலிருந்து தனித் தனியாக உரிமம் பெற்று நடத்தப்படுவதாலும், 10 தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலைக்கமர்த்தப்படுவதாலும் தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க இயலாமல் உள்ளது.

(ஆ) மத்திய சுங்க வரித் துறை மத்திய அரசின் கீழ் இயங்கி வருகிறது. எனவே, சட்டத் திருத்தம் செய்யும் சூழ்நிலை எழாது.

47—

**தனியார் தொழிற்சாலைகளில் மருத்துவமனை மற்றும் சிற்றுண்டி வசதி**

**வினா எண் 19428—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் மருத்துவமனை மற்றும் சிற்றுண்டி விடுதி ஆகியவற்றை ஏற்படுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் மருத்துவமனை மற்றும் சிற்றுண்டி விடுதி ஆகியவற்றை ஏற்படுத்த ஏற்கெனவே நடவடிக்கை



மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை மருத்துவமனை மற்றும் சிற்றுண்டி விடுதி அமைத்தும் பராமரிக்கப்படாத தொழிற்சாலைகளில் நடப்பு ஆண்டில் இவை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

48—

**தொழிலாளர் நல வாரியச் செயல்பாட்டு எல்லை**

**வினா எண் 22683— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 43 அமைப்பு சாராத் தொழில்களுக்காக நல வாரியம் அமைக்கப் பட்டு செயல்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் செயல்பாட்டு எல்லைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 52 அமைப்பு ரீதியற்ற தொழில்களில் பணிபுரிந்துவரும் தொழிலாளர்களின் நலம்பேணி, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அமைத்து, அரசாணை (நிலை) எண் 35, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 17-3-1999-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வாரியம் விரைவில் செயல்பட உள்ளது.

(ஆ) தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியம், 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட விபத்து நிவாரணத் திட்டம், மகப்பேறு நலத் திட்டம் மற்றும் பணிமுடிவு நலத் திட்டம் போன்றவைகளைச் செயல்படுத்தும். இது தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும்.

49—

**சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 18108—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணத்தில் சார் பதிவாளர் அலுவலகம் கட்டப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடத்தைக் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

**சத்துணவு மையக் கட்டடங்கள் செப்பனிடல்**

**வினா எண் 18868—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், கம்பம் தொகுதியிலுள்ள மிகவும் பழுதடைந்துள்ள சத்துணவு மையக் கட்டடங்களைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், கம்பம் தொகுதியில் உள்ள 18 மையங்களில். 'ஸ்வர்ண ஜெயந்தி' திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து 10 மையங்கள் பழுதுபார்க்கப்பட்டன. மீதமுள்ள 8 பழுதடைந்த மையங்களைப் பொது நிதியிலிருந்து பழுதுபார்க்க நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

**பதினாறாம் பட்டியல்**

**1—**

**மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வசதி**

**வினா எண் 14092—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

ஒசூர் நகரத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிலும் 200-க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான கூடுதலாகக் கட்டடங்கள் கட்டவும், ஆசிரியர்களை நியமிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஒசூர் நகரத்தில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இரு பள்ளிகள் உள்ளன. ஒசூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 66 வகுப்பறைக் கட்டடங்கள் உள்ளன. அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை 18 (பதினெட்டு மட்டும்). இவற்றில் 3 மட்டும் காலியாக உள்ளது. அனுமதிக்கப்பட்ட பள்ளி உதவியாசிரியர் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை 23 ஆகும். இவற்றில் காலியாக உள்ள பணியிடங்கள் ஏதுமில்லை. அனுமதிக்கப்பட்ட மொத்த முதுகலை ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை 12 ஆகும். இவற்றில் 3 பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியாக உள்ள 3 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3 முதுகலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது தவிர, பள்ளி பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலம் மாணாக்கர்களின் நலன் கருதி நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் மூலம் போதுமான ஆசிரியர்கள் உள்ளனர்.

ஒசூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 25 வகுப்பறைகள் மட்டுமே உள்ளதால் அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998-ல் வழங்கப்பட்டுள்ள நிதியில் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக ஒரு வகுப்பறைக் கட்டப்படும். ஒசூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 6 முதல் 8 வரையான வகுப்புகளில் உள்ள 12 பிரிவுகளில் 11 இடைநிலை ஆசிரியர்கள் உள்ளனர். மேலும் 1 இடைநிலை ஆசிரியர் பணியிடம் தேவை. 9 முதல் 10 வரை உள்ள வகுப்புகளில் உள்ள 9 பிரிவுகளில் 8 ஆசிரியர்கள் உள்ளனர். மேலும் ஒரு பள்ளி உதவி ஆசிரியர் பணியிடம் தேவை. மேல்நிலை வகுப்புகளில் அனுமதிக்கப்பட்ட 8 முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் 2 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மேற்குறித்தக் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

## பெருங்குளத்தூரில் கிளை நூலகம்

**வினா எண் 14097—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, பெருங்குளத்தூரில் கிளை நூலகம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசின் நிதிநிலை காரணமாகத் தண்டராம்பட்டு தொகுதி, பெருங்குளத்தூரில் தற்சமயம் கிளை நூலகம் அமைக்க வாய்ப்பில்லை. இருப்பினும் கிளை நூலகம் அமைக்க இயலாத இடங்களில் பொது மக்கள் ஒத்துழைப்புடன் முதற்கட்டமாக பகுதிநேர நூலகம்/ஊர்ப்புற நூலகம் திறக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. அரசாணை நிலை எண் 66, கல்வி, நாள் 30-1-1996-ன்படி திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பெருங்குளத்தூருக்கு ஊர்ப்புற நூலகமொன்று அனுமதிக்கப்பட்டது. எனினும், அந்நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை அவ்வூர்ப் பொது மக்கள் இதுவரை நிறைவு செய்து தராததால் அங்கு ஊர்ப்புற நூலகம் திறக்க இயலாத நிலை உள்ளது. நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டால் ஊர்ப்புற நூலகம் திறக்கப்படும்.

3—

## ஆசிரியர்களுக்குப் பயிற்சி

**வினா எண் 16043—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிக கல்விப் பாடத் திட்டத்தை மாற்றியதற்கு ஏற்ப ஆசிரியர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரால் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மூலம் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை அனைத்து ஆசிரியர்களுக்கும் புதிய பாடத்திட்டத்தில் கற்பித்தல் முறை குறித்தும், குறைந்தபட்சக் கற்றல் இலக்குகளில் சிறப்புப் பயிற்சியும், தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களுக்குக் கற்பித்தல் முறை குறித்தும், நிர்வாகச் செயல்பாடு குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

4—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 18982—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டி மாங்குறிச்சி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து செய்ய தீர்மானித்துள்ளது.

5—

## மிதிவண்டி நிறுத்துமிடம்

**வினா எண் 21364—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மேலஉளூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் "மிதிவண்டி நிறுத்துமிடம்" ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டிற்கு மாவட்ட பரவலாக்கத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்களில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்திற்கு முன்னமேயே வேலைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வருவதால் நடப்பு ஆண்டில் ஒரத்தநாடு வட்டம், மேலஉளூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டித்தர இயலாத நிலையில் உள்ளது. எனினும், மேற்குறிப்பிட்ட திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் அரசின் நிதியாதாரங்களின் அடிப்படையில் மேலஉளூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**6—**

### நூலக ஆணைக் குழுக்களை அரசுத் துறைகளாக்குதல்

**வினா எண் 21662—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து நூலக வரி சரிவர பெறப்பட்டு நூலகத் துறை வளர்ச்சி பெற ஏதுவாக மாவட்ட நூலக ஆணைக் குழுக்களை அரசுத் துறைகளாக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 12 (I) (எ) மற்றும் 12 (I) (பி)யின் கீழ் சொத்து வரி மீது ரூ. 1-க்கு 10 காசு வீதம் நூலகவரி வசூலிக்கப்படுகிறது. நூலகத் துறையின் முக்கிய வருவாயான நூலக வரியினை உள்ளாட்சி நிறுவனங்கள் உடனுக்குடன் நூலக ஆணைக் குழுக்களுக்குச் செலுத்தவும், ஏற்கெனவே உள்ள நிலுவைத் தொகையினை நான்கு ஆண்டுகளுக்குள் செலுத்தவும் மற்றும் எதிர்காலத்தில் நிலுவை ஏற்படின் அதனை அவ்வுள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் மானியத்திலிருந்து அரசே நேரடியாகப் பிடித்தம் செய்து மாவட்ட நூலக



ஆணைக் குழுக்களுக்குச் செலுத்துவதற்கும் அரசாணை நிலை எண் 294, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-7-1997-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து 1997-98 ஆம் ஆண்டு ரூ. 24.93 கோடி நூலக வரியாக உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு நூலக வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து நூலகவரி வசூலை மேம்படுத்த முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே நூலக ஆணைக் குழுக்களை அரசுத் துறைகளாக்கிட அவசியமேதுமில்லை.

**7—**

### தோட்டக்காரர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 21725—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தோட்டக்காரர் பணியிடம் காலியாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தோட்டக்காரர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பதவி உயர்வு மூலமாகவோ, வேலை வாய்ப்பகம் மூலம் நேரடியாகவோ தோட்டக்காரர் நியமனம் செய்ய தற்போதைக்கு அரசுத் தடை உள்ளது.

**8—**

### இரவுக் காவலர் நியமித்தல்

**வினா எண் 21727—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு இரவுக் காவலர் பணியிடம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இரவுக் காவலர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பதவி உயர்வு மூலமாகவோ, வேலை வாய்ப்பகம் மூலம் நேரடியாகவோ இரவுக் காவலர்கள் நியமனம் செய்ய தற்போதைக்கு அரசுத் தடை உள்ளது. கருணை அடிப்படையில் நியமனம் பெறத் தகுதியுடையோர் பட்டியலிலிருந்து ஒருவரை நியமனம் செய்ய சேலம் மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

9—

**குறை தீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்கள் விவரம்**

**வினா எண் 21874—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98, 1998 சூன் திங்கள் வரை தருமபுரி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலம் எத்தனை மனுக்கள் பெறப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1997-98 மற்றும் சூன் 1998 வரை தருமபுரி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் குறை தீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சியர் மூலம் மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.

ஒவ்வொரு காலாண்டிலும் முன்னாள் படை வீரர் குறை தீர்க்கும் நாள் அனுசரிக்கப்பட வேண்டும் என்று அரசாணை நிலை எண் 694, பொதுத் (முன்னாள் படை வீரர்) துறை, நாள் 28-4-1998-இல் ஆணை வெளியிடப்பட்ட பின்னர், தருமபுரி மாவட்டத்தில் 28-7-1998-இல் நடைபெற்ற முதற் கூட்டத்தில் 41 மனுக்கள் பெறப்பட்டன.



(ஆ) 28-7-1998 அன்று நடைபெற்ற முதற் கூட்டத்தில் (அதாவது சூன் திங்களுக்குப் பின்னர்) பெறப்பட்ட 41 மனுக்களில் 39 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஏனைய இரண்டு மனுக்கள் மீது இராணுவ ஓய்வூதியம் மற்றும் நிதியுதவி வழங்குவது குறித்துத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10—

**நூலகம்/பகுதிநேர நூலகம் அமைத்தல்**

**வினா எண் 23076—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றிம், மத்தனம்பாறை கிராமத்தில் நூலகம்/பகுதிநேர நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்ட விதிகளின்படி நூலகம் அமைப்பதற்கு அவ்வூரின் குறைந்தபட்ச மக்கட்தொகை 5000 ஆக இருக்க வேண்டும். ஆனால் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், மத்தனம்பாறை கிராமத்தின் மக்கட் தொகை 1991 மட்டுமே உள்ளதால் இவ்வூரில் நூலகம் அமைக்க, தற்போது சாத்தியமில்லை. இருப்பினும் இவ்வூரில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதை முன்னிட்டு அவ்வூர் மக்களிடமிருந்து பகுதிநேர நூலகம் திறப்பதற்கான விண்ணப்பம் தற்போது பெறப்பட்டுள்ளது. ஆனால் அப்பகுதிநேர நூலகம் அமைப்பதற்கான நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் இதுவரை நிறைவேற்றித் தரவில்லை. எனவே அந்நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

11—

**நூலகங்கள் விவரம்**

**வினா எண் 23238—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) ஈரோடு மாவட்டத்தில் உள்ள மொத்த நூலகங்கள் எத்தனை?

(ஆ) பவானி தொகுதியில் எவ்வளவு உள்ளது? இதனை மேலும் நீட்டிக்கும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் மைய நூலகம் உட்பட 184 நூலகங்கள் செயல்படுகின்றன.

(ஆ) பவானி தொகுதியில் உள்ள மொத்த நூலகங்கள் 32. இதனை மேலும் நீட்டிக்க, பவானி வட்டத்தில் ஊர்ப் பொது மக்கள் பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்து தருவார்களே யானால் பகுதிநேர நூலகங்கள் திறக்க ஆவன செய்யப்படும்.

12—

**அரசு மருத்துவர்களுக்குக் குடியிருப்பு வீடுகள்**

**வினா எண் 13008—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி அரசு மருத்துவமனை வளாகத்தில் அரசு மருத்துவர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி அரசு மருத்துவமனை வளாகத்தில் அரசு மருத்துவர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) அவசியம் ஏற்பட்டால் அரசின் நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.



1999 மே 18]

13—

**இடைவெளியைக் குறைத்துச் சமப்படுத்துதல்**

**வினா எண் 22650—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின்சார உற்பத்திக்கும் உபயோகத்திற்கும் இடையில் நிலவும் இடைவெளி எத்தனை சதம்?

(ஆ) அதைக் குறைத்துச் சமப்படுத்த அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மின்சார உற்பத்திக்கும், உபயோகத்திற்கும் இடையில் நிலவும் இடைவெளி 10.8 விழுக்காடுகள் ஆகும்.

(ஆ) மேலே கூறிய பற்றாக்குறையைச் சமப்படுத்தவும், எதிர்காலத்தில் தேவைப்படும் கூடுதல் தேவையையும் கருத்தில் கொண்டு 1998-99-லேயே 37.5 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும், தனியார் துறையின்கீழ் 196 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும் மேலும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் (2001-2002) சுமார் 3944.65 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களையும் நிறுவுவதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டுள்ளது.

14—

**அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்**

**வினா எண் 14968—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றிய அலுவலகக் கட்டடம் பழுதுபட்டு உள்ளதால் மேல் கூரையைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியக் கட்டடம் 300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இதுவரை இந்தக் கட்டடம் நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் இருந்தது. கடந்த ஆண்டு முதல், ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் இக்கட்டடம் இருப்பதால், உடனடியாக இதற்கான மதிப்பீடு தயாரித்து ஒன்றியப் பொது நிதியின் நிதிநிலைக்கு ஏற்பவும், மாநிலத் திட்டக்குழு அறிக்கையின் அடிப்படையில், அளிக்கக்கூடிய நிதியில் இருந்து கட்டம் கட்டமாக இந்தப் பணியை ஒன்றியக் குழுவின் அனுமதி பெற்று மேற்கொள்ள மாவட்ட ஆட்சியருக்கும் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**15—**

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை**

**வினா எண் 21362—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், வெட்டுவாங்கோட்டை, சந்தைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் வகுப்பு அறை ஒன்று கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வெட்டுவாங்கோட்டை, சந்தைப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் கூடுதல் வகுப்பு அறை வரும் நிதி ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.





**16—**

**காய்கறிகளைப் பதப்படுத்தி விற்பனை செய்தல்**

**வினா எண் 22064—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் காய்கறிகள் அதிகமாக விளையும்பொழுது அதனைப் பதப்படுத்தி, குறைந்த விலையில் விற்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் காய்கறிகள் அதிகமாக விளையும்பொழுது அதனைப் பதப்படுத்தி, குறைந்த விலையில் விற்பதற்குத் தற்போது திட்டம் ஏதும் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படவில்லை.

ஆனால், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் கீழ்க்கண்ட திட்டங்கள் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

| | | |
|---|---|---|
| 1. | சில்லரை விற்பனைக் கடைகள் அமைத்தல் | 75 எண்கள் |
| 2. | (அ) கொள்முதல் மையங்கள் அமைத்தல் | 10 எண்கள் |
| | (ஆ) கொள்முதல் மையங்கள் நடமாடும் குளிரூட்டு வசதியுடன் அமைத்தல் | 04 எண்கள் |
| 3. | போக்குவரத்து வாகனங்கள் வாங்குதல் | 18 எண்கள் |
| 4. | பலவகை பழரச உற்பத்தி நிலையம் அமைத்தல் | 01 எண் |
| 5. | வாழைப்பழம் பழுக்கவைக்கும் நிலையங்கள் அமைத்தல் | 04 எண்கள் |

சேலம் மாவட்டத்தில், அயோத்தியாபட்டிணத்தில், கொள்முதல் மையம் அமைக்க பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 10 இடங்களிலும் சில்லரை விற்பனை அங்காடிகள் அமைக்க சேலம் நகராட்சியால் நுழைவு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது:

1. சூரமங்கலம் தினசரி அங்காடி
2. சுந்தன்சாவடி தினசரி அங்காடி
3. அஸ்தம்பட்டி தினசரி அங்காடி
4. குகை தினசரி அங்காடி
5. தாதகப்பட்டி தினசரி அங்காடி
6. மணியனூர் மாநகராட்சி பழ அங்காடி
7. செவ்வாய்பேட்டை இராமலிங்கம் தினசரி அங்காடி
8. அம்மாபேட்டை அங்காடி
9. காமராஜர் நெசவாளர் காலனி அங்காடி
10. தண்ணீர்த் தொட்டிக்கு அருகில்
11. சாரதா கல்லூரிக்கு எதிரில், தண்ணீர்த் தொட்டிக்கு அருகில்

மேலும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிர்வாகப் பொறியாளர் அவர்களால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு நீதிபதி காலனியில் ஒரு சில்லரை விற்பனை அங்காடி அமைப்பதற்கு இடம் கேட்டுப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. பார்லேண்ட்ஸ் இடத்தில் சில்லரை விற்பனை நிலையம் அமைக்க சேலம் மாநகராட்சிக்குக் கோரிக்கை அனுப்பப்படுகிறது.

7—

## மாமரங்கள் உற்பத்தி பாதிப்பு

**வினா எண் 19335—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமரங்கள் பூச்சி அழிவினால் (1998) இந்த ஆண்டு பெருவாரியாக சதமாகி உற்பத்தி பாதிக்கப்பட்டதை அரசு அறியுமா? ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மாம்பழ உற்பத்தி இந்த ஆண்டு (1998) பெருவாரியாகப் பாதிக்கப்பட்டதற்குக் காரணம் பூச்சி தாக்குவதால்தான் என்பது உண்மையல்ல.



மா சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களில் கடந்த டிசம்பர் 1997 வரை தொடர் மழை பெய்தது. பொதுவாக டிசம்பர் மாதத்தில் மா மரங்களில் பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும். இத்தருணத்தில் அதிகமாக மழை பெய்த காரணத்தால் பூக்கள் தோன்றுவது தடைப்பட்டு மா உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. மாவின் உற்பத்திக் குறைவிற்கு இதுவே முக்கியக் காரணமாகும்.

மாவில் பூச்சி தாக்குதலால், ஏற்படும் சேதத்தினைத் தவிர்க்கும் பொருட்டும், உரமிடும் முறையினைத் தவறாது கூறவும், உற்பத்தியினை அதிகரிக்கும் முறையினை எடுத்துக்காட்டவும் அரசு தோட்டக்கலைத் துறை மூலம் 1997-98 ஆம் ஆண்டில், 1000 செயல்விளக்கப் பாத்திகள் (ஒரு ஏக்கருக்கு ஒன்று வீதம்) 1000 ஏக்கரில், சேலம், தருமபுரி, வேலூர், மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு மேலும் இரண்டு ஆண்டுகளுக்குத் தொடரப்படவுள்ளது. ஒரு ஏக்கருக்கு ரூ. 1600 மதிப்புடைய உரங்களும் ரூ. 400 மதிப்புடைய பயிர்ப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஊக்கி மருந்துகளுமாக, மொத்தம் ரூ. 2000 முழு மானியமாக வழங்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 220 ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளும், 780 இதர விவசாயிகளும் பயன்பெற்றனர். இத்திட்டத்திற்கென ரூ. 20 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாமரங்களில் தண்டு துளைப்பான் பூச்சியினால் ஏற்படும் அழிவினைத் தவிர்த்திடும் பொருட்டு, தோட்டக்கலைத் துறை களப்பணியாளர்கள் மூலம் தொழில்நுட்ப அறிவுரைகள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

18—

## விபத்தில் உயிரிழந்தவர்கள் விவரம்

**வினா எண் 20222—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு பேருந்து விபத்தின் காரணமாக ஈரோடு மாவட்டம், சேலம் மாவட்டம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்தம் குடும்பங்களுக்கு அரசு அளித்த நிதியுதவி என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

| மாவட்டம் | உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை | உதவி அளித்த தொகை (ரூபாய்) |
|---|---|---|
| சேலம் | 274 | 6,24,100 |
| ஈரோடு | 180 | 5,19,000 |
| தருமபுரி | 170 | 4,00,000 |

19—

**நிர்வாகச் சீரமைப்பு**

**வினா எண் 21604—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிர்வாக இயக்குநர்களாக இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை நியமனம் செய்து நிர்வாகத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, தேவைக்கு ஏற்ப நிர்வாக இயக்குநர்களாக இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை நியமனம் செய்வது வழக்கத்தில் உள்ள நடைமுறைதான். தற்போது போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பொறியாளர்களே நிர்வாக இயக்குநர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். போக்குவரத்துக் கழகங்களின் தலைவராக ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரே நியமிக்கப்பட்டுள்ளதால், சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடந்தேறி வருகின்றன.





20—

**ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமம்**

**வினா எண் 21747—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு மேலும் அனுமதி வழங்கி எளிதில் உரிமம் கிடைத்திட வழிவகை செய்ய அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உரிய விதிகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமம் வழங்கப்படுகிறது. எனவே புதிதாக நடவடிக்கை ஏதும் தேவையில்லை.

21—

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 22037—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் முதல் கொங்கணாபுரம், கோரணம்பட்டி, புதுப்பாளையம், சமுத்திரம் வழியாக மேட்டூர் வரை செல்லும் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடம் கிராமப்புறங்களின் வழியாகச் செல்லும் சுற்று வழித்தடமாதலால், நேர்வழிப் பயணிகள் இவ்வழித் தடத்தில் பயணம் செய்ய விரும்புவதில்லை. குறுந்தொலைவு பயணிகளும் இவ்வழித் தடத்தில் எதிர்பார்த்த அளவு இல்லை. இவ்வழித்தட அனைத்துப் பகுதிகளும் ஏற்கெனவே போதுமான அளவு பேருந்து வசதி பெற்று இருக்கின்றன. நாமக்கல் - திருச்செங்கோடு - சங்ககிரி தடத்தில் ஒவ்வொரு 3 நிமிடத்திற்கும் ஒரு பேருந்து வீதமும், சங்ககிரி - கொங்கணாபுரம் தடத்தில் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதமும் பேருந்து வசதியுள்ளது. தவிரவும், எடப்பாடி - ஜலகண்டாபுரம் (வழி) கொங்கணாபுரம், கோரணம்பட்டி, புதுப்பாளையம், சமுத்திரம்

தடத்தில் 2 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 10 நடைகள் பேருந்து வசதியும், மேட்டூர் - ப. வேலூர் செல்லும் 4 பேருந்துகள் மூலம் கொங்கணா புரத்திற்கு தினசரி 8 நடைகள் பேருந்து வசதியும் உள்ளது. இந்நிலையில் குறிப்பிட்ட வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து, தேவையான பயணிகள் போக்குவரத்து இல்லாததால் நிறுத்தப்பட்டது. எனவே, வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் மீண்டும் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**22—**

### சிற்றூர்திகளுக்கான பர்மிட்டுகள் விவரம்

**வினா எண் 22056—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சிற்றூர்திகளுக்கு வழங்கப்பட்டுள்ள பர்மிட்டுகள் எத்தனை?

(ஆ) அவை எந்தெந்த வழித்தடங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 16 (பதினாறு).

(ஆ) வழித்தடங்களின் பட்டியல் கீழே கூறப்பட்டுள்ளது.

| வரிசை எண் (1) | வழித்தடம் (2) |
|---|---|
| 1. | வலசையூர் கூட்டு ரோடு முதல் கூட்டாத்துப்பட்டி வரை<br>(வழி) - காட்டூர், பள்ளக்காடு, தேங்கல்பாளையம். |
| 2. | வலசையூர் - காரிப்பட்டி அக்ரோ சர்வீஸ்<br>(வழி) - காட்டூர், வெள்ளியம்பட்டி, தேங்கல்பாளையம், ஏரிப்புதூர் மற்றும் அக்ரஹாரம். |
| 3. | ஆத்தூர் பஸ் நிலையம் முதல் மலையம்பட்டி மாரியம்மன் கோவில் வரை<br>(வழி) - கேசவன் தியேட்டர், காந்திநகர், திருநாவுக்கரசு நகர், தெற்குக்காடு, கஞ்சனூத்து, திருவள்ளுவர் நகர், வ.உ.சி. நகர், புதுப்பட்டி நகர், காந்திபுரம் மற்றும் செங்குட்டை. |





| வரிசை எண் (1) | வழித்தடம் (2) |
|---|---|
| 4. | நத்தக்கரை கிராஸ்ரோடு முதல் அன்பு நகர் மாரியம்மன் கோவில் வரை<br>(வழி) - நவக்குறிச்சி, அம்மன்நகர், மெக்கானிக் கொட்டாய், வடகரையன்கோவில், வரகூர், உடைந்தபாலம். |
| 5. | ஜலகண்டாபுரம் பஞ்சாயத்து யூனியன் பிரைமரி ஸ்கூல் முதல் கலக்குபட்டி காட்டுவளவு வாட்டர் டேங் வரை<br>(வழி) - வண்டிமேடு, ஜி.எச்., சஞ்சியூர் கிராஸ்ரோடு, டணங் காட்டூர் ஸ்கூல், பலகானூர், அரியாம்பட்டி, கிராஸ்ரோடு, நொர்ச்சிவளவு, மாரியம்மன்கோவில், பெருமாகவுண்டனூர் வனவாசி கிராஸ்ரோடு, டச்சிங் சோடையூர் (வழி) அரியம் பட்டி ஸ்கூல். |
| 6. | வேப்பிலைப்பட்டி முதல் மண்டைக்காடு வரை<br>(வழி) - ராசிமலை, தேங்கல்பட்டி, ஓலைப்பட்டி, கருங்கல்பட்டி மற்றும் மலையாளப்பட்டி. |
| 7. | முட்டைக்கடை முதல் லட்சுமி சேகோ பேக்டரி வரை<br>(வழி) - மின்னாம்பள்ளி, மாதாகோவில், அக்ரஹாரம், கருமாபுரம், எஸ். நாட்டாமங்கலம், எம். பெருமாபாளையம், மேட்டுப்பட்டி, லட்சுமி சேகோ பேக்டரி (ஆத்தூர் மெயின் ரோடு கிராஸ்). |
| 8. | ஆட்டையாம்பட்டி அபர்ணா தியேட்டர் முதல் மகுடஞ்சாவடி யூனியன் ஆபீஸ் வரை<br>(வழி) - ஆண்டிப்பட்டி, கண்டர்குலமாணிக்கம் காலனி, டச்சிங் காளிபட்டி, கிழக்கு பாளையம், கடலூர். |
| 9. | சங்ககிரி முதல் பாலமேடு வரை<br>(வழி) - போலீஸ் ஸ்டேசன், பயணியர் மாளிகை, எஸ்.டீ.எ. ஸ்கூல், திருச்செங்கோடு பிரிவு ரோடு, பக்காளையர், வி.என். பாளையம், ஜி.எச். ஸ்கூல், ஈஸ்வரன்கோவில், கலியனூர்-கிடையூர் பிரிவு ரோடு. |
| 10. | தாசநாயக்கன்பட்டி காந்திபுரம் காலனி, முதல் பூலாவரி வரை<br>(வழி) - அண்ணா காலனி, நாட்டாமங்கலம், தம்மநாயக்கன் பட்டி, தீரனூர், கொழிச்சிப்பட்டி, டச்சிங் தீரனூர், நாட்டாமங்கலம். |

[1999 மே 18

| வரிசை எண் (1) | வழித்தடம் (2) |
|---|---|
| 11. | அமரர் அர்த்தநாரி வாத்தியார் நினைவு பயணியர் நிழற்கூடம் (சோரகை) முதல் ஜலகண்டாபுரம் பஸ் நிலையம் வரை<br>(வழி) - பொன்னப்பன் காலனி, பெருமாகவுண்டனூர், நொரச்சவளவு, அருந்ததியர் காலனி, பள்ளக்காரனூர் காட்டுவளவு, பண்ணக்காட்டூர், சஞ்சூர், நரியம்பட்டி, கிராஸ்ரோடு, ஜலகண்டாபுரம், ஜி.எச்., வண்டிமேடு, பஜார் தெரு, சவுடாம்பிகா தியேட்டர். |
| 12. | சங்ககிரி பச்சக்காடு முதல் ஆலத்தூர் கோவில் மேடு<br>(வழி) - ராயனூர், செங்காட்டனூர், சாவடியூர், மொத்தயனூர் மற்றும் ஆலத்தூர். |
| 13. | வெள்ளாளகுண்டம் முதல் வாழப்பாடி வரை<br>(வழி) - சென்ட்ராயம்பாளையம், காளியம்மன்கோவில், கேசன்சாவடி பிரிவுரோடு, சிங்கியபுரம் பிரிவுரோடு, புதுப்பாளையம் பிரிவு ரோடு, டச்சிங் கேசன்சாவடி. |
| 14. | வீரகனூர் ஹவுசிங் போர்டு முதல் ஆரகளூர் வள்ளிக்குமரன் டூரிங் டாக்கீஸ் வரை<br>(வழி) - ராமநாதபுரம் பிரிவுரோடு, வெள்ளையூர், காட்டுக்கொட்டாய், வெள்ளையர் கிராஸ்ரோடு, ஓடைக்காடு, வேப்பம்பூண்டி மற்றும் நாலுரோடு, டச்சிங் வெள்ளையூர். |
| 15. | தாரமங்கலம் கார்த்திகேயன் தியேட்டர் முதல் சேலம் இரும்பாலை வரை (ஓலைப்பட்டி கிராஸ்)<br>(வழி) - பாளத்தானூர், ஸ்ரீலங்கா காலனி, தொட்டியனூர் எல்லாயூர் பிரிவு, போத்தனூர், கோனக்காபாடி பிரிவு, தொப்பூர் பிரிவு, ரங்கநாதபுரம், பெரமனூர், கருங்கல்வாடி, சேவனூர், பாப்பம்பாடி பிரிவு, ஓலைப்பட்டி, மற்றும் காமராஜர் நகர். |
| 16. | தாரமங்கலம் கார்த்திகேயன் தியேட்டர் முதல் சேலம் இரும்பாலை (ஓலைப்பட்டி கிராஸ்) வரை<br>(வழி) - பவளத்தானூர், ஸ்ரீலங்கா காலனி, தொட்டியனூர், எல்லாயூர் பிரிவு, போத்தனூர், கோனக்காபாடி பிரிவு, தொப்பூர் பிரிவு, ரங்கநாதபுரம், பெரமனூர், கருங்கல்வாடி, சேவனூர், பாப்பம்பாடி பிரிவு, ஓலைப்பட்டி மற்றும் காமராஜர் நகர். |



1999 மே 18]

23—

**பேருந்து வசதி**

**வினா எண் 22809—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் பேருந்து வசதியில்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு சட்டமன்றத் தொகுதியில் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1000-க்கு மேல் மக்கள் தொகை உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

24—

**அரசு நெடுஞ்சாலையைச் செப்பனிடல்**

**வினா எண் 14339—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, வைப்பூர், நாரையூர், தண்டரை வரை உள்ள அரசு நெடுஞ்சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் ஓர் அடுக்கு ஜல்லி பரத்தி தார்பரத்தும் பணிக்குத் தோராயமாக ரூ. 35 லட்சம் தேவைப்படும். இது இனிவரும் ஆண்டில் நபார்டு திட்டத்தில் சேர்த்து மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

**சாலைகள் செப்பனிடுதல்**

**வினா எண் 18281—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

எடப்பாடி தொகுதி, இருப்பாளி மூலக்கடை முதல் இருப்பாளி, இராமகவுண்டனூர், வண்ணான்குட்டை வழியாக ஆடையூர் வரையுள்ள சாலை மிகவும் பழுதுபட்டுள்ளதால் அதைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் கண்டுள்ள சாலைக்குத் தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கு ஏற்ற முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**26—**

**சாலைப் புதுப்பித்தல்**

**வினா எண் 18483—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர்-சங்ககிரி சாலை கி.மீ. 7/0-லிருந்து முத்தநாய்க்கன்பட்டி செல்லும் சாலை 0/0-4/2 இந்த நிதியாண்டில் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் கண்டுள்ள பணியை நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்படும் நிதிநிலைமைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாகப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**27—**

**பாதை அகலப்படுத்துதல்**

**வினா எண் 19742—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

எடப்பாடியிலிருந்து பூலாம்பட்டி செல்லும் பாதையை அகலப்படுத்தி செப்பனிட அரசு ஆவன செய்யுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அரசின் நிதி நெருக்கடி காரணமாகப் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**28—**

**சாலைகள் செப்பனிடுதல்**

**வினா எண் 22447—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வைரமங்கலம், செவானூர், செம்பூத்தாம்பாளையம் சாலை, குட்டிப் பாளையத்திலிருந்து பவானி, கவுந்தபாடி தார்ச்சாலை, கூச்சக்கல்லூர் - கருங்கண்ணகொட்டாய் சாலை ஆகியவற்றை கிராமச்சாலைகள் திட்டத்தின்கீழ் செப்பனிட்டுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று சாலைகளும் வரும் ஆண்டு நபார்டு திட்டத்தில் சேர்த்து மேம்பாடு செய்ய பரிசீலனை செய்யப்படும்.

**29—**

**நகை திருடியவர் மீது நடவடிக்கை**

**வினா எண் 18136—திரு. டி. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாண்டுகளுக்கு முன்னால் திருவட்டாறு, ஆதிகேசவப் பெருமாள் கோயில் சாமி சிலையிலிருந்து இலட்சக்கணக்கான ரூபாய்க்கான நகை திருடப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

[1999 மே 18

(ஆ) ஆம் எனில், அந்த நபர்கள் மீது காவல் துறை எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் 18-2-1995 அன்று இரவு திருடர்கள், கருவறையின் கதவினைக் கள்ளச்சாவி போட்டுத் திறந்து கருவறையிலுள்ள நகைகள் மற்றும் இதர பொருட்களையும் களவாடிச் சென்றுவிட்டனர்.

மேற்படி களவு சம்பந்தமாக திருவட்டாறு காவல் நிலைய குற்ற எண் 91/95-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான (1) சோமன், த/பெ மாதவன், காயங்குளம், கேரளா, (2) சுனில் குமார் (என்கிற) அனில், த/பெ வாசு, பனம்பள்ளம், கேரளா ஆகியோரைத் திருச்சூரில் 3-5-1995-ல் போலீசார் கைது செய்து ரூ. 7,20,000 மதிப்புள்ள நகைகளை மீட்டனர். 3-வது எதிரி சுகுமாரன் நாயர் தலைமறைவாக உள்ளான். 4-வது எதிரி வினயனை என்பவனைப் பெங்களூரில போலீசார் கைது செய்து அவனிடமிருந்து சில நகைகளைக் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்புவித்துள்ளனர். வழக்கு விசாரணையிலுள்ளது.

**30—**

### குடிமைப் பொருட்கள் வழங்குதல்

**வினா எண் 17169—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டம், கல்லூரணி ஊராட்சி, சின்னதம்பி நாடார் பட்டி பகுதியில் உள்ள குடும்ப அட்டைகளை கல்லூரணியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அமுதம் நியாயவிலைக் கடையில் இணைத்து, குடிமைப் பொருட்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1999 மே 18]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கல்லூரணி ஊராட்சியைச் சேர்ந்த சின்னதம்பி நாடார்பட்டி கிராம குடும்ப அட்டைகள் கல்லூரணியிலுள்ள பாவூர் சத்திரம் (டிஏ 039) கடையின் கிளைக் கடையில் இணைக்கப்பட்டு, 1-9-98 முதல் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**31—**

### தலைவர் தேர்வுச் சட்டம்

**வினா எண் 20473—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பதவிக்கும், இயக்குநர் பதவிக்கும் அத்துறையில் படிப்பறிவு அல்லது அனுபவ அறிவு உடையவர்தான் தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற சட்டம் தமிழக அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**32—**

### பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 20579—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட காளேகவுண்டனூரிலிருந்து நியாயவிலைக் கடையைப் பிரித்து, எச்சன அள்ளிக்குப் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சிகரலஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் எச்சனஅள்ளி நியாயவிலைக் கடை காளேகவுண்டனூர் கிராமத்தில் இயங்கி வருகிறது. இந்நியாயவிலைக் கடையில் மொத்தம் 565 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்நியாயவிலைக் கடையிலிருந்து 220 குடும்ப அட்டைகளைப் பிரித்து, அனுமந்தபுரம் கிராமத்தில் பகுதிநேரக் கடை தொடங்க தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் 24-9-1998-ல் ஆணை பிறப்பித்ததையடுத்து, அனுமந்தபுரம் பகுதிநேரக் கடை 16-12-1998 முதல் இயங்கிவருகிறது. எச்சனஅள்ளி கிராமத்தில் 115 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. எச்சன அள்ளி கிராமம் தாய்க் கடையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. காளேகவுண்டனூர் நியாயவிலைக் கடையிலிருந்து 220 குடும்ப அட்டைகளுடன் அனுமந்தபுரம் கிராமத்தில் ஒரு பகுதி நேரக் கடை தொடங்கி செயல்பட்டு வருகின்ற நிலையில் 345 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் இக்கடையிலிருந்து 115 குடும்ப அட்டைகளைப் பிரித்து, மீண்டும் எச்சன அள்ளியில் பகுதிநேரக் கடை தொடங்க 15-10-1998 ஆம் நாளிட்ட (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) அரசாணை நிலை எண் 214-ல் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி வழிவகையில்லை.

**33—**

### பகுதிநேர நியாயவிலைக் கடை

**வினா எண் 20585—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியத்திற்குட்பட்ட நாகதாசம் பட்டி நியாயவிலைக் கடையிலிருந்து பிரித்து, குள்ளனூர், தாளப் பள்ளத்திற்குப் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் வட்டம், சிகரலஅள்ளி கூட்டுறவு வங்கியால் இயங்கி வரும் நாகதாசம்பட்டி கூட்டுறவு நியாயவிலைக் கடை 768 குடும்ப அட்டைகளுடனும், பிக்கம்பட்டி பகுதிநேரக் கடை 386 குடும்ப அட்டைகளுடனும் இயங்கி வந்தன. இவ்விரண்டு கடைகளிலிருந்தும் 211 குடும்ப அட்டைகளைப் பிரித்து, புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை ஒன்று குள்ளனூர் கிராமத்தில் தொடங்க தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் 22-4-1998 அன்று ஆணை பிறப்பித்து, அது 25-5-1998 முதல் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே பிக்கம்பட்டி கிராமத்திலும், தற்போது ஆணையிடப்பட்டபடி குள்ளனூரிலும், பகுதிநேரக் கடைகள் இயக்கப்படுவதால் தாளப்பள்ளத்தில் தனியே பகுதிநேரக் கடை தொடங்கிடச் சாத்தியமில்லை.

**34—**

### கிணறுகள் அமைக்க கடனுதவி

**வினா எண் 20727—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க கடன் உதவி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், 1997-98-ல் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாகப் புதிய கிணறுகள், வடிமுனைக் குழாய்க்

கிணறுகள் மற்றும் குறைந்த ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க (100 மீட்டர் ஆழம் வரை) தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு) விதிமுறைகளுக்குட்பட்டு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் விவசாயிகட்கு கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஆழ்துளைக் கிணறுகள், நீரேற்று இயந்திரங்கள் மற்றும் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக மொத்தம் ரூ. 91.77 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**35—**

### கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 22844—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், காசிமேஜர்புரம் கிராமத்தில் குடும்ப அட்டைக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கியதை, தற்போது 3 லிட்டர் என்று குறைக்கப்பட்டு வழங்கப் படுவதால் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வனப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள இக்கிராமப் பகுதிக்குத் தொடர்ந்து 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டம், காசிமேஜர்புரம் கிராமத்தில் குடும்ப அட்டைகளுக்கு 5 லிட்டர் என்ற அளவிலேயே மண்ணெண்ணெய் தொடர்ந்து வழங்கப்படுகிறது. 3 லிட்டராகக் குறைக்கப்படவில்லை. குற்றாலம் பேரூராட்சிக்கான நியாயவிலை அங்காடி, அங்கு இடவசதி யின்மையால் அருகாமையிலுள்ள காசிமேஜர்புரத்தில் செயல்பட்டது. குற்றாலம் பேரூராட்சிப் பகுதி என்பதால் அதனடிப்படையில் அந்த அங்காடியில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் குடும்ப அட்டைகளுக்கும் தலா 5 லிட்டர் என்ற அளவில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்துள்ள வழங்கல் அளவுகளின்படி பேரூராட்சிப் பகுதி குடும்ப அட்டைகளுக்குத் தலா 5 லிட்டரும், கிராம ஊராட்சிப் பகுதி குடும்ப அட்டைகளுக்குத் தலா 3 லிட்டரும் மட்டுமே மண்ணெண்ணெய் வழங்கிடல் வேண்டும். தற்போது குறிப்பிட்ட அங்காடி இரண்டாகப் பிரிக்கப்பட்டு குற்றாலம் பகுதியில் தனி கிளை அமைக்கப்பட்டுள்ளது. அங்காடி பிரிக்கப்பட்டபின் காசிமேஜர்புரம் கிராம அங்காடியில் உள்ள குடும்ப அட்டைகளுக்குத் தலா மூன்று லிட்டர் மட்டும் மண்ணெண்ணெய் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது, பொது மக்கள் அதிருப்தி தெரிவித்த காரணத்தினால் தொடர்ந்து தலா 5 லிட்டர் என்ற அளவிலேயே மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.



**36—**

### கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் வருகைப் பதிவேடு

**வினா எண் 22926—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து கூட்டுறவு நியாயவிலைக் கடைகளிலும் வருகைப் பதிவேடு வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளிலும் வருகைப் பதிவேடு வைக்கப்பட்டு, பராமரிக்கப்படுகிறது. கூட்டுறவு நியாயவிலைக் கடையினை ஆய்வு செய்யும் துறை அலுவலர்களும், இதனைக் கண்காணித்து வருகின்றனர்.

**37—**

### பகுதிநேர நியாயவிலைக் கடை

**வினா எண் 23055—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம் இலஞ்சி பேரூராட்சி, முதலாளி குடியிருப்பு கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், இலஞ்சி பேரூராட்சி, முதலாளி குடியிருப்பு கிராமத்தில் 144 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், தாய்க் கடையான இலஞ்சி நியாயவிலைக் கடையிலிருந்து முதலாளி குடியிருப்பு 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதாலும் முதலாளி குடியிருப்பு கிராமத்தில் அரசு விதிகளின்படி பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**38—**

**பகுதிநேர நியாயவிலைக் கடை**

**வினா எண் 23063—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சி, கோபால் நகர் பகுதியில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேங்கராயன் குடிகாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் மருங்குளம் அங்காடி இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மருங்குளம் நியாயவிலைக் கடையுடன் 750 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கோபால் நகர் பகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 109 ஆகும். அரசு ஆணை



(நிலை) எண் 214, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-98-ல் பகுதிநேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிபந்தனை நிறைவடையாத நிலையில் அங்கு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**39—**

**நியாயவிலைக் கடை மூலம் உணவுப் பொருள்**

**வினா எண் 23068—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பேரூராட்சி 1-வது வார்டு பாபநாசபுரத்திற்கு ஆணைகுளத்தில் உள்ள நியாயவிலைக் கடை எண் 150 மூலம் உணவுப் பொருள் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், வி.கே. புதூர் வட்டம், சுரண்டை பேரூராட்சி 1-வது வார்டு, பாபநாசபுரம் பகுதியிலுள்ள குடும்ப அட்டைகள் முழுவதும் 1-10-98 முதல் ஆணைகுளம் நியாயவிலைக் கடையில் இணைக்கப்பட்டு (கடை டி.பி. எண் 150) தற்போது மேற்கண்ட கடை மூலமே அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**40—**

**தொழிலாளர் நல வாரியம்**

**வினா எண் 23822—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்கள் நல வாரியம் எப்போது உருவாக்கப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) 52 அமைப்பு ரீதியற்ற தொழில்களில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களின் நலம் பேண 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனைச் செயல்படுத்த தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியம் அமைத்து அரசாணை எண் 35, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 17-3-99-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வாரியம் விரைவில் செயல்பட உள்ளது. இந்த வாரியம், தமிழ்நாடு முழுவதற்கும் செயல்படும் வாரியம் என்பதால், சேலத்தில் உள்ள தொழிலாளர் நலன்களுக்கும் இது பொருந்தும். எனவே சேலம் மாவட்டத்திற்கு என்று தனி வாரியம் ஏற்படுத்த அவசியம் இல்லை.

**41—**

**மூடப்பட்ட பஞ்சாலைகள் விவரம்**

**வினா எண் 22715—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் எத்தனை பஞ்சாலைகள் மூடப்பட்டன?

(ஆ) அதற்கான காரணங்கள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 28 பஞ்சாலைகள் இயங்காமல் உள்ளன.



(ஆ) 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 250-ன்படி 100 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் ஆலைகள், முன்அனுமதி பெற்றுத்தான் மூடப்பட வேண்டும். அவ்வாறு எந்தப் பஞ்சாலையும் முன்அனுமதி பெற்று மூடப்படவில்லை. பி & சி மில் உட்பட மேற்கண்ட 28 ஆலைகளும் நிதி நெருக்கடி காரணமாகவே மூடப்பட்டுள்ளன. இவற்றில் தொழிற் தகராறுகள் காரணமாக எந்த ஆலையும் இயங்காமலில்லை. எனவே, நிதி நெருக்கடி காரணமாக மேற்கண்ட ஆலைகள் இயங்காமல் உள்ளதால், இவற்றைத் திறந்து நடத்த தொழிலாளர் துறையில் நடவடிக்கை ஏதுமில்லை.

**42—**

**கைதிகள் உண்ணாவிரதம் விவரம்**

**வினா எண் 23872—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை சிறைச்சாலையில் கைதிகள் உண்ணாவிரதத்தை எத்தனை பேர் மேற்கொண்டுள்ளனர்?

(ஆ) ஆம் எனில், அந்தக் கைதிகளின் குறைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை சிறைச்சாலையில் 519 கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

(ஆ) இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு

| வ. எண் | சிறையின் பெயர் | உண்ணாவிரதம் மேற்கொண்ட நாள் | சிறைவாசி களின் எண்ணிக்கை | உண்ணாவிரதம் மேற்கொண்டதற் கான காரணம் | உண்ணா விரதத்தை முடித்துக் கொண்ட நாள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **மத்திய சிறை** | | | | | |
| 1. | பாளையங்கோட்டை | 26.01.98 | 2 | முன்னாள் முதல்வர் திரு. பக்தவச்சலம் நினைவு மண்டபம் திறப்பதை எதிர்த்து | 26.1.98 |
| 2. | கடலூர் | 06.03.98 | 37 | மயிலாடுதுறையில் முன்னறிவிப்பு இன்றி துப்பாக்கிச் சூடு நடத்திய காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுத்திடக் கோரி போராட்டத்தில் கைதான சிறைவாசிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். | 07.03.98 |



## இணைப்பு

| வ. எண் | சிறையின் பெயர் | உண்ணாவிரதம் மேற்கொண்ட நாள் | சிறைவாசி களின் எண்ணிக்கை | உண்ணாவிரதம் மேற்கொண்டதற் கான காரணம் | உண்ணா விரதத்தை முடித்துக் கொண்ட நாள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **மத்திய சிறை—தொடர்ச்சி** | | | | | |
| 3. | கடலூர் | 12.03.98 | 183 | நீதிமன்றம் செல்லும் வழியில் தங்களைக் காவல் துறையினர் தாக்கியதாகப் புகார் செய்து சம்பந்தப்பட்ட ஆயுதப்படை காவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடக் கோரி 12.3.98 காலை மற்றும் மதிய உணவு அருந்தவில்லை. | 12.03.98 |
| 4. | வேலூர் | 24.03.98 | 1 | திருச்சி மத்திய சிறைக்கு மாற்றம் செய்திடக் கோரி. | 26.03.98 |
| 5. | சென்னை | 03.05.98 | 1 | சிறைவாசியின் தந்தை இறந்ததால் ஈமச்சடங்கில் கலந்து கொள்ளக் கோரி. | 04.05.98 |
| 6. | வேலூர் | 19.05.98 | 16 | சிறை மாற்றம் கோரி | 22.05.98 |

## இணைப்பு

| வ. எண் | சிறையின் பெயர் | உண்ணாவிரதம் மேற்கொண்ட நாள் | சிறைவாசிகளின் எண்ணிக்கை | உண்ணாவிரதம் மேற்கொண்டதற்கான காரணம் | உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட நாள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| மத்திய சிறை—தொடர்ச்சி. | | | | | |
| 7. | மதுரை | 27.05.98 | 123 | தனியாகச் சமையலறை வேண்டுமெனக் கோரி. | 29.05.98 |
| 8. | பாளையங்கோட்டை | 01.06.98 | 137 | காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுத்திடக் கோரி. இதில் 96 நபர்கள் 6.6.98-ல் உண்ணாவிரதத்தை நிறைவு செய்துள்ளனர். | 06.06.98 |
| 9. | திருச்சி | 05.06.98 | 6 | பொய் வழக்கு போட்ட காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுத்திடக் கோரி. | 09.06.98 |
| 10. | திருச்சி | 11.06.98 | 11 | சிறையிலிருந்து விடுதலை செய்திடக் கோரி | 12.06.98 |
| 11. | திருச்சி | 15.06.98 | 1 | நெசவாளர் கூலிப் பிரச்சினை காரணமாக. | 16.06.98 |
| 12. | வேலூர் | 22.06.98 | 1 | இல நியாயமற்ற கோரிக்கைகளை வலியுறுத்தி. | 28.06.98 |



**43—**

### இட ஒதுக்கீடு முறை

**வினா எண் 19064—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள் வரிச் சலுகை பெறும் தனியார் நிறுவனங்களில் பணியாளர் தேர்வில் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்ற அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தனியார் நிறுவனங்களில் பணியாளர் தேர்வில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டுமானால் அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அரசு உதவிபெறும் பள்ளிகளிலும், அரசு சிறுபான்மை தகுதிபெறாத உதவிபெறும் கல்லூரிகளிலும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தேர்வில் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறது. தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) விதிகளின்படி சிறுபான்மை தகுதி பெற்றுள்ள கல்லூரிகளில் இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படுவதில்லை.

**44—**

### பிற்பட்ட மாணவர் விடுதி

**வினா எண் 23009—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டம், சு. வாளவெட்டியில் பிற்பட்ட மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை வட்டம் சு. வாளவெட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**45—**

**சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 21286—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திண்டுக்கல் நகரம், நாகல் நகரிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், சொந்தக் கட்டடம் எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திண்டுக்கல் நகரம், நாகல் நகரிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**46—**

**குழந்தைகள் காப்பகம் அமைத்தல்**

**வினா எண் 16348—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி புக்கம்பட்டி காலனியில் குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டம், மேச்சேரி வட்டாரத்தைச் சேர்ந்த புக்கம்பட்டியில் ஊட்டச்சத்து மையத்துடன் இணைந்த குழந்தைகள் நல மையம் ஒன்று செயல்பட்டு வருவதால் புக்கம்பட்டி காலனியில் புதிய குழந்தை நல மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.





*(ஆ)* இவ்வினா எழவில்லை.

**47—**

**ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 13091—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி, மருதைகவுண்டன்வலசில் உள்ள மந்தை புறம்போக்கை நத்தம் புறம்போக்காக மாற்றி, ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், ஆலாம்பாளையம் கிராமம் ரீ.ச. எண் 1644/1 புலம் மருதைகவுண்டன்வலசு என அழைக்கப்படுகிறது. இப்புலம் கிராமக் கணக்குகளில் 'மந்தை' எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இது ஒப்படைக்குத் தடை செய்யப்பட்ட புறம்போக்கு ஆகும். எனினும், இதில் பல ஆண்டுகளாக வசித்து வரும் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க இப்புலம் கூர் உணர்வுள்ள ஆக்கிரமிப்பு இனம் என்பதால், இதுகுறித்து முன்மொழிவுகளை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர் வழியாக அரசின் வருவாய்த் துறைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**48—**

**சுற்றுலாத் துறை அலுவலகம் அமைத்து, பேருந்து இயக்குதல்**

**வினா எண் 14532—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் சுற்றுலாத் துறை அலுவலகம் அமைத்து, அதன் மூலம் பேருந்துகளை திருத்தணி, காஞ்சிபுரம், சோளிங்கர், வள்ளிமலை, தெங்கால்,

[1999 மே 18

ரத்னகிரி, திருப்பதி, திருவண்ணாமலை, படவேடு, கலவை, விரிஞ்சிபுரம் சேண்பாக்கம், வெட்டுவானம், பள்ளிக்கொண்டா, மகாதேவமலை, திருக்கோயில்களுக்கு இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

வேலூரில் தமிழ்நாடு அரசின் சுற்றுலா அலுவலகமோ, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகக் கிளையோ தற்போது இல்லை. எனவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வேலூரிலிருந்து, திருத்தணி, காஞ்சிபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, படவேடு, கலவை, விரிஞ்சிபுரம், சேண்பாக்கம், வெட்டுவானம், பள்ளிக்கொண்டா, மகாதேவமலை, திருக்கோயில்களுக்குச் சுற்றுலாக்களைத் தொடங்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு வேலூரை மையமாக வைத்துப் போதுமான அளவு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதனால் சுற்றுலாப் பயணிகளுக்கு எவ்வித சிரமமும் இல்லை. சென்னையை மையமாக வைத்து திருத்தணி, திருப்பதி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களுக்குத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**49—**

### சுற்றுலா மாளிகைகள் கட்டுதல்

**வினா எண் 14534—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஏலகிரி, அமிர்தி மலைகளில் சுற்றுலா மாளிகைகள் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ஏலகிரி, அமிர்தி மலைகளில் சுற்றுலா மாளிகைகள் கட்டுவது தொடர்பாகத் திட்டம் அரசிடம் தற்போது ஏதுமில்லை. ஏலகிரி மலையில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக அரசு சுற்றுலா (Rural and Village Tourism) என்ற புதிய சுற்றுலா வசதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஏலகிரிக்கு வரும் சுற்றுலாப்



1999 மே 18]

பயணிகள் அங்கேயே அப்பகுதி மக்களோடு இரவில் தங்கி பாரம்பரிய உணவு வகைகளை உண்டு களித்து, மறுநாள் காலை முதல் மாலைவரை அம்மலைவாசிகளின் வாழ்க்கை முறையைக் கண்டு மகிழும் வகையில் அனைத்து வசதிகளும் செய்யப்பட உள்ளன.

1. சுற்றுலாப் பயணிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப தங்கும் வசதி கொண்ட குடில்கள் ஏற்பாடு செய்தல்.

2. பாரம்பரிய உணவு வகைகளை அமைக்கக் கூடிய உணவுக் கலை வல்லுநர்களை நியமித்தல்.

3. உள்ளூரிலுள்ள கிராமிய கைவினைப் பொருட்கள் செயல்முறை விளக்கத்தோடு விற்பனை ஏற்பாடு செய்தல்.

4. வேளாண்மைத் தொழில் குறித்து நேரடியாக விளை நிலங்களுக்குச் சென்று பார்க்க ஏற்பாடு செய்தல்.

5. மாலையில் மலைவாசிகளோடு உள்ளூர் கிராமிய நடனங்களைப் பார்வையிட்டு; பங்கெடுத்தல்.

மேற்சொன்ன அனைத்து வசதிகளையும் வழங்கத் தேவையான ஏற்பாடுகளை ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வனத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மூலமாக ஏற்பாடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**50—**

### அருவியைச் சுற்றுலா மையமாக்குதல்

**வினா எண் 15895—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகேயுள்ள குட்டுலாடம்பட்டி அருவியைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகேயுள்ள குட்டுலாடம்பட்டி அருவியைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. எந்த ஒரு இடத்தையும் சுற்றுலா மையமாக

[1999 மே 18

சுற்றுலாத் துறை அறிவிப்பது இல்லை. சம்பந்தப்பட்ட சுற்றுலா மையங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்து அடிப்படை வசதிகளான சாலை வசதி, மின்சாரம், கழிப்பிடம் தங்குமிடம் மற்றும் குடிநீர் போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, குட்டுலாடம்பட்டி அருகேயுள்ள தாடகை நாச்சியம்மன் அருவியைச் சுற்றுலா வசதிகள் கொண்டதாக உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டு—

| | |
|---|---|
| உடை மாற்றுமிடம் மற்றும் சிறுநீர் கழிக்குமிடம் கட்டுவதற்கு | ரூ. 1.50 இலட்சமும் |
| கழிப்பறை கட்டுவதற்கு | ரூ. 2.50 இலட்சமும் |
| ஆக மொத்தம் | ரூ. 4.00 இலட்சம் |

ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## இருபத்தியொன்றாம் பட்டியல்

1—

### மருத்துவமனை படுக்கைகளைச் சீர்செய்தல்

**வினா எண் 13276—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள சேத்தியாத்தோப்பு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் பயன்படுத்தும் படுக்கைகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில், சேத்தியாதோப்பு சமுதாய சுகாதார நிலையம் தற்போது 24 மணி நேரமும் செயல்படுகிறது. சேத்தியாதோப்பு சமூகநல மையத்தில் 6 படுக்கை வசதிகள் உள்ளன. இந்த 6 படுக்கைகள் உரிய முறையில் பழுதுபார்க்கப்பட்டு உபயோகப்படுத்தும் நிலையில் உள்ளன.



1999 மே 18]

2—

### பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 14068—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை தாலுகா, இரவிய தர்மபுரம் அரசு தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் தெரிவு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், செங்கோட்டை தாலுகா, இரவிய தர்மபுரம் அரசு தொடக்கப் பள்ளிக்கு 1999-2000 ஆம் நிதியாண்டில் விதிமுறைகளுக்குட்பட்டு முன்னுரிமை அடிப்படையில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள விருதுநகர் மாவட்டத் திட்ட அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3—

### பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 16351—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்தநாயக்கன்பட்டி கதிர்செட்டிப்பட்டிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் முத்துநாயக்கன்பட்டி கதிர்செட்டிபட்டி தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் பணி 1999-2000 ஆம் நிதியாண்டில் எடுத்து, செய்து முடிக்கப்படும்.

4—

**தொகுப்பு விடு கட்டுதல்**

**வினா எண் 17152—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், மூங்கில்பாடி ஊராட்சியிலுள்ள சேனைக்கவுண்டனூர் அருந்ததியர் காலனிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இலவசமாகத் தொகுப்பு வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

5—

**குடும்ப அட்டைகளை நியாயவிலைக் கடையில் இணைத்தல்**

**வினா எண் 17169—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) தென்காசி வட்டம், கல்லூரணி ஊராட்சி, சின்னதம்பி நாடார்பட்டி பகுதியில் உள்ள குடும்ப அட்டைகளை கல்லூரணியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அமுதம் நியாயவிலைக் கடையில் இணைத்து குடிமைப் பொருட்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கல்லூரணி ஊராட்சியைச் சேர்ந்த சின்னதம்பி நாடார்பட்டி கிராம குடும்ப அட்டைகள் கல்லூரணியிலுள்ள பாவூர் சத்திரம் (டிஏ 039) கடையின் கிளைக் கடையில் இணைக்கப்பட்டு 1-9-1998 முதல் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறன்றன.

6—

**வக்ஃப் வாரிய சொத்து ஆக்கிரமிப்பினை அகற்றுதல்**

**வினா எண் 19373—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வக்ஃப் வாரியச் சொத்துக்கள் தனியாரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதைத் திரும்பப் பெறும் வகையில் கடுமையான சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1995 ஆம் வருடத்திய வக்ஃப் சட்டம், பிரிவு 54-ன்கீழ் வக்ஃப் வாரியச் சொத்துக்களின் மீதான ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டப் பிரிவு ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு போதுமானது. எனவே, தற்போது சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டிய அவசியம் எழவில்லை.

[1999 மே 18

7—

**சர்க்கரை ஆலையில் விடுமுறை விதிகள்**

**வினா எண் 19404—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் உள்ள சர்க்கரை ஆலையில் மாநில அரசால் அறிவிக்கப்படும் விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் அமைந்துள்ள பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்னும் சர்க்கரை ஆலையில் அரசு அறிவித்துள்ள நான்கு தேசிய விடுமுறை தினங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஐந்து பண்டிகை விடுமுறை தினங்கள் ஆகியவற்றிற்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு, அறிவிப்பு காட்டி வைக்கப்பட்டுள்ளது. இந்நாட்களுக்கு, தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு சம்பளம் வழங்கப்படுகிறது. இந்நாட்களில் வேலை நடைபெறுவதாக இருப்பின், முன்னதாக அறிவிப்பு அனுப்பப்படுகிறது. இந்நாட்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரட்டிப்புச் சம்பளம் வழங்கப்படுகிறது.

8—

**துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குதல்**

**வினா எண் 21239—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டையில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டையில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

9—

**பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்**

**வினா எண் 23548—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் எடப்பாடியில் பீடித் தொழிலாளர்களின் வீட்டு வசதித் திட்டத்திற்கு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இதற்குத் தேவையான நிலங்கள் கண்டறியப்பட்டால், இத்திட்டம் பரிசீலிக்கப்படும்.

10—

**வனங்களில் யானைகள் மற்றும் சிங்கங்களைப் பாதுகாத்தல்**

**வினா எண் 21540—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள காடுகளில் ஆண் யானை மற்றும் சிங்கங்களைக் காக்க அரசு எந்தெந்த நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டிலுள்ள காடுகளில் உள்ள யானைகளைப் பாதுகாக்க "யானைகள் காப்புத் திட்டம்" ஏற்படுத்தப்பட்டு, பல்வேறு பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டுக் காடுகளில் சிங்கம் கிடையாது.*

**11—**

### மகளிர் வீட்டு வசதித் திட்டம்

**வினா எண் 5613—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1996-1997 ஆம் ஆண்டு மகளிர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் புதிய வீடு கட்டவும், பழைய வீட்டைச் செப்பனிடவும் எத்தனை பேருக்குக் கடன் வழங்கப்பட்டது.*

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

*1997-98 ஆம் ஆண்டில் மகளிர் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளில் 260 வீடுகளுக்கு ரூ. 215.16 இலட்சமும் வீடுகள் பழுதுபார்க்க மற்றும் புதுப்பிக்க 487 வீடுகளுக்கு ரூ.126.09 இலட்சமும் மற்றும் நகர்ப்பகுதியில் பெண்கள் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 2 வீடுகளுக்கு ரூ. 6.36 இலட்சமும் கடன் வழங்கப்பட்டுள்ளது.*

**12—**

### முத்திரைத்தாள் விற்பனை மூலம் வருமானம்

**வினா எண் 23841—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1997-98, 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய முத்திரைத்தாள் விற்பனையில் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?*



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*1997-98 ஆம் ஆண்டு முத்திரைத்தாள் விற்பனை மூலம் கிடைத்த வருவாய் ரூ. 715.07 கோடியாகும். 1998 ஜூன் திங்கள் வரை முத்திரைத்தாள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் ரூ. 166.50 கோடியாகும்.*

**13—**

### வேலையில்லா இளைஞர்களுக்கு மானியக் கடன்

**வினா எண் 22768—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) படித்த இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கத் தேவையான தொழில் பயிற்சி அளிப்பதுடன் மானியத்துடன் கடனும் வழங்கி அவர்கள் தொழில் தொடங்க ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு சுயமாக தொழில் செய்யும் வகையில் 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. சுமார் 10 இலட்சம் பேருக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு 1993 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் அமல்படுத்தப்பட்டது. பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் நோக்கம் சுமார் 7 இலட்சம் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி அதன்மூலம் நாட்டில் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாகும். இத்திட்டத்தின்கீழ் 'தொழில்', 'சேவை மற்றும் வியாபாரம்' போன்ற தொழில்களைத் தொடங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதம் அல்லது அதிகபட்சம் ரூ. 7,500 மானியமாக வழங்கப்படும்.*

14—

**காணாமல் போன மீனவர்கள்**

**வினா எண் 23498—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடலில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் எவ்வளவு பேர் காணவில்லை என்று காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது?

(ஆ) அதில் எவ்வளவு பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 164 மீனவர்களைக் காணவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது.

(ஆ) இன்றைய தேதி வரை (31-3-1999) 135 மீனவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

**(ஆ) * உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 17 முதல் 20 வரை)**

**பதினேழாம் பட்டியல்**

1—

**ஒப்பந்த நடைமுறைகள் பின்பற்றுதல்**

**வினா எண் 3266—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



(அ) டாமின் நிறுவனம் தமது ஆலைகளை நிறுவ ஒப்பந்தம் விடப்பட்டதில் நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டதா?

(ஆ) இல்லையெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையைத் தவிர ஏனைய ஆலைகளை நிறுவுவதில் ஒப்பந்த நடைமுறைகளை டாமின் நிறுவனம் முறையாகப் பின்பற்றியுள்ளது. சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் 1991 ஆம் ஆண்டு ஒப்பந்த நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என கண்டறியப்பட்டு அதன்தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை**

**வினா எண் 4939—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-96 ஆம் ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் அளிக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு?

(ஆ) பாக்கித் தொகையை விவசாயிகளுக்கு அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1995-96 ஆம் ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் அளிக்க வேண்டிய பாக்கித் தொகை ரூ.765.57 இலட்சம்.

(ஆ) கரும்பு (கட்டுப்பாடு) ஆணை 1966 மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விதி 1955-ன் சட்டவிதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

3—

**வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகங்களை மாநில அரசு நடத்துதல்**

**வினா எண் 5149—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகங்கள் ஆகியவற்றை மத்திய அரசின் அனுமதி பெற்று மாநில அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வங்கிகளை மற்றும் காப்பீட்டுக் கழகங்களை (Insurance Company) மத்திய அரசின் அனுமதி பெற்று, மாநில அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. வெங்கடரமணன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது, கூடுதல் நிதி ஆதாரம் திரட்டுவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தை (TIIC) வங்கியாக மாற்றியமைப்பதன்மூலம், குறைந்த செலவில் வைப்பீடுகளைப் பெற்று, தொழில் நிறுவனங்களுக்கு திட்ட மூலதனக் கடன் மற்றும் தொழில் நடைமுறை மூலதனக் கடன் ஆகியவற்றை ஒருங்கே அளிக்க இயலும் என்று பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், கூட்டு முயற்சியில் நன்கு அறியப்பட்ட வெளிநாட்டு காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து மாநில அரசும் ஒரு காப்பீட்டுக்கழகம் நடத்தலாம் என்று பரிந்துரை அளித்துள்ளது. இதற்கிடையில் காப்பீட்டுக் கழகம் முறைப்படுத்தும் அதிகார சட்டமுன் வடிவு (Insurance Regulatory Authority Bill) நாடாளுமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளதால், மாநில அரசு மேற்கூறியுள்ள குழுவின் பரிந்துரையினை தற்சமயம் செயல்படுத்த இயலவில்லை.

4—

**பட்டப் படிப்பு இறுதியாண்டு படிக்கும் மாணவர்களைத் தேர்வாணைக் குழு தேர்வுக்கு அனுமதித்தல்**

**வினா எண் 6292—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



I.A.S, I.P.S., I.F.S., போன்ற இந்திய அரசுப் பணிகளுக்கு மத்திய தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வுகளுக்கு, பட்டப் படிப்பு இறுதி ஆண்டு தேர்வு எழுதுபவர்களும் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவதைப்போல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு (T.N.P.S.C.) நடத்தும் தொகுதி-I மற்றும் தொகுதி-II தேர்வுகளுக்கும், இறுதி ஆண்டு பட்டப் படிப்பு தேர்வு எழுதும் மாணவர்களை அனுமதிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மைய அரசுப் பணியாளர் தேர்வாணைய நடைமுறையைப் பின்பற்றி, பட்டப் படிப்பு இறுதி ஆண்டுத் தேர்வு எழுதுவோரையும் இனி வரவிருக்கும் தொகுதி-I மற்றும் தொகுதி-II பணிகளுக்கானத் தேர்வுகளுக்குத் தேர்வு எழுத அனுமதிக்கலாம் எனத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும் முடிவு செய்துள்ளது.

5—

**சர்க்கரை ஆலை தொடங்குதல்**

**வினா எண் 6540—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் சர்க்கரை ஆலை உரிமம் வழங்கி நீண்ட காலமாகியும் ஆலை தொடங்கப்படாததற்கான காரணங்கள் என்ன?

(ஆ) ஆம், எனில் எப்போது ஆலை தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் புதிய சர்க்கரை ஆலையின் நிர்மாணப் பணிகள் 5-12-1997 அன்று தொடங்கப்பட்டுவிட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

6—

### ஒவ்வொரு வருடமும் தொகுதி-I தேர்வுகள் நடத்துதல்

**வினா எண் 7081—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

மத்திய அரசு நடத்திவரும் ஐ.ஏ.எஸ்., தேர்வுகளைப்போல், தொகுதி-I (குரூப்-I) தேர்வுகளையும் தமிழ்நாடு தேர்வாணையக் குழுமம் ஒவ்வொரு வருடமும் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைப் பின்பற்றி தமிழநாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும் தொகுதி-1-ல் அடங்கிய பதவிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் தேர்வு நடத்த முடிவு செய்துள்ளது.

7—

### விவசாயிகள் ஆற்று மணல் எடுக்க அனுமதி

**வினா எண் 7680—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநிலம் முழுவதும் ஆற்று மணலை விவசாயிகள் எடுத்துக்கொள்ள அரசு முறையான அனுமதி வழங்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மாநிலம் முழுவதிலும் உள்ள ஆறுகளில் மணலை விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்கள் தங்களுடைய உண்மையான சொந்த உபயோகத் திற்கோ அல்லது விவசாய காரணங்களுக்கோ கட்டணமின்றியும், அனுமதி எதுவும் பெறாமலும் சில நிபந்தனைகளுடன் எடுத்துக்கொள்ள தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் முன்பே வழிவகை செய்யப்பட்டதால், இவ்வினா எழ அவசியமில்லை.



8—

### கணினி மென்பொருள் பூங்கா அமைத்தல்

**வினா எண் 7784—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் நிறுவப்படும் "கணினி மென்பொருள் பூங்கா" எந்த இடத்தில் அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோயம்புத்தூரில் "கணினி மென்பொருள் பூங்கா" அமைக்கும் திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

9—

### மகளிர் காவல் நிலையம் தொடங்குதல்

**வினா எண் 8078—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதியில் தாலுகாவிற்கு ஒரு மகளிர் காவல் நிலையம் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1999 மே 18

**10—**

**துணைக் கருவூலம் அமைத்தல்**

**வினா எண் 8300—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கருவூல விதி தொகுப்பு 1-ல் கருவூல விதி 5 உள்விதி (1)-ல் ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலும் சார்நிலைக் கருவூலம் அமைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தண்டராம் பட்டு தாலுகா தலைநகரமல்ல என்பதாலும், மேலும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்க தொடர் செலவினமாக ரூ.2,53,800/-ம், தொடரா செலவினமாக ரூ.1,80,000/-ம், மேலும் சார்நிலைக் கருவூலம் அமைக்க கட்டடம் கட்ட சுமார் ரூ.20 இலட்சமும் செலவாகும். எனவே, தண்டராம்பட்டில் சார்நிலைக் கருவூலம் அமைக்க வேண்டாம் என சுற்றோட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சரிடம் ஆணை பெறப்பட்டுள்ளது.*

**11—**

**சேலம் உருட்டாலையை உருக்காலையாக மாற்றுதல்**

**வினா எண் 8396—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தற்போது உருட்டாலையாக உள்ள சேலம் உருக்காலையை மாற்றி அங்கே உள்ள கனிமங்களை வெட்டி எடுத்து முழு அளவிலான உருக்காலையாக மாற்ற மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?*



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், சேலம் உருட்டாலையை ஒருங்கிணைந்த உருக்காலையாக மாற்றியமைக்க தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

**12—**

**மாம்பாக்கத்தில் காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 8401—திரு. பி. என். சுப்பிரமணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆற்காடு தொகுதி மாம்பாக்கத்தில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**13—**

**தாராபுரத்தில் மகளிர் காவல் நிலையத்தின் கிளை அமைத்தல்**

**வினா எண் 8429—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தாராபுரம் நகரில் மகளிர் காவல் நிலையத்தின் கிளை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?*

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தாராபுரம் நகரில் அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்பட்டு வருவதால், மகளிர் காவல் நிலையத்தின் கிளை ஒன்று அமைக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) எழவில்லை.

**14—**

**இரும்புலிக்குறிச்சியில் புறக்காவல் நிலையம்**

**வினா எண் 8802—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரும்புலிக்குறிச்சியில் புறக்காவல் நிலையம் (Police outpost) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**15—**

**இந்து அறநிலையத் துறையின் குடில்களைப் பதிவு செய்தல்**

**வினா எண் 8814—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலையத் துறை நிறுவனத்தினால் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகின்ற குடில்களை, தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் அளிக்கப்படுகின்ற ஆடம்பர வசதிகளின் மீதான வரிச்சட்டத்தின்கீழ் பதிவு செய்ய பணிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அவ்வாறெனில், அது பற்றிய விவரங்கள்?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் அளிக்கப்படுகின்ற ஆடம்பரங்களின் மீதான வரிச் சட்டத்திற்கு உட்படுத்தாதிருக்க சட்டத் திருத்தம் செய்யக்கோரி இந்து அறநிலைய ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

**16—**

**மின் ஆக்கி முறையில் மின்சாரம் தயாரித்தல்**

**வினா எண் 9763—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மின் ஆக்கி (கோ-ஜெனரேஷன்) முறையில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மின் ஆக்கி (கோ-ஜெனரேஷன்) முறையில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**17—**

**பகுதிநேர துப்புரவுப் பணியாளர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டம்**

**வினா எண் 9786—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டத்தினை அமலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1-7-1997 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**18—**

**கண்ணாடித் தொழிற்சாலைக்கு நில ஆர்ஜிதம்**

**வினா எண் 10063—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனம் தொடங்கும் கண்ணாடித் தொழிற்சாலைக்காக எவ்வளவு நிலம் ஆர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளது?

(ஆ) அதன் கட்டுமானப் பணி எப்பொழுது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்குன்றம் மற்றும் திருக்காச்சூர் கிராமங்களில் இத்திட்டத்திற்கு 45 ஏக்கர் நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. பில்கிங்டன் நிறுவனம் சந்தைச் சூழ்நிலை காரணமாக திட்டத்தை ஆரம்பிப்பதில் சுணக்கம் காட்டுகிறது. இந்நிறுவனத்தின் தலைவருடன் டிட்கோ நிறுவனம் தொடர்புகொண்டு திட்டத்தை விரைவில் செயல்படுத்த முயற்சி செய்து வருகிறது.

**19—**

**கேபிள் டி.வி. உரிமையாளர்கள் வைப்புத் தொகையைக் குறைத்தல்**

**வினா எண் 10515—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கேபிள் டி.வி. உரிமையாளர்கள் டெபாசிட் தொகையை ரூ.10,000-திலிருந்து ரூ.2,000/- ஆகக் குறைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இக்கோரிக்கையை அரசு ஆராய்ந்து, ஏற்க இயலாது என கேபிள் டி.வி. உரிமையாளர் சங்கத்திற்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

**20—**

**மேற்குத் தொடர்ச்சி மலையில் வைரக் கற்கள் வெட்டி எடுத்தல்**

**வினா எண் 11282—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களக்காடு, அம்பாசமுத்திரம் பகுதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வைரக் கற்கள் இருப்பதாக கூறப்படுவது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்கனிமங்களை வெட்டியெடுத்து விற்பனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) களக்காடு பகுதியில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைக் காப்புக்காடுகளில் அனுமதியின்றி வைடூரியக் கற்கள் வெட்டி எடுப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்பகுதிகளில், ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஒரு சில இடங்களில் தோண்டிய பள்ளங்களில் பெக்மடைட் பாறைகளில் இருந்து வைடூரியக் கற்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் எனத் தெரியவந்தது.

(ஆ) மேற்குத் தொடர்ச்சி மலைக் காப்புக்காடு பகுதிகளில் வன விலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், அங்கு வைடூரியக் கற்களுக்காக ஆய்வுப் பணி செய்ய அனுமதி வழங்குவதற்கு தற்போதுள்ள நிலையில் வாய்ப்பில்லை.

21—

**பாசன வாய்க்காலில் இருந்து தொழிற்சாலைக்குத் தண்ணீர் வழங்கல்**

**வினா எண் 11994—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கோயில்வழி என்ற ஊரில் உள்ள குட்டையில் பாசன வாய்க்காலில் இருந்து தண்ணீர் தொழிற்சாலைக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

22—

**தென்காசியில் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம்**

**வினா எண் 12019—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தை தென்காசியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியில் உள்ள காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தை நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு தென்காசிக்கு மாற்றம் செய்யத் தேவையில்லை என அரசு முடிவெடுத்துள்ளது.



23—

**சேலம் சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட நட்டம்**

**வினா எண் 12961—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம் மோகனூரில் உள்ள சேலம் சர்க்கரை ஆலையில் கடந்த 1995-96, 1996-97-ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து சுமார் 7 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் அரவைப் பருவத்தில் தேவையான அளவு தரமான கரும்பினை அரைப்பதற்கும் எரிசாராய பிரிவின் கழிவு நீரை ஆலையிலிருந்து கிடைக்கும் மண்ணுடன் கலந்து உரம் தயாரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதால், ஆலை தொடர்ந்து நல்ல முறையில் இயங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எரிசாராய விற்பனை விலையும் சற்று கூடியுள்ளது. எனவே, இனிவரும் ஆண்டுகளில் ஆலை இழப்பின்றி இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

24—

**காடையாம்பட்டி ஊராட்சியில் தொழிற்சாலை அமைத்தல்**

**வினா எண் 13200—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டு ஆகியும் பொதுத் துறை மூலம் தொழில்கள் அமைக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பொதுத் துறை மூலம் பெரிய தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், ஓமலூர் வட்டம் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.*

**25—**

**தொழிற்சாலை நிறுவ நில ஆர்ஜிதம் செய்தல்**

**வினா எண் 13302—திரு. கு. மனோகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி தொகுதி, கிருஷ்ணபுரம், நல்லம்பள்ளி ஆகிய பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறுவ நிலம் ஆர்ஜிதம் செய்திட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*தருமபுரி தொகுதி, கிருஷ்ணபுரம், நல்லம்பள்ளி ஆகிய பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறுவ நிலங்களைக் கையகப்படுத்தும் உத்தேசம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.*

**26—**

**சிப்காட் தொழில் வளாகம் அமைத்தல்**

**வினா எண் 13306—திரு. கு. மனோகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி தொகுதியில் சிப்காட் தொழில் வளாகம் ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*சிப்காட், தனது தொழில் வளாகத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தை ஓசூர் தாலுகா, தருமபுரி தொகுதியில் அமைத்துள்ளது. மேலும்*



1999 மே 18]

*தனது இரண்டாம் கட்ட முதல் விரிவாக்கத்திற்கான நில எடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலும் தருமபுரி தொகுதியில், முக்கியமாக தருமபுரி பஞ்சாயத்து யூனியன், சோலைக்கோட்டை மற்றும் கிருஷ்ணபுரம் பகுதிகளில் போதிய நீர் ஆதாரம் இல்லாத காரணத்தால் மற்றும் ஒரு தொழில் வளாகம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.*

**27—**

**ஆண்டிமடத்தில் தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 13318—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்தில் தீயணைப்பு நிலையம் திறக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*இல்லை.*

**28—**

**ஊட்டமலை பகுதியில் காகித தொழிற்சாலை அமைத்தல்**

**வினா எண் 13332—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் தொழிற்சாலை இல்லாததால் ஒகேனக்கல், ஊட்டமலை ஆகிய பகுதிகளில் காகித தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*இல்லை.*

[1999 மே 18

**29—**

**மேல்மலையனூரில் காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 13705—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூரில் காவல் நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*இல்லை.*

**30—**

**அரக்கோணம் எஃகு ஆலையை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 13754—திரு. பெ. சு. திருவேங்கடம்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் எஃகு ஆலையை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் எஃகு ஆலையை நலிவடைந்த நிறுவனமாகக் கருதி தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுவிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அறிக்கை கிடைத்த பின்னர், ஆலையைத் தொடர்ந்து இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.*

**31—**

**உத்தனப்பள்ளியில் காவல் நிலையம் அமைத்தல்**

**Question No. 13762—Thiru B. Venkatasamy:** Will the Hon. Chief Minister be pleased to state—



1999 மே 18]

(a) Is there any proposal to start a Police Station at Udhanapalli, Hosur Taluk.

(b) If so, when it will be started?

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) ஓசூர் தாலுகா, உத்தனப்பள்ளியில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆணை எண் 879, உள் துறை, நாள் 8-7-1998-ல் ஆணையிடப் பட்டுள்ளது.*

*(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**32—**

**கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு மணல் உரிமம் வழங்க அதிகாரம் அளித்தல்**

**Question No. 13763—Thiru B. Venkatasamy:—**Will the Honourable Chief Minister be pleased to state—

(a) Is there any proposal to give powers to Village Panchayats to issue permits for sand, size stone, Jelly in Tamil Nadu?

(b) If so, when it will be given?

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் ஒரு விவர அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.*

**தமிழ்நாட்டில், மணல், கல் மற்றும் ஜெல்லி ஆகியவற்றிற்கு அனுமதி (Permit) வழங்கும் அதிகாரங்களை கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அளிப்பது பற்றிய விவர அறிக்கை**

தமிழ் நாட்டில், பொது உபயோகத்திலுள்ள மணல், கல், ஜெல்லி, கிராவல் மற்றும் களிமண் போன்ற சிறு கனிமங்களின் நிர்வாகத்தை நிர்வகிக்கும் பொறுப்பையும் மற்றும் அச்சிறு கனிமங்களின் மூலம் கிடைக்கும் உரிமக் கட்டணத்தை *1-4-1998* முதல் வசூலிக்கும் பொறுப்பையும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்து ஆணைகள்

[1999 மே 18

வெளியிடப்பட்டன. மேலும், அதற்கேற்ப தமிழ்நாடு சிறு கனிம சலுகைவிதிகளில் உரிய திருத்தங்களும் வெளியிடப்பட்டன. ஆனால், மேற்கூறப்பட்டுள்ள அரசாணைகளை எதிர்த்து தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையை 1-4-1998-ல் விதித்துள்ளது. அவ்வழக்குகளை நீதிபதிகள் குழு (Bench) முன்பாக விசாரிக்க, தகுந்த ஆணை வழங்கும் பொருட்டு தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்தடையாணையை நீக்குவதற்கும் மற்றும் மேற்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து மேல்முறையீடு (Writ Appeal) செய்யுமாறும் கூடுதல் அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இதுசம்பந்தமாக அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**33—**

### மூன்றாம் பேஸ் சிப்காட் அமைத்தல்

**வினா எண் 13809—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மூன்றாம் பேஸ் சிப்காட் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி தொகுதியில், சிப்காட் நிறுவனத்தின் தொழில் வளாகம் மூன்றாம் கட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**34—**

### கொங்கணாபுரம் ஊராட்சியில் காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 13842—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் ஒரு புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1999 மே 18]

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டிலேயே கொங்கணாபுரத்தில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**35—**

### தேவூரில் காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 13847—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகர மையப்பகுதியான தேவூரில் ஒரு காவல் நிலையம் புதிதாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

எடப்பாடி நகர மையப்பகுதியான தேவூரில் ஒரு காவல் நிலையம் புதிதாக அமைக்க அரசு ஆணை (நிலை) எண் 879, உள் துறை, நாள் 8-7-1998-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**36—**

### கிரானைட் தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 13890—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் ஏராளமான கருப்புக் கற்கள் உள்ளதால் ஏற்றுமதி செய்வதற்கான கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**37—**

**அசையாச் சொத்து வாங்க முன் அனுமதி**

**வினா எண் 14030—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரசு ஊழியர்கள் ரூ. 5000-க்கு மேல் அசையாச் சொத்து வாங்கும்போது அரசிடம் அனுமதி பெறவேண்டும் என்னும் விதி உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அத்தொகையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகளின்படி அரசு ஊழியர்கள் அசையாச் சொத்துக்களை வாங்குவதற்கோ, விற்பதற்கோ முன்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அதுபற்றித் தெரிவிக்க வேண்டும். ஆனால், கடன் தொகையிலிருந்தோ அல்லது அரசிடமிருந்து பெற்ற முன் பணத்திலிருந்தோ வீடு கட்டுதல் அல்லது விரிவுபடுத்துவதற்கு முன்னால் அல்லது வீடு வாங்குவதற்காகப் பரிமாற்றம் செய்வதற்கு முன்னால் குறிப்பிடப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

*(ஆ)* அரசு அலுவலர் வாங்கும் அசையாச் சொத்தின் விலை மதிப்பிற்குக் குறைந்த வரம்பு அல்லது அதிக வரம்பு ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, உச்சவரம்பை உயர்த்தும் கேள்வி எழவில்லை.



1999 மே 18]

**38—**

**இரண்டாம் உலக யுத்தத்தில் பங்கேற்ற முன்னாள் இராணுவத்தினருக்கு உதவித்தொகை உயர்த்துதல்**

**வினா எண் 14174—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* இரண்டாவது உலக யுத்தத்தில் கலந்து கொண்ட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு வழங்கும் உதவித் தொகையை உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இரண்டாவது உலகப் போரில் கலந்து கொண்ட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு தற்போது வழங்கும் உதவித் தொகை அரசு நிதியிலிருந்து வழங்கப்படவில்லை. இத்தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் சேமநல நிதியிலிருந்து ரூ. 150 வீதம் வழங்கப்படுகிறது.

**39—**

**அம்மாபாளையத்தில் புறக்காவல் நிலையம்**

**வினா எண் 14265—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதியில் அம்மாபாளையம் கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் புதிதாக புறக்காவல் நிலையம் எதுவும் அமைப்பதில்லை என அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது.

40—

### கண்ணதாசன் நகர் காவல் நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 14377—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகரில் காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டிலேயே கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 40 காவல் நிலையக் கட்டடங்களுக்கு 1998-99 ஆம் ஆண்டு சொந்தக் கட்டடம் கட்ட அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. அதில் கவியரசு கண்ணதாசன் நகர் காவல் நிலையக் கட்டடம், இடம் பெறவில்லை. எனவே கவியரசு கண்ணதாசன் நகர் காவல் நிலையக் கட்டடம் கட்டுவது குறித்து அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

41—

### அரசு வெடிமருந்து தொழிற்சாலையை விரிவுபடுத்தல்

**வினா எண் 14449—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், காட்பாடியில் இயங்கும் அரசு வெடி மருந்து தொழிற்சாலையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அதனை நல்ல முறையில் இயக்கிட அரசு குழு ஒன்றினை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், காட்பாடியில் இயங்கும் அரசு வெடிமருந்து தொழிற்சாலையை புனர் நிர்மாணம் செய்ய தொழில் மற்றும் நிதி புனரமைப்பு குழுமம் செயல் ஏஜென்ட்டாக I.D.B.I.-யை நியமித்து ஒரு சீரிய புனரமைப்புத் திட்டத்தைத் தீட்டும் பணியை அதனிடம் அளித்தது. I.D.B.I. தீட்டிய திட்டம் தற்போது பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டால் இதுவரை அடைந்த மொத்த நட்டம் ரூ. 42 கோடியில் ரூ. 38 கோடி அளவில் உள்ள நட்டம் ஈடு செய்யப்படும். மீதி ரூ. 4 கோடி நட்டம் ஒரே வருடத்தில் சரி செய்யப்படும். மேற்சொன்ன புனர் நிர்மாணத் திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் அரசு இந்நிறுவனத்தை விரிவுபடுத்துவது பற்றிப் பரிசீலிக்கும்.

(ஆ) தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் ஏற்கெனவே திறமையான இயக்குநர் குழுவினால் நல்லமுறையில் இயங்கி வருகின்றது. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், அரசின் தொழில் துறை மற்றும் நிதித் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், தொழில் துறை வல்லுநர்கள் ஆகியோர் இயக்குநர் குழுவில் இடம் பெற்று நிறுவனம் திறம்பட இயங்கி வருகின்றது. எனவே இந்நிறுவனம் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து இலாபம் ஈட்டும் நிறுவனமாகச் செயல்படும். ஆகவே புதியதாக அரசு குழு ஒன்றினை அமைக்க அவசியம் ஏற்படவில்லை.

42—

### சத்துவாச்சாரியில் போக்குவரத்து காவல் நிலையம்

**வினா எண் 14451—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் காவல் நிலையத்தை யொட்டி போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இதுகுறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

43—

### கிருஷ்ண புரத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 14925—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுயில் கிருஷ்ணபுரம், நாய்க்கன் கொட்டாய், நாய்கனஅள்ளி ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் தொழிற்பேட்டை ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தருமபுரி தொகுதியில் கிருஷ்ணபுரம், நாய்க்கன் கொட்டாய், நாய்கனஅள்ளி ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் தொழிற்பேட்டை தொடங்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

44—

### தொழிற்சாலை இல்லாத மாவட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 15039—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழிற்சாலை இல்லாத மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து தொழிற்சாலை தொடங்கப்படுமா?

(ஆ) திருவாரூர் மாவட்டத்தில் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தொழில்கள் தொடங்குவது, அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்கள், போக்குவரத்து வசதிகள், அடிப்படை வசதிகள், தண்ணீர் வசதியைப் பொறுத்து அமையும். எனவே, தொழிற்சாலை இல்லாத மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து தொழிற்சாலைகள் அமைக்கும் செயற்குறிப்புகள் அரசிடம் இல்லை. தனியார் தொழில்கள் தொடங்க அரசு ஊக்கச் சலுகைகள் வழங்குகிறது. இதனைப் பயன்படுத்தி தனியார் தொழில்கள் தொடங்க முன்வந்தால் டிட்கோ, சிப்காட், தொழில் வணிக இயக்குநரகம் போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் தேவையான உதவிகளை அளிக்கும்.



(ஆ) திருவாரூர் மாவட்டத்தில் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

### வெள்ளாளப்பட்டி புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்தல்

**வினா எண் 15052—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் உள்கோட்டம், வெள்ளாளப்பட்டியில் இயங்கிவரும் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வெள்ளாளப்பட்டியில் எந்த ஒரு புறக்காவல் நிலையமும் இயங்கவில்லை.

(ஆ) எழவில்லை.

46—

### மேடவாக்கத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா எண் 15058—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, மேடவாக்கத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**47—**

**போக்குவரத்துப் போலீசாருக்கு பிராண வாயு அறை**

**வினா எண் 15063—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரிய நகரங்களில் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள போலீசார் அதிக வாகனப் புகையினால் அவதிப்படுவதைத் தவிர்க்க போக்குவரத்துப் போலீசாருக்கு "பிராண வாயு" அறை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கருத்துரு ஏதும் இல்லை.

**48—**

**வானூரில் புதிய காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 15069—திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியில் உள்ள திருவக்கரை வக்கரகாளியம்மன் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஒரு புதிய காவல் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**49—**

**காரியாப்பட்டியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 15071—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியம், காரியாப்பட்டியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**50—**

**மல்லாங்கிணறு காவல் நிலையத்திற்கு தனிக் கட்டடம்**

**வினா எண் 15072—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, மல்லாங்கிணறில் உள்ள காவல் நிலையத்திற்குத் தனியாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 1998-99-ல் 40 காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அருப்புக்கோட்டை தொகுதி, மல்லாங்கிணறு காவல் நிலையத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதுகுறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**51—**

**பெருந்துறை காவலர் குடியிருப்பை அடுக்குமாடிக் குடியிருப்பாக மாற்றுதல்**

**வினா எண் 15074—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) பெருந்துறை காவலர் குடியிருப்பை அங்காடிகள் உள்ளடக்கிய முறையில் அடுக்குமாடிக் குடியிருப்பாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**52—**

**கந்துமாமூடு புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக மாற்றுதல்**

**வினா எண் 15079—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கந்துமாமூடில் செயல்படும் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் காவல் நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இதுகுறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**53—**

**தேர்வு பெற்ற உதவி ஆய்வாளர்களுக்குப் பயிற்சி**

**வினா எண் 15080—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) தேர்வு செய்யப்பட்டு இதுவரை உதவி ஆய்வாளர் பயிற்சிக்கு அனுப்பாத 98 நபர்களைப் பயிற்சிக்கு எடுக்க அரசு முடிவு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1994-95 ஆம் ஆண்டு நடந்த காவல் துறை உதவி ஆய்வாளர்களுக்கான தேர்வில் மருத்துவப் பரிசோதனை மற்றும் காவல் துறையின் ஆய்வுக்குப் பின்னர் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெற்று, ஆனால் உபரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இறுதியில் பயிற்சிக்கு அனுப்பப்படாத நபர்கள் இந்த 98 பேர். காவல் தேர்வுக்கான அறிக்கையில் (Notification) குறிப்பிடும் எண்ணிக்கையில்தான் நபர்களைப் பயிற்சிக்கு அனுப்ப இயலும். உபரியாகப் பட்டியலில் இடம் பெற்றவர்களைப் பயிற்சிக்கு அனுப்ப இயலாது. எனவே, இதுகுறித்து அரசு மேல்நடவடிக்கையைக் கைவிட்டு விட்டது.

**54—**

**கொல்லங்கோடு தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 15087—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு கிராமத்தில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் கட்டடம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1999 மே 18

55—

### தீயணைப்பு நிலையங்களுக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 15097—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 15 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கும் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தீயணைப்பு நிலையம் மற்றும் முத்துப்பேட்டை, கோட்டூர் ஆகிய தீயணைப்பு நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருத்துறைப்பூண்டி தீயணைப்பு நிலையத்திற்காக கையகப் படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர் கூடுதல் நிலக்கிரயம் கோரி நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு முடிவுற்றதும், நிரந்தரக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

முத்துப்பேட்டை, கோட்டூர் தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்படவில்லை. நிலம் தேர்வு செய்து பெறப்பட்டதும் இத்தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

### காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 15098—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்ட பகுதிகளில் அமைந்துள்ள காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு (குவார்ட்டர்ஸ்) குடியிருப்பு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 35, உள் துறை நாள் 9-1-1998-ல், 1997-98 ஆம் ஆண்டில் காவல் துறைக்குச் சொந்தமான இடங்களில் 2500 காவலர் குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் மூலம் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் 12 தலைமைக் காவலர்/ காவலர் குடியிருப்புகள் ரூ. 29.92 இலட்சம் செலவில் கட்டுவதும் அடங்கும். 1998-99ஆம் நிதி ஆண்டு இறுதிக்குள் மேற்கண்ட குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும்.

57—

### பாலமேடில் புதிய காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15099—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, பாலமேடு பகுதியில் புதிதாக காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இதுகுறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

58—

### தொழில்ரீதியாக மிகவும் பிற்பட்ட பகுதியாக அறிவித்தல்

**வினா எண் 15124—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டி-செல்லம்பட்டி ஒன்றியங்களை தொழில்ரீதியாக மிகவும் பிற்பட்ட பகுதியாக அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டி-செல்லம்பட்டி ஒன்றியங்களை தொழில் ரீதியாக மிகவும் பிற்பட்ட பகுதியாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**59—**

**வானாபுரத்தில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 15143—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தண்டராம்பட்டு தொகுதி, வானாபுரத்தில் புதிதாக தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**60—**

**தண்டராம்பட்டு தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம்**

**வினா எண் 15144—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் தீ அணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.





**61—**

**பட்டுக்கோட்டையில் புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 15714—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பட்டுக்கோட்டையில் புறக்காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**62—**

**கரூரில் போக்குவரத்துக் காவல் நிலையம்**

**வினா எண் 15721—திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கரூரில் சீருடை அணிந்த போக்குவரத்துக் காவலர்கள் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், போக்குவரத்துக் காவல் நிலையத்தை கரூரில் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கரூரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆணை (நிலை) எண் 879, உள் (காவல்-14) துறை, நாள் 8-7-1998-ல் ஆணையிடப்பட்டு, நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.*

[1999 மே 18

63—

### குன்னூர் தீயணைப்பு நிலையத்தை இடம் மாற்றுதல்

**வினா எண் 15751—திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தத் தடையாக இருக்கும் தீயணைப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

64—

### ஒரத்தநாட்டில் காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம்

**வினா எண் 15752—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இக்கோரிக்கை அரசால் பரிசீலனை செய்யப்பட்டு அரசின் நிதி நிலைமை கருத்திற்கொண்டு இதனை ஓராண்டுக் காலத்திற்குப்பின் பரிசீலனை செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.



1999 மே 18]

(ஆ) எழவில்லை.

65—

### காவல் நிலையம் ஏற்படுத்துதல்

**வினா எண் 15754—திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இனாம் கரூர் வெங்கமேடு பகுதியில் காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

66—

### காவல் நிலையம் விரிவுபடுத்துதல்

**வினா எண் 15768—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி (காக்காபாளையம்) காவல் நிலையத்தில் ஓர் ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் பணிபுரிய ஓர் அறை மட்டும் உள்ளதால் தேவைக்கு ஏற்ப விரிவுபடுத்திக் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி (காக்காபாளையம்) காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்து அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

[1999 மே 18

67—

### காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 15770—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அதிராம்பட்டினம் காவல் நிலையக் கட்டடம் கட்ட அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண். 694, உள் துறை, நாள் 5-6-1998-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்காவல் நிலையக் கட்டடம் கட்டும் பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

68—

### தீயணைப்புக் காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15771—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்திலி ஒன்றியம், கந்திலியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



1999 மே 18]

69—

### தீயணைப்புக் காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15774—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாளில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

70—

### காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15775—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேசுவரத்தில் புதிய காவல் நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

71—

### காவல் நிலையத்திற்குப் பெயர் மாற்றம்

**வினா எண் 15779—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

சீர்காழி தொகுதியில் கொள்ளிடத்தில் உள்ள ஆனைக்காரன் சத்திரம் காவல் நிலையத்திற்குக் 'கொள்ளிடம் காவல் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள ஆனைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தைக் 'கொள்ளிடம் காவல் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

72—

### புறக்காவல் நிலையம்

**வினா எண் 15780—திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட சொக்கம்பட்டி புறக்காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு 40 காவல் நிலையக் கட்டடங்கள் கட்ட அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. இந்த 40 காவல் நிலையக் கட்டடங்களில் சொக்கம்பட்டி புறக்காவல் நிலையம் இடம் பெறவில்லை. எனவே, சொக்கம்பட்டி புறக்காவல் நிலையத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.



1999 மே 18]

73—

### புறக்காவல் நிலையத்தை நிலை உயர்த்துதல்

**வினா எண் 15781—திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் காவல் நிலையத்திற்குட்பட்ட சொக்கம்பட்டி புறக்காவல் நிலையத்தைத் தனிக் காவல் நிலையமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

74—

### தீயணைப்பு நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 15782—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதியில் அமைந்துள்ள பெரணமல்லூர், சேத்பட் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர், சேத்பட் தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட நிலம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை. நிலம் பெறப்பட்டதும் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[1999 மே 18

75—

### புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15783—திரு. குழந்தை தமிழரசன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருத்தாசலம் வட்டம், பாலக்கொல்லை அல்லது ஆலடி அல்லது இருப்பு கிராமப் பகுதிகளில், புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*தமிழ்நாட்டில் புதியதாகப் புறக்காவல் நிலையம் எதுவும், அமைப்பதில்லை என அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.*

76—

### காவலர் குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 15784—திரு. குழந்தை தமிழரசன்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலத்தில் ஏற்கெனவே இருந்த காவலர்கள் குடியிருப்பு முற்றிலும் பழுதடைந்து விட்டதால் அவ்விடத்தில் காவலர் குடியிருப்பு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணி தொடங்கும்?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காவலர் குடியிருப்புகளைப் பழுதுபார்ப்பதற்கு இந்த ஆண்டு ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு விருத்தாசலத்தில் உள்ள பழுதடைந்த காவலர் குடியிருப்புகள் சரிசெய்யப்படும். புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்து இனிவரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.*



1999 மே 18]

77—

### தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 15786—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மங்கலம்பேட்டையில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மங்கலம்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட இன்னும் நிலம் பெறப்படவில்லை. நிலம் தேர்வு செய்யப்பட்டதும் உரிய நேரத்தில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

78—

### போக்குவரத்து காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15788—திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் நகரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

### காவலர்களுக்குக் குடியிருப்புகள்

**வினா 15789—திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் பணிபுரியும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் பணிபுரியும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட காவல் துறைக்குச் சொந்தமான நிலம் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் அங்கு காவலர் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**80—**

### தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 15790—திரு. ச. க. வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்திலுள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதியக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**81—**

### புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15791—திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, செங்காடு என்ற ஊரில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.



1999 மே 18]

**82—**

### நகரக் காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15792—திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி வட்டக் காவல் நிலையம் மற்றும் நகரக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**83—**

### தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா எண் 15793—திரு. த. நடராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், ஆவணிப்பூர் கிராமத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**84—**

### தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா எண் 15794— திரு. த. நடராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

*(அ) செஞ்சி தொகுதி, வெள்ளிமேடுபேட்டையில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**85—**

## காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15800—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உசிலம்பட்டி தொகுதி, பாப்பாபட்டியில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**86—**

## காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15801—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உசிலம்பட்டி நகரில் போக்குவரத்துக் காவல் நிலையம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**87—**

## புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 15804—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு முதலமைச்ச கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பெரும்புதூர் தொகுதி, ஆதனூர் டி.டி.சி. நகரில் புறக்காவ நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

புதிதாகப் புறக்காவல் நிலையம் அமைப்பதில்லை என அர கொள்கை முடிவு எடுத்துள்ளது.

**88—**

## தனி விசாரணை ஆணையம் அமைத்தல்

**வினா எண் 16001—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு முதலமைச்ச கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்து வரும் அரசுத் தொழில் நிறுவனங்களினால் ஏற்படு இழப்பைத் தடுத்து நிறுத்த தமிழ்நாட்டுக்கென்று தனியாக ஒரு Dis Investment Commission அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

89—

### சர்க்கரை ஆலை தொடங்குதல்

**வினா எண் 16004—திரு. டி. அமரமூர்த்தி :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியில் சர்க்கரை ஆலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அரியலூர் தொகுதியில் சர்க்கரை ஆலை தொடங்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

90—

### காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 16789—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அரசு விரைவுப் பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் நலன் கருதி ஒரு காவல் நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

91—

### காவலர்களுக்குக் குடியிருப்புகள்

**வினா எண் 16807—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டையில் காவலர்களுக்கான குடியிருப்பு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டையில் காவலர் குடியிருப்புகள் கட்ட தேவையான நிலம் காவல் துறை வசம் தற்போது இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

92—

### சர்க்கரை ஆலை மூலமாகத் துணைத் தொழில்கள் தொடங்குதல்

**வினா எண் 16905—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மூலமாகத் துணைத் தொழில்கள் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மூலமாகத் துணைத் தொழில்கள் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் தற்சமயம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

93—

### சர்க்கரை ஆலையை நவீனப்படுத்துதல்

**வினா எண் 16907—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தி இலாபத்தில் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**94—**

**தொழிற்சாலைகள் தொடங்குதல்**

**வினா எண் 16908—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி போன்ற மிகவும் பின்தங்கிய பகுதிகளில் பெரிய தொழிற்சாலைகள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் பெரிய தொழிற்சாலைகள் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 மே 18]

**95—**

**கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமம் வழங்குதல்**

**வினா எண் 16932—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல் குவாரிகளை ஏலம் விடும்போது கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் அளித்து உரிமம் வழங்கும் முறை செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1959ஆம் வருட தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகளில் கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் அளித்துக் குத்தகை உரிமம் வழங்க இடமில்லை. எனவே, கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் அளித்துக் குத்தகை உரிமம் வழங்கும் முறையைச் செயல்படுத்த இயலாது.

(ஆ) எழவில்லை.

**96—**

**காவல் துறை உதவி ஆய்வாளர் தேர்வு**

**வினா எண் 16933—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல்துறை—காவலர்கள் (Police Men) தேர்வில் பொதுவுக்கு 168 செ.மீ. உயரமும், பட்டியலினத்தவருக்கு 165 செ.மீ எனவும் விதி தளர்த்தப்பட்டுள்ளதுபோல் விரைவில் தேர்வு செய்யப்படும். காவல் துறை உதவி ஆய்வாளர் தேர்வில் அனைவருக்கும் 170 செ.மீ. உயரம் தேவை எனும் விதியை பட்டியலினத்தவருக்குத் தளர்வு செய்து உத்தரவிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் துறையில் உதவி ஆய்வாளர்களாக நேரடி நியமனம் பெற 170 செ.மீ. உயரம் தேவை என்ற தற்போதுள்ள விதியை மாற்றுவது சம்பந்தமான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும்,

[1999 மே 18

துறையில் ஏற்கெனவே பணிபுரியும் பட்டதாரிக் காவலர்கள்/தலைமைக் காவலர்களுக்கென ஒதுக்கப்பட்ட 20 விழுக்காடு உதவி ஆய்வாளர் பதவியிடங்களுக்காகத் தேர்வில் கலந்து கொள்பவர்களைப் பொருத்தமட்டில் நடைபெற்றுவரும் காவல் உதவி ஆய்வாளர்களுக்கான தேர்வின்போது 168 செ.மீ. உள்ளவர்களையும் தேர்வு செய்யலாம் என்று காவல் துறைத் தலைமை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

97—

**சர்க்கரை ஆலை தொடங்குதல்**

**வினா எண் 17190—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் கூட்டுறவுத் துறை மூலம் சர்க்கரை ஆலை திறக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் கூட்டுறவுத் துறை மூலம் சர்க்கரை ஆலை அமைக்கச் சாத்தியக்கூறு ஏதுமில்லை.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

98—

**காவல் நிலையம் தொடங்குதல்**

**வினா எண் 18030—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், கே.கே. நகரில் ஒரு புதிய காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.



1999 மே 18]

99—

**தீயணைப்பு நிலையத்திற்கு தண்ணீர் வசதியுடன் கட்டடம்**

**வினா எண் 18069—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் தண்ணீர் வசதிமிக்க ஓர் இடத்தில் தண்ணீர் தொட்டி வசதியுடன் கூடிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், இந்த நிதியாண்டிலேயே செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

100—

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18031—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி வட்ட மருத்துவமனையில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* ஆய்வில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

[1999 மே 18

101—

**குறைந்த விலை மது தயாரிப்பு**

**வினா எண் 18048—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 'மொலாசஸ்' அதிகம் கிடைப்பதால் அதைப் பயன்படுத்தி குறைந்த விலையில் மது தயாரித்து அண்டை மாநிலங்களுக்கு வழங்க அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

102—

**தீயணைப்பு ஊர்தி வசதி**

**வினா எண் 18075—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சுழி தீயணைப்பு நிலையத்தில் உள்ள தீயணைப்பு ஊர்தி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அவசியம் எழவில்லை.

103—

**தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18077—திரு. சி.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஜிலியம்பாறை ஒன்றியம், குஜிலியம்பாறையில் தீ அணைப்பு நிலையம் அமைக்கப்படுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

104—

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18079—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருவானைக்காவல் பகுதிக்குப் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

105—

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18085—திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை 153-வது வட்டம், மேற்கு வேளச்சேரி பகுதி, காஞ்சிபுரம் மாவட்டக் காவல் துறை எல்லைக்குள் உள்ளதை மாற்றி அந்தப் பகுதியிலேயே ஒரு காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[1999 மே 18

**106—**

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18093—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, கடப்பாக்கத்தில் புறநகர் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**107—**

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18094—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, எல். எண்டத்தூர் பகுதிக்குப் புறநகர் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டிலேயே அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் புதிதாகப் புறக்காவல் நிலையம் எதுவும் அமைப்பதில்லையென அரசு கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது.

(ஆ) எழவில்லை.



1999 மே 18]

**108—**

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18096—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, சடையார்கோவில் பகுதியில் காவல் நிலையம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**109—**

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18097—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், தேவக்குடியில் இயங்கிவரும் புறக்காவல் நிலையத்தை நிரந்தரக் காவல் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**110—**

### புறக்காவல் நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 18098—திரு. வெ. கோவிந்தன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பேரணாம்பட்டு தொகுதி, மேல்பட்டி புறக்காவல் நிலையத்தை முழுக்காவல் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**111—**

### காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 18101—திரு. இரா. மகேந்திரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், குரும்பேரியில் ஒரு காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*இது குறித்தச் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது ஆய்வில் இல்லை.*

**112—**

### புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 18116—திரு. ந. கருப்பண்ண உடையார்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதி, திருமண்டக்குடியில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*





*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*தமிழ்நாட்டில் புதிய புறக்காவல் நிலையம் எதுவும் ஏற்படுத்துவ தில்லை என்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.*

**113—**

### புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 18119—திரு. ந. கருப்பண்ண உடையார்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதி, திருப்புறம்பியம் அல்லது தேவனாஞ்சேரியில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*தமிழ்நாட்டில் புதிய புறக்காவல் நிலையம் எதுவும் ஏற்படுத்துவதில்லை என்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.*

**114—**

### புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 18121—திரு. ந. கருப்பண்ண உடையார்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதி, நீலிதநல்லூரில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*தமிழ்நாட்டில் புதிய புறக்காவல் நிலையம் எதுவும் ஏற்படுத்துவதில்லையென்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.*

[1999 மே 18

**115—**

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18122—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் புதிய புறக்காவல் நிலையம் எதுவும் ஏற்படுத்துவதில்லையென்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

**116—**

**காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 18123—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, அய்யம்பேட்டை காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு மொத்தம் 40 புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்ட அனுமதி அளித்து, அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. அவற்றில் அய்யம்பேட்டை காவல் நிலையக் கட்டடம் இடம் பெறவில்லை. எனவே, அய்யம்பேட்டை காவல் நிலையத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**117—**

**விபத்துப் படியை உயர்த்துதல்**

**வினா எண் 18124— திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) தமிழகக் காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் விபத்துப் படியை உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகக் காவல் துறையில் பணியாற்றும் அனைத்துக் காவலர்களுக்கும் அவர்களது வேலை நேரங்களில் நேரக்கூடிய விபத்துக்கள் மற்றும் அதனால் ஏற்படும் சில இடர்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இடர்படியினைக் காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை மாதம் ரூ.20/-லிருந்து ரூ.50/- ஆகவும், காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு ரூ. 30/-லிருந்து ரூ. 60/- வரை ஆகவும் 17-6-1998 முதல் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**118—**

**காவல் நிலையமாகத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 18436—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, திம்மாம்பேட்டை புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்போது இயங்கிவரும் புறக்காவல் நிலையங்கள் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்படும்.

**119—**

**வாசனைத் திரவியத் தொழிற்சாலை தொடங்குதல்**

**வினா எண் 18609—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், அம்மாவட்டத்தில், ஓசூரில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத்தைச் சேர்ந்த சி.சி.எல். ப்ளவர்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து மலர்ச்செடி அடிப்படைக் கூட்டமைப்புப் பூங்கா ஒன்றினை நிறுவவுள்ளது.

**120—**

### மாம்பழச்சாறு தொழிற்சாலை

**வினா எண் 18610—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் நடப்பாண்டில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் தற்சமயம் இல்லை.

**121—**

### துணை வணிக வரி அலுவலர் அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 18842—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

எடப்பாடி வட்டம், எடப்பாடியில் தனியாக ஒரு துணை வணிக வரி அலுவலர் அலுவலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

எடப்பாடி வட்டம், சேலம் வணிக வரிக் கோட்டத்தில் சங்ககிரி வரிவிதிப்பு வட்டத்தில் அடங்கியுள்ளது. எடப்பாடி வட்டத்தில் உள்ள வரிவிதிப்பு அலகுகளின் எண்ணிக்கை மற்றும் வருவாய் முதலியவற்றை ஒப்பிடும்போது எடப்பாடியில் தனியாக ஒரு துணை வணிக வரி அலுவலர் அலுவலகம் தேவையில்லை.

**122—**

### காகித ஆலை அமைத்தல்

**வினா எண் 19413—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசத்தில் காகித ஆலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**123—**

### தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 19425—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் தேங்காய் மட்டை நாரிலிருந்து பொருள் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**124—**

**ஊர்க்காவல் படை**

**வினா எண் 19684—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களில் உள்ள ஊர்க்காவல் படையில் வேலையில்லாப் பட்டதாரி ஆண்கள், பெண்கள் ஆகியவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் நியமனம் பெற கல்வித் தகுதி ஏதும் நிர்ணயிக்கப்படாததால் விருப்பம் உள்ளவர் விண்ணப்பித்து நியமனம் பெறலாம்.

**125—**

**கூட்டுறவுக் காகித ஆலை அமைத்தல்**

**வினா எண் 19753—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சேலம் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கரும்புச் சக்கை மூலமாகக் கூட்டுறவுக் காகித ஆலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.



1999 மே 18]

**126—**

**தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 20042—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் ஒன்றியம், பெருங்குடியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**127—**

**தீயணைப்பு நிலையத்திற்கு நிலம்**

**வினா எண் 21304—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட வருவாய்த் துறை மூலம் நிலம் கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெருந்துறை தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் வருவாய்த் துறையினரிடம் கோரப்பட்டுள்ளது. வருவாயத் துறையினர் பெருந் துறை கிராமம் ரீ.ச. 874/2-ல் மயானப் புறம்போக்குச் சாலையில் 0.36.0 ஹெக்டேர் நிலத்தைத் தேர்வு செய்துள்ளனர். நிலமாற்றம் செய்து பெறுவதற்கு உரிய கேட்புமனு மற்றும் நிபந்தனை படிவம் பூர்த்தி செய்து

ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலருக்கு 8-6-1998 அன்று ஈரோடு கோட்டத் தீயணைப்பு அலுவலரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது வருவாய்த் துறையினரிடமிருந்து நிலம் ஒதுக்கீடு செய்வது குறித்த ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. ஆணைகள் கிடைக்கப்பெற்றதும் பெருந்துறை தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**128—**

### பணிமாறுதல்

**வினா எண் 21976—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணவன், மனைவி வெவ்வேறு இடங்களில் பணிபுரியும் நிலையை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?"

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கணவன், மனைவி வெவ்வேறு இடங்களில் பணிபுரியும் நிலையை மாற்றி அமைக்கும் பொருட்டு, கணவன், மனைவி வெவ்வேறு இடங்களில் பணிபுவர்கள், ஒரே இடத்தில் மாற்றல் வேண்டி விண்ணப்பிக்கும்பொழுது அவர்களது கோரிக்கையை ஏற்று நிறைவேற்றும்பொருட்டு அரசின் 'மாற்றல் கொள்கை'யில் அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் தரப்பட்டுள்ளன.

**129—**

### மனுக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

**வினா எண் 21987—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதல்வரின் தனிப் பிரிவிற்கு 1997-98-ல் வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் எத்தனை மனுக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) முதலமைச்சர் தனிப் பிரிவில் பொதுமக்கள்/சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் பரிந்துரையுடன் 1997 ஆம் ஆண்டு பெறப்பட்ட மனுக்கள் 3,96,120; 1998 ஆம் ஆண்டு பெறப்பட்ட மனுக்கள் 3,40,844 ஆகும்.





(ஆ) 1997 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மனுக்களுள், 3,70,576 மனுதாரர்களின் கோரிக்கைகளும், 1998-ஆம் ஆண்டில் பெறப்பட்ட மனுக்களுள் 3,09,085 மனுதாரர்களின் கோரிக்கைகளும் தீர்வு காணப்பட்டன.

**130—**

### இடைவெளி குறைப்பு

**வினா எண் 22275—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு தீயணைப்பு நிலையத்திற்கும் மற்றொரு தீயணைப்பு நிலையத்திற்கும் 25 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்பதை 15 கிலோமீட்டர் என அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**131—**

### புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா எண் 22300—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன் கோவில் கிராமத்தில் ஒரு புறக்காவல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் புதிதாகப் புறக்காவல் நிலையம் திறப்பதில்லை என்று ஏற்கெனவே அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன் கோவில் கிராமத்தில் புதிதாகப் புறக்காவல் நிலையம் அமைத்துத்தர வாய்ப்பில்லை.

**132—**

**புறக்காவல் நிலையம்**

**வினா எண் 22330—திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதி, தெங்கு மரடாவில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் இனி புறக்காவல் நிலையம் எதனையும் புதிதாக அமைப்பதில்லை என்கிற கொள்கை முடிவு ஏற்கெனவே வகுக்கப் பட்டுள்ளது. எனவே, நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் உள்ள தெங்கு மரடாவில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்துப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**133—**

**தலைமைச் செயலக வளாகத்தில் மண்டபம்**

**வினா எண் 22411—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கு நிற்க நிழற்கூடம் ஏதுமிலலாததால் தலைமைச் செயலக வளாகத்திற்குள் ஒரு மண்டபம் கட்டப்படுமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்பொழுது தலைமைச் செயலகத்தில் நிலவி வரும் இட நெருக்கடி காரணமாகவும், காலி இடங்கள் இல்லாத காரணத்தினாலும் நிழற்கூடம் கட்ட இயலாது. சட்டமன்றக் கூட்டத்தொடர்கள் நடைபெறும் சமயத்தில் பார்வையாளர்களின் வசதிற்கேற்ப தற்காலிக நிழற் பந்தல்கள் (Shamiana) அமைத்துத் தரப்படுகிறது.

**134—**

**பள்ளிக்குக் கட்டடம்**

**வினா எண் 2024—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்ஆற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், பி.முட்லூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், பி. முட்லூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 1997-98 ஆம் நிதி ஆண்டில் பகுதி-1, திட்டத்தின்கீழ் 2 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்ட ரூ.4/- லட்சம் நிதி ஒதுக்கி, அரசாணை நிலை எண். 506 பள்ளிக் கல்வித் துறை, நாள் 15-12-1997-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது.

**135—**

**வகுப்பறை செப்பனிடல்**

**வினா எண் 3765—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரிலுள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் வகுப்பறைக் கட்டடம் கூரை காங்கிரீட், கீழே கொட்டிவிட்டதால் அங்கு வகுப்பறை மூடப்பட்டு உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

[1999 மே 18

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வியமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இரு கட்டடங்களிலும் மராமத்துப் பணி பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு பணி நிறைவு பெற்று வகுப்பறைகள் மாணவிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**136—**

## உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 4361—திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் போதுமான உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப் படுவதில்லையென்று அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் போதுமான உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனர். அரசுப் பள்ளிகளில் உடற் கல்வி ஆசிரியர்கள் நியமிப்பது குறித்து உடற் கல்வியியல் பட்டப் படிப்பு, பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புச் சான்று பெற்றவர்களால் வழக்குகள் தொடரப்பட்டதனால் உடற் கல்வி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட முடியாத நிலை இருந்தது. பின் மேற்சொன்ன வழக்குகளில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபின், உடற் கல்வி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

**137—**

## தொழில்நுட்ப அறிவு பெறுதல்

**வினா எண் 5024—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) கட்டுமானப் பொறியியல், மின்னியல், மின்னணுவியல், கணிப் பொறியியல், நகர்ப்புற வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் வளர்ந்துள்ள புதிய தொழில்நுட்ப அறிவை வெளிநாடுகளிலிருந்து பெறும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**138—**

## பொறியியல் கல்லூரியில் அமைதி

**வினா எண் 11220—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், காருண்யா பொறியியல் கல்லூரியில் தொடர்ந்து அமைதியின்மை நிலவ என்ன காரணம்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கோயம்புத்தூர், காருண்யா பொறியியற் கல்லூரியில் மாணவர்களின் பகடிவதையாலும் (Student Ragging) மற்றும் மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான அபராதத் தண்டனையாலும், அமைதியின்மை ஏற்பட்டது. தற்போது எந்தவிதச் சச்சரவும் இன்றி, கல்லூரி அமைதியாக நடைபெற்று வருகிறது.

**139—**

## பாடத் திட்டத்தில் அறிவியல் கருத்துக்கள்

**வினா எண் 11229—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தில் ஜாதி மதங்களைப் பற்றி அறிவியல்பூர்வமான கருத்துக்களை இடம்பெறச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1994-95 கல்வியாண்டில் புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அதன்படி பாடநூல்களும் எழுதப்பட்டன. அவற்றில் சாதி, மதம் பற்றி ஒருதலைபட்சமற்ற அணுகுமுறையினை வளர்க்கும் வண்ணம் தீண்டாமை, சமூக நல்லிணக்கம், சமயச் சார்பின்மை, மக்கள் ஆட்சி பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்கள், 1 முதல் 10-ம் வகுப்பு வரை பாடநூல்களில் இடம் பெற்றுள்ளன. மேலும், அரசின் ஆலோசனையின்படி மத நல்லிணக்கம், தீண்டாமை பற்றி சமூகச் சிந்தனையாளர்கள் மற்றும் சான்றோர்களின் கருத்துக்கள் 1 முதல் 12-ம் வகுப்புவரை பாடநூல்களில் இடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**140—**

## புதிய தொடக்கப் பள்ளி

**வினா எண் 12540—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காந்தி நகர் (வைகுந்தம்) என்ற பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99-ம் ஆண்டில் 300 தொடக்கப் பள்ளிகள் தொடங்க அரசு தீர்மானித்துள்ளது. எனவே, 1998-99-ம் ஆண்டில் மேற்படி இடத்தில் புதிய பள்ளி திறக்க கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. முன்னுரிமை அடிப் படையில் கருத்துரு பரிசீலிக்கப்படும்.



1999 மே 18]

**141—**

## நன்கொடை பெறும் திட்டம்

**வினா எண் 12811—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்விப் பணிகளுக்காகப் பொதுமக்களிடமும், தொழிலதிபர் களிடமும் நன்கொடை பெறும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கல்விப் பணிகளுக்காகப் பொதுமக்களிடமும், தொழிலதிபர் களிடமும், நன்கொடை பெறும் சிறப்புத் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

(ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

கல்விப் பணிகளுக்காகப் பொதுமக்களிடமும், தொழில் அதிபர்களிடமும், நன்கொடையாகப் பெறும் சிறப்புத் திட்டமான பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுத் திட்டம் மற்றும் புரவலர் திட்டம் ஆகியன செயல்பட்டு வருகின்றன. அவைகளின் விவரம் கீழ்வருமாறு ஆகும்:

**1. பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுத் திட்டம்:**

தமிழகத்தில் கல்வி மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்துப் பள்ளிகளுடைய அடிப்படை வசதிகளாகிய விளையாட்டிடம், கட்டடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி மற்றும் தளவாடங்கள் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள 1958-ம் ஆண்டு முதல் பள்ளிச் சீரமைப்பு மாநாடு (School Improvement Conference) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுத் திட்டத்தின்கீழ் முதல் மாநாடு 20-02-1958 அன்று திரு. நெது. சுந்தரவடிவேலு, முன்னாள் பொதுக் கல்வி இயக்குநர் அவர்களால் (Former Director of Public Instructions) செங்கற்பட்டு மாவட்டத்தில், கடம்பத்தூரில் தொடங்கி வைக்கப்பட்டது. அம்மாநாடு

குறித்த அறிவுரைகள் அனைத்தும் இயக்குநர் செயல்முறைகளாகவே உரிய சார்நிலை அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. எனினும், இப்பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுத் திட்டமானது 1993-94 முதற்கொண்டு பள்ளிச் சீரமைப்பு மாநாடு 100 கோடி ரூபாய் திரட்டும் திட்டம் என அரசு ஆணையின் மூலம் நெறிமுறைப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி அனைத்துக் கல்வி மாவட்டத்திலும் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தி 100 கோடி ரூபாய் மதிப்புள்ள வசதிகளை நன்கொடையாகப் பெறவும், அவ்வாறு நடத்தப்படும் மாநாட்டிலிருந்து பள்ளிகளுக்குத் தேவையான விளையாட்டிடம், கட்டடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, போதனா கருவிகள், தளவாடங்கள், அறிவியல் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் போன்றவற்றை உரிய சான்று அளித்து பெற்றுக்கொள்ளவும், அவற்றைப் பள்ளியின் இருப்பேட்டில் பதிவு செய்யவும், பெற்ற வசதிகளின் பட்டியலைப் பள்ளியின் தகவல் பலகையில் போடவும், பொறுப்பாக பள்ளியின் முன்னேற்றத்திற்காக இவைகளைப் பயன்படுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**2. புரவலர் திட்டம்:**

புரவலர் திட்டம் அரசாணை (நிலை) எண். 574, கல்வித் துறை, நாள் 14-6-1993-ன்படி தமிழகத்திலுள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசாணை (நிலை) எண் 340, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, நாள் 2-5-1995-ன்படி அரசு உதவிபெறும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசாணை (நிலை) எண். 867, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 6-12-1996-ன்படி நகராட்சி/மாநகராட்சி உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசு ஆணை (நிலை) எண் 185, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 16-3-1994-ன்படி ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மற்றும் நிதியுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் செயல்பட்டு வருகின்றன.

தொடக்க, நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ரூபாய் ஆயிரம் மற்றும் அதன் மடங்கில் தொகை செலுத்துபவர்களைத் தொடக்கக் கல்விப் புரவலர்களாக ஏற்றுக் கொள்ளப்படும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ரூபாய் ஐயாயிரம் மற்றும் அதன் மடங்கில் தொகை செலுத்துபவர்களைப் பள்ளிக் கல்விப் புரவலர்களாக ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு வசூலிக்கப்படும் நன்கொடைத் தொகை



பள்ளியின் பெற்றோர்—ஆசிரியர் கழகத்தாரால் விதிகளின்படி செலவழிக்கப்பட்டு கணக்குகள் பராமரிக்கவும், இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியில் பள்ளிக்குத் தேவையான தொடரினச் செலவுகளை மேற்கொள்ளவும் புரவலர்களது பெயர்களை புரவலர்கள் பட்டியலில் பொறிக்கப்பட்டு பள்ளியில் வைக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் நிதியுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு லட்சமும், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5 லட்சமும், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 5 லட்சத்திற்கு மேலும் வசூலித்து வைப்பு நிதியாக வைக்கலாம். பள்ளியின் அத்தியாவசிய தொடர் செலவினத் தேவைகளான (1) கட்டடம் பராமரித்தல், (2) நூலகப் புத்தகங்கள் வாங்குதல், (3) ஆய்வகக் கருவிகள் வாங்குதல், (4) கற்பித்தல் கருவிகள் வாங்குதல், (5) வரலாறு, புவியியல் பாடங்களுக்கான வரைபடங்கள், (6) கணிதம் துணைக் கருவிகள் வாங்குதல், ஆங்கிலப் பாடங்களில் கற்பித்தல், (7) பள்ளித் தோட்டம் அமைத்தல், (8) பள்ளிக்கான சுற்றுச் சுவர் அமைத்தல், (9) குடிநீர் வசதி செய்தல், (10) கழிப்பிட வசதி செய்தல், (11) விளையாட்டுக் கருவிகள் வாங்குதல், (12) விளையாடுமிடம் சீரமைத்தல் மற்றும் (13) ஆண்டுதோறும் சிறப்பான மதிப்பெண் பெற்ற மாணவர்கள் /சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்கள்/ விளையாட்டு களில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்குதல் போன்ற செலவினங்களுக்குப் பயன்படுத்தலாம். இந்நிதி பள்ளி பெற்றோர்—ஆசிரியர் கழகத்தாரால் செலவழிக்கப்பட்டு வரவு—செலவுக் கணக்குகள் அனைத்தும் தணிக்கை அலுவலர்களின் தணிக்கைக்கு உட்பட்டது.

**142—**

**ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்**

**வினா எண் 13530—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மூலம் பயிற்சி முடித்து, தேர்வு எழுதாமலும், எழுதியவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படாமலும் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் விவரம் என்ன?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) உயர் நீதிமன்றத் தீர்ப்புப்படி இவ்வகை மாணவர்களுக்கு எந்த விதப் பரிகாரமும் செய்ய இயலாதபடியால் இவ்வகை மாணவர்களுக்கு முறையான பயிற்சியில் சேர அரசு வாய்ப்பளித்துள்ளது. மேலும் இம் மாணவர்கள் பிரச்சினைக்குச் சட்டபூர்வமான வழிவகைகாண சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.*

**143—**

**பாடநூல்களில் சீர்த்திருத்தக் கருத்துக்கள்**

**வினா எண் 14319—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பள்ளி மாணவர்களுக்கான பாடநூல்களில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பேரறிவாளர் தலைவர் கலைஞர் இவர்களுடைய சீர்த்திருத்தக் கருத்துக்களைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*ஏற்கெனவே பாடநூல்களில் இடம் பெற்றுள்ளன. இவை பாடநூல் தேர்வுக் குழுவினாலேயே முடிவு செய்யப்படுகின்றன.*

**144—**

**பள்ளிக்கு விஞ்ஞான பரிசோதனைக் கூடம்**

**வினா எண் 14561—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வாணியம்பாடி வட்டம், வெள்ளக்குட்டைக் கிராமத்தில், அரசு மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞான பரிசோதனைக் கூடம் இல்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பரிசோதனைக் கூடம் அமைத்துக் கொடுக்கப்படும்?*



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வெள்ளக்குட்டை கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞான பரிசோதனைக் கூடம் கட்ட அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வித் துறை நாள் 22-9-98-ன்படி ரூ.9.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.*

**145—**

**ஆரம்பப் பள்ளி திறத்தல்**

**வினா எண் 15351—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர், முதலிபாளையம் ஊராட்சி, கெங்கநாயக்கன்பாளையம் ஆரம்பப் பள்ளி மீண்டும் எப்போது திறக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*அரசாணை நிலை எண் 226, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-6-98-ன்படி திருப்பூர், முதலிபாளையம் ஊராட்சி, கெங்கநாயக்கன் பாளையத்தில் புதிய தொடக்கப்பள்ளி தொடங்க ஆணை வழங்கப்பட்டு 22-6-98 முதல் செயல்பட்டு வருகிறது.*

**146—**

**நூலகக் கட்டடம்**

**வினா எண் 15356—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை, வெள்ளக்கிணறு பகுதியில் நூலகம் கட்டுவதற்கு காலியிடம் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டடம் கட்டித் தரப்படும்?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வெள்ளக்கிணறு கிளை நூலகத்தின் பயன்பாட்டிற்கென 704 சதுர அடி பரப்புள்ள கட்டடத்துடன் கூடிய 972 சதுர அடி மொத்தப் பரப்பளவுள்ள காலிமனையொன்று வெள்ளக்கிணறு ஆதிகுல வழிபாடு மன்றத்தால் 3-4-98 அன்று கோவை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் பெயருக்கு பத்திரப் பதிவு செய்து அன்பளிப்பாக வழங்கப்பட்டதையடுத்து, 24-8-98 முதல் வெள்ளக்கிணறு கிளை நூலகம் அக்கட்டடத்தில் நன்கு செயல்பட்டு வருகிறது.

**147—**

**பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா எண் 15358— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த இடுவம் பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு செய்துள்ள ஏற்பாடு என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த இடுவம் பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தர ரூ. 4.40 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24-7-98ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**148—**

**பாடநூல்கள் உரிய நேரத்தில் வழங்குதல்**

**வினா எண் 17340—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனம் மூலம் வழங்கப்படும் பாடநூல்கள் உரிய நேரத்தில் வழங்கப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இக்கல்வியாண்டில் (1998-99) மாணவ/மாணவியர்களுக்கு உரிய நேரத்தில் பாட நூல்கள் கிடைப்பதைக் கண்காணிக்க மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் அமைக்கப்பட்ட குழுவோடு இணைந்து பாட நூல் கழக அலுவலர்களும் மாவட்டந்தோறும் சென்று விநியோகப் பணி சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**149—**

**அடையாள அட்டை விரைவாக வழங்குதல்**

**வினா எண் 18556—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வாக்காளப் பெருமக்களுக்குப் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை முழுமையாக வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாக்காளர்களுக்குப் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்திற்காக இதுவரையிலும 3,13,31,000 வாக்காளர்கள் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளனர். இதில் 2,21,36,547 வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 91,94,453 வாக்காளர்களுக்கான அடையாள அட்டைகள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினரால் தயார் செய்யப்பட்டு விரைவில் வழங்கப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[1999 மே 18

150—

## அறிவியல் ஆய்வுக் கூடம்

**வினா எண் 19268—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வகம் கட்ட அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வித் துறை நாள் 22-9-98-ல் ரூ.9.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

151—

## யோகாவை பாடமாக்குதல்

**வினா எண் 20738—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் யோகாவை ஒரு பாடமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

நடைமுறையில் உள்ளது.

152—

## கல்வி உரிமை பாதிப்பு

**வினா எண் 20742—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) மெட்ரிகுலேசன் பள்ளிகளில் வரைமுறையின்றி கட்டணம் வசூலிக்கப்படுவதால் ஏழைகளின் கல்வி உரிமை பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மெட்ரிகுலேசன் பள்ளிகளில் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு கட்டணம் வசூலிப்பது போல் கட்டணம் வசூலிக்க வரையறுக்கப்படவில்லை. நிர்வாகமே கட்டணங்களை சுயமுடிவில் வசூல் செய்கிறது. அரசு பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்காக இலவசக் கல்வித் திட்டம் செயல்படுவதால் ஏழைகளின் கல்வி உரிமை பாதிக்கப்படவில்லை. எனவே இது குறித்து நடவடிக்கை அவசியமில்லை.

153—

## போதனா முறை மாற்றம்

**வினா எண் 20755—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக் கல்லூரிகளில் அனைத்துப் பாடப் பிரிவுகளையும் போதிக்கிற முறையை மாற்றிட அரசு கருதி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகளில் மாணவர்களின் நலன் கருதி-கற்பிப்பு முறைகள்- தேவைக்கேற்ப மாற்றப்பட்டு வருகின்றன.

**154—**

**ஆய்வுக் கூடத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 20756—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*

*(அ) திருப்பூர், மங்கலம் மேல்நிலைப் பள்ளி அறிவியல் ஆய்வுக் கூடத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) கோவை மாவட்டம், திருப்பூர், மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வகம் கட்ட ரூ.9.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22-9-98-ல் அரசு ஆணையிட்டுள்ளது.*

**155—**

**பொது நூலகம்**

**வினா எண் 20762—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*

*(அ) தென்காசி நகராட்சி 19-வது வார்டு மற்றும் சிந்தாமணிப் பகுதிகளில் பொது நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை உள்ள இடங்களில் மட்டுமே பொது நூலகம் திறப்பதற்கு வாய்ப்புள்ளது. தென்காசி நகராட்சி 19 வது வார்டு*



*சிந்தாமணி பகுதியின் மக்கட்தொகை 1554 மட்டுமே உள்ளதால் இப்பகுதியில் நூலகம் திறக்க வாய்ப்பில்லை. இருப்பினும், இப்பகுதி மக்கள் பகுதிநேர நூலகத்திற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தருவார்களேயானால் இவ்வூரில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க வாய்ப்புள்ளது.*

**156—**

**கல்லூரிகளில் பாட நேர விவரம்**

**வினா எண் 20779—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) யு.ஜி.சி. விதிமுறைப்படி கல்லூரிகளில் ஆசிரியர்கள் நடத்த வேண்டிய பாட நேரம் வாரத்திற்கு எத்தனை மணி நேரம்?*

*(ஆ) அதன்படி தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் பாடம் நடத்தப்படுகிறதா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) பல்கலைக்கழக நல்கை நிதிக்குழு நிர்ணயித்துள்ளவாறு, கல்லூரி ஆசிரியர்கள் (6 நாட்கள் கொண்ட) ஒரு வாரத்திற்கு கற்பிப்புப் பணியை 16 மணி நேரமும், ஏடுகள் திருத்துதல், செய்முறைப் பயிற்சி, கருத்தரங்கு மற்றும் பயிற்று முறைத் தயாரிப்பு போன்ற இதர பணிகளை 24 மணி நேரமும், ஆக 40 மணி நேரம் பணியாற்ற வேண்டும்.*

*(ஆ) தமிழகத்தின் அனைத்துக் கல்லூரிகளிலும் இவ்விதி கடைப்பிடிக்கப்படுகிறது.*

**157—**

**போதிக்கும் தகுதியை மேம்படுத்துதல்**

**வினா எண் 20781—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கல்லூரி ஆசிரியர்களின் போதிக்கும் தகுதியை ஆண்டுதோறும் மேம்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?*

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கல்லூரி ஆசிரியர்களின் போதிக்கும் தகுதியை மேம்படுத்த அரசு கல்லூரி மற்றும் உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு புத்தாக்க மற்றும் புத்தறியும் பயிற்சிகள் மற்றும் பொதுவான பாடப் பிரிவுகளில் கற்பித்தல் முறை (Teaching Methodology) மற்றும் பணிப் பட்டறைகள், கருத்தரங்குகள் ஆகியவை நடத்தபபடுகின்றன. 1998-99-ம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் (Part-II Scheme) கீழ் 20 கல்லூரி ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நிதி உதவியும் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரிகளில் பணிபுரியும் ஆங்கில விரிவுரையாளர்களுக்கு மாநில ஆங்கில நிறுவனத்தின் (State Institute of English) மூலமாக பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

2. மேற்கண்ட முறைகளில் கல்லூரி ஆசிரியர்களின் போதிக்கும் திறனை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

**158—**

### போலி பல்கலைக்கழகம் குறித்த புகார்

**வினா எண் 20783—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் போலி பல்கலைக்கழகம் செயல்படுவதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**159—**

### தன்னாட்சி கல்லூரிகள் விவரம்

**வினா எண் 20954—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்தக் கல்லூரிகள் எத்தனை?

(ஆ) அவற்றில் தன்னாட்சிக் கல்லூரிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்தக் கல்லூரிகள் - 408

(ஆ) தன்னாட்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை - 42

**160—**

### முதுகலைப் பட்ட வகுப்புகள்

**வினா எண் 21353—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அனைத்து அரசுக் கலைக்கல்லூரிகளிலும் முதுகலைப் பட்ட வகுப்புகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 8 அரசுக் கல்லூரிகள் தவிர, இதர அரசுக்கல்லூரிகள் அனைத்திலும் நிறைநிலைப்பட்ட வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேவைக்கேற்ப இதர கல்லூரிகளிலும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**161—**

### கணினி பாடப் பிரிவு

**வினா எண் 21374—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு கலைக் கல்லூரிகளிலும் பி.எஸ்.சி. (கணினி) பாடப்பிரிவு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போது மொத்தமுள்ள 60 அரசுக் கல்லூரிகளில் கணினி அறிவியல் பட்டவகுப்பு 38 கல்லூரிகளில் நடைபெற்று வருகிறது. இதர கல்லூரிகளிலும் தொடங்க அடுத்துவரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**162—**

**மூடநம்பிக்கைகளிலிருந்து விடுவிக்க அறிவியல் கண்காட்சி**

**வினா எண் 21988—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூடநம்பிக்கைகளிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்க மாவட்டந்தோறும் அறிவியல் கண்காட்சி நடத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அம்மாதிரியான கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

**163—**

**உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர்**

**வினா எண் 22418—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புல்லுக்காட்டு வலசை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், புல்லுக்காட்டு வலசை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு, அரசாணை நிலை எண் 581, கல்வித் துறை நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைப்பது குறித்து வனத் துறை





அலுவலருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவது அரசின் கொள்கையல்ல. சுற்றுச்சுவர் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்குவது இல்லை. பள்ளிக் கட்டடத்தின் தேவையை பூர்த்தி செய்த பின்புதான் இதுபோன்ற பணிகளை எடுக்க இயலும்.

**164—**

**அரசு ஆண்கள் கலைக்கல்லூரி**

**வினா எண் 22955—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் அரசு ஆண்கள் கலைக்கல்லூரி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**165—**

**மூலிகை வளங்களின் முக்கியத்துவத்தைப் பாடத்திட்டத்தில் சேர்த்தல்**

**வினா எண் 23259—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூலிகை வளங்களின் முக்கியத்துவம் குறித்து இளைய தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் அவற்றைப் பற்றிய பாடத்தினைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மூலிகை வளங்களின் முக்கியத்துவம் குறித்து சித்த மருத்துவப் பாடங்கள் பள்ளிப்பாடத்திட்டத்தில் சில குறிப்பு மட்டும்

இடம் பெற்றுள்ளன. பல்வேறு தலைப்புள்ள பாடங்கள் இடம் பெறும் பாடப் புத்தகங்களில் விரிவாக இடம் பெறுவது கடினம்

**166—**

**தொழில்நுட்பக் கல்லூரி**

**வினா எண் 23430—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் புதிதாக தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**167—**

**மேல்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை, சிறப்பு ஒதுக்கீட்டில் பயன்பெற்றோர் விவரம்**

**வினா எண் 23434—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சிற்றூராட்சிகளில் அமைந்துள்ள மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) இதில் பயின்ற மாணவர்களில் தொழில கல்விக்கான 15% சிறப்பு ஒதுக்கீட்டில் பயன்பெற்றோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் சிற்றூராட்சிகளில் 797 மேல்நிலைப் பள்ளிகள் அமைந்துள்ளன.





(ஆ) 1190 பேர் பயன்பெற்றுள்ளனர்.

**168—**

**கிராமப்புற மாணவர் நல இட ஒதுக்கீடு விவரம்**

**வினா எண் 23435—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் கல்வியில் கிராமப்புற மாணவர்கள் நலனுக்காக 15% ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் முறையாக நிரப்பப்பட்டதா?

(ஆ) இந்த ஒதுக்கீட்டு முறையால் பயன்பட்டுள்ள மாணவர்கள் எத்தனை பேர்? பள்ளிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தொழில் கல்வியில் கிராமப்புற மாணவர்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் முறையாக நிரப்பப்பட்டன.

(ஆ) இத்திட்டத்தால் 310 பள்ளிகளைச் சார்ந்த 1190 மாணவர்கள் பயன் அடைந்தனர்.

**169—**

**சாரண சாரணியர் இயக்க விவரம்**

**வினா எண் 23675—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் நடைபெற்று வருகிறது?

(ஆ) இதற்கு அரசு ஆண்டுதோறும் செலவிடும் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் சாரண/சாரணியர் இயக்கம் மொத்தம் 3430 பள்ளிகளில் நடைபெற்று வருகின்றது. 1,18,389 சாரண/சாரணியர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

[1999 மே 18

(ஆ) அரசு ஆண்டுதோறும் ரூ.5.00 இலட்சம் பராமரிப்பு மானியமாக வழங்கி வருகிறது இத்தொகையை ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி, தற்போது ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**170—**

**அரசு மருத்துவமனை கட்டட விரிவாக்கம்**

**வினா எண் 302—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அரசு மருத்துவமனை கட்டட விரிவாக்கப் பணிகள் எப்போது நிறைவேற்றப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அரசு மருத்துவமனைக் கட்டட விரிவாக்கப் பணிகள் 31-3-98-ல் முடிவடைந்துவிட்டன.*

**171—**

**மருத்துவமனைகளில் பாம்புக்கடிக்கான மருந்து வழங்குதல்**

**வினா எண் 631—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் பாம்புக்கடிக்கான மருந்தினை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழக மாவட்ட*



1999 மே 18]

*மருந்துக் கிடங்கு மூலம் பாம்புக்கடிக்கான மருந்து, தேவை அடிப்படையில் தடையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.*

**172—**

**மாற்றம் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை நிபுணர் பணியிடங்களை மீண்டும் கொண்டுவருதல்**

**வினா எண் 1386—திரு. வ. வேலுசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து, வேலையின்மை காரணமாக சென்னைக்கும், சேலத்திற்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ள மூன்று அறுவை சிகிச்சை நிபுணர் (Civil Surgeon) பணியிடங்களை மீண்டும் மதுரை மாநகருக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து வேலையின்மை காரணமாக சென்னைக்கும் சேலத்திற்கும் மூன்று அறுவை சிகிச்சை நிபுணர் பணியிடங்கள் மாற்றம் செய்யப்படவில்லை.*

**173—**

**அரசு பொது மருத்துவமனைக்கு வசதி**

**வினா எண் 1792—திரு. அ. மாரிமுத்து:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வானூர் தொகுதி, வானூர் தலைமை மருத்துவமனையை அரசு பொது மருத்துவமனையாக அறிவித்திருந்தும் படுக்கை வசதி, கட்டட வசதி மற்றும் கூடுதலாக மருத்துவர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு அதற்கான நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வானூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுக்கா மருத்துவமனையாக மாற்றி, 26 படுக்கைகள் கொண்ட உள்நோயாளி பகுதி, நுண்கதிர் பிரிவு, அறுவை அரங்கம், சோதனைக்கூடம் மற்றும் அமரர் அறை ஆகியவற்றுக்குக் கட்டடப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**174—**

**மருத்துவமனைக்குப் புதிய அறுவைக்கூடம்**

**வினா எண் 3478—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, அரசு ஆண்கள் மருத்துவமனையில் அறுவைக்கூடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் புதிய அறுவைக்கூடம் விரைவில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலருக்கும் தனித்தனி மருத்துவமனைகள் உள்ளன. ஆண்கள் மருத்துவமனையில் உள்ள அறுவைக் கூடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால் பெண்கள் மருத்துவமனையில் குடும்ப நல அறுவை சிகிச்சைக்கென உள்ள அறுவை அரங்கியிலேயே தற்போது பொதுவான அறுவை சிகிச்சைகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன. இது குளிர்சாதனம் செய்யப்பட்ட நவீன அறுவைக் கூடம் ஆகும். நடைமுறையில் உள்ள சராசரி அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையைப் பொருத்து தற்போதுள்ள ஏற்பாடே போதுமானது. ஆண்களுக்கென்று



தனியாக அறுவை அரங்கம் இப்பொழுது தேவையில்லை. ஆண்கள் மருத்துவ மனையில் இடிந்த நிலையில் இருந்த பழைய அறுவை அரங்கை ரூபாய் நான்கு இலட்சம் செலவில் பழுதுபார்த்து இரத்த சேமிப்பு வங்கியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**175—**

**அரசு மருத்துவனையில் தீவிர மருத்துவக் கண்காணிப்புப் பிரிவு அமைப்பது**

**வினா எண் 5616—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத் தலைமை மருத்துவமனையான ஈரோடு அரசு மருத்துவமனையில் தீவிர மருத்துவக் கண்காணிப்புப் பிரிவு அமைப்பது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அவை எப்போது துவக்கி வைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத் தலைமை மருத்துவமனையான ஈரோடு அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே தீவிர மருத்துவக் கண்காணிப்புப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழ இடமில்லை.

**176—**

**அரசு மருத்துவமனையில் Echo Cardiogram Unit ஏற்படுத்துதல்**

**வினா எண் 5619—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) ஈரோடு மாவட்ட தலைமை மருத்துவமனையான ஈரோடு அரசு மருத்துவமனையில் Echo Cardiogram Unit ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவை எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தலைமை மருத்துவமனையான ஈரோடு அரசு மருத்துவமனையில் Echo Cardiogram Unit ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**177—**

**தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தெரு விளக்குகள் இலவசமாக அமைத்தல்**

**வினா எண் 5659—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் தெரு விளக்குகள் அமைக்க ஒரு விளக்கிற்கு ரூ.3,450/- வசூலிப்பதைக் குறைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தெரு விளக்குகள் இலவசமாக அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கிராமப் பஞ்சாயத்துக்களிலும், நகர பஞ்சாயத்துக்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தெரு விளக்குகள் அமைக்கும் செலவினை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.



1999 மே 18]

**178—**

**நோயாளிகளுக்கு ரொட்டி, முட்டை முறையாக வழங்குதல்**

**வினா எண் 5999—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு ரொட்டி, முட்டை போன்றவைகள் முறையாக வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நோயாளிகளுக்கு அவை வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது குறித்த விளக்கமான பதில் அறிக்கையாக அவைமுன் வைக்கப்படுகிறது.

**அறிக்கை**

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான முட்டை, ரொட்டி போன்றவை, அரசாணைப்படி டாப்கோ மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய நிறுவனம் அல்லது அதன் பிரிவுகளிடமிருந்து பெறப்பட வேண்டும். இந்நிலையில், தர்மபுரி, அரசு தலைமையிட மருத்துவமனைக்கு, முட்டை சரிவர வழங்கப்படாமல் இருந்ததற்குக் காரணம் முன்பு டாப்கோ நிறுவனம் தர்மபுரியில் இயங்கி வந்தது; பின்பு அந்நிறுவனம் தர்மபுரியிலிருந்து சேலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதால், தர்மபுரி தலைமையிட மருத்துவமனைக்கு முட்டை சப்ளை செய்யப்படவில்லை. சேலம் டாப்கோ நிறுவனம், தங்களால் தர்மபுரிக்கு முட்டை சப்ளை செய்ய இயலாது, எனவும், மருத்துவமனையிலிருந்து தனி நபரை அனுப்பி வைத்தால், முட்டை சப்ளை செய்து வருகிறோம் எனக் கூறி விட்டதால் நிர்வாகக் காரணங்களால் தினசரி தனி நபரை சேலத்திற்கு அனுப்பி முட்டை எடுத்து வந்து வழங்க இயலாது என்பதால், சிறிது காலம் முட்டை சப்ளை செய்யப்படவில்லை. ஆனால், தற்போது, உள்நோயாளிக்கு காலாண்டு விலைப்புள்ளி மூலமாக, முட்டை உள்ளூர் கொள்முதல் செய்யப்பட்டு, எந்தவித இடர்பாடின்றி முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

தர்மபுரி, உதவி இயக்குநர், கதர் மற்றும் கிராம தொழில்கள் மற்றும் நடுப்பட்டி மகளிர் பல்நோக்கு தொழில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அவர்களுக்கு அரசு அங்கீகரிக்கப்பட்ட விலையான 1 கிலோ வெள்ளை ரொட்டி ரூ. 13-க்கு சப்ளை செய்யக்கோரி தகவல்கள் அனுப்பியும், மேற்படி நிறுவனத்தார், அரசு நிர்ணயித்த விலையான 1 கிலோ ரூ. 13 என்பது குறைவான விலையாக உள்ளதாகவும் அதனால் சப்ளை செய்ய இயலாது என தெரிவித்துள்ளதால், வெள்ளை ரொட்டி வழங்கிட உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு, ஆணைகள் வழங்கப்பட்டும் உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள், மழையின் காரணமாக மூலப்பொருட்களின் விலை உயர்வால் ரொட்டி சப்ளை செய்ய இயலாது எனக் கூறிவிட்டனர். இந்நிலையினை, தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்து, மேற்படி வாரியத்திடமிருந்து, ரொட்டி முறையாக தடங்கலின்றி உடன் விநியோகம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**179—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 6050—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்டத்தில் மஞ்சாலுமூடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குத் தேவையான இடம் தேர்வு செய்யப்பட்டு, பணம் செலுத்திய பின்னரும், இதுவரை, எந்தப் பணியும் தொடங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கன்னியாகுமரி மாவட்டத்தில் மஞ்சாலுமூடு கிராமம் மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்டது. மேல்புறம் ஊராட்சியில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. மேலும் இவ்வூராட்சியில் ஒரு துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும் 7





கிலோ மீட்டர் தூரத்தில் அரசு மருத்துவமனையும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளதால் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, பணம் செலுத்தப்பட்ட இடத்தில் நிலம் இருந்தாலும் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாததால் பணி தொடங்கப்படவில்லை.

**180—**

## அரசு மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டுதல், எக்ஸ்ரே கருவி இயக்குதல்

**வினா எண் 6540—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டவும், இங்குள்ள எக்ஸ்ரே கருவி இயங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் கட்டும் பணிக்காக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரால் ரூபாய் இரண்டு இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப்பணித் துறையினரால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அருமனை அரசு மருத்துவமனையில் இதுவரை எக்ஸ்ரே கருவி எதுவும் வழங்கப்படவில்லை. தேவைப்படும்பொழுது நாகர்கோவில் அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து ஊடுகதிர் கருவியினைத் தக்க ஊழியருடன் வரவழைத்து அருமனை அரசு மருத்துவமனையிலேயே எடுக்கப்பட்டு வருகிறது. இது தற்காலிக ஏற்பாடுதான். அவசியமெனில் இம்மருத்துவமனைக்கு நிரந்தரமாக ஊடுகதிர் பிரிவு ஒன்று ஏற்படுத்த பகுதி-2 திட்டத்தின்போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இம்மருத்துவமனையில் தற்போது அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர் கருவி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[1999 மே 18

**81—**

**கட்டடங்கள் மற்றும் மின்சாதனங்களைச் சீரமைத்தல்**

**வினா எண் 6886—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் பழுதடைந்துள்ள புறநோயாளிகள் பிரிவு கட்டடத்தையும், அங்கு மின்சாரக் கசிவு ஏற்படுவதால் மின்சாதனங்களைச் சீரமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் ரூ. 40 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு மற்றும் நியோநேட்டல் அறை கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 62, சுகாதாரம், நாள் 6-2-1998-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

1998-99 பகுதி-2 திட்டத்தில் இம்மருத்துவமனையில் ரூ.4 இலட்சம் செலவில் மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கு நிதிநிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் ஆணை வெளியிடப்படவுள்ளது.

இம்மருத்துவமனையில் புறநோயாளிகள் பகுதியில் மின்சார ஒயர்கள் புதுப்பிக்கும் பணி முழு அளவில் முடிவுற்று தற்பொழுது மின்கசிவு ஏதுமின்றி மின்சாதனங்கள் அனைத்தும் நல்லமுறையில் உள்ளன.

புறநோயாளிகள் பிரிவுக் கட்டடச் சீரமைப்பு அவசியமெனில் 1999-2000 பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

**182—**

**அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் அதிகரித்தல்**

**வினா எண் 7233—திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆயக்குடி அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**183—**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசுக் கட்டடம்**

**வினா எண் 8096—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையம், பைப்பூரில் தனியார் கட்டடத்தில் இயங்குவதால், இதற்கு அரசுக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், பைப்பூரில் வாடகை இல்லாமல் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. 1996-97 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில், 300 ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு, சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன; விரைவில் முடிவடையும்.

[1999 மே 18

184—

## அரசினர் மருத்துவமனைக்கு கூடுதல் தூக்குப்படுக்கை வழங்குதல்

**வினா எண் 8547—திரு. ஜி. நிஜாமுதீன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் மாவட்டம், நாகை அரசினர் மருத்துவமனைக்குக் கூடுதல் தூக்குப்படுக்கை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், நாகை அரசினர் மருத்துவமனையில் மொத்தம் டிராலி இல்லாமல் 21 தூக்குப்படுக்கைகளும், டிராலியுடன் 10 தூக்குப்படுக்கைகளும் உள்ளன. இவை போதுமானவை என்பதால் கூடுதல் தூக்குப்படுக்கை வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

185—

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 8810—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், துங்கபுரம் கிராமத்தில் 11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதிய துணை மின் நிலையத்தை துங்கபுரத்தில் அமைப்பதற்குத் தேவையான இடத்தைக் கையகப்படுத்த இயலாத காரணத்தால் கீழப் பெரம்பலூரில் மின் நிலையத்தை அமைக்கத் தேவையான இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.



1999 மே 18]

186—

## பெரிய மருத்துவமனையில் 'லித்தோட்ரிப்டர்' கருவி

**வினா எண் 9449—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பவள விழாவில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட, சிறுநீரகக் கற்களை அறுவை சிகிச்சையின்றி அகற்றும் 'லித்தோட்ரிப்டர்' கருவி இந்த ஆண்டே சென்னை பெரிய மருத்துவமனைகளில் நிறுவப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிறுநீரகக் கற்களை அறுவை சிகிச்சையின்றி அகற்றும் 'லித்தோட்ரிப்டர்' என்ற கருவியை இந்த ஆண்டே நிறுவுவதாக உத்தேசமில்லை. 1998-99-ஆம் ஆண்டில் இக்கருவியை வாங்கி நிறுவ உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

187—

## அரசு மருத்துவமனை திறப்பு

**வினா எண் 9723—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, ராதாபுரத்தில் 1995-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட 32 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை எப்போது திறக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

11-6-1997 அன்று காலை 9.30 மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

[1999 மே 18

**188—**

## மின் மாற்றிகள் அமைத்தல்

**வினா எண் 10055—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டி பேரூராட்சியில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால், கூடுதல் சக்தி உள்ள மின் மாற்றிகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதிய 110 கி. வோல்ட் தனியாக மின் பாதை செம்பட்டியிலிருந்து வேடசந்தூருக்கு நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் இந்த வருடம் ஆகஸ்ட் '98 மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்பு பள்ளப்பட்டியில் குறைந்த மின் அழுத்தம் சீரடையும்.*

**189—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 10075—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம் பாளையத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



1999 மே 18]

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வரையறைப்படி மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகையின்படி தற்போதுள்ள மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாலும், வெள்ளையம்பா ளையத்தில் தற்போது துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், இக்கிராமத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் வைகுந்தம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், வெள்ளையம்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட வாய்ப்பேதுமில்லை.*

**190—**

## மருத்துவமனை சமையல் கூடங்களில் எல்.பி.ஜி. கேஸ் இணைப்பு

**வினா எண் 10757—**திரு. ஆர்.ஆர். சேகரன். *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு மருத்துவமனைகளில் உள்ள சமையல் கூடங்களில் எல்.பி.ஜி. கேஸ் இணைப்பு வழங்க அரசு முன் வருமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் அனைத்திலுமே எல்.பி.ஜி. கேஸ் இணைப்பு வழங்க கொள்கை அளவில் முடிவெடுத்து அது படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.*

**191—**

## ஆரம்ப சுகாதார நிலையம் இயக்குதல்

**வினா எண் 11372—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம், ஆலங்காட்டூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 5 ஆண்டுக் காலமாக இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

[1999 மே 18

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்த மருத்துவமனையை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம், ஆலாங்காட்டூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது இல்லை. ஆனால் ஆலங்காட்டூர் கிராமத்தில் 'கோணங்குட்டையூர் என்ற பெயரில் துணை சுகாதார நிலையம் மட்டும் உள்ளது. இந் நிலையத்திற்கு மின்இணைப்பும் தண்ணீர் வசதியும் இல்லாமல் இருந்தது. தற்போது மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. துணை சுகாதார நிலையத்தின் அருகிலுள்ள ஆழ்துளைக் கிணறு மூலம் தேவையான தண்ணீர் கிடைக்கிறது. இந்த துணை சுகாதார நிலையத்தைப் பழுது பார்க்க 1999-2000ஆம் ஆண்டில் முன்னுரிமையில் நிதி ஒதுக்கீடு பெற்று பழுதுபார்க்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. 1-2-1993 முதல் கிராம சுகாதார செவிலியர், கோணங்குட்டையூர் துணை சுகாதார நிலையத்திலேயே தங்கி இருந்து இப்பகுதி மக்களுக்கு தடுப்பூசி மருந்து மற்றும் தாய்சேய் நலப்பணிகளைச் செவ்வனே செய்துகொண்டு வருகின்றார்.

**192—**

**மருத்துவமனையில் நல்ல தண்ணீர் வழங்குதல்**

**வினா எண் 12439—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது திருப்பூர் மருத்துவமனையில் பயன்படுத்துகிற தண்ணீரால் மருத்துவ உபகரணங்கள் பாதிக்கப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நல்ல தண்ணீர் வழங்க அரசு முன்வருமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 30-7-1997 முதல் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு திருப்பூர் நகராட்சியால் நாள் ஒன்றுக்கு 36,000 லிட்டர் குடிதண்ணீர் லாரி மூலம் விநியோகம் செய்யப்படுவதால் தற்போது மருத்துவ உபகரணங்கள் பாதிக்கப்படுவதில்லை. நிலத்தடி நீரை உபகரணங்களுக்குப் பயன்படுத்துவது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**193—**

**மலேரியா ஒழிப்பிற்கான நிதி**

**வினா எண் 12463—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலேரியாவை ஒழிக்கும் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்குக் கிடைக்க வேண்டிய நிதி எவ்வளவு?

(ஆ) மத்திய அரசிடமிருந்து இன்னும் பெறப்பட வேண்டிய தேவையான மருந்துகள் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மலேரியாவை ஒழிக்கும் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகை ரூ.40.22 கோடி ஆகும். இந்நிலுவைத் தொகை 1993-94 ஆம் ஆண்டுக்கு முன் தமிழ்நாடு அரசால் செலவழிக்கப்பட்ட தொகைக்கு மத்திய அரசு தனது பங்காக 50% வழங்க வேண்டிய தொகையாகும். 1993-94-ஆம் ஆண்டும் மத்திய அரசு நிதி உதவிக்குப் பதிலாகத் தனது பங்கு 50%க்குப் பொருளாக வழங்குகிறது. (உம்) மாத்திரைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள். எனவே 1993-94-ம் ஆண்டுக்குப்பின் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிதி உதவி ஏதும் இல்லை.

[1999 மே 18

(அ) மத்திய அரசிடமிருந்து மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பெறப்பட வேண்டிய மருந்துகள் ஏதும் நிலுவையில் இல்லை.

**194—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 12489—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, குண்டுக்கல் பஞ்சாயத்து, கொட்டாலூர் புதூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கொட்டாலூர் புதூர் கிராமம், காடையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைப்படி அங்கு செயல்பட்டுவரும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது. மேலும் கொட்டாலூர் புதூர் மக்கள் தொகை 597 மட்டுமே என்பதாலும், கொட்டாலூர் புதூர் கிராமத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் துணை சுகாதார நிலையமும், 6 கி.மீ. தொலைவில் காடையம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், செயல்பட்டு வருவதாலும் கொட்டாலூர் புதூரில் தனியாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**195—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 12508—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு தற்போது செயல்படும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாலும், புக்கம்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், புக்கம்பட்டி கிராமத்திற்கு 8 கி.மீ. தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளதாலும் மேற்படி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**196—**

### தாய்-சேய் நலவிடுதி

**வினா எண் 12650—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, முடச்சிக்காடு கிராமத்தில் தாய்-சேய் நலவிடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மைய அரசின் வரையறைப்படி 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் (தாய்சேய் நலவிடுதி) அமைக்கப்படுகிறது. கழனிக்கோட்டை துணை சுகாதார மையத்தினை உள்ளடக்கியுள்ள மொத்தம் 13 கிராமங்களில் முடச்சிக்காடு கிராமம் ஒன்றாகும். கழனிக்கோட்டை கிராமத்தில் மொத்த மக்கள் தொகை 8,359 ஆகும். ஆனால் முடச்சிக்காடு கிராமத்தின் மக்கள் தொகை 1544. எனவே, இக்கிராமத்தில் மைய அரசின் வரையறையின்படி தாய்-சேய் நலவிடுதி (துணை சுகாதார நிலையம்) அமைக்க இயலாது என்பதால் அத்தகைய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[1999 மே 18

**197—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 12653—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயலில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நான்கு (4) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாலும், அவ்வொன்றிய மக்கள் தொகைப்படி ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதலாக உள்ளதாலும், ரெட்டவயல் கிராமத்திற்கு 3 கி.மீ. தூரத்தில் பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கி.மீ. தூரத்தில் ஊமத்தநாடு ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கி.மீ. தூரத்தில் பேராவூரணி அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும் ரெட்டவயல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியமும் சாத்தியக் கூறுகளும் இல்லை.

**198—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 12657—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒட்டங்காடு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், ஒட்டங்காடு கிராமத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில் காலகம் ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கி.மீ. தூரத்தில் பேராவூரணி அரசு மருத்துவமனையும், 10 கி.மீ. தூரத்தில் குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், பேராவூரணி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை அடிப்படையில் தற்போது செயல்பட்டுவரும் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது என்பதாலும் அவ்வொன்றியத்தில் உள்ள ஒட்டங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியமும் சாத்தியக்கூறுகளும் இல்லை.

**199—**

**துணை மின்நிலையம் அமைத்தல்**

**வினா எண் 12677—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காஞ்சிக் கோவில், காந்திநகரில் 0.110/22-11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் துணை மின் நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், காஞ்சிக் கோவில், காந்திநகரில் இப்பகுதிக்குப் போதுமான மின் அழுத்தத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் ஒரு வரை திட்டம் உள்ளது.

[1999 மே 18

**200—**

**அரசு மருத்துவமனையில் ஸ்கேனிங் வசதி**

**வினா எண் 12687—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் ஸ்கேனிங் வசதி ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஸ்கேனிங் வசதி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) குமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனிங் வசதி ஏற்கெனவே உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## பதினெட்டாம் பட்டியல்

**1—**

**பான்மசாலாவை விற்கத் தடை**

**வினா எண் 12888—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பான்மசாலாவை தமிழ்நாட்டில் விற்கத் தடை செய்யும் செயற்குறிப்பு அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



1999 மே 18]

**2—**

**திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா எண் 13099—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்குப் படுக்கை வசதியை அதிகரிக்க புதிய கட்டடங்கள் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்குப் படுக்கை வசதியை அதிகரிக்க புதிய கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**3—**

**புதிய இரத்தப் பரிசோதனை நிலையங்கள்**

**வினா எண் 13103—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரத்தப் பரிசோதனை நிலையங்கள் இல்லாத அரசு மருத்துவ மனைகளில் இரத்தப் பரிசோதனை நிலையங்களும் அதற்கான பணியாளர்களையும் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1998-99ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இரத்தப் பரிசோதனை நிலையங்கள் இல்லாத மருத்துவமனைகளிலும் புதிதாக பரிசோதனை நிலையங்கள் தொடங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4—

## பிளாஸ்டிக் பொருள்கள் மூலம் புற்றுநோய்

**வினா எண் 13130—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிளாஸ்டிக் பொருட்களின் மூலம் புற்றுநோய் உருவாக வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பிளாஸ்டிக் பொருட்களின் மூலம் புற்றுநோய் உருவாக வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

5—

## வாலிப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 13148—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நெருப்பெரிச்சல் கிராமம், வாலிப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாலிப்பாளையம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்



தொகை அடிப்படையில் அங்கு மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், வாலிப்பாளையம் கிராமத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், இக்கிராமத்திலேயே துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும் மேற்படி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

6—

## தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

**வினா எண் 13231—திரு. ஜி. நிஜாமுதீன் மற்றும் டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தாம்பரம் சானடோரியத்தில் விரைவில் செயல்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நிறுவத் தேவையான நிலத்தினை இலவசமாக மைய அரசிற்கு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பான மற்ற நடவடிக்கைகளை மைய அரசு மேற்கொள்ளும்.

7—

## தென்காசியில் மின்தடை

**வினா எண் 13685—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி 66/11 கே.வி. துணை மின் நிலையத்தில் சர்க்யூட் பிரேக்கர்கள் மற்றும் பஸ் பார்கள் (Bus Bars) மாற்றி அமைக்கப்படாததால் தொடர்ந்து மின்தடையும் குறைந்த மின் அழுத்தக் குறைவும் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி 66/11 கி.வோ. உப மின் நிலையத்தில் ஏற்கெனவே இயங்கிவரும் பழைய 11 கி.வோ. எண்ணெய்ச் சுற்றதர் பிரிகலவையை (OCB) புதிய வெற்றிடம் கற்றதர் பிரிகலமாக (VCB) மாற்றுவதற்குத் தேவையான மதிப்பீடு, புதுப்பித்தல் மற்றும் நவீனமாக்குதலின் கீழ் அனுமதி பெறப்பட்டிருக்கிறது. இந்த அனுமதியின்படி வெற்றிட கற்றதர் பரிகலன் (VCB) நிறுவப்பட்டு 22.2.1996 அன்று நிறுவி இயக்கி வைக்கப்பட்டது. தென்காசி 66/11 கே.வி. உப மின் நிலையத்திலிருந்து தற்பொழுது மின் விநியோகம் தடைபடாமல் வழங்கப்பட்டு வருகின்றது.

**8—**

### திருவண்ணாமலையில் மருத்துவக் கல்லூரி

**வினா எண் 13686—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் மருத்துவக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**9—**

### லைன் லாஸ் இழப்பைக் குறைத்தல்

**வினா எண் 13687—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு வீடையளிப்பாரா—



(அ) மின் விநியோகத்தில் ஏற்படும் லைன் லாஸ் இழப்பைக் குறைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) அதனால் ஏற்பட்ட பலன் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பல துணை மின் நிலையங்களில் தேவையான மின் தேக்கிகளைப் பொருத்துதல், மின் அழுத்தப் பாதைகளில் தரமுள்ள மின் கம்பிகளை உபயோகித்தல், உயர் மற்றும் தாழ் மின் அழுத்த நிலைமாற்றம் கொண்ட மின் தேக்கிகளை அந்தந்த மின் அழுத்தப் பகுதியில் உபயோகித்தல், மேம்பாட்டுத் திட்ட அமைப்புகள் ஏற்படுத்துதல், தொழில் துறை மற்றும் விவசாய மின் இணைப்புகளில் மின் தேக்கிகள் பொருத்துதல், தொழில் துறை இணைப்புகளில் மின் ஆற்றல் தணிக்கை நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(ஆ) மேற்கண்ட நடவடிக்கைகளினால் மின் இழப்பு 18.35 விழுக்காட்டிலிருந்து 17 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**10—**

### திருப்பூரில் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்

**வினா எண் 13688—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் ஒரு கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

## உதவித் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 13725—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்த மருத்துவ பட்ட மேற்படிப்பு மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கான உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சித்த மருத்துவ பட்ட மேற்படிப்பு மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கான உதவித் தொகையை, அலோபதி முறை பட்ட மேற்படிப்பு மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்குச் சமமாக, 1-8-1997 முதல் உயர்த்தி வழங்க அரசாணை (நிலை) எண் 343, மக்கள் நல்வாழ்வு, நாள் 17-6-1998-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

12—

## அனந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் முழு நேரம் இயங்குதல்

**வினா எண் 13727—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம், அனந்தபுரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் அனந்தபுரம் கிராமம் உள்ளது. செஞ்சி ஊராட்சி



ஒன்றியத்தில் உள்ள 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில், அரசின் கொள்கைப்படி சத்தியமங்கலம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருவதால், கூடுதலாக அனந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர சேவையின்கீழ் கொண்டுவருவதற்கான சாத்தியக் கூறுகள் இலலை.

13—

## எய்யில் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 13728—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், எய்யில் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள எய்யில் கிராமத்தில் தற்போது துணை சுகாதார நிலையம் செயல்பட்டுவருதாலும், அக்கிராமத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் அவலூர்பேட்டையில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், மத்திய அரசின் இலக்கின்படி தமிழ்நாட்டில் மொத்த கிராமப்புற மக்கள் தொகைக்கேற்ப தேவையான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாலும் எய்யில் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

## ஆதமங்கலம் துணை மின்நிலைய மின்மாற்றியை உயர்த்துதல்

**வினா எண் 13757—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆதமங்கலம் துணை மின் நிலையத்தில் தற்போதுள்ள 2 x 3 எம்விஏ (MVA) மின்மாற்றியை 2 x 5 எம்விஏ (MVA) ஆக உயர்த்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**15—**

**மின் வாரிய கிளை அலுவலகங்கள் ஏற்படுத்துதல்**

**வினா எண் 13798—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கொங்கும்பட்டி, வெள்ளானப்பட்டி ஆகிய இடங்களில் மின் கட்டணம் வசூல் செய்வதற்கு கிளை அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, கொங்கும்பட்டி பகுதிக்கு மின் கட்டணம் 4 கி.மீ. தொலைவில் உள்ள கருவள்ளி என்ற இடத்தில் வசூல் செய்யப்படுகிறது. ஆகவே இங்கு கிளை அலுவலகம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. வெள்ளானப்பட்டி பகுதிக்கு மின் கட்டணம் வசூல் செய்ய கிளை அலுவலகம் ஒன்றை தக்கம்பட்டி என்ற இடத்தில் அமைக்க தமிழ்நாடு மின்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**16—**

**நாமக்கல்லில் மின் பகிர்மான வட்டம் ஆரம்பித்தல்**

**வினா எண் 13825—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் மின் பகிர்மான வட்டம் புதியதாக ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் மின் பகிர்மான வட்டம் புதியதாக ஆரம்பிக்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**17—**

**சுய ஆட்சி பெற்ற மருத்துவமனையாக அறிவித்தல்**

**வினா எண் 13840—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சுய ஆட்சி பெற்ற மருத்துவமனையாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை, நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக 7-7-1998 முதல் மைய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை அறிவிக்கை செய்தது. அதனை அரசாணை (நிலை) எண் 405, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 20-7-1998-இல் மறு அறிவிக்கை செய்யப்பட்டது.

**18—**

**மின்மாற்றிகள் பொருத்துதல்**

**வினா எண் 13864—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மாங்கோடு கிராமத்தில் மேழக்கோட்டிலும், இடைக்கோடு பேரூராட்சியில்

[1999 மே 18

பிலாவிளையிலும், குட்டைக்கோடு கோயில் கரையிலும் மின்மாற்றிகள் பொருத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின்மாற்றிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

19—

**பீமரப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 13879—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, பீமரப்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பீமரப்பட்டி கிராமம் அமைந்துள்ள தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகையின் அளவுக்கு கூடுதலாகவே அங்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயலபடுவதாலும், பீமரப்பட்டி கிராமத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் ரெட்டியாபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளதாலும் மேற்படி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



1999 மே 18]

20—

**ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம்**

**வினா எண் 13883—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, ஏனானந்தல், பழையனூர் மலமஞ்சலூர் ஆகிய ஊர்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997-98-ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்ட உத்திரவு வெளியிட்டதில், தண்டராம்பட்டு தொகுதி, ஏனானந்தல், பழையனூர், மலமஞ்சலூர் ஆகிய இடங்களும் அடங்கும். மேலும் ஏனானந்தலில் கட்டடப்பணி முடியும் தருவாயில் உள்ளது. பழையனூரில் கட்டடப்பணி கீழ்மட்ட தரைத்தளம் வரை எழுப்பப்பட்டுள்ளது. மலமஞ்சலூரில் கட்டடப்பணி செங்கல்வேலை சன்னல் மட்டம் வரை எழுப்பப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் துரிதமாக முடிக்கப்படும்.

21—

**இ.சி.ஜி. இயந்திரத்தை நிறுவுதல்**

**வினா எண் 14354—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு இ.சி.ஜி. இயந்திரத்தை நிறுவுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

28.3.1998-ல் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ஒரு இ.சி.ஜி. இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த இயந்திரம் நோயாளிகளுக்கு பயன்படும் வகையில் நல்லமுறையில் இயங்கி வருகிறது.

**22—**

**செஞ்சி வட்ட அரசு மருத்துவமனைக்கு வசதிகள்**

**வினா எண் 14355—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி வட்ட அரசு மருத்துவமனைக்கு போதிய அளவு மருத்துவர்கள், கட்டட வசதி, உள்நோயாளிகள் தங்குவதற்கான படுக்கைகள் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செஞ்சி-வட்ட அரசு மருத்துவமனை 70 படுக்கை வசதிகளோடு சிறப்பாக இயங்கி வருகின்றது. இதில் 8 மருத்துவர்கள் பணிபுரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6.2.1998 நாளிட்ட நல்வாழ்வுத் துறை அரசு ஆணை எண் 62-ல் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள்-நலப் பிரிவு தொடங்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதனால் வரும் உள்-நோயாளிகளின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டும், அரசின் நிதி நிலையை கருத்திற்கொண்டும் உள்நோயாளிகள் தங்குவதற்கான படுக்கை வசதிகளை மேம்படுத்திட அரசு கருத்திற்கொள்ளும்.

**23—**

**பேசின் பாலம் மின் நிலையப் பணி நிலை**

**வினா எண் 14383—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னை பேசின் பாலத்தில் 200 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது?

(ஆ) மின் உற்பத்தியை உடனடியாகத் துவங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பேசின் பாலத்தில் 196 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைக்கும் பணி மார்ச் 1997-ல் தொடங்கி இதுவரை மதிப்பீட்டுத் தொகையில் 70 விழுக்காடு செலவிடப்பட்டு மின் நிலையம் நிறுவுவதில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம் ஜி.எம்.ஆர். வாசவி கார்பரேஷன் நிறுவனத்துடன் 12.9.1996 அன்று மின் கொள்முதல் ஒப்பந்தம் செய்துள்ளது. இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டம் ஜனவரி 1999-ல் இயக்கப்பட வேண்டும். திட்ட முனைவோர் பணிகளை துரிதப்படுத்தி டிசம்பர் 1998-ல் இயக்கப்படும் என தெரிவித்துள்ளார்கள். மின் திறன் வெளியேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை வாரியம் எடுத்து வருகின்றது.

**24—**

**கிழக்குமேடு பூக்காரன் வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 14846—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் துட்டம்பட்டி கிழக்குமேடு பூக்காரன் வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) துட்டம்பட்டி, கிழக்குமேடு பூக்காரன் கிராமம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 6 கிலோமீட்டர் தூரத்தில் தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோமீட்டர் தூரத்தில் கே.ஆர். தோப்பூர் மற்றும் சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும் துட்டம்பட்டி கிழக்குமேடு பூக்காரன் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**25—**

**வேலூர் அரசு மருத்துவமனையில் ஸ்கேன் இயந்திரம் பழுதுபட்டுள்ளமை**

**வினா எண் 14522—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் அரசு மருத்துவமனையில் ஸ்கேன் இயந்திரம் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அது செயல்படத் தொடங்கும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) 1.9.1997 முதல் வேலூர் அரசு மருத்துவமனையில் ஸ்கேன் இயந்திரம் செயல்பட்டு வருகிறது. இதுநாள் வரை பழுதடைந்தது குறித்து எந்தவிதமான புகார்களும் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*



**26—**

**தளவாய்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 14820—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காடையாம்பட்டி வட்டம், நடுப்பட்டி ஊராட்சி, தளவாய்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தளவாய்பட்டி கிராமம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 5 கிலோமீட்டர் தொலைவில் காடையாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், தளவாய்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**27—**

**கோணகாபாடி ஊராட்சியில் தாய் சேய் நல விடுதி**

**வினா எண் 14838—திரு. ப. கோவிந்தன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கோணகாபாடி ஊராட்சியை மையமாகக் கொண்டு ஒரு தாய் சேய் நல விடுதி அமைத்துக் கொடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கோணகாபாடி கிராமம், சேடப்பட்டி துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம் ஆகும். கோணகாபாடி கிராம மக்கள் தொகை 596 ஆகும். சேடப்பட்டி துணை சுகாதார நிலைய மக்கள் தொகை 4,542 ஆகும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி சேடப்பட்டியில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதால் கோணகாபாடி கிராமத்தில் தனியாக துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

28—

### பாரக்கல்லூர் 14 வது வார்டில் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 14840—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பாரக்கல்லூர் 14-வது வார்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பாரக்கல்லூர் கிராமம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப் படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. பாரக்கல்லூர் கிராமத்திற்கு 3 கிலோமீட்டர் தூரத்தில் தாரமங்கலம் மற்றும் சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களும், 4 கிலோமீட்டர் தூரத்தில் கே.ஆர். தோப்பூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதால் பாரக்கல்லூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.





(ஆ) இவ்வினா எழவில்லை.

29—

### பவளத்தானூரில் தாய் சேய் நலவிடுதி

**வினா எண் 14841—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, குருக்குப்பட்டி ஊராட்சியில் உள்ள பவளத்தானூரில் தாய் சேய் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, குருக்குப்பட்டி ஊராட்சியில் உள்ள பவளத்தானூர் கிராமம், லஷ்மனூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய கிராமம் ஆகும். லஷ்மனூர் துணை சுகாதார நிலையத்தால் பவளத்தானூர் மற்றும் ஆறு (6) கிராமங்கள் மருத்துவ வசதிகள் பெறுவதால், குருக்குப்பட்டி ஊராட்சியில் உள்ள பவளத்தானூரில் கூடுதலாக துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

30—

### கருக்கல்வாடியில் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 14842—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மற்றும் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கருக்கல்வாடிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கருக்கல்வாடி கிராமம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும் கருக்கல்வாடி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 5 கிலோமீட்டர் தூரத்தில் கே.ஆர். தோப்பூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோமீட்டர் தொலைவில் தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும் கருக்கல்வாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**31—**

**சாத்தப்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 14843—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சாத்தப்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சாத்தப்பாடியில் துணை சுகாதார நிலையம் உள்ளதாலும், இவ்வொன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும் சாத்தப்பாடி கிராமத்திற்கு 6 கிலோமீட்டர் தொலைவில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், சாத்தப்பாடியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.



(ஆ) இவ்வினா எழவில்லை.

**32—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 14846—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் துட்டம்பட்டி கிழக்குமேடு பூக்காரன் வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) துட்டம்பட்டி, கிழக்குமேடு, பூக்காரன் கிராமம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 6 கிலோமீட்டர் தூரத்தில் தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோமீட்டர் தூரத்தில் கே.ஆர். தோப்பூர் மற்றும் சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும் துட்டம்பட்டி கிழக்குமேடு பூக்காரன் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**33—**

**தாய்-சேய் நல மையம் தொடங்குதல்**

**வினா எண் 14848—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம் ஆவணிப்பேரூர், கீழமுகம் ஊராட்சி குப்பதாசன் வளவில் "தாய்-சேய் நல மையம்" அமைக்க அரசு முன்வருமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம் ஆவணிப்பேரூர் கீழமுகம் ஊராட்சி, குப்பதாசன் வளைவு கிராமம், போடிநாயக்கன்பட்டி துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம் ஆகும். மத்திய அரசின் வரைமுறையின்படி போடிநாயக்கன்பட்டியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் அமைந்துள்ளதால், குப்பதாசன் வளைவு கிராமத்தில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**34—**

**விவசாயிகளுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை**

**வினா எண் 14857— திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளான பேராவூரணி, பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம் போன்ற பகுதிகளில் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சிறப்பு உணவு உற்பத்தி மாவட்டத்தின்கீழ் வருவதால், இந்த மாவட்டத்திற்கு ஏற்கெனவே மற்ற மாவட்டத்தை விட சிறப்பு முன்னுரிமை கொடுத்து அதிகப்படியான இலக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

**35—**

**மீனவத் தெருக்களுக்கு மின் வசதி**

**வினா எண் 14858—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புக்கரை மீனவத் தெருக்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புக்கரை மீனவத் தெருக்களுக்கு 1997-98 ஆம் ஆண்டில் 5 புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**36—**

**கூடுதல் சுகாதார நிலையத்திற்கு கட்டடம்**

**வினா எண் 14869—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூரில் ஆரம்ப கூடுதல் சுகாதார நிலைய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தேசூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு நிலமாற்றத்திற்கான அனுமதி வழங்கி வருவாய்த் துறை ஆணைகள் பிறப்பித்துள்ளது. அந்த நிலத்தில் குடிசை போட்டு ஆக்கிரமிப்பு செய்தவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அகற்றி பொதுப்பணித் துறையினரிடம் பணித்தளம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையினரால் கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. கட்டடம் முடிந்ததும் பொது மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

37—

## சித்த மருத்துவப் பிரிவு தொடங்குதல்

**வினா எண் 14871—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்க, அரசாணை (நிலை) எண் 330, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12-6-1998இல், ஆணையிடப்பட்டுள்ளது.

38—

## பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை முழுநேர மருத்துவமனையாக்குதல்

**வினா எண் 14873—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாக செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அரசாணை எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27-6-1996இல் அரசு ஆணையிட்டுள்ளவாறு அனைத்து வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், சமுதாய நல மையங்களில் மட்டுமே சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான நிலையமாகவோ, சமுதாய நல மையமாகவோ இல்லாததால் 24 மணி நேர சேவையின்கீழ் கொண்டுவர இயலாது; அத்தகைய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.





(ஆ) இவ்வினா எழவில்லை.

39—

## மருத்துவமனைகளில் பிரேத பரிசோதனை

**வினா எண் 14877—திரு. ச. க. வெங்கடேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் பிரேத பரிசோதனை செய்வது தொடர்பான பழைய விதிமுறைகளை மாற்றி, இந்திய மருத்துவக் கவுன்சிலின் ஆலோசனையுடன் தொழில்நுட்ப முன்னேற்றங்களை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு மருத்துவமனைகளில் பிரேத பரிசோதனை செய்வது தொடர்பான தற்போதுள்ள விதிமுறைகளே போதுமானதாக உள்ளதால் மாற்ற வேண்டிய அவசியமில்லை.

40—

## மகப்பேறு மருத்துவமனைக்கு புதிய கட்டடம்

**வினா எண் 14882—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி அரசு மகப்பேறு மருத்துவமனை இடியும் தருவாயில் உள்ளதை அரசு அறியுமா?

[1999 மே 18

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பரமக்குடி அரசு மகப்பேறு மருத்துவமனை கட்டடம் இடிந்து விழும் நிலையில் இல்லை. இக்கட்டடம் பழமை வாய்ந்ததாக உள்ளதால் இம்மருத்துவமனைக்கு நடப்பு நிதியாண்டில் (1998-99) ரூ.2.65 இலட்சம் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இம்மருத்துவமனைக்கு, புதிய கட்டடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. அவசியம் ஏற்பட்டால் நிதிநிலையைக் கருத்திற் கொண்டு, இனிவரும் பகுதி-2 திட்டங்களில் இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**41—**

**மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி**

**வினா எண் 14883—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகரில் இயங்கும் வட்ட தலைமை மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி அளிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**42—**

**மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள்**

**வினா எண் 14887—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதி மற்றும் போதிய மருத்துவக் கருவிகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி செய்யும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. போதுமான உபகரணங்கள் உள்ளன. இம்மருத்துவமனையில் மேலும் புதிய கட்டடம் கட்ட இடவசதி இல்லாத காரணத்தினால் வேதாரண்யம் சாலையில் உள்ள ஸ்ரீ ஔஷதீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான சந்தைப்பேட்டை பகுதியில் சுமார் 5.5 ஏக்கர் நிலத்தை ஒதுக்க முடிவு செய்யப்பட்டு இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**43—**

**தச்சம்பட்டு கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 14902—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தச்சம்பட்டு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், இக்கிராமத்திலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் காட்டாம்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், இவ்வொன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும்,

தச்சம்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளோ, செயற்குறிப்போ இல்லை.

44—

**முழு நேரமும் இயங்கச் செய்யும் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 14903—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தண்டாரம்பட்டு, வாணாபுரம் பழையனூர் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேரமும் இயங்கச் செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு தொகுதியில் வாணாபுரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், தண்டராம்பட்டு பழையனூர் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன. வாணாபுரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாக உள்ளதால் மூன்றாம் கட்டமாக இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும் போது 24 மணி நேர சேவைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தண்டராம்பட்டு, பழையனூர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்பதால் 24 மணி நேரமாக இயங்கச் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

**மல்லிப்பட்டினம் மற்றும் ரெட்டவயலிற்கு ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 14915—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் மற்றும் ரெட்டவயலில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மல்லிப்பட்டினம் மற்றும் ரெட்டவயல் கிராமங்கள் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப தேவையான நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மல்லிப்பட்டினம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும் இக்கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் அழகியநாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், ரெட்டவயல் கிராமத்திலிருந்து முறையே 3 கிலோ மீட்டர் மற்றும் 5 கிலோ மீட்டர் தூரத்தில் பெருமகளூர் மற்றும் ஊமத்தநாடு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும் மல்லிப்பட்டினம் மற்றும் ரெட்ட வயல் ஆகிய கிராமங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

**வினா எண் 14917—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பெருமகளூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பெருமகளூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

47—

**மீனவர்களுக்கு மின் வசதி**

**வினா எண் 15289—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கொள்ளுக்காடு ஊராட்சி, அந்தோணியார்புரம் கிராம மீனவ குடும்பங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அந்தோணியார்புரம் கிராம மீனவக் குடும்பங்களிலிருந்து குடிசைக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் எதுவும் இதுவரையில் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**48—**

### குறைந்த மின்அழுத்தக் குறைபாட்டை நீக்குதல்

**வினா எண் 15695—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி முழுவதும் நிலவும் குறைந்த மின்அழுத்தத்தைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி முழுவதும் நிலவும் குறைந்த மின்அழுத்தத்தைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**49—**

### பள்ளிப்பட்டுக்கு ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 16608—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாராமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பள்ளிப்பட்டி கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும் பள்ளிப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளதாலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**50—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 16609—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் பொட்டனேரி ஊராட்சியிலுள்ள குள்ளமுடையானூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) குள்ளமுடையானூர் கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 3 கிலோ மீட்டர் தூரத்தில் பொட்டனேரி துணை சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், குள்ளமுடையானூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

[1999 மே 18

(ஆ) இவ்வினா எழவில்லை.

51—

**பொம்மியம்பட்டிற்கு ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16615—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், அரங்கனூர் ஊராட்சியிலுள்ள பொம்மியம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பொம்மியம்பட்டி கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 1 கிலோ மீட்டர் தூரத்தில் செம்மனூர் துணை சுகாதார நிலையமும், 13 கிலோ மீட்டர் தூரத்தில் குட்டப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும் பொம்மியம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

52—

**ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குதல்**

**வினா எண் 16617—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், அரங்கனூர் ஊராட்சி, செம்பனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) செம்மனூர் கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான அளவில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், செம்மனூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 12 கிலோ மீட்டர் தூரத்தில் குட்டப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், செம்மனூர் கிராமத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

53—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 16621—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், மல்லியகுந்தத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மல்லியகுந்தம் கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், மல்லியகுந்தம் கிராமத்திலிருந்து 9 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 12 கிலோ மீட்டர் தூரத்தில் வெள்ளாறு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், மல்லியகுந்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[1999 மே 18

54—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 16622—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அவினாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரியாயி பாளையத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக் கோரும் முறையீடு அரசிற்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* பெரியாயி பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக்கோரும் முறையீடு குறித்த மனு ஆரம்ப சுகாதார அமைப்புக் குழு தலைவர் மூலம் பெறப்பட்டுள்ளது. பெரியாயிபாளையம் கிராமம், அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. பெரியாயிபாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 8 கிலோ மீட்டர் தொலைவில் அவினாசி மருத்துவமனை செயல்படுவதாலும், மத்திய அரசின் வரைமுறையின்படி அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், தற்போது தமிழ்நாட்டின் மொத்த கிராமிய மற்றும் மலைவாழ் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளதால், பெரியாயிபாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியகூறுகள் இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

55—

## முழுநேர சுகாதார நிலையமாக உயர்த்துதல்

**வினா எண் 16628—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம் பாவூர்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர சுகாதார நிலையமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பாவூர்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் 1997-98 ஆம் நிதியாண்டில் 24 மணி நேரமும் இயங்கும் முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதற்காக, கூடுதலாக மருத்துவர்கள், துணை செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் கூடுதல் படுக்கை வசதிகள், கட்டட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

56—

## ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்

**வினா எண் 16632—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டம், நடுப்பட்டி, ஊராட்சியிலுள்ள தளவாய்ப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியிலுள்ள தளவாய்ப்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

57—

## வெண்டிலேட்டர் அமைத்தல்

**வினா எண் 16636—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மருத்துமனைக்கு நச்சுப் பொருள் உண்ட நோயாளிகள் அதிகமாக வருவதால் ஒரு வெண்டிலேட்டர் (Ventilator) அமைத்துக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வெண்டிலேட்டர் வசதி உள்ளதால், ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு வரும் நச்சுப் பொருள் உண்ட நோயாளிகள் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற இயலும். எனவே, தற்போதுள்ள நிதி நிலைமையில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் வெண்டிலேட்டர் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

58—

## சவேரியர்பாளையத்தில் மகப்பேறு மருத்துவமனை

**வினா எண் 16642—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் உள்ள சவேரியார்பாளையம் பகுதியில் மகப்பேறு மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



(அ) திண்டுக்கல் நகரில் உள்ள சவேரியார்பாளையம் பகுதியில் மகப்பேறு மருத்துவமனை கட்டும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

59—

## கண் உள்ளாடியை அரசே தயாரித்தல்

**வினா எண் 16645—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கண் மருத்துவமனைகளில் கண்புரை அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கு பொருத்தப்படும் கண் உள்ளாடியை அரசே தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு பொருத்தப்படும் உள்ளாடிகள் (Intra Ocular Lenses) உலக வங்கித் திட்டத்தின்கீழ் மத்திய அரசே நேரடியாக வாங்கி மாநில அரசுக்கு இலவசமாக வழங்குகிறது. இதுவரை 24,000 கண் உள்ளாடிகளை மத்திய அரசே நேரடியாக தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது. இந்நிலையில், இந்த உள்ளாடிகளை மாநில அரசு தயாரிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

60—

## மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்

**வினா எண் 16648—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) பெருந்துறை அரசினர் மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கி வைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பெருந்துறைக்கு அருகிலுள்ள பவானி மற்றும் ஈரோடு அரசு மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு இயங்கி வருவதால் தற்போதைய நிதி நிலையில் பெருந்துறை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**61—**

**படுக்கையினை அதிகப்படுத்துதல்**

**வினா எண் 16651—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள ஆண்கள் பிரிவு படுக்கையினையும், பெண்கள் பிரிவு படுக்கையினையும் அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சீர்காழி அரசு மருத்துவமனையில் தற்போது இருக்கும் படுக்கை வசதி போதுமானதாக உள்ளது. எனினும், தேவையின் அடிப்படையில் வருங்காலங்களில் படுக்கை வசதி அதிகப்படுத்துவது கருத்திற்கொள்ளப் படும்.



1999 மே 18]

**62—**

**அரசு மருத்துவமனையாக மேம்படுத்துதல்**

**வினா எண் 16652—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, மாங்கணாம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா, வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 1998-99-ம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**63—**

**துணை மருத்துவமனை நிறுவுதல்**

**வினா எண் 16658— திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, லிங்கப்பநாயக்கனூரில் துணை மருத்துவமனை நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) உசிலம்பட்டி தொகுதி, லிங்கப்பநாயக்கனூர் கிராமம், திம்மநத்தம் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய கிராமம் ஆகும். லிங்கப்பநாயக்கனூர் கிராம மக்கள் தொகை 899. மத்திய அரசின் வரைமுறையின்படி லிங்கப்பநாயக்கனூரில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

64—

**துணை சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 16660—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஜோதிநாயக்கனூரில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோதிநாயக்கனூர் கிராமம், ராஜாக்கப்பட்டி துணை சுகாதார நிலையத்தைச் சேர்ந்ததாகும். அரசு விதிமுறைகளுக்கு ஏற்பவும், மக்கள் தொகையின்படியும், ராஜாக்கப்பட்டியில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் உள்ளதால், தனியாக ஜோதிநாயக்கனூரில் துணை சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

65—

**மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 16661—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி நிறுவும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

66—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 16677—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொங்குபாளையம் ஊராட்சி, பள்ளிபாளையத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பொங்குபாளையம் ஊராட்சி, பள்ளிப்பாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 3 கி.மீ தொலைவில் பூமலூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், பள்ளிப்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

67—

**சாத்தப்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16680—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சாத்தப்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தப்பாடி கிராமம், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், சாத்தப்பாடி கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 7 கி.மீ. தூரத்தில் புவனகிரி ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கி.மீ. தூரத்தில் கிருஷ்ணாபுரம் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், சாத்தப்பாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**68—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 16684—திரு ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம் முத்தநாயக்கன்பட்டி என்னுமிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி கிராமம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. ஓமலூர் ஒன்றியத்தின்



மக்கள் தொகை அடிப்படையில் போதுமான அளவில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், முத்துநாயக்கன்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 4 கிலோமீட்டர் தூரத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் செயல்படுவதால், முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**69—**

**மருத்துவர், செவிலியர்களுக்கு குடியிருப்புக் கட்டடம்**

**வினா எண் 16689—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சுவாமிமலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர், செவிலியர் ஆகியோருக்கு குடியிருப்புக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், சுவாமி மலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் முன்னாளில் அரசு மருத்தகமாக இருந்து, ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதாகும். பழைய கட்டடத்திலேயே அது செயல்பட்டு வருகிறது. தற்போது குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. குடியிருப்புகள் கட்டுவதற்காக அரசு அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்யும்போது, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் குடியிருப்புகள் கட்டுவது பற்றி, பரிசீலிக்கப்படும்.

**70—**

**ஆரம்ப சுகாதார நிலையமாக்குதல்**

**வினா எண் 16694—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

பாபநாசம் தொகுதி, தியாகசமுத்திரம் ஊராட்சி, புள்ளம்பூதங்குடியில் உள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தி, ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை.—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புள்ளம்பூதங்குடி கிராமம் பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், புள்ளம்பூதங்குடி கிராமத்திலிருந்து 8 கிலோமீட்டர் தூரத்தில் கபிஸ்தலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், புள்ளம்பூதங்குடி கிராமத்தினைச் சார்ந்த தியாகசமுத்திரம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

## தாய்-சேய் நல விடுதியைச் சீரமைத்தல்

**வினா எண் 13695—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, அத்தியூர் ஊராட்சி, குருகூரில் உள்ள தாய் சேய் நல விடுதியைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை.—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குருகூர் துணை சுகாதார மையம் அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்போது அக்கட்டடம் மிகவும் பழுதுபட்டு உள்ளது. இதனால் செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை கட்டட பராமரிப்புக் கோட்டம், தஞ்சாவூர் (மற்றும்) உதவிப் பொறியாளர் அவர்களிடம் பழுது நிவர்த்தி செய்ய மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு கிடைத்தபின் முன்னுரிமை அளித்து, சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1999 மே 18]

72—

## மாவட்ட மருத்துவமனைகளில் சி.டி.ஸ்கேன்

**வினா எண் 16704—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் சி.டி.ஸ்கேன் (C.T.SCAN) கருவி அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அதனை வட்ட மருத்துவமனையளவில் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை.—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சி.டி. ஸ்கேன் கருவி திருச்சி மற்றும் வேலூர் மாவட்ட அரசினர் மருத்துவமனைகளில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு, பொது மக்களுக்குப் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும், நடப்பு நிதியாண்டில் (1998-99) இராமநாதபுரம், கடலூர், ஈரோடு, திண்டுக்கல், நாகப்பட்டினம், நாகர்கோவில், திருவண்ணாமலை, விழுப்புரம், உதகமண்டலம் ஆகிய மாவட்ட அரசினர் மருத்துவமனைகளுக்கும் சி.டி.ஸ்கேன் வசதி அளிக்கப்படும்.

(ஆ) அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கும் சி.டி.ஸ்கேன் வசதியளிக்கப்படாத நிலையில் வட்ட அரசு மருத்துவமனையளவில் சி.டி.ஸ்கேன் கருவி விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

## ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்

**வினா எண் 16707—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி 32 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் அவசியம் ஏதும் தற்போது இல்லை.

74—

**மருத்துவமனைக்கு மருத்துவர்கள், உதவியாளர்கள்**

**வினா எண் 16713—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களும், உதவியாளர்களும் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிறைவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனை, எடப்பாடியில் போதுமான மருத்துவர்களும் மற்றும் உதவியாளர்களும் இருக்கின்றனர்.

75—

**ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாக்குதல்**

**வினா எண் 16716—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எடப்பாடி தொகுதி, சித்தூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, சித்தூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக்க தற்போது கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

76—

**புற்றுநோய் அறுவை அரங்கம் தனிப் பகுதியில் அமைத்தல்**

**வினா எண் 16740—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், அரசு மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை அரங்கம் தனிப்பகுதியில் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சமீபத்தில்தான் நாமக்கல் அரசு மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாக மாற்றப்பட்டுள்ளது. எனவே புற்றுநோய் அறுவை அரங்கம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

**மகப்பேறு மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 16743—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் வேம்பனேரியில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் வேம்பனேரியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், மத்திய அரசின் வரைமுறையின்படி மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் வேம்பனேரி கிராமத்தில் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

78—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18486—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், குட்டப்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், குட்டப்பட்டியில் ஏற்கெனவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் குட்டப்பட்டி கிராமத்தில் அரசு மருந்தகமாக இயங்கி வந்த நிலையத்தை ஆரம்ப சுகாதார



1999 மே 18]

நிலையமாக மாற்றப்பட்டு, அதே கட்டடத்தில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

79—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18487—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சியில் அரசமரத்தூர் என்னுமிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசமரத்தூர் கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. அரசமரத்தூர் கிராமம், வெள்ளார் துணை சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், அரசமரத்தூர் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் வெள்ளார் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், அரசமரத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

80—

**காமனேரியில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18489—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கிழக்கு ஒலிப்பட்டி ஊராட்சி, காமனேரி என்னுமிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) காமனேரி கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான அளவில் 3 (மூன்று) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், காமனேரி கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் சிந்தாமணியூர் துணை சுகாதார நிலையமும், 9 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், காமனேரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**81—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 18492—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அரியாம்பட்டி ஊராட்சியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



1999 மே 18]

(அ) அரியாம்பட்டி கிராமம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான அளவில் 3 (மூன்று) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், அரியாம்பட்டியிலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 2 கிலோ மீட்டர் தூரத்தில் ஜலகண்டபுரம் அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், அரியாம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**82—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 18493—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் வெள்ளாார் ஊராட்சி, எருமைப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எருமைப்பட்டி கிராமம், சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், எருமைப்பட்டியில் துணை சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் வெள்ளார் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், மேற்படி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

83—

**பொட்டனேரியில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18496—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பொட்டனேரி கிராமம், சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. மேச்சேரி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் 3 (மூன்று) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தூரத்தில் குட்டப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 15 கிலோ மீட்டர் தூரத்தில் மேட்டூர் அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், பொட்டனேரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

84—

**செம்மனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18497—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் ஊராட்சியிலுள்ள செம்மனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், செம்மனூர் கிராமம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் 3 (மூன்று) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், செம்மனூரில் துணை சுகாதார நிலையமும், 9 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும் செம்மனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

85—

**பொம்மியம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18498—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் ஊராட்சியிலுள்ள பொம்மியம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பொம்மியம்பட்டி கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. பொம்மியம்பட்டி கிராமம் சார்ந்த மேச்சேரி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் போதுமான அளவில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 11 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 15 கிலோ மீட்டர் தூரத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், பொம்மியம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[1999 மே 18

**86—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 18499—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரங்கனூர் கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப 3 (மூன்று) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், அரங்கனூர் கிராமத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 17 கிலோ மீட்டர் தூரத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், அரங்கனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**87—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதலாக மருந்து வழங்குதல்

**வினா எண் 18501—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதலாக மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1998-99) மருந்துகள் வாங்கிட ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை கடந்த நிதியாண்டில் (1997-98) ஒதுக்கப்பட்ட தொகையைவிட ரூ. 40,000 கூடுதலானதாகும்.

**88—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 18503—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதுமான கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேலும் கூடுதலாகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் ஏதுமில்லை. அரசுக் கட்டடத்தில் போதுமான வசதியுடன் அது செயல்பட்டு வருவதால், மேலும் கூடுதல் கட்டடங்கள் கட்ட அவசியம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[1999 மே 18

89—

## கம்மம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 18504—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி, கம்மம்பட்டி என்னுமிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம், கம்மம்பட்டி கிராமம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. கம்மம்பட்டி கிராம மக்கள் தொகை 857. மேச்சேரி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் வெள்ளார் ஆரம்ப சுகாதார நிலையமும், 18 கிலோ மீட்டர் தூரத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும் கம்மம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

90—

## ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்

**வினா எண் 18721—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சங்கரனார் குடிகாடு ஊராட்சியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) சங்கரனார் குடிகாடு ஊராட்சி, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியத்தில் உள்ளது. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் தேவையான அளவு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் பாப்பாநாடு ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தூரத்தில் சில்லாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில், சங்கரனார் குடிகாடு ஊராட்சியில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

91—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 18722—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நடுவூர் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) நடுவூர் கிராமம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், நடுவூர் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்தில் வடக்கூர் மற்றும் காசாநாடு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், நடுவூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

92—

**காசாநாடு கோவிலூரில் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18723—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், காட்டுக்குறிச்சி ஊராட்சி, காசாநாடு கோவிலூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) காசாநாடு கோவிலூர் கிராமம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் கூடுதலாகவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், காசாநாடு கோவிலூரில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும் 2 கிலோ மீட்டர் தூரத்தில் காசாநாடு புதூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 15 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரத்தநாடு அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், காசாநாடு கோவிலூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

93—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 18725—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் ஊராட்சி ஒன்றியம் உலகம்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) உலகம்பட்டு கிராமம், சேத்பட் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. சேத்பட் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை அடிப்படையில் கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், உலகம்பட்டு கிராமத்திலிருந்து 4 கிலோமீட்டர் தூரத்தில் பெரிய கொழப்பலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோமீட்டர் தூரத்தில் சேத்பட் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், உலகம்பட்டு கிராமத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

94—

**அரசு மருத்துவமனையில் மருத்துவர் மற்றும் வசதிகள் ஏற்படுத்துதல்**

**வினா எண் 18757—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் (திருவாரூர் மாவட்டம்) அரசு மருத்துவமனையில் தேவையான மருத்துவர் மற்றும் வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீடாமங்கலம் அரசு மருத்துவமனையில் ஒரு மருத்துவர் பணியிடம்தான் உள்ளது. அதில் மருத்துவர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். நிதிநிலைமையினைக் கருத்திற்கொண்டு அம்மருத்துவ மனைக்குத் தேவையான வசதிகள் செய்திடவும் பணியாளர்களை நியமித்திடவும் அரசு கருத்தில் கொள்ளும்.

95—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 19452—திரு. டி. அமரமூர்த்தி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரியலூர் தொகுதியில் சாத்தமங்கலம் பகுதியில் துணை மின்நிலையம் 110 கே.வி. நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் ஒரு பகுதி வேலைகள் தொடங்கிடத் திட்டமிடப்பட்டு ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

96—

**விளம்பரம் மூலம் அறிவுறுத்தல்**

**வினா எண் 19463—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கவனக்குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்க பொதுமக்களுக்கு விளம்பரம் மூலம் அறிவுறுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கவனக்குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்க அரசு தலைமை மின் ஆய்வாளர், மின் உரிமம் வழங்கும் வாரியம் (ELB) மூலம் சில நாளேடுகளில் விளம்பரம் செய்துள்ளார்.



(ஆ) அரசு தலைமை மின் ஆய்வாளர், மின் உரிமம் வழங்கும் வாரியம் (ELB) மூலம் மழைக் காலங்களில் மின் விபத்தைத் தடுப்பதற்காக பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்ச் செய்தி விளம்பரத் துறை மூலமும் மற்றும் இந்து, தினத்தந்தி, மாலை முரசு, தினத்தூது போன்ற நாளேடுகளில் பத்திரிக்கை செய்தியாகவும் பிரசுரித்துள்ளார்.

97—

**நகர்ப்புற துணை மின் நிலையமாக மாற்றுதல்**

**வினா எண் 19475—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், கருப்பூர் துணை மின் நிலையம் கிராமப்புற துணை மின் நிலையமாக இருப்பதை மாற்றி நகர்ப்புற துணை மின் நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

98—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 19477—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பாபநாசம் தொகுதி, ஆதனூரில் ஒரு துணை மின் நிலையம் (230 கே.வி.) அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, ஆதனூரில் ஒரு துணை மின் நிலையம் (230 கே.வி.) அமைக்கத் திட்டம் ஏதும் இல்லை.

[1999 மே 18

99—

**மின் உற்பத்தித் திட்டம்**

**வினா எண் 19481—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1994-95 ஆம் ஆண்டுவாக்கில் வெளிநாட்டு உதவியோடு நிலக்கோட்டை அருகில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்ததா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தைச் செயல்படுத்தாததற்குக் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நிலக்கோட்டையில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 2,000 மெகாவாட் திறன் கொண்ட ஒரு அனல் மின் நிலையத்தை நிறுவுவதற்கானச் சாத்தியக்கூறு 1994-95-இல் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆய்வில் இருந்தது.

(ஆ) தேவையான நீர் கிடைக்காததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

100—

**தண்ணீர் மற்றும் மின் வசதி செய்தல்**

**வினா எண் 19486—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டையில் உள்ள சலவைத்துறைக்குப் போதுமான அளவு தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



1999 மே 18]

(அ) மற்றும் (ஆ) மின் இணைப்பு 30-6-1998 அன்று கொடுக்கப்பட்டு பழுதடைந்திருந்த நீர் இறைவை மோட்டாரும் சீர்செய்யப்பட்டு 1-8-1998 முதல் இயங்கி வருகிறது.

101—

**கட்டுமானச் செங்கல் தயாரிப்பு**

**வினா எண் 19488—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனல் மின் நிலையங்களில் வீணாகும் எரிசாம்பலைக் கொண்டு கட்டுமானச் செங்கல் தயாரிப்பில் எத்தனை நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன?

(ஆ) ஆம் எனில், அவை யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொத்தம் பதினாறு நிறுவனங்கள், அனல் மின் நிலையங்களில் வீணாகும் எரிசாம்பலைக் கொண்டு கட்டுமானச் செங்கல் பிளாக்குகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன.

அவை பின்வருமாறு:

1. டுயல் ஃபேப்ஸ், அடையாறு, சென்னை-20.
2. இராஜேந்திரன் கான்கிரீட் ப்ளாக்ஸ், தி.நகர், சென்னை-17.
3. இலக்ஷ்மி கார்ப்பரேஷன், மைலாப்பூர், சென்னை-4.
4. காஞ்சனா ஸ்டருக்சுரல்ஸ் (பி) லிமிடெட், சென்னை-28.
5. ப்ரி ஃபேப் ஃபால்ஜி ப்ரிக்ஸ், மகாலிங்கபுரம், சென்னை-34.
6. ஸ்டாண்டர்டு பில்டிங் இண்டஸ்ட்ரீஸ், சென்னை-15.
7. ஏசியன் பிரிக் ஓர்க்ஸ், மதுரை.
8. டுயல் ஸ்டருக்சுரல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், நேரு நகர், அடையாறு.

9. மாருதி இண்டஸ்ட்ரீஸ், சிந்தாரிப்பேட்டை, சென்னை-2.

10. ஹைதராபாத் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், அசோக் நகர்.

11. அம்மன் செராமிக்ஸ், ஈரோடு.

12. ஜே.ஜே. ஹைடக் பிரிக்ஸ், திருப்பூர்.

13. பாலு ஹாலோ பிரிக்ஸ், ஈரோடு.

14. ராதா லைம் ஸ்டோன், கோயம்புத்தூர்.

15. வெங்கடேஸ்வரா ஹாலோ பிரிக்ஸ், அதியலூர்.

16. விசாகா இண்டஸ்ட்ரீஸ், பரமத்தி வேலூர், சேலம் மாவட்டம்.

இவை தவிர தமிழ்நாடு மின்சார வாரியம், மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னையில் உள்ள அனல் மின் நிலையங்களில் எரி சாம்பலைக் கொண்டு கட்டுமானச் செங்கல் தயாரித்து வருகிறது. அவை வாரியத்தின் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**102—**

**மின் கட்டணத் தொகை வசூலித்தல்**

**வினா எண் 19497—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில்களுக்கு மட்டும் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு வீட்டு உபயோகத்திற்கு வசூலிக்கப்படும் மின் கட்டணத் தொகையைப் போலவே மின் கட்டணத் தொகை வசூலிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வீட்டு உபயோகத்துக்குண்டான மின் கட்டண விகிதத்தில் கோயில்களின் மின் உபயோகத்தின் மீதும் மின் கட்டணம் வசூலிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.



**103—**

**மின்னழுத்தத்தைச் சரிசெய்தல்**

**வினா எண் 19498—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதியில் உவர்புளியங்குளம் சாலை இலுப்பைக் குளம் பகுதியில் குறைவான மின்னழுத்தம் காரணமாக மின் விளக்குகள் எரிவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிலைமையைச் சீராக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அருப்புக்கோட்டை தொகுதியில் உவர் புளியங்குளம் சாலை இலுப்பைக் குளம் பகுதியில் மின்னழுத்தக் குறைவு சரிசெய்யப்பட்டு தற்போது எல்லா விளக்குகளும் எரிகின்றன.

**104—**

**அரசு மருத்துவமனையில் பல் சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 19623—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவ மனையில் பல் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தி அதற்கு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1999 மே 18

**105—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 21243—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெருமகளூர் பகுதியில் குறைவான மின் அழுத்தம் ஏற்படுவதால் அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**106—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 22302—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன் கோவில் ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மாரியம்மன் கோவில் கிராமம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. மாரியம்மன் கோவில் கிராம மக்கள்தொகை 6,247. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. மத்திய அரசின் வரையறையின்படி மாரியம்மன் கோவில் கிராமம் சார்ந்த தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கு ஏற்ப ஆறு (6) ஆரம்ப சுகாதார



1999 மே 18]

நிலையங்கள் செயல்படுவதாலும், மாரியம்மன் கோவில் கிராமத்திற்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் இராஜா மிராசுதார் அரசு மருத்துவமனை உள்ளதாலும் மாரியம்மன் கோவில் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**107—**

**மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுதல்**

**வினா எண் 22304—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம் நெய்வேலி மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நெய்வேலி தெற்கு கிராமத்தில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய மருந்தகம், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கு ஏற்ப தகுதிவாய்ந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக நிலை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் திருவோணம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப போதுமான அளவில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் நெய்வேலி தெற்கு ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்தச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**108—**

**ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குதல்**

**வினா எண் 22496—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) செங்கம் தொகுதி, பாச்சல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பாச்சல் கிராமம், செங்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. பாச்சல் கிராம மக்கள்தொகை 1,081. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இது மேல்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்தது. செங்கம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை அடிப்படையில் ஆறு (6) ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும் பாச்சல் கிராமத்திற்கு 8 கிலோமீட்டர் தொலைவில் மேல்பென்னாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 15 கிலோமீட்டர் தொலைவில் புதுப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும், 17 கிலோமீட்டர் தொலைவில் செங்கம் அரசு மருத்துவமனையும், 18 கிலோமீட்டர் தொலைவில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. செங்கம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கு ஏற்ப, போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் தற்போது செயல்படுவதால் பாச்சல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**109—**

### மின் பகிர்மான வட்டம்

**வினா எண் 22651—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட மின் பகிர்மான வட்டம் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**110—**

### அனல் மின் நிலையம் தொடங்குதல் விவரம்

**வினா எண் 22656—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனல்மின் நிலையம் தொடங்குவதற்குரிய தரமான நிலக்கரி வளம் தமிழ்நாட்டின் தஞ்சைப் பகுதியில் இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். மன்னார்குடி பகுதியில் கிடைக்கும் அதிக அளவிலான பழுப்பு நிலக்கரி படிமங்களை மின் உற்பத்திக்காகப் பயன்படுத்த முடியும். மன்னார்குடியில் இதுவரை நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் 570 சதுர கி.மீ. பரப்பில் 19,500 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி இருப்பது தெரிய வந்துள்ளது. இதை உபயோகப்படுத்தி சுமார் 8000 மெ.வா. திறன் கொண்ட ஒரு மிகப் பெரிய அளவிலான மின் திட்டம் நிறுவலாம்.

[1999 மே 18

111—

**தமிழ் மொழியிலுள்ள சித்த மருத்துவக் குறிப்புகளை மொழியாக்கம் செய்தல்**

**வினா எண் 23394—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மொழியிலுள்ள சித்த மருத்துவக் குறிப்புகளை ஆங்கில மொழியாக்கம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சித்த மருத்துவக் குறிப்புகள் அடங்கிய தமிழ் மொழியிலுள்ள 10 புத்தகங்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) மொழியாக்கம் செய்யப்பட்ட சித்த மருத்துவப் புத்தகங்களின் பெயர்கள் பின்வருமாறு:

1. சித்த மருத்துவாங்கச் சுருக்கம்
2. நோயில்லா நெறி
3. நஞ்சு முறிவு நூல்
4. தேரையர் தைல வருக்கச் சுருக்கம்
5. தேரையர் [illegible]கா கரிசல்
6. நோய் நாடல் நோய் முதனாடல் பாகம்-1
7. சித்த மருத்துவம் (சிறப்பு)
8. அனுபோக வைத்திய நவநீதம் - பாகம்-4
9. அனுபோக வைத்திய நவநீதம் - பாகம்-5
10. குணபாடம் (தாது சீவ வகுப்பு)



1999 மே 18]

112—

**ஆக்கிரமிப்பு அகற்றுதல்**

**வினா எண் 1645—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், சைதை வட்டம் 124, ராஜகீழ்ப்பாக்கம் கிராமத்தில் புல எண் 38பி, 38ஏ/1பி-ல் உள்ள ஆக்கிரமிப்பை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன். வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புல எண் 38ஏ/பி இல்லை. புல எண் 38/பி-இல் ஆக்கிரமணங்கள் உள்ளன. ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

113—

**பணி நியமனம்**

**வினா எண் 1962—திரு. டி. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில அளவைத் துறையில் பணியாற்றும் தொகுப்பூதிய பணியாளர்களில் அரசு ஆணைப்படி எத்தனை பேர் இதர துறைகளில் பணி நியமனம் செய்யப்பட்டார்கள்?

(ஆ) எஞ்சியவர்களுக்கு எப்போது பணி நியமனம் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நில அளவைத் துறையில் பணியாற்றும் தொகுப்பூதிய பணியாளர்களில் சுமார் 3051 நபர்கள் இதர துறைகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(ஆ) எஞ்சியவர்களுக்குப் பணி நியமனம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**114—**

**பல்கலைக்கழக இடத்தில் அரசு அலுவலகங்கள் அமைத்தல்**

**வினா எண் 6062—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம், கடப்பேரியில் உபயோகப்படாமல் உள்ள எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்திற்கு என்றுள்ள இடத்தை, நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம், பதிவாளர் அலுவலகம் மற்றும் அரசு கருவூலம் அமைக்க எடுத்துக்கொள்ளும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், புல எண் 138 மற்றும் 139/2-ல் டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 22.24 ஏக்கர் நிலத்தில் 14.78 ஏக்கர் நிலம் மத்திய அரசின் சித்தா ஆராய்ச்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 7.46 ஏக்கர் நிலம் மருத்துவமனை விரிவாக்கத்திற்குத் தேவைப்படும் என்பதால், தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்று இடம் தேர்வு செய்யக் கோரப்பட்டது. அதன்படி கடப்பேரி கிராமம், புல எண் 141/3-ல் 0.30.0 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, நில மாற்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. நீதிமன்றம், பதிவாளர் அலுவலகம் மற்றும் அரசு கருவூலம் அமைக்க மேற்சொன்ன இடத்தை எடுத்துக்கொள்ளும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.





**115—**

**மனைப்பட்டா வழங்குதல்**

**வினா எண் 6209—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சி. கொத்தங்குடி கிராமத்தில் (சர்வே எண் 42/1) வசிக்கும் மக்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சி. கொத்தங்குடி கிராமம் நில அளவு எண் 42/1-ல் கண்டுள்ள நிலம் ஒப்படைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமையால் பட்டா வழங்க இயலாது.

**116—**

**பழத்தோட்டம் ஆக்கிரமிப்பு மீட்டல்**

**வினா எண் 7044—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சியில் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பழத்தோட்டத்தை மீட்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், செட்டிமாங்குறிச்சி கிராமத்தில் தோப்பு புறம்போக்கு ச.எண். 190/2-ல் உள்ள 1.72.5 ஹெக்டேர் நிலத்தில் 1.01.0 ஹெக்டேர் நிலத்தினை முன்னாள் இராணுவத்தினர் திரு நா. இராஜேந்திரன் என்பவருக்கு நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டு ஒப்படை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

[1999 மே 18

117—

### பட்டா வழங்குதல்

**வினா எண் 7739—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, முள்ளிப்பள்ளம் கிராமம், வடகாட்டுப் பட்டியில் வனத் துறை இடத்தில் திருமங்கலம் பிரதான கால்வாயின் கீழ்ப்புறத்தில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஒதுக்கப்பட்ட காடுகள் என பாகுபாடு செய்யப்பட்ட இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

118—

### பட்டா வழங்குதல்

**வினா எண் 10002—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதிக்கு உட்பட்ட ஓடத்துறை கிராமத்தில் பாலம்பாளையத்திலும், குறிச்சி கிராமம், கருங்கன்னி காட்டுக் கொட்டாயிலும் 30 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஓடத்துறை கிராமம், பாலம்பாளையத்திலும், குறிச்சி கிராமம், கருங்கன்னி காட்டுக் கொட்டாயிலும் தனியாருக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருந்து வருபவர்களுக்கு " உரிமை துறத்தல்" செய்தும், நில எடுப்பு மூலமாகவும் பட்டா வழங்க மாவட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1999 மே 18]

119—

### பட்டா வழங்குதல்

**வினா எண் 12482—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தீவட்டிப்பட்டி பஞ்சாயத்து, களக்காடு 6-வது வார்டு பகுதியில் உள்ள 60 குடும்பங்களுக்கு பட்டா வழங்க நில அளவை முடித்தும் காலதாமதம் ஆகிறதால் உடனடியாகப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசின் ஆய்வில் இல்லை.

120—

### குடியிருப்பு மனைப் பட்டா

**வினா எண் 12925—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, தளிபேரூராட்சி, முள்ளுப்பட்டியில் குடியிருந்துவரும் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டா கேட்டு அரசுக்கு முறையீடு செய்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[1999 மே 18

121—

**புறம்போக்கை நத்தமாக மாற்றி பட்டா வழங்குதல்**

**வினா எண் 13166—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், 15, வேலம்பாளையம் கிராமம், க.ச. 555 நெ. காலை மேய்ச்சல் தரை புறம்போக்கை நத்தமாக மாற்றி பட்டா வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் ஆய்வில் இல்லை.

122—

**பாம்புக்கடியால் இறந்த குடும்பங்களுக்கு அரசு உதவித்தொகை**

**வினா எண் 13747—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதல்வர் நிதியில் இருந்து பாம்புக்கடியால் இறந்த குடும்பங்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு பாம்புக்கடியால் இறந்த ஐந்து நபர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ. 70,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



1999 மே 18]

123—

**துணை தலைநகரம் உருவாக்குதல்**

**வினா எண் 13867—திரு. ச. அழகிரி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகரின் நெரிசலைக் குறைக்கும்வண்ணம், அரசு இயக்குநரகங்களின் அலுவலகங்கள் அனைத்தையும், மாமண்டூர் அல்லது திருப்பெரும்புதூரில் அமைத்து, அதை ஒட்டி துணை தலைநகரம் ஒன்றை உருவாக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இத்தகைய கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

124—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 14348—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் வட்ட ஆட்சியர்கள் காலதாமதப்படுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிர்வாகக் காரணங்களினால் காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன பட்டா வழங்க ஏதுவாக நிலமிருப்பின், வட்ட அளவில் மூன்று மாதத்திற்குள் வழங்கவேண்டும் என மக்கள் சாசனத்தில் காலவரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் நில மதிப்பு அதிகார வரம்பும் உயர்த்தப்பட்டுள்ளதால் தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

[1999 மே 18

**125—**

### நில அளவைப் பதிவேடு துறையை மாற்றும் விவரம்

**வினா எண் 14482—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில அளவைப் பதிவேடு துறையை வருவாய் நிர்வாகத்திலிருந்து பிரித்து தன்னாட்சித் துறையாகவும், தனி இயக்குநர் நியமிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**126—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 14926—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், இலக்கியம்பட்டி ஊராட்சியில் உள்ள அண்ணா நகரில் வசித்துவரும் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டி ஊராட்சி, விருபாட்சி கிராமம், அண்ணாநகரில் புல எண்கள் முறையே 339/69 மற்றும் 372/3-இல் உள்ள வாரி புறம்போக்கு மற்றும் பொதுப்பணித் துறை புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பான பொருள் மாவட்ட அளவில் ஆய்வில் உள்ளது.



1999 மே 18]

**127—**

### தனி வட்டமாக அமைத்தல்

**வினா எண் 14927—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து காரியாப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டமாக அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து காரியாப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் உருவாக்கும் கருத்துரு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

**128—**

### தனி வட்டமாக்கும் திட்டம்

**வினா எண் 14934—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தைத் தனி வட்டமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1999 மே 18

**129—**

**செங்கம் வட்டத்தைப் பிரித்தல்**

**வினா எண் 15027—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தை இரண்டு வட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தை இரண்டு வட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 15028—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு மலைப்பகுதியில் அரசு புறம்போக்கு நிலங்களில் 50 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு வட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் 50 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டியவர்கள் யாரும் இல்லை.



1999 மே 18]

**131—**

**தொலைபேசி மையம் அமைத்தல்**

**வினா எண் 15035—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலத்தில் தொலைபேசி மையம் அமைக்க நில ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நில ஒதுக்கீடு செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தாரமங்கலத்தில் தொலைபேசி மையம் அமைக்க நில ஒதுக்கீடு செய்ய நிலமாற்ற முன்மொழிவுகள் மாவட்ட வருவாய் அலுவலரால் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையரிடமிருந்து முறையான நிலமாற்ற முன்மொழிவுகள், அவரது பரிந்துரை மற்றும் ஆவணங்களுடன் கிடைக்கப்பெற்றபின் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

**132—**

**தனி வட்டமாக அறிவித்தல்**

**வினா எண் 16042—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையைத் தனி வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எபபோது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

[1999 மே 18

**133—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 15155—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புறங்களில் அரசு நிலங்களில் வீடு கட்டி பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களுக்குப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகர்ப்புறங்களில் தடையாணை ஆட்சேபணை இல்லாத இடமாக இருந்தால் பட்டா கோரி விண்ணப்பிப்பவர்களின் பொருளாதார நிலையை ஆராய்ந்து தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. இதற்குக் காலவரம்பு எதுவும் இல்லை.

**134—**

**கருவூலம் அமைத்தல்**

**வினா எண் 15942—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையை மையமாக வைத்து வட்ட அலுவலகம் செயல்படுத்த, சுரண்டையில் கருவூலம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்தகைய கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 மே 18]

**135—**

**ஏழைகளுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 15954—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நெறிப்பறைச்சல் ஊராட்சி, நல்லாத்துப் பாளையத்தின் தென்புறம் நல்லாற்றிற்கு வடப்புறத்திலுள்ள ஒரு ஏக்கர் புறம்போக்கு நிலத்தை வீடற்ற ஏழைகளுக்குப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்நிலத்தில் ஆக்கிரமிப்புகள் இல்லை. நல்லாற்றில் நீர் வரும்போது மிகுந்த பாதிப்பு ஏற்படும் என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**136—**

**தனி வட்டமாக்குதல்**

**வினா எண் 15967—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திலிருந்து தேவூர் பிர்க்காவைப் பிரித்து, கொரபாளையத்துடன் இணைத்து, அதை தனி வட்டமாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

[1999 மே 18

137—

### நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் விவசாயம்

**வினா எண் 15997—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தினால் இதுவரை அரசுக்குக் கிடைத்துள்ள நிலத்தின் பரப்பு என்ன?

(ஆ) அதற்கு செலவாகியுள்ள பணம் எவ்வளவு?

(இ) இவற்றில் நேரடியாக விவசாயம் செய்கிறார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) 2038.57.09 ஹெக்டேர் (சட்டம் அமல்படுத்தப்பட்ட நாளிலிருந்து 28-2-1999 வரை)

(ஆ) ரூ.116.24 இலட்சம் (31-3-1998 வரை)

(இ) உபரி காலிநிலமாகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் யாவும் நகர்ப்புற நிலங்கள் என்பதால் அவற்றில் விவசாயம் செய்யும் வினா எழவில்லை.

138—

### நகர்ப்புற நிலவரியினால் கிடைக்கும் வருவாய்

**வினா எண் 15999—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் நகர்ப்புற நிலவரியினால் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

(ஆ) அதை வசூலிக்க ஆகும் செலவு எவ்வளவு?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நகர்ப்புற நிலவரியினால் 1997-98 ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.1095.89 இலட்சம் ஆகும்.

(ஆ) அதை வசூலிக்க ரூ. 78.38 இலட்சம் செலவு ஆகியது.

139—

### வேளாண்மை வருமான வரி மூலம் வருமானம்

**வினா எண் 16002—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை வருமான வரி மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

(ஆ) அதைப் பெற அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மை வருமான வரி மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசுக்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் பின்வருமாறு:

| வரிசை எண் | ஆண்டு | ரூபாய் (கோடியில்) |
|---|---|---|
| 1 | 1993-94 | 17.28 |
| 2. | 1994-95 | 16.94 |
| 3. | 1995-96 | 20.10 |
| 4. | 1996-97 | 14.75 |
| 5. | 1997-98 | 38.68 |

[1999 மே 18

(ஆ) வேளாண்மை வருமான வரி வசூல் செய்வதற்குக் கடந்த ஐந்து ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகைகளின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | ஆண்டு | ரூபாய் (கோடியில்) |
|---|---|---|
| 1. | 1993-94 | 0.99 |
| 2. | 1994-95 | 1.05 |
| 3. | 1995-96 | 1.19 |
| 4. | 1996-97 | 1.38 |
| 5. | 1997-98 | 1.38 |

**140—**

### குடும்பங்களுக்குப் பட்டா

**வினா எண் 16009—திரு. த. நடராஜன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பகுதியில் உள்ள நரசிங்கராயன்பேட்டையில் வசித்து வரும் 367 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடியிருப்போருக்கே அந்த இடத்தை மறுபடியும் அரசு வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி வட்டம், நரசிங்கராயன்பேட்டை கிராம ரி.ச. 2/1-இல் 1.11.5 ஹெக்டேர் மற்றும் ரி.ச. 7/1-இல் 1.49.5 ஹெக்டேர் ஆக மொத்தம் 2.61.0 ஹெக்டேர் நிலம் 'நில உச்சவரம்பு நிலம்' என வருவாய்க் கணக்கில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி புலங்களில் வசித்து வரும் 367 குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை.



1999 மே 18]

**141—**

### வட்டம் உருவாக்குதல்

**வினா எண் 16791—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாட்றாம்பள்ளி வட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**142—**

### வீட்டுமனைப்பட்டா வழங்கல்

**வினா எண் 17547—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், புதுப்பேட்டையில் மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள ஆற்றுப் புறம்போக்கில் 25 ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களுக்குக் வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்க அரசின் தடையாணை உள்ளது. எனினும் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்கள் பற்றிய உண்மை நிலையைக் கண்டறிய மற்றும் அவற்றை ஒப்படை செய்வது குறித்து தகுந்த பரிந்துரைகளைச் செய்ய சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அக்குழுவின் பரிந்துரை பெறப்பட்டு நீர்வழிப் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள், சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரின் கருத்தினைப் பெற்று ஆய்வு செய்யப்படும்.

**143—**

### பட்டா தருதல்

**வினா எண் 17552—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டா தர அரசு நிர்ணயித்த பணம் செலுத்துபவர்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து பட்டா தர அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**144—**

### புதிய வட்டம் உருவாக்குதல்

**வினா எண் 17558—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



**145—**

### பட்டா வழங்குதல்

**வினா எண் 17561—திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் கிழக்குத் தொகுதியில் உள்ள காமராசபுரம், கீரைத்துறை, என்.எம். ஆர். எஸ். புரம் பகுதிகளில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு இடங்களில் வீடு கட்டிக் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகரத்தில் கிழக்குத் தொகுதியில் உள்ள காமராசபுரம், கீரைத்துறை, என்.எம்.ஆர்.எஸ். புரம் பகுதிகளில் நீர்வழிப் புறம்போக்குகள், மழைக் காலங்களில் வெள்ளத்தால் பாதிககப்படும் பகுதிகள் என்பதால் பட்டா வழங்க இயலாது.

**146—**

### ஊராட்சி ஒன்றியத்தை வட்டத்துடன் இணைத்தல்

**வினா எண் 17566—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திலுள்ள மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தை எடப்பாடி வட்டத்துடன் இணைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திலுள்ள மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தை எடப்பாடி வட்டத்துடன் இணைப்பது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

147—

### தலி வட்டமாக உருவாக்குதல்

**வினா எண் 17585—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்தை இரண்டாகப் பிரித்து மகுடஞ்சாவடியை வட்டமாக உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை

148—

### தேவூரை வட்டத் தலைமையாக்குதல்

**வினா எண் 17596—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் சங்ககிரி தொகுதியில் உள்ள தேவூரைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டத் தலைமையாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதியில் உள்ள தேவூரைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டத் தலைமையாக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

149—

### வட்டத் தலைமையாக மாற்றுதல்

**வினா எண் 17597—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியை வட்டத் தலைமையாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

150—

### குமாரபாளையம் வட்டத் தலைமையாக மாற்றம்

**வினா எண் 17598—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தை வட்டத் தலைமையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தை வட்டத் தலைமையாக மாற்றும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

151—

### நிலப் பட்டா வேண்டி விண்ணப்பித்தோர் விவரம்

**வினா எண் 17633—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்ய, நிலமற்ற ஏழை விவசாயிகள், நிலப் பட்டா வேண்டி எவ்வளவு பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்?

(ஆ) அதில் எத்தனைப் பேருக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது? இன்னும் எத்தனைப் பேருக்கு வழங்கப்பட வேண்டும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்ய 529 நபர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.

(ஆ) அதில் 507 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 22 நபர்களுக்குப் பட்டா வழங்கப்படவேண்டும். இதில் 15 மனுக்களும் விசாரணை மற்றும் இதர நடவடிக்கைகளுக்காக நிலுவையில் உள்ளன. விசாரணைக்குப்பின் தகுதியிருப்பின் நிலப் பட்டா வழங்கப்படும். மீதி 7 மனுக்களின் மனுதாரர்கள் ஒப்படை கேட்ட நிலம் அரசால் தடை செய்யப்பட்ட நிலமாக உள்ளதாலும், மற்றும் ஊராட்சி மன்றங்கள் மற்றும் மக்கள் ஆட்சேபணை செய்ததாலும், இந்த 7 நபர்களுக்கு நிலப் பட்டா வழங்கப்படவில்லை.

**152—**

**இயற்கை சீற்றத்தினால் பாதிப்புக்குள்ளாவதைச் சமாளிக்க நிவாரண உதவி**

**வினா எண் 17637—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கை சீற்றத்தினால் நாடு பாதிப்புக்குள்ளாவதைச் சமாளிக்க நிரந்தரமாக ஒரு நிதியை ஏற்படுத்தி அதன்மூலம் நிவாரண உதவிகள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் துயர்துடைக்க, இயற்கை சீற்ற நிவாரண நிதி என்ற நிதியமைப்பை அரசு ஏற்கெனவே ஏற்படுத்தி உள்ளதால் மீண்டும் ஒரு நிரந்தர நிதி ஏற்படுத்தும் அவசியம் இல்லை.

**153—**

**நிலம் கையகப்படுத்துதல்**

**வினா எண் 18088—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகம், துணை கருவூலம், நீதிமன்றங்கள், கிளைச் சிறைச்சாலை மற்ற அரசு அலுவலகங்களும் ஒரே இடத்தில் அமைக்குமாறு நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**154—**

**இடைக்கால நிவாரணமாக பென்ஷன் வழங்குதல்**

**வினா எண் 19536—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள முன்னாள் கிராம அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் பஞ்சாயத்து உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட காலத்தில் இடைக்கால நிவாரணமாக அரசு உத்தரவுப்படி சம்பளம் வழங்க வேண்டியுள்ளதால் பென்ஷன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) முன்னாள் கிராம அலுவலர்களுக்கு, தமிழகமெங்கும் 5-12-1986-லிருந்து ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் வேறு பணியில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு அப்பணியில் இருந்த காலத்திற்கு ஓய்வூதியம் வழங்கப்படுவது இல்லை. முன்னாள் கிராம அலுவலர் பதவியிழந்து வேறு பணியில் சேர்ந்து ஓய்வுக்குப்பின் அப்பணிக்கு யாதொரு ஓய்வூதியமும் பெறவில்லையெனில், பணியில் சேரும் நாளுக்கு முன்னாள் வரையிலும், ஓய்வுபெற்ற அடுத்த நாளிலிருந்தும் மேற்படி ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

(ஆ) கேள்வி எழவில்லை.

[1999 மே 18

**155—**

**கொல்லிமலையைத் தனி வட்டமாக அறிவித்தல்**

**வினா எண் 20192—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையைத் தனி வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையைத் தனி வட்டமாக அறிவிக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**156—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 22326—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, நத்தமேடு கிராமம், செட்டிக்குளத்தில் சுமார் 30 வருடங்களாக வசித்து வரும் 50 குடும்பத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாயத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், செட்டிக்குளம் என்ற பகுதி ரி.ச.80 குளம் புறம்போக்கு மற்றும் ரி.ச.67 வாய்க்கால் புறம்போக்கு என வகைபாடு கொண்டுள்ளன. நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்க தடையாணை உள்ளது. இதனால் செட்டிக்குளம் கிராமத்தில் வசித்து வரும் 50 குடும்பத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.



1999 மே 18]

**157—**

**சாதிச் சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைத்தல்**

**வினா எண் 22498—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாதிச் சான்று வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்த்து குறிப்பிட்ட நாட்களுக்குள் சாதிச் சான்று வழங்கப்பட வேண்டும் என காலவரைமுறை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பழங்குடி இன மக்கள்/மலைவாழ் மக்களுக்கு விண்ணப்பம் செய்த 30 நாட்களுக்குள் சாதிச் சான்று வழங்கப்படவேண்டும் என குடிமக்கள் சாசனத்தில் (Citizen Charter) வரையறுக்கப்பட்டுள்ளது. ஆதலால் பிரச்சினைக்குரிய இனங்கள் தவிர, மற்ற இனங்களில் சாதிச் சான்று வழங்க காலதாமதத்தைக் குறைக்க வேண்டும் என்ற கேள்வி எழாது.

**158—**

**துணை வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 22500—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் துணை வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1999 மே 18

159—

### நில உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை சட்டம் திரும்பப்பெறுதல்

**வினா எண் 22668—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், திரும்பப் (வாபஸ்) பெற மாநில அரசு ஒப்புதல் தந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

160—

### சலவைத் தொழிலாளர் குடிசைக்குப் பட்டா

**வினா எண் 22742—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி, வார்டு 20, அணைக்கரைத் தெரு பிள்ளையார் கோவில் சமீபம் உள்ள சலவைத் தொழிலாளர் குடிசைக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டம் மற்றும் கிராமம் புல எண் 1057 மற்றும் 1085/1பி2பி நதிப் புறம்போக்கு என்ற வகைப்பாட்டினைக் கொண்டது. நீர்நிலைப் புறம்போக்குகளில் வீட்டுமனை வழங்க தடையுள்ளதால், ஆக்கிரமிப்பு செய்துள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.



1999 மே 18]

161—

### தனி வட்டம் அமைத்தல்

**வினா எண் 22771—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, சேரன்மகாதேவியைத் தலைமையிடமாகக் கொண்டு, தனி வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

162—

### குடிநீர் அளிக்கும் திட்டங்கள்

**வினா எண் 375—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-96 ஆம் ஆண்டில் தாம்பரம் தொகுதியில் அடங்கிய சிற்றூர், பேரூராட்சிகள், தாம்பரம் நகராட்சி, சென்னை மாநகராட்சியின் 153, 154 மற்றும் 155 வது வட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீர் அளிக்க எடுத்துக் கொண்ட திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஏழு.

(ஆ) திருநீர் மலை, பெருங்களத்தூர் குடிநீர்த் திட்டங்கள் 3/98-க்குள்ளும், செம்பாக்கம், சோளிங்கநல்லூர் குடிநீர்த் திட்டங்கள் 9/98-க்குள்ளும் பயனுக்குக் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. தாம்பரம் நகராட்சி மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. பர்க்கல்காலனை குடிநீர்த் திட்டத்திற்காக, தாம்பரம் மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து கொடுக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. மாடம்பாக்கம் குடிநீர்த் திட்டத்திற்கான மாற்று நீர் ஆதாரம் ஏற்படுத்த பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**163—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார்

**வினா எண் 1110—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில், பின்னத்தூர் பஞ்சாயத்தில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் பொருத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பொருத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டு திட்டம் சோதனை ஓட்டத்தில் உள்ளது. விரைவில் மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**164—**

### தொகுப்பு விடுகள் கட்டுவதற்கு மதிப்பீட்டுத் தொகை உயர்த்துதல்

**வினா எண் 1312—திரு. அ.வ. அப்துல் நாசர் மற்றும் டாக்டர் இ.எஸ். இராமன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அளிக்கப்படும் மதிப்பீட்டுத் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**165—**

### தொகுப்பு விடுகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 1537—டாக்டர் ஆ. ஞானசேகரன்**—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டை, புதுக்காலனியில் உள்ள தொகுப்பு வீடுகளை மீண்டும் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**166—**

### நிதி ஒதுக்கும் முறையை அமலாக்குதல்

**வினா எண் 1684—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளின் தேவைகளை மதிப்பீடு செய்து நிதி ஒதுக்கும் முறையை மாநில அரசு அமலாக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997-98 ஆம் நிதி ஆண்டு முதல் மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்திய நிதி ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுகிறது.

[1999 மே 18

167—

### குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை

**வினா எண் 1780—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதி, நாகூரில் தினமும் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது நாகூர் பகுதிக்கு தினந்தோறும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

168—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 1981—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில், சேந்திர கிள்ளையில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படவுள்ளது.



1999 மே 18]

169—

### நவீன பொதுக் கழிப்பறை மற்றும் குளியலறை கட்டுதல்

**வினா எண் 2113—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகர் ஐந்துமுனை, எமனேஸ்வரம், ஜீவா நகர் ஆகிய பகுதிகளில் நவீன பொதுக் கழிப்பறை மற்றும் குளியலறை கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஐந்துமுனை ரோடு மற்றும் ஜீவா நகர் பகுதியில் நவீன பொதுக் கழிப்பறை கட்டுவதற்கு தற்சமயம் அரசிடம் திட்டம் ஏதுமில்லை. எமனேஸ்வரம் பகுதியில் குருநாதன் கோவில் தெருவில் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டத்தின்கீழ் பொதுக் கழிப்பறை ஒன்று ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட 3 பகுதிகளிலும் குளியலறை கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

170—

### குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த பணியாளர்கள்

**வினா எண் 2429—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழித்துறை நகராட்சியில் செயல்படும் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த போதுமான பணியாளர்கள் இல்லை என புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நகராட்சிகளில் குடிநீர்த் திட்டப் பராமரிப்பு பணியிடத்திற்கான திருத்திய அளவுகோல் நிர்ணயம் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. அளவுகோல் நிர்ணயம் செய்து ஆணை பிறப்பித்த பின்னர் குழித்துறை நகராட்சி குடிநீர்ப் பணிக்குத் தேவையான பணியாளர்களை நியமனம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**171—**

**நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு**

**வினா எண் 2477—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஆணைப்படி மாத்தூர், மஞ்சம்பாக்கம், மாதவரம், தாம்பரம், அம்பத்தூர், மதுரவாயல், மணலி, சின்னசேக்காடு, திருவொற்றியூர், அய்யப்பாக்கம், சிட்லபாக்கம், அஸ்தினாபுரம், ஆலப்பாக்கம் மற்றும் கொரட்டூர் ஆகிய இடங்களில் உள்ள நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை புறநகர் பகுதியிலுள்ள நிலத்தடி நீர்வளம் பாதுகாக்கபபட்டு வருகிறது.

**172—**

**ஆழ்குழாய்க் கிணறு ஏற்படுத்துதல்**

**வினா எண் 2963—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் கரட்டுக்காடு என்ற பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் கரட்டுக்காடு என்ற பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு ஒன்று புதியதாக தற்போது ஏற்படுத்தி அப்பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**173—**

**நிதிநிலை பற்றாக்குறையைச் சரிப்படுத்துதல்**

**வினா எண் 3483—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி தொடர்ந்து நிதி நிலை பற்றாக்குறையிலேயே செயல்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சரிப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு திட்டப் பணிகளின் கீழ் 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 5.00 இலட்சமும், 1996-97 ஆம் ஆண்டிற்கு ரூ.52.12 இலட்சமும் அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, விற்பனை வரி பிரிவு ஒதுக்கீடாகவும், மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலான ஒதுக்கீடாகவும் அந்நகராட்சிக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

174—

**பாதாள சாக்கடை திட்ட செயல்பாடு**

**வினா எண் 3493—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் நகராட்சிப் பகுதிகளுக்கு செயல்படுத்தப்படவுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்பத்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

175—

**சுகாதாரப் பணியாளர் எண்ணிக்கையைத் தீர்மானிக்க நிலை**

**வினா எண் 3536—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி அமைப்புகளின் சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கு அரசு ஏதாவது குறித்த நிலை (Norms) வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஊராட்சிகளைத் தவிர மற்ற உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கு குறித்த நிலை வகுக்கப்பட்டுள்ளது.

(ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



## அறிக்கை

*பேரூராட்சிகள்*

அரசாணை நிலை எண் 92, ஊரக வளர்ச்சித் துறை நாள்: 22-4-1993-ல் பேரூராட்சிகளில் துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்த கீழ்க்கண்டவாறு திருத்திய குறித்த நிலை (Norms) வகுக்கப்பட்டுள்ளது.

| பணியிடம் | குறித்த நிலை | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. துப்புரவு ஆய்வாளர் | 20000 மற்றும் அதற்கு அதிகமான மக்கள் தொகையும் ஆண்டு வருமானம் ரூ.15 இலட்சமும் கொண்டுள்ள பேரூராட்சிகளில் | ஒன்று |
| 2. துப்புரவு மேஸ்திரி | 15 சிற்றேவலர்களின் பணியை கண்காணிக்க | ஒன்று |
| 3. பெருக்குபவர் | குடியிருப்புப் பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சாலை தூரத்திற்கும் மற்ற பகுதிகளில் 1.5 கி.மீ. சாலை தூரத்திற்கும். | ஒன்று |
| 4. கழிவு நீர்க் குழாய் சுத்தம் செய்பவர் | 50 கழிவுநீர்க் குழிகளை சுத்தம் செய்ய | ஒன்று |
| 5. மக்கு உரம் தயாரிக்கும் மஸ்தூர் | ஆண்டு ஒன்றுக்கு 1000 மெட்ரிக் டன் உரம் தயாரிக்க | ஒன்று |
| 6. வடிகால் சுத்தம் செய்பவர் | 500 மீட்டர் நீர் கச்சா வடிகால் அல்லது 100 மீட்டர் கட்டுமான வடிகால் சுத்தம் செய்ய | ஒன்று |

[1999 மே 18

*நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள்*

28-5-1942 நாளிட்ட பொது சுகாதார இயக்குநரின் கடிதத்தில் சுகாதாரப் பணியாளர்கள் பணியிடங்கள் ஏற்படுத்த கீழ்க்கண்டவாறு குறித்த நிலை (Norms) வகுக்கப்பட்டுள்ளது.

| பதவி (1) | நியமனத்திற்கான அடிப்படை கூறுகள் (தோராயமாக) (2) |
|---|---|
| 1. துப்புரவு ஆய்வாளர் | 10000 மக்கட் தொகைக்கு ஒருவர் |
| 2. தடுப்பு ஊசி போடுபவர் (Vaccinator) | 25000 மக்கட் தொகைக்கு ஒருவர் |
| 3. பெண் தடுப்பு ஊசி போடுபவர் | தேவைப்படும்போது நியமனம் வழங்கப்படுகிறது. பொதுவான நிர்ணயம் செய்ய இயலாது. |
| 4. பதிவாளர்-தடுப்பு ஊசி பதிவாளர் | 10000 மக்கட் தொகைக்கு ஒருவர் |
| 5. பிறப்பு(ம)இறப்பு பதிவாளா | 20000 மக்கட் தொகைக்கு ஒருவர் |
| 6. பெண் மருத்துவ அலுவலர் | 2000 பிறப்பிற்கு ஒருவர் அதிகப்படியானதாக இருந்தால் ஒன்று அல்லது இரண்டு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவ அலுவலரை நியமிக்கலாம். |
| 7 நல பார்வையாளர் | 500 பிறப்பிற்கு ஒருவர் |
| 8. பேறு கால உதவியாளர் (Midwife) | 150 பிறப்பிற்கு ஒருவா |
| 9. ஆயா | ஒவ்வொரு பேறு கால உதவியாளருக்கு ஒருவர், ஒரு பேருகால உதவியாளருக்கு மேம்பட்டிருந்தால் இரவு பணிக்கு ஒருவர் மற்றும் பகல் பணிக்கு ஒருவர் |
| 10. அலுவலக உதவியாளர் | சுகாதார அலுவலருக்கு ஒருவர் மற்றும் பெண் மருத்துவ அலுவலருக்கு ஒருவர் |
| 11. துப்புரவு மேலாள் | 12 சிற்றாளுக்கு ஒருவர் |



1999 மே 18]

| (1) | (2) |
|---|---|
| 12. கூட்டுபவர் | 1000 மக்கட் தொகைக்கு ஒருவர் அல்லது 1 மைலுக்கு ஒருவர் |
| 13. துப்புரவாளர் | ஒரு பொது கழிப்பிடத்திற்கு ஒருவர். 40 தனிக் கழிப்பிடத்திற்கு ஒருவர் மற்றும் தனிக் கழிப்பிடம் இல்லாத 1000 மக்கட் தொகைக்கு ஒருவர் |
| 14. வடிகால் கிளீனர் | 1000 அடி கட்சா (kutcha) வாய்க்காலுக்கு ஒருவர் அல்லது 2000 அடி கல்வெட்டு வாய்க்காலுக்கு ஒருவர். |
| 15. கழிவுநீர் குழி சுத்தம் செய்புவுர் | ஒரு கழிவு நீர் வண்டிக்கு ஒருவர். |

துப்புரவுப் பணியாளர் பணியிடங்களைப் பொறுத்தமட்டில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) அரசாணை நிலை எண் 101. ந.நி.ம.கு.வ. துறை, நாள் 30-4-1997 மற்றும் அரசாணை (நிலை) எண்.224, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 11-9-1997 ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு திருத்திய அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| வரிசை எண் (1) | வேலை வகைபாடு (2) | துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | 250 குடியிருப்புகளுக்கு (அல்லது) மூன்று கிலோ மீட்டர் சாலைக்கு | 3 பேர் கொண்ட குழு |
| 2. | பெரிய லாரிக்கு | 4 |
| 3. | சிறிய லாரிக்கு | 3 |
| 4. | டிராக்டர் வாகனத்திற்கு | 3 |
| 5. | டில்லர் வாகனத்திற்கு | 1 |
| 6. | உரக்கிடங்கு பராமரிப்புக்கு— | |
| | (i) நாள்தோறும் 20 மெட்ரிக் டன் குப்பை சேருமிடத்திற்கு | 2 |
| | (ii) 20 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக குப்பை சேருமிடத்திற்கு | 4 |

[1999 மே 18

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 7. | பேருந்து நிலையத்திலும் மற்றும் அங்காடியிலுள்ள கட்டணக் கழிப்பிடத்தைப் பராமரிக்க | 1 |
| 8. | கழிவுநீர்ப் பண்ணை பராமரிக்க— | |
| | (i) 20 ஏக்கர் வரை | 2 |
| | (ii) 20 ஏக்கருக்கு மேல் | 4 |
| 9. | பேருந்து நிலைய கழிப்பறையைப் பராமரிக்க | ஆண்-1, பெண்-1 |
| 10. | பேருந்து நிலையத்தை சுத்தம் செய்ய— | |
| | (i) "சி" மற்றும் "டி" பேருந்து நிலையத்திற்கு | 2 |
| | (ii) "ஏ" மற்றும் "பி" பேருந்து நிலையத்திற்கு | 4 |
| 11. | (i) பத்து லட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடியும் மற்றும் அங்குள்ள கழிப்பறையும் சுத்தம் செய்ய | 2 |
| | (ii) கூடுதல் வருமானம் ஒவ்வொரு பத்து இலட்சத்திற்கும் கூடுதல் பணியாளர்கள் | 4 |
| 12. | கழிவுநீர் ஊர்திக்கு | 2 |
| 13. | குப்பை வண்டிக்கு | 1 |
| 14. | கழிவுநீர் வண்டிக்கு | 2 |
| 15. | மாடுகளைப் பராமரிக்க:— | |
| | (i) 20 மாடுகளுக்கு | 1 |
| | (ii) 20 மாடுகளுக்கு அதிகமாக இருப்பின் | 2 |
| 16. | 20 துப்புரவுப் பணியாளர்களுக்கு | 1 துப்புரவு பணி மேற்பார்வையாளர் |
| 17. | 2 துப்புரவுப் பணி மேற்பார்வையாளருக்கு | 1 துப்புரவுப் ஆய்வாளர். |

மேற்படி திருத்திய அளவுகோலை சென்னை மாநகராட்சிக்கும் நீட்டிக்கலாமா வென்பது குறித்து சென்னை மாநகராட்சி ஆணையாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.



1999 மே 18]

**176—**

## மார்க்-2 பம்புகள் அமைத்தல்

**வினா எண் 4564—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகராட்சி புறநகர் பகுதிகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மார்க்-2 பம்புகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தற்போது வாரியத்தினால் கையிறைப்பான் பணிகள் செயல்படுத்தப்படுவது இல்லை. அப்பணிகளை தற்பொழுது உள்ளாட்சி அமைப்புகளே செயல்படுத்துகின்றன.

**177—**

## மேலக்கால் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 4824—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் கருமாத்தூர் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மேலக்காலிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கருமாத்தூர் செல்லம்பட்டி, திருமங்கலம் மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள 33 கிராமங்கள் மற்றும் இரு கல்வி நிறுவனங்களுக்கு (மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மற்றும் அருளானந்தர் கல்லூரி) குடிநீர் வழங்கும் பொருட்டு, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.3.32 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்டம் செயலாக்கத்திலுள்ளது. இத்திட்டம் 3/99க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

178—

## தொகுப்பு வீடுகள் செப்பனிடல்

**வினா எண் 5489—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள் முழுவதும் மிக மோசமான முறையில் கட்டப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



179—

## சாக்கடை வெளியேற வடிகால் அமைத்தல்

**வினா எண் 5600—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், பிச்சம்பாளையம் பகுதியில் சாக்கடை வெளியேற முறையான வடிகால் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகராட்சி, பிச்சம்பாளையம் பகுதியில் கழிவுநீர் தேங்கியுள்ளதை அப்புறப்படுத்த ரூபாய் பத்து லட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, வடிகால் கட்டி முடிக்கப்பட்டு, உபயோகத்தில் உள்ளது. கழிவுநீர் அப்புறப்படுத்தவும் வடிகால்கள் அமைக்கபபட்டுள்ளன.

180—

## மயான வசதி

**வினா எண் 5666—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம்-கருமாண்டி செல்லிபாளையம் கிராமம்-அண்ணாநகர் மற்றும் வெங்கமேடு, ஆகிய குடியிருப்பு பகுதி மக்களுக்கு மயான வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மயான வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருமாண்டி செல்லிபாளையம் கிராமம், அண்ணாநகர் மற்றும் வெங்கமேடு ஆகிய

குடியிருப்புகளுக்கு மயான வசதி செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**181—**

**அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் நகரங்களில் அதிகரிப்பதை தடுக்க நடவடிக்கை**

**வினா எண் 5868—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் நகரங்களில் அதிகரித்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இதைத் தடுக்க பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**182—**

**அலுவலர்கள் தலைமையிடத்தில் இருந்து பணிபுரிய நடவடிக்கை**

**வினா எண் 6152—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமஸ்மலை ஒன்றியத்தில் பணிபுரியும் ஒன்றிய அலுவலர் குடியிருப்புகள் பாழடைந்து கிடப்பதால் அலுவலர்கள் தலைமையிடத்தில் இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தாமஸ்மலை ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் ஆறு அலுவலர் குடியிருப்புகள் உள்ளன. அவை அனைத்துமே மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. குடியிருக்க இயலாத நிலையில் பழுதடைந்துள்ளதால் அந்தக் குடியிருப்புகளில் ஒருவரும் குடியிருக்கவில்லை. புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டவுடன், ஒன்றிய அலுவலர்கள் தலைமையிடத்தில் தங்கி பணிபுரிய வாய்ப்பு உள்ளது.

**183—**

**கழிவு நீரையும் மழை நீரையும் கால்வாய் வழியாக அப்புறப்படுத்துதல்**

**வினா எண் 6828—திரு. ஜே.எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூரிலிருந்து கழிவு நீரையும் மழை நீரையும் அம்பத்தூர் ரயில் நிலையத்தின் அருகிலுள்ள கால்வாய் வழியாக அப்புறப்படுத்த, அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில் கழிவு நீர் மற்றும் மழைநீர் அப்புறப்படுத்தும் திட்டம் குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**184—**

**மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து குழாய் இணைப்பு அமைத்தல்**

**வினா எண் 6912—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் பஞ்சாயத்திலுள்ள புளியம்பட்டி சாவடிப்பாளையம் அருந்ததியர் காலனி, புதூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்து குழாய் இணைப்பு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1997-98* ஆம் ஆண்டுக்கான அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சித்தூர் ஊராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, சித்தூர் ஊராட்சியிலுள்ள மேற்கண்ட மூன்று குடியிருப்புகளுக்கும் காவேரி குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு குடிநீர்த் திட்டச் செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் டிசம்பர் *1998*-க்குள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

**185—**

**காவிரி குடிநீர் இணைப்பு வழங்குதல்**

**வினா எண் 6916—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம் 4-வது வார்டு மோட்டூரிலுள்ள சங்கரன் கொட்டாய் என்ற பகுதிக்கு காவிரி குடிநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**186—**

**குடிநீர் இணைப்பு வழங்குதல்**

**வினா எண் 6918—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

எடப்பாடி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சி மேல்நிலைத் தொட்டியிலிருந்து மெய்யனூர் வரை குடிநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மெய்யனூர் கிராமம் எடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட கிராமமாக இருப்பதால், எடங்கணசாலை பேரூராட்சிக்கு, இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கும் பொழுது மெய்யனூர் கிராமத்திற்கு குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்க ஆவன செய்யப்படும்.

**187—**

**காவிரி குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 6923—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம் 7-வது வார்டு க. புதூர் மேற்குப் பகுதி, கரட்டுக்காடு பகுதி மற்றும் ஆலச்சம்பாளையம் காட்டூரிலுள்ள கிழக்கு, மேற்கு, தெற்கு பகுதிகளுக்கும் ஆலச்சம்பாளையம் வடக்குத் தெருவிற்கும் காவிரி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**188—**

**காவிரி குடிநீர் இணைப்பு வழங்குதல்**

**வினா எண் 6933—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரில் 4-வது வார்டிலுள்ள பூங்கா நகர் மற்றும் பூக்கங்கொட்டாய், சின்னப்பன் நகர், மோட்டூர், காட்டுவளவு கோடிவீட்டு நகர், நாயக்கர் தெரு, ரெட்டி தெரு, காளியம்மன் நகர், காக்காயான் காட்டுவளவு, காந்தி நகர், முண்டாச்சியூர் காட்டுவளவு, சங்கரன் கொட்டாய் ஆகிய நகரப் பகுதிகளுக்கு காவிரி குடிநீர் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**189—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 6934—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் பஞ்சாயத்தில் முத்தையம்பட்டி, ஆனந்தான்வளவு, பட்டகாரன்வளவு, கவுண்டன்வளவு, அருந்ததியர் காலனி, காணியாச்சான்வளவு ஆகிய கிராம மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சடையன்வளவு என்ற பகுதியில் மேல் நிலைத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சடையன்வளவு பகுதியில் புதியதாக மேல்நிலைத் தொட்டி கட்டி, இக்குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க திட்டம் 1998-99ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



**190—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கல்**

**வினா எண் 6979—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம் 1-வது வார்டு பகுதி கீச்சங்காடு, முனியன்கொட்டாய், மேட்டுப்பட்டி, மேட்டுப்பட்டி காட்டுவளவு, மேட்டுப்பட்டி காட்டு வளவு-2 மற்றும் மூப்பனூர் ஆகிய பகுதிகளில் எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**191—**

**அரசு அங்கீகாரம் பெறாத விளம்பரப் பலகைகள் கட்டுப்படுத்துதல்**

**வினா எண் 7079—திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் அங்கீகாரம் பெறாமல் சென்னையில் விளம்பரப் பலகைகள் பல உருவாகி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் கட்டுப்படுத்தும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் அங்கீகாரம் பெறாமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை அகற்றுவதற்கு சென்னை மாவட்டாட்சியர் அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**192—**

**அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு**

**வினா எண் 7079(அ)—திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளம்பரப் பலகைகள் அமைக்க அங்கீகாரம் வழங்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து மாநகராட்சியிடம் ஒப்படைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விளம்பரப் பலகைகள் அமைக்க அங்கீகாரம் அளிக்கும் அதிகாரத்தை மாவட்டாட்சித்தலைவரிடமிருந்து மாநகராட்சிக்கு ஒப்படைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**193—**

**புதிதாக பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா எண் 7544—திரு. ஆ. இராசேந்திரன் (என்கிற) தீரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செந்துறை-உடையார்பாளையம் சாலையில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அருகில் பேருந்து நிலையம் கட்ட நில ஒதுக்கீடு செய்யுமாறு வட்டாட்சியரை கேட்கப்பட்டுள்ளது. நிலம் ஒதுக்கீடு செய்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**194—**

**தொடக்கப்பள்ளிக் கட்டடத்தைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 8180—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, வல்லம், முதலாளி குடியிருப்பில் உள்ள தொடக்கப்பள்ளி கட்டடத்தைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி, மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வல்லம், முதலாளி குடியிருப்பு தொடக்கப்பள்ளி கட்டடம் பழுதுபார்க்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படாததால், துறை மூலம் வேலைகள் கோடை விடுமுறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

**195—**

**புதிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுதல்**

**வினா எண் 9487—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுககு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலகரம் பேரூராட்சிக்குப் புதிய குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேலகரம் ஊரக பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நீரியல் ஆய்வு முடிந்து நீராதாரப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

**196—**

### வாய்க்கால் சீரமைத்தல்

**வினா எண் 10141—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகராட்சியின் சட்டி உருட்டி வாய்க்காலை சீரமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள சட்டி உருட்டி வாய்க்கால் மன்னார்குடி நகராட்சி வசம் ஒப்படைக்க ஆணையும், முன்நுழைவு அனுமதியும் கிடைத்தவுடன் இவ்வாய்க்காலைச் சீரமைக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**197—**

### சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் மூடிய சாக்கடை வசதிகள்

**வினா எண் 10455—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) வில்லிவாக்கம் தொகுதி, பாடிக்குப்பம் மக்களுடைய அடிப்படை வசதிகளான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மூடிய சாக்கடை வசதிகள் போன்ற இன்னபிற வசதிகளும் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அம்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, அனைத்து பகுதிகளிலும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தினை உலக வங்கி நிதி உதவி பெற்று செயல்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**198—**

### ஆழ்குழாய் அமைப்பதற்கான நவீன கருவிகள் தேர்வு

**வினா எண் 11325—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரக பகுதிகளில் ஆழ்குழாய் அமைப்பது குறித்த இடத்தை மக்கள் பிரதிநிதிகள் கருத்தறிந்து நவீன கருவிகளின் சோதனைப்படி தேர்வு செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஊரகப் பகுதிகளில் ஆழ்துளைக்குழாய் அமைப்பது குறித்த இடத்தை தேர்ந்தெடுக்கும்போது உரிய மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து நவீன கருவிகளின் பரிசோதனைப்படி தேர்வு செய்யப்படும் முறையானது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

199—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்**

**வினா எண் 12126—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் அரசு நிறுவனமான தமிழ்நாடு மேக்னடைஸ் சுரங்கத்திலிருந்து கிடைக்கும் நீரைக் கொண்டு சுற்றியுள்ள கிராமங்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

இல்லை.

200—

**காவிரி குடிநீர்**

**வினா எண் 12412—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) காவிரி குடிநீர் கிடைக்காத கிராமங்களுக்கும் காவிரி குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை டிசம்பர் 98-க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் வழியோர கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன





## பத்தொன்பதாம் பட்டியல்

1—

**தண்ணீர் விற்பனை**

**வினா எண் 21505—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மினரல் வாட்டர் மற்றும் பாக்கெட் வாட்டர்கள் மூலம் மோசமான தண்ணீர் விற்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மினரல் வாட்டர் மற்றும் பாக்கெட் வாட்டர்கள் மூலம் மோசமான தண்ணீர் விற்கப்படுவதாகச் சில சமயங்களில் புகார்கள் வருகின்றன. அவற்றின்மீது ஆய்வுகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அவ்வப்போது மினரல் வாட்டர் மாதிரிகள் எடுத்துப் பரிசோதனை மேற்கொண்டு தரம் குறைந்த தண்ணீர் விற்கப்பட்டால் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுகிறது.

2—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 22102—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டிப் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மத்திய அரசின் வரையறையின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும். எடப்பாடி ஊராட்சி ஒன்றிய 72,633 மக்கள் தொகைக்கு, தற்போது சித்தூர் மற்றும் செட்டிமான்குறிச்சியில் செயல்படும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், கூடுதலாகப் பூலாம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

3—

### வணிக வளாகம் தொடங்குதல்

**வினா எண் 12682—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் விக்டோரியா மைதானத்தில் வணிக வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இந்த நிதியாண்டில் வணிக வளாகம் கட்டும் பணி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் நகரில் விக்டோரியா மைதானத்தில் ரூ. 5.36 கோடி மதிப்பீட்டுச் செலவில் வணிக வளாகம் அமைக்கவும், இத்திட்டத்திற்கு நகர்ப்புற வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து கடன் பெறவும் நிர்வாக அனுமதி அளித்து 1-12-1997 அன்று அரசு ஆணையிட்டுள்ளது. கடன் தொகை பெற்றதும் பணி தொடங்கப்படும்.



4—

### தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு வசதி

**வினா எண் 13023—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சிகள், 1920-ம் ஆண்டில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தின்கீழ் 1-6-1994 முதல் இயங்கி வருவதால் தொகுப்பு வீடுகள் அமைக்க நிதி ஒதுக்கீடு ஏதும் பேரூராட்சிகளுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே, தாழ்த்தப்பட்ட பகுதி மக்களுக்கு பேரூராட்சி மூலம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வாய்ப்பில்லை.

5—

### கூட்டுக்குடிநீர்த் திட்டம்

**வினா எண் 13607—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய பூலாம்பட்டி-இராசிபுரம் கூட்டு குடிநீர்த் திட்டத்தை துரிதப்படுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடி தொகுதியில் விட்டுப்போன கிராமப் பகுதிகளுக்கு காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 3/99-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1999 மே 18

(ஆ) எடப்பாடி தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6—

### எடப்பாடி பள்ளிக்குக் குடிநீர் வசதி

**வினா எண் 13926—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் சத்துணவு வழங்கப்படுவதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஒரு ஆழ்துளைக் கிணறு நிறுவி மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியும்.

(ஆ) இம்மகளிர் மேல்நிலைப்பள்ளிக் கட்டடம் பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ளதால் பொதுவாக அத்துறையே புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இருப்பினும் புதியதாக குடிநீர் இணைப்புக் கோரி நகராட்சிக்கு விண்ணப்பிக்குமாறு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

7—

### ஓடைக்குப்பம் மயானம்

**வினா எண் 14028—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெசன்ட் நகரில் சடலங்களை எரிக்க நவீன இயந்திரம் உள்ளதால் அருகில் உள்ள ஓடைக்குப்பம் மயானத்தை எடுத்து விடும் உத்தேசம் உள்ளதா?



1999 மே 18]

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

8—

### சாலை வசதிக்காக தனியார் நிலம் கையகப்படுத்துதல்

**வினா எண் 14284—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சிக்குட்பட்ட சொக்கம்புதூரில் 60 அடிச்சாலை அமைக்க கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் நிலத்தை மிக அதிக மதிப்பீடு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதனைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் குறித்து மறுபரிசீலனை செய்யப்பட்டு, நில எடுப்புச் சட்டத்தின்கீழ் கடைபிடிக்கும் நடைமுறையின் அடிப்படையில், நிலத்திற்குண்டான விலையை நிலம் எடுத்துக் கொண்ட நாளில் நிலவிய சந்தை மதிப்பீட்டில் நிர்ணயம் செய்து, நிலத்திற்குரிய ஈட்டுத் தொகை வழங்கப்படும் வரையுள்ள காலத்திற்குரிய வட்டியும் சேர்த்து நில உரிமையாளர்களுக்கு வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

**9—**

### மேம்பாலம் அமைத்தல்

**வினா எண் 14381—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரம்பூர் இருப்புப்பாதை மேம்பாலப்பணி எந்நிலையில் உள்ளது?

(ஆ) அப்பணியைத் துரிதப்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை பெரம்பூர் இரயில்வே மேம்பாலம் அருகே தற்போதுள்ள சுரங்க பாதையின் மேல் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியை ரூ.21 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு வழங்கி, அரசாணை (நிலை) எண் 108, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 22-6-1998-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இப்பணியை துரிதப்படுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் சென்னை மாநகராட்சி எடுத்து வருகிறது.

**10—**

### மாநகராட்சியாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 14417—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்ட முன்வடிவில் புதிய மாநகராட்சி தோற்றுவிக்க மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருமான வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் வேலூர் நகராட்சி சட்ட வரம்பிற்குட்பட்டிருந்தால், மாநகராட்சியாக உயர்த்துவது குறித்து பரிசீலனை செய்யலாம்.

**11—**

### கோட்டமேட்டுப்பட்டிக்கு குடிநீர்

**வினா எண் 14660—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஒன்றியம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சிக்கு குழாய்த் தொடரமைப்பு (பைப் லைன்) மூலம் காவிரி நீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஓமலூர் ஒன்றியத்தில் உள்ள கோட்டமேட்டுப்பட்டி குடியிருப்பு, சேலம் மாவட்டத்தில், காவிரி நீரை ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்பட உள்ள 136 புளோரைடு குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வழியோர கிராமமாக சேர்க்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட உள்ளது.

12—

### புதிய கட்டட விதிகள்

**வினா எண் 14793—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு அறிவித்துள்ள புதிய கட்டட விதிகள் 1996-ன்படி ஊராட்சிகளில் குடிசை வீடுகள் கட்டப்பட்டாலும், கட்டட வரைபடம் மற்றும் அனுமதிக் கட்டணம் செலுத்தி அனுமதி பெற வேண்டும் என்பதை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

13—

### காய்கறிச் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றுதல்

**வினா எண் 15487—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான காந்தி மைதான மொத்த விற்பனை காய்கறிச் சந்தைக்குப் போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் அதனை வேறு இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். திண்டுக்கல் நகரிலுள்ள மொத்த விற்பனை காய்கறிச் சந்தையை வேறு இடத்திற்கு மாற்ற நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



14—

### குப்பையிலிருந்து உரம்

**வினா எண் 15495—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகராட்சிகளில் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் திட்டம் தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

15—

### பாதாளச் சாக்கடைப் பணி

**வினா எண் 15921—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வேளச்சேரி 153-வது வட்டத்தின் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் எந்த அளவு நடைபெற்றுள்ளன?

(ஆ) அப்பணிகள் எப்போது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை, வேளச்சேரி 153—வது வட்டத்தின் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ், வேளச்சேரி 15 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, தற்போது 15 பகுதிகளிலும் கழிவுநீர்க் குழாய் அமைக்கும் பணியும் மற்றும் கழிவுநீர் வீட்டு இணைப்புகள் அமைக்கும் பணியும் கிட்டத்தட்ட 99 சதவீதம் முடிவடைந்து விட்டது. மீதமுள்ள சுமார் 1 கி.மீ. நீளத்திற்குக் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) வேளச்சேரி கழிவுநீர்த் திட்டத்தின் எல்லாப் பணிகளும் ஆகஸ்ட் 1999-ல் முடிக்கப்பட்டு, செப்டம்பர் 1999-ல் செயல்படத் தொடங்கும்.

16—

**நகராட்சி மற்றும் மாநகராட்சி ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்**

**வினா எண் 16186—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஓய்வூதியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள குடும்பப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் மருத்துவ உதவித் திட்டத்தைத் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கும் விஸ்தரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசு ஓய்வூதியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள குடும்பப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் மருத்துவ உதவித் திட்டத்தை நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கும் விஸ்தரிப்பது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

17—

**தனியாரிடம் துப்புரவுப் பணிகள்**

**வினா எண் 16205—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சித் துப்புரவுப் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியில் 1993-94 ஆம் ஆண்டிலிருந்து சில கோட்டங்களில் துப்புரவுப் பணியினை அரசு சாரா தன்னார்வ அமைப்புகள் செய்து வருகின்றன.

18—

**தனியார் மூலம் இறைச்சிக் கூடம் பராமரிப்பு**

**வினா எண் 16207—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரம்பூர் தொகுதியிலுள்ள மாநகராட்சி இறைச்சிக் கூடத்தைத் தனியார் மூலம் பராமரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி வசமுள்ள பெரம்பூர் இறைச்சிக் கூட வளாகத்தை நவீனப்படுத்திட ஏதுவாக கட்டி, செயல்படுத்தி, ஒப்படை செய்யும் திட்டத்திற்கு (BOT) விரிவான விளம்பரம் மூலம் தனியார் வசம் 20 ஆண்டிற்கு ஒப்படை செய்யும் கருத்துருவை ஏற்றும் மற்றும் திட்ட ஒப்ப ஆவணத்திற்கு (RPF) இசைவு அளித்தும், அரசு, அரசாணை (நிலை) எண் 41, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 4-2-1993இல் ஆணை பிறப்பித்துள்ளது.

[1999 மே 18

19—

## மின் பாதிப்பினால் நீரேற்று இயந்திரங்கள் பாதிப்பு

**வினா எண் 16310—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சரியான வோல்டேஜ் இல்லாததால், திருப்பூருக்கான குடிநீர் எடுக்கும் பணி பாதிப்பதாக அரசிற்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின் அழுத்த வேறுபாடு காரணமாக சில நேரங்களில் நீரேற்று இயந்திரங்களை இயக்க இயலாது. எனினும், நீரேற்று இயந்திரங்கள், சீரான மின் அழுத்தம் கிடைக்கும் சமயங்களில் இயக்கப்படுகின்றன.

20—

## குடிநீர் வழங்க நீரேற்று இயந்திரங்கள்

**வினா எண் 16312—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூருக்குக் குடிநீர் சப்ளை செய்யப்படும் திட்டத்தில் 240 குதிரைத் திறன் பம்புகள் எத்தனை உள்ளன? இவை பம்ப் செய்யும் நீரின் அளவு என்ன?

(ஆ) பராமரிப்பு யாரிடம் இருக்கிறது?

(இ) முறையாகப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூருக்குத் குடிநீர் வழங்கும் இரண்டாவது திட்டத்தில் 240 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றிகள் இரண்டு உள்ளன. இதில் ஒன்று மாற்று இயந்திரம். ஓர் இயந்திரத்தின் மூலம் ஏற்றப்படும் நீரின் அளவு நிமிடத்திற்கு 31,950 லிட்டர் ஆகும். இரண்டு நீரேற்று இயந்திரங்களும் தகுந்த இடைவெளிவிட்டு மாற்றி மாற்றி இயக்கப்படுகின்றன.

(ஆ) பராமரிப்புப் பணி 1-1-1997 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்யப்பட்டு வருகிறது.

(இ) முறையாகப் பராமரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

21—

## பேருந்து நிலையத்திற்குப் பெயர் சூட்டுதல்

**வினா எண் 16314—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, மாட்டுத்தாவணி புதிய பஸ் நிலையத்திற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயர் சூட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை, மாட்டுத்தாவணி புதிய பேருந்து நிலையப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை. அண்மையில், பெயர் வைத்தல் குறித்து தீர்மானங்களை இயற்றி அரசுக்குக் கருத்துருக்கள் அனுப்புவதைத் தவிர்க்குமாறு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளன. தற்போது மதுரை புதிய பேருந்து நிலையத்திற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத்

[1999 மே 18

தேவர் பெயர் வைப்பது குறித்தக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. பேருந்து நிலையம் கட்டி முடித்த பின் இதுதொடர்பாக மதுரை மாநகராட்சியால் பரிசீலிக்கப்படும்.

22—

**ஊராட்சியைப் பிரித்தல்**

**வினா எண் 16317—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பரா—

தருமபுரி ஒன்றியம், இலக்கியம்பட்டி ஊராட்சியை மூன்றாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

23—

**விளையாட்டு அரங்கம் அமைத்தல்**

**வினா எண் 16327—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.



1999 மே 18]

24—

**ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்குதல்**

**வினா எண் 16672—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் மருத்துவமனைகளில் போதிய அளவு ஆம்புலன்ஸ் வண்டி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் தற்போது 5 ஆம்புலன்ஸ் வண்டிகள் உள்ளன. மேலும் 3 புதிய ஆம்புலன்ஸ் வண்டிகளை ரூ.20 லட்சம் செலவில் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25—

**ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்**

**வினா எண் 17548—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை

26—

## நேப்பியர் பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா எண் 17982—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரைச் சாலையிலுள்ள நேப்பியர் பாலம் அகலப்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) பணியைத் துரிதப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நேப்பியர் பாலம் அகலப்படுத்தும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

(ஆ) பணிக்காலமான இரண்டாண்டுகளுக்கு முன்பே பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

## நிலத்தடி நீராதார ஆய்வு

**வினா எண் 18155—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதியில் நிலத்தடி நீராதாரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



ிடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் |றை அமைச்சர்:**

. (அ) மற்றும் (ஆ) ஒன்றிய அளவிலான நிலத்தடி நீராதாரம் ,றித்த விவரங்கள் மைய அரசின் நிலத்தடி நீர் மதிப்பீட்டுக் குழுமம் மலமாக ஆராயப்பட்டு, நீராதாரம் மதிப்பீடு மற்றும் நீராதாரம் |தரிந்தெடுக்கும் கடுமை ஆகியவற்றின் அடிப்படையில் தமிழகத்தின் புனைத்து ஒன்றியங்களின் தரம் பிரிக்கப்படுகின்றன.

பெருந்துறை தொகுதியைச் சார்ந்த ஊத்துக்குளி மற்றும் ஈரோடு ஒன்றியங்கள் கடுமைப் பகுதிகளாகவும் (Dark Block) (நீர் எடுக்கும் அளவு 85%-க்கும் அதிகம்), பெருந்துறை ஒன்றியம் மென்கடுமைப் பகுதியாகவும் (Green Block) கண்டறியப்பட்டுள்ளது.

28—

## கூட்டுக் குடிநீர் திட்டம்

**வினா எண் 18397—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி—கொடிப்பள்ளம்—மேலச்சாவடி கூட்டுக் குடிநீர் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டத்தின் முழுப் பயன் மக்களுக்குச் சென்றடைவது எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதியைச் சேர்ந்த கொடிப்பள்ளம் மேலச்சாவடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு பரிசோதனையில் உள்ளது.

(ஆ) விரைவில் மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

29—

## மழைநீர் சேகரிப்பு

**வினா எண் 18680—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீர் ஆதாரமே இல்லாத இடங்களில் மழைநீர் சேகரிப்புச் செய்து குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தும் முறையை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டம் தவிர வேறு மாவட்டங்களில் இச்செயல்முறைகள் செயல்படுத்தப்பட வேண்டிய காலகட்டம் இதுவரை எழவில்லை.

30—

## பள்ளிக்குக் குடிநீர் வழங்குதல்

**வினா எண் 18915—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

'எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியைச் சுற்றி உள்ள நீர் சாயப்பட்டறை, சலவைப்பட்டறைக் கழிவுநீரால் பாதிக்கப்பட்டுள்ளதால் அந்த மாணவிகளுக்குக் குடிநீர் வழங்க ஒரு பொதுக் குடிநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பள்ளியின் உள்ளே பொதுக் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க விதிமுறைகளில் இடமில்லையாதலால், கட்டண அடிப்படையில் இணைப்புப் பெற விண்ணப்பிக்குமாறு தலைமை ஆசிரியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.



31—

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 19109—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னகரம் தொகுதி, ரங்காபுரம் ஆதிதிராவிடர் காலனிக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

32—

## நகராட்சிகளுக்கு நிதியுதவி

**வினா எண் 19139—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதிப் பணிகள் நிறுவனம் (TNUIFSL) மூலமாக நடப்பாண்டில் நிதி உதவி பெற்ற நகராட்சிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி நிதிப் பணிகளின் நிறுவனம் (TNUIFSL) மூலமாக 1998-99 ஆம் நிதி ஆண்டில் செப்டம்பர் மாதம் வரை, பல்லவபுரம் நகராட்சி, சாலை மேம்பாட்டுப் பணிக்காக ரூ.23.40 இலட்சம் கடனாக நிதி உதவி பெற்றுள்ளது.

[1999 மே 18

33—

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 19156—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொளப்பளூர், குன்னத்தூர், ஊத்துக்குளிப் பேரூராட்சிகள் உள்ளிட்ட வழியோரக் கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் எத்தனைக் குடியிருப்புகள் குடிதண்ணீர் வசதி பெறும்?

(ஆ) இதுவரை எத்தனைக் குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொளப்பளூர், குன்னத்தூர், ஊத்துக்குளி, கலிங்கியம், சிறுவலூர் ஆகிய 5 பேரூராட்சிகளுக்கு உட்பட்ட கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கொளப்பளூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளிப் பேரூராட்சிப் பகுதிகளுக்கு உட்பட்ட 19 குடியிருப்புப் பகுதிகள் குடிதண்ணீர் வசதி பெறுகின்றன. இப்பகுதிகளில் பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) கொளப்பளூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளிப் பேரூராட்சிகளில் இதுவரை தனியார் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு ஏதும் வழங்கப்படவில்லை.

34—

### மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 19511—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம்—மீனம்பாக்கம் இடையேயான ஜி.எஸ்.டி. சாலையில் மின் விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1999 மே 18]

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம்—மீனம்பாக்கம் இடையே ஜி.எஸ்.டி. சாலையில் மின் விளக்குகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது.

35—

### விளையாட்டுக் கருவிகளைச் சீரமைத்தல்

**வினா எண் 19991—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா, சாந்தோம் மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையில் உள்ள துருப்பிடித்த விளையாட்டுக் கருவிகளை மாற்றிப் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீரமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

36—

### ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரங்கள்

**வினா எண் 20547—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு இதுவரை வழங்கப்படாமல் உள்ள அதிகாரங்களைப் பிற மாநிலங்களில் உள்ளது போலவே வழங்க அரசு ஆவன செய்யுமா?

[1999 மே 18

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) முதல்நிலைக் குழுவின் அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் அரசு உசிதமான முடிவை எடுக்கும்.

37—

**ஊராட்சியைப் பிரித்தல்**

**வினா எண் 20606—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பாடி ஒன்றியம், அனவாய்புதூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

38—

**பள்ளியைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 20746—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், இடுவாய் ஊராட்சி, ஆட்டையாம்பாளையம் ஆரம்பப் பள்ளி வகுப்பறைகள் மழைக்காலத்தில் ஒழுகுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுபார்க்கப்படும்?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டு இறுதிக்குள் பழுதுபார்க்கும் பணியை முடிக்க திருப்பூர் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

39—

**பணி நிரந்தரம்**

**வினா எண் 21441—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர்மன்றப் பொறியியல் பிரிவில் பணியாற்றும் என்.எம்.ஆர். எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் எப்போது பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகர்மன்றப் பொறியியல் பிரிவில் பணியாற்றும் தினக்கூலிப் பணியாளர்களின் எண்ணிக்கை 175.

(ஆ) அரசு ஆணை எண் 1644, ஊ.வ. (ம) உ. துறை, நாள் 12-10-1979-ன்படி 1-10-1979-க்குப் பிறகு காலியாகும் சில்லறைச் செலவினப் பணியாளர் மற்றும் வேலைப்பளுப் பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்படக் கூடாது எனத் தடையாணை இருப்பதால் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை.

40—

**தெருவிளக்கு எரிவதைக் கண்காணித்தல்**

**வினா எண் 21861—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

தெருவிளக்கு எரிவதை உறுதிப்படுத்தும் முறையில் மின்வாரியம் மாதம் ஒருமுறை ஊராட்சி மன்றத்தோடு கலந்து கண்காணிக்கும் முறையை அமலாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தெருவிளக்கு எரிவதை உறுதிப்படுத்தும் முறையில், மின்வாரியம், மாதம் ஒருமுறை ஊராட்சி மன்றத்தோடு கலந்து கண்காணிக்கும் முறையை அமுலாக்க தற்போது இயலாது.

**41—**

**மழை நீர் கால்வாய்களை மூடுதல்**

**வினா எண் 22147—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, 64-வது வட்டம் காந்தி பிரதான சாலையில் மழைநீர்க் கால்வாய்த் தோண்டி, பின் அறை (Chamber) முதலியவை கட்டாமலும், வேலை முற்றுப்பெறாமலும், தோண்டப்பட்ட கால்வாய் மூடப்படாமலும் அபாய நிலையிலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் கோட்டம் 64-ல் அமைந்துள்ள காந்தி பிரதான சாலையில் (உள் வட்டச் சாலையில்) மழைநீர் வடிகால் கட்டும் பணி 1998ஆம் வருடம் ஏப்ரல் மாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது. அகலமான இச்சாலையில் வடிகால் குழாய்கள் அமைக்கும் பணியில் 90 சதவீதம் தற்போது முடிவடைந்துள்ளது. பணி செய்யும் இடத்தில் பாதசாரி மற்றும் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்காமல் இருக்க, தக்க



N9 11, 31 1.4 N94 . 83502



பாதுகாப்புகள் அமைக்கப்பட்டு அபாயத்திற்கு எந்தவித வாய்ப்பும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

**42—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 22148—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, 64-வது வட்டம், காந்தி பிரதான சாலையில் கடந்த நான்கு மாதமாகக் குடிநீர்க் குழாய் மூலம் வந்து கொண்டிருந்த குடிநீரை நிறுத்தியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வில்லிவாக்கம் தொகுதி, 64 வது வட்டத்தில் காந்தி பிரதான சாலையில் கடந்த 4 மாதங்களாகக் குடிநீர்க் குழாய் மூலம் வந்து கொண்டிருந்த குடிநீர் நிறுத்தப்பட்டது என்பது தவறான தகவலாகும். அவ்வாறு குடிநீர் ஏதும் நிறுத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**43—**

**குப்பை சேகரிக்கும் பணி**

**வினா எண் 22403—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்கத்தா நகரில் வீடு வீடாகச் சென்று குப்பையைச் சேகரிப்பது போல், சென்னை மாநகராட்சி மூலம் சென்னையிலும் வீடு, வீடாகச் சென்று குப்பை சேகரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



2, 21, 201

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குப்பைகள் அகற்றும் பணி மாநகராட்சியினுடையது ஆகும். விரைவில் சென்னை மாநகராட்சியும் குறிப்பிட்ட வார்டுகளில் கல்கத்தா மாநகரில் செயல்படுத்தப்படுவது போல், வீடு வீடாகச் சென்று குப்பை அகற்றும் பணி செயல்படுத்த முடிவு எடுத்துள்ளது.

**44—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 22549—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, காணிக்காடு காலனி மற்றும் புதுமாங்குறிச்சிக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சி, காணிக்காடு காலனி மற்றும் புதுமாங்குறிச்சி ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் நிரந்தரமாகக் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க ஏதுவாக நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**45—**

**நகராட்சியை மாநகராட்சியாக்குதல்**

**வினா எண் 22875—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்வு செய்யும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவில் புதிய மாநகராட்சியைத் தோற்றுவிக்க மக்கட் தொகை மற்றும் ஆண்டு வருமான வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் ஈரோடு நகராட்சி சட்ட வரம்பிற்குட்பட்டிருந்தால், மாநகராட்சியாக உயர்த்துவது குறித்துப் பரிசீலனை செய்யலாம்.

**46—**

**பருத்தி விளைச்சலை அதிகரித்தல்**

**வினா எண் 13016—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி விளைச்சலை அதிகரிக்க உயர் ரக வீரிய விதைகளை விவசாயிகள் பயன்படுத்த அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் பருத்தி விளைச்சலை அதிகரிக்க உயர் ரக பருத்தி சான்று விதைகள் 375 மெடன் உற்பத்தி மற்றும் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படுகின்றன. விவசாயிகளை ஊக்குவிக்க மானிய விலையில் சான்று விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 முதல் ரூ.4.00 வரை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

47—

**விதை நெல் விற்பனை**

**வினா எண் 13606—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் விவசாய அலுவலகங்கள் மூலமாக வழங்கப்படும் பொன்னி விதை நெல் மற்ற மாவட்டங்களைவிட அதிக விலைக்கு விற்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு விற்கப்படும் விதை நெல்லை ஒரே சீரான விலையில் விற்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விதை கொள்முதல் விலை அடிப்படையில் விதை நெல் கொள்முதல் செய்யப்படும். அதாவது மாவட்டத்தின் சென்ற ஆண்டு சராசரி விலையுடன் 25% கூட்டி கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், நடைமுறைச் செலவு 10% சதவீதம் சேர்த்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது. எனவே, விதை கொள்முதல் மற்றும் விநியோகம் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடும்.

48—

**பனைமூலம் எண்ணெய்**

**வினா எண் 14224—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எண்ணெய்ப்பனை மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

49—

**வீரிய விதைகள் கண்டுபிடிப்பு**

**வினா எண் 16265—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வீரிய விதைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பின்வரும் பயிர் ரகங்களையும், வேளாண் கருவிகளையும் அண்மையில் வெளியிட்டுள்ளது:

*பயிர் ரகங்கள் :*

| | | | |
|---|---|---|---|
| (1) | நெல் | - | கோ 47 |
| (2) | துவரை | - | வம்பன் 2 |
| (3) | துவரை | - | ஏ.பி.கே.1 |
| (4) | பாசிப்பயறு | - | கோ 6 |
| (5) | நிலக்கடலை | - | கோ 3 |
| (6) | நிலக்கடலை | - | ஏ.எல்.ஆர். 3 |

[1999 மே 18

| | | | |
|---|---|---|---|
| (7) | பருத்தி | - | எம்.சி.யு.12 |
| (8) | கரும்பு | - | கோக 99061 |
| (9) | புதிய சவுண்டல் (அறிமுகம்) | - | .. |
| (10) | சர்க்கரை வள்ளிக் கிழங்கு | - | கோ-சிப் 1 |
| (11) | பிரஞ்சு அவரை(கொடி வகை) | - | ஊட்டி 1 |
| (12) | வெந்தயம் | - | கோ 2 |
| (13) | மெண்டுக்காளன் | - | ஊட்டி 1 |

வேளாண் கருவிகள்

(1) உழுது சால் அமைத்து விதைக்கும் கருவி

(2) வடிகால்/வாய்க்கால் தோண்டும் கருவி

(3) பவர்டில்லருடன் இணைத்து அதிக நீர் இறைக்கும் குழாய் பம்பு - மாதிரி 2

(4) தீவனச் சோளம் அறுவடை இயந்திரம்

(5) நிலக்கடலை காய் பிரித்தெடுக்கும் இயந்திரம்

(6) நிலக்கடலை அறுவடை செய்யும் கருவி

(7) மரவள்ளிக் கிழங்கு மாவு படியவைக்கும் கருவி

(8) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மதிய உணவு மைய அடுப்பு

(9) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சக்தி சாண எரிவாயுக்கலன்

**50—**

### மானிய விலையில் உரம்

**வினா எண் 16979—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

சிறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் உரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சிறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் உரம் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

**51—**

### உரங்களில் கலப்படம்

**வினா எண் 16999—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நவீன உரங்களில் கலப்படம் செய்கிற தனியார்களை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) நவீன உரங்களில் கலப்படம் செய்கின்ற சில தனியார்களைக் கண்டறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில் திரு. ரவிச்சந்திரன், த/பெ. அடைக்கலம் என்பவரின் பெயரில் உள்ள சில்லறை உர விற்பனைக் கடையில் கலப்பட உரம் விற்பனை செய்வது பற்றி பேராவூரணி உர ஆய்வாளரின் திடீர் ஆய்வின்போது கண்டறியப்பட்டு கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சித் தலைவர் மற்ற சாட்சியங்கள் முன்னிலையில் 18-10-1997 அன்று கடையின் பூட்டை உடைத்து ஆய்வு செய்து உரங்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டன. இவை கலப்பட உரங்கள்

எனச் சந்தேகப்பட்டு 22-10-1997-ல் வேளாண்மை விரிவாக்க மையம், திருச்சிற்றம்பலத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்டன. இவ்வுரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரமற்றது என்று அறிவிக்கப்பட்டதால் உர விற்பனையாளர்மீது பேராவூரணி, வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மறவன்மடம் என்ற இடத்தில் போலி டிஏபி உரம் தயார் செய்வது அறிந்து தயார் செய்யப்பட்ட 181 மூட்டைகளும், மூலப்பொருள்களும் புதுக்கோட்டை காவல் துறையின் உதவியுடன் கைப்பற்றப்பட்டன. இதன் தொடர்பாக 3 நபர்கள் கைது செய்யப்பட்டு மதுரை தனி நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். பிறகு இம்மூவரும் பிணையில் (BAIL) விடப்பட்டனர். இதுகுறித்து காவல் துறை மூலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய சம்பந்தப்பட்ட உர ஆய்வாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**52—**

**கரும்புக்குக் கூடுதல் விலை**

**வினா எண் 18305—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கரும்பு விலை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் உள்ளது.

**53—**

**மல்லிகைப் பூவிற்குக் குளிர்பதனக் கிடங்கு**

**வினா எண் 18542—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சேலம் மாவட்டத்தில் அதிகம் விளையும் மல்லிகைப் பூவிற்கென குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**54—**

**சேலத்திற்கு தோட்டக்கலைக் கல்லூரி**

**வினா எண் 18543—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் தோட்டக்கலை கல்லூரி ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

இல்லை.

**55—**

**பழத்தோட்டப் பண்ணை அமைத்தல்**

**வினா எண் 18555—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, செறுவாவிடுதியில் உள்ள வனச்சூழல் பண்ணையை பழத்தோட்டப் பண்ணையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

56—

### உரம் மற்றும் விதை விற்பனை

**வினா எண் 18597—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு தருமபுரி, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் உரம், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் விதைகள் எவ்வளவு விற்பனை செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு தருமபுரி, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் உரம், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் விதைகள் கீழ்க்கண்டவாறு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

| | உரம் | நெல் (மெ. டன்) | சிறுதானிய விதைகள் | பூச்சி மருந்துகள் |
|---|---|---|---|---|
| தருமபுரி | 78,073 | 378.329 | 48,739 | 85,481 |
| நாமக்கல் | 32,916 | 230.616 | 11,114 | 32,915 |
| சேலம் | 69,785 | 359.539 | 25,327 | 46,0.50 |

57—

### விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் உரம் அளித்தல்

**வினா எண் 18618—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்படும் யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி. போன்ற உரங்களைக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு உரங்கள் ஏதும் வழங்கப்படுவது இல்லை. யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி. போன்ற உரங்களைக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் ஏதும் செயல்முறையில் இல்லை.

58—

### முந்திரி விளைச்சலைப் பெருக்குதல்

**வினா எண் 18622—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முந்திரி விளைச்சலைப் பெருக்க அடர்கொத்து ரகங்களை தமிழ்நாட்டில் பயிரிட அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம்.

59—

### விளை நிலங்களில் விட்டுமனைப் பட்டா

**வினா எண் 18671—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டத்தில் உள்ள விவசாய நில விளை நிலங்களில் எத்தனை ஏக்கர் வீடு கட்டுவதற்கான மனைப்பிரிவாக மாற்றி விற்பனை செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டதில் 2,39,993 ஹெக்டேர் விவசாய விளை நிலங்களில் வீடு கட்டும் மனைப்பிரிவாக மாற்றி விற்பனை செய்யப்பட்ட நிலப்பரப்பு, 1108.14 ஹெக்டேராகும்.

[1999 மே 18

**60—**

### சித்த மூலிகைப் பண்ணை

**வினா எண் 19332—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் சித்த மூலிகைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ஏற்காடு மலைப் பகுதியில் சித்த மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் இத்துறையில் இல்லை. ஆனால், மூலிகைப் பயிர்கள் அபிவிருத்திக்காக 'ஒருங்கிணைந்த மூலிகைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்' மூலம், விவசாயிகள் நிலத்தில் 0.05 அளவுள்ள செயல்விளக்கத் தளைகள் அமைக்கப்படுகின்றன. செயல்விளக்கத் தளை ஒன்றுக்கு ரூ. 1,500 மதிப்பில் நடவுச் செடிகள், உரங்கள் மற்றும் பூச்சிமருந்துகளுக்காக மானியமாக அளிக்கப்படுகின்றது.

**61—**

### வெங்காயம் ஏற்றுமதி

**வினா எண் 19998—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இருந்து கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட வெங்காயம் எவ்வளவு?

(ஆ) ஏற்றுமதியை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**



1999 மே 18]

(அ) தமிழ்நாட்டிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட வெங்காயம் குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

| ஆண்டு | துறைமுகங்கள் | ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு (டன்களில்) |
|---|---|---|
| 1995-96 | சென்னை துறைமுகம் | 26532 |
| 1995-96 | தூத்துக்குடி துறைமுகம் | 25321 |
| 1996-97 | சென்னை துறைமுகம் | 33483 |
| 1996-97 | தூத்துக்குடி துறைமுகம் | 40499 |
| 1997-98 | சென்னை துறைமுகம் | 24885 |
| 1997-98 | தூத்துக்குடி துறைமுகம் | 31236 |

(ஆ) விலை உயர்வின் காரணமாக வெங்காய ஏற்றுமதி மைய அரசால் தற்போது தடை செய்யப்பட்டுள்ளது.

**62—**

### கோடைக்காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு

**வினா எண் 21329— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோடைக்காலங்களில் பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கோடைக்காலங்களில் பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க தனியாகத் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**63—**

### தரிசு நிலங்களை வேளாண்மைக்குத் தகுதியாக்குதல்

**வினா எண் 21339—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைக்குத் தகுதியான நிலையில் தரிசாகக் கிடைக்கும் நிலப்பகுதி எவ்வளவு?

(ஆ) அவற்றை வேளாண்மைக்குரியதாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

(இ) தமிழ்நாட்டில் மொத்த நிலப்பரப்பான 130 இலட்சம் ஹெக்டரில் 20.00 இலட்சம் ஹெக்டேர் வேளாண்மைக்கு உகந்த தரிசு நிலங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (முனைவர் வி.சி. குழந்தைசாமி அவர்களின் தலைமையின்கீழ் அமைந்த உயர்நிலைக் குழுவின் அறிக்கை)

தரிசு நிலங்களை வேளாண்மைக்கு உகந்தவாறு மாற்ற மைய மற்றும் மாநில அரசுகளால் சில திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்முறையில் உள்ளன.

மைய அரசின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தற்போது எட்டு மாவட்டங்களில் 35702 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்படுகிறது. (புதுக்கோட்டை, ஈரோடு, சிவகங்கை, கடலூர், வேலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் கோயம்பத்தூர்). இத்திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்படாத (தரிசாக உள்ள) நிலங்களை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தி, வேளாண் காடுகள், சமுதாய மற்றும் தனியார் நிலங்களில் உருவாக்கப்படுகிறது.

மைய அரசின் மற்றொரு திட்டமான தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டம், 19 மாவட்டங்களில் 84 நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றது. (கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி) நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள சாகுபடி நிலங்களில் மண் ஈரத்தைப் பாதுகாக்க ஓடைப்



1999 மே 18]

பராமரிப்பு, தாவரத் தடுப்பு அமைத்தல், பழ மற்றும் தீவன மரக்கன்றுகள் வளர்த்தல் மேலும் வருமானத்தை உயர்த்தும் வகையில் தச்சு, சலவை போன்ற தொழில்கள் செய்வதற்கு ஏற்ப உபகரணங்களும் ஆடு, கோழி வளர்ப்பு உதவிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பிரிதொரு திட்டமான வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், 16 மாவட்டங்களில் உள்ள 400 நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றது. (திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திண்டுக்கல், திருச்சி, பெரம்பலூர், கரூர், கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தருமபுரி, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள்) இத்திட்டத்தின் கீழ் மானாவாரி நிலங்களில் மழைநீர் சேமிக்க, கசிவு நீர்க் குட்டை, தடுப்பணைகள், பண்ணை குட்டைகள் போன்ற பணிகளும், நிலத்தின் மேம்பாட்டை உயர்த்த சமன் செய்தல், கோடை உழவு, சம உயர் வரப்பு போன்ற பணிகளும் பழ மற்றும் வேளாண் காடுகள் வளர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்காணும் திட்டங்களைத் தவிர, மாவட்டந்தோறும் தரிசாக இருக்கும் நிலங்களை மேம்பாடு செய்வதற்காக, அயல்நாட்டு முகமைகள், மைய அரசு மற்றும் "நபார்டு" போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி கோருவதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே மைய அரசுக்கு ரூ. 243.60 கோடி நிதியுதவி கோரி திட்ட அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன.

64—

### பழங்களைப் பதப்படுத்தக் குளிர் சாதனக் கிடங்கு

**வினா எண் 22063—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் அதிக அளவு விளையும் தக்காளிப் பழங்களையும் மற்றும் வேளாண் விளைபொருட்களையும் பதப்படுத்த குளிர் சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம்.

[1999 மே 18

65—

**தமிழகத்தில் விவசாய நிலப்பரப்பு**

**வினா எண் 22070—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாய நிலப்பரப்பு குறைந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் விவசாய நிலப்பரப்பு பின்வரும் காரணங்களால் குறைந்து வருகிறது:

(1) நகர்ப்புறமயமாக்குதலில் சாகுபடி நிலங்கள் குறைபாடு இது ஆண்டுக்கு ஆண்டு தற்போது அதிகரித்து வருகிறது; மற்றும்

(2) அவ்வாறே வேளாண்மை அல்லாத பிற பயன்களுக்கு உதாரணமாக, தொழிற்சாலைகள் அமைக்க சாகுபடி நிலங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

66—

**எலிகளால் வேளாண் விளைபொருள் இழப்பீடு**

**வினா எண் 22075—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேளாண் விளை பொருள்களில் எலிகளால் ஏற்படும் இழப்பு குறித்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எலிகளைக் கட்டுப்படுத்த ஒவ்வொர் ஆண்டும் கோடையில் எலி ஒழிப்பு முகாம்கள் வேளாண்மைத் துறை களப்பணியாளர்களால் கிராமங்களில் நடத்தப்பட்டு விவசாயிகளுக்கு எலிகளால் ஏற்படும் சேதங்களையும் அதனை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் முறைகளையும் செயல் விளக்கங்கள் செய்து காட்டி பயிற்சி அளிக்கப்படுகிறது.

67—

**வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்**

**வினா எண் 23006—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

68—

**மண்வளம் குறைதல்**

**வினா எண் 23182—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் மண்வளம் மிக வேகமாகக் குறைந்து வருவதை அரசு அறியுமா?

[1999 மே 18

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,- வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், பல்வேறு காரணங்களினால் ஒரு சில இடங்களில் மண்வளம் ஓரளவு குறைந்து வருவதை அரசு அறியும்.

(ஆ) தமிழ்நாட்டில் ஒரே நிலத்தில் தொடர்ந்து தீவிர சாகுபடி செய்வதாலும், மண்வளப் பராமரிப்பு சரிவரக் கடைப்பிடிக்காத நிலங்களிலும், காற்றாலும், மழை நீராலும் மண் அரிப்புக்குள்ளாகும் இட ங்களிலும் மண்வளம் குறைந்து வருகிறது.

69—

**மேல் பவானி பாசனத் திட்டம்**

**வினா எண் 174—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல் பவானி பாசனத் திட்டத்தை நிறைவேற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

70—

**கீழ்பவானிக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு**

**வினா எண் 2998—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி தண்ணீர் பற்றாக்குறையினால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதையும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையும் அரசு அறியுமா?



1999 மே 18]

(ஆ) ஆம் எனில், பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்காலுக்குத் தண்ணீர் திறந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீழ்பவானி திட்டத்தின்கீழ் 1996-97 மற்றும் 1997-98 பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டு அறுவடையும் முடிக்கப்பட்டுள்ளது. இதில் பாசனத்திற்கோ அல்லது குடிநீருக்கோ பற்றாக்குறை ஏற்படவில்லை.

71—

**அணை கட்டும் திட்டம்**

**வினா எண் 3698—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி வட்டம், புல்லூர் அருகே பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி வட்டம், புல்லூர் அருகே பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

72—

**வாய்க்கால் அமைத்தல்**

**வினா எண் 5418—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுபபணித் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வடக்குப் பகுதியிலுள்ள குளம் குட்டைகளுக்கு பவானி நதி நீரைக்கொண்டு நிரப்ப வாய்க்கால் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

73—

**உபரி நீரைப் பயன்படுத்துதல்**

**வினா எண் 8081—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணையில் உபரியாக வருகிற தண்ணீரை மேல்நிலைக் கால்வாய் மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணையில் உபரியாக வருகிற தண்ணீரை மேல்நிலைக் கால்வாய் மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசால் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு, நீரியல் சாத்தியக்கூறு இல்லாத காரணத்தால் அரசாணை (நிலை) எண் 1145, பொதுப்பணித் துறை, நாள் 30-4-1986-ல் இத்திட்டத்தைக் கைவிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

74—

**மகாநதி-கோதாவரி இணைப்புத் திட்டம்**

**வினா எண் 11387—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகாநதி-கோதாவரி இணைப்புத் திட்டத்தை தேசிய நீர்வள மேம்பாட்டு நிறுவனம் அங்கீகரித்துள்ளதை அரசு அறியுமா?



விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

மகாநதி-கோதாவரி இணைப்புத் திட்ட அறிக்கைகள் தேசிய நீர் மேம்பாட்டு முகமையால் (National Water Development Agency) தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்ட அறிக்கைகள் தமிழ்நாட்டிற்குத் தொடர்புடையது அல்ல. இவ்வரசிற்கு எந்தத் திட்ட அறிக்கையும் வரப்பெறவில்லை.

75—

**தமிழ்நாட்டில் தண்ணீர்பெறும் குளங்கள்**

**வினா எண் 15746—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நடப்பாண்டின் கணக்கீட்டின்படி உள்ள குளங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இவற்றில் ஆற்றிலிருந்து தண்ணீர் பெறும் குளங்கள் எவ்வளவு?

(இ) எத்தனை குளங்கள் வானம் பார்த்த குளங்களாக உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

| | | | |
|---|---|---|---|
| (அ) | 1 | ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ள ஏரிகள்/குளங்கள் .. | 20413 |
| | 2. | பொதுப்பணித் துறையின்கீழ் உள்ள ஏரிகள் .. | 8903 |
| | 3. | முன்னாள் ஜமீன் ஏரிகள் .. | 9886 |
| | | | 39202 |

(ஆ) ஆற்றிலிருந்து தண்ணீர் பெறும் குளங்களின் எண்ணிக்கை .. 3627

(இ) வானம் பார்த்த குளங்களின் எண்ணிக்கை .. 5276

76—

## ஏரி ஆக்கிரமிப்பு

**வினா எண் 16896—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, எரும்பூர் ஏரி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற, 7 (அ) நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு 15-9-1998 வரை அவகாசம் கொடுக்கப்பட்டது. அவகாச காலம் முடிவுற்று, ஆக்கிரமிப்புகளில் பயிர் அறுவடை முடிவுற்றதும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன.

77—

## பூங்கா அமைத்தல்

**வினா எண் 17284—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியில், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

78—

## பெரியாறு அணை மட்டம் உயர்த்துதல்

**வினா எண் 23224—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அணை மட்டத்தை உயர்த்தும் பிரச்சினை குறித்து கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரியாறு அணை மட்டத்தை உயர்த்துதல் மற்றும் பிற பொருள் குறித்து 28-11-1996 அன்று தமிழ்நாடு மற்றும் கேரள அமைச்சர்கள் அளவில் சென்னையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தையில் எவ்வித ஒருமித்த கருத்தும் ஏற்படவில்லை இப்பேச்சுவார்த்தைக்குப் பின்னர் தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியினால் 13-8-1998 அன்று திருவனந்தபுரத்தில் அமைச்சர்கள அளவிலான பேச்சுவார்த்தை மீண்டும் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இரு மாநிலங்களும் ஒரு தொழில்நுட்பக் குழுவை ஏற்படுத்தி அக்குழுக்கள் தத்தம் அரசிற்கு அறிக்கையை அளிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இரு மாநிலங்களின் தொழில்நுட்பக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குழுக்கள் பெரியாறு அணையை 13-10-1998 அன்று பார்வையிட்டன. இதற்கிடையில் இந்த இரண்டு குழுக்களின்

[1999 மே 18

அறிக்கைகளைப் பரிமாற்றம் செய்து கொண்டு அவற்றை ஆய்வு செய்து மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடரலாம் என்றும் கருதப்பட்டுள்ளது.

13-8-1998 அன்று திருவனந்தபுரத்தில் அமைச்சர்கள் அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்படி, தொழில்நுட்ப அறிக்கையைப் பரிமாற்றம் செய்து கொண்டு முதலமைச்சர் அளவில் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்குத் தயாராக உள்ளது. எனினும், இவ்வரசு கேரள அரசின் தொழில்நுட்ப அறிக்கையை எதிர்நோக்குகிறது.

**79—**

**'டாப்' வைத்த பேருந்து**

**வினா எண் 780—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கிராமங்களில் இயங்குகின்ற பேருந்துகளின் மேல் விவசாயிகள் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக "டாப்" வைத்த பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விவசாயிகள் தங்கள் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக கிராமப்புறங்களில் இயங்குகின்ற பெரும்பாலான போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் "டாப்" வைத்து இயக்கப்பட்டு வருகின்றன.

**80—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 6097—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரத்திலிருந்து திருநெல்வேலிக்கு நேரடியாக மீண்டும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வழித்தடம் எண் 531 இல் சிதம்பரத்திலிருந்து திருநெல்வேலிக்கு 2 சொகுசுப் பேருந்துகள் 2 ஒருவழிப் பாதைப் பயணமாக 26-9-1997 முதல் இயக்கப்பட்டு வருகின்றது.

**81—**

**நகரப் பேருந்தினை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 6366—திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவாத்துக் கழகத்தால் ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த தடம் எண் டி. 57 நகரப் பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் தடம் எண் டி. 57 நகரப் பேருந்து 4-10-1997 முதல் மீண்டும் இயக்கப்பட்டு வருகிறது.

**82—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 7029—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, ஆரணியிலிருந்து விண்ணமங்கலம் வழியாக, நடுப்பட்டு வரை பேருந்து வசதியே இல்லாததால், குடிசைக்கரை, கோனையூர், வினாயகபுரம்,

[1999 மே 18

நரியம்பாடி, ஆவணியாபுரம் வழியாகப் பெரணமல்லூருக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கையின்படி நகரத் தடம் ஆரணி-பெரணமல்லூர் (வழி) விண்ணமங்கலம், நடுப்பட்டு, குடிசைக்கரை, கோனையூர் நரியம்பாடி, அன்மருதை என 2-10-1997 முதல் இயக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**83—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 7373—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய நகரங்களுக்குத் திருப்பூரிலிருந்து நேரடியாகப் பேருந்து விட ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பூரிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள முக்கிய நகரங்களான சென்னை, மதுரை, சிவகாசி, தேனி, திண்டுக்கல், பழனி, ஈரோடு, சேலம், மேட்டூர், திருச்சி, கரூர் சத்தி, ஊட்டி, கோபி, அந்தியூர், நாமக்கல், பொள்ளாச்சி, உடுமலை, குன்னூர், கோத்தகிரி, திருநெல்வேலி, திருச்செந்தூர், கம்பம், போடி, கடலூர், வால்பாறை, பவானிசாகர், பண்ணாரி மற்றும் நம்பியூர் ஆகியவற்றிற்கும் அண்டை மாநில நகரங்களான பெங்களூர், மைசூர் ஆகியவற்றிற்கும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பேருந்துகள் தற்பொழுது இயக்கப்படுகின்றன.



1999 மே 18]

**84—**

**ஓட்டுநர் உரிமம் வழங்குதல்**

**வினா எண் 10184—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த வேலைவாய்ப்பில்லாத பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிடர் இளைஞர்கள் ஓட்டுனர் உரிமம் வைத்திருப்பின் அவர்களுக்கு மினிவேன்களை இயக்கும் உரிமம் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்து வசதியில்லாத ஊர்களுக்குத் தனியார் மூலம் சிறுபேருந்துகளை இயக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 71 (3) (b)-ன்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 18 சதவிகிதம் உரிமம் வழங்கப்படும். ஆதிதிராவிடர் இளைஞர்கள் ஓட்டுனர் உரிமம் வைத்திருப்பின் பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கும்போது கடைபிடிக்கப்படும் 18 சதவிதம் வாய்ப்பு இவர்களுக்கும் வழங்கப்படும். படித்த வேலைவாய்ப்பில்லாத, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு தனி ஒதுக்கீடு இல்லை. எனவே தகுதி அடிப்படையில் உரிமம் வழங்கப்படும்.

**85—**

**ஒரே சீரான பேருந்துக் கட்டணம்**

**வினா எண் 13527—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எடப்பாடி நகரிலிருந்து செல்லும் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம்-கோட்டம்-1 புறநகர்ப் பேருந்து எடப்பாடியிலிருந்து வெள்ளையம்பாளையம் வழியாக சேலம் செல்லும் 402 என்ற பேருந்துக் கட்டண விகிதம் மற்றத் தனியார் பேருந்தைவிட அதிகமாக இருப்பதனால் அரசுப் பேருந்தைவிட தனியார் பேருந்தில்தான் மக்கள் அதிகமாக பயணம் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கட்டணத்தின் விகிதாச்சாரத்தைத் தனியார் பேருந்து வசூலிக்கும் கட்டணத்தைப் போல் ஒரே சீரான கட்டணம் வசூலிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடியிலிருந்து வெள்ளையம்பாளையம் வழியாக இயக்கப்படும் பேருந்துகளில், பேருந்துக் கட்டணம் தனியார் பேருந்தைவிட அதிகமாக இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**86—**

## புதிய வழித்தடத்தில் மாநகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 14392—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகரிலிருந்து புதிய வழித்தடங்களில் மாநகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டிலே செயற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**



1999 மே 18]

(அ) தற்சமயம் கவியரசு கண்ணதாசன் நகரிலிருந்து சமீபத்தில் கண்ணதாசன் நகர் - பாரிமுனை சி 2டி மற்றும் சி 44 என்ற வட்டச் சுற்று இருவழித் தடங்களில் இயக்கப்படுகிறது. கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய வழித்தடங்கள் மட்டுமின்றி 7ஜி, 116, 37ஈ, 64ஏ, 2டி ஆகிய வழித்தடங்களில் 28 பேருந்துகள் பல முக்கிய இடங்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 514 தனி நடைகள் இயக்கப்படுகின்றன.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**87—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 14578—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் உள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம வேலூர் சட்டமன்ற உறுப்பினர்க்கு இருவழித் தடத்திற்கும் சேர்த்து ஒரு வழித் தடத்தில் மட்டும் பேருந்து விட்டதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வேலூர் - தெங்கால் (வழி) வள்ளிமலை மற்றும் வேலூர் - வெள்ளக்குட்டை (வழி) ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய இரு வழித்தடங்களிலும், சட்டமன்ற உறுப்பினர் கோரியவாறு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-2இன் மூலம் 25-12-1997 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**88—**

## பேருந்தினை நீட்டித்து இயக்குதல்

**வினா எண் 14732—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எருமாபாளையம் பணிமனையிலிருந்து விடப்படும் 30 என்ற நகரப் பேருந்தை கொங்கணாபுரம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) வழித்தடம் எண் 30-சி நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 26-4-1998 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

**89—**

**இலவச பஸ் பாஸ் வழங்குதல்**

**வினா எண் 14985—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு பணிக்கு வர இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தூரத்திற்கு அந்த அனுமதி அளிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**90—**

**பேருந்துகளில் இலவச சிற்றுண்டி**

**வினா எண் 15533—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தென்னக இரயில்வே 'சதாப்தி' விரைவு புகைவண்டி பயணிகளுக்கு இரயில் கட்டணத்தில் இலவச சிற்றுண்டி வழங்குவது போல்; தொலைதூரம் செல்லும் அரசு போக்குவரத்து கழக விரைவுப் பேருந்துகளில் இலவச சிற்றுண்டி வழங்க, அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அத்தகைய திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**91—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 15584—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாடிக்குப்பத்திலிருந்து காலை 8.50-க்குப் புறப்படும் 7சே மாநகரப் பேருந்தைத் தலைமைச் செயலகம் வழியாக இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**92—**

**நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 15847—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) திருப்பூர் ஜெய்வாய்பாய் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு நகரப் பேருந்து விடுவது குறித்து சில கோரிக்கைகள் அரசிற்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்படி பள்ளி மாணவிகளின் நலன் கருதி 'மகளிர் மட்டும்' என்ற வகையில் சிறப்புப் பேருந்துகள் பள்ளி நேரங்களில், மூன்று நகரப் பேருந்துகள் வாயிலாக தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன.

**93—**

**பேருந்து வசதி**

**வினா எண் 17927—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், வளையக்காரன்வலசு, சுள்ளபெருக்கப் பாளையம், பாப்பாவலசு, ரங்கபாளையம் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சுள்ளபெருக்கப் பாளையம், பாப்பாவலசு, ரங்கவலசு ஆகிய கிராமங்கள் வழியே தடம் எண் எம். 2 நகரப் பேருந்து மூலமாக தினசரி 4 நடைகளும், வளையக்காரன்வலசு கிராமத்திற்குத் தடம் எண் எம். 2 நகரப் பேருந்து மூலமாக தினசரி 4 நடைகளும் 28-6-1998 முதல் இயக்கப்பட்டு பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



1999 மே 18]

**94—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 18315—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர்-பரங்கிப்பேட்டைக்கு சாமியார்பேட்டை வழியாகச் செல்லும் பழைய பேருந்தை மாற்றிப் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 30-7-1998 முதல் நல்ல நிலையில் உள்ள பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**95—**

**தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் பொறியியற் கல்லூரியில் இட ஒதுக்கீடு**

**வினா எண் 21057—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு போக்குவரத்துத் தொழிலாளர்களிடமிருந்து நிதி பெற்று உருவாக்கப்பட்ட பொறியியல் கல்லூரியில் தொழிலாளர் குடும்பப் பிள்ளைகள் இடம்பெற அரசு எடுத்துள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உச்ச நீதிமன்றத்திலிருந்து இடைக்கால ஆணை பெறப்பட்டு 1998-99ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் பிள்ளைகளைப் பொறியியல் கல்லூரியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

96—

**விபத்தில் மரணமடைந்தோர் விவரம்**

**வினா எண் 21093—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ல் சாலை விபத்தில் மரணமடைந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) விபத்துகளுக்கான காரணங்கள் ஆராயப்பட்டதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 8840 பேர்கள்.

(ஆ) ஆம்.

97—

**பிராட்கேஜ் பாதையை அதிகரித்தல்**

**வினா எண் 21754—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ள மீட்டர்கேஜ், பிராட்கேஜ் இரயில் பாதைகளின் நீளம் எவ்வளவு?

(ஆ) பிராட்கேஜ் பாதையை அதிகரிக்குமாறு மாநில அரசு வற்புறுத்தியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 31-3-1998 முடிய தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ள மீட்டர்கேஜ் இரயில் பாதையின் மொத்த நீளம் - 2,469 கி.மீ. பிராட்கேஜ் இரயில் பாதையின் மொத்த நீளம் - 1,575 கி.மீ.

(ஆ) ஆம்.



98—

**போக்குவரத்து நெரிசலைப் போக்குதல்**

**வினா எண் 21896—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் வாகன நிறுத்துமிடங்கள் இல்லாததால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எல்லா அருவிப் பகுதிகளிலும் நிலவும் போக்குவரத்து நெரிசலைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எல்லா அருவிப் பகுதிகளிலும் நிலவும் போக்குவரத்து நெரிசலைப் போக்க அரசு ஆவன செய்து வருகிறது.

99—

**சாலை வசதி ஏற்படுத்துதல்**

**வினா எண் 1078—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப பகுதியில் பல கிராமங்களுக்கு சாலை வசதியே இல்லாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எபபொழுது சாலை வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு பணிகள், கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

**100—**

**பாலம் கட்டும் பணி**

**வினா எண் 5420—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியத்திலுள்ள கனியூர் ஆற்றுச்சாலை கி.மீ. 2/4-இல் ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் திட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் பாலத்தைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியத்திலுள்ள கனியூர் ஆற்றுச்சாலைப் பாலம் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்திற்கு 9-1-1998 முதல் திறந்து விடப்பட்டுள்ளது.

**101—**

**பால வேலை ஒப்பந்தம்**

**வினா எண் 7838—திரு. இலா. சந்தானம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கச்சிராயிருப்பு கிராமத்தில் உள்ள நிலையூர் கால்வாய் பால வேலை ஒப்பந்தம் விடப்பட்டு இன்னும் தொடங்கப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், அதை விரைவில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கச்சிராயிருப்பு கிராமத்தில் உள்ள நிலையூர் கால்வாய் பால வேலை தற்போது முடிக்கப்பட்டு இப்பாலத்தின் வழியாகப் போக்குவரத்து நல்லமுறையில் நடைபெற்று வருகிறது.

**102—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 8155—திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை காமராசர் சாலையைச் செப்பனிட்டு தார்ச் சாலை போட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆம், செய்து வருகின்றது.

**103—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 10008—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

(அ) திருவண்ணாமலை-பெங்களூர் செல்லும் சாலையில் திருவண்ணாமலையிலிருந்து கிருஷ்ணகிரி வரையுள்ள சாலையை அகலப்பாதையாக ஆக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**104—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 10835—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அதியமான் கோட்டை ஒசூர் சாலையை அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**105—**

**கடற்கரைச் சாலைக்குப் பெயர் சூட்டுதல்.**

**வினா எண் 10905—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்ச கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

கன்னியாகுமரி மாவட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு சிங்காரவேலர் பெயர் சூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**106—**

**பாலம் கட்டுதல்.**

**வினா எண் 11167—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி பனைஓலைப்பாடி அருகில் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாக முடிவடையாமல் உள்ள பாலம் விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இப்பாலப் பணியை விடுபட்ட பணியாக வரும் நபார்டு திட்டத்தில் தற்போதுள்ள தளநிலைமைக்கு ஏற்ற நேர்பாட்டில் எடுத்து தரைமட்டப் பாலமாகக் கட்டிட முன்னுரிமை அளிக்கப்படும்.

**107—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 11310—திரு. டி. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கருப்பையாறுக்கு குறுக்கே அணைமுகம் என்ற இடத்தில் கட்டப்பட்டு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பாலத்தை மீண்டும் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இப்பாலத்தைக் கட்டும் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**108—**

**சாலையோர வடிகால்கள் அமைத்தல்**

**வினா எண் 11778—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் சாலையோர வடிகால்கள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆம்.

**109—**

**சாலையை தேசிய நெடுஞ்சாலையாக்குதல்**

**வினா எண் 11949—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி, தருமபுரி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வாணியம்பாடி தருமபுரி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**110—**

**நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 13210—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்—ஓமலூர் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி போக்குவரத்தைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆம், செய்யும்.

**111—**

**சுரங்கப் பாதை அமைத்தல்**

**வினா எண் 13257—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் நகரம் ஐந்து ரோடு பகுதியில் எந்நேரமும் மக்கள் நெரிசல் அதிகமிருப்பதால் சுரங்கப் பாதை அமைத்து போக்குவரத்தைச் சீர்செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாக சுமார் ஆறு கோடி ரூபாய் செலவு வரும் இத்திட்டத்தை அண்மைக் காலங்களில் மேற்கொள்ள வாய்ப்பில்லை.

[1999 மே 18

112—

## கரையைப் பலப்படுத்துதல்

**வினா எண் 13735—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்பன் பாலத்தின் இருபுறமும் உள்ள கரையைப் பலப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாம்பன் பாலத்தின் இருபுறங்களிலும் உள்ள அணுகு சாலையின் கரைகள் கான்கிரீட் பிளாக்குகள் பதிக்கப்பட்டு கடல் அலைகள் கரையை அரிக்க முடியாத அளவிற்குப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

113—

## பழுதடைந்த பாலத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 13780—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையில் 0 கி.மீ. 0/4-ல் (பெரிய மாவட்டச் சாலை) உள்ள பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலத்தை உடனடியாகச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் போக்குவரத்திற்கு ஏற்றவாறு சீர் செய்யப்பட்டு, நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

114—

## தடுப்புச்சுவர் கட்டுதல்

**வினா எண் 13781—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் வெள்ளாளபுரம்-அக்கரைப்பட்டிக்குச் செல்லும் வழியில் உள்ள பாலத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வெள்ள நீர்போக்கு தடைபடும் என்பதால் இவ்விடத்தில் கைப்பிடிச் சுவர் கட்ட இயலாது.

115—

## ஆற்றின் குறுக்கே பாலம்

**வினா எண் 13871—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவடத்தனூர், புத்தூர் செக்கடி செல்ல பாம்பன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவடத்தனூர், புத்தூர் செக்கடி செல்ல பாம்பன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியினை அண்மைக் காலத்தில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

116—

**மழை நீர் அதிகமாவதால் போக்குவரத்து பாதிப்பு**

**வினா எண் 14206—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் - பழைய குற்றாலம் சாலையில் புலியருவி செல்லும் வழியில் மழை நேரத்தில் தண்ணீர் குளமாகப் பெருகி போக்குவரத்திற்குத் தடையாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது சீர்செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது இச்சாலை வெள்ள நிவாரணப் பணியின்கீழ் உயர்வு செய்து, போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் சீர் செய்யப்பட்டுள்ளது.



117—

**இருவழிப்பாதை சாலை அமைத்தல்**

**வினா எண் 14213—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-தாணிப்பாடி சாலையை இருவழிப்பாதை சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றம் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

118—

**சாலையை தேசிய நெடுஞ்சாலையாக்குதல்**

**வினா எண் 14259—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியிலிருந்து பாவூர்சத்திரம், தென்காசி, செங்கோட்டை, புளியரை வழியாக கேரள மாநிலத்தை இணைக்கும் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[1999 மே 18

119—

பாலம் அமைத்தல்

**வினா எண் 14283—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலூர்சத்திரம், ஆவுடையானூர் நெடுஞ்சாலையில் ஆவுடையானூர் அருகே கொண்டலூர் குளத்தில் மறுகால் வரும் கால்வாய் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

120—

சாலையை தேசிய நெடுஞ்சாலையாக்குதல்

**வினா எண் 14341—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டிச்சேரி-பெங்களூர்-திருவண்ணாமலை வழியே செல்லும் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க பாண்டிச்சேரியிலிருந்து தொடங்கி திண்டிவனம்-செஞ்சி-திருவண்ணாமலை வழியாகச் சென்று கிருஷ்ணகிரிக்கு அருகிலுள்ள



1999 மே 18]

தேசிய நெடுஞ்சாலை 7-ல் சேருகின்ற மாநில சாலையினைத் தேசிய நெடுஞ்சாலையாக (தேசிய நெடுஞ்சாலை 66) மாற்றிட மத்திய அரசு 9-2-1998 அன்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

121—

நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 14359—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதியில் உள்ள பெருமுகையிலிருந்து மே. மொளவூர்வரை நெடுஞ்சாலை குறுகியதாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அகலப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அறியும்.

122—

புறவழிச் சாலை அமைத்தல்

**வினா எண் 14360—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பகுதியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**123—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 14380—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சத்தியமூர்த்தி நகர் மற்றும் வியாசர்பாடி அருகில் பேசின்பாலத்திலிருந்து மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்காணும் பொருள் குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**124—**

**இரயில்வே மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 15029—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சிதம்பரத்தில் இருந்து அண்ணாமலை நகர் வரைச் செல்ல இரயில்வே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சிதம்பரம் நகரில், சிதம்பரம் - சிவபுரி கவரப்பட்டு சாலை கி.மீ. 0/10-ல் தற்போதுள்ள இரயில்வே இருப்புக் கடவுக்குப் பதிலாக 'சாலை மேம்பாலம்' அமைக்கும் பணி ஆய்வில் உள்ளது.

**125—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 15031—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர்-மேட்டூர் நெடுஞ்சாலையில் உள்ள இருப்புப்பாதைக் கடவில் மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இரயில்வே அமைச்சகத்தின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**126—**

**சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாக்குதல்**

**வினா எண் 15048—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் "நபார்டு" வங்கியின் நிதியுதவியுடன் எடப்பாடி முதல் ஜலகண்டபுரம்வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்தி தார்தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அண்மைக்காலத்தில் சாத்தியக்கூறுகள் இல்லை.

**127—**

**பாலம் சீரமைப்பு**

**வினா எண் 15049—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி பஸ் நிலையம் அருகிலுள்ள சரபங்கா நதியின் குறுக்கே அமைந்துள்ள பெரிய பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால், புதிய பாலம் ஒன்று, வீட்டு வசதி நகர்ப் பகுதி மேம்பாட்டுக் கழக நிதி மற்றும் உலக வங்கி நிதியில், போர்க்கால அடிப்படையில் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



**128—**

**ஆற்றைக் கடக்க படகு வசதி**

**வினா எண் 15085—திரு. டி. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் விளாத்துறை என்னும் இடத்தில் ஆற்றைக் கடந்து செல்ல படகு வசதி செய்து கொடுக்கும் உத்தேசம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் படகு வாங்கிக் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படகு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**129—**

**சாலையை மேம்படுத்துதல்**

**வினா எண் 15146—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள கடலூர் - சித்தூர் நெடுஞ்சாலையில் கொளக்குடி அருகில் சாலையை மேம்படுத்தி பாலம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

[1999 மே 18

(அ) மற்றும் (ஆ) பொருளில் கண்டுள்ள சாலைப் பணியினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் முதற்கட்டப் பணியின் தொடர்ச்சியில் (Phase-I)-ல் சேர்க்கப்பட்டுள்ளது. இச்சாலையின் ஆய்வுப் பணிகள் முடிவுற்றதும் உலக வங்கி உதவியுடன் இப்பணியினைச் செயலாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

130—

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 15470—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் 'நபார்டு' வங்கியின் நிதியுதவியுடன் எடப்பாடி முதல் மகுடஞ்சாவடி வரையுள்ள சாலையை அகலப்படுத்தி தார்தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

நிதிநிலைமைக்கேற்ப இப்பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

131—

**மேம்பாலம் கட்டுதல்**

**வினா எண் 15702—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடையாம்பட்டி வட்டம், ராமமூர்த்தி நகர் - பொம்மிடி சாலையில் குறுக்கிடும் இரயில்வே லைன் மீது மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சாத்தியக்கூறுகள் இல்லை.



1999 மே 18]

132—

**பயணியர் விடுதி கட்டுதல்**

**வினா எண் 15733—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம், எடப்பாடி வட்டத் தலைநகராக உள்ளதால் அங்கு ஒரு பொதுப்பணித் துறை பயணியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

133—

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா எண் 16032—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில், பேரையூர்-உசிலம்பட்டி வத்தலக்குண்டு, செல்லம்பட்டி, வளங்காகுளம்-திடியன்-பொறுப்பு மேட்டுப்பட்டி - நெடுஞ்சாலைக்கு, சிந்துப்பட்டி, நத்தப்பட்டி கோவிலாங்குளம், கொடிக்குளம் - திம்மநத்தம் நெடுஞ்சாலைக்கும் தார்ச் சாலை போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரையூர் உசிலம்பட்டி வத்தலக்குண்டு சாலையைப் பொறுத்தவரை இதன் ஒரு பகுதியை (கி.மீ *26/0-36/0*) அகலப்படுத்தும் பணிக்கு ரூ. *35.00* இலட்சத்தில் நிர்வாக ஒப்புதல்

வழங்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதர பகுதிகள் வருங்காலங்களில் நிதிநிலைமையைப் பொறுத்து மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

செல்லம்பட்டி-நத்தம்பட்டி சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாகும். எனவே, இச்சாலையை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

கோவிலாங்குளம்-திம்மநத்தம், கொடிக்குளம் சாலை அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

**134—**

**பாலம் புதுப்பிக்கும் பணி**

**வினா எண் 16884—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் தேவர் சிலைக்கும், அண்ணா சிலைக்கும் நடுவே அமைந்துள்ள வைகை மேம்பாலம் கட்டி நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால், அப்பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**135—**

**சுரங்கப்பாதை அமைத்தல்**

**வினா எண் 17349—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னை புறநகரப் பயணிகளின் வசதிக்காக சென்னை பூங்கா இரயில் நிலையத்தையும் சென்னை சென்ட்ரல் நிலையத்தையும் நேரடியாக இணைக்கும் வகையில் சுரங்கப்பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் மத்திய அரசின் இரயில்வே அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. மாநில அரசின் முழு ஒத்துழைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

**136—**

**பழுதடைந்த பாலத்தைச் சீரமைத்தல்**

**வினா எண் 18204—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-செங்கம் சாலையில் உள்ள முறையாறு பாலம் மிகவும் பழுதடைந்து உள்ளதால், அதனைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆம். செய்யும்.

[1999 மே 18

137—

### தார்ச்சாலை அமைத்தல்

**வினா எண் 18206—திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஜவ்வாது மலைக்குச் செல்லும் பாதை தார்ச் சாலையாக அனுமதிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுமார் 0.75 கி.மீ. தூரம் தவிர மீதமுள்ள அனைத்து சாலைப் பகுதியும் தார்தளம் இடப்பட்டு பணி முடிக்கப்பட்டுவிட்டது.

138—

### சாலையைப் பராமரித்தல்

**வினா எண் 18249—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவான்மியூர் எஸ்.ஆர்.பி டூல்ஸ் செக்போஸ்ட் முதல் துரைப்பாக்கம் வரை பழைய மாமல்லபுரம் சாலை பராமரிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் கண்டுள்ள சாலையானது நிரந்தர வெள்ள நிவாரணப்பணியில், பலப்படுத்துதல் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு செயலாக்கப்பட்டுள்ளது.



1999 மே 18]

139—

### சாலையை செப்பனிடுதல்

**வினா எண் 18270—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி-பூலாம்பட்டி சாலைப் பிரிவிலிருந்து வெள்ளரி வெள்ளி வழியாக குஞ்சாம்பாளையம் மூலக்கடை வரைச் செல்லும் சாலையைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இச்சாலை தார் நொடிகள் போடப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

140—

### சாலையை அகலப்படுத்தி செப்பனிடுதல்

**வினா எண் 18283—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி முதல் மகுடஞ்சாவடி வரையுள்ள பழுதடைந்துள்ள சாலையை அகலப்படுத்தி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இச்சாலையின் இருமருங்கிலும் இருந்த முட்புதர்கள் அகற்றப்பட்டு, தார் நொடிகள் போடப்பட்டு, வளைவு எச்சரிக்கைப் பலகைகள் வைத்து வளைவுகளில் தற்காப்பு வழிக்கற்கள் நடப்பட்டு சாலை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[1999 மே 18

141—

### பயணியர் விடுதி கட்டுதல்

**வினா எண் 18471—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய நிலத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடைபெறுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இயலாது.*

142—

### சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 18481—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் - மேச்சேரி சாலை 0/0-1/0 வரை இந்த நிதியாண்டில் புதுப்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*இச்சாலை கடந்த நவம்பர் 1998-ல் புதுப்பிக்கப்பட்டுவிட்டது.*



1999 மே 18]

143—

### இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

**வினா எண் 19810—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் வேலூர், வாணியம்பாடி, பச்சக்குப்பம் ஆகிய இடங்களில் தேசிய நெடுஞ்சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) மேற்கண்ட இரயில்வே மேம்பாலம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

144—

### புதிய பாலம் அமைத்தல்

**வினா எண் 19811—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரிலிருந்து காட்பாடி செல்ல புதிய பாலம் ஒன்று அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நெருக்கடி காரணமாக அண்மைக் காலங்களில் இப்பணி மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**145—**

**துறைமுகத்தை நவீனமாக்குதல்**

**வினா எண் 21605—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் கப்பல் துறைமுகத்தை நவீனப்படுத்தி கப்பல் போக்குவரத்துக்கு வழி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள கடலூர் துறைமுகத்தை நவீனப்படுத்துவது குறித்த எந்த கருத்துருவும் அரசின் பரிசீலனையில் இல்லை. கடலூருக்கு அருகில் அனைத்து பருவ காலங்களிலும் கப்பல் அணையும் பெரிய துறைமுகம் ஒன்றை தனியார் பங்கேற்பின்மூலம் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**146—**

**சுரங்கப்பாதை கட்டுதல்**

**வினா எண் 21958—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் மக்கள் சாலையைக் கடந்து செல்ல சுரங்கப்பாதைகள் அமைக்கும் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்களில் சுரங்கப்பாதைகள் அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**147—**

**நெடுஞ்சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 22311—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாச்சூர் ஊராட்சியில் உள்ள நெடுஞ்சாலையைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை வரும் நிதி ஆண்டில் அரசு சாலை பராமரிப்பு நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் புதுப்பிக்க தகுந்த வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

**148—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 22724—திரு. டி. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேசிய நெடுஞ்சாலையில் குழித்துறை ஆற்றுப்பாலம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கட்டி - நிர்வகித்து- ஒப்படைத்தல் திட்டத்தின்கீழ் குழித்துறை ஆற்றுப்பாலம் கட்ட மைய அரசு முடிவு செய்து அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**149—**

### அறங்காவலர்கள் நியமனம்

**வினா எண் 943—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பரை அறங்காவலர்கள் உள்ள கோவில்களுக்குக் கூடுதலாக மக்கள் பிரதிநிதிகளையும் அறங்காவலர்களாக நியமிக்க அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

பரம்பரை அறங்காவலர்கள் நிர்வகித்து வரும் திருக்கோயில்களில், நிர்வாகக் குறைபாடுகள் காணப்படும்போதெல்லாம், 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைக் குறித்த சட்டப்பிரிவு 47(2)-ன் கீழ் மேற்படி திருக்கோயிலுக்கு பரம்பரையல்லாத அறங்காவலர்களை கூடுதல் நியமனம் ஏன் செய்யக்கூடாது என அறிவிப்புக் கொடுத்து விளக்கம் கேட்கப்பட்டு, அவ்விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை எனத் தெரியவந்தால் பரம்பரையல்லாத அறங்காவலர்களாக மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற



உறுப்பினர் ஆகியோர்களையும் கூடுதலாக நியமனம் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமனம் செய்வதற்குமுன், பரம்பரை அறங்காவலர்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நியமனம் பற்றி தாக்கீது மூலம் தெரிவித்தால், அவர்கள் சட்டப்பிரிவு 47(4)-ல் உள்ள விதிகளின்படி நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து தடையாணை பெற்று வருவதால், சட்டப்பிரிவு 47(2) மற்றும் 47(4)-ஐத் திருத்த மத்திய அரசுடன் கலந்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**150—**

### கடலூரில் இசைப் பள்ளி

**வினா எண் 6811—திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரில் இசைப் பள்ளி தொடங்கிடும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் நிதியாண்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட ஐந்து இசைப் பள்ளிகளில் ஒன்று கடலூரில் 12-7-1998 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

**151—**

### திருக்கோவில்களில் தமிழ்மொழியில் அர்ச்சனை

**வினா எண் 11794—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

தமிழகத்தில் உள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் தமிழ் மொழியிலேயே அர்ச்சனை செய்யவேண்டும் என்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் உள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் பயனாக தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் 30-4-1998-ல் உள்ள நிலவரப்படி 4,331 திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மற்ற திருக்கோயில்களிலும் தமிழ் அர்ச்சனை முறை நடைமுறைப்படுத்தப்படும். முன்னேற்ற நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.*

152—

**பணியிடம் நிரப்புதல்**

**வினா எண் 14808—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர்களுக்கு "தமிழ் வளர்ச்சித் துறையில் உதவி இயக்குநர்" பதவிக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றும், இதுநாள் வரை அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**



1999 மே 18]

*(அ) தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர்களுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையில் உதவி இயக்குநர் பதவிக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்று 6-7-1998 அன்று அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

153—

**சிற்பங்களைச் சீரமைக்கும் பணி**

**வினா எண் 14816—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, தாடிக்கொம்பு நகரில் உள்ள அழகர்கோவில் சிற்பங்கள் மற்றும் கோபுரங்கள் பாதிப்பு அடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் சீரமைக்கும் பணிகள் எப்போது தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்திருந்த திருக்கோயில் கோபுரங்கள், விமானங்கள் முழுவதுமாக பழுது பார்க்கப்பட்டு கடந்த 1-7-1998 அன்று திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடந்தேறியது. இத்திருக்கோயில் சிற்பங்கள் ஏதும் பழுதடையவில்லை.

154—

**நூல்களை தமிழாக்கம் செய்தல்**

**வினா எண் 17015—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மே 18

பன்னாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள அரிய நூல்களை தமிழாக்கம் செய்து தமிழகப் பண்பாட்டுத் துறை மூலம் வெளியிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

பன்னாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள அரிய நூல்களைத் தமிழாக்கம் செய்து அரசே வெளியிடும் திட்டம் ஏதும் இல்லை. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

**155—**

### தலைமைச் செயலகத்தில் தமிழில் கோப்புகள்

**வினா எண் 19354—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்தில் பெரும்பாலும் அனைத்துத் துறைகளிலும் ஆங்கிலத்திலேயே கோப்புகள் எழுதப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தலைமைச் செயலகத்தில் கண்டிப்பாகத் தமிழில்தான் கோப்புகள் எழுதப்படவேண்டும் என்று அறிவுறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**



1999 மே 18]

(அ) மற்றும் (ஆ) விதிவிலக்கு இனம் தவிர ஏனையவை தமிழில்தான் எழுதவேண்டும் என்ற நோக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**156—**

### சிற்பங்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 19645—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் உள்ள கைலாசநாதர் கோவில் சிற்பம் உலகப் பிரசித்திப் பெற்ற ரதிமன்மத சிற்பம் மற்றும் ஏனைய சிற்பங்களைப் பாதுகாக்க அரசு சிறப்பு கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அவைமுன் ஓர் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் பதிமூன்றாம் நூற்றாண்டு கோயிலானதால் நாளடைவில் கல்பொறித்தல் மற்றும் அரிப்பைத் தடுத்து சிற்பங்களைப் பாதுகாக்க ரதி மன்மதன் உள்ளிட்ட ஆலயத்தில் உள்ள அனைத்து சிற்பங்களுக்கும் மாதம் ஒருமுறை எண்ணைக் காப்பு செய்து வருவதால் சிற்ப அழகு மாறுபடாமல் அதே அழகுடன் இன்றும் காணமுடிகிறது.

2. பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் சிற்பத்தைத் தொடாத வகையில், மேற்படி கலை அழகை கண்களால் கண்டு களிக்கத்தக்கவும், திருக்கோயில் திறந்திருக்கும் நேரங்களில் மேற்படி சிற்பங்களை திருக்கோயில் சிப்பந்திகள் மேற்பார்வையில் வைத்துவர பணிக்கப்பட்டு உள்ளார்கள்.

3. பெரும்பாலான சிற்பங்கள் திருக்கோயில் உள் வசந்த மண்டபத்தில் இருப்பதால், திருக்கோயில் நடை திறந்து இருக்கும் நேரங்களில் மட்டும் பக்தர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மற்ற நேரங்களில் திருக்கோயில் பாதுகாப்பாகப் பூட்டப்பட்டு வருகிறது.

4. தற்போது இரும்பு வலைகள் (Weld Mesh) போட்டு ஒவ்வொரு சிற்பத்தையும் பக்தர்கள் தொடாதவாறு, அதேசமயம் கலைச் சிறப்புகளைக் கண்டு களிக்கத் தக்க வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட உள்ளன.

5. கலைச் சிறப்பு மிக்க சிற்பங்களில் ஜுரலேசுவரர், சிவசூரியன் போன்ற சிற்பங்கள் பிரதிஷ்டை செய்திருப்பதால் மேற்படி சிற்பங்களுக்கு ஆலய பூஜை அபிஷேகங்கள் தினந்தோறும் நடைபெறுவதால், மேற்படி சிற்பங்களின் கலையழகு நன்கு பாதுகாக்கப்படுகிறது. பக்தர்கள் மேற்படி சுவாமிகளைத் தரிசிக்க சிற்பத்தைச் சுற்றிலும் தற்போதுள்ள சிறிய மேடான கல் கட்டடத்தில் வலைத் தடுப்பான்கள் (Weld Mesh) சுமார் 4 அடி உயரம் அமைக்கப்படவுள்ளது.

6. துவாரபாலகர்கள் உள்ள இடத்திற்கு மேலும் தேவி சன்னதியில் மேலும் உள்ள வேலைப்பாடுகளின் நடுவில் வடிக்கப்பட்ட கலைச்சிறப்பு மிக்க சிற்பங்களைப் பாதுகாக்க ஆண்டுக்கொருமுறை கல்நிறவர்ணம் பூசப்பட்டு மேலே உள்ள அனைத்து சிற்பங்களும் கல்பொறிதலில் இருந்து பாதுகாக்கப்படுகிறது.

**157—**

**வாடகை நிர்ணயம்**

**வினா எண் 19667—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில்களுக்குச் சொந்தமான கடைகள், நிலங்கள் மற்றும் வீடுகளைக் குறைந்த வாடகைக்கு விடுவதால் வருமான இழப்பு ஏற்படுகிறது என்பது அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், அவைகளுக்கு அரசே வாடகை நிர்ணயம் செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இதனைத் தவிர்க்க திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு, வணிகப் பயனுக்காகப் பயன்படுத்துபவர்கள் சொத்தின் சந்தை மதிப்பில் 6% வருட வாடகையாகவும் பிற இனங்களுக்கு 3% வருட வாடகையாகவும் நிர்ணயிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**158—**

**இசைக்கல்லூரி தொடங்குதல்**

**வினா எண் 21366—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை இசைக் கல்லூரிகள் உள்ளன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் புதிதாக இசைக் கல்லூரி இந்த நிதியாண்டில் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் அரசு இசைக் கல்லூரிகள் உள்ளன.

(ஆ) இல்லை.

[1999 மே 18

159—

## பகுதிநேர நியாயவிலைக் கடை

**வினா எண் 6948—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், மணிக்கொல்லை ஊராட்சி, இராமநாதன் குப்பத்தில், பகுதிநேர நியாயவிலைக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பூவாலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கும் மணிக்கொல்லை நியாயவிலைக்கடையில் உள்ள 368 குடும்ப அட்டைகளில் 109 குடும்ப அட்டைகளைப் பிரித்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இராமநாதன் குப்பம் கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாயவிலைக்கடையைத் திறக்க கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.கே.3/57403/97, நாள்: 30-3-1998-ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

160—

## நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 8183—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

தென்காசி தொகுதி, குற்றாலம் பேரூராட்சிப் பகுதியில் நியாயநிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, குற்றாலம் பேரூராட்சிப் பகுதியில் புதிய முழுநேர நியாயவிலைக்கடை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் திறக்கப்பட்டு அக்கடை 25-1-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

161—

## மண்ணெண்ணெய் சிறு விற்பனைக் கூடம்

**வினா எண் 9211—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் கோபாலபுரம், அண்ணாநகர் போன்ற இடங்களில் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும்வண்ணம் மண்ணெண்ணெய் சிறு விற்பனைக் கூடம் அமைத்ததுபோல் சென்னை மாநகராட்சியில் உள்ள ஒரு வட்டத்திற்கு ஒரு மண்ணெண்ணெய் சிறு விற்பனைக்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சியில் உள்ள ஒரு வட்டத்திற்கு ஒரு மண்ணெண்ணெய் சிறு விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை. ஆயினும், அனைத்து வட்டங்களும் பயன்பெறத்தக்க

வகையில் இடவசதி அமைவதைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**162—**

**எடப்பாடியில் மகளிருக்காகப் புதிய நகரக் கூட்டுறவு வங்கி**

**வினா எண் 12101—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் தொடங்க இருக்கும் புதிய நகரக் கூட்டுறவு வங்கி, மகளிருக்காக, எடப்பாடியில், தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் புதியதாக ஓமலூரில் ஒரு நகரக் கூட்டுறவு வங்கியும் சேலத்தை மையமாகக் கொண்டு மகளிருக்காக ஒரு நகரக் கூட்டுறவு வங்கியும் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், சேலம் மாவட்டத்தில் எடப்பாடியில் மகளிருக்காக புதியதாக நகர கூட்டுறவு வங்கி தொடங்குவதற்கான நிலை ஏதுமில்லை.

**163—**

**வேளாண் கூட்டுறவு வங்கியில் மோசடி**

**வினா எண் 13609—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள எஸ்.230, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு வழங்கும் மகசூல் கடனில் ரூ.8 லட்சம் வரை மோசடி நடந்துள்ளதாகக் கூறப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மோசடி செய்தவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எஸ். 230, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 81-ன்கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சேலம் வணிக குற்றப்புலனாய்வுப் பிரிவில் குற்றவழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கையாடலில் தொடர்புடைய வங்கிப் பணியாளர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். முறைகேட்டினைக் கண்காணிக்கத் தவறிய துறை அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**164—**

**மண்ணெண்ணெய் பங்க் அமைத்தல்**

**வினா எண் 14396—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரம்பூர் தொகுதியில் புதிய "மண்ணெண்ணெய் பங்க்" அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு எப்பொழுது பணி தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் தொகுதியில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் 4 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது:—

1. அருந்ததி நகர்
2. மேயர் கிருஷ்ணமூர்த்தி நகர்

[1999 மே 18

3. சந்திரயோகி சமாதி தெரு மற்றும்

4. கிருஷ்ணதாஸ்ரோடு இணைப்பு, ஓட்டேரி (வார்டு 38)

சென்னை மாநகராட்சியிலிருந்து முறையான முன்நுழைவு அனுமதி பெறப்பட்டவுடன் கட்டுமானப் பணி தொடங்கப்படும்.

**165—**

### கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம்

**வினா எண் 20424—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா.. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**166—**

### உணவு தானிய விநியோகக் கடைகளில் விவரப் பலகை

**வினா எண் 20569—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவு தானிய விநியோகக் கடைகளில் பொருட்கள் கிடைக்கும் நாட்களில் விவரப்பலகை வைத்து முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நியாயவிலைக் கடைகளில் அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், மைதா, ரவை மற்றும் பாமாயில் ஆகிய பொருட்கள் அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவைகளில், அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் இருப்பு பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடைகளில் தினமும் விளம்பரப் பலகையில் எழுதி அட்டைதாரர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு, மாதம் முழுவதும் எல்லா வேலை நாட்களிலும் விநியோகிக்கப்படுகிறது. மைதா, ரவை மற்றும் பாமாயில் ஆகிய பொருட்கள் ஒதுக்கீட்டைப் பொறுத்து விநியோகம் செய்யப்படுகிறது.

**167—**

### மாதிரி கூட்டுறவுச் சட்டம்

**வினா எண் 20804—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைத் தமிழ்நாட்டில் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய திட்டக் குழுவினால் அனுப்பப்பட்ட மாதிரி கூட்டுறவுச் சட்ட முன்வடிவில் காணும் சிறப்பு அம்சங்களைக் கருத்தில் கொண்டு தற்போது நடைமுறையில் உள்ள 1983-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களில் சட்டத்திற்குத் தக்க திருத்தங்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

168—

**பங்குகள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம்**

**வினா எண் 21735—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் பங்குகள் மூலம் விநியோகம் செய்ய எத்தனை பங்குகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய எத்தனை மண்ணெண்ணெய் பங்குகள் திறக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98ஆம் ஆண்டுக்கு 100 பங்குகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய 43 மண்ணெண்ணெய் பங்குகள் திறக்கப்பட்டுள்ளன.

169—

**விவசாயிகளுக்கு நேரடிக் கடன் வசதி**

**வினா எண் 21808—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க்கடன் தருவது போல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் நேரடியாக்க் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூன்று அடுக்குக் கடன் அமைப்பில் உள்ளதால் இவ்வங்கிகள் விவசாயிகளுக்கு நேரடியாக்க் கடன் வழங்க இயலாது.





170—

**கிராமப்புற மக்கள் தொகை**

**வினா எண் 22657—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டு மக்கள் தொகையில் கிராமப்புறங்களில் வசிப்போரின் சதவிகிதம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

| | *1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி* | *1998 மதிப்பீடு (Projected)* |
|---|---|---|
| தமிழ்நாடு | *55858946* | *61746902* |
| கிராமப்புறத்தில் வசிப்போர் | *36781354* | *40147520* |
| சதவிகிதம் | *65.85* | *65.02* |

171—

**தமிழக பால் உற்பத்தி**

**வினா எண் 16599—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. அதிக அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளதுடன்

[1999 மே 18

அக்கூட்டுறவுச் சங்க அமைப்பின்கீழ் கூடுதலாக பசு மற்றும் எருமை இன கறவைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக கால்நடை மருத்துவம், செயற்கை முறை இனவிருத்தி வசதிகள், தேவையான கலப்புத் தீவன வசதிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு கறவைகள் அதிக பால் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் கறவை மாடுகள் மானியத் திட்டத்தின்கீழ் ஒரு கறவை மாட்டிற்கு ரூ.3,000/- மானியமாகவும், ரூ.3,000/- தேசியமயமாக்கப்பட்ட அல்லது கூட்டுறவு வங்கியிலிருந்து கடனாகப் பெற்றும், ஒவ்வொரு ஆதிதிராவிடருக்கும், ஆதிதிராவிடர் கிருத்துவர்களாக மாறிய பயனாளிக்கும் அளிக்கப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்குப் பசும்பால் மற்றும் எருமை பாலின் கொள்முதல் விலை உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவாறு துறை மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக 1997-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நாளான்றுக்கு 12.71 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் 1998-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் 16.85 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

172—

### தீப்பிடிக்காத வீடு

**வினா எண் 19851—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீப்பிடிக்காத வீடு கட்டித்தரும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

தீப்பிடிக்காத வீடு கட்டித்தரும் திட்டம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

173—

### பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடம்.

**வினா எண் 19973—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கட்டடம் இல்லாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கட்டடம் இல்லாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

174—

### பால் விநியோகப் பணிகளுக்கு டேங்கர்கள்

**வினா எண் 21171—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பால் கொள்முதல் விநியோகப் பணிகளுக்கு எத்தனை டேங்கர்கள் பயன்படுத்தப்படுகின்றன?

(ஆ) இதில் தனியார் டேங்கர்கள் அனுமதிக்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பால் கொள்முதல் விநியோகப் பணிகளுக்கு 74 டேங்கர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) ஆம். சுமார் 58 தனியார் டேங்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தேவைக்கேற்ப உபயோகப்படுத்தப்படுகின்றன.

175—

### பால் உற்பத்திப் பிரிவுகள்

**வினா எண் 21191—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம் போன்ற இடங்களில் பால் துகள் உற்பத்திப் பிரிவுகள் செயல்படாமல் நிறுத்திவைத்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பால் பற்றாக்குறை காரணமாக ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம் போன்ற இடங்களிலுள்ள பால் துகள் உற்பத்தி பிரிவுகளில் முழு அளவில் பால் துகள் தயாரிக்கப்படவில்லை. தற்போது பால் உற்பத்தி அதிகரித்துள்ளதால் பால் துகள் தயாரிப்பு முழு அளவில் நடைபெறுகின்றது.

**176—**

**பீடித் தொழிலாளர்களுக்குக் காப்பீடு**

**வினா எண் 10728—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சம் ரூ. 50,000/- காப்பீடு செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கட்டளை பிறப்பித்தும்கூட பீடி நிறுவனங்கள் அதைச் செயல்படுத்தாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் செயல்படுத்துவதற்குச் சட்டமியற்றுவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பீடித் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் ரூ.50,000/- காப்பீடு செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கட்டளை பிறப்பித்தும்கூட பீடி நிறுவனங்கள் அதைச் செயல்படுத்தாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பீடித் தொழிலாளர்களுக்கான காப்புறுதித் திட்டத்தைப் பொறுத்த வரையில் தற்போது கீழ்க்கண்ட இரண்டு காப்புறுதித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

*1. எம்ப்ளாயீஸ் டிபாசிட் லிங்க்டு இன்சூரன்ஸ் திட்டம்:*

இத்திட்டம் தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்தால் அமல்படுத்தப்படுகிறது. வைப்பு நிதி சந்தா தொகை செலுத்தும்



அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்துவதாகும். சிப்பந்திகளின் சம்பளத்தில் 0.5% நிர்வாகத்தால் வைப்புத் தொகையாக மேற்படி திட்டத்திற்குச் செலுத்தப்படுகிறது. இதிலிருந்து வேலை செய்யும் தொழிலாளர் இறந்தால் வாரிசுதாரர்களுக்கு (Dependants) கீழ்க்கண்ட அடிப்படையில் தொகை கொடுக்கப்படுகிறது:

"12 மாத சராசரி வைப்புத் தொகையில் ரூ.25,000/-க்கு மிகாமலும், வைப்புத்தொகை ரூ.25,000/-க்கு மேல் இருந்தால் ரூ.35,000/-க்கு மிகாமலும் வழங்கப்படுகிறது".

*2. பீடித் தொழிலாளர்களுக்கான குரூப் இன்சூரன்ஸ் திட்டம்:*

இத்திட்டம் 1-4-1992 முதல் அமுல்படுத்தப்படுகிறது. மைய அரசின் கீழ் இயங்கி வரும் தொழிலாளர் நல அமைப்பால் (Labour Welfare Organisation) ஹைதராபாத் நல ஆணையரால் அமல்படுத்தப்படுகிறது. தொழிலாளர் வைப்புநிதித் திட்டத்தில் சேராத மற்ற பீடித் தொழிலாளர்களுக்கு இத்திட்டம் பொருந்தும். இதன்படி ஒரு தொழிலாளி இயற்கை மரணம் அடைந்தால் ரூ.3,000/-மும், விபத்து காரணமாக மரணம் அடைந்தால் ரூ.6,000/-மும் வழங்கப்படும் இதற்கான சந்தா தொகை வருடத்திற்கு ரூ.27/-ல், ரூ. 13.50 பீடித் தொழிலாளர் சேம நல நிதியிலிருந்து ஹைதராபாத் நல ஆணையராலும் மற்றும் ரூ. 13.50 சோஷியல் செக்யூரிட்டி ஃபண்டிலிருந்து எல்.ஐ.சி. நிறுவனத்தாலும் செலுத்தப்படுகிறது.

இந்நிலையில் சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, புதுடில்லி உச்சநீதிமன்றம், ரிட் மனு எண் 1262/87-ல் அளித்த தீர்ப்பின் கட்டளை எண் 11-ல் பீடித் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் நிர்வாகம் ரூ.50 ஆயிரத்திற்குக் காப்புறுதி செய்ய வேண்டும் எனத் தெரிவித்தது. இப்பொருள், உச்சநீதிமன்றத்தில் மேற்படி தீர்ப்பின் அமலாக்கத்தினைக் கண்காணிக்கும்பொருட்டு நியமிக்கப்பட்ட தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது. அவ்வமயம், பீடி நிர்வாகத்தினர், பீடித் தொழிலாளர்களுக்கு மேற்கண்ட இரண்டு காப்புறுதித் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருவதால், உச்சநீதிமன்ற கட்டளை எண் 11-ன் படி ஆயுள் காப்புறுதித் திட்டம் தேவையில்லை எனத் தெரிவித்து, அகில இந்திய ரீதியாக சட்ட வடிவமைப்பில் கொண்டுவந்தால் காப்புறுதித் திட்டத்தைச் செயல்படுத்துவதாகக் கூறிவிட்டனர். எனவே,

[1999 மே 18

ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த நிர்வாகத்தினர் ஏற்றுக் கொள்ள முன் வராததால், இத்திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை. இது குறித்து தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் மூலம் உச்சநீதிமன்றத்திற்கும் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலே வினா எண் 'அ' விற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள பதில்களின் அடிப்படையிலும், பீடித் தொழிலாளர்களுக்குக் காப்புறுதித் திட்டம் ஏற்படுத்துவது மத்திய அரசின் வரம்பிற்குட்பட்டது. மாநில அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல என்பதாலும், காப்புறுதித் திட்டம் குறித்து சட்டம் இயற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்க இயலாத நிலை உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

177—

**முந்திரி தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம்**

**வினா எண் 11781—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள முந்திரி தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்**

ஆம். முந்திரி தொழிலாளர்களுக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 30-9-1996க்குப் பின்னர் நீட்டிக்கப்படவில்லையாதலால், தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் தொழிற்சாலைவாரியாக (Industry-wise) அமல்படுத்தப்படாமல் இடவாரியாக (Geographical area-wise) அமல்படுத்தவும் மற்ற பொதுத் தொழிலாளர்களுடன் முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

178—

**தொழிலாளர்களின் கோரிக்கை**

**வினா எண் 12976—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) கடந்த 1997ம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும், தொழிலாளர்களின் கோரிக்கைக்காக நடத்தப்பட்ட உண்ணாவிரதம், தர்ணா, ஊர்வலங்கள் எத்தனை?

(ஆ) அதன் மூலம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது:

**விவர அறிக்கை**

(அ-அ) கடந்த 1997-ம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் தொழிலாளர்களின் கோரிக்கைக்காக நடத்தப்பட்ட உண்ணா விரதங்களின் எண்ணிக்கை 28, தர்ணாக்கள் எண்ணிக்கை 17, ஊர்வலங்களின் எண்ணிக்கை 13, ஆகும்.

(அ-ஆ) கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள்.

**உண்ணாவிரதம்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பிரச்சினையின் தன்மை | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **தொழிலாளர் துணை ஆணையர்-1, சென்னை பிராந்தியம்.** | | | |
| 1. | லட்சுமி சரஸ்வதி மில், வெட்டுவானம் | தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்ட 151 தொழிலாளர் களைத் திரும்ப வேலைக்குச் சேர்த்தல் குறித்து வலியுறுத்துவது. | தொழிற்தகராறு எழுப்பப்பட்டு, சமரச முறிவு பதிவு செய்யப்பட்டது. |

[1999 மே 18

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2. | பி & சி மில், சென்னை | பி. & சி. ஆலையை மீண்டும் திறக்கக் கோரி. | பி & சி ஆலை பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று தொழிலாளர் ஆணையர் முன்பு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. |
| 3. | சௌத் ஈஸ்ட் ஃபுட் வேர், ஆம்பூர். | தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகையைக் கோருதல். | தொழிற் தகராறு எழுப்பப்பட்டு, சமரச முறிவு பதிவு செய்யப்பட்டது. |
| 4. | எம்பிடி பஸ் சர்வீசஸ், ராணிப்பேட்டை | சர்வீஸ் கார்டு, ப்பி. எஃப் மற்றும் போனஸ் கோருதல். | தொழிற் தகராறு எழுப்பப்பட்டு, சமரச முறிவு பதியப்பட்டது. |
| 5. | க்ரெசண்ட் பேப்பர் மற்றும் ஷாலிமார் போர்டு, ராணிப் பேட்டை | நிறுவனத்தைத் திறக்கக் கோரி. | தொழிற் தகராறு எழுப்பப்பட்டு, சமரச முறிவு பதியப்பட்டது. |
| 6. | ஓர்த் ட்ரஸ்ட், காட்பாடி | தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தக் கோருதல். | தொழிற் தகராறு எழுப்பப்பட்டு சமரச முறிவறிக்கை அனுப்பப்பட்டது. |

தொழிலாளர் துணை ஆணையர்-2, சென்னை பிராந்தியம்

| | | | |
|---|---|---|---|
| 7. | எம்.என்.ஆர்.க்ளோவ்ஸ் ஏற்றுமதி வளாகம், சென்னை. | பொதுவான கோரிக்கைகள் | நிறைவேற்றப்பட்டுள்ளன. |



1999 மே 18]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8. | நோவா டெக்ஸ்டைல்ஸ், திருப்போரூர் | பொதுவான கோரிக்கைகள் | நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| 9. | ஸ்ருஷ்டி ஷுஸ் லிட், பெருங்குடி | பொதுவான கோரிக்கைகள் | நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| 10. | டயானா லாம்ஸ்; கும்மிடிப்பூண்டி | பொதுவான கோரிக்கைகள் | நிறைவேற்றப்பட்டுள்ளன. |

தொழிலாளர் துணை ஆணையர், சேலம் பிராந்தியம்

| | | | |
|---|---|---|---|
| 11. | ஜவஹர் மிலஸ் லிட், சேலம். | 1996-97 ஆம் ஆண்டு போனஸ் சம்பந்தமாக | துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தையில் முடிக்கப்பட்டது. |
| 12. | தனியார் துறை மோட்டார் . தொழிலாளர்கள். | பணி மறுப்பு மற்றும் நிரந்தரப் பணி, குறைந்தபட்சக் கூலி வழங்காமை. | பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. |

தொழிலாளர் துணை ஆணையர், திருச்சி பிராந்தியம்.

| | | | |
|---|---|---|---|
| 13. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் புதுக்கோட்டை | தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டித்தல். | தீர்க்கப்பட்டது. |
| 14. | தமிழ்நாடு மின் வாரியம் புதுக்கோட்டை | ஒப்பந்தத் தொழிலாளர் நிரந்தரம் செய்வது குறித்து. | தீர்க்கப்பட்டது. |
| 15. | இந்துஸ்தான் லீவர் லிட், திருச்சி. | தொழிற்சங்கத் தேர்தல் நடத்துவது தொடர்பாக | தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்), திருச்சி முன்பு பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 16. | தஞ்சாவூர் ஓரியண்டல் டவர்ஸ். | வேலை நீக்கம் செய்யப்பட்ட 14 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கோரியும் மற்றும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட 96 தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க கோரி. | 14 தொழிலாளர்கள் தொடர்பாக, தொழிற் தகராறு எழுப்பப்பட்டு பிரிவு 12(4-ன் கீழ் சமரச முறிவு ஏற்பட்டது. 96 தொழிலாளர்கள் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. |

தொழிலாளர் துணை ஆணையர், மதுரை பிராந்தியம்

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 17. | தமிழ்நாடு மக்னீசியம் மரைன் கெமிக்கல்ஸ் வாலிநோக்கம், இராமநாதபுரம். | தமிழ்நாடு மக்னீசியம் ஆலையை அரசே நடத்த வேண்டி | தற்போது சுமார் 50 பேர் மட்டும் பணியில் உள்ளனர். இதரத் தொழிலாளர்கள் அரசுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தப் பட்டுள்ளனர். |
| 18. | தமிழ்நாடு உப்பு நிறுவனம், வாலிநோக்கம். | சம்பள உயர்வு கோரி | தொழிலாளர் துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. |
| 19. | கணபதி மில்ஸ் கம்பெனி. | பி.எப்., இ.எஸ்.ஐ. மற்றும் மருத்துவச் சலுகை, தொழிலாளர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிடுதல் ஆகியவற்றை வலியுறுத்தி. | தொழிலாளர் துறை சமரச அதிகாரிகள் முன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 20. | இராஜபாளையம் ஸ்பின்னிங் டெக்ஸ்டைல்ஸ் இராஜபாளையம். | தொழிலாளர்களை ஆலை மாற்றம் செய்தது தொடர்பாக. | மதுரை, தொழிலாளர் துணை ஆணையர் முன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. |
| 21. | சுவாமிஜி மில்ஸ், ஏ. மீனாட்சிபுரம் | சம்பள பாக்கி மற்றும் 1996-97ம் ஆண்டுக்கான போனஸ். | தீர்க்கப்பட்டது. |
| 22. | எவரெடி ஸ்பின்னிங் மில், திண்டுக்கல். | 23 தொழிலாளர்களை நிர்வாகம் பணி நீக்கம் செய்ததை எதிர்த்து. | தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. |
| 23. | தனியார் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள். | குறைந்தபட்சக் கூலி பணி நீக்கம், செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்குதல் ஆகியவை குறித்து. | பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. |

தொழிலாளர் துணை ஆணையர், திருநெல்வேலி பிராந்தியம்

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 24. | தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையிலுள்ள மகேஷ் எண்டர்பிரைசஸ். | 7 ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நீக்கம் செய்ததை எதிர்த்து. | 4 தொழிலாளர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 3 தொழிலாளர்களுக்கு இரு தரப்பினருமே பேசிக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| **தொழிலாளர் துணை ஆணையர், கோவை பிராந்தியம்** | | | |
| 25. | சோலையார் எஸ்டேட் | 6 தொழிலாளர்களை பணி நீக்கம் செய்ததை எதிர்த்து. | தீர்க்கப்பட்டது. |
| 26. | ஜெயஸ்ரீ டீ அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சோலையார் எஸ்டேட், வால்பாறை | ஆனைமலை பிளான்டேஷன் லேபர் யூனியன் சங்கத்தினரைப் பழி வாங்குவதைக் கண்டித்து. | தீர்க்கப்பட்டது. |
| 27. | ஸ்ரீவிக்னேஷ்குமார் ஸ்பின்னிங் மில்ஸ், சுல்தான்பேட்டை | சி.ஐ.டி.யு தொழிற் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களை வேலைக்கு அனுமதிக்காதது குறித்து. | தொழிற் தகராறு எழுப்பப்பட்டு பிரிவு 12(4)ன் கீழ் சமரச முறிவறிக்கை அரசுக்கு அனுப்பப் பட்டு அதன் மீது அரசாணை (டி) எண் 112, தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறை, நாள் 19-2-1998ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன |
| 28. | சிவானந்தா மில்ஸ், கோவை. | ஆலையை மீண்டும் திறப்பது குறித்து ஏற்படுத்தப்பட்ட 18(1) ஒப்பந்தத்தை அமல்படுத்தக் கோரி. | ஆலையை மீண்டும் திறந்து இயக்குவது குறித்து நிர்வாகத் தரப்பில் மூலதனத்தைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகவும், வங்கியிடமிருந்து ஒப்புதல் சான்று பெற கால |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | | அவகாசம் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவே மின்சாரப் பிரிவு தவிர மற்ற பிரிவு தொழிலாளர்களுக்கு 9-4-1998 முதல் 9-7-1998 வரை சம்பளமில்லாத லே-ஆப் அளிக்கப் பட்டுள்ளது. |

**தர்ணா**

**தொழிலாளர் துணை ஆணையர்-I, சென்னை பிராந்தியம்**

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம். | வேலைநீக்கம் செய்யப்பட்ட 280 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்ப்பது குறித்து வலியுறுத்துவது. | |
| 2. | பி & சி மில், சென்னை. | பி & சி ஆலையை மீண்டும் திறக்கக் கோரி | பேச்சுவார்த்தையில் உள்ளது.<br>பி & சி ஆலை பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்று தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(3)ன் கீழ் 28-3-1998 அன்று தொழிலாளர் ஆணையர் முன்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. | பீடித் தொழிலாளர், குடியாத்தம். | பீடித் தொழிலின் ஒப்பந்தத் தொழிலாளர்களை நீக்குவது தொடர்பாக. | 1966-ம் வருடத்திய பீடித் தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 2(டி) மற்றும் 2 (இ)ன்படி பீடித் தொழிலில் ஒப்பந்தக்காரர் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர் முறை அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும் இது குறித்து ரிட் மனு எண். 1262/87-ல் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த கட்டளையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்/ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு கட்டளை இட்டுள்ளது. பீடித் தொழிலாளர் சட்டம் மத்திய அரசு சட்டம் என்பதால் இப்பிரச்சினை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசிடமிருந்து பதிலேதும் பெறப்படவில்லை. இந்நிலையில், மத்திய அரசுதான் தேவையான சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும். |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | **தொழிலாளர் துணை ஆணையர்-2, சென்னை பிராந்தியம்** | | |
| 4. | எஸ்.பி.எம்., பெருங்குடி | பொதுவான கோரிக்கைகள் | நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| 5. | ஒயிட் ஹவுஸ் பிராசஸ் (பி) லிட். | பொதுவான கோரிக்கைகள் | நிறைவேற்றப்பட்டுள்ளன. |
| | **தொழிலாளர் துணை ஆணையர், மதுரை பிராந்தியம்** | | |
| 6. | கேணிக்கரை சாலையில் உள்ள பஞ்சாலை சுமை தூக்கும் பணியாளர் மற்றும் பல தொழிலாளர்கள். | மத்திய அரசின் பென்சன் திட்டத்தில் தொழிலாளர்களுக்கு பாதகமாகவுள்ள ஷரத்துக்களை நீக்கக் கோரி. | மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வருவதால் இதில் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 7. | கணபதி மில்ஸ் க்ம்பெனி, விருதுநகர். | தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தக் கோருதல் மற்றும் தொழிற்சங்க விரோத நடவடிக்கை கைவிடக் கோருதல். | தொழிலாளர் துறை சமரச அதிகாரிகள் முன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. |
| 8. | அழகப்பா ஸ்பின்னிங் மில்ஸ், இராஜபாளையம் | 8 நாட்கள், சம்பளப் பிடித்தம் செய்ததை ஆட்சேபிப்பது குறித்து. | தீர்க்கப்பட்டது. |
| 9. | இராஜபாளையம் ஸ்பின்னிங் டெக்ஸ்டைல்ஸ், இராஜபாளையம் | தொழிலாளர்களை ஆலை மாற்றம் செய்தது குறித்து | தொழிலாளர் துணை ஆணையர் முன் பேச்சு வார்த்தையிலுள்ளது. |
| 10. | சத்திரப்பட்டி வட்டார விசைத்தறிக் கூடங்கள் | சம்பள உயர்வு குறித்து | தீர்க்கப்பட்டது. |
| 11. | லட்சுமி ஸ்பின்னர்ஸ், விருதுநகர். | 1996-97-ம் ஆண்டுக்கான போனஸ். | தீர்க்கப்பட்டது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 12. | ஆர். எண்.228, கூட்டுறவு விசைத்தறிக் கூடம், தளவாய்புரம். | ஜுலை 97 முதல் சம்பளம் அளிக்காதது மற்றும் போனஸ் குறித்து. | சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின் கீழ் மனு செய்து பரிகாரம் காணுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 13. | தளவாய்புரம் வட்டார விசைத்தறி கூடங்கள். | 1996-97-ம் ஆண்டுக் கான போனஸ். | தீர்க்கப்பட்டது. |
| 14. | இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல். | சுழல்முறைத் திட்டத்தைச் செயல்படுத்தக் கோரி. | இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் சுழல்முறைத் திட்டத்தை செயல்படுத்தக்கோரி, தொழிற்சங்கம், மதுரை தொழிலாளர், துணை ஆணையர் முன்பு தொழில் தாவா எழுப்பியது தொடர்பாக அரசாணை எண் 195 தொழிலாளர் &வேலைவாய்ப்புத் துறை, நாள் 6-11-1989ல் பிளேஸ்மெண்ட்ஸ், போஸ்டிங்ஸ் மற்றும் மாறுதல்கள் நிர்வாக நடவடிககை எனத் தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்கு விட மறுக்கப் பட்டுள்ளது. |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | | எனவே தொழிற்சங்கம் இந்த பிரச்சினை தொடர்பாக மதுரை தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 9-ஏ-ன் கீழ் மனு செய்ததில் இப்பிரச்சினை தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 9-ஏ-ன் கீழ் வராது என தொழிலாளர் துணை ஆணையரால் உத்தரவிடப்பட்டு தொழிற் சங்கம் இதனை எதிர்த்து டபிள்யூப்பி. எண்.11514/97 தாக்கல் செய்து உள்ளது. |

**தொழிலாளர் துணை ஆணையர், திருநெல்வேலி பிராந்தியம்**

| | | | |
|---|---|---|---|
| 15. | திருநெல்வேலி செய்யது பீடி கம்பெனி | பழையபேட்டை கிளையை மைய அலுவலகத்துடன் இணைக்க நிர்வாகம் முடிவு செய்ததை எதிர்த்து. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

**தொழிலாளர் துணை ஆணையர், கோவை பிராந்தியம்**

| | | | |
|---|---|---|---|
| 16. | ஹைதராபாத் எஸ்டேட், (மகாவீர் பிளான் டேஷன்ஸ்), வால்பாறை. | சம்பளம் வழங்காதது குறித்து. | தீர்க்கப்பட்டது. |
| 17. | எஸ்.ஐ.வி. இண்டஸ்ட்ரீஸ், சிறுமுகை. | 1996-97-ம் ஆண்டுக் கான-போனஸ் குறித்து. | தீர்க்கப்பட்டது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|

**ஊர்வலம்**

*தொழிலாளர் துணை ஆணையர்-1, சென்னை பிராந்தியம்*

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1. | என்.எம்.இசட், நிர்வாகம், ஆம்பூர் | தொழிலாளர் விரோதப் போக்கினை ஆட்சேபித்தல் | தொழிற் தகராறு எழுப்பபப்பட்டு சமரச முறிவு பதிவு செய்யப்பட்டது. |
| 2. | பி & சி மில், சென்னை. | பி&சி ஆலையை மீண்டும் திறக்கக் கோரி | பி & சி ஆலை பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்று தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் 28-3-1998 அன்று ஒப்பந்தம் ஏற்பட்டது. |

*தொழிலாளர் துணை ஆணையர்-2, சென்னை பிராந்தியம்*

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. | டனலப் இந்தியா லிட்., அம்பத்தூர். | தொழிலாளர்களுக்கு ஊதிய இழப்பு குறித்து | பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. |

*தொழிலாளர் துணை ஆணையர், சேலம் பிராந்தியம்*

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. | தனியார் துறை மோட்டார் தொழிலாளர்கள் | பணி மறுப்பு மற்றும் நிரந்தர பணி, குறைந்தபட்சக் கூலி வழங்காமை | பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. |
| 5. | சேலம் கூட்டுறவு நூற்பாலை, சேலம். | 1996-97-க்கான போனஸ் தொகையை இரண்டு தவணையாக வழங்குவது குறித்து ஆட்சேபணை | தீர்க்கப்பட்டது. |
| 6. | ரெல்கோ (பி) லிட்., சேலம். | 1996-97-க்கான போனஸ் குறித்து | தீர்க்கப்பட்டது. |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 7. | சேலம் டெக்ஸ்டைல்ஸ், ஆத்தூர். | போனஸ் தொகை வழங்காமை குறித்து | தீர்க்கப்பட்டது. |
| 8. | டான்சி & பொதுத் தொழிலாளர் சங்கம் | அணி திரட்டப்படாத தொழிலாளர்களைக் காத்திட குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை அரசியல் சட்டப்பிரிவு 9-ல் சேர்த்தல் மற்றும் இதர கோரிக்கை. | இது குறித்து மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால் அரசு மட்டத்தில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது. |
| 9. | தோக்கவாடி பகுதி விசைத்தறி தொழிலாளர்கள். | கூலி குறைத்தலைக் கண்டித்து. | தீர்க்கப்பட்டது. |

*தொழிலாளர் துணை ஆணையர், திருச்சி பிராந்தியம்*

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 10. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | திருச்சி மாநகராட்சியில் குப்பையை அள்ளுவதை தனியாரிடம் விடுவதை எதிர்த்து. | தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) திருச்சி முன்பு பேச்சு வார்த்தை நடைபெறுகிறது |
| 11. | கரூர் மில்ஸ் | 1997-ம் ஆண்டு போனஸ் தொடர்பாக | தீர்க்கப்பட்டது. |

*தொழிலாளர் துணை ஆணையர், மதுரை பிராந்தியம்*

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 12. | கணபதி மில்ஸ் கம்பெனி | ப்பி.எஃப், இ.எஸ்.ஐ. மற்றும் மருத்துவச் சலுகை தொழிலாளர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிடுதல் ஆகியவற்றை வலியுறுத்தி. | தொழிலாளர் துறை சமரச அதிகாரிகள் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. |
| 13. | தளவாய்புரம் வட்டார விசைத்தறிக் கூடங்கள். | 1996-97-ம் ஆண்டுக்கான போனஸ். | தீர்க்கப்பட்டது. |

179—

## பெண்கள் தொழிற்பயிற்சி பள்ளி

**வினா எண் 15230—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுக்கா, எடப்பாடி நகரில் பெண்களுக்கென தொழிற் பயிற்சிப் பள்ளி ஒன்று அரசு சார்பில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரில் பெண்களுக்கென்றே தொழிற் பயிற்சி நிலையம் துவங்குவதற்கான யோசனை தற்போது அரசுக்கு இல்லை.

180—

## சுயவேலைவாய்ப்புப் பயிற்சி

**வினா எண் 19286—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் சுய வேலை வாய்ப்பு பயிற்சி திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்புத் துறை அளவில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை.

அரசாணை எண் 34, (ப) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, 22-2-1996-ன் வாயிலாக, இத்திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தில் 50 இந்து ஆதிதிராவிட மனுதாரர்கள் 1997-98 ஆம் ஆண்டில் தொழில் நுட்பக் கல்வித் தகுதி பெற்றோர்கள் ஒரு மாத காலம் தொழில் முறை ஊக்குவிப்பு பயிற்சி பெற்றுள்ளனர். இப் பயிற்சி பெரியார் மாவட்டத்தில் தற்போது முடிவடைந்து விட்டது.





181—

## சேலம் மாவட்டத்தில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி

**வினா எண் 19287—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் சுயவேலைவாய்ப்பு பயிற்சி திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது?

(ஆ) எடப்பாடி தொகுதியில் எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலை வாய்ப்புத் துறை அளவில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாணை எண் 34, (ப) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, 22-2-1996-ன் வாயிலாக, சேலம் மாவட்டத்தில் 50 இந்து ஆதிதிராவிட மனுதாரர்கள் 1997-98 ஆம் ஆண்டில் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றோர்கள் ஒரு மாத காலம் தொழில் முனைவு ஊக்குவிப்புப் பயிற்சி பெற்றுள்ளனர். இப் பயிற்சி சேலம் மாவட்டத்தில் தற்போது முடிவடைந்து விட்டது.

எடப்பாடி தொகுதி சேலம் மாவட்டத்திற்கு உட்பட்டதாகும். இத் தொகுதியின் விவரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் உள்ளடங்கும்.

[1999 மே 18

**182—**

**துணை வேலைவாய்ப்பு அலுவலகம்**

**வினா எண் 19436—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**183—**

**எடப்பாடியில் தொழிற்பயிற்சிப் பள்ளி**

**வினா எண் 19719—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு தொழிற் பயிற்சி பள்ளி (ஐ.டி.ஐ.) தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**184—**

**மேட்டூருக்கு மீண்டும் துணை வேலைவாய்ப்பு அலுவலகம்**

**வினா எண் 19734—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூரில் இருந்த துணை வேலைவாய்ப்பு அலுவலகம் எடுக்கப்பட்டு விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் இருந்த துணை வேலைவாய்ப்பு அலுவலகம் எடுக்கப்பட்டதை அரசு அறியும்.

(ஆ) அதனை மீண்டும் திறப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**185—**

**கதவடைப்பு செய்யப்பட்ட நிறுவனங்கள்**

**வினா எண் 21478—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ல் கதவடைப்பு செய்யப்பட்ட நிறுவனங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1997 ஜனவரி முதல் 1998 அக்டோபர் வரை தமிழ்நாட்டில் 76 தொழில் நிறுவனங்கள் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 25,900 ஆகும்.

(ஆ) மேற்சொன்ன 76 நிறுவனங்களில் 48 நிறுவனங்களைப் பொறுத்தவரையில், தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனாக ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையிலும், அதிகாரிகள் வழங்கிய அறிவுரைகளின் பேரிலும்

சமரசப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இருதரப்பினரும் நடத்திய நேரடி பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் இந்தப் பிரச்சினைகள் முடிவு பெற்றன. 7 நிறுவனங்களின் பிரச்சினைகள் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளன. 10 நிறுவனங்களின் சமரச முறிவறிக்கை பெறப்பட்டு அவை தொழிலாளர் துறையின் ஆணையர்/ இணை ஆணையர்/ துணை ஆணையர் மட்டத்தில் மீண்டும் பேச்சுவார்த்தை மற்றும் பரிசீலனையில் உள்ளன. 11 நிறுவனங்களின் பிரச்சினைகள் குறித்து சமரச அலுவலர்கள் முன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

**186—**

## மூடப்பட்ட தொழிற்சாலைகள்

**வினா எண் 22687—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூடப்பட்ட தொழிற்சாலைகளை திறந்து இயங்க வைப்பதற்கான சாத்தியம் குறித்து ஆராய நடத்தப்பட்ட மண்டலக் கூட்டங்களின் தொடர் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக இயங்காமலுள்ள நிறுவனங்கள் 43 ஆகும். இவை பெரும்பாலும் நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்குள் மன வேறுபாடு ஆகிய காரணங்களால் மட்டுமே இயங்காமலுள்ளன. இவற்றில் தொழிலாளர் பிரச்சினை காரணமாக எதுவும் மூடப்படவில்லை. மேற்கண்ட 43 நிறுவனங்கள் குறித்த விவரம் பின் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | கலைப்பு அதிகாரி முன் நிலுவையில் உள்ள நிறுவனங்கள் | .. | 11 |
| 2. | பி.ஐ.எஃப்.ஆர்./ஏ.ஏ.எஃப்.ஆர். முன் நிலுவையிலுள்ள நிறுவனங்கள் | .. | 8 |
| 3. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு (சிப்காட்) செலுத்த வேண்டிய பாக்கித் தொகைக்காக கையகப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் | .. | 2 |
| 4. | உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ள நிறுவனங்கள் | .. | 3 |
| 5. | தொழில் தீர்ப்பாயம்/தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டு அவைகள் முன்பு நிலுவையிலுள்ள நிறுவனங்கள் | .. | 12 |
| 6. | பல்வேறு காரணங்களால் மூடப்பட்டு இயங்காமலுள்ள நிறுவனங்கள் | .. | 7 |
| | மொத்தம் | .. | 43 |



மூடப்பட்ட நிறுவனங்களை மீண்டும் இயக்குதல் குறித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஏற்கெனவே கூறியவாறு பெரும்பாலான நிறுவனங்கள் நிதி நெருக்கடி காரணமாக இயங்காமலுள்ள நிலையில் இவற்றைத் திறந்து நடத்துவதற்கு சாத்தியக் கூறுகளில்லாத நிலை உள்ளது.

**187—**

## கதவடைப்பு செய்யப்பட்ட தொழிற்சாலைகள்

**வினா எண் 22698—திரு. கே. சுப்பராயன்.**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1997-98-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் எத்தனை தொழிற்சாலைகள் கதவடைப்புச் செய்துள்ளன?

(ஆ) அவற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997 ஜனவரி முதல் 1998 டிசம்பர் வரை தமிழ்நாட்டில் 84 நிறுவனங்களின் நிர்வாகங்களினால் கதவடைப்பு

செய்யப்பட்டன. அவற்றுள் 37 நிறுவனங்களில் தொழிலாளர் துறை அலுவலர்கள் நடத்திய சமரச பேச்சுவார்த்தைகளில் வழங்கிய அறிவுரைகள் மற்றும் ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் காரணமாக கதவடைப்பு நீக்கப்பட்டன. நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கங்களுக்குமிடையே நேரடிப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் கதவடைப்பு பிரச்சினை தீர்க்கப்பட்டவை 20 ஆகும். 20 நிறுவனங்கள் தொடர்பாக சமரச முறிவறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் 8 நிறுவனங்களின் பிரச்சினை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளன. தற்போது சமரச முறிவறிக்கை அனுப்பப்பட்டு நிலுவையிலுள்ள 12 நிறுவனங்கள் மற்றும் சமரச பேச்சு வார்த்தைகள் நிலுவையிலுள்ள 7 நிறுவனங்கள் ஆக மொத்தம் 19 நிறுவனங்களில் மட்டுமே கதவடைப்பு பிரச்சினை முடிவு ஏற்படாமல் உள்ளது. இவற்றில் 5,194 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**188—**

**உயர் நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என பெயரிடல்**

**வினா எண் 4569—திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை உயர் நீதிமன்றத்தை "தமிழ்நாடு உயர் நீதிமன்றம்" என்று பெயரிட மத்திய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சென்னை உயர் நீதிமன்றத்தை, "தமிழ்நாடு உயர் நீதிமன்றம்" என்று பெயரிடும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், "உயர் நீதிமன்றம், மதராஸ்" என்று அழைக்கப்படும் பெயரை, "உயர் நீதிமன்றம், சென்னை", என்று பெயர் மாற்றம் செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறு பெயர் மாற்றம் செய்ய ஏதுவாக பாராளுமன்றத்தில் இதற்கான ஓர் சட்டம் கொண்டு வரும்படி மைய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது.



**189—**

**பொன்விழா ஆண்டையொட்டி ஆயுட் கைதிகளை விடுதலை செய்தல்**

**வினா எண் 9960—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்திய சுதந்திர தினப் பொன்விழா ஆண்டையொட்டி எட்டு ஆண்டுகளைச் சிறையில் கழித்த ஆயுட் கைதிகளை விடுதலை செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

இந்திய சுதந்திர தினப் பொன்விழா ஆண்டையொட்டி 8 ஆண்டுகள் சிறையில் கழித்த ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய விதிகள் இடமளிக்கவில்லை. எனினும், சுதந்திர தினப் பொன்விழாவினையொட்டி 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையிலிருந்தவர்களை முன்விடுதலை செய்ய 14-8-1997-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**190—**

**திறந்தவெளிச் சிறைச்சாலைகள்**

**வினா எண் 17993—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்பொழுது திறந்தவெளிச் சிறைச்சாலைகள் எங்கெங்கு இயங்கி வருகின்றன?

(ஆ) ஆம் எனில், அவற்றை மேம்பாடு செய்யும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூரில் உள்ள சிங்காநல்லூரில் திறந்த வெளிச் சிறை இயங்கி வருகிறது.

(ஆ) மேம்பாடு செய்யும் உத்தேசம் இல்லை.

[1999 மே 18

191—

## கிளைச் சிறைச்சாலையை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 18137—திரு. ஏ. ராசேந்திரன் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் கிளைச் சிறைச்சாலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

போளூர் கிளைச் சிறைச்சாலை 1-4-1998 முதல் மீண்டும் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது.

192—

## அஞ்சல் வழி சட்டப் படிப்பு

**வினா எண் 19982—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் மூலம் அஞ்சல் வழியில் சட்டப் படிப்பு பயிற்றுவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின மூலம் அஞ்சல் வழியில் சட்டப் படிப்பு பயிற்றுவிக்கும் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால், அத்திட்டம் மேற்கண்ட பல்கலைக்கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இது சம்பந்தமான அங்கீகாரம் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டதும், மேற்கண்ட பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழியில் பட்டயம் மற்றும் சான்றிதழ் சார்ந்த (Diploma and Certificate



1999 மே 18]

Courses) சட்டப் படிப்புகள் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

193—

## சட்டங்களைத் திருத்தி அமைத்தல்

**வினா எண் 21194—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அடிமை இந்தியாவில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்களைத் திருத்தி அமைக்க மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

அடிமை இந்தியாவில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்களைத் திருத்தி அமைக்க மாநில அரசு, மாநில சட்ட ஆணையத்தை அமைத்துள்ளது. இது குறித்த விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண் 216, சட்டத் துறை, நாள் 9-5-1994-ன் வாயிலாக மாநில சட்ட ஆணையத்தை அமைத்துள்ளது.

இவ்வாணையம், மாண்புமிகு திரு. நீதியரசர், மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையில், 28-1-1997 அன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் அதற்குப்பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் பரிசீலனை செய்வதும், அவை இன்றைய காலச் சூழ்நிலைக்கு ஏற்றவையா, இல்லையா என்பது குறித்துக கருத்துத் தெரிவிப்பதும், தேவையானால், அந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைப்பதும், சட்ட ஆணையத்தின் பணிகளாகும். மேலும், சட்ட ஆணையம் மேற்சொன்ன சட்டங்கள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தின் மற்றும் உயர் நீதிமன்றங்களின் பல்வேறு முடிவுகளுக்கு இணங்க உள்ளனவா என்பது குறித்து ஆராய்ந்து, அந்தந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறும். மேலும்,-

(1) தற்போது இருந்து வரும் சட்டங்களில் காணப்படும் குறைகளைக் களைவதற்குத் தக்க மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்துக் கருத்துத் தெரிவுக்குமாறும்;

(2) பொருத்தமான, சமுதாய, பொருளாதார சட்டமியற்றும் நடவடிக்கைகள்பற்றி எடுத்துரைக்குமாறும்;

(3) பன்மாநில உறவுகளுக்கு, மைய—மாநில உறவுகளுக்குமான வழிவகைகளைக் கூறுமாறும்;

(4) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் குறித்து, செம்மையாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்பற்றி கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறும்;

(5) மாநிலச் சட்டங்களுக்கு மட்டும் அல்லாமல் இந்த மாநிலத்திற்குப பொருந்துகின்ற மத்தியச் சட்டங்களுக்கும் கூட, மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் பற்றிக் கருத்துரைகளைத் தெரிவிக்குமாறும் சட்ட ஆணையமானது கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி சட்ட ஆணையம், இதுவரை அரசுக்கு இரண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது. அவ்விரண்டு அறிக்கைகளும் தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைகளுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**194—**

### சேலத்தில் பெண்களுக்கு தனிச் சிறை

**வினா எண் 22270—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலூரில் பெண் கைதிகளுக்கு உள்ளது போல் சேலத்திலும், தண்டனை அடைந்த கைதிகளுக்கு சிறைச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலத்தில் பெண்களுக்கான தனிச்சிறை அமைக்கும் நேர்வு ஏதும் எழவில்லை.

**195—**

### மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைத்தல்

**வினா எண் 22287—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில் அதிக வழக்குகள் தேங்கிக் கிடப்பதால் மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**196—**

### பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 22419—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி சட்டக் கல்லூரியில் பணிபுரியும் முதல்வர் பணியிடம் உட்பட அனைத்துப் பணியிடங்களும் தற்காலிகப் பணியிடங்களாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அனைத்து தற்காலிகப் பணியிடங்களையும் நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**197—**

### பேராசிரியர்கள் நியமனம்

**வினா எண் 23096—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி சட்டக் கல்லூரிக்குப் போதிய பேராசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பேராசிரியர்கள் எப்போது நியமனம் செய்யப்படுவர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்குப் போதிய பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) எழவில்லை.

**198—**

### தென்காசியில் மாவட்ட நீதிமன்றம்

**வினா எண் 23797— திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசியில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**199—**

### தர்மபுரியில் அமர்வு மற்றும் குற்றவியல் நீதிமன்றம்

**வினா எண் 23975—திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரியிலிருந்து மாற்றி மாவட்டத் தலைநகரான தர்மபுரியில் அமர்வு நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

தர்மபுரியில் தற்பொழுதுள்ள வேலைப் பளுவைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணகிரியில் தற்சமயம் செயல்பட்டு வரும் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களை தர்மபுரிக்கு மாற்றி தர்மபுரியில் தனியாக ஒரு கூடுதல் மாவட்ட மற்றும் கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**200—**

### விசைத்தறித் தொழிலாளர்கள்

**வினா எண் 21428—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விசைத்தறியில் பணியாற்றும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்குச் சட்டரீதியான சலுகைகள் கிடைக்கின்றனவா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தற்போதுள்ள 2,75,000 விசைத்தறிகளில் சுமார் 1,36,600 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் 15,229 விசைத்தறிகளில் 6,716 விசைத்தறி நெசவாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) விசைத்தறியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு சட்டரீதியான சலுகைகள் வழங்கப்படுவதாக தகவல் ஏதும் இல்லை. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் நெசவாளர்களுக்கு மட்டும் இன்சூரன்ஸ் திட்டம் செயல்படுத்த கொள்கை அளவில் முடிவு எடுக்கப்படட்டு பிரேரணைகள் அரசின் ஆய்விலு உள்ளது.

## இருபதாம் பட்டியல்

1—

### அமைச்சுப் பணிகளில் பட்டதாரிகள்

**வினா எண் 19207—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டப் படிப்பு மட்டும் படித்த பட்டதாரிகளுக்கு அமைச்சுப் பணிகளில் பணியாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் பணியமர்த்த பள்ளியிறுதித் தேர்வு தேர்ச்சியே (S.S.L.C) குறுமப் பொதுக்கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, பட்டப் படிப்பு முடித்த பட்டதாரிகளும் பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுடன் அமைச்சுப் பணிகளில் பணியாற்றும் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் போட்டியிடலாம்.

(ஆ) கேள்வி எழவில்லை.



1999 மே 18]

2—

### பள்ளிகளில் சுகாதாரக் கல்வி

**வினா எண் 16369—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலும் சுகாதாரக் கல்வி பயிற்றுவிக்க, சுகாதார அதிகாரிகளைப் பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 19087—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் ஒன்றியம் புதுப்பட்டினம் ஊராட்சியில் ஒரு நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசு நிதிநிலை காரணமாக புதுப்பட்டினம் ஊராட்சியில் தற்சமயம் கிளை நூலகம் திறக்க வாயப்பில்லை. இருப்பினும் அவ்வூர் மக்கள் பகுதிநேர நூலகம் திறப்பதற்குத் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தால், அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு ஆவன செய்யப்படும்.

4—

### பாடத் திட்டத்தில் மனித உரிமைகள்

**வினா எண் 23245—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிப் பாடத்திட்டத்தில் "மனித உரிமைகள்" பற்றிய பாடங்களைச் சேர்க்க வேண்டியது குறித்து "தேசிய மனித உரிமைகள் ஆணையம்" வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

5—

### அறுவை சிகிச்சை அரங்கம் தொடங்குதல்

**வினா எண் 14351—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சியிலுள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கத்தை ஏற்படுத்த (Operation Theatre) அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செஞ்சி அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே இயங்கி வரும் அறுவை சிகிச்சை அரங்கம் போதுமானதாக உள்ளது. எனவே புதியதாக அறுவை சிகிச்சை அரங்கம் தற்போது ஏற்படுத்தத் தேவையில்லை.



6—

### ஆதிதிராவிட மக்களுக்குக் குடிநீர் வசதி

**வினா எண் 7551—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில், மத்திக்கோடு, தட்டாண்பறம்புகரை ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கப்பியறை பேரூராட்சியில், மத்திக்கோடு, தட்டாண்பறம்புகரை ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிக்கு பொதுக்குழாய் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

7 -

### பணப் பயிரைப் பயிரிடச் சிறப்புத் திட்டம்

**வினா எண் 22074—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனிதனுக்கு பெரும் கேடு விளைவிக்கின்ற புகையிலை சாகுபடிக்கு பதிலாக பணப் பயிரைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புகையிலை சாகுபடிக்குப் பதிலாக பணப் பயிரைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

[1999 மே 18

8—

## கரும்பு மற்றும் தென்னைக்கு நோய்த் தடுப்பு

**வினா எண் 23116—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு, மற்றும் தென்னைகளில் அடிக்கடி கடுமையான நோய் பரவுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) நோய் வராமல் தடுக்க அரசு தேவையான நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கரும்பு பயிரில் செவ்வழுகல் நோயும், தென்னையில் மஞ்சள் நிறநோயும், ஏரியோபைட் என்னும் சிலந்திப் பூச்சி மற்றும் நத்தைப் புழு என்னும் எரிப்பூச்சி நோயும் தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் தாக்கப்பட்டுள்ளது. அரசு தக்க பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

9—

## நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு

**வினா எண் 9778—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழ் கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிகளில் நிலத்தடி நீர் வேகமாகக் குறைந்து வருவதால், வேளாண்மை பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிலத்தடிநீர் ஆதாரத்தைப் பெருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?.

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1999 மே 18]

(ஆ) நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பொறுத்தமட்டில் பொதுப்பணித் துறையில் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையத்தால் ஆய்வுப் பணி (Investigation Work) மட்டும்தான் மேற்கொள்ளப்படுகிறது. நிலநீர் வளத்தைப் பெருக்குவதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையால் (Agricultural Engineering Department) 1997-98ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் கீழப்பாவூர் ஒன்றியத்தில் ஏழு சிறுபாசனக் குளங்களைப் புதுப்பிப்பதற்காக ரூ.10.38 இலட்சமும் இரண்டு தடுப்பணைகள் (Check Dams) கட்டுவதற்கு ரூ.1.35 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது.

10—

## பணிமனையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 15532—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு போக்குவரத்துக் கழக பணிமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

## சிறப்புப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 21059—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி முத்தையன் திருக்கோவிலுக்கு அமாவாசை தினங்களில் இலட்சக்கணக்கான மக்கள் வருவதால் சிறப்புப் பேருந்து இயக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெண்ணாகரத்திலிருந்து முத்தையன் திருக்கோவிலுக்கு 20-10-1998 முதல் அமாவாசை தினங்களில் சிறப்புப் பேருந்துகள் பயணிகளின் வருகைக்கு ஏற்றாற்போல் இயக்கப்பட்டு வருகிறது.

**12—**

**அறநிலையத் துறையில் பதவி உயர்வு**

**வினா எண் 22370—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் காவலர்களாக இந்து சமய அறநிலையத் துறையில் பணியமர்த்தப்பட்டு உள்ளவர்களில் தகுதியானவர்களை ஓட்டுநர்களாகப் பதவி உயர்வு செய்யக்கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தகுதியானவர்களை ஓட்டுநர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் காவலர்களாக பணியமர்த்தப்பட்டு உள்ளவர்களை ஓட்டுநர்களாக பதவி உயர்வு வழங்க அரசு வகுத்துள்ள நடைமுறை பணி விதிகளில் வழிவகைகள் இல்லை.

**13—**

**பொது விநியோக முறையைச் சீரமைத்தல்**

**வினா எண் 20801—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) பொது விநியோக முறைகளில் குறைபாடுகளை நீக்க அரசு எடுத்துள்ள நிர்வாக நடவடிக்கைகள் என்ன?

(ஆ) அதன் மூலம் குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பொது விநியோக முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு பல நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தணிக்கைக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அனைத்து நியாய விலைக் கடைகளிலும் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு குற்றம் புரியும் நியாய விலைக் கடைப் பணியாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கையும், ரூ.5,000க்கு மேல் முறைகேடுகள் புரியும் பணியாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கையும் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்படுகிறது. பொது விநியோக முறையில் நடைபெறும் முறைகேடுகளைக் களைய மாவட்ட மற்றும் வருவாய் கோட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பொது விநியோக ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நியாய விலைக் கடைகளுக்கு ஒதுக்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு மற்றும் நுகர்வு போன்ற விவரங்கள் மக்கள் பிரதிநிதிகளுக்கு மாவட்ட விநியோக அலுவலர்களால் அனுப்பப்படல் வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் குறைபாடுகள் கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளது.

**14—**

**சுரண்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 15724—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

**15—**

**உசிலம்பட்டியில் சார்பு நீதிமன்றம்**

**வினா எண் 15802— திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டியில் சார்பு நீதிமன்றம் நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டியில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

**16—**

**நீதிமன்றக் கட்டணச் சீர்திருத்தம்**

**வினா எண் 25150—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நீதிமன்றம் மூலம் வரும் வருவாயை அதிகரிக்க, நீதிமன்றக் கட்டணச் சட்டத் திருத்தம் கொண்டுவரும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கொண்டுவரப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நீதிமன்றம் மூலம் வருவாயை அதிகரிக்க, 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் வழக்குகள் மதிப்பீடு சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்வது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

**17—**

**நெசவாளர்களுக்கு வீடுகள்**

**வினா எண் 12410—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் தறியுடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

ஆம். சேலம் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு 1997-98ஆம் ஆண்டிற்கு தறியுடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 137 பயனாளிகளுக்கு வீடுகள் சேலம் சரக உதவி இயக்குநரின் பிரேரணையின் அடிப்படையில் இச்சரகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**18—**

**கழிவு நீரகற்றுதல்**

**வினா எண் 13558—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பால் பண்ணையிலிருந்து வெளியேறும் கழிவு நீரைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களை சுகாதாரக் கேட்டிலிருந்து பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சித்தனூர் கிராமத்தில் அமைந்துள்ள சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் லிமிடெட் என்ற நிறுவனத்திலிருந்து வெளியேறும் செயல்முறைக் கழிவு நீரைச் சுத்திகரித்து வெளியேற்ற தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**19—**

**தோல் தொழிற்சாலைக்குத் தடையின்மைச் சான்றிதழ்**

**QUESTION NO. 4140—THIRU B. VENKATASAMY : Will the Hon. Minister for Handlooms be pleased to state—**

(a) Whether there is any Leather factory running at Chokkarasarpalli, Panchayat in Hosur Taluk called Antil Exports Tannery Ltd. and

(b) Whether any licence has been issued by the Pollution Control Board or by the Panchayat Union Council, Hosur?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(a) ஆம்.

(b) திருவாளர்கள் ஆண்டெல் எக்ஸ்போர்ட்ஸ் (பி) லிட். என்ற தொழிற்சாலை கட்டப்பட 22-5-1995லும், இத்தொழிற்சாலை இயக்கப்படுவதற்கு 27-6-1997-லும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இசைவு ஆணைகளை வழங்கியுள்ளது. ஓசூர் பஞ்சாயத்து யூனியன் இத்தொழிற்சாலைக்குத் தடையின்மைச் சான்றிதழை வழங்கியுள்ளது.



**20—**

**தோல் தொழிற்சாலைகளினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு**

**வினா எண் 14365—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோல் தொழிற்சாலைகளால், வாணியம்பாடி, ஆம்பூர், இராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் குடிநீர், விவசாயம் பாதித்துள்ளதால் விவசாயிகள், தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் ஆகிய முத்தரப்பினரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சா:**

வாணியம்பாடி, ஆம்பூர், இராணிப்பேட்டை பகுதிகளில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் குடிநீர் மற்றும் விவசாயம் பாதிக்காதபடி தடுக்க தமிழக அரசு ஏற்கெனவே முத்தரப்புப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. அதில் உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்ற ஆணைகளைத் தவறாமல் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மற்றொரு முத்தரப்புப் பேச்சு வார்த்தை நடத்த தற்போது அவசியம் இல்லை.

**21—**

**துணித் தேக்கத்தால் நெசவாளர் பாதிப்பு**

**வினா எண் 15960—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துணி தேங்கி விடுவதால் தமிழ்நாட்டில் அடிக்கடி நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) துணி தேங்கி விடுவதால் தமிழ்நாட்டில் அடிக்கடி நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை அரசு அறிந்து

அதனைப் போக்க, 31-3-1998 அன்று தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு, 1-5-1998 முதல் 31-10-1998 வரை உள்ள காலத்திற்கு 20% தள்ளுபடியுடன் கூடுதலாக 10% சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது. அக்காலங்களில் ரூ.202.17 கோடி மதிப்பிற்கு துணி விற்பனை செய்யப்பட்டுள்ளது. லுங்கி ரகங்களுக்கு மட்டும் இச்சிறப்புத் தள்ளுபடி 31-3-1999 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்திட உற்பத்தித் திட்டம் தீட்டி, அதற்கிணங்க ரூ.68.11 கோடி அளவிற்கு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொள்ளும் மொத்த விற்பனைக்கும் 20% தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது. கைத்தறித் துணிகளை, அரசுத் துறைகள்/நிறுவனங்கள், நேரடியாக கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட்டத்தை அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர, 22-5-1998 முதல் 10-6-1998 வரை கைத்தறிக் கண்காட்சி சில நகரங்களிலும் 22-5-1998 முதல் 14-6-1998 வரை சென்னையிலும் நடத்தப்பட்டு, அதன்மூலம் துணித் தேக்கம் குறைக்கப்பட்டுள்ளது.

22—

## துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 15991—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு அருகே கோல்டன் ஈகிள் கம்பெனி அருகில் துர்நாற்றம் வீசுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு அருகே கோல்டன் ஈகிள் (திள்.மோகன் புருவரிஸ் அண்டு டிஸ்டிலெரிஸ் லிமிடெட் கம்பெனி அருகில் (தற்பொழுது பெயர் மாற்றப்பட்டுள்ளது) துர்நாற்றம் வீசுவதை அரசு அறியும்.



(ஆ) துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடவடிக்கை எடுத்ததன் விளைவாக இறந்த ஈஸ்ட் செல்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு நிலத்திற்கு உரமாகப் பயன்படுத்தப்படுவதால் துர்நாற்றம் குறைந்துள்ளது. மேலும் இதர மாசு கட்டுப்பாடு நடவடிக்கையை இத்தொழிற்சாலை மேற்கொள்ளாததால் வாரியத்தின் ஆணைப்படி தற்சமயம் இத்தொழிற்சாலை தன் உற்பத்தியை நிறுத்தியுள்ளது.

23—

## கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்துதல்

**வினா எண் 16224—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்தம் செய்யும் ஆலை நிறுவப்படாத சாயப்பட்டறை உரிமையாளர்கள்மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சாயப்பட்டறைகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தர்மபுரி மாவட்டத்தில் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும கழிவுநீரைச் சுத்திகரிக்க சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்படாத சாயப்பட்டறை உரிமையாளர்கள்மீது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் மொத்தம் 3 ஆலைகள், ஓர் ஆலை சுத்திகரிப்பு நிலையம் அமைத்து செயல்பட்டு வருகிறது. ஓர் ஆலை தற்போது இயங்கவில்லை. மற்றொரு ஆலை கட்டப்பட்டு வருகிறது.

[1999 மே 18

**24—**

**கழிவு நீரால் நிலத்தடி நீர் பாதிப்பு**

**வினா எண் 18188—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் கெம்ப்ளாஸ்ட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு இருப்பதால் ஏற்பட்டுள்ள விவசாயிகளின் நிலையைப் போக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் அமைந்துள்ள திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், ஆலைகள் 2 மற்றும் 3-லிருந்து வெளிவரும் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு குழாய்கள் மூலம் காவிரி ஆற்றின் உபரிக் கால்வாய்மூலம் வெளியேற்றப்படுகிறது. எனவே நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின்மூலம் அறியப்படுகிறது.

**25—**

**தமிழ்நாட்டில் ஜவுளி உற்பத்தி**

**வினா எண் 21569—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியாவின் ஜவுளித் தொழில் துறையில் தமிழ்நாட்டின் பங்கு எவ்வளவு?

(ஆ) தமிழ்நாட்டில் வருடந்தோறும் உற்பத்தியாகும் ஜவுளிப் பொருட்களின் மதிப்பு எவ்வளவு?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்தியாவின் ஜவுளித் தொழில் துறையின் உற்பத்தி, மதிப்பு அதில் தமிழ்நாட்டின் பங்கு ஆகியவை பின்வருமாறு:-

| வரிசை எண் | பொருள் | இந்தியா | தமிழ்நாடு | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | ஜவுளி மற்றும் நூற்பாலைகளின் எண்ணிக்கை (சிறிய நூற்பாலைகள் நீங்கலாக) | 1739 | 801 | 46.06 |
| 2. | கதிர்களின் எண்ணிக்கை | 33.4 மில்லியன் | 11.69 மில்லியன் | 35 |
| 3. | உற்பத்தி | | | |
| | அ. பருத்திநூல் (மில்லியன் கிலோ) | 2125.76 | 854.65 | 40.20 |
| | ஆ. இதர வகை நூல் (மில்லியன் கிலோ) | 745.37 | 111.06 | 14.90 |
| | இ. ஜவுளி (மில்லியன் சதுர மீட்டர்) | 1994 | 144.1 | 7.23 |

**26—**

**விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா எண் 21573—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த இரண்டாண்டுகளில் தொடங்கப்பட்ட விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் உற்பத்திப் பணிகளின் தன்மை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கடந்த இரண்டாண்டுகளில் தொடங்கப்பட்ட விசைத்தறிச் சங்கங்கள் 60 ஆகும்.

[1999 மே 18

(ஆ) அவ்விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு இலவச வேட்டி, சேலை மற்றும் சீருடைத் திட்டங்களின்கீழ் உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டு வருகின்றது.

27—

**அகதிகள் முகாம் புதுப்பித்தல்**

**வினா எண் 18451—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்த நிதியாண்டில் அகதிகளின் முகாமைப் புதுப்பிக்க அரசு செலவிட உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் நிதியாண்டில் அகதிகளின் முகாமைப் புதுப்பிக்க ரூ.3,13,26,200/- செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

28—

**தனி வட்டாட்சியர் பதவிகள் உருவாக்குதல்**

**வினா எண் 20882—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத் துறையில் உள்ளதுபோல மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலும் தனி தாசில்தார் பதவி உருவாக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1999 மே 18]

(ஆ) ஆதிதிராவிடர் நலத் துறையில் உள்ளதுபோல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கீழ் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கு நில எடுப்பு பணிக்காக, அரசாணை நிலை எண்.61, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் 16-6-1998இல் கீழ்க்கண்ட 15 மாவட்டங்களில் ஒவ்வொரு வட்டாட்சியர் பிரிவிலும் தனி வட்டாட்சியர், உதவியாளர் நிலையிலான நில அளவையாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் நிலையிலான வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் - சங்கிலியாளர் பணியாளர்களை உள்ளடக்கிய 15 தனி வட்டாட்சியர் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. காஞ்சிபுரம்
2. வேலூர்
3. கடலூர்
4. தஞ்சாவூர்
5. திருச்சி
6. திருவண்ணாமலை
7. விழுப்புரம்
8. கரூர்
9. மதுரை
10. விருதுநகர்
11. திருநெல்வேலி
12. சேலம்
13. ஈரோடு
14. கோயம்புத்தூர்
15. தர்மபுரி.

29—

**அகதிகள் குடியிருப்பைப் புதுப்பித்தல்**

**வினா எண் 21733—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் அருகில் பவளத்தூரிலுள்ள இலங்கை அகதிகள் குடியிருப்புகள் மழையினால் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் அருகில் பவளத்தூரிலுள்ள இலங்கை அகதிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் 180 குடிசைகள் பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்டவை. அவைகளில் 150 குடிசைகள் 22-5-1998 அன்று ஏற்பட்ட சூறாவளிக் காற்றினாலும், இடியுடன்கூடிய மழையினாலும் சரிந்து விழுந்துவிட்டன. அவைகள் மீண்டும் பொதுப்பணித் துறையினரால் புதுப்பிக்கப்பட்டு இலங்கை அகதிகள் தங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**30—**

**இலங்கை அகதிகள் எண்ணிக்கை**

**வினா எண் 21979—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பெருமாநல்லூர் சந்தையில் இலங்கை அகதிகள் எத்தனை பேர் வசிக்கிறார்கள்?

(ஆ) அவர்களுக்கு மாற்று இடமளிக்க அரசு கருதியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர், பெருமாநல்லூர் அகதிகள் முகாமில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 111 நபர்கள் வசிக்கிறார்கள்.

(ஆ) மாற்று இடமளிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் இல்லை.



1999 மே 18]

**31—**

**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு அச்சடிப்பு**

**வினா எண் 8234—திரு. ஜே.எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசின் பரிசுச் சீட்டுகள் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், தமிழக அரசு அச்சகத்தில் அச்சிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும (ஆ) வரவு-செலவுக் கூட்டத்தொடர் சம்பந்தமான பணிப்பளு காரணமாக 1998 மார்ச் மாதம் மட்டும், அச்சிடப்பட்ட மொத்தம் 234 இலட்சம் பரிசுச் சீட்டுகளில் 90 இலட்சம் அரசு மைய அச்சகத்திலும், மீதி 144 இலட்சங்கள் தனியார் அச்சகத்திலும் அச்சிடப்பட்டன. மற்றபடி, தமிழ்நாடு அரசின் பரிசுச் சீட்டுகள் சென்னை-79, வள்ளலார் நகரிலுள்ள அரசு மைய அச்சகத்தில்தான் அச்சிடப்படுகின்றன. அவை தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுவதில்லை.

**32—**

**முந்திரி ஏற்றுமதி**

**வினா எண் 17066—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-1998 ஆம் நிதியாண்டில் முந்திரி ஏற்றுமதி மூலம் எவ்வளவு தொகை அன்னியச் செலாவணி கிடைத்தது?

(ஆ) முந்திரி விளைச்சலைப் பெருக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திலிருந்து முந்திரி ஏற்றுமதி ஏதும் நேரிடையாக செய்வதில்லை. எனவே, முந்திரி ஏற்றுமதி மூலம் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு அன்னியச் செலாவணி ஏதும் இல்லை.

(ஆ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 1,000 முதல் 1,500 ஹெக்டேர் பரப்பளவிலான பழைய தோட்டங்கள் அனைத்திலும் மேல்காடு வெட்டி, உழவுப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. தேவைப்படும் இடங்களில் மண் அரிப்பைத் தடுத்து மண்வளம் பாதுகாக்க மண்கரை அமைக்கப்படுகிறது. புதிய தோட்டங்களில் வளர்ச்சி குன்றியதாக தென்படும் பகுதிகளில் உரம் வைத்து வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது. வளர்ச்சி முடிந்துவிடும் அனைத்து பழைய தோட்டங்களில் உள்ள மரங்களை வெட்டி புதிய தீவிர ஒட்டுக் கன்றுகள் நடப்பட்டு ஆண்டுதோறும் சுமார் 700 முதல் 900 ஹெக்டேர் வரை மேற்கொள்ளப்படுகிறது.

33—

### சந்தன எண்ணெய் தயாரித்தல்

**வினா எண் 19757—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் அரசு முதலீட்டில் பெரிய அளவில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் அரசு முதலீட்டில் பெரிய அளவில் சந்தன எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கும் எண்ணம் ஏதும் அரசிடம் இல்லை.



34—

### சந்தனக் கட்டைகள் சேமிப்பு

**வினா எண் 20014—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சந்தனக் கட்டைகள் எவ்வளவு சேமிக்கப்பட்டன?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு 1075.247 டன் சந்தனக் கட்டைகள் சேமிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இதன் தோராயமான மதிப்பு மதிப்பிடும் நாளைய விலையில் சுமார் ரூ.53.28 கோடியாகும்.

35—

### புதிய வன உயிரின சரணாலயங்கள்

**வினா எண் 20853—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிதாக வன உயிரின சரணாலயம் எத்தனை தொடங்கப்பட உள்ளது?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் புதிதாக தர்மபுரி, விழுப்புரம், ஈரோடு, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் கோவை ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள வனப் பகுதியில் வன உயிரின சரணாலயம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து

வருகிறது. மேற்கண்ட இடங்கள் வனப் பகுதிகளாக இருப்பதால், 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்புச்) சட்டத்திற்கு, மைய அரசின் சட்டத் திருத்தங்கள் பெற்றபின் வன உயிரின சரணாலயமாக அமைக்கும் ஆணை வெளியிடப்படும்.

**36—**

### வனங்களின் தரத்தை உயர்த்துதல்

**வினா எண் 20854—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தரம் குன்றிய காடுகளைத் தரம் உள்ள காடுகளாக மாற்றுவதற்கும், மக்களுக்கு நன்மைபயக்கும் வண்ணம் செய்வதற்குமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் தரம் குன்றிய காடுகளைத் தரமுள்ளக் காடுகளாக மாற்றவும், மக்களுக்கு நன்மைபயக்க, பலனில் பங்கு பெறும் வண்ணம் செயல் திட்டங்களும் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 1997-98 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு இதுகாறும் 400 கிராமங்கள் பயனடைந்துள்ளன. மேலும் மூன்றாண்டுகளில் 600 கிராமங்கள் பயன்பெறவும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வரும்.

1997-98-இல் (200 கிராமங்கள்) 63,756 ஹெக்டேர் தரம் குன்றிய காடுகளில் காடு வளர்ப்புப் பணிகளுக்குச் செலவு ரூ.45.20 கோடி. 1998-99 (200 கிராமங்கள்) 86,480 ஹெக்டேர் தரம் குன்றிய காடுகளில் காடு வளர்ப்புப் பணிகளுக்குச் செலவு ரூ.94.16 கோடி.

1999-2000-இல் 75,850 ஹெக்டேரில் 100.66 கோடி செலவில் காடு வளர்ப்புப் பணிகள் செய்யப்படவுள்ளன.



**37—**

### தரிசு நிலங்களில் பயன்தரும் மரங்கள்

**வினா எண் 20885—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் பயன்தரும் மரங்கள் ஜப்பானிய பன்னாட்டுப் பொருளாதார கூட்டு நிதி நிறுவனத்தின் நிதியுடன் எந்த அளவு பணி நடந்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

வருவாய்த் துறை, மலைப்புறம்போக்கு மற்றும் இதர அரசு நிலங்களில் ஜப்பானிய பன்னாட்டுப் பொருளாதார கூட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் 1997-98ஆம் நிதியாண்டில் 2652.7 ஹெக்டேர் ரூ.151.61 இலட்சம் செலவிலும் 1998-99ஆம் நிதியாண்டில் 4500 ஹெக்டேர் சுமார் 188.18 இலட்சம் செலவிலும் பயன்தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன. தொடர்ந்து பணி நடந்து வருகிறது.

**38—**

### சாலை ஓரங்களில் மரம் நடுதல்

**வினா எண் 21430—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு சாலை ஓரங்களில் மரம் நட்டுப் பராமரிக்க உதவித் தொகை வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**39—**

## திடக் கழிவுகளை வெளியேற்றுதல்

**வினா எண் 21512—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகள், ஆலைகள், வணிக வளாகங்களிலிருந்து வெளியாகும் திடக் கழிவுகளை அப்புறப்படுத்த உரிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீடுகள் மற்றும் வணிக வளாகங்களிலிருந்து வெளியாகும் திடக் கழிவுகளை அப்புறப்படுத்தும் பொறுப்பு உள்ளாட்சிகளைச் சார்ந்ததாகும். தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் திடக் கழிவுகளை மேலாண்மை செய்தல், அகற்றுதல் ஆகியவை தொழிற்சாலைகளின் பொறுப்பாகும். இதனைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

**40—**

## காடு வளர்ப்பு

**வினா எண் 21677—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தரங்குறைந்த காட்டுப்பகுதியின் பரப்பு எவ்வளவு?

(ஆ) அவற்றின் தரத்தை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) 7,000 சதுர கிலோ மீட்டர்.

(ஆ) காடு வளர்ப்பு மண்வளப் பணி, மேற்கு/கிழக்கு மலைத் தொடர்ச்சி மேம்பாடு மற்றும் நீலகிரி மலைப் பிரதேச மேம்பாடு ஆகிய திட்டங்கள்மூலம் மக்களை ஈடுபடுத்தியும் கூட்டு வன நிர்வாக முறையிலும் தரங்குறைந்த காடுகளில் மேம்பாட்டுக்காக திட்டமிடப்பட்டுள்ளது.

**41—**

## ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடு கட்ட கடன் உதவி

**வினா எண் 2092—டி. மணி:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-1996-இல் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலம் வீடு கட்டுவதற்கு வழங்கப்படவேண்டிய தொகை ரூ.61,72,800/- தமிழ்நாடு கூட்டுறவு இணையத்தில் நிலுவையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொகை எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1995-96ஆம் ஆண்டிற்கான ஊரக வீட்டு வசதி திட்டத்தின் கீழ் இச்சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.61,72,800/-க்கான அனைத்து கடன்களும் தமிழ்நாடு கூட்டுறவு இணையத்தின்மூலம் வழங்கப்பட்டுவிட்டன. இணையத்திடம் கடன் பட்டுவாடா ஏதும் நிலுவையில் இல்லை.

42—

**தொழிலாளர்களுக்குக் குடியிருக்கும் வீடுகளைச் சொந்தமாக்குதல்**

**வினா எண் 11486—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, காவேரி நகர், சத்தியமூர்த்தி காலனியில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்குக் குடியிருக்கும் வீடுகளைச் சொந்தமாக்கித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

ஆவன செய்யும்.

43—

**மோசடி நபர்களின் தவறான பத்திரப் பதிவு**

**வினா எண் 1680—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலப்பட்டாதாரர்களுக்கே தெரியாமல் மோசடி நபர்கள் மூலம் பத்திரப் பதிவு நடந்துள்ளதாக ஏதேனும் புகார்கள் அரசிற்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) நிலப்பட்டாதாரர்களுக்கே தெரியாமல் மோசடி நபர்கள் மூலம் பத்திரப் பதிவு செய்தது தொடர்பாக புகார்கள் சில சமயத்தில் வரப்பெறுகின்றன.

(ஆ) மோசடி என்று தெரிந்தால பதிவு செய்யப்படுவதில்லை.



44—

**சிறுதொழில் நிறுவனச் சீரமைப்பு**

**வினா எண் 6866—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (டான்சி) தற்போது நட்டத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிர்வாகத்தைச் சீரமைப்பது குறித்து அரசு ஆலோசிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) உள்ளிட்ட நட்டத்தில் இயங்கிவரும் அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்து மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை பரிந்துரை செய்வதற்காக வல்லுநர்கள் குழு ஒன்று சமீபத்தில் அரசால் அமைக்கப்பட்டு உள்ளது.

45—

**குழந்தைகள் காப்பகம் அமைத்தல்**

**வினா எண் 8312—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரகத் தொழல் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கே.எஸ்.பேட்டைகுக்கிராமத்தில் புதிதாக ஒரு குழந்தைகள் காப்பகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், தாரமங்கலம் தொகுதியில் கே.எஸ். பேட்டை குக்கிராமத்தில் பள்ளி சத்துணவு மையம், குழந்தைகள் சத்துணவு மையம் ஆகியவை ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்படுகின்றன.

46—

**பட்டு நூற்பு ஆலையை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 11558—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குயிலம் கிராமம், ஆதிதிராவிடர் பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றுவோர் கூட்டுறவு ஆலை இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் செங்கம் தொகுதி, குயிலம் கிராமம், ஆதிதிராவிடர் பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றுவோர் கூட்டுறவு நூற்பாலை 1991-92-ஆம் ஆண்டிலிருந்து செயல்படாமல் உள்ளது.

(ஆ) இந்த ஆலை ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆகும். நட்டத்தில் இருப்பதால், கூட்டுறவுச் சங்கமாக தொடர்ந்து நடை பெற வாய்ப்பில்லை.



47—

**தொழிற்பேட்டை தொடங்குதல்**

**வினா எண் 13114—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, பாலகிருஷ்ணாபுரம் ஊராட்சி பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் தொகுதி, பாலகிருஷ்ணாபுரம் கிராமத்தில் புல எண் 196-இல் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு தெரிவு செய்யப்பட்டு சிட்கோவிற்கு நில மாற்றம் செய்யும் கருத்துரு, மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சிட்கோவின் பெயரில் நில மாற்றம் செய்யப்பட்ட பின்னர், தொழிற்பேட்டை அமைக்கும் பணி தொடங்கப்படும்.

48—

**சார் பதிவாளர் அலுவலகம் தொடங்குதல்**

**வினா எண் 14222—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரத்தில் புதிய சார் பதிவகம் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**49—**

**தொழிற்பேட்டை தொடங்குதல்**

**வினா எண் 14937—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

**சார் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்**

**வினா எண் 16018—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் பத்திரப் பதிவு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**51—**

**முத்திரைத்தாள் முகவர்களை அதிகப்படுத்துதல்**

**வினா எண் 18818—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முத்திரைத்தாள்கள் எளிதில் கிடைக்க விற்பனையாளர்களின் நியமனத்தை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கூடுதலாக 1,524 முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**52—**

**பெண்ணாகரத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்**

**வினா எண் 20150—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் பெண்ணாகரத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

53—

## சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 21235—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயிலில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயிலில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

## முட்டை விநியோகம்

**வினா எண் 21685—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு முட்டையை அழுகிய நிலையில் விநியோகம் செய்த ஒப்பந்தக்காரர்கள்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

1. கெட்டுப்போன முட்டைகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களைத் தற்காலிகமாக ரத்து செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை மேற்கொண்டு, பின் இறுதி முடிவு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

2. விருதுநகர், திருநெல்வேலி, நாகப்பட்டினம், சிவகங்கை, சேலம், கடலூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தத்தை ரத்து செய்து ஆணையிட்டுள்ளனர்.

3. வேலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்பந்ததாரர்களை எச்சரித்து, மீண்டும் முட்டை வழங்க அனுமதி அளித்துள்ளனர்.

4. மதுரை மற்றும் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்பந்ததாரர்கள் மீது விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

5. ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்ட மாவட்டங்களுக்கு முட்டை விநியோகம் தடைபடாமல் நடைபெற புதிய ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு முட்டை விநியோகம் செய்து வருகின்றனர்.

55—

## சத்துணவில் அழுகிய முட்டைகள்

**வினா எண் 22106—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சத்துணவுக்காக அளிக்கப்பட்ட முட்டைகளில் எவ்வளவு முட்டைகள் அழிக்கப்பட்டன?

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் எவ்வளவு முட்டைகள் அழுகிய நிலையில் இருந்து அழிக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், சேலம் மாவட்டத்தில் காக்கப்பாளையம் செல்வி குளிர்பதன அறையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் முடக்கப்பட்டிருந்த 27,78,630 முட்டைகள் தேவனகவுண்டனூர் கிராமத்தில் அழிக்கப்பட்டது.

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் முட்டைகள் ஏதும் அழிக்கப்படவில்லை.

56—

**சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா எண் 24458—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி சார்பதிவாளர் அலுவலகம் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை —

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி சார்பதிவகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசால் நிர்வாக ஒப்பளிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

57—

**சேலம் அரசுப் பொருட்காட்சி**

**வினா எண் 19350—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசுப் பொருட்காட்சியில் இந்த ஆண்டு இலாபம் கிடைத்த தொகை எவ்வளவு?



(ஆ) அதில் மாநகராட்சிக்கு எவ்வளவு இலாபத் தொகை செலுத்தப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பொருட்காட்சியில் இந்த ஆண்டு (1997-98ஆம் ஆண்டு) இலாபம் கிடைத்த தொகை ரூ.32,76,722 ஆகும்.

(ஆ) அதில் சேலம் மாநகராட்சிக்குச் செலுத்தப்பட்ட இலாபத் தொகை ரூ.12,59,643 ஆகும்.

58—

**கோழி முட்டைகள் ஏற்றுமதி**

**வினா எண் 7061—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கோழி முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

59—

## கால்நடை மருத்துவமனை தொடங்குதல்

**வினா எண் 7452—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பொங்குபாளையம் ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கக் கோரி அரசிற்கு ஊராட்சியிலிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

60—

## கால்நடை துணை சுகாதார நிலையம்

**வினா எண் 8311—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள பைப்பூரில் ஒரு கால்நடை துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



61—

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 9633—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை ஒன்றியம், கற்குடி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை ஒன்றியம், கற்குடி பகுதியில் கால்நடை கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ இல்லாத நிலையில் நேரிடையாக கால்நடை மருத்துவமனை அமைக்க இயலாது.

62—

## தோப்பநாயகம் கிராமத்திற்குக் கால்நடை மருத்துவமனை

**வினா எண் 10352—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, தோப்பநாயகம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1999 மே 18

63—

**ரெட்டவயல் கிராமத்திற்குக் கால்நடை மருந்தகம்**

**வினா எண் 12610—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் கிராமத்திற்குக் கால்நடை மருந்தகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

64—

**அதம்பை கிராமத்திற்குக் கால்நடை மருந்தகம்**

**வினா எண் 12612—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், அதம்பை கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், அதம்பை கிராமத்தில் கால்நடை மருந்தகம் புதிதாக அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



1999 மே 18]

65—

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

**வினா எண் 12614—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாட்டில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.

66—

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

**வினா எண் 13559—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, சரக்கல்பிள்ளையூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

67—

**கால்நடை ஆய்வாளர்கள் நியமித்தல்**

**வினா எண் 13982—திரு. மீ.அ. வைத்தியலிங்கம் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம், திருநீர்மலை கால்நடை பகுதி நேர மருந்தகங்களில் கடந்த சில மாதங்களாக கால்நடை ஆய்வாளர்கள் இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிட்லபாக்கம் கிளை நிலையம், கால்நடை ஆய்வாளர் (நிலை-I) பதவி உயர்வு பெற்றதால் அக் கிளை நிலையப் பணிகளை கவனிக்க உள்ளேற்பாடுகள் செய்யப்பட்டன. திருநீர்மலை கிளை நிலைய பணிகளை நிரந்தரமாக கவனிக்க கால்நடை ஆய்வாளர் பதவி (நிலை-I) நிரப்பப்பட்டுள்ளது.

68—

**கால்நடை மருத்துவமனையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 13991—திரு. க. மணிவர்மா :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டு கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

69—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 13992—திரு. க. மணிவர்மா :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, ராயண்டபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதுமில்லை.

70—

**வயலூர் கிராமத்திற்குக் கால்நடை மருந்தகம்**

**வினா எண் 14709—திரு. ந. பாண்டுரங்கன் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வயலூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்து தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

71—

**கால்நடை கிளை மருந்தகம் அமைத்தல்**

**வினா எண் 14943—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ராஜாமடத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ராஜாமடத்தில் கால்நடை கிளை நிலையம் தொடங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

72—

**மல்லிப்பட்டினத்திற்குக் கால்நடை மருந்தகம்**

**வினா எண் 15290—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினத்தில் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1999 மே 18]

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

73—

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

**வினா எண் 16235—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், தாராபுரம் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் எவ்வித செயற்குறிப்புமில்லை.

74—

**கிளை கால்நடை மருந்தகம் தொடங்குதல்**

**வினா எண் 16236—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியில் கிளை காலநடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் ஒன்றியத்தில் புதுப்பாளையம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

[1999 மே 18

75—

### கால்நடை மருத்துவமனை தொடங்குதல்

**வினா எண் 16238—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, கே.கே. நகரில் கால்நடை மருத்துவமனை புதிதாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் எவ்வித செயற்குறிப்புமில்லை

76—

### வேம்பனேரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை

**வினா எண் 16240—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரி ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.



1999 மே 18]

77—

### கால்நடை மருந்தகம் தொடங்குதல்

**வினா எண் 18914—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எட்டிக்கொட்டைமேட்டில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

78—

### கால்நடை மருத்துவமனை தொடங்குதல்

**வினா எண் 19168—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஒன்றியம், மேமுட்டுக்கூர் ஊராட்சி, [illegible], தட்டான்குட்டை, காக்காத்தோப்பு மற்றும் சுற்று வட்டார கிராம மக்கள் பயன்பெறும் வகையில் இங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**79—**

**கால்நடை கிளை அமைத்தல்**

**வினா எண் 19174—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

**80—**

**கால்நடை கிளை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 20024—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, சவளக்காரன் என்ற ஊரில் கால்நடை கிளை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இதுகுறித்த செயற்குறிப்பு ஏதும் இல்லை.



1999 மே 18]

**81—**

**கால்நடை மருந்தகங்களுக்கு மருந்துகள் வழங்குதல்**

**வினா எண் 20982—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கால்நடைப் மருந்தகங்களுக்குப் போதிய அளவு மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு முதல் மருந்துகள வாங்குவதற்கு ரூ.30,000-லிருந்து ரூ.35,000 ஆக நிதி உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

**82—**

**கால்நடைப் பராமரிப்புத் துறைக்குக் கணிப்பொறி வசதி**

**வினா எண் 20983—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை தொடர்பான அனைத்து புள்ளி விவரங்களையும் சேகரித்து வைக்கவும், நோய், இன அபிவிருத்தி தொடர்பான தகவல்களைச் சேகரித்து, சர்வதேச அளவில் கால்நடை நோய்கள் பற்றிய அமைப்புகளுக்குத் தகவல் தரவும் கணிப்பொறிகளை, (மாடர்ன் கம்ப்யூட்டர்) தலைமை அலுவலகத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இச்செயல்பாட்டிற்குக் கால்நடைப் பராமரிப்புத் துறை தலைமை அலுவலகத்தில் தற்போது 10 கணிப்பொறிகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

[1999 மே 18

83—

### கோழிப் பண்ணைத் தொழிலை விரிவுபடுத்துதல்

**வினா எண் 21548—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 1998-99ஆம் ஆண்டு கோழிப் பண்ணைத் தொழிலை விரிவுபடுத்த அரசு எடுத்த சிறப்பு நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் கோழிப் பண்ணைத் தொழிலை விரிவுபடுத்தும் சிறப்பு செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

84—

### நாமக்கல்லில் கோழிப் பண்ணைத் தொழில்

**வினா எண் 21549—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டத்தில் 1998-99ஆம் ஆண்டு கோழிப் பண்ணைத் தொழிலை விரிவுபடுத்த அரசு எடுத்த சிறப்பு நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் கோழிப் பண்ணைத் தொழிலை விரிவுபடுத்த 1998-99-ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் குளிர்பதன திட்ட வங்கி ஒன்றை ரூ. 9.00 இலட்சம் செலவில் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.



1999 மே 18]

85—

### கறிக் கோழி பதப்படுத்தும் நிலையம்

**வினா எண் 21550—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கறிக் கோழிகளைப் பதப்படுத்தும் நிலையங்களைத் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) இதுவரை எந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கறிக் கோழிகளைப் பதப்படுத்தும் நிலையங்களை அரசு சார்பில் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இதுவரை எந்த மாவட்டத்திலும் தொடங்கவில்லை".

86—

### தருமபுரியில் கோழிப் பண்ணை

**வினா எண் 21553—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டு கோழிப் பண்ணைத் தொழிலை விரிவுபடுத்த அரசு எடுத்த சிறப்பு நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் கோழிப் பண்ணைத் தொழிலை விரிவுபடுத்தும் சிறப்பு செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

[1999 மே 18

87—

**கால்நடைக் கல்லூரி தொடங்குதல்**

**வினா எண் 21689—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் கால்நடைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) திருநெல்வேலியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

88—

**கால்நடைக் கிளை நிலையம்**

**வினா எண் 22144—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதியில் அரசு ஒப்புதல் அளித்துள்ள பகுதி நேர கால்நடைக் கிளை நிலையங்கள் இன்னும் தொடங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதியில் அரசு ஒப்புதல் அளித்துள்ள பகுதி நேர கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்கப்பட்டு 20-4-1998 முதல் செயல்பட்டு வருகின்றன.



1999 மே 18]

89—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 22341—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஹள்ளியில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

90—

**சின்னக்கடமடையில் கால்நடைப் மருத்துவமனை**

**வினா எண் 22343—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன் ஹள்ளி ஊராட்சி, சின்னகடமடையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

91—

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

**வினா எண் 22344—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், சேப்பளநத்தத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

92—

**ராஜகொல்லஹள்ளியில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 22345—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சின்னபங்குநத்தம் ஊராட்சி, ராஜகொல்லஹள்ளியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

93—

**கால்நடை பார்வையிடும் நிலையம்**

**வினா எண் 22555—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், துவரங்கோடு கிராமத்தில் கால்நடைப் பார்வையிடும் நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், துவரங்காடு கிராமத்தில் தற்போது கால்நடை பார்வையிடும் நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

94—

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 23016—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஒன்றியத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**95—**

### சாதிச் சான்றிதழ் வழங்குதல்

**வினா எண் 5384—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகரில் வசிக்கும் இருளர் இனத்தவருக்கு சாதிச் சான்றிதழ் வழங்க மறுக்கப்படுவதால், மனைப் பட்டா மற்றும் இதர சலுகைகள் கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இருளர் இன மக்கள் இருளர் சான்று கோரி கொடுத்த மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை. இருளர் சான்று கோரி இருளர் இன மக்கள் எதிர்காலத்தில் மனுச் செய்தால் உரிய விசாரணை செய்து தகுதியின் அடிப்படையில் சாதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

**96—**

### மனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 6207—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 18]

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பு.உடையூரில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பு.உடையூரில் வசிக்கும் 156 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு 17.12.1997 அன்று இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**97—**

### ஆதிதிராவிடர்களுக்கு மனைப் பட்டா

**வினா எண் 6208—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கோவிலாம்பூண்டியில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கோவிலாம்பூண்டியில் வசிக்கும் 100 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு 17-12-1997 இல் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

98—

## 'தாட்கோ' மூலம் மானியம்

**வினா எண் 7827—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில் தாட்கோ மூலம் மானியம் பெற்றவர்கள் எத்தனை பேர்? கடன் வழங்காத வங்கிகளிடம் இருந்து மானியம் திரும்பப் பெறப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நபர்களின் மானியம் திரும்பப் பெறப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் தாட்கோ மூலம் மானியம் பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 12,131. கடன் வழங்காத வங்கிகளிடருந்து மானியம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

(ஆ) 1996-97 ஆம் ஆண்டில் 390 நபர்களுக்குரிய மானியம் வங்கிகளிடமிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.

99—

## சமூகவியலாளர் குழு அமைத்தல்

**வினா எண் 11695—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்ககாணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜாதியக் கூட்டமைப்பைத் தகர்க்க பொருத்தமான வழிமுறைகளை உருவாக்கி, முன்மொழிவதற்கான சமூகவியலாளர் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமத்துவ சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்த தனியாக "சமுதாய சீர்த்திருத்தத் துறை" ஒன்றை ஏற்படுத்த சமூகவியல் வல்லுநர்களைக்கொண்ட வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

100—

## மாணவர் இல்லம் கட்டுதல்

**வினா எண் 11735—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியில் 1997-98 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு புதிய மாணவர் இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இக்கேள்விக்கு இடமில்லை. எடப்பாடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

101—

## எடப்பாடியில் சமத்துவபுரம்

**வினா எண் 18681—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "சமத்துவபுரம்" எடப்பாடி தொகுதியில் எங்கு அமைக்கப்படவுள்ளது?

(ஆ) அது எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் "சமத்துவபுரம்" அமைக்க நடப்பு நிதியாண்டில் உத்தேசம் ஏதுமில்லை.

**102—**

**சமத்துவபுரம் தொடங்குதல்**

**வினா எண் 22440—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் முழுவதும் மற்றும் எடப்பாடி தொகுதியைச் சார்ந்த மகுடஞ்சாவடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், எடப்பாடி ஒன்றியம் ஆகிய இடங்களில் சமத்துவபுரம் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் இதுவரை 3 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறப்பு விழா செய்யப்பட்டுள்ளது. நான்காவது சமத்துவபுரம் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு சேலம் வட்டம் நெய்காரப்பட்டி கிராமத்திலும், சங்ககிரி வட்டம், கத்தேரி கிராமத்திலும், 1998-99 ஆம் ஆண்டிற்கு மேட்டூர் வட்டம் கோனூர் கிராமத்திலும், சேலம் வட்டம், சின்ன சீரகாபாடி கிராமத்திலும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 1998-99 ஆம் நிதியாண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு 2 சமத்துவபுரம் என்று நிர்ணயிக்கப்பட்ட இலக்கு அடையப்பட்டுவிட்டது.



**103—**

**உடனடி சாமி தரிசனம்**

**வினா எண் 23720—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பதி செல்லும் பக்தர்கள் உடனடி சாமி தரிசனம் செய்ய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இருந்து நடைமுறைப் படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருமலை திருப்பதி தேவஸ்தானம் உடனடி சாமி தரிசனம் செய்ய (ஊஞ்சல் சேவை) அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**104—**

**கதர் கிராமத் தொழிற்கூடம் அமைத்தல்**

**வினா எண் 19132—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் ஒரு கதர் கிராமத் தொழிற்கூடம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மகுடஞ்சாவடியில் உள்ள மக்கள் விவசாய வேலைக்கும், காட்டு வேலைக்கும் சென்று விடுவதால், அப்பகுதி மக்களுக்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அலகுகள் மூலம் நூற்புப் பணி மற்றும் கிராமத் தொழில் செய்வதற்கு போதிய ஆர்வமின்மையால் பணி செய்திட முன்வருவதில்லை. எனவே, அங்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில்

கிராமிய நூற்பு நிலையம் மற்றும் அலகுகள் தொடங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

**105—**

**மீன் வளத் துறையில் வேலைவாய்ப்பு**

**வினா எண் 5161—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மீன் வளத் துறை கடல்வாழ் உயிரின உயராய்வு மையத்தில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுவது குறித்து அரசு எடுத்த நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மீன் வளத் துறையில் மீன் துறைப் பணியின்கீழ் வரும் மீன் துறை உதவி இயக்குநர் பதவி மற்றும் மீன் துறை சார்நிலைப் பணியின் கீழ் வரும் மீன் துறை ஆய்வாளர்/ஆராய்ச்சி உதவியாளர் பதவி ஆகியவற்றிற்கான நேரடி நியமனங்களில், கடல் உயிரியல் பாடத்தில் எம்.ஏ./எம்.எஸ்.சி. மற்றும் டாக்டரேட் பட்டம் பெற்றவர்கள் போட்டியிட விதிகளில் இடமுள்ளது. எனினும் மேற்கண்ட பதவிகளில் நேரடி நியமனம் செய்திட எம்.எப்.எஸ்.சி. மற்றும் பி.எப்.எஸ்சி பட்டம் பெற்றவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதால் கடல்வாழ் உயிரின உயராய்வு மையத்தில் பட்டம் பெற்றவர்கள் வேலைவாய்ப்பினை பெற இயலவில்லை.

**106—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 13994—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணையில் மீன் பிடிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணையில் மீன் பிடிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வீடு கட்டித்தர 95 பயனீட்டாளர்களது பத்திர நகலை பட்டா மற்றும் குடும்ப அட்டையின் நகலுடன் இணைத்து விழுப்புரம் (மண்டலம்) மீன் துறை உதவி இயக்குனரால் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர்/திட்ட அலுவலருக்கு 4.2.1998 அன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 11 உள்நாட்டு மீனவர்களுக்கு பட்டா வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**107—**

**தார்ச் சாலை வசதி**

**வினா எண் 14941—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் கடற்கரைக்கு அருகிலுள்ள அடைக்கத்தேவன் மற்றும் மீனவர்கள் குடியிருப்புகளுக்கு தார்ச் சாலை வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1999 மே 18

108—

### மீனவர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 14948—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சரபேந்திரராஜபட்டினம் ஊராட்சியில் சின்னமலை கிராமத்தில் மீனவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

109—

### மீன்காட்சிசாலை ஆண்டு வருமானம்

**வினா எண் 16176—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரையிலுள்ள மீன்காட்சிசாலை மூலம் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) அந்த வருமானத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மெரினா கடற்கரையிலுள்ள மீன் காட்சியகம் மூலம் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.3,08,004 வருமானம் கிடைத்துள்ளது.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் மெரினா மீன்காட்சியகத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து புதுப்பிக்க ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசிற்கும் மெரினா



1999 மே 18]

மீன்காட்சியகத்தை புதுப்பிப்பதற்காக ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கக்கோரி கருத்துரு தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது. பழுதுபார்க்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் மெரினா கடற்கரை மீன்காட்சியகத்தின் பார்வையாளர்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதால் கூடுதல் வருவாய் பெற வாய்ப்புள்ளது.

110—

### குளிர்ச்சாதன வசதியுடன் மீன்காட்சிசாலை

**வினா எண் 16177—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரையில் அமையப் பெற்ற அரசு மீன்காட்சிசாலையை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் முற்றிலும் குளிர்சாதன வசதியுடன் புனரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

111—

### கடனுதவி பெறும் மீனவருக்கு மானியம்

**வினா எண் 16594—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் வளர்ப்பு முகமை ஏற்படுத்தியுள்ள பகுதிகளில் கடனுதவி பெற எண்ணுவோருக்கு மானியத் தொகை வழங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மானியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) மானியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

**112—**

**மீனவருக்கு தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 17046— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஏற்கெனவே தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**113—**

**இறால் மீன் உற்பத்தி**

**வினா எண் 17054—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கடல் பகுதியில் இறால் மீன் எங்கு அதிகம் உள்ளது?

(ஆ) கடந்த 1997-98-ல் வெளிநாட்டில் என்ன விலைக்கு விற்றது?





விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக கடல் பகுதியில் இறால் மீன்கள் இராமநாதபுரம் மாவட்டம் கடல் பகுதியில் அதிகம் கிடைக்கின்றன. அதற்கு அடுத்து, முறையே நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை கடல் பகுதிகளில் கிடைக்கின்றன.

(ஆ) அது கடந்த 1997-98-ல் மற்ற கடல் பொருட்களுடன், தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ரூ.1218.21 கோடிக்கு ஏற்றுமதியாகி அந்நிய செலாவணியை ஈட்டியுள்ளது. இதில் இறாலின் மதிப்பு மட்டும் ரூ.1048.30 கோடியாகும்.

**114—**

**தூண்டில் வளைவு கட்டுதல்**

**வினா எண் 17948—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மார்த்தாண்டம் துறை பகுதியிலும், பூத்துறை பகுதியிலும் தூண்டில் வளைவு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மார்த்தாண்டம் மற்றும் பூத்துறை பகுதிகளில் தூண்டில் வளைவு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

[1999 மே 18

115—

**மீன்பிடி இறங்குதளங்கள்**

**வினா எண் 21172—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மீன்பிடி இறங்குதளங்கள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) அங்கிருந்து விற்பனை இடங்களுக்கு மீன்களை எடுத்துச் செல்ல இணைப்புச் சாலை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 362 மீன்பிடி இறங்குதளங்கள் உள்ளன.

(ஆ) மீன்பிடி இறங்குதளங்களிலிருந்து விற்பனை இடங்களுக்கு மீன்களை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக, இதுவரை 193.724 கி.மீ. நீளத்தில் 144 சாலைகள் ரூ.285.65 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன.

116—

**விசைப்படகுகளுக்கு டீசல் மானியம்**

**வினா எண் 21175—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் விசைப் படகுகள் செயல்படும் கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து டீசல் பங்குகளிலும் டீசல் மானியம் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் விசைப் படகுகள் செயல்படும் கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடி துறைமுக வளாகத்திற்குள் அமைந்துள்ள டீசல் பங்குகள் தவிர பிற பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து டீசல் பங்குகளிலும் டீசல் மானியம் அளிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



117—

**மீன் விற்பனைக்கு வேன்கள்**

**வினா எண் 21176—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு, மீனை விற்பனை ஸ்தலங்களுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக வேன்கள் போன்ற வாகனங்களை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர் :**

உள்நாட்டு மீன் விற்பனையைப் பெருக்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதியுதவியுடன் 100 விழுக்காடு மானிய அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டத்தின்படி தகுந்த மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பெட்டியுடன்கூடிய வாகனங்கள் வழங்கப்படுகின்றன.

118—

**மீன் வளக் கல்லூரியில் பட்டதாரிகள்**

**வினா எண் 21192—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் வளக் கல்லூரியில் இதுவரை பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் வேலை வழங்கப்பட்டுவிட்டதா?

[1999 மே 18

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97-ம் ஆண்டு முடிய மீன்வள அறிவியலில் இளங்கலைப் பட்டம், முதுகலைப் பட்டம் மற்றும் டாக்டர் பட்டம் பெற்று வெளியேறியவர்கள் 286 பேர்.

(ஆ) அரசு துறையில் வேலை பெற்றவர்கள் 95 பேர். தனியார் துறையில் வேலை பார்ப்பவர்கள் மற்றும் வேலை பெறாதவர்கள் 191 பேர்.

**119—**

**முகத்துவாரத்தில் உள்ள மணலை தூர் வாருதல்**

**வினா எண் 21436—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி முகத்துவாரத்தில் அமைந்துள்ள புன்னக்காயல் மீன்பிடிக் கிராமம் முகத்துவாரத்தில் மணல் மூடி பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தாமிரபரணி ஆற்று முகத்துவாரத்தில் அமைந்துள்ள புன்னக்காயல் மீன்பிடி கிராம முகத்துவாரத்தில் மணல் மூடி பாதிக்கப்படும். அவ்வப்போது ஊர் கமிட்டியினர் ஆட்களை வேலைக்கு அமர்த்தி மணலினை தூர்வாரி வருவதற்கு மானியமாக வருடத்திற்கு ரூ.10,000 வீதம் கொடுக்கப்பட்டு வந்தது. சமீபகாலத்தில் 1990-91 முதல் 1994-95 வரை 5 ஆண்டு காலத்திற்கு புன்னக்காயல் ஊர் கமிட்டியினர் செலவு செய்த தொகையின் மானியமாக ரூ. 30,000 வீதம் ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.



1999 மே 18]

**120—**

**மீனவர் வீடுகள் பழுதுபார்த்தல்**

**வினா எண் 21445—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மீனவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளைப் பழுது பார்க்க அரசு ஏதேனும் ஏற்பாடுகள் செய்யத் திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996-97-ல் 2000 வீடுகள் பழுது பார்க்கும் பணிகளை செய்து முடித்திட அரசாணை நிலை எண் 145, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 13-9-996-ல் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 1997-98-ம் ஆண்டிற்கு 2000 வீடுகள் மற்றும் 1998-99-ம் ஆண்டிற்கு 2000 வீடுகள் பழுதுபார்ப்புப் பணிக்காக எடுத்துக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**121—**

**மீன் உறைவிடங்கள் தொடங்குதல்**

**வினா எண் 22407—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்துறையில் செயற்கை முறையில் மீன்உறைவிடங்கள் (Artificial Reefs) உள்ளதுபோல் மற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற மீன்உறைவிடங்கள் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறையில் உள்ள செயற்கை முறை மீன்உறைவிடங்கள் (Artificial Reefs) அரசுத் துறை மூலம் அமைக்கப்படவில்லை. தற்போது மத்திய அரசின் 100% நிதியுதவியுடன் தமிழகத்தில் சோழமண்டல கடற்கரை மற்றும் மன்னார்வளைகுடா பகுதிகளில் செயற்கை மீன் உறைவிடங்கள் (Artificial Reefs) ரூ. 8.00 இலட்சம் செலவில் அமைப்பதற்கு 1998 டிசம்பரில் அரசு ஆணை வழங்கியுள்ளது.

(ஆ) செயற்கை முறையிலான மீன் உறைவிடங்கள் அமைத்திட காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பழைய நடுக்குப்பம் மீனவ கிராமத்தின் கடல் பகுதியும், தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளத்திற்கும் சிப்பிகுளத்திற்கும் இடைப்பட்ட கடல் பகுதியும் தெரிவு செய்யப்பட்டு, மத்திய கடல்மீன் வள ஆராய்ச்சி நிறுவனத்தாரின் (Central marine Fisheries Research Institute) தொழில்நுட்ப உதவியுடன் மீன் துறையிலுள்ள மீன்பிடித் துறைமுக திட்டச்சரக பொறியியல் பிரிவு மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் ஓரிரு திங்களில் முடிக்கப்படும்.

122—

**குளச்சல் மீன்பிடித் துறைமுகம்**

**வினா எண் 22408—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து அரசு அளவில் முடிவெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

---

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்).



## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தேனி மாவட்டத்தில் வீரபாண்டியில் சித்திரைத் திருவிழாவின் போது ஏற்பட்ட தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. தேனி மாவட்டம் வீரபாண்டியில் சித்திரைத் திருவிழாவின்போது ஏற்பட்ட தீ விபத்து குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என்.ஆர். அழகராஜா, திரு. சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஐ. கணேசன், திரு. சி. வேலாயுதன், திரு. டி. மணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. லா. சந்தானம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.ஆர். அழகராஜா அவர்களை முதலில் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் இருக்கக்கூடிய கௌமாரியம்மன் ஆலயம், அந்தப் பகுதியிலே மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு திருத்தலம் அங்கே பல திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு. அதைப்போன்று ஆண்டு ஒன்றுக்கு சித்திரை-வைகாசி மாதங்களில் நடைபெறுகின்ற திருவிழாவானது மிகவும் பிரசித்தி வாய்ந்த ஒரு திருவிழா. அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான மக்களும், அந்த மாவட்டத்தின் சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான மக்களும் அங்கே வந்து தரிசனம் செய்வதோடு அவர்களுடைய நேர்த்திக் கடன்களைச் செலுத்திச் செல்வது என்பது வழக்கம். இந்த ஆண்டு 11-5-1999 ஆம் நாளன்று அந்தத் திருவிழா ஆரம்பிக்கப்பட்டு ஒருவார காலம் நடைபெற்றது. சாதாரணமாக அங்கே திருவிழா நடைபெறுகின்ற நேரங்களில் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள், வரக்கூடிய பக்தர்களுடைய வசதிக்காக அவர்களுக்கு வேண்டிய தேங்காய், பழம், உணவு வகைகளிலிருந்து அனைத்தையும் கொண்ட நூற்றுக்கணக்கான சிறிய, பெரிய கடைகளை அங்கே அமைப்பது உண்டு. அத்தனையும் Temporary sheds-ஆக இருந்தாலும்கூட பெரிய பெரிய கடைகளை வைத்திருந்தார்கள். அதற்கேற்ற முதலீடுகளையும் வைத்துக் கொண்டு அவர்கள் அங்கே வியாபாரம் செய்து வருவது வழக்கம். இந்த ஆண்டு அங்கே இருக்கக்கூடிய டீக் கடையில் திடீரென்று நேற்று மாலை 4.00 மணிக்கு—stove வெடித்தது என்று சொல்கிறார்கள்.

சரியாக எனக்குத் தகவல் தெரியவில்லை.—stove வெடித்து அங்கே தீப்பிடித்துப் பரவியிருக்கிறது. அந்தத் தீ பரவியதை உடனடியாக நிறுத்த முடியாத காரணத்தினால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யாத காரணத்தினால் அங்கே இருந்த நூற்றுக்கணக்கான சிறிய, பெரிய கடைகள் எல்லாம் தீயில் எரிந்து அங்கே பலர் தீக்காயத்தினால் இறக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. நேற்று இரவு கிட்டத்தட்ட 12 மணிக்கு நான் அங்கே இருக்கக்கூடிய நண்பர்களிடமும், கட்சிக்காரர்களிடமும் பேசிவிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசுகிறபோது எனக்குக் கிடைத்தத் தகவலின்படி ஆறு ஆண்களும் ஒரு பெண்ணும் இறந்துவிட்டதாகவும், அடையாளம் தெரியாத அளவுக்கு இருப்பதாகவும் சொன்னார்கள். அதேபோல 50 சதவீதம், 60 சதவீதத்திற்கு மேலாக தீப்புண்கள் ஏற்பட்டு அதனால் உயிருக்கே ஆபத்தான நிலையிலே சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அதோடு நூற்றுக்கணக்கான பேர் அந்தத் தீ விபத்திலிருந்து உடனடியாக விலகிச் செல்ல முடியாத காரணத்தினால் தீக்காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது மிகவும் வேதனைக்குரிய ஒரு நிகழ்ச்சியாக நடைபெற்று இருக்கிறது. அந்தக் கடைகள் சிறிய கடைகளாக இருந்தாலும்கூட சிறிய முதலீடு போட்டு வைத்திருந்தாலும்கூட உயிர் இழந்தவர்களுக்கும், பாதிப்பு அடைந்தவர்களுக்கும், தீக்காயங்கள் ஏற்பட்டவர்களுக்கும், அந்தக் கடைகளிலே இருந்தவர்களுக்கும் தகுந்த நஷ்டஈடு இந்த அரசு அளிப்பதோடு மட்டுமல்லாமல், உடனடியாக அரசின் சார்பாக அங்கே ஓர் அமைச்சரையோ அல்லது உயர் அதிகாரிகளையோ அனுப்பி அதனுடைய நிலைமைகளைப் பார்த்து அரசு நிவாரணம் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தோடு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே உங்களின் சார்பாகக் கேட்டுக் கொண்டு, இந்த நிகழ்ச்சியை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

முற்பகல் 9-35

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி கோயில் பண்டிகையிலே, ஒரு கொடூரமான தீ விபத்து ஏற்பட்டு, அந்த இடத்திலே, கிட்டத்தட்ட,





பத்திரிகைகள் பலவிதமாகச் சொல்லியபோதிலும் — குறிப்பாக 15 பேர்களுக்கு மேல் இறந்திருப்பார்கள் என்று ஹேஷ்யமாகச் சொல்லியிருந்தாலும் — அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், 6 பேர் இறந்திருப்பார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். 6 பேர் இறந்ததிலே, அது ஆண்களா, பெண்களா என்று தெரியாத அளவுக்கு, உடல் பூராவும் வெந்து கரிக்கட்டையாக இருக்கின்ற கொடூரமான நிகழ்ச்சி என்று சொல்லும்போது, நெஞ்சமெல்லாம் வேதனைக் கடலிலே ஆழ்கிறது. அதுவும், குறிப்பாக நம்முடைய சபை நாயகருடைய சொந்த இடத்திலே இதுபோன்ற ஒரு கொடூரமான நிகழ்ச்சி நடந்திருப்பது நமக்கு மிகப் பெரிய வேதனையை ஏற்படுத்துகிறது. நான் நம்முடைய முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இதுபோன்ற பெரிய விழாக்கள், 8 நாட்கள், 10 நாட்கள் நடக்கக்கூடிய, பாரம்பரியம்மிக்க கோயில் விழாக்களிலே கீற்றுக் கொட்டகையைப் போட்டு நடத்துகின்றபோது, அதில் மின்கசிவோ, நெருப்போ, தீ விபத்தோ இதுபோன்ற கொடூரமான செயல்களோ நடைபெற வாய்ப்பு ஏற்படும் என்பதால், அரசு எப்படியாவது அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையிலே சிறப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், காலையிலே, தலைவர் அறைக்கு வந்தபோது உடனடியாக ஓர் அமைச்சரை அங்கே அனுப்பி, அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவருடைய உள்ளத்திலே எந்த அளவுக்கு இந்த நாட்டு மக்கள்மீது பற்று வைத்திருக்கிறார்கள் என்பதனை எடுத்துக்காட்டக்கூடிய வகையிலே, அதுவும் கோயில் நிகழ்ச்சி என்பதனால், அதற்குரிய அமைச்சரை அனுப்புவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற கொடூரமான நிகழ்ச்சிகள், தமிழகத்திலே, எந்தக் கோயில் நிகழ்ச்சியிலும் நடக்காமல் இருக்க, தற்காலிகமாக அமைக்கப்படும் கீற்றுக் கொட்டகைகளுக்கு பதிலாக, ஆஸ்பெஸ்டாஸ் அட்டையாவது அந்தக் கோயில் நிர்வாகம் போட்டுக் கொடுக்க தயவுசெய்து இந்த அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அங்கே இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வருத்தத்தைச் சொல்லி, அரசாங்கம் அவர்களுக்கு ஏதாவது உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

[1999 மே 18

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டியிலே இருக்கின்ற கௌமாரியம்மன் கோயில் திருவிழா என்பது, மதுரையிலே நடக்கின்ற சித்திரைத் திருவிழாவைப் போன்று சிறந்ததொரு திருவிழா. ஒவ்வோராண்டும் கொண்டாடப்படுகிற அந்த விழாவிற்கு, தேனி மாவட்டத்திலே இருந்து மட்டுமல்ல; அருகிலே இருக்கிற மதுரை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் வருவது வாடிக்கை. அந்த விழாவிலே, நேற்று ஒரு கடையிலே தீப்பற்றிக் கொண்டதன் காரணமாக, சில பத்திரிகைகளிலே 6 பேர் இறந்தார்கள் என்று செய்தி வந்திருக்கிறது; சில பத்திரிகைகளிலே 15 பேர் இறந்தார்கள் என்று வந்திருக்கிறது. நிலைமை எப்படி இருந்தாலும், இப்படிப்பட்ட திருவிழா நேரங்களிலே, அருகிலே இருக்கிற தீயணைப்பு நிலையங்களிலே இருந்து — தேனியிலே ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது; போடியிலே இருக்கிறது; அருகிலே இருக்கிற அந்தத் தீயணைப்பு நிலையங்களிலே இருந்து — ஒரு தீயணைப்பு வண்டியை ஒருவார காலத்திற்கு அந்தப் பகுதியிலே நிறுத்தி வைத்தால்கூட, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்படுகிற அந்த நேரத்திலே, உடனடியாக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வோராண்டும் தீயணைப்புப் படை அங்கே இருக்கிறது; அது இருந்தும் அப்படி ஆகியிருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** இருந்திருந்தால் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல ஆண்டுகளாக, தீயணைப்புப் படை அங்கே இருக்கிறது. இருந்தும் இப்படி ஆகியிருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** சரி. எனவே, அந்தத் தீ விபத்திலே பலியானவர்கள் குடும்பத்திற்கு நாம் மனிதாபிமானத்தோடு — கள்ளச் சாராயம் குடித்து இறந்துபோனவர்கள் குடும்பத்திற்குக்கூட உதவி செய்ய வேண்டுமென்று சொல்கிற நேரத்திலே இப்படிப்பட்ட திருவிழாக்களிலே இறந்தவர்களுக்கு—கூடியவரை நல்ல, கணிசமான நிதியை ஒதுக்கித் தந்து, நமது முதலமைச்சர் அவர்கள், இறந்தவர்களுக்கு மட்டுமல்லாது, அந்த விபத்திலே காயமுற்றவர்களுக்கும் உதவ வேண்டும். அதோடு அங்கு சென்று, ஒருவார காலத்திலே ஏதாவது தங்களுடைய வருவாயை உயர்த்திக் கொள்ளலாமா என்ற நோக்கத்தோடு ஏழைகள்தான் அந்தக் கடைகளை வைத்து நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த இழப்பிற்கும் ஒரு தொகையை ஒதுக்கித் தந்து அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, மற்றவர்கள் கூறியதுபோல் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களை அங்கு அனுப்பி நேரிடையாகப் பார்த்து அந்தப் பகுதி மக்களுக்கும் ஆறுதலைக்கூறி, இந்த நிதியுதவியை வழங்க வேண்டும் என்று அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சி சார்பிலே கேட்டு அமைகிறேன்.





முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி என்ற ஊரில் கௌமாரியம்மன் கோவில் திருவிழாவையொட்டி ஏற்பட்ட மிகப் பெரிய தீ விபத்தினால் ஆறு பேர் உயிரிழந்திருக்கிறார்கள். பல்வேறு நபர்களுக்கு மிகப் பெரிய தீக்காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தென்னங்கீற்றினால் போடப்பட்ட கடைகளில் வியாபாரம் செய்தவர்களுக்கு பெரிய இழப்புகள் எல்லாம் ஏற்பட்டுள்ள ஒரு துக்ககரமான நிகழ்ச்சி இது. அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில் பல்வேறுவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தாலும், அந்தப் பாதுகாப்பின் காரணமாகத்தான் பெரிய விபத்து ஏற்படாமல் இந்த அளவோடு நின்றுவிட்டதாகத் தெரிகிறது. எனவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றபோது அரசாங்கத்திலிருந்து பாதிக்கப்பட்ட, நஷ்டம் ஏற்பட்டிருக்கின்ற மக்களுக்குப் போதுமான நிதியுதவி தரப்பட வேண்டும். மீண்டும் பல பகுதிகளில் திருவிழாக் காலங்களில் தென்னங்கீற்றுக் கொட்டகைகளைப் போடுகின்றபோது, சேர்ந்தாற்போல் போடுவதுதான் இப்படித் தீவிரமான விபத்து ஏற்படுவதற்குக் காரணம் ஆகின்றது. ஆகவே, அந்த அடிப்படையிலே இல்லாமல் அந்தக் கொட்டகைகளை 5 அடி, 6 அடி இடைவெளி விட்டு போடக்கூடிய அளவிலே ஏற்பாடுகள் இருக்குமானால் கொஞ்சம் பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த வகையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதனாலே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அரசு உரிய உதவிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டு பேச்சை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி கௌமாரியம்மன் ஆலயத்தில் திருவிழாவின்போது ஏற்பட்ட தீ விபத்தால் ஆறு பேர்

[திரு. சி. வேலாயுதன்] [1999 மே 18

உயிரிழந்திருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான கடைகள் சேதம் அடைந்திருக்கின்றன. உண்மையிலேயே அரசாங்கம் நிவாரணம் வழங்குவது என்றால், இதுபோன்ற விபத்துகள், தீ விபத்துகள், ரோடுகளிலே நடக்கக்கூடிய accidents ஆகியவற்றுக்குக் கண்டிப்பாக நிவாரணம் வழங்க வேண்டும். அதேசமயத்தில், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற, காவல் துறையினுடைய துப்பாக்கிச் சூட்டில் இறக்கக் கூடியவர்களுக்கு, விஷச் சாராயம் அருந்தி இறக்கக்கூடியவர்களுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய முறையைத் தவிர்ப்போம் என்று சொன்னால், இதுபோன்று கட்டாயமாகச் செய்ய வேண்டியவர்களுக்குத் தொகையைச் சற்று அதிகரித்துக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். எனவே, இதை அரசு கவனத்தில் கொண்டு இந்தத் தீ விபத்து இந்த அளவிற்கு ஏற்படுவதைத் தடுப்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன; அதைச் செய்வதற்கான முறையில் சரியான வாய்ப்பு வசதிகள் அந்த இடத்தில் இல்லாமல் இருந்தனவா அல்லது தீயணைப்பு நிலையத்தில் தண்ணீர் வசதி குறைவாக இருந்தனவா; இவற்றையெல்லாம் ஆலோசித்து மேலும் இதுபோன்ற விழாக்களில்—ஏற்கெனவே இந்த விழாவில் தீயணைப்புப் படை—இருந்ததாகச் சொல்கின்றார்கள் — அவசியம் தீயணைப்புப் படை இருக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவது மிகவும் நல்லது.

அதுபோன்று, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று அந்த உண்மையான சம்பவங்களைக் கண்டறிந்து அந்த மக்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணம் வழங்கக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளதாக இன்று காலையில் சபாநாயகர் அறையில் சொன்னார்கள். உண்மையிலேயே அவருடைய அந்தப் பரிவு பாராட்டத்தக்க ஒரு நிகழ்ச்சி. அதுபோன்று, இன்னொன்றையும்கூட அவர்களே சொன்னார்கள். இந்தச் சம்பவத்தில் அல்ல, இன்னொரு சம்பவத்தை வேதனையாகத் தொட்டுச் சொல்லும்போது, எப்போதும் நிவாரணம், எதற்கும் நிவாரணம் என்று சொல்லும்போது அரசாங்கம் எங்கு செல்லுவது என்பது போன்ற வேதனைப்பட்ட ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்காகத்தான் நான் சொல்கின்றேன். நிவாரணம் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்க வேண்டும் என்பதை ஒரு முடிவாக எடுத்து, விஷச் சாராயம் குடித்து இறப்பது, ரவுடிகள் சம்பவத்தில் அடித்துக் கொண்டு சாவது, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற அரசாங்கம் துப்பாக்கிச் சூடு நடத்துவது என்று சொன்னால், சட்டம் ஒழுங்கிற்குக் குந்தகமாக இருந்தவர்தான் இறந்திருக்கின்றார்;



1999 மே 18] [திரு. சி. வேலாயுதன்]

அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது போன்ற இந்த முறைகளை எல்லாம் தவிர்த்தால் நல்லது என்று கருதுகிறேன். இறந்துபோன அந்தப் பெரியவர்களுடைய குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லி அமைகின்றேன். பாரத் மாதா கி ஜே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி கௌமாரியம்மன் கோவில் திருவிழா நிகழ்ச்சியில் தீ விபத்தின் காரணமாக மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல ஆறு பேருக்கு மேல் மரணம் அடைந்து, பல பேர் பலத்த தீக்காயங்களும் பட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அதேபோல பல கடைகள் எரிந்து சாம்பலாகி இருப்பதாக அறிகிறோம். மரணம் அடைந்த குடும்பங்களுக்கும் பலத்த தீக்காயம் பட்டவர்களுக்கும், அதேபோல கடைகளை இழந்து வாடுபவர்களுக்கும் அரசு தாராளமாக நிதியுதவி செய்ய வேண்டுமென்று புதிய தமிழகத்தின் சார்பாக வலியுறுத்தி விடை பெறுகிறேன், வணக்கம்.

முற்பகல் 9-45

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவரவர்களே,............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், எப்படி உங்களுக்கு அனுமதி தர முடியும்? நீங்கள் அறிவிப்பே கொடுக்கவில்லை. டாக்டர் கிருஷ்ணசாமி கொடுத்ததே சட்டப்படி செல்லாது. ஒன்பதேகால் மணிக்குக் கொடுத்தார். நீங்கள் கையெழுத்துப் போட்டேன் என்கிறீர்கள், கையெழுத்து இல்லை. இருப்பினும் ஒரு நிமிஷம் பேச அனுமதிக்கிறேன், பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி கௌமாரியம்மன் கோவில் திருவிழாவில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக—ஒரு பத்திரிகையிலே 2 பேர் என்றும், ஒரு பத்திரிகையிலே 5 பேர் என்றும், ஒரு பத்திரிகையிலே 15 பேர் என்றும்—இறந்து விட்டார்கள் என்ற செய்திகள் வந்திருக்கின்றன.

இதைப் பொறுத்தவரையில், அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த தீயணைப்பு வண்டிகளில் போதுமான வசதி மற்றும் முன்னேற்பாடுகள் இல்லாத காரணத்தினால்தான் அந்தத் தீயை உடனடியாக [illegible]

முடியவில்லையென்று ஒரு பத்திரிகையில் செய்தி வந்திருக்கின்றது. எது எப்படியிருந்தாலும் இதுபோன்ற சமயங்களில் அரசு முன்னெச்சரிக்கையாக, அந்தத் திருவிழாக்கள் நடைபெறுகின்ற இடங்களில் தீயணைப்பு வண்டிகளை நிறுத்த வேண்டும். அனைத்து வசதிகளையும் செய்துதர வேண்டும்.

பலியான குடும்பங்களுக்கு எங்களுடைய கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, பலியானவர்களின் குடும்பத்தினருக்கு அரசு நிவாரணம் தர வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி கோயில் திருவிழாவில் ஏற்பட்ட துயரம் மிகுந்த இந்தச் சம்பவத்தில் இறந்துவிட்டவர்களுடைய குடும்பத்திற்கும், காயம்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றவர்களுக்கும் என்னுடைய இரங்கலையும், ஆறுதலையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தச் சம்பவம் குறித்து, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் அந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு. அழகராஜா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கணேசன் அவர்களும், அகில இந்திய ஃபார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் திரு. வேலாயுதன் அவர்களும், புதிய தமிழகம் சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. சுந்தரம் அவர்களும் இரங்கல் தெரிவித்திருப்பதோடு, இதுபோன்ற நிகழ்ச்சிகளில் அரசு செய்திட வேண்டிய கடமையினையும் உணர்த்தியிருக்கின்றார்கள்.

அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவா மூலமாகக் கிடைத்துள்ள செய்தியினை முதற்கண் இந்த அவையிலே வைகக விரும்புகின்றேன்.

தேனி மாவட்டம், வீரபாண்டியிலே உள்ள கௌமாரியம்மன் கோயில் திருவிழா கடந்த 11-5-1999 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. நேற்று 17-5-1999 மாலை 4-45 மணியளவில், அக்னி tea stall — tea stall-க்குப் பெயரே அக்னி tea stall — அந்த கடையினுடைய





மாஸ்டர் கணேசன் என்பவர் மண்ணெண்ணெய் air stove-ல் pump செய்தபோது மண்ணெண்ணெய் வெளியே வந்து burner-ல் தீப்பிடித்துச் சூடாகும் சமயம் ஒருவர் வந்து தனக்கு டீ கேட்ட நேரத்தில், மேற்படி கணேசனுடைய கவனம் திசை திரும்பி stove-ஐக் கவனிக்காமல் விட்டுவிட்டதால் கூடுதலான மண்ணெண்ணெய் வெளியேறி, அதனால் தீப்பிடித்து அவரது தென்னை ஓலையால் வேயப்பட்ட கூரையிலே அந்தத் தீ பரவி, காற்று அதிகமாக வீசிய காரணத்தால் அருகிலுள்ள கடைகளுக்கும் தீ மளமளவென்று பரவியுள்ளது என்றும், பக்கத்திலேயிருந்த சிறுசிறு கடைகளெல்லாம் தீயில் உடனடியாக எரிந்துள்ளன. பெரும்பாலும் வளையல் கடைகள், பிளாஸ்டிக் பொருட்கள் விற்கும் கடைகள், பழக் கடைகள், உணவுப் பொருட்கள் விற்கும் கடைகள்தான் எரிந்துள்ளன.

கோயில் சார்பாக 100 கடைகள்தான் ஏலம் விடப்பட்டுள்ளன. ஆனால் 300 கடைகள் எரிந்துவிட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. எல்லாம் தற்காலிகக் கடைகள் என்பதால், அதிக மதிப்புள்ள பொருட்கள் நாசமாகி இருக்க முடியாது என்றும் கூறப்படுகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவரின் மதிப்பீட்டின்படி, சுமார் 20 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் நாசமாகியிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

முற்பகல் 9-50

இந்த விபத்தில் மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் இறந்திருக்கின்றார்கள். மற்றொருவர் இறந்திருக்கிறார். அவர் ஆணா, பெண்ணா என்று அடையாளம் தெரியாத அளவுக்கு உடல் கருகிய நிலையிலே அந்தச் சடலம் இருக்கின்றது. பத்திரிகையொன்றில் 15 பேர் இறந்ததாக வந்துள்ள செய்தி தவறானது என்பதை அந்தப் பத்திரிகையாளர்களே காலையில் தொலைபேசி மூலமாக என்னுடைய செயலகத்திற்குத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த விபத்திலே மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளார்கள். அதில் ஒருவருக்கு 50 சதவீதக் காயமும், மற்றொருவருக்கு 55 சதவீதக் காயமும், இன்னொருவருக்கு 15 சதவீதக் காயமும் ஏற்பட்டுள்ளது. மூவரும் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். 50 சதவீதத்திற்கு மேற்பட்ட காயம் அடைந்தவர்களை, உள்ளபடியே மிகுந்த சிரமத்திற்கிடையிலேதான் பிழைக்க வைக்க முடியும் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

கோயிலுக்கும் தேருக்கும் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. தேரில் இருந்த அம்மன் சிலை, உடனடியாக ஊராட்சி அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பாதுகாப்பாக வைக்கப்பட்டது. விழாவின் கடைசி நாள் இன்று என்பதால் உடனடியாக அம்மன் சிலை தேருக்கு இன்று காலையிலே எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டு கோயிலுக்குச் சென்று விழா முடிந்து, கொடிக் கம்பத்திலிருந்து கொடி இறக்கப்பட வேண்டும் என்று ஊர்க்காரர்கள் வலியுறுத்தியதன்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை அதிகாரிகளும் அங்கு முகாமிட்டு, அதற்கான பணிகளையும் மற்றும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டுள்ளார்கள். நேற்று இரவும் இன்று காலையும் சுமார் 1,800 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீட்டு அளவை சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அலுவலர்கள் கணக்கிட்டுக் கொண்டுள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக அந்த இடத்திலேயே முகாமிட்டுள்ளார். இன்று பிற்பகல் அறநிலையத் துறை அமைச்சரும் அங்கே நேரடியாகச் செல்ல இருக்கின்றார்.

விழா நடைபெற்ற இடத்திலே வைக்கப்பட்டிருந்த ஒரு தீயணைப்பு வண்டியுடன் மேலும் நான்கு தீயணைப்பு வண்டிகளையும் உடனடியாக வரவழைத்து, தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. தற்பொழுது அங்கே எந்தவிதமான பதற்றமும் இல்லையென்று செய்திகள் வந்துள்ளன.

இந்த நிகழ்வுகளைக் கணக்கிட்டு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் தருகின்ற விவரத்தின்படி, அரசின் சார்பிலே முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்படும் என்று தெரிவிப்பதோடு, முதல் கட்டமாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.





## 3. * கவன ஈர்ப்பு

**விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 54 வரை).**

(i) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், இரவியதர்மபுரம் அரசு தொடக்கப் பள்ளியில் 85 மாணவ மாணவியருக்கு ஓர் ஆசிரியர் பணியிடமும், கீழப்பாவூர் ஒன்றியம், திருமலாபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 120 மாணவ மாணவியருக்கு இரண்டு ஆசிரியர் பணியிடங்களே இருப்பதால் அங்குக் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து

உறுப்பினர்: **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர்: **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: (கல்வித் துறை)**

### அறிக்கை

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திருமலாபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 120 குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். ஏற்கெனவே அங்கு 2 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது புதியதாகப் பணியிடம் ஒதுக்கி புதிய ஆசிரியர் 13-1-1999 முதல் பணிபுரிந்து வருகிறார். இப்பள்ளிக்கு அரசு விதிகளின்படி தேவையான ஆசிரியர்கள் உள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், இரவியதர்மபுரம் அரசு தொடக்கப் பள்ளியில் 76 குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். ஓராசிரியர் பள்ளியாக இருந்த இப்பள்ளியை ஈராசிரியர் பள்ளியாக்கிக் கூடுதலாக ஓர் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டு 23-2-1999 முதல் பணிபுரிந்து வருகிறார். அரசாணைப்படி இந்தப் பள்ளிக்கு 2 ஆசிரியர்கள் உள்ளனர்.

---

* இப்பட்டியலில் உள்ள கவன ஈர்ப்புகளுக்கான விவர அறிக்கைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[1999 மே 18

**(ii) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் 17 ஈராசிரியர் பள்ளிகளை ஓராசிரியர் பள்ளிகளாக மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மாற்றியுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து**

உறுப்பினர்: **திரு. கே. சுப்பராயன்:**

அமைச்சர்: **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: (கல்வித் துறை)**

**அறிக்கை**

கோவை மாவட்டம், திருப்பூர் ஒன்றியத்தில் உள்ள கீழ்க்காணும் 12 பள்ளிகளில் இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர்:

| | | மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1. | கே. மேட்டுப்பாளையம் | 60 | |
| 2. | முட்டிகாளான்பதி | 48 | |
| 3. | பெரசப்பாளையம் | 62 | |
| 4. | காளிபாளையம்புதூர் | 58 | |
| 5. | இராக்கியகவுண்டன்புதூர் | 63 | |
| 6. | களர்வழி | 48 | |
| 7. | காசினிப்பாளையம்புதூர் | 62 | |
| 8. | காளம்பாளையம் | 58 | |
| 9. | பொன்னாபுரம் | 46 | |
| 10. | முத்தன்னம்பாளையம் | 38 | |
| 11. | ஈட்டிவீரன்பாளையம் | 52 | |
| 12. | பொம்மநாயக்கன்பாளையம் | 120 | மூன்று ஆசிரியர். இரண்டு பேர் பணிபுரிகின்றனர். |



1999 மே 18] [பேராசிரியர் க. அன்பழகன்]

இப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அவ்வொன்றியத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு மாறுதல் பெற்றுச் சென்று விட்டனர். இந்த 12 பள்ளிகளிலும் உள்ள பணியிடங்கள் எடுக்கப்படவில்லை. காலியாக இருக்கிறது. இக்காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போதைய நியமனத்தின்போது எஸ்.சி.எஸ்.டி. பிரிவில் நாடுநர்கள் கிடைக்காததால் 33 நபர்களை நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளது. இப்பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக மாற்றப்படவில்லை. இப்பள்ளிகளில் ஓர் ஆசிரியர் பணியிடம் காலியாக இருக்கிறது. இப்பணியிடத்தை விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(iii) ஈரோடு மாவட்டம், தாராபுரத்திற்கு அருகில் சி. குமாரபாளையம் என்ற ஊரில் குடிநீர் காரணமாக விஷக் காய்ச்சல் ஏற்பட்டு, 50-க்கும் மேற்பட்டோர் பாதித்துள்ளதாக வந்துள்ள செய்தியால் ஏற்பட்டுள்ள அச்சநிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. நா. பெரியசாமி:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)**

**அறிக்கை**

ஈரோடு மாவட்டத்திலுள்ள தாராபுரம் சுகாதாரப் பணிகள் மாவட்டத்திற்குள் தாளவாய்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையப் பகுதியை சார்ந்த, சி. குமாரபாளையம் கிராமத்தில் கடந்த 17-2-1999 அன்று 'வைரஸ் காய்ச்சல்' ஏற்பட்டதாகத் தகவல். 18-2-1999 அன்று துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அவர்கள் சென்று நேரில் ஆய்வு மேற்கொண்டு சகலத் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ளார். அக்கிராமத்தில் மொத்தம் 564 நபர்களில் 6 (ஆறு) நபர்களுக்கு மட்டுமே காய்ச்சல் ஏற்பட்டு, அந்த 6 (ஆறு) நபர்களும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 மே 18

அத்துடன் அனைத்து வீடுகளிலும் ஆய்வுப் பணி மேற்கொண்டு, தலைவலி மற்றும் காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட 54 நபர்களுக்கு ரத்தத் தடவல் எடுக்கப்பட்டு, மாத்திரைகள் வழங்கப் பட்டன. இப்பாதிப்புடைய நபர்களின் வீடுகள் மற்றும் அருகாமையில் வசிப்பவர்களும் சேர்த்து மொத்தம் 206 நபர்களுக்கும் ரத்தத் தடவல் எடுக்கப்பட்டு, ஒட்டுமொத்தமாக மேற்படி கிராமம் அப்பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ அலுவலர் தலைமையின்கீழ், களப் பணியாளர்களால், சிறந்த மருத்துவப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதால், தொடர்ந்து அக்கிராமம் கண்காணிப்பில் இருந்து வருகிறது. பரிசோதனை அறிக்கை வரப்பெற்றவுடன் அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் அப்பகுதி மக்களுக்குச் சுகாதாரக் கல்வி போதிக்கப்பட்டதுடன், பாதுகாக்கப்பட்ட குடிநீரையே அருந்தும்படியும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, அவையை ஒத்திவைக்க வேண்டியதில்லை.

**(iv) நிலக்கோட்டை தொகுதியில் காலரா ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்ட நிலை குறித்து விவாதிக்க**

உறுப்பினர்: **திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)**

**அறிக்கை**

1. நிலக்கோட்டை வட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சிப் பகுதியில் 4-2-1999 முதல் 10-2-1999 வரை வயிற்றுப்போக்கு ஏற்பட்டு 321 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 291 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பினர். 30 நபர்களுக்குத் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது. கொடைக்கானல் வட்டம், பூம்பாறை கிராமத்தில் 47 நபர்கள் பாதிக்கப்பட்டு, வண்ணதாசன், வயது 8 என்ற சிறுவன் இறந்துவிட்டான். மேலும் அய்யம்பாளையம் கிராமத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மொத்தம் 4 நபர்கள் இறந்துள்ளனர். இந்நோய்க்குக் காரணம் குடிநீர்க் குழாய்களில் உடைப்பு மற்றும் கசிவு ஏற்பட்டு, சாக்கடை நீர் கலந்துள்ளதாலும்,



1999 மே 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

ஒரு தரை நிலை நீர்த்தொட்டிக்கு மஞ்சளாறு ஆற்றுப்படுகையிலிருந்து மோட்டார் பம்ப் மூலம் கொண்டுவரப்பட்ட குடிநீர் நிறுத்தி வைக்கப்படாமலும் போதிய அளவு குளோரினேஷன் செய்யப்படாமலும் சப்ளை செய்யப்பட்டதே பாதிப்புக்கு முக்கிய காரணமாகும்.

2. வத்தலக்குண்டு பேரூராட்சியில் அதிகமாக வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் கந்தசாமி கோயில் தெரு, காமராஜர் நகர், வெங்கடபதிபுரம், காந்தி நகர் மற்றும் பெத்திலியாபுரம் ஆகும். இப்பகுதிகளில் சுமார் 15,000 பேருக்குக் காலராத் தடுப்பூசி போடப்பட்டு மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்குச் சுகாதாரக் கல்வி போதிக்கப்பட்டதுடன், காய்ச்சி ஆற வைத்த நீரையே அருந்தும்படியும், வெளியில் விற்கும் உணவினைத் தவிர்க்கும்படியும், ஈ மொய்த்தப் பொருட்களை வாங்கி உண்ண வேண்டாமென்றும் தண்டோரா மூலமும், ஒலிபெருக்கி மூலமும் தெரிவிக்கப்பட்டது. சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும், பொது இடங்களிலும், திறந்தவெளிகளிலும் மலம் கழிப்பதைத் தவிர்க்கும்படியும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

3. மேலும், வத்தலக்குண்டு பகுதியில் விநியோகம் செய்யப்பட்டுவரும் குடிநீரில் குளோரின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் கையிருப்பில் உள்ளன. மேலும், எச்சரிக்கை நடவடிக்கையாக காலரா நோயாளிகளைத் தனிமைப்படுத்திச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. திண்டுக்கல் நகருக்கு வழங்கப்படும் குடிநீர் நன்கு பரிசோதிக்கப்பட்டு, குழாய்களில் ஏற்பட்டுள்ள கசிவுகள் சரிசெய்யப்பட்டு குடிநீரைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் நகராட்சி ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு, தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதுரையிலிருந்து மைக்ரோ பயாலஜி பிரிவின் பேராசிரியர், டாக்டர் சந்திரசேகர் தலைமையில் குழு பாதிக்கப்பட்ட வத்தலக்குண்டு மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களில் பயணம் மேற்கொண்டு ஆய்வுகள் செய்து 23 பேர்களின் மலம் பரிசோதனை செய்ததில், 6 நபர்களுக்குக் காலரா பாதிப்பு ஏற்பட்டுள்ளதென்றும், கழிவு நீர் கலந்த தேநீர் பருகியதின் மூலமாகவும், ஈ மொய்த்தப் பண்டங்களைச் சாப்பிட்டதின் மூலமாகத்தான் வயிற்றுப்போக்கு ஏற்பட்டதென்றும் அறிக்கை தந்துள்ளார். இதைத்தவிர 12-2-1999 அன்று இயக்குநர், பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்

தடுப்புத் துறை இயக்ககம், நால்வர் குழுவுடன் நேரில் சென்று ஆய்வு, நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். தற்போது இப்பகுதியில் வயிற்றுப்போக்கு ஏதும் இல்லை.

(v) தென்காசி, அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் பெண் மருத்துவர், எலும்பு மூட்டு நிபுணர், மயக்க மருந்து நிபுணர், நிர்வாக அலுவலர் பணியிடங்கள் நீண்ட நாட்களாகக் காலியாக உள்ளதால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து

உறுப்பினர்: **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)**

**அறிக்கை**

தென்காசி, அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் பெண் மருத்துவர், மயக்க மருந்து நிபுணர், எலும்பு மூட்டு நிபுணர் ஆகிய பதவிகள் நிரப்பப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். நிர்வாக அலுவலர் பணியிடம் பற்றி அரசு பரிசீலித்து வருகின்றது. விரைவில் ஆணை வெளியிட்ட பின்னர் நிர்வாக அலுவலர் பணியிடம் நிரப்பப்படும். பணியாளர்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| 1. | பெண் மருத்துவர்கள் | : | டாக்டர் உலகம்மாள் மற்றும் டாக்டர் மல்லிகா |
| 2. | மயக்க மருந்து நிபுணர் | : | டாக்டர் ஜி. ராமகிருஷ்ணன் |
| 3. | எலும்பு மூட்டு நிபுணர் | : | டாக்டர் வேதமூர்த்தி (செங்கோட்டை மருத்துவ மனையில் இருந்து பணியமர்த்தப் பட்டுள்ளார்.) |

(vi) தென்காசி, அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கியில் உள்ள இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதால் இரத்தம் சேமித்து வைக்க முடியாத நிலை உள்ளதால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து

உறுப்பினர்: **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: (மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)**



**அறிக்கை**

தென்காசி மாவட்டத் தலைமை மருத்துவமனையில், புதுடில்லி தேசிய எய்ட்ஸ் தடுப்புக் கழகத்தின் நிதியுதவியுடன் நிறுவப்பட்ட இரத்த சேமிப்பு வங்கியில் இரத்த சேமிப்பு வங்கிக்கென உபயோகப்படுத்தும் இரு குளிர்பதனப் பெட்டிகள் (பி.பி.ஆர்.) உள்ளன. அவற்றில் ஒன்று பழுதடைந்ததால் பழுதுகளை நீக்கும் பொருட்டு அதற்கான செலவுத் தொகை ரூ.7500/- கடந்த 21-12-1998 அன்று புதுடெல்லி தேசிய எய்ட்ஸ் தடுப்புக் கழகத்திற்கு, தென்காசி மாவட்ட இணை இயக்குநர் அவர்களால் ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ளது. தேசிய எய்ட்ஸ் தடுப்புக் கழகம் வாயிலாக இப்பழுதுபார்க்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். எனினும், இரத்த சேமிப்பு வங்கியில் உள்ள மற்றொரு குளிர்சாதனப் பெட்டி நல்ல நிலையில் இயங்கி வருவதால் பொதுமக்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படா வண்ணம் தென்காசி மாவட்டத் தலைமை மருத்துவமனையிலுள்ள இரத்த சேமிப்பு வங்கி செயல்பட்டு வருகின்றது.

(vii) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், தில்லைவளாகம் தொண்டியக்காடு கிராமத்தில் உள்ள ஆயிரக்கணக்கான அரசுப் புறம்போக்கு நிலத்தை தனி நபர்கள் உப்பளம் போடுவதற்கு ஆக்கிரமித்துப் பணி நடைபெற்று வருகிறது. இதன்மூலம் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பகுதியில் உள்ள ஆறுகளில் வடிமுனையாக உள்ள இடத்தில் உப்பளம் போடுகிறார்கள். இவைகளால் வெள்ளக் காலங்களில் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. உடனடியாக உப்பளம் போடுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கும் அவசியம் குறித்து

உறுப்பினர்: **திரு. ஜி. பழனிசாமி:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: (வருவாய்த் துறை)**

**அறிக்கை**

கேலக்ஸி கிரிஸ்டல் நிறுவனத்தினர் 18-9-1991 ஆம் நாளிட்ட விண்ணப்பத்தில் தற்போதைய திருவாரூர் மாவட்டத்திலுள்ள சதுப்பு நிலப் பகுதியில் நிலம் ஒதுக்கீடு செய்யக் கோரினர். அரசாணை (நிலை) எண் 1102, வருவாய், நாள் 23-11-1995-இல் கேலக்ஸி கிரிஸ்டல்ஸ் நிறுவனத்திற்குத் திருத்துறைப்பூண்டி வட்டம்,

தில்லைவளாகம் கிராமத்தில் 300 ஏக்கர் நிலத்தினைக் குத்தகைக்கு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது. குத்தகை ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. கேலக்ஸி கிரிஸ்டல்ஸ் நிறுவனத்தினர் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து ஒப்புதல் பெற்றுள்ளனர்.

2. இக்குத்தகையினை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு முடிவுற்று, தற்போது மீண்டும் திரு. திருச்செல்வன் என்பவரால் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. எதிர் உறுதி ஆவணம் விரைவில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

3. திருவாரூர் மாவட்டம், தொண்டியக்காடு கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் வங்கக் கடலோரத்தில் கவிதா & கோ என்ற நிறுவனமும், பாக்ஸ் டிராய்ட் என்ற நிறுவனமும் உப்பளம் அமைக்க முயன்றபோது மாவட்ட ஆட்சியரால் தடுத்து நிறுத்தப்பட்டது. இது தவிர ஆற்று வடிமுனைகளில் உப்பளம் அமைக்கும் முயற்சி நடைபெறவில்லை. வேறு எவ்வித ஆக்கிரமிப்புகளும் இல்லை.

4. தொண்டியக்காடு கிராமம், கிளைத்தாங்கி ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. ஆற்றின் அகலம் மிக அதிகமானது. நீர்ப்பிடிப்புப் பரப்பு வங்கக் கடல் வரை பரவியுள்ளது. உப்பளத்திற்குக் கவணை கட்டுவதால் நீர்த்தேக்கம் ஏற்பட வாய்ப்பில்லை. விவசாய நிலங்களாக உள்ள நிலங்கள் அனைத்தும் மேட்டுப்பாங்கான பாதுகாப்பான இடத்தில் உள்ளமையால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படாது.

**(viii) கமுதியில் உயர் நீதிமன்ற ஆணையை மீறி நெடுஞ்சாலைத் துறையினர் வீடுகள், கடைகள் இடிக்கப்பட்டது தொடர்பாக அவையின் கவனத்தை ஈர்க்க**

*உறுப்பினர்:* **திரு. லா. சந்தானம்:**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: (வருவாய்த் துறை)**

**அறிக்கை**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி நகரில் சாலைப் புறம்போக்கு, ஊரணிப் புறம்போக்கு மற்றும் அரசு மருத்துவமனைப் புறம்போக்கு ஆகியவற்றில் இருந்த ஆக்கிரமிப்புகள் 21-3-1999 அன்று நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் மற்றும் கமுதி நகரப் பஞ்சாயத்து செயல் அலுவலர் ஆகியோரால் அகற்றப்பட்டன.





மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகள் வீடுகள், கடைகள், உணவுவிடுதி மற்றும் சுற்றுச் சுவர் போன்றவை ஆகும். இவற்றின் மொத்த எண்ணிக்கை 281. பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும், இடையூறாகவும் மற்றும் இயல்பான வழியில் செல்லும் நீரோட்டத்திற்குத் தடையாக இருந்ததாலும் மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை ஆகும். மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகளில் மூன்று இனங்களில் மட்டும் ஆக்கிரமிப்பாளர்கள் கமுதி மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து இடைக்காலத் தடையாணை பெற்றுள்ளனர்.

ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் விதிகளைப் பின்பற்றியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கமுதி நகரில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதை எதிர்த்து எவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடையாணை ஏதும் பெறவில்லை.

**(ix) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வேதாரண்யம் சதுப்பு நிலங்கள், நிலங்கள் பயன்பாடு பற்றி கண்டறிய குழு அமைத்து வருவாய் அரசாணை (நிலை) எண் 629, வருவாய், நாள் 3-7-1997 குழு இதுவரையிலும் இடத்தைப் பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை அளிக்காத நிலை குறித்து விவாதிக்க**

*உறுப்பினர்:* **திரு. அ. வெங்கடாசலம்:**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: (வருவாய்த் துறை)**

**அறிக்கை**

ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், வேதாரண்யத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான 28,765 ஏக்கர் சதுப்பு நிலங்கள் மூண்டி திருவாளர்கள் விம்கோ நிறுவனத்திற்கு உப்பு உற்பத்திக்காக 40 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டது. நிறுவனம் 3185.53 ஏக்கர் நிலத்தை மட்டுமே பயன்படுத்தியும், அளிக்கப்பட்ட நிலங்களை முழுமையாகப் பயன்படுத்தாமலும் இருந்ததால் 16,500 ஏக்கர் நிலத்தை அரசு ஆணை (நிலை) எண் 2976, வருவாய், நாள் 8-10-1971-இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணைக்கிணங்க மீளப் பெறப்பட்டது.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1999 மே 18

2. விமகோ நிறுவனத்திடமிருந்து மீளப் பெற்ற 25,544.47 ஏக்கர் நிலத்தில் 11,544.47 ஏக்கர் நிலத்தை உப்பு உற்பத்திக்காக ஒதுக்கி வைக்கலாமென்றும், மீதமுள்ள 14,000 ஏக்கர் நிலத்தைப் பறவைகள் சரணாலயத்திற்கு ஒதுக்கீடு செய்யலாமென்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அரசுக்குப் பரிந்துரை செய்தார்.

3. வேதாரண்யம் பகுதியிலுள்ள நிலங்களை வனத் துறைக்கு அளிக்க வேண்டுமென அத்துறையும், உப்பு உற்பத்திக்கு அளிக்க வேண்டுமென தொழில் நிறுவனங்களும் கோரி வருகின்றன. எனவே, வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதிகளில் உள்ள நிலங்களைத் தனி நபர்களுக்குத் தொழில் நோக்கங்களுக்கு வழங்குவது குறித்து முடிவெடுக்கும் முன்னர், மேற்படி நிலத்தின் தன்மை குறித்தும், வனத் துறை, உப்பு உற்பத்தியாளர் நிறுவனங்களின் கோரிக்கை குறித்தும் ஆய்வு செய்து, தக்க பரிந்துரைகளைச் செய்வதற்காக செயலர், வருவாய்த் துறை, செயலர், தொழில் துறை, செயலர், சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்றினை அரசு நியமித்துள்ளது.

4. அரசாணை (நிலை) எண் 629, வருவாய், நாள் 3-7-1997-இல் அமைக்கப்பட்ட குழு, தல ஆய்வு மேற்கொள்வதற்கு முன்னர், இந்நிலங்களை எந்தெந்தத் தொழில் நோக்கத்திற்குப் பயன்படுத்தலாம் என்பது பற்றிய பல்வேறு அம்சங்கள் குறித்தும், இதனால் விளையும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு குறித்தும், தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு, முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், தமிழ்நாடு உப்பு நிறுவனத் தலைவர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதுகுறித்து முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், தமிழ்நாடு உப்பு நிறுவன தலைவர் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் ஆகியோர் அறிக்கைகள் அனுப்பியுள்ளனர். சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதற்கிடையில் குழுவின் உறுப்பினரான வருவாய்த் துறைச் செயலர் 26-2-1999, 27-2-1999 மற்றும் 28-2-1999 ஆகிய நாட்களில் வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதியில் பூர்வாங்க ஆய்வு மேற்கொண்டுள்ளார். இதுகுறித்து நில நிர்வாக ஆணையரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டபின் குழு தல ஆய்வு மேற்கொண்டு தனது அறிக்கையினை அரசுக்கு அளிக்கும்.



1999 மே 18]

**(x) வேலூர் நகராட்சியில் பன்றித் தொல்லையால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

வேலூர் நகர் மன்றத்தின் 29-9-1998 ஆம் நாளிட்ட தீர்மானம் எண் 2027-ல் வேலூர் நகர எல்லைக்குள் சுற்றித்திரியும் பன்றிகளைச் சுட்டுக்கொன்று அழிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, நகராட்சி ஆணையரால் பிரேரணை அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது. அதன்பின் வேலூர் நகராட்சியில் சுற்றித்திரியும் 337 பன்றிகள் இதுவரை சுட்டு அழிக்கப்பட்டன. தொடர்ந்து பன்றிகளை அழிக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(xi) வாணியம்பாடி தொகுதி, முல்லை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் பெண்களுக்குத் தனி கழிப்பறை கட்ட வேண்டிய அவசியம் குறித்து**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில், மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் பள்ளிகளுக்குக் கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளது:

1. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொரக்காயல்பட்டி 1997-98

2. ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, கொக்காயல்பட்டி 1998-99

3. அரசு உயர்நிலைப் பள்ளி, கிரிசமுத்திரம் 1998-99

4. முல்லை ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில், மத்திய ஊரக துப்புரவுத் திட்டத்தின்கீழ் கழிப்பறை கட்ட 1999-2000 நிதி ஆண்டில் முன்னுரிமை வழங்கப்படும்.

[1999 மே 18

**(xii) உள்ளாட்சி நிறுவனங்களில் பதிவு மூப்பு அடிப்படையில்தான் நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவு இருந்தும்கூட திருநெல்வேலி மாவட்டம், இலஞ்சி பேரூராட்சியில் அவ்வாறு நடைபெறாததால் பதிவு மூப்பு உள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து**

உறுப்பினர்: **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

திருநெல்வேலி மாவட்டம், இலஞ்சி பேரூராட்சியில் பேரூராட்சி இயக்குநரால் அங்கீகாரம் செய்யப்பட்ட 4 தொகுப்பூதிய பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் தேர்வு செய்ய வேண்டி அப்பேரூராட்சியின் செயல் அலுவலரின் 26-6-1998 நாளிட்ட கடிதத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் கோரப்பட்டது. அதன்படி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் 24-7-1998 ஆம் நாளிட்ட கடிதத்தில் 11 நபர்களுக்கானப் பட்டியல் அனுப்பப்பட்டு இப்பேரூராட்சியில் 31-7-1998 அன்று செயல் அலுவலருக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. பெறப்பட்ட பட்டியலை இப்பேரூராட்சியின் செயல் அலுவலர் நியமனக் குழுவில் வைத்து 18-11-1998 அன்று நியமனக் குழுவினால் நேர்காணல் நடத்தப்பெற்று கீழ்க்கண்ட 4 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:

1. திரு. த. சக்திவேலாயுதம்
2. திரு. கே. செல்லப்பா
3. திரு. எஸ். காளியப்பன்
4. திரு. ராமகிருஷ்ணன்

2. ஆனால், மாவட்ட வேலைவாய்ப்பகத்திலிருந்து பெறப்பட்ட 11 நபர்கள் பட்டியலில் 7 நபர்கள் நேர்காணலுக்கு வருகை தரவில்லை எனக் குறிப்பிடப்பட்டு நேர்காணலுக்கு வரப்பெற்றதாகச் சொல்லப்படும் மேற்படி 4 நபர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதில் செயல் அலுவலர் தாம் பட்டியல் பெற்ற நாள் 31-7-1998-ல் இருந்து சுமார் மூன்றரை மாதங்கள் வரை வைத்திருந்து 18-11-1998 அன்று நியமனக்



1999 மே 18] [திரு. கோ.சி. மணி]

குழுக் கூட்டத்தை நடத்துவதற்கு காரணமாக பேரூராட்சி மன்றத் தலைவி ஊரில் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் பேரூராட்சி மன்றத் தலைவியால் மன்றக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

1. 12-08-1998 சிறப்புக் கூட்டம்
2. 24-08-1998 சிறப்புக் கூட்டம்
3. 27-08-1998 சாதாரணக் கூட்டம்
4. 15-09-1998 சிறப்புக் கூட்டம்
5. 24-09-1998 சாதாரணக் கூட்டம்
6. 05-10-1998 அவசரக் கூட்டம்
7. 15-10-1998 அவசரக் கூட்டம்
8. 29-10-1998 அவசரக் கூட்டம்
9. 02-11-1998 சிறப்புக் கூட்டம்

ஆகையினால் பேரூராட்சி மன்றத் தலைவி ஊரில் இல்லை என்ற காரணம் ஏற்கத் தக்கதாக இல்லை. மூப்புடைய நபர்கள் 5 பேர் இருக்கையில் அவர்களுக்கு இளையவர்களான மேற்படி நபர்களை நியமனம் செய்துள்ளது அரசு ஆணைக்கு எதிரானதாகும். மேலும் வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் உள்ள 11 நபர்களில், 4 போகள் மட்டும் நேர்காணலுக்கு வருகை தந்ததாகப் பதியப்பட்டு அவர்களை மட்டும் பணி நியமனம் செய்துள்ளது ஏற்புடையது அல்ல. எனவே, விதிகளுக்கும், அரசு ஆணைக்கும் முரணாகச் செய்யப்பட்ட மேற்படி 4 நபர்களின் நியமனத்தை ரத்துச் செய்யுமாறு 3-3-1999 அன்று பேரூராட்சிகள் இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி 11 நபர்களுக்கும் அறிவிப்பு செய்து நேர்காணலுக்கு நாள், நேரம் நிர்ணயம் செய்து விதிகளின் படியும், அரசு ஆணைகளுக்குட்பட்டும் நியமனக் குழு மூலம் பணி நியமனம் செய்யும்படியும் பேரூராட்சிகள் இயக்குநர் ஆணையிட்டுள்ளார்.

3. பேரூராட்சிகள் இயக்குநரின் ஆணையின்படி மேற்கண்ட 4 நபர்களையும் 9-3-1999 பிற்பகல் முதல் பணிநீக்கம் செய்து இலஞ்சி பேரூராட்சி, செயல் அலுவலரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

[1999 மே 18

**(xiii)** திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பஞ்சாண்டியூர் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் இருப்பது குறித்து

உறுப்பினர்: **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூராணி பஞ்சாயத்தைச் சார்ந்த பஞ்சாண்டியூர் கிராமத்தில் 1981-82 ஆம் ஆண்டில் 5000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டது. அக்கிராமத்தின் தற்போதைய (1999 ஆம் ஆண்டு) மக்கட் தொகை 260. இக்கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தற்போது கல்லூரணி பஞ்சாயத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மேல்நிலைத் தொட்டி மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் ரூ. 40,000 மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றன. இம்மதிப்பீட்டுத் தொகையில் 50 விழுக்காடுத் தொகையான ரூ. 20,000 அவ்வூராட்சியிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இப்புனரமைப்புப் பணிகள் 15-4-1999-ல் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(xiv)** வேலூர் நகரில் சைதாப்பேட்டை, தோட்டப்பாளையம், வேலப்பாடி, கஸ்பா, பர்மா காலனி, காகிதப்பட்டறை பகுதிகளில் வரும் மழைநீர்க் கால்வாய் தூர் வாராமல் உருக்குலைந்துள்ளதால் வெள்ளம் நகருக்குள் புகுவதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து

உறுப்பினர் : **திரு. சி. ஞானசேகரன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

வேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கானாறு 29 கி.மீ. நீளமுள்ளதாகும். இது வருவாய்த் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. மழைக்காலத்தில் தண்ணீர் தேங்காமல் இருக்க, தோட்டப்பாளையம், சி.எம்.சி. கிரவுன் தியேட்டர் பின்புறம், கஸ்பா பகுதிகளில் உள்ள கானாறுகளில் 4.85 கி.மீ. தூரத்திற்கு, நகராட்சி எஸ்கலேட்டர் லோடர் மூலம் தூர்வாரப்பட்டுள்ளது. நகராட்சி நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக அனைத்துக் கானாறுகளிலும் ஒரே தடவையில் தூர் வாரும் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.





**(XV)** புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட தாமரைக் குளத்தை ஆக்கிரமித்து கான்கிரீட் வீடுகள் கட்டப்படுவதால் அத்தகைய ஆக்கிரமிப்புகளை நீக்குவது குறித்து.

உறுப்பினர் : **திரு. அ. வ. அப்துல் நாசர்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

கடலூர் மாவட்டம, புவனகிரி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்புவனகிரி கிராமத்தில் பழைய புல எண் 114/2எ1-ல் 25.0.15 ஹெக்டேர் நத்தமாக இருந்துள்ளது. மேற்படி சர்வே எண்ணில் தாமரைக்குளமும் உள்ளது. ஏற்கெனவே இந்த நத்தம் பகுதியில் குளம் இருந்துள்ளதால், குளத்திற்கு அத்து மற்றும் பரப்பு ஏதுமில்லை. அதன் பின்னர் 1993-ஆம் ஆண்டு நத்தம் சர்வே செய்யும்பொழுது குளம் அமைந்த பகுதிக்கு சர்வே எண் 326/1 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மொத்த பரப்பளவு 28494 சதுர மீட்டராகும். இக்குளத்தின் நான்கு கரைகளிலும், அதாவது தென்கரை பகுதியில் 15 வீடுகளும் (கூரை வீடு 10 +ஓட்டு வீடு 4+மெத்தை வீடு 1), வடகரை பகுதியில் 14 வீடுகளும் (கூரை வீடு 13+ஓட்டு வீடு 1), கீழ்கரை பகுதியில் 16 வீடுகளும் (கூரை வீடு 14+ஓட்டு வீடு 2) மற்றும் மேல்கரை பகுதியில் 16 வீடுகளும் (கூரை வீடு 12+ஓட்டு வீடு 3+ மெத்தை வீடு 1) ஆக மொத்தம் 61 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்படி நத்தம் சர்வே செய்யும்பொழுது அவைகளுக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதியை தாமரைக்குளம் என அடங்கல் பதிவேட்டில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. தாமரைக்குளத்தைச் சுற்றி குடியிருந்துவரும் 61 நபர்களுக்கும் வீட்டு மனைப் பட்டா நத்தம் நில அளவை மூலம் வழங்கப்பட்டுள்ளதால், அதனை ஆக்கிரமிப்பு எனக் கருத இயலாது.

[1999 மே 18

**(xvi)** தென்காசி நகராட்சியில் காலியாக உள்ள கட்டட ஆய்வாளர் பணியிடம் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் இருப்பதால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து

உறுப்பினர் : **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

தென்காசி நகராட்சியில் பணிபுரிந்து வந்த நகரமைப்பு ஆய்வர், பணிமூப்பின் அடிப்படையில் 31-10-1998-ல் பணியிலிருந்து ஓய்வுபெற்றதால் ஏற்பட்ட காலியிடத்தை அரசு விதிகளின்படி பூர்த்தி செய்துகொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், தென்காசி நகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்துள்ளார். அதன்படி தற்போது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதியான நபர்களின் பட்டியலை அனுப்பிவைக்கும்படி தென்காசி நகராட்சி கோரியுள்ளது. எனவே மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டதும் விதிகளின்படி இப்பணியிடம் விரைவில் நகராட்சி ஆணையரால் நிரப்பப்படும்.

**(xvii)** திருப்பூர் நகரம் மற்றும் கிராமப்புறங்களுக்கு வர வேண்டிய குடிதண்ணீரின் அளவு குறைந்துகொண்டே வருவதால் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து

உறுப்பினர் : **திரு. கே. சுப்பராயன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

திருப்பூர் முதல் குடிநீர்த் திட்டம் 1962 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. இத் திட்டத்தில் நாளொன்றுக்கு வழங்கப்பட வேண்டிய 8 மில்லியன் லிட்டர் குடிநீரில் 5 மில்லியன் லிட்டர்தான் வழங்கப்படுகிறது.

திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டம் 1993 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு நகராட்சி வசம் பராமரிப்பு செய்ய ஒப்படைக்கப்பட்டது. அரசு ஆணைப்படி 1-1-1997 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தினைப் பராமரித்து வருகிறது.



1999 மே 18] [திரு. கோ.சி. மணி]

இரண்டாவது திட்டத்தில் நகராட்சிக்கு நாளொன்றுக்கு 26 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழியோரத்திலுள்ள 4 பேரூராட்சிகளுக்கு 5.22 மில்லியன் லிட்டர் குடிநீரும், ஊரகப் பகுதியிலுள்ள 48 வழியோர ஊராட்சிகளுக்கு 12.63 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பவானி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுகிறது. பவானி ஆற்றில் வரும் நீரில் பில்லூர் அணையிலிருந்தும் நீலகிரி மாவட்ட கல்லார் அணையிலிருந்தும் தூர், மண் மற்றும் மணல் கலந்து விடுவதால் டர்பைன் பம்பின் உதிரி பாகங்கள் விரைவில் தேய்வடைந்து பம்பு உந்துதிறன் குறைந்து விட்டது. மேலும் தூர் மண் கலந்த ஆற்று நீரின் தன்மையால் நீர் வடிகட்டும் 14 படுகைகளின் வடிகட்டும் திறன் குறைந்து விட்டது. இக்குறைகளை நிவர்த்தி செய்ய பணிகள் விரைவில் எடுக்கப்பட உள்ளது.

இந்நிலையில், திருப்பூர் நகருக்கு 2-வது திட்டத்தின் கீழ் 7-2-1999 வரை தினசரி 22 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. 240 குதிரைதிறன் டர்பைன் பம்புகளில் ஒன்றும், சுத்திகரிக்கப்பட்ட நீரைஉந்தும் 400 குதிரைதிறன் பம்புகளில் ஒன்றும், பழுதடைந்து விட்டதால் 8-2-1999 முதல் 28-2-1999 வரை திருப்பூர் நகருக்கு நாளொன்றுக்கு 18 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. மோட்டார் பழுதுகள் சரிசெய்யப்பட்டு 28-2-1999 முதல் தினசரி 22 மில்லியன் லிட்டர் குடிநீர் திருப்பூர் நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது

மேலும் திருப்பூர் வட்டார வளர்ச்சித் திட்டம் தொடர்பான விரிவான அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது:

திருப்பூர் நகராட்சி (Tiruppur Area Development Scheme) மற்றும் பெருந்துறை, சென்னிமலை, ஊத்துக்குளி, திருப்பூர் ஒன்றியங்களின் வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு நாளொன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க செயல்படுத்தப்பட உள்ளது.

இதில் 170.44 மில்லியன் லிட்டர் நீரை திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள விநியோகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் (New Tiruppur Area Development Corporation Limited) மூலம் அனைத்துப் பணிகளும் செயல்படுத்தப்படவுள்ளன. மீதமுள்ள 14.56 மில்லியன் லிட்டர் நீரை மட்டும் வழியோரக் கிராமங்களுக்கு பிரதானக் குழாய்களில் 5 நீர் எடுப்பு முனைகள் (Tapping points) மூலமாக விநியோகம் செய்ய

[திரு. கோ.சி. மணி] [1999 மே 18

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நில மட்ட அளவுகள் எடுக்கப்பட்டு (levelling) வடிவமைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

பிரதானப் பணிகளான தலைமைப் பணியிடம், சுத்திகரிப்பு நிலையம், பிரதானக் குழாய் பதிக்கும் பணி மற்றும் திருப்பூர் மேம்பாட்டுப் பகுதி எல்லைக்குள் உள்ள அனைத்துப் பணிகளும் திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் (New Tiruppur Area Development Corporation Limited) மூலமாகச் செயல்படுத்தப்படவுள்ளன.

5 நீர் எடுப்பு முனைகளில் (Tapping points) நீர் அழுத்த விபரம், நீர் இறைப்பு நேரம் மற்றும் நீர் எடுப்பு முனைகளில் அமைக்கப்படவிருக்கும் தரைமட்டத் தொட்டிகளின் இடங்கள் ஆகிய குறிப்புகள திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், சென்னை அலுவலகத்தில் கேட்கப்பட்டுள்ளன. தேவையான தொழில் நுட்பக் குறிப்புகள் கிடைக்கப் பெற்றவுடன், திட்ட உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வாரியத்தின் ஒப்புதல் பெற சமர்ப்பிக்கப்படும்.

**(xviii) திருப்பூர், வீரபாண்டி ஊராட்சி, மங்களம் ஊராட்சி, அதை ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதை திருப்பூர் நகராட்சி, விநியோகக் குழாயை அடைத்து தடை செய்வது குறித்து.**

உறுப்பினர் : **திரு. கே. சுப்பராயன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி: (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தில் திருப்பூர் நகர் மற்றும் கிராமப்புறங்களுக்குத் தேவையான 44 எம்.எல்டி. குடிநீர் பவானி ஆற்றிலிருந்து எடுக்கப்பட வேண்டும். பவானி ஆற்று இயல்பு நீரில் (Raw water) தூர் மண் (Silt) அதிகம் கலந்து விடுவதால், இயல்பு நீரேற்றம் பம்பிலுள்ள முக்கிய பாகமாகிய இம்பெல்லரில் அதிக தேய்மானம் ஏற்படுவதால், எடுக்கப்படும் நீரின் அளவு 38 எம்.எல்டி. ஆகக் குறைவு ஏற்பட்டு வருகிறது. இக்குறைவினால் திட்டத்தின் கடைசி பகுதியான வீரபாண்டி ஊராட்சி, மங்களம் ஊராட்சி, அதை



1999 மே 18] [திரு. கோ.சி. மணி]

ஒட்டியுள்ள கிராமப் பகுதிகள், திருப்பூர் நகருக்குக் குடிநீர் விநியோகம் செய்யும் குழாய்க்குக் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ளதால் திட்டமிட்டபடி முழு அளவில் குடிநீர் செல்லும் வாய்ப்பு குறைவாக உள்ளது. இந்த குறைவை நிவர்த்தி செய்ய பவானி ஆற்றில் உள்ள தலைமையிடத்தில் அதிகத் திறன் கொண்ட இரண்டு புதிய இயல்பு நீரேற்ற பம்புகள் ரூ. 62.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் 10-03-1999 அன்று பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

இந்த புதிய நீரேற்றும் பம்புகள் பொருத்தப்பட்டு குறைவுகள் நிவர்த்தி செய்யப்படும். இதுசமயம், வீரபாண்டி ஊராட்சி, மங்களம் ஊராட்சி, அதை ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளுக்கு திட்டத்தில் வரையறை செய்து ஒதுக்கப்பட்ட குடிநீர் முழு அளவில் வழங்கப்படும்

## கவன ஈர்ப்பு அறிவிப்பு

**(xix) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம் ஆயிரம்பேரி கிராமத்திலுள்ள மேலகரம் அரசு விதைபபண்ணை செயல்படாமல் இருப்பது குறித்து**

உறுப்பினர் : **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: (வேளாண்மைத் துறை)**

**அறிக்கை**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், ஆயிரம்பேரி கிராமத்திலுள்ள மேலகரம் அரசு விதைப்பண்ணை 10-9-1963 முதல் செயல்பட்டு வந்தது. இப்பண்ணையின் மொத்த பரப்பு 40.52 ஏக்கர். அதில் சாகுபடி பரப்பு 38.62 ஏக்கர் ஆகும். இப்பண்ணை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததால், 1990-91 முதல் சாகுபடி மேற்கொள்ளப்படவில்லை. இப்பண்ணையைத் தொடர்ந்து நடத்தக்கூடிய வாய்ப்புகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பண்ணை சீரமைப்பு மற்றும் சாகுபடி பணிகளை ரூ.23.75 இலட்சம் செலவில் மேற்கொள்ள வேளாண்மை ஆணையர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1999 மே 18

**(XX)** தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களிலும் மற்றும் தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களிலும் கடந்த சாகுபடி பருவங்களில் குறுவை, சம்பா, குறுகிய கால நெல் பயிர்கள் சாகுபடி செய்த நெல்லின் பெயர்களான **1009**, ஆடுதுறை-**36**, கட்டப் பொன்னி, கல்சா போன்ற வகைகள் வேளாண்மைத் துறையினரால் கொடுக்கப்பட்ட விதைகள் போதுமான விளைச்சல் இல்லாமல் ஒரு ரகமான நெல் பல ரகமாக விளைந்தும் அரிசி நிறமாற்றம் ஏற்படும் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை உள்ளாக்கியுள்ளது. இதற்கு மாற்றாக புதிய ரக வீரியவித்து விதைகளை நடப்பு பருவத்திற்கு வழங்கும் அவசியம் குறித்து.

உறுப்பினர் : **திரு. ஜி. பழனிசாமி:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: (வேளாண்மைத் துறை)**

**அறிக்கை**

தமிழ்நாட்டில் குறிப்பாக தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்கு, குறுகிய கால ரகங்களான ஆடுதுறை 36, ஐஆர் 50, டிகேஎம். 9, ஏடிடி 37, ஏஎஸ்டி 18 முதலிய ரகங்களும், சம்பா சாகுபடிக்கு சீ.ஆர். 1009, ஆடுதுறை 38, கோ. 43, ஆடுதுறை 39 ஆகிய ரகங்களுக்கான சான்று விதைகளும் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட ரகங்கள் தமிழ்நாடு முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்ற ரகங்கள் என்பதுடன் அதிக உற்பத்தித் திறன் கொடுக்கக்கூடிய ரகங்கள் ஆகும். மேற்குறிப்பிட்ட ரகங்களை விவசாயிகள் பெருமளவில் பயன்படுத்தி நல்ல உற்பத்தித் திறனைப் பெற்றதோடு தொடர்ந்து விரும்பி சாகுபடி செய்து வருகின்றனர். வேளாண்மைத் துறை மூலம் விநியோகம் செய்யப்படும் நெல் விதைகள் விதைச்சான்றுத் துறையால் பதிவு செய்யப்பட்டு விதை பரிசோதனை நிலையத்தில் முளைப்புத் திறன், ஈரப்பதம், பிற இன மற்றும் ரக கலப்பு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசோதனையில் தெரிவு பெற்ற விதைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு சான்று அளிக்கப்படுகிறது. இத்தகைய சான்றளிக்கப்பட்ட விதைகளே விவசாயிகளுக்கு



1999 மே 18] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

வழங்கப்படுகின்றன. எனவே ஒரு ரகமான நெல் பல ரகமாக விளைய வாய்ப்பு இல்லை. மேலும் சம்பா பயிர்கள் பூக்கும் தருணம் முதல் அறுவடை வரை மழையால் பாதிக்கப்பட்டால் அரிசி நிறமாற்றம் மற்றும் கருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

டிசம்பர் 1998-ல் இயல்பான மழையளவான 200 மில்லிமீட்டருக்குப் பதில் சுமார் 350 முதல் 400 மில்லிமீட்டர் வரை மழை அதிகமாகத் தொடர்ந்து நாகை, திருவாரூர் மற்றும் தஞ்சை பகுதிகளில் பெய்த காரணத்தால், அத்தருணத்தில் பூ மற்றும் கதிர் பருவத்தில் இருந்த பயிர் பாதிக்கப்பட்டு, அப்பயிரில் கிட்டத்தட்ட 25 சதவீதம் மகசூல் குறைந்துள்ளது. சாவித்திரி ரகம் (சி.ஆர். 1009) ஆகஸ்ட் மாதத்தில் நாற்று விடப்பட்டு ஜனவரி இரண்டாம் மற்றும் 3வது வாரத்தில் அறுவடை செய்யப்பட்டால் நல்ல மகசூல் தரும். ஆனால் இவ்வாண்டு முன்கூட்டியே ஜூலை மாதத்தில் தண்ணீர் பெறப்பட்ட நிலையில் சில விவசாயிகள் உகந்த பட்டத்திற்கு முன்கூட்டியே சம்பா பருவத்தில் இந்த ரகத்தை பயிரிட்டதால் பூ மற்றும் கதிர் பருவத்தில் டிசம்பர் மாதம் பெய்த அதிக தொடர் மழையினால் மகசூல பாதிக்கப்பட்டுள்ளது.

பிற ரக கலவனின்றி தரமான சான்று விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. வயல்மட்ட அளவிலும், விதைப் பரிசோதனையின்போதும் நிர்ணயிக்கப்பட்ட கலவன் அளவான 0.2 சதவீதத்தை விட அதிகமாக உள்ள விதைப்பண்ணைகள்/விதைக்குவியல்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. 1997-98ஆம் ஆண்டு வயல் மட்ட அளவில் 553.0 எக்டேர் விதைப்பண்ணைகள் தள்ளுபடி செய்யப்பட்டு இப்பண்ணைகளிலிருந்து விதை கொள்முதல் செய்யப்படவில்லை. மேலும் விதைப்பரிசோதனை நிலையத்தில் பகுப்பாய்வின்போது 43.77 எக்டேர் விதைப்பண்ணையிலிருந்து பெறப்பட்ட 18 குவியல்கள் பிற ரக கலவன் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருந்ததால் தேர்ச்சி பெறாத இப்பண்ணையிலிருந்து பெற்று சுத்தி செய்யப்பட்ட விதைக்குவியல்கள் கொள்முதல் செய்யப்படாமல் விதைப்பண்ணை விவசாயிகளுக்குத் திரும்ப வழங்கப்பட்டன. மேலும் போதிய மகசூல் தராத, பூச்சி தாக்குதல் அதிகமாகக் காணப்படும் கட்டை பொன்னி ரகத்தின் விதைகள் விற்பனை சென்ற ஆண்டு முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1999 மே 18

எனினும், உற்பத்தித் திறனை மேலும் அதிகப்படுத்த புதிய ரகங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. அம்பாசமுத்திரம் 19 மற்றும் 20 நெல் ரகங்கள் தற்போது விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. 1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆடுதுறை 43 நெல் ரகம் அதிக உற்பத்தித் திறன் கொண்டது மட்டுமின்றி, சன்ன நெல் ரகமாகும். இந்த ரகத்தின் சான்றுவிதைகளை விவசாயிகளுக்கு இவ்வாண்டு வழங்க விதை உற்பத்திப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறுகிய கால ரகமான ஆடுதுறை 43, 1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு விதைப்பண்ணைகள் சுமார் 100 எக்டேர் பரப்பில் அமைக்கப்பட்டு விதை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஏடிடிஆர்எச்.1 மற்றும் கோஆர்எச்.2 ஆகிய இரண்டு வீரிய ஒட்டு ரகங்கள் வெளியிடப்பட்டு ஆதார விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒட்டுரக நெல் ஏடிட்டிஆர். எச்1 (ADTRH1) ரக விதை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு கோ.47 என்ற குறுகிய கால நெல் ரகம் வெளியிடப்பட்டு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீண்டகால ரகமான சாவித்திரி (சி.ஆர்.1009) ரகத்திற்குப் பதில் ஓ.ஆர்.வொய் 1128 (ORY 1128) என்ற வளர்ப்பு அனுசரணை ஆராய்ச்சி நிலையிலுள்ளது. சம்பா பருவத்தில் சி.ஆர். 1009 ரகத்திற்கு இணையான உற்பத்தித் திறன் உள்ள ரகத்தைத் தேர்வு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 'இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மையம்' மூலம் 'சுவர்ணதான்' என்ற ரகம் தெரிவு செய்யப்பட்டது. அதற்கான ஆதார விதைகள் பெறப்பட்டு இந்த ரகத்தின் உற்பத்தித் திறன் மற்றும் இதர தன்மைகளை ஆராய சோதனை திடல் வரும் சம்பா பட்டத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, உயர் விளைச்சல் தரக்கூடியதும் விவசாயிகளிடையே வரவேற்பைப் பெற்றதுமான நெல் விதைகளை விவசாயிகளுக்கு வழங்க அதிக முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், உற்பத்தியை அதிகப்படுத்தவும்



1999 மே 18] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

புதிய ரகங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தவும் முழுமையான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

**(xxi) தமிழ்நாட்டில் அக்ரோ இஞ்ஜினியரிங் பணி பிரிவில் இயங்கிவருகின்ற 210 கூட்டுறவுச் சங்கங்களில் 124 சங்கங்கள் நஷ்டம் அடைந்துள்ள நிலை குறித்து**

உறுப்பினர் : **திரு. கே. சுப்பராயன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: (வேளாண்மைத் துறை)**

**அறிக்கை**

வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 210 உள்ளன. வட்டாரச் சங்கங்கள் இருக்கும் இடத்தைப் பொறுத்தும் சங்க நிர்வாகிகளின் திறனைப் பொறுத்தும் அவற்றின் வளர்ச்சி அமைந்து வருகிறது.

2. 1972-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கங்கள் பல ஆண்டுகளாக டிராக்டர் வாடகையை நம்பியே இருந்து வந்துள்ளன. தனியார்களிடையே டிராக்டர் பெருகப் பெருக, சங்கத்திற்கான டிராக்டர் வாடகை வருவாய் வாய்ப்புகள் குறைந்து வந்துள்ளன. பல மையங்கள் மாற்று முனைப்புகளில் இறங்கி தொய்வு விழாமல் காத்துக்கொண்டுள்ளன. வணிக இடுபொருட்களான உரம், பூச்சி மருந்து, விதை ஆகியவற்றை விற்பனை செய்வது, உள்ளூர்களில் பாசனப் பணிகள், இரும்புச் சாமான்கள் வடித்துத் தருதல் போன்ற பல்வேறு பணிகளை இவை மேற்கொண்டு வருகின்றன.

3. இந்த வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் தொய்வுறாமல் இருக்க அரசு பல பணிகளை இவர்களுக்கு அளித்து வருகிறது. பல்வேறு திட்டங்களின்கீழ் ஆழ்குழாய் அமைக்கும் பணிகள் இச்சங்கங்களுக்குப் பல ஆண்டுகளாக ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

4. வேளாண்மைத் துறை மூலமாக வழங்கப்படும் வேளாண் கருவிகளை உற்பத்தி செய்து வழங்கும் பணியை அக்ரோபெட்டிற்கே

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1999 மே 18

அளித்து அரசு சிறப்புச் சலுகை வழங்கியுள்ளது. மேலும் 110 மையங்களில் தொழிற்கூடங்கள் அமைக்க அரசு நிதி உதவி நல்கியுள்ளது. மையங்கள் டிராக்டர்கள் வாங்க அரசு மானிய உதவி நல்கி வருகிறது. இது தவிர தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (N.C.D.C.) மூலமாக இந்த ஆண்டு 48 மையங்களுக்கு டிராக்டர் வாங்கித் தர ரூ.154.91 இலட்சத்திற்கு நிதி வசதி அளிக்க அரசு ஏற்பாடு செய்து தந்துள்ளது.

5. தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு இணையம் வாடகை இயந்திரங்களான டிராக்டர், டிரையிலர் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்காக அரசு நிதி உதவி அளித்து வருகிறது. 1997-98 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் வட்டார அளவிலான 5 மையங்களுக்கு வாடகை இயந்திரங்களான டிராக்டர், டிரையிலர், நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரம் ஆகியவை வாங்க ரூ.10.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1998-99-ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் மேலும் 5 வட்டார அளவிலான மையங்களுக்கு வாடகை இயந்திரங்களான டிராக்டர், டிரையிலர், மற்றும் உழவுக் கருவிகள் வாங்க ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. அதே போல் நடப்பாண்டிலும் 5 வட்டார மையங்களுக்கு மையம் ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.10.00 இலட்சம் அரசு மானியமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. வாய்க்கால்களில் வளர்ந்திருக்கும் நெய்வேலி காட்டாமணிச் செடிகளை அழிக்கும் திட்டம் 1997-98 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிலும் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, கரூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.290.28 இலட்சம் செலவிடப்பட்டு, இச்செடிகளை அழிக்கும் பணி அக்ரோபெட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. நடப்பாண்டிலும் மேற்கண்ட மாவட்டங்களில் 5210 எக்டேர் நிலப்பரப்பிலுள்ள நெய்வேலி காட்டாமணிச் செடிகளை அழிக்கும் திட்டம் ரூ.468.909 இலட்சம் செலவில் அக்ரோபெட் மூலம் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இதனால் வேளாண்மை, பொறியியல் மற்றும்



1999 மே 18] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் இலாபகரமாக இயங்க வாய்ப்பு அதிகரித்துள்ளது.

7. பல ஆண்டுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு இல்லாத நிலையில் 124 சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் பதவியேற்றதன் பின்னர் இந்த நிலை மாறி நல்ல முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. மார்ச் 1999 புள்ளிவிவரப்படி 210 சங்கங்களில் 62 சங்கங்கள் மட்டுமே நட்டத்தில் உள்ளன.

8. இந்த நலிந்த சங்கங்களையும் இலாபகரமாக மாற்ற அக்ரோபெட் இணையமும் அரசும் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. சங்கங்களின் மேம்பாட்டிற்காக அக்ரோபெட், அரசுக்கு கீழ்க்கண்ட சில பரிந்துரைகளை அனுப்பி உள்ளது:

(1) நலிந்த சங்கங்களுக்கு அரசு பங்கு மூலதனத்தைக் கூட்டித் தருதல்;

(2) சங்கங்கள் தொழிற்கூடங்களை அமைக்கவும், தொழில்களை மேற்கொள்ளவும், நிதி உதவியும் நடைமுறை மூலதன உதவியும் வழங்குதல்;

(3) அரசுத் துறைகளும் உள்ளாட்சியும் வழங்கும் பணிகளில் வேளாண் பொறியியல் பணிச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்தல்;

(4) ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு வேளாண் பொறியியல் பணிச் சங்கங்கள் செய்து வழங்கும் இரும்புச் சாமான்களுக்கு விற்பனை வரி விலக்கு அளித்தல்;

(5) நீர்ப்பாசன தூர் வாரும் பணிகளை வேளாண் சங்கங்களுக்கு அளிக்க அண்மையில் அரசு அறிவிப்பு செய்துள்ளது. அத்தகைய பணிகளை வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்களுக்கு அளித்தல்;

9. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களும், அக்ரோபெட் இணையமும், அரசும் இச்சங்கங்களின் முன்னேற்றத்தில் தீவிரமான ஈடுபாடு காட்டி வருகின்றன. இம்முயற்சியினால் அனைத்துச் சங்கங்களும் இலாபகரமாக இயங்க அதிக வாய்ப்புள்ளது.

**(xxii)** *தமிழ்நாட்டில் குறிப்பாக, நான்கு ஐந்து மாவட்டங்களில் வெங்காயம், தக்காளி விலை வீழ்ச்சியினால் விவசாயிகள் அறுவடை செய்வதையே நிறுத்தி வயலிலேயே அழிந்து கொண்டிருப்பது குறித்து*

*உறுப்பினர்கள்:* **(அ) திரு. டி. மணி:**

**(ஆ) திரு. நா. பெரியசாமி:**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: (வேளாண்மைத் துறை)**

**அறிக்கை**

தமிழ்நாட்டில், 1997-98 ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிரின் பரப்பளவு 26602 ஹெக்டேர். இதே பயிரின் 1998-99 ஆம் ஆண்டிற்கான பரப்பளவு 33240 ஹெக்டேர் ஆகும். இவ்விரண்டு ஆண்டுகளுக்கான விவரங்களை ஒப்பு நோக்கும்போது, நடப்பு ஆண்டில், வெங்காயத்தின் சாகுபடி 6638 ஹெக்டேர் கூடுதலாகக் காணப்படுகிறது. இவ்வதிகமான பரப்பளவின் காரணமாக வெங்காய உற்பத்தி அதிகரித்துள்ளது. அதிக உற்பத்தியின் காரணமாக வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது தற்காலிகமான ஒரு நிகழ்வுதான்.

2. இதே போன்று, 1997-98 ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட தக்காளி பயிரின் பரப்பளவு 25120 ஹெக்டேர் இதே பயிர் பயிரிடப்பட்ட 1998-99 ஆம் ஆண்டிற்கான பரப்பளவு 25840 ஹெக்டேர் ஆகும். பரப்பளவில் கணிசமான கூடுதல் இல்லாத போதிலும், தக்காளி சாகுபடி ஒரே சமயத்தில் அனைத்து விவசாயிகளும் சாகுபடி மேற்கொள்வதாலும், உயர் விளைச்சல் (High Yielding Varieties) ரக விதைகளைப் பயன்படுத்தியதாலும், தக்காளி பயிரில் மிகுதியான விளைச்சல் காணப்பட்டு, விலை வீழ்ச்சிக்குக் காரணமானது. எனவே விவசாயிகள் வெவ்வேறு காலங்களில் தக்காளி சாகுபடி மேற்கொண்டால், ஒரே சீரான விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

3. மேற்குறிப்பிட்ட இரு பயிர்களின் விலை வீழ்ச்சி ஒரு தற்காலிக நிகழ்வுதான். (Temporary Phenomenon) மாறிவரும் பருவ காலத்திற்கேற்ப, அதாவது கோடைப் பருவம் வருகின்றபொழுது, இந்நிலை மாறும்.



**(xxiii)** (அ) *7-4-1999-ல் சூறாவளிக் காற்று அடித்ததில் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் ஒருவந்தூர், ஒருவந்தூர் புதூர் வடுகப்பட்டி வாழை, வெற்றிலை கொடிக்கால் சேதமடைந்த விவசாயிகளின் துயர் துடைக்கக் கோருவது குறித்து*

(ஆ) *கபிலர் சட்டமன்றத் தொகுதியில் மோகனூர், பேட்டப்பாளையம், பாலப்பட்டி, மணப்பள்ளி ஆகிய இடங்களில் 7-4-1999-ல் சூறாவளிக் காற்று அடித்ததில் விவசாயிகளின் துயர் துடைக்கக் கோருவது குறித்து*

(இ) *திருப்புவனம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட சூறாவளிக் காற்றால் சுமார் 50 ஏக்கர் வாழைத்தோப்புகள், 150 ஏக்கர் வெற்றிலைக் கொடிக்கால் அழிந்து நாசமாகியுள்ளது. இதனால் விவசாயிகள் மத்தியில் நிலவும் பதட்டம் குறித்து*

*உறுப்பினர்கள்:* **(அ) திரு. க. வேல்சாமி:**
**(ஆ) திரு. கே.கே. வீரப்பன்:**
**(இ) திரு. டி. மணி:**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: (வேளாண்மைத் துறை)**

**அறிக்கை**

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டாரத்தில் 7-4-1999 அன்று பலத்த சூறாவளிக் காற்று வீசியதன் காரணமாக, வாழை மற்றும் வெற்றிலைக் கொடிக்கால் பயிர்கள் சேதமடைந்துள்ளன. வாழைப்பயிர் சுமார் 36 எக்டேர் பரப்பிலும், வெற்றிலைக் கொடிக்கால் சுமார் 2.2 எக்டேர் பரப்பிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள இழப்பு சுமார் ரூ.70.46 இலட்சம் என்றும் 215 விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்பு மோகனூர், ஒருவந்தூர், ராசிபாளையம், குமாரபாளையம், பேட்டப்பாளையம், மணப்பள்ளி, செங்கப்பள்ளி, நன்செய் இடையூர், புன்செய் இடையூர், கீழ்முகம், மரூர் மற்றும் ஆண்டாபுரம் கிராமங்களில் ஏற்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 7-4-1999 நாளன்றுதான் கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களில் சூறாவளிக் காற்று வீசியது. அதன் காரணமாக தக்கலை, திருவட்டாறு, கிள்ளியூர், மேல்புரம்

மற்றும் முந்துரை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட சுமார் 3500 எக்டேர் மொத்த வாழையில் சுமார் 37 எக்டேரிலும், 15,700 எக்டேர் ரப்பர் சாகுபடியில் சுமார் 7 எக்டேரிலும் பயிர் முழுச்சேதாரம் அடைந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்பு சுமார் 15 கிராமங்களில் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதாரம் முழுமையான முறையில் கிராமம் வாரியாகத் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வருகிறது. தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மாவட்ட நிர்வாகத் துறையின் ஒத்துழைப்போடு முழு விவரங்கள் சேகரித்து வருகிறார்கள். இதுசம்பந்தமாக முழு விவரங்கள் பெற்று பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க தக்க செயற்குறிப்பு அரசிற்கு அனுப்புவதாக தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இயற்கை இடர்பாடு நிதியிலிருந்து நிவாரணம் பருவ காலங்களில் ஏற்படும் இழப்பீடுகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. இக்குறிப்பிடப்பட்ட நேர்வில் இழப்பு, பருவ காலம் அல்லாத ஏப்ரல் திங்களில் ஏற்பட்டுள்ளது. அரசு இயற்கை இடர்பாடு நிதிக்கு ஒதுக்கீடு செய்ததைத் தவிர்த்து அதற்கு மேலும் தனியாக நிவாரணம் வழங்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யவில்லை. இருப்பினும், அரசு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநரிடமிருந்து வாழை மற்றும் வெற்றிலைக் கொடிக்கால் பயிர்களின் பாதிக்கப்பட்ட பரப்பளவு, பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்த முழுமையான அறிக்கை பெறப்பட்டவுடன் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடம் கலந்து ஆலோசித்து உரிய நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**(xxiv)** ஜெயங்கொண்டம் தொகுதியில், அய்யாறு வடிநிலக் கோட்டம், அரியலூர் பொறுப்பில் உள்ள மதனத்தூர் பொதுப்பணித் துறை பிரிவில், இடது கொள்ளிடக் கரையிலும் பொன்னாறு பிரதான வாய்க்கால், கிளை வாய்க்கால்களிலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒப்பந்தம் விடப்பட்டு வேலை தொடங்கப்படாமல் இருப்பதால் விவசாயிகளிடத்தில் உள்ள பதட்ட நிலை குறித்து

உறுப்பினர் : **திரு. கே.சி. கணேசன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரை முருகன்: (பொதுப்பணித் துறை)**

**அறிக்கை**

ஜெயங்கொண்டம் தொகுதியில் அய்யாறு வடிநிலக்கோட்டம், அரியலூர் பொறுப்பில் உள்ள மதனத்தூர் பிரிவில் கொள்ளிடம்



ஆற்றின் இடது கரையில் 58/0 முதல் 65/4 மைல் முடிய கரையின்மேல் பகுதியில் கிராவல் பரப்பும் பணிக்காக மட்டுமே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. வரும் நிதியாண்டின் நிதி நிலைக்கேற்ப முன்னுரிமை கொடுக்கப்படும். ஜெயங்கொண்டம் தொகுதி, பொன்னாறு பிரதான வாய்க்காலின் இரண்டு பணிகள் ரூ. 93,000 மதிப்பீட்டிலும், பொன்னாறு கிளை வாய்க்காலில் மதகுகளைப் பழுதுபார்க்க மூன்று பணிகள் ரூ 84,500 மதிப்பீட்டிலும், அடைப்புக் காலத்தில் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும். மேற்கண்ட பணிகளால் பாசனத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை. எனவே விவசாயிகளுக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை.

**(XXV)** சென்னை, சேப்பாக்கம் அலுவலக வளாகம், நடைபாதை, கடைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் அரசு அலுவலர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து

உறுப்பினர் : **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன்: (பொதுப்பணித் துறை)**

**அறிக்கை**

சென்னை, சேப்பாக்கம் அலுவலக வளாகத்திலிருந்த நடைபாதை ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு விட்டன. எனவே அவ்வளாகத்திலுள்ள அரசு அலுவலகங்களுக்குப் பாதிப்பு எதுவும் தற்பொழுது இல்லை.

**(xxvi)** கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் சிறுதொழில் நிறுவனங்கள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கிய ப்ரொக்யூர்ட் திரட் ரப்பர் **(Procured Tread Rubber)** க்கு கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருப்பதால் அச்சிறுதொழில் நிறுவனங்கள் நலிவடைந்து செயல்படாமல் இருப்பது குறித்து

உறுப்பினர் : **டாக்டர் தே. குமாரதாஸ்:**

அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: (போக்குவரத்துத் துறை)**

**அறிக்கை**

1-7-1997 முதல் 30-6-1998 வரை போக்குவரத்துக் கழகங்களுக்கு ப்ரொக்யூர்ட் ரப்பர் வழங்க, உயர்மட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட

[டாக்டர் க. பொன்முடி] [1999 மே 18

ஒப்பந்தங்கள் சாலைப் போக்குவரத்து நிறுவன சுற்றறிக்கை எண் 02/சிபி/ஐஆர்டி/96, நாள் 30-6-1997 மூலம் அறிவிக்கப்பட்டது. அதில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த கீழ்க்கண்ட மூன்று தனியார் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டது:

1. ராயல் பிரஸ்ஸிங் ஒர்க்ஸ், இராமகிருஷ்ணா பில்டிங், படநிலம், குலசேகரம், கன்னியாகுமரி மாவட்டம்-629 161.

2. ரோலக்ஸ் ரப்பர் இண்டஸ்ட்ரீஸ், இராமகிருஷ்ணா பில்டிங், படநிலம், குலசேகரம், கன்னியாகுமரி மாவட்டம்-629 161.

3. ரோஜா ரப்பர் & டிரெட்ஸ், திருநந்திக்கரை, குலசேகரம், கன்னியாகுமரி மாவட்டம்-629 161.

மேற்குறிப்பிட்ட மூன்று நிறுவனங்களுக்கும் அவர்கள் வழங்கிய பிரிக்யூர்ட் ரப்பருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில் செலுத்த வேண்டிய தொகை பின்வருமாறு:—

| நிறுவனத்தின் பெயர் | மொத்த பட்டியல் மதிப்பு ரூ. பை. | 80% மதிப்பு ரூ. பை. | 20% மதிப்பு ரூ. பை. |
|---|---|---|---|
| (1) ராயல் | 3413806.20 | 2731132.13 | 682674.07 |
| (2) ரோலக்ஸ் | 3988973.85 | 3182181.00 | 806792.85 |
| (3) ரோஜா | 1875477.81 | 1500382.20 | 375095.61 |

80% பட்டியல் தொகையை ரப்பர் வழங்கிய 45 தினங்களிலும், மீதி 20% தொகையை, வழங்கப்பட்ட ரப்பர், நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச 25000 கி.மீ. அடைந்ததை உறுதிசெய்த பின்பும் வழங்க வேண்டும். 20% நிலுவைத் தொகையையும் வழங்கப்பட்ட ரப்பர் அடைந்த கிலோ மீட்டருக்கு ஏற்ப விகிதாச்சார முறையில் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரோலக்ஸ் ரப்பர் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் ரோஜா ரப்பர் டிரெட்ஸ் நிறுவனங்களுக்கு 80% பட்டியல் மதிப்புப் பணம் முழுவதுமாக பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. ராயல் பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு மட்டும் மொத்த 80% மதிப்பான ரூ. 27,31,132.13-ல் ரூ. 25,02,792.05 மட்டும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. அவர்கள் ஆகஸ்ட் 1998-ல் வழங்கிய ரப்பருக்கான 80% மதிப்பான ரூ.2,28,339.08



1999 மே 18] [டாக்டர் க. பொன்முடி]

மட்டும் நிலுவைத் தொகையாக உள்ளது. இந்த நிதி ஆண்டில் அதையும் பட்டுவாடா செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20% பணப்பட்டுவாடாவைப் பொறுத்தமட்டில் மேற்படி மூன்று நிறுவனங்களில் ப்ரொக்யூர்ட் ரப்பரும் சாலைப் போக்குவரத்து நிறுவன சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச 25000 கி.மீ. அளவை இன்னும் அடையவில்லை. விகிதாச்சார முறையில் வழங்குவது பற்றி சில விளக்கங்களை சாலைப் போக்குவரத்து நிறுவனத்திடம் நாகர்கோவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் கோரியுள்ளார். போக்குவரத்துக் கழகத்தின் கடுமையான நிதி நெருக்கடி காரணமாக மேற்படி தொகைகள் வழங்கப்படாமல் உள்ளன. நிதி நிலைமை சீரடைந்தவுடன் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் விளக்கம் கிடைக்கப்பெற்றபின் முன்னுரிமை அடிப்படையில் பாக்கித் தொகை வழங்கப்படும்.

**(xxvii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி கோட்டம்-2, தென்காசி பணிமனையில் 15-க்கும் மேற்பட்ட பேருந்துகள் உதிரி பாகங்கள் இல்லாமல் சில வழித்தடங்களில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து**

உறுப்பினர் : **திரு. கே. ரவி அருணன் :**

அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : (போக்குவரத்துத் துறை)**

**அறிக்கை**

3-4-1999 நிலவரப்படி தென்காசி பணிமனையில் அனைத்துத் தடங்களிலும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதன் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| தென்காசி பணிமனையில் மொத்த பேருந்துகள் | : | 78 (உதிரி பேருந்துகள் 12 உட்பட) |
| தடங்களில் இயக்கப்பட வேண்டிய பேருந்துகள் | : | 66 |
| தடங்களில் இயக்கப்பட்ட பேருந்துகள் | : | 66 |

அனைத்து வழித்தடங்களிலும் பேருந்து இயக்கப்பட்டு வருவதால், இப்பணிமனை பேருந்துகளைப் பொறுத்தவரை எவ்விதத் தடமுடக்கமும் இல்லை. எனவே பொது மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை.

**(xxviii)** *விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே பயணிகள் சென்ற பஸ் தடுமாறி 20 அடி ஆழக் கிணற்றில் விழுந்து 5 பேர் இறந்தனர். 36 பேர் படுகாயமடைந்தனர். இதனால் அப்பகுதியில் நிலவும் பதட்டம் குறித்து*

உறுப்பினர்கள்: **(அ) திரு. ஜி. பழனிசாமி:**

**(ஆ) திரு நா. பெரியசாமி:**

**(இ) திரு. டி. மணி:**

**(ஈ) திரு. சி. வேலாயுதன்:**

**(உ) திரு. ஐ. கணேசன்:**

அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: (போக்குவரத்துத் துறை)**

**அறிக்கை**

30-4-1999 அன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம்-1) செஞ்சி கிளையைச் சேர்ந்த பேருந்து எண்.டிஎன்.32/எண் 0060 தடம் எண் டி7 செஞ்சி-மேல்மலையனூர், செஞ்சியில் இரவு 10.30 மணிக்கு நடையெடுத்து மேல்மலையனூர் நோக்கிச்செல்லும் போது 11.20 மணியளவில் மேல்மலையனூர் அருகில் திருப்பத்தில் திரும்பும்போது கழகப்பேருந்துக்கு எதிர் திசையில் பேருந்துக்கு இடதுபுறம் ஒரு டயர் வண்டி கரும்பு ஏற்றி வந்ததாகவும், அதன்மீது மோதாமல் தவிர்ப்பதற்காக ஓட்டுநர் பேருந்தை வலதுபுறம் திருப்பியபோது அங்கு சாலை போட கொட்டப்பட்டிருந்த ஜல்லிக் குவியலின் மீது பேருந்து ஏறியதால் ஓட்டுநர் பேருந்தின் கட்டுப்பாட்டை இழந்து விட்டநிலையில் சாலையை ஒட்டி அமைந்துள்ள பாழும் கிணற்றில் பேருந்து விழுந்து பெரும் உயிர்ச்சேதமான விபத்து ஏற்பட்டது.

2. பேருந்து செஞ்சியில் நடையெடுக்கும்போது 149 பயணிகள் இருந்துள்ளனர். விபத்து நடக்கும்போது பேருந்தில் 88 பயணிகள் இருந்துள்ளனர். விபத்து நடந்த இடத்திலேயே பேருந்து ஓட்டுநரும், ஒரு ஆண் பயணியும், ஒரு ஆண் குழந்தையும் இறந்துவிட்டனர். இரு பெண் பயணிகள் செஞ்சி மருத்துவமனையில் இறந்துவிட்டனர். இதில் 8 பெண்களும், 16 ஆண்களும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 11 பேர் உள்நோயாளிகளாகவும், 13 பேர் புறநோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்விபத்தில் பேருந்தின் கூண்டு முழுவதும் சேதமடைந்துவிட்டது. இவ்விபத்துக்குக் கழக ஓட்டுநரின் கவனக்குறைவே காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



3. இவ்விபத்து தொடர்பாக இந்திய தண்டனைச் சட்டம்—279, 337, 338, 304(ஏ) ஆகிய பிரிவுகளின்கீழ் வளத்தி காவல் நிலையக் குற்ற எண் 211/99-இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறந்த ஓட்டும் திறன் கொண்ட ஓட்டுநர்கள் மட்டும்தான் தடப்பேருந்துகளில் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். சாலை விதிகளை மீறும் ஓட்டுநர்களும், முரட்டுத்தனமாகப் பேருந்துகளை இயக்கும் ஓட்டுநர்களும் தடப் பணியில் இருந்து இறக்கப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள். பேருந்து தடங்களில் அனுப்பப்படும் முன்பு, பேருந்தில் உள்ள குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டு, கிளை மேலாளர் திருப்தி அடைந்த பிறகே தடத்தில் அனுப்பப்படுகிறது.

**(xxix)** *புகைச் சோதனை செய்யாமலேயே வாகனங்களுக்கு சோதனை செய்ததாகச் சான்றிதழ் வழங்கப்படுவதால் சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்பு குறித்து*

உறுப்பினர் : **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: (போக்குவரத்துத் துறை)**

**அறிக்கை**

புகைச் சோதனை செய்யாமலேயே வாகனங்களுக்குச் சான்று வழங்கப்படுவதாகப் பொதுமக்களிடமிருந்து புகார் வரும்பட்சத்தில், புகை அளக்கும் சோதனை நிலையம், போக்குவரத்துத் துறை அதிகாரிகளினால் திடீர் ஆய்வு செய்யப்பட்டு, அனுமதி ரத்து செய்யப்படுகிறது. சென்னையில் இதுபோன்ற முறைகேடுகளில் ஈடுபட்ட ஒரு நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**(xxx) வாகன விபத்துக்களைக் குறைக்க வாகனம் ஓட்டும்போது செல்ஃபோனில் பேசக்கூடாது என்று தடை விதிக்க வேண்டிய அவசியம் குறித்து**

உறுப்பினர் : **திரு. கே. ரவி அருணன்:**

அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: (போக்குவரத்துத் துறை)**

**அறிக்கை**

"வாகனம் ஓட்டும்போது செல் ஃபோனில் பேசுவதற்கு மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளில் தடை ஏதும் தெரிவிக்கப்படவில்லை. வாகனம் ஓட்டும்போது செல் ஃபோனில் பேசுவதனால் விபத்து ஏதும் ஏற்பட்டதற்கான தகவல் இதுவரை அரசால் பெறப்படவில்லை. வாகனம் ஓட்டும்போது செல் ஃபோனில் பேசுவதனால் ஏற்படும் விபத்தினைத் தடுத்து எச்சரிக்கையாக இருக்கவேண்டியது ஓட்டுநரின் கடமையாகும் அல்லது அதனைத் தவிர்க்க வேண்டியதும் அவரது கடமையாகும்."

**(xxxi) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அருகில் கலசப்பாக்கம் தொகுதியில், செய்யாற்றின் குறுக்கே ஒரு தரைப் பாலம் வேண்டி, பல்லாண்டுகளாகக் கோரியும் கிடைக்காததால் பெலாசூர், பாடகம் பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.**

உறுப்பினர்கள் : **(அ) திரு. பெ.சு. திருவேங்கடம்:**

: **(ஆ) திரு. ஏ. ராசேந்திரன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: (நெடுஞ்சாலைத் துறை)**

**அறிக்கை**

"கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது, நெடுஞ்சாலைத் துறையால் இதர மாவட்டச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வரும் போளூர்-பெலாசூர்-பாடகம் மன்சூராபாத் சாலையில் (கி.மீ.0/0-17/7), கி.மீ.2/6-ல், குறுக்கிடும் செய்யாற்றின் மீது





அமைக்கப்பட வேண்டிய பாலமாகும். இவ்விடத்தில் செய்யாறு 110 மீட்டர் அகல நீர்வழிப் பாதையுடன் குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் தற்சமயம் பாலம் ஏதும் இல்லை. மேலும், இவ்விடத்தில் தரைப் பாலம் அமைக்க, தோராயமாக ரூ.120.00 இலட்சமும் அல்லது உயர்மட்டப் பாலம் அமைக்க ரூ.230.00 இலட்சமும் தேவைப்படும். மேற்கூறிய இடத்தில் பாலம் அமைக்கும் பணியானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் தற்சமயம் இடம்பெறவில்லை. மேலும், அரசு ஆண்டுதோறும் திட்டப் பணிகளுக்கு மிகவும் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருவதால், மிகவும் பெருந்தொகை தேவைப்படும். இப்பாலப் பணியினை அண்மைக் காலங்களில் நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்ட வாயிலாக மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், நபார்டு திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய முடியுமா என அரசின் ஆய்வில் உள்ளது."

**(xxxii) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் என்.சி. வீரலூர் சாலை (மற்ற மாவட்டச் சாலை) மிகவும் பழுதடைந்து, போக்குவரத்துக்கு லாயக்கற்ற நிலை உள்ளதனால், அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

உறுபபினர் : **திரு. பெ.சு. திருவேங்கடம்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: (நெடுஞ்சாலைத் துறை)**

**அறிக்கை**

"என்.சி. வீரலூர் சாலையின் மொத்த நீளம் 18.40 கி.மீ. ஆகும். இச்சாலையானது, நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் ஓர் இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் 11.40 கி.மீ. நீளமுள்ள சாலை 1995-96 ஆம் ஆண்டு சாலை பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.40.00 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்யப்பட்டது. மீதமுள்ள 7.00 கி.மீ. சாலைப் பகுதியை மேம்பாடு செய்ய அடுத்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்."

[1999 மே 18

**(xxxiii)** திருப்பூர் சுற்றுச் சாலைப் பணிகள் முடிக்கப்பட வேண்டிய கால வரம்பைக் கடந்தும் முடிக்கப்படாமல் பணிகளை நிறுத்திவிட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும், திருப்பூர் சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான ரூ.50 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகளைத் தொடங்க மாநில அரசின் அனுமதி காலதாமதமாவது குறித்தும்"

உறுப்பினர் : **திரு. கே. சுப்பராயன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: (நெடுஞ்சாலைத் துறை)**

**அறிக்கை**

திருப்பூர் சுற்றுச் சாலைப் பணிக்கான நிர்வாக அங்கீகாரம் ரூ. 1500 இலட்சங்கள் (பாலம் உட்பட)

திருப்பூர் சுற்றுச் சாலைப் பணிக்கான தொழில் நுட்ப அங்கீகாரம் ரூ.1561 இலட்சங்கள் (பாலம் உட்பட)

2. இத்திட்டப் பணியானது 7 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டப் பணியில் உள்ள சாலைப் பணியின் நிலவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| சாலையின் மொத்த நீளம் | : | 57.2 கி.மீ. |
| மணல் மற்றும் சரளைக் கலவை முடிவடைந்துள்ள நீளம் | : | 51.0 கி.மீ. |
| கல் பரத்தல் வேலை முடிவடைந்துள்ள நீளம் | : | 51.0 கி.மீ. |
| தார்ச் சாலை வேலை முடிவடைந்துள்ள நீளம் | : | 14.8 கி.மீ. |
| மொத்தம் உள்ள சிறு பாலங்கள் | : | 93 |
| முடிவடைந்த சிறு பாலங்கள் | : | 65 |



1999 மே 18] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

**3. இத்திட்டப் பணியில் உள்ள நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பாலப் பணியின் நிலவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**

பாலத்தின் மொத்தம் உள்ள 9 கண்களில் மேல்தள வேலை, மேல் ஓடுதளம், கைப்பிடிச் சுவர் வேலை அனைத்தும் முடிந்துவிட்டன. அணுகுசாலை வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. பாலம் போக்குவரத்திற்கு 25-4-1999 அன்று திறந்துவிடப்படவுள்ளது.

4. இவ்வேலை திட்டமிட்டபடி முன்னேற்றம் இல்லாமல் சற்றுத் தாமதம் ஆவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

(1) 1997 ஆம் வருடம், டிசம்பர் மாதம் கோவை மாநகரில் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களினால், வெடிமருந்துக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாலும், பொதுமக்களிடையே ஏற்பட்ட பீதியின் காரணமாகவும், இத்திட்டத்திற்கான கருங்கற்கள் கிடைக்கும் கல் சுரங்கங்களில் கல் உடைப்பு தடைப்பட்டதாலும், வேலை முன்னேற்றம் சற்றுத் தாமதப்பட்டது.

(2) வேலையைத் தொடங்குவதற்கு முன் ஏற்பாடாக, சேவைத் துறைகளினால் மின் கம்பங்கள், தொலைபேசி இணைப்புகள், குடிநீர் வசதிக்கான குழாய்கள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இவற்றை நிறைவேற்றித் தருவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும் வேலை முன்னேற்றம் தாமதப்பட்டுள்ளது.

**துரிதப்படுத்த இத்துறையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

(1) ஒப்பந்தக்காரர்கள் வேலையைத் துரிதமாகச் செயல்படுத்தாத காரணத்திற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அபராதக் கட்டணம் விதிக்கப்பட்டு ரூ.46,000 வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு நாளைக்கு ரூ.500 முதல் ரூ.2,500 வீதம் அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

(2) தொகுப்பு 2-ன் ஒப்பந்தத்தின் பகுதியாக உள்ள சிறு பால வேலைகள் மூல ஒப்பந்தத்திலிருந்து ரத்து செய்யப்பட்டு, தனியாக ஒப்படைக்க, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

(3) தொகுப்பு 3-ல் தார்தளப் பணியில் 2.4 கி.மீ. நீளத்திற்கு மூல ஒப்பந்தத்திலிருந்து நீக்குவதற்கு ஒப்பந்ததாரருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

(4) தொகுப்பு 4-ல் மூல ஒப்பந்தத்திலிருந்து சிறு பால வேலைக்குப் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

(5) ஒரு தாம்போகி வேலை புதிதாகச் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கையினால் இப்பொழுது வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அனைத்து சாலைப் பணி வேலைகளும் 30-6-1999-க்குள் முடிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5. இரண்டாம் கட்டமாக, ரூ.45 கோடிக்கு திருப்பூரைச் சுற்றி உள்ள இதர எட்டு சாலை மேம்படுத்தும் பணிகளுக்கான கருத்துருவும், திருப்பூர்-மேட்டுப்பாளையம் ரோடு, கி.மீ. 0/8 முதல் 3/6—சாலை மேம்படுத்தும் பணிக்காக ரூ. 5 கோடி, முதல் கட்டப் பணியில் சேர்த்துச் செயல்படுத்தும் கருத்துருவும் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளன."

**(xxxiv)** திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுகா, கோட்டூர் முதல் வடபாதிமங்கலம் வரை கரும்புப் பண்ணைக் கழகச் சாலை சுமார் 10 கி.மீ. தூரத்திற்கு மேல் பல வருடங்களாக சீரமைக்க முடியாமல் பள்ளமும் படுகுழியுமாக போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. கோட்டூர் முதல் வடபாதிமங்கலம் வழியாக திருவாரூர் செல்லக்கூடிய பஸ் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் பெரும் பாதிப்பாக உள்ளது குறித்து.

உறுப்பினர் : **திரு. ஜி. பழனிசாமி:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: (நெடுஞ்சாலைத் துறை)**

**அறிக்கை**

"திருவாரூர் மாவட்டத்தில், திருஆரூரான் சர்க்கரை ஆலைப் பகுதியில் அமைந்துள்ள இச்சாலையின் பெயர் வடபாதிமங்கலம்-கோட்டூர் சாலை, கி.மீ. 1/8-12/1. நீளம் 10.3 கி.மீ. இது, திருச்சி, தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்ட கோட்டப் பராமரிப்பில் உள்ள கரும்புச் சாலைகள் பட்டியலில் இடம் பெறுகிறது.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டச் சாலைகளைப் பராமரிக்க ஒதுக்கிடும் நிதி மிக, மிகக் குறைவு. அரசு வேளாண்மைத் துறைக் கோரிக்கை மூலம் சர்க்கரைத் துறை ஆணையர் அவர்களால் நிதி





ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருக்கும் நிதி ஒதுக்கீட்டில் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டச் சாலைகள் முழு அளவில் பராமரிக்கப்பட இயலவில்லை. மேலும், அனைத்து கரும்புச் சாலைகளையும் அரசு சாலைகளாக மாற்றி, அவைகளின் தரத்தை மேம்படுத்தி, பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அப்பிரேரணை செயல்படுத்தப்படும் சமயம், போக்குவரத்து சிரமமின்றிச் செல்ல இயலும்."

**(xxxv)** சென்னை முதல் கன்னியாகுமரி வரை அமைக்கப்படும் கிழக்குக் கடற்கரைச் சாலை, சென்னை-கடலூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி - வேதாரண்யம் வழியாகச் செல்வதற்கு ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தற்போது வேளாங்கண்ணியிலிருந்து திருப்பூண்டி, திருத்துறைப்பூண்டி வழியாகச் செல்லத் திட்டமிடுவதால் வேதாரண்யம் பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

உறுப்பினர் : **திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: (நெடுஞ்சாலைத் துறை)**

**அறிக்கை**

"சென்னை முதல் கன்னியாகுமரி வரை அமைக்கவிருக்கும் கிழக்குக் கடற்கரைச் சாலையில், சென்னை முதல் கடலூர் வரை சாலை அமைக்கப்பட்டு, போக்குவரத்து நடைபெற்று வருகிறது. கடலூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருப்பூண்டி, திருத்துறைப்பூண்டி வழியாகச் சாலை அமைப்பது குறித்துத்தான் ஆரம்ப கட்டம் முதலே ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேதாரண்யம், கோடியக்கரை பறவைகள் சரணாலயத்திற்கு அருகில் உள்ளதாலும், கடற்கரையை ஒட்டி, சாலை செல்வதாலும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் காரணமாக, வேதாரண்யம் வழியாகச் சாலை அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், வேளாங்கண்ணியிலிருந்து வேதாரண்யம் வரை, வேறு திட்டங்களில் சாலை மேம்பாடு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது."

[1999 மே 18

**(xxxvi)** விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் தொகுதி, வானூர் சாலையில் உள்ள கவித்திரம்பட்டு, பெரியபாபுசமுத்திரம் இடையில், பழுதுபட்ட பாலத்தைச் சீர் செய்யாததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து

உறுப்பினர் : **திரு. ச. அழகுவேலு :**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் : (நெடுஞ்சாலைத் துறை)**

**அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை, தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம், கடலூர் கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள வானூர்—கண்டமங்கலம் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 10/2-ல் ஒரு தரைமட்டப் பாலம் கட்டப்பட்டு உள்ளது. கடந்த 1993-ம் ஆண்டில் வெள்ளத்தின் காரணமாக இப்பாலத்தின் மத்தியில் உள்ள கீழ்ப்பக்கச் சுவர் இடிந்துவிட்டது. மற்றும் இதன் ஒரு தளத்தின் காங்கிரீட் பெயர்ந்து தள்ளப்பட்டுவிட்டது.

ஆகவே, தற்போது இப்பாலத்தின் மேற்புறம், மாற்று வழியில் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. இந்த இடத்தில் புதிதாக குழாய்த் தாம்போகி கட்ட 9/95-ல் ரூபாய் 16 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் உயர்மட்டப் பாலம்தான் கட்ட வேண்டும் என்று ஊர்ப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கு நிதி ஆதாரம் இல்லாததால், நியு ஹாரிசன் சர்க்கரை ஆலையின் நிர்வாகம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போது இந்த இடத்தில் உயர்மட்டப் பாலம் மற்றும் அணுகுசாலை அமைத்திட, சுமார் ரூபாய் நான்கு கோடி தேவைப்படும். இதற்கு சர்க்கரைத் துறையில் நிதி ஆதாரம் இல்லை.

இந்நிலையில் கரும்பு பயிரிடும் பகுதிகளில் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறை ஏற்றுக்கொண்டு, பராமரிப்பு செய்ய வேண்டும் என 30-4-99-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையில், இந்த வகைச் சாலைகள் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் மேம்பாடு செய்யப்பட முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு நிதியுதவி கிடைத்தால் உயர்மட்டப் பாலம் கட்டும் கருத்துருவும் ஆய்வில் எடுத்துக்கொள்ளப்படும்.



1999 மே 18]

**(xxxvii)** திருப்பூர் ஸ்ரீஇராமலிங்கம் சூடாம்பிகை மில்ஸ் மூடப்பட்டுள்ளதால் 1,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

உறுப்பினர் : **திரு. கே. சுப்பராயன்**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: (தொழிலாளர் நலத் துறை)**

**அறிக்கை**

"திருப்பூரிலுள்ள ஸ்ரீஇராமலிங்கம் சூடாம்பிகை மில்ஸ் நிறுவனம் 25,000 கதிர்களைக் கொண்டும் 560 தொழிலாளர்களைக் கொண்டும் இயங்கி வந்தது. இதில் எச்.எம்.எஸ்., எல்.பி.எஃப்., சி.ஐ.டி.யு., எம்.எல்.எஃப்., என்.எல்.ஓ., மற்றும் ஏ.டி.பி. ஆகிய தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் நிர்வாக இயக்குநர் திருவாளர் கே. நாகண்ணா என்பவர் ஆவார்.

இயந்திரங்களைப் புதுப்பிக்காததாலும், உற்பத்தித் திறன் இன்றி தொடர்ந்து 5 வருடங்களாக நஷ்டத்தில் இயங்கி வந்ததாலும், அடிக்கடி ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் காரணமாகவும், நிதி நிலைமை பாதிக்கப்பட்டு, வங்கிகள் நிதி உதவி அளிப்பதை நிறுத்திவிட்ட காரணத்தால் பொருளாதார நெருக்கடியினால் மூலப் பொருள் வாங்க நிதியின்றி உற்பத்தி நிறுத்தப்பட்டது. 14-2-1994 முதல் வெளியாரிடமிருந்து பருத்தி பெறப்பட்டு அவர்களுக்கே நூல் நூற்றுக் கொடுத்து, அதற்கான கட்டணத்தைப் பெற்று தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. திடீர் பஞ்சு விலை ஏற்றத்தினாலும், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் வழங்க இயலாத காரணத்தினாலும் 8-2-1995 முதல் ஆலை இயங்காமல் நின்றுவிட்டது.

இந்நிறுவனம் இயங்காமல் உள்ளதற்கு நிர்வாகம் எந்தவித அறிவிப்பும் வழங்கவில்லை. 1995 பிப்ரவரி மாதத்திற்கு முன்பணமாக ரூ.500/- தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வழங்கியுள்ளது. அதன் பிறகு நிறுவனம் திறக்கப்படாமல் உள்ளது.

தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள்:

| | |
|---|---|
| 1994-95 போனஸ் நிலுவை | .. ரூ.15 இலட்சம் |
| 8-2-95 முதல் லே-ஆஃப் சம்பளம் மற்றும் சம்பள பாக்கி | .. ரூ.20 இலட்சம் |

| | |
|---|---|
| ஓய்வு பெற்ற 200 தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை | .. ரூ.65 இலட்சம் |
| வருடாந்திர விடுப்புச் சம்பளம், ஈ.எஸ்.ஐ. சந்தா, பொது சேம நல நிதிச் சந்தா | .. ரூ.40 இலட்சம் |

இவை தவிர, வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டியது ரூ. 4.63 கோடி வரை உள்ளதாகத் தெரிய வந்துள்ளது மற்றும் கடன் வழங்கியோருக்குத் திருப்பித் தரவேண்டிய கடன் பாக்கி, நிகரக் கடன் சுமார் ரூ.2.6 கோடி.. (இதில் வட்டி சேர்க்கப்படவில்லை)

இந்த ஆலையில் மிகவும் பழைய நிலையிலுள்ள இயந்திரங்களைப் புதுப்பிக்கச் செய்து உற்பத்தித் திறனை அதிகரித்தாலன்றி, ஆலையைத் திறம்பட இயக்க முடியாது. நிர்வாகம் இந்த நிறுவனத்தை Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Act, 1969-ன் கீழ் நலிவடைந்த ஆலையாக அறிவிப்புச் செய்து, ஐந்தாண்டுகள் விற்பனை வரிச் சலுகையும், தடையில்லாத மின் சப்ளை மற்றும் மின் கட்டணத்தில் சலுகையும் ஆலையைப் புதுப்பிக்க ரூ. 3 கோடி கடனும் வழங்க அரசைக் கோரியது.

தற்போது வழங்கப்படும் சம்பளத்திலிருந்து குறைத்துப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், வேலைப் பளுவினை அதிகம் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் நிர்வாகம் தொழிற்சங்கங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. அரசு மற்றும் தொழிலாளர்களிடமிருந்து நிர்வாகம் கேட்டுக்கொண்ட சலுகைகள் பற்றி, 5-9-96 அன்று தொழிலாளர் ஆணையர் முன்பு சென்னையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாமல் தடைப்பட்டது. 28-10-96 அன்று தொழிலாளர்கள், மாண்புமிகு தொழிலாளர்கள் நல அமைச்சரை நேரில் சந்தித்து முறையிட்டதன்பேரில், கோவை, தொழிலாளர் இணை ஆணையர் அவர்களால் 15-11-96 அன்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் நிர்வாகம் 6-3-97 அன்று ஆலை மட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பிரிவு 18(1) ஒப்பந்தம் ஏற்படுத்தியது. அதன்படி அரசிடமிருந்து சலுகைகள் கிடைக்கப்பெற்று, 10 நாட்களுக்குள் ஆலையை இயக்குவது என்றும், தொழிலாளர்களுக்கு முன்பணமாக ரூ.2000/- வழங்குவது என்றும், அதனை 1993-94 மற்றும் 1994-95 ஆம் ஆண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டிய போனஸ் தொகையில் சரிசெய்து கொள்வதென்றும், தொழிலாளர்கள் தாங்கள் பெற்றுவரும்



பஞ்சப்படியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் இரண்டாண்டு காலத்திற்கு குறைத்துப் பெற்றுக் கொள்வது என்றும், அப்படிப் பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை ஆலை பொருளாதார ரீதியில் இலாபகரமாக இயங்கிவரும் காலங்களில் திருப்பித் தருவது குறித்துப் பேசி முடித்துக்கொள்வதென்றும், ஆலை தொடங்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்கு குறைந்தபட்ச போனஸ் பெற்றுக்கொள்வது என்றும், ஏற்கெனவே பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு நான்கு நபர்களுக்கு பணிக்கொடை பட்டுவாடா செய்யப்படும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அரசிடமிருந்து சலுகைகள் பெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றி பெறவில்லையென்பதால், நிர்வாகம் ஆலை மட்டத் தொழிற் சங்கங்களுடன் பேசி, 13-10-97 அன்று 18(1) ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, ஆலையின் ஒரு பகுதி நிலத்தை விற்பனை செய்து, அதன் மூலம் கிடைக்கும் தொகையினைக் கொண்டு 'ஏ' மில்லை மட்டும் இயக்கி, வேலைவாய்ப்பைத் தர ஒப்புக் கொள்ளப்பட்டது.

அந்தத் தொகையிலிருந்து, ஓய்வு பெற்றவர்களுக்கும், விருப்பத்தின்பேரில் ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கும் பணிக்கொடை பட்டுவாடா செய்வது என்றும், ஈ.எஸ்.ஐ. மற்றும் வருங்கால வைப்பு நிதித் தொகை மற்றும் இதர பிடித்தங்களையும் பட்டுவாடா செய்ய ஒப்புக்கொண்டு, இவை போக மீதமுள்ள தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆலை எவ்வாறு, எப்போதிலிருந்து இயங்குவது என்பது முடிவு செய்யப்படும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை பி.எம்.எஸ். சங்க. உறுப்பினர்கள் ஆட்சேபணை செய்து ஆர்ப்பாட்டங்கள் செய்து வந்தனர். அதன் பின்பு, எம்.எல்.எஃப்., சி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ். போன்ற தலைமைச் சங்கங்கள் இந்த ஒப்பந்தத்தை ஆமோதிக்கவில்லை.

இதற்கிடையில், 27-12-97 ஆம் தேதிய நிர்வாகத்தின் அறிவிப்பில், வங்கிகள் நிதி உதவி தர மறுத்ததாலும் அரசிடமிருந்து உதவிகள் கிடைக்கப்பெறாததாலும் நிர்வாகம் எடுத்துக்கொண்ட முயற்சியில் சேலம் திரு. பி. பாலராஜன், ஈரோடு திரு. தாமோதரன் ஆகிய இருவரும் கூட்டாக ஆலையைப் புதுப்பித்து நடத்த நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளதாகவும், அதன் தொடர்பாக, தொழிற்சங்கங்களிடத்தில் பேசித் தீர்வு காண மேற்படி இருவருக்கும்

அதிகாரம் வழங்கியுள்ளது. புதிய நிர்வாகத்தின் பேச்சுவார்த்தைக்கான கோரிக்கை நகல் 2-1-1998 ஆம் தேதியிட்டு தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிர்வாகம் தயாரித்துக் கொடுத்த கோரிக்கைகள் மீது நேரடிப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தையில் தலைமைச் சங்கங்களும் அழைக்கப்பட்டன. 17-3-1998 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில், எச்.எம்.எஸ். சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஏ. சுப்பிரமணியம், ஏ.டி.பி. சங்கத் தலைவர் திரு. தனகோபால், எம்.எல்.எஃப். சங்கத் தலைவர் திரு. மு. தியாகராஜன், எல்.பி.எஃப். சங்கத் தலைவர் திரு. பெரியசாமி, பி.எம்.எஸ். சங்கச் செயலாளர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர். பேச்சுவார்த்தை மீண்டும் 21-3-98 அன்று நடைபெற்றது. அந்த பேச்சுவார்த்தையில் எந்தவித முன்னேற்றமும் இல்லாததால், நிர்வாகத் தரப்பில் கலந்து கொண்ட சேலம் திரு. பாலராஜன் மற்றும் ஈரோடு திரு. தாமோதரன் ஆகியோர் பேச்சுவார்த்தை தொடராது என்றும், பேச்சு வார்த்தை தொடர்வது தங்களுக்கு விருப்பமில்லையென்றும் தெரிவித்துவிட்டுச் சென்று விட்டனர். அதன் பின்னர், 12-4-98 அன்று ஆலை வளாகத்தில் நிர்வாகம் தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசியுள்ளது. அந்தப் பேச்சுவார்த்தையில் நிர்வாகத் தரப்பில் ஆலை மட்ட நிர்வாகி திரு. சுப்பிரமணியம் கலந்துகொண்டார். நிர்வாகத் தரப்பில், 3 ஆண்டுகள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்றும், லே-ஆஃப் சம்பளத்தை விட்டுக் கொடுக்க வேண்டுமென்றும், 12000 ஸ்பிண்டில்கள் மட்டுமே இயக்குவது என்றும், ஆலையின் உபரி நிலத்தை விற்று முதலீடு திரட்டுவதற்கும் தொழிற் சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது. அடுத்த கூட்டம் மறு தேதி குறிக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது. தொழிற்சங்கங்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் தெரிய வந்துள்ளது. நிர்வாகத் தரப்பில் மேற்கொண்டு முதலீடு செய்ய இயலாது என்றும், அரசாங்கத்தின் உதவி கிடைப்பதற்கான அறிகுறி இல்லாததாலும், நிர்வாகம் 3 ஆண்டுகளுக்குச் சம்பளக் குறைப்பு, லே-ஆஃப் சம்பளத்தை விட்டுக் கொடுப்பது, ஆலைக்கு சொந்தமான உபரி நிலத்தை விற்பது போன்ற கோரிக்கைகளை ஆலையை நடத்துவதற்காக முன்வைத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

4-1-99 அன்று மேற்படி ஆலை நிர்வாகத்திற்கும், ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களில் 413 தொழிலாளர்களுக்கும் இடையே பிரிவு 18(1)-ன் கீழான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதன் ஷரத்துக்களாவன:



1. நல்ல நிலையில் இயங்கக்கூடிய சுமார் 12500 கதிர்களையும், அவற்றை இயக்குவதற்குத் தேவையான மற்ற மெஷின்களையும், அதற்கான கட்டடங்களையும் வைத்துக்கொண்டு, மீதமுள்ள அனைத்து இயந்திரங்களையும், உபரியாக உள்ள கட்டடங்கள் மற்றும் காலியிடங்களையும் விற்பனை செய்துவிடுவதென ஒப்புக் கொள்ளப்பட்டது.

2. விற்பனை மூலம் கிடைக்கும் பணத்திலிருந்து அனைத்து அரசுக் கடன்கள், தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய அனைத்து பாக்கித் தொகைகளையும் தருவது எனவும், தற்போது பணியில் இருப்பவர்கள் தானாகப் பணியிலிருந்து விலகிக்கொள்ள விருப்பம் தெரிவித்தால், அவர்களுக்குச் சேரவேண்டிய அனைத்துத் தொகைகளுடன் மீதமுள்ள சர்வீசிற்கு, வருடம் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் கிராஜுட்டியுடன் சேர்த்து வரிசைக் கிரமத்தில் பட்டுவாடா செய்வதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. தொடர்ந்து பணியிலிருக்க விரும்பும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடாக, அவர்களுக்கு இதுவரை சேரவேண்டிய கிராஜுட்டித் தொகையைக் கணக்கிட்டு, வங்கியில் இதற்கெனத் தனியாக ஒரு கணக்கு ஏற்படுத்தி டெபாசிட் செய்து, ஒரு நிதியம் ஏற்படுத்துவதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

4. தேவைப்படாமல் இருக்கும் இயந்திரங்களின் விற்பனையில் வரும் தொகையிலிருந்து, தொழிலாளர்களின் நிலுவைக்கு முன்னுரிமை தந்து, பின்னர் இயந்திரங்களை நவீனப்படுத்த பயன்படுத்திக் கொள்வதென ஒப்புக்கொள்ளப்பட்டது.

5. தானாக ஓய்வு பெற விருப்பம் தெரிவிப்பவர்கள் 1 மாத காலத்தில் எழுத்து மூலம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

6. விற்பனை செய்து, வரும் பணத்தில் முதலில் அரசுக் கடன்களைச் செலுத்திய பிறகு, ஒவ்வொரு தொழிலாளிக்கும், பிடித்தம் செய்யப்படவுள்ள முன்பணமாக ரூ.3000/- கொடுப்பதென ஒப்புக் கொள்ளப்பட்டது.

7. இடம் கிரயம் ரெஜிஸ்டர் ஆகும் முன் தொழிலாளர்களுக்குத் தெரிவித்து, விற்பனையில் வரும் தொகையைப் பட்டுவாடா செய்வது குறித்து இரு தரப்பினரும் கலந்து பேசி முடிவெடுப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டது."

**(xxxviii)** (அ) சிவகாசி, நாராணபுரத்திலுள்ள பட்டாசுத் தொழிற்சாலை விபத்தில் மூன்று தொழிலாளர்கள் இறந்தது குறித்தும்,

(ஆ) சிவகாசி, நாராணபுரத்திலுள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் மூன்று தொழிலாளர்கள் ஸ்தலத்திலேயே இறந்துள்ளனர். இன்னும் பலர் காயமடைந்துள்ளனர் என்பது குறித்தும்

உறுப்பினர்கள்: **(அ) திரு. கே. சுப்பராயன்:**

**(ஆ) திரு. டி. மணி:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: (தொழிலாளர் நலத் துறை)**

**அறிக்கை**

"சிவகாசி "நாராணபுரத்தில் உள்ள ஸ்ரீகணேஷ் ஃபயர் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலையில், 19-3-1999 அன்று புல்லட் பாம் நிரப்பும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த அறையில், அதிகமான கலவை அளவு இருக்க வாய்ப்புகள் இருந்ததாலும், சிவகாசி பகுதியில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக உலர்ந்த கலவைகள் உள்ள அலுமினியம் பேசின்களைக் கீழே போட்டதாலும் ஆகிய சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் திடீர் என வெடி விபத்து ஏற்பட்டு, அந்த அறை தரைமட்டமாகியது. அதில் வேலை செய்துகொண்டிருந்த ஏ. புஷ்பராஜ், ஏ. கணேசன் மற்றும் கே. கார்மேகம் ஆகிய தொழிலாளர்கள் உடல் சிதறி அந்த இடத்திலேயே இறந்துவிட்டார்கள். அதில் படுகாயமடைந்த காளிமுத்து மகன் கே. கணேசன் மற்றும் அறைக்கு வெளியே உலர வைக்கும் பணி செய்துகொண்டிருந்த முத்துமாலையம்மாள் ஆகிய இருவரும் மேல்சிகிச்சைக்காக, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும்போது காளிமுத்து மகன் கே. கணேசன் வழியிலேயே இறந்துவிட்டார். முத்துமாலையம்மாள், விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இதைத் தவிர, இராமலட்சுமி, செல்லராணி, முத்துகிருஷ்ணம்மாள் மற்றும் தங்கேஸ்வரன் ஆகியோருக்குக் காயம் ஏற்பட்டதால், சிவகாசி, அரசு மருத்துவமனையில் சேர்க்கபபட்டனர்.





புல்லட் பாம் கெமிக்கல் கலவையில் பொட்டாஷியம் நைட்ரேட், சல்பர், அலுமினியம் பௌடர் மற்றும் பேரியம் நைட்ரேட் ஆகிய இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இக்கலவை மிக்சிங் அறையில் கலக்கப்பட்டு, பின்னர் பில்லிங் அறைக்குக் கொண்டுவரப்பட்டு, பின்னர் காடியில் அடுக்கப்பட்டு, உருளை வடிவ டியூபுகள் (Cylinderical Tubes) அல்லது செவ்வக வடிவ பேப்பர் ஷெல்களில் (Rectangular Shells) இக்கலவை நிரப்பப்படுகிறது.

*விபத்துக்கான காரணங்கள்:*

கீழே விழுந்த டிரேயில் இருந்த இரசாயனக் கலவையின் அளவு சுமார் 5 கிலோவாகும். இவ்விபத்தின் தீவிரத்தை நோக்குங்கால், 5 கிலோவிற்கும் அதிகமான அளவில் மேற்படி இரசாயனக் கலவை அந்த டிரேயில் இருந்திருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. மற்றும் விபத்தில் இறந்த தொழிலாளர்கள் தீக்காயங்களிலிருந்து தப்பிக்க ஆஸ்பெஸ்டாஸ் ஏப்ரன் அணியவில்லை என்பதோடு, விபத்து நடந்த நேரத்தில் அதிக அளவு வெப்பம் இருந்ததாலும் இருக்கலாம்.

*தொடரப்பட்ட நடவடிக்கை:*

மேற்படி வெடிவிபத்து பற்றிய புனாய்வு தொடர்பாக இத்தொழிற்சாலையினை சிவகாசி முதல் சரகத் தொழிற்சாலைகள் ஆய்வாளர் 19-3-1999 முதல் 22-3-1999 வரை ஆய்வு செய்து, தொழிற்சாலைகள் சட்ட விதிகளின்கீழ்க் காணப்பட்ட முரண்பாடுகளுக்காக உரிமையாளர், மேலாளர் ஆகியோருக்கு, காரணம் காட்டும் அறிக்கை அவரால் வழங்கப்பட்டுள்ளது.

*வழங்கப்பட்ட நிவாரணத் தொகை:*

(1) உரிமையாளரால், இறந்த ஒவ்வொரு தொழிலாளியின் குடும்பத்திற்கும் ரூ. 15,000 கருணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

(2) இத்தொழிற்சாலை, தொழிலாளர் ஈட்டுறுதி ஆயுள் காபபீட்டுத் திட்டத்தின் (ஈ.எஸ்.ஐ.) கீழ் வருவதால் இத்திட்டத்தின் கீழ இழப்பீட்டுத் தொகை இறந்த தொழிலாளிகளின் குடும்பத்திற்கு வழங்கப்படும்.

(3) இத்தொழிற்சாலையில், உள்ள 150 தொழிலாளர்கள் குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ், சிவகாசி, நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியின் பாலிசி எண் 40-இன்கீழ் அடங்குவர். இத்திட்டத்தின்கீழ், இறந்த ஒவ்வொரு தொழிலாளியின் குடும்பத்திற்கும் ரூ. 50,000-ம்,

[திரு. அ. இரகுமான்கான்] [1999 மே 18

காயமடைந்தவருக்கு, காயத்தின் தன்மையின் அடிப்படையில் நஷ்ட ஈடும் வழங்கப்பட்ட உள்ளன.

**(xxxix) *37 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் முதல்வர் பணியிடம் காலியாக உள்ளதால் ஏற்படும் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து***

உறுப்பினர் : **திரு. ஆர்.ஆர். சேகரன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: (தொழிலாளர் நலத் துறை)**

**அறிக்கை**

"அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்/உதவி இயக்குநர்/துணை முதல்வர் பதவிக்கான தக்கார் பட்டியல் 1993-94 ஆம் ஆண்டு வரை அரசினால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணை இடப்பட்டுள்ளது.

2. திரு. பி. ரகுபதி மற்றும் 5 நபர்கள், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் தங்களது முதுநிலையினை, பணியில் சேர்ந்த நாள் முதல் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கோரி, வழக்கு (எண் 3532/95) தொடர்ந்தனர். தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், இவ்வழக்கு முடியும் வரை தக்கார் பட்டியல் ஒப்பளிப்பு செய்து வழங்கத் தடை ஆணை வழங்கியதால் 1994-95 ஆம் ஆண்டு முதல் தக்கார் பட்டியல் அரசினால் வழங்கப்பட இயலவில்லை.

3. மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் திரு. பி. ரகுபதி மற்றும் 5 நபர்களின் முதுநிலையை, மேற்பார்வை போதகர் (Supervisory Instructor now redesignated as Assistant Training Officer) பதவியில் நிர்ணயம் செய்ய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதனடிப்படையில், இவர்களின் முதுநிலையை, உதவிப் பயிற்சி அலுவலர் மற்றும் பயிற்சி அலுவலர் பதவிகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் நிர்ணயம் செய்து, மேற்படி திருத்தப்பட்ட முதுநிலையின்படி, 1994-95, 1995-96, 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளுக்கான முதல்வர்/உதவி இயக்குநர்/துணை முதல்வர் பதவிகளுக்கான காலி இட மதிப்பீட்டை கணக்கில் கொண்டு, 27 காலி இடங்களுக்கு அரசுக்கு தக்கார் பட்டியல் கருத்துரு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை



1999 மே 18] [திரு. அ. இரகுமான்கான்]

இயக்குநரால் அனுப்பி வைக்கப்பட்டது. இயக்குநரின் பரிந்துரையின் பேரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்/உதவி இயக்குநர்/துணை முதல்வர் பதவிகளில் நியமிக்க, 27 நபர்களைக் கொண்ட தக்கார் பட்டியல் அரசாணை எண் 325, 326, 327 மற்றும் 328, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26-4-1999-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நேரடி நியமனம் மூலம் முதல்வர்/உதவி இயக்குநர் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி முடிக்கும் தருவாயில் உள்ள 3 நபர்களுக்குப் பணி நியமன ஆணை, அரசாணை (2டி) எண் 322, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22-4-1999-ல் வழங்கப்பட்டுள்ளது.

1-4-1999 அன்றைய நிலவரப்படி, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாகவுள்ள 35 முதல்வர்/உதவி இயக்குநர்/துணை முதல்வர் பதவிகளில், 30 பதவிகளை நிரப்ப அரசால் ஆணை இடப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 பணியிடங்கள் குறித்து, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு, அவை விரைவில் நிரப்பப்படும்."

**(xl) தமிழ்நாடு தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் இயந்திரம் புகுத்தப்படுவதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பு அச்சத்தால் போராட்டம் நடத்தி வருவது குறித்து**

உறுப்பினர்கள் : **(அ) திரு. வி. அய்யலுசாமி:**

**(ஆ) திரு. நா. பெரியசாமி:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: (தொழிலாளர் நலத் துறை)**

**அறிக்கை**

"தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் நிர்வாகத்தினர் இயந்திரங்களைப் புகுத்தி வருவதால் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்படும் என்ற அச்சத்தால் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு, தற்போதுள்ள 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டத்தில் வழிவகைகள் ஏதுமில்லை."

[1999 மே 18

**(xli) தருமபுரி மாவட்டத்தின் தலைநகரும் அதன் நிர்வாகமும் தருமபுரியில் இருந்தும், நீதித் துறையைப் பொறுத்தவரை குற்றவியல் முதன்மை அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் கிருஷ்ணகிரியில் இயங்கி வருகின்றன. தலைநகர் தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றங்களை நியமித்திட அரசுக்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியும், அரசு காலந்தாழ்த்தி வரும் நிலையில், அனைத்துக் கட்சிகளும், பொதுமக்களும், வழக்கறிஞர்களும், தருமபுரியில் 22-3-1999 ஆம் தேதி உண்ணாவிரதமும், அதன்பிறகு தொடர்ந்து மறியல், பந்த் என்றும் அறிவித்துள்ளதால் ஏற்படும் பதட்டம் குறித்து**

உறுப்பினர் : **திரு. கு. மனோகரன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா: (சட்டத் துறை)**

**அறிக்கை**

தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டும், மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றம், கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

2. தருமபுரி நீதித் துறை மாவட்டத்தை இரண்டு நீதித் துறை மாவட்டங்களாகப் பிரித்து, தருமபுரியில் புதிதாக நீதித் துறை தலைமையிடம் ஒன்றை ஏற்படுத்தலாம் என, அனைத்து நீதிபதிகள் முடிவு செய்திருக்கின்றனர் என சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் 1994 ஆம் ஆண்டு அரசுக்குத் தெரிவித்தார். இம்முடிவிற்கிணங்க, அவர் தருமபுரியில் மாவட்ட அமர்வு நீதிமன்றமும், தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் ஏற்படுத்த அரசுக்குச் செயற்குறிப்பு ஒன்று அனுப்பி வைத்தார். அதனை அரசு பரிசீலித்து, நிதி நெருக்கடி காரணமாக அச்செயற்குறிப்பை அரசு தள்ளி வைதது. 1995 ஆம் ஆண்டு ஆணை பிறப்பிததது.

3. இதனிடையில் முன்னோடித் திட்டத்தின் (Pilot Project Scheme) கீழ் கிருஷ்ணகிரியில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தை (Additional Sessions Judge-*cum*-Additional Chief Judicial Magistrate Court) ஏற்படுத்தி அரசு 1995ஆம் ஆண்டு ஆணையிட்டது. இக்கூடுதல் நீதிமன்றம் கிருஷ்ணகிரியில் தற்போது செயல்பட்டு வருகிறது.





4. பின்னர், கிருஷ்ணகிரி வழக்கறிஞர் சங்கத்திடமிருந்து பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், சென்னை உயர்நீதிமன்றம், தருமபுரி நீதித் துறை மாவட்டத்தை இரண்டு நீதித் துறை மாவட்டங்களாகப் பிரிக்கலாம் என்ற தனது முந்தைய பரிந்துரையை மறுபரிசீலனை செய்து, தருமபுரி மாவட்டத்தை ஒரே நீதித் துறை மாவட்டமாகத் தொடர்ந்துகொள்வது என்று முடிவு செய்தது. எனினும், தருமபுரியில் தற்போதுள்ள வேலைப் பளுவைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணகிரியில் தற்சமயம் செயல்பட்டு வரும் இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தை தருமபுரிக்கு மாற்றி, தருமபுரியில் தனியாக ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தை (Additional Sessions Judge-*cum*-Additional Chief Judicial Magistrate Court) அமைக்கலாம் என, சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது. இப்புதிய நீதிமன்றத்தைத் தருமபுரியில் தொடங்கிடப் பரிந்துரை செய்தபோது, கூடுதல் பணியாளர்கள், புதிய மரச்சாமான்கள், தொலைபேசி, கார் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க ஒப்பளிப்பு வழங்குமாறு, சென்னை உயர்நீதிமன்றம் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இவ்வகையில் அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூ. 8,24,760 தொடரினச் செலவும், ரூ. 7,57,620 தொடரா இனச் செலவும் ஆகிறது. மேற்கண்ட செலவினத்திற்கு நிதித்துறையின் ஒப்புதல் தேவைப்படுகிறது. நிதித் துறை சென்னை உயர்நீதிமன்றத்தின் இப்பரிந்துரையை அலுவலர் குழு (Official Level Committee) முன் வைத்து முடிவு செய்யலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளது. எனவே, இப்பரிந்துரை, அலுவலர் குழு முன் வைக்கப்பட்டுள்ளது. அலுவலர் குழு கூடி முடிவெடுத்தபின், இப்பரிந்துரையின்மீது அரசு தகுந்த ஆணை பிறப்பிக்கும்."

**(xlii) தமிழக அரசு வெளி மாநில லாட்டரிச் சீட்டுகளுக்குத் தடை விதிப்பதால், வேலையிழந்து பல ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்படுவார்கள். இதனால் அவர்கள் மத்தியில் நிலவும் பதட்டம் குறித்து**

உறுப்பினர் : **திரு. டி. மணி:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா: (சட்டத் துறை)**

**அறிக்கை**

லாட்டரிகளை முறைப்படுத்தும் நோக்குடன், "லாட்டரிகள் (முறைப்படுத்துதல்) அவசரச் சட்டம், 1997"-ஐ, 1-10-1997 அன்று இந்திய குடியரசுத் தலைவர் பிறப்பித்தார். மாநில அரசுகள் சில

[திரு. ஆலடி அருணா] [1999 மே 18

வரையறைகளுக்குட்பட்டு, லாட்டரிகளை உருவாக்கி, நடத்த மற்றும் மேம்படுத்த, மேற்காணும் அவசரச் சட்டப் பிரிவு 4 வகை செய்கிறது. அதேபோன்று, தத்தம் மாநிலத்தில் விற்பனை செய்யப்படும், பிற மாநில அரசுகளால் உருவாக்கப்பட்டு, நடத்தப்படும் மற்றும் ஆதரவளிக்கப்படும் (Organised, conducted and promoted) லாட்டரிச் சீட்டு விற்பனையைத் தடை செய்ய "லாட்டரிகள் (முறைப்படுத்துதல்) அவசரச் சட்டம், 1997"-ன் பிரிவு 5 வகை செய்கிறது.

2. லாட்டரிகள் (முறைப்படுத்துதல்) அவசரச் சட்டம், 1997, பிரிவு 5-ன்கீழ், தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும், பிற மாநில அரசுகளால் உருவாக்கி நடத்தப்படும் மற்றும் ஆதரவளிக்கப்படும் லாட்டரிச் சீட்டு விற்பனையை 1-1-1998 முதல் தடை செய்து, அரசு, அரசாணை (நிலை) எண் 1703, உள் துறை, நாள் 24-11-1997-ல் ஆணை பிறப்பித்தது. இவ்வாணையை எதிர்த்து, லாட்டரிச் சீட்டு முகவர்களும், விற்பனையாளர்களும் சென்னை, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். சென்னை, உயர்நீதிமன்றம் இவ்வாணைக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. எனினும், இத்தடை உத்தரவு ஓரிலக்கம் மற்றும் உடனடி லாட்டரிச் சீட்டு விற்பனைக்குப் பொருந்தாது. இது தவிர, லாட்டரிகள் (முறைப்படுத்தல்) சட்டம், 1998-ஐ எதிர்த்தும், உச்சநீதிமன்றத்தில் பல மனுக்கள், மைய அரசு மற்றும் பல்வேறு மாநில அரசுகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கு விசாரணை முடிந்து, தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**(xliii)** (அ) "மானாமதுரை, முத்தனேந்தல், சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில் ஆலையை அரசு ஏற்று நடத்துமாறு அளிக்கப்பட்ட சென்னை, உயர்நீதிமன்றத் தீர்ப்பை மாநில அரசு அமலாக்காமல் உள்ளது குறித்தும்

(ஆ) மானாமதுரை, முத்தனேந்தல் சோமசுந்தரம் பஞ்சாலை மூடியிருப்பது குறித்தும்

உறுப்பினர்கள் : **(அ) திரு. கே. சுப்பராயன் :**
**(ஆ) திரு. கே. தங்கமணி :**
**(இ) திரு. கே.ஆர். இராமசாமி :**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி : (கைத்தறித் துறை)**



1999 மே 18] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

**அறிக்கை**

சிவகங்கை மாவட்டம் முத்தனேந்தலில் உள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை 1965 ஆம் ஆண்டு 13,260 கதிர்களுடன் நிறுவப்பட்டது. நிதி நெருக்கடி காரணமாக 1976 ஆம் ஆண்டில் இந்த ஆலை மூடப்பட்டது. மத்திய அரசு, இந்த ஆலையைக் கையகப்படுத்தி, ஆலை நிர்வாகத்தை, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் வசம் ஒப்படைத்தது. பின்னர், மாநில அரசால் இந்த ஆலை அரசுடைமை ஆக்கப்பட்டு, 14-08-1986 முதல் இவ்வாலையின் முழு உரிமையும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

2. சோமசுந்தரம் நூற்பாலையை மாநில அரசு எடுத்துக் கொண்டதை எதிர்த்து அதன் உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்திருந்தார். இந்த ஆலையை நவீனமயமாக்கலாம் என்ற தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் உத்தேசத்திற்கு எதிராக, இயந்திரங்கள் எதையும் மாற்றக் கூடாது என்று அதன் உரிமையாளர் தடை ஆணை பெற்றிருந்தார். இந்த ஆலையின் இயந்திரங்கள் மிகப் பழமையானதாக இருந்ததன் காரணமாக, மிகக் குறைவான உற்பத்திக்கு வழிவகுத்ததுடன், உற்பத்தி செய்யப்படும் நூலின் தரமும் திருப்தியளிக்கும் வகையில் இல்லை. இதன் விளைவாக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு, இந்த ஆலையை 1986 முதல் 1994 வரை இயக்கிய வகையில் ரூ.379.40 இலட்சம் நட்டம் ஏற்பட்டது. மேலும் இந்த ஆலையை இயக்கிய வகையில், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு ஏற்பட்ட கடன் தொகை சுமார் ரூ.700 இலட்சம் ஆகும். இந்த ஆலையை கூட்டுறவு சங்கமாக மாற்றி செயல்படுத்துவதற்கோ அல்லது சேலம் கூட்டுறவு நூற்பாலையின் ஒரு பிரிவாக இயக்குவதற்கோ வாய்ப்பு இல்லாமல் போயிற்று. இவற்றின் பின்னணியில், இந்த நூற்பாலையை அதன் உரிமையாளரிடமே ஒப்படைக்க முடிவு எடுக்கப்பட்டு, 14-10-1993 தேதியிட்ட கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (சி2) துறை, நிலை எண் 287-இல் இதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த நூற்பாலையை அதன் உரிமையாளரிடமே வழங்கலாமென்ற அரசின் உத்தரவை எதிர்த்து தொழிற்சங்கத்தினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்திருந்தனர்.

3. சோமசுந்தரம் நூற்பாலை சம்பந்தமான வழக்குகளில் 30-1-1999 அன்று சென்னை உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது. இந்த நூற்பாலையை மாநில அரசு தன் வசம் எடுத்துக் கொண்டது

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1999 மே 18

செல்லத்தக்கது என்று தீர்ப்பளித்த சென்னை உயர்நீதிமன்றம், நூற்பாலையை அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கலாமென்ற அரசின் உத்தரவை தள்ளுபடி செய்துள்ளது. இந்த நூற்பாலையை நிதி நிறுவனங்களின் உதவியோடு தொடர்ந்து நடத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும், தொழிலாளர் நலன் கருதி, அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் கருத்துத் தெரிவித்துள்ளார். அவசியமானால், அரசும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமும் தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியத்தையும் (B.I.F.R.) தகுந்த உதவிக்காக அணுகலாம் எனவும் நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார். இந்தத் தீர்ப்பின் நகல் சென்னை உயர்நீதிமன்றத்திடமிருந்து 20-04-1999 அன்றுதான் வரப்பெற்றது.

4. இந்த ஆலையை நவீனமயமாக்கி மீண்டும் செயல்படுத்த தென்னிந்திய துணிநூல் ஆராய்ச்சிக் கழகம் (SITRA) அளித்துள்ள அறிக்கையின்படி ரூ.603 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. மேற்குறிப்பிட்ட அறிக்கையின்படி தேவைப்படும் தொகைக்கான நிதி வசதி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் வசம் இல்லை. அரசிடமிருந்து நிதியுதவி பெற்று ஆலையை நவீனப்படுத்தினாலும், தற்போது சர்வதேச அளவில் நூற்பாலைகள் சந்தித்து வரும் நெருக்கடியான நிலையில், ஆலை இலாபகரமாக செயல்படக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

5. எனவே, சென்னை உயர்நீதிமன்றம் சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று அளித்துள்ள தீர்ப்பின்மீது, மாநில அரசு தலைமை வழக்குரைஞரின் (Advocate-General) கருத்து பெறப்பட்டு, அதன் அடிப்படையில் அரசு அளவில் இந்த ஆலையின் எதிர்காலம் குறித்து தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

6. மேலும், அனைத்துத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய கோரிக்கையின்பேரில், பணிக்கொடையுடன் ஊக்கத் தொகை அளித்து பணியிலிருந்து விடுவிக்க தொழிலாளர் துணை ஆணையர், மதுரை அவர்கள் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.



1999 மே 18]

**(xliv)** தருமபுரி நகரில் இயங்கி வந்த கூட்டுறவு விசைத்தறிக் கூடம் மூடப்பட்டுள்ளதால், நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்து இருக்கும் நிலையினை விவாதிக்க வேண்டிய அவசியம் குறித்து.

உறுப்பினர் : **திரு. கு மனோகரன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: (கைத்தறித் துறை)**

**அறிக்கை**

தருமபுரி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததால் உறுப்பினர்களுக்கு தொழில் கொடுக்க இயலாமல் 10-8-1998 முதல் மூடப்பட்டுள்ளது.

தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தொழிலாளர்களுக்கு குறுமக் கூலி (Minimum Wages) வழங்குதல், சட்டபூர்வமாக செலுத்த வேண்டிய ஈ.பி.எஃப்., ஈ.எஸ்.ஐ., ஆகியவற்றினால் கூடுதல் நிர்வாகச் செலவினங்கள், கூலி உற்பத்தி அடிப்படையில் வழங்காமல் குறுமக் கூலியாக வழங்கப்பட்டதால் அதிக அளவில் ஏற்பட்ட நட்டம் போன்ற காரணங்களினால், சங்கம் சொந்த முதலீடுகள் அனைத்தையும் இழந்து, கூட்டுறவு நூற்பாலைகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கியில் பெற்ற காசுக் கடன் திரும்பச் செலுத்தப்படாத சூழ்நிலை ஏற்பட்டு, சங்கம் தொடர்ந்து செயல்படாத நிலை ஏற்பட்டதால், இவ்விசைத்தறிக் கூடம் மூடப்பட்டுள்ளது.

**(xlv)** நலிந்து வரும் நூற்பாலைகளின் நிலை குறித்து

உறுப்பினர் : **திரு. வி.கே. லட்சுமணன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: (கைத்தறித் துறை)**

**அறிக்கை**

தமிழ்நாட்டில் 801 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளும், சுமார் 650 சிறிய அளவிலான நூற்பாலைகளும் இயங்கி வருகின்றன. 801 பெரிய மற்றும் நடுத்தர நூற்பாலைகளில், 18 கூட்டுறவு நூற்பாலைகளும், தேசிய துணிநூல் கழகத்தைச் சேர்ந்த 17 ஆலைகளும்,

25 நூல் மற்றும் துணி உற்பத்தி ஆலைகளும் அடங்கும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் 294 நூற்பாலைகள் இயங்காமல் உள்ளன:

(1) 1991 ஆம் ஆண்டில் பஞ்சாலைத் தொழில் உரிமம் பெறும் பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளதால், நூற்பாலைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது;

(2) நூல் உற்பத்தி ஏற்கெனவே தேவைக்கு அதிகமாக இருந்தது. கணிசமான அளவு நூற்பாலைகள் பெருக்கம் காரணமாக நூல் தேக்கம் மிகுந்து காணப்படுகிறது. பஞ்சுத் தேவை அதிகமாகி பிற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் பஞ்சின் விலையும் அதிகரித்துள்ளது. பஞ்சு விலை ஏற்றத்திற்குத் தகுந்தவாறு நூல் விலை அதிகரிக்கவில்லை. நிதி நெருக்கடியால் பஞ்சாலைகளின் இயந்திரங்கள் நவீனப்படுத்தப்படவில்லை. எனவே, குறைவான நூல் உற்பத்தித் திறன் காரணமாக அதிக உற்பத்திச் செலவு ஏற்படுகிறது;

(3) தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக ஏற்றுமதி குறைந்து மேலும் இருப்புத் தேக்கத்துக்கு வழிவகுத்தது.

2. தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கம் உடனடி நிவாரணம் கோரி, மனு ஒன்றினை மாண்புமிகு தமிழக முதல்வரிடம் அளித்தது. ஜவுளித் தொழிலின் தற்போதைய நெருக்கடி நிலையைத் தவிர்க்க தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கம் பல்வேறு கோரிக்கைகளுக்கிடையே தமது தவணை கடந்த வட்டியினைச் செலுத்த நிதியுதவியும் மற்றும் நடப்பு வட்டியினை 10 சதவிகித தனி வட்டியில் மூன்று ஆண்டுகளுக்கு காலக் கடனாக மாற்றியமைக்கவும், நிவாரணம் கோரும் காலத்திற்கு ஒப்பந்த வட்டியிலிருந்து 2% குறைத்து வசூலிக்கவும் குறுகிய கால நிவாரண நடவடிக்கைகளாகக் கோரியுள்ளது.

3. 04-08-1998 அன்று புதுதில்லியில் நடைபெற்ற மாநில கைத்தறி அமைச்சர்கள் கூட்டத்தில், ஜவுளித் தொழில் விரைவில் புத்துயிர் பெற தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி, பருத்தி தொழில்நுட்பக் குழு ஆகியவற்றை அமைக்க நமது அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது. மேலும், மேற்படி நிதியுதவி, ஜவுளித் தொழிலின் நூற்பு உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் மதிப்புக் கூடும் வண்ணம் பஞ்சு முதல் ஆடை வரை இத்தொழிலின் அனைத்து நிலைகளுக்கும் வழங்கிட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.



4. மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஜவுளித் தொழில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை புதுதில்லியிலுள்ள மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுடன் விவாதித்ததோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 15-09-1998 அன்று சென்னைக்கு வருகை தந்தபோது மேற்படி பிரச்சினைகளை உள்ளடக்கிய விவாதக் குறிப்பு ஒன்றினையும் அளித்தார்.

5. மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜவுளித் தொழில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை விவாதிக்க 26-09-1998 அன்று ஆலை உரிமையாளர் பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட கூட்டம் ஒன்றினைக் கூட்டினார். அக்கூட்டத்தில் 5 இலட்சம் பேல் அளவிற்கு பஞ்சு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு மேற்கொண்டதாகக் கூறப்பட்ட முடிவு தற்போதைய நெருக்கடி நிலையினை மேலும் தீவிரமாக்கக்கூடும் என்று எடுத்துரைக்கப்பட்டது. எனவே, தற்போதைய ஜவுளித் தொழிலின் நெருக்கடி நிலையினைக் கருத்திற்கொண்டு மேற்படி முடிவினைக் கைவிடுமாறு மத்திய ஜவுளித் துறை அமைச்சருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடிதம் எழுதப்பட்டது. அரசின் நீண்ட கால பருத்தி ஏற்றுமதிக் கொள்கையின்படி, பஞ்சு ஏற்றுமதி அனுமதிக்கப்பட்டதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

6. மேலும், நூற்புப் பிரிவிற்கும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி கிடைக்க வழிவகை செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

7. நாட்டிலுள்ள நூற்பாலைகளில் 50 விழுக்காட்டிற்கும் மேலான நூற்பாலைகள் தமிழ்நாட்டில் உள்ளதால், தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து 50 சதவிகித நிதியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்குமாறு மத்திய ஜவுளித் துறை அமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ளார்.

8. நலிவுற்ற நூற்பாலைகளையும், அவற்றை நம்பியுள்ள தொழிலாளர்களையும் பாதுகாக்க, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1) பஞ்சாலைத் தொழில் வளர்ச்சியடைய வழிவகை செய்ய மாநில அரசு முதன்முதலாக கடந்த ஆண்டு தமிழ்நாடு துணி நெசவுக் கொள்கையை வகுத்துள்ளது;

2) நலிவுற்ற நூற்பாலைகள் இடறுதவி நிறுவனமாக அறிவிக்கப்படுகின்றன;

3) தொழில் மற்றும் நிதி மறு சீரமைப்பு வாரியம் (BIFR) மூலம் நலிவுற்ற நூற்பாலைகளுக்கு வணிக வரி செலுத்துவதைத் தள்ளி வைத்து சலுகை வழங்கப்படுகிறது.

9. கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தமட்டில், 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 8 கூட்டுறவு நூற்பாலைகளை மட்டும் இயக்கினால் போதும் என்று திரு. எஸ்.வி.எஸ். இராகவன் அவர்களின் தலைமையிலான வல்லுநர் குழு பரிந்துரை செய்திருந்தபோதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் புனரமைப்புத் திட்டம் தயாரித்து இயக்க வேண்டும் என்று ஆணையிட்டதன் பேரில் ரூ.185.26 கோடி அளவிற்கு பலதரப்பட்ட நிவாரணம் மற்றும் பணப் பயன் அடங்கிய புனரமைப்புச் சலுகைகளை வழங்கி அரசு ஆணையிட்டது. நபார்டு வங்கி 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மட்டும் காசுக் கடன் அனுமதித்துள்ளது. இந்த 6 நூற்பாலைகளின் செயல்பாட்டினைப் பொறுத்து ஏனைய கூட்டுறவு நூற்பாலைகளுக்கு காசுக் கடன் அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என நபார்டு வங்கி கூறியுள்ளது. காசுக் கடன் கிடைத்த பின்னர் அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளையும் நல்ல நிலையில் இயக்க இயலும்.

**(xlvi)** தேனி மாவட்டம் ஓடைப்பட்டி பேரூராட்சியில் உள்ள கள்ளர் ஆரம்பப் பள்ளி மிகவும் பழுதடைந்து மாணவ மாணவியர்க்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ளதால் அதைச் சீர் செய்யும் விஷயம் குறித்து

உறுப்பினர் : **திரு. என்.ஆர். அழகராஜா:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: (பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை)**

**அறிக்கை**

தமிழகத்தில் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழ்கின்ற மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 3



மாவட்டங்களில், இவ்வினத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியர்க்கு சிறப்புக் கவனம் செலுத்தி கல்வி அளிக்கும்பொருட்டு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் 265 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அனைத்துப் பள்ளிகளும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலும், மதுரை தனித் துணை ஆட்சியரின் நேரடி மேற்பார்வையிலும் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 265 பள்ளிகளில், 15 மேல்நிலைப் பள்ளிகள், 23 உயர்நிலைப் பள்ளிகள், 19 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 208 ஆரம்பப் பள்ளிகள் அடங்கும். இவைகளில் தேனி மாவட்டத்தில் மட்டும் 4 மேல்நிலைப் பள்ளிகள், 7 உயர்நிலைப் பள்ளிகள், 3 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 64 ஆரம்பப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. தேனி மாவட்டத்தில் உள்ள 64 ஆரம்பப் பள்ளிகளில் ஓடைப்பட்டி பேரூராட்சியிலுள்ள கள்ளர் துவக்கப் பள்ளியும் ஒன்றாகும். அனைத்து 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளும் அரசு சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்தப் பள்ளிக் கட்டடங்கள் அனைத்துமே நாற்பது-ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடங்களாகும்.

ஒவ்வோர் ஆண்டும் பள்ளிகள் நிலை உயர்த்தப்படும்போது அதற்கான கூடுதல் கட்டடங்கள், ஆய்வகங்கள், மாணவியருக்கான கழிவறைக் கட்டடங்கள் மற்றும் குடிநீர் வசதிக்கான ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படுவதோடு மட்டுமின்றி, ஏற்கெனவே உள்ள பழைய கட்டடங்களில் எவை எவை உடனடியாக மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில் உள்ளன என்பதைக் கண்டறிந்து, முன்னுரிமை அடிப்படையில் மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்காக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1997-98 ஆம் ஆண்டு, பள்ளிக் கட்டடங்களின் மராமத்துப் பணிக்காக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடும், சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அத்தொகையில் 33 பள்ளிக் கட்டடங்களின் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவ்வண்ணமே 1998-99 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் மராமத்துப் பணிக்காக ரூ.2 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 பள்ளிக்கூடங்கள் மராமத்து செய்யப்பட்டன.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [1999 மே 18

மேற்சொன்ன வகையில், அரசின் நிதி நிலையைக் கருத்திற்கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் முன்னுரிமை அடிப்படையில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கவன ஈர்ப்பு அறிவிப்பில் கொடுத்துள்ளபடி தேனி மாவட்டத்தில் ஓடைப்பட்டி பேரூராட்சியில் உள்ள கள்ளர் சீரமைப்பு துவக்கப் பள்ளி கட்டடத்தினை கள்ளர் சீரமைப்பு தனித் துணை ஆட்சியர் நேரில் பார்வையிட்டதில், அக்கட்டடம் மாணவ, மாணவியருக்கு ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இல்லை எனத் தெரிய வந்துள்ளது.

எனினும், இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டவும், ஏற்கெனவே உள்ள கட்டடங்களை மராமத்து செய்யவும், மொத்தம் ரூ.4 லட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள் முடிவு செய்யப்பட்டபின், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பள்ளிக் கட்டடத்திற்கான மராமத்துப் பணியும், கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

**(xlvii)** கன்னியாகுமரி மாவட்டத்தில் காமராஜர் மணிமண்டபம் கட்ட மத்திய அரசின் அனுமதி வாங்குவது குறித்தும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவகத்தை கன்னியாகுமரியில் அமைப்பதற்கு மத்திய அரசின் தடங்கல் இருப்பது குறித்தும்

உறுப்பினர்கள் : **(அ) திரு. சி. வேலாயுதன்:**

**(ஆ) திரு. லா. சந்தானம்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: (செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை)**

**அறிக்கை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 1997-98 ஆம் ஆண்டு செய்தி-விளம்பரத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, கன்னியாகுமரியில் இப்போது விவேகானந்தருடைய மண்டபமும், அரசு சார்பிலே அங்கே நிறுவ இருக்கின்ற திருவள்ளுவர் சிலை இவற்றிற்கிடையே காமராஜருடைய மண்டபத்தையும், கடற்கரை ஓரத்திலே கட்டாமல் கன்னியாகுமரியிலேயே கட்டுவதற்கான



1999 மே 18] [திரு. வ. முல்லைவேந்தன்]

ஏற்பாடுகளை அரசு எடுத்துக் கொள்ளும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன் என்ற அறிவிப்பினைச் செய்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து அரசின் சார்பில் கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டபம் கட்டுவதற்கான இடத்தைத் தேர்வு செய்யுமாறு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 3-7-1997, 30-7-1997, 19-8-1997 நாளிட்ட கடிதங்களில் கேட்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி சென்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்வது குறித்து ஆய்வு செய்தார். இதனடிப்படையில் 20-10-1997 நாளிட்ட ஃபேக்ஸ் செய்தியில் கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவு வரை கட்டடங்கள் கட்ட தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் (Coastal Regulation Zone) அதனால் காமராஜர் மணிமண்டபம் அமைக்க இடம் தேர்வு செய்வதற்கு குழு ஒன்றினை அமைக்கலாம் என்ற கருத்தினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குத் தெரிவித்தார்கள். அவரது கருத்தினை அரசு பரிசீலனை செய்து கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டபம் அமைக்க இடம் தேர்வு செய்வதற்கு கீழே குறிப்பிட்டுள்ள 7 பேர் கொண்ட குழு 13-2-1998 அன்று அமைக்கப்பட்டது:

குழுவில் இடம் பெற்றவர்கள் விவரம்:

1) மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி

2) இயக்குநர், நகர்ப்புறம் மற்றும் ஊரக அமைப்புத் துறை

3) இயக்குநர், மீன்வளத் துறை

4) இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை

5) கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறை

6) துறைமுக அலுவலர், கன்னியாகுமரி

7) பொறியாளர், மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 7 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, இடம் தேர்வு செய்யுமாறு 13-2-1998 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணையில் கேட்டுக்கொள்ளப்பட்டது. [அரசாணை (நிலை) எண் 24 நாள் 13-2-1998] இதன் அடிப்படையில் கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

19-4-1998 அன்று நாகர்கோவிலில் பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபத்தை திறந்துவைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றும் போது, கன்னியாகுமரி கடற்கரையில் உள்ள காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் "காமராஜர் மணிமண்டபம்" அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

19-4-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பினைத் தொடர்ந்து கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் அஸ்தி வைத்த இடத்திலே காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான இடத்தினைத் தேர்வு செய்து அனுப்புமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், நகர ஊரமைப்புத் துறை ஆணையர் அவர்களிடம் உடனடியாகக் கேட்கப்பட்டது.

கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காமராஜர் மணிமண்டபம் அமைக்க திட்டமிட்டுள்ள இடம் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கடற்கரைப் பாதுகாப்பு விதிகளின்படி (கடித எண் ஜெ.17011/16/93-ஐஏ, நாள் 27-9-1996) தடை செய்யப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது என்றும், மைய அரசிடமிருந்து விதிவிலக்கு பெறுதல் அவசியம் என்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், நகர ஊரமைப்புத் துறை ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

கன்னியாகுமரி கடற்கரையில் அமைக்கப்படவுள்ள காமராஜர் மணிமண்டபம், அங்கு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள காந்தி மண்டபத்தின் வடிவமைப்பிலும், தோற்றத்திலும் மற்றும் அளவிலும் எந்த முறையிலும் குறைவுபெறாத வகையில் திட்டமதிப்பீட்டினையும், வரைபடத்தினையும் தயாரித்து அனுப்புமாறு பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களிடம் கேட்கப்பட்டது. தலைமைப் பொறியாளரிடமிருந்து வரைபடமும் பெறப்பட்டது.

கன்னியாகுமரி கடற்கரையில் பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள இடம் கடற்கரை





நிர்வாக முறைப்படுத்துதல் அறிவிக்கையின்கீழ் (Coastal Regulation Zone Notification, 1991) கட்டடங்கள் கட்டத் தடை செய்யப்பட்ட இடமானதால் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையிடம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1988 பிரிவு 3(1) மற்றும் 3(2) (v) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 விதி 5(3) (d) ஆகிய விதிகளிலிருந்து விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான இடம், மத்திய அரசு சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் 27-9-1996 நாளிட்ட ஆணையின்படி கடற்கரைப் பாதுகாப்பு விதிகளின்படி கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவு வரை கட்டடங்கள் கட்டுவதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியாகும். எனவே, மத்திய அரசின் அனுமதி பெறுவதற்காக தொடர்புடைய துறைகளிடமிருந்து விவரங்கள் பெற்று மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்கு 7-8-1998 அன்று அனுப்பப்பட்டது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை 7-10-1998 நாளிட்ட கடிதத்தில் மேலும் சில விவரங்களைக் கோரியது. மேற்படி விவரங்கள் அனைத்தும் பெறப்பட்டு, தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் ஒப்புதலுடன் 21-1-1999 அன்று மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்கு அனுப்பப்பட்டது. மீண்டும் நினைவூட்டுக் கடிதம் 22-2-1999 அன்று அனுப்பப்பட்டது.

காமராஜர் மணிமண்டபம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள இடம் கடற்கரை நிர்வாக முறைப்படுத்துதல் அறிவிக்கையின்கீழ் (Coastal Regulation Zone Notification, 1991) கட்டடங்கள் கட்டத் தடை செய்யப்பட்ட இடம் என்றும் (CRZ-I) மேற்கண்ட விதிகளுக்கு விதிவிலக்குத் தர இயலாது என்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை 22-2-1999 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது. மாற்று இடம் தேர்வு செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

கன்னியாகுமரி கடற்கரையில், காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் 6300 சதுர மீட்டர் அளவில் மணிமண்டபம் அமைக்கும் வகையில், சிறப்பு அனுமதி வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-4-1999 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைக் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

**(xlviii)** *இந்திய சுற்றுலாத் துறை மூலம் வெளியிடப்பட்ட தகவல் அறிவிப்புக் கையேட்டில் பழம்பெருமை வாய்ந்த சென்னை அருங்காட்சியகம் (மியூசியம்) விடுபட்டுள்ளதால் தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகையில் பாதிப்பு ஏற்படுவது குறித்து*

*உறுப்பினர்கள்* : **(அ) திரு. கே. ரவி அருணன்:**

**(ஆ) திரு. ப. ரங்கநாதன்:**

**(இ) திரு. கே.ஆர். இராமசாமி:**

**(ஈ) திரு. மு. அப்பாவு:**

*அமைச்சர்* : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: (சுற்றுலாத் துறை)**

**அறிக்கை**

இந்திய சுற்றுலாத் துறை மூலம் வெளியிடப்படும் தகவல் அறிவிப்புக் கையேட்டில் பழம்பெருமை வாய்ந்த சென்னை அருங்காட்சியகம் (மியூசியம்) இடம்பெற்றுள்ளது. கையேட்டில் இது தேசிய கலைக்கூடம் (National Art Gallery) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநில அரசு சுற்றுலாத் துறை மட்டுமல்லாது, மைய அரசின் சுற்றுலாத் துறையும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சுற்றுலா சிறப்பிடங்களையும் சுற்றுலாப் பயணிகள் அறியும் வண்ணம் வெளிநாட்டிலும், இந்தியாவிலும் உள்ள சுற்றுலாத் துறை அலுவலகங்கள் மூலம் சேவை செய்து வருகிறது. இதனால் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்றனர்.

சென்னைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அரசு அருங்காட்சியகத்திற்குச் செல்வதை வருவதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:

| வருடம் | சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1996 | 4,46,909 |
| 1997 | 4,66,124 |
| 1998 | 4,75,453 |



**(xlix)** *(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ்* **1998-99** *ஆம் ஆண்டில்* **645** *மனுக்கள் நிலுவையில் இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்டத்தைக் குறித்தும், (ஆ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ்* **1998-99** *ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில்* **1516** *மனுக்கள் நிலுவையில் உள்ளன. அனைத்து மனுக்களும் 8-வது படித்த பெண்கள் அளித்தது. இதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும்*

*உறுப்பினர்கள்* : **திரு. ஐ. கணேசன்:**

: **டாக்டர் காஞ்சனா கமலநாதன் :**

*அமைச்சர்* : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்: (சமூக நலத் துறை)**

**அறிக்கை**

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தில் நிதியுதவி பெற, மணப்பெண்ணுக்கு 18 வயது நிரம்பியிருக்க வேண்டும். மணப்பெண் பழங்குடியினத்தைச் சார்ந்தவராயிருந்தால் 5 ஆம் வகுப்புப் படித்திருக்க வேண்டும். மற்ற இனத்தைச் சார்ந்தவராயிருந்தால் 8 ஆம் வகுப்புப் படித்திருக்க வேண்டுமென இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17-3-1999 அன்று அறிவித்த 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூ.70 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயன்பெறுவோர் 70,000 மணப்பெண்கள் ஆவர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் குறிப்பாக வயது, கல்விச் சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தையும், முறைகேடுகளையும் களையும்பொருட்டு, இத்திட்டத்தின்கீழ் உதவி பெறுவதற்கான கல்வித் தகுதியைப் பத்தாவது வகுப்பாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது” என்று அறிவித்தார்கள்.

3. 17-4-1999 மற்றும் 18-4-1999 அன்று நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் பற்றி கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [1999 மே 18

(i) 1998-99 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் 46,185-ல், 10-ம் வகுப்பு படித்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டும், 1999-2000 நிதியாண்டின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து திருமண நிதியுதவி வழங்கப்படும். 8-ம் வகுப்பு வரை படித்த இதர விண்ணப்பதாரர்களுக்கு நிதியுதவி வழங்கப்படமாட்டாது.

(ii) பழங்குடி இனத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்குக் கல்வித் தகுதி, முன்பிருந்ததைப் போலவே 5-ம் வகுப்புப் படித்திருந்தால் போதுமானது. 1998-1999 ஆம் ஆண்டின் இறுதியில், நிலுவையிலுள்ள, தகுதியுள்ள பழங்குடியின விண்ணப்பதாரர்களுக்கு, 1999-2000 ஆண்டின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து திருமண நிதியுதவி வழங்கப்படும்".

4. இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி கேட்டு 31-3-1999 அன்று வரை பெறப்பட்ட 46,185 மனுக்களில் தகுதியற்ற மனுக்கள் நீங்கலாக தகுதி வாய்ந்த 44,957 மனுக்கள் தமிழகம் முழுவதும் நிலுவையில் உள்ளன. இதில் சுமார் 60 விழுக்காடு 10 ஆம் வகுப்புப் படித்தவர்கள். மீதமுள்ள சுமார் 40 விழுக்காடு 8 ஆம் வகுப்புப் படித்தவர்கள். தகுதிவாய்ந்த 44,957 மனுக்களில் 22 பேர்கள் மட்டுமே 5-ம் வகுப்புப் படித்தவர்கள். தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிலுவையிலுள்ள 1,462 மனுக்களில், 949 பேர் 10-ம் வகுப்புப் படித்தவர்கள். மீதமுள்ள 513 பேர் 8 ஆம் வகுப்புப் படித்தவர்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் நிலுவையிலுள்ள 1839 மனுக்களில், 1,212 பேர் 10 ஆம் வகுப்புப் படித்தவர்கள். 623 பேர் 8 ஆம் வகுப்புப் படித்தவர்கள். 4 பேர் 5 ஆம் வகுப்புப் படித்தவர்கள்.

5. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது ஏற்பட்ட முறைகேடுகளையும், தவறுகளையும் தவிர்ப்பதற்காகவே அரசால் கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இது, இத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது ஏற்படும் காலதாமதத்தையும் முறைகேடுகளையும் களைவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கை முடிவு. இது தொடர்பாக எந்தவித பதற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை.



1999 மே 18]

(I) வேலூர் தொகுதி சேன்பாக்கம், ஆதிதிராவிட நலத் துறைப் பள்ளி இடிந்து விழும் நிலையில் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

உறுப்பினர் : **திரு. சி. ஞானசேகரன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், வேலூர் நகருக்கு அருகில் உள்ள சேன்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி இயங்கி வருகின்றது. இப்பள்ளி 1998-99 ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட்டு, இவ்வாண்டில் 6 ஆம் வகுப்பு தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தற்போது மொத்தம் 464 மாணவ/மாணவிகள் படித்து வருகின்றனர். மேற்படி கிராமத்தில் இப்பள்ளி இரண்டு இடங்களில் உள்ள கட்டடங்களில் இயங்கி வருகின்றது. ஒன்று மங்களூர் ஓடு வேய்ந்த 'ப' வடிவிலான, இரண்டு பழைய கட்டடங்களாகும். இக்கட்டடங்களின் தென்பகுதி மூன்று மாதங்களுக்கு முன் பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இக்கட்டடத்தின் வடக்குப் பகுதியில் சில இடங்களில் ஓடு மட்டும் மாற்றி பழுதுபார்த்தால் போதுமானதாக உள்ளது. ஊரின் நடுவில் இப்பழைய கட்டடங்களுக்கு மிக அருகில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் புதிய மாடிக்கட்டடம் 1994-ல் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. அதில் தரைப்பகுதியில் 3 வகுப்புகளும், மாடிப்பகுதியில் 3 வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இதற்கு மின் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் அமைந்துள்ள மற்றொரு கட்டடம் 1986-ல் கட்டப்பட்ட மாடிக் கட்டடமாகும். இக்கட்டடத்தின் வெளிப்பகுதியின் மேற்கூரைப்பகுதி மட்டும் பழுதடைந்துள்ளது. இதனை பராமரிப்புப் பணியின் மூலம் சரிசெய்துவிடலாம். தற்சமயம் வகுப்பு நடைபெறும் உள்பகுதி நல்ல நிலையில் உள்ளது. மற்றபடி எவ்விதமான பதட்டமான சூழ்நிலையும் இல்லை.

[1999 மே 18

**(ii)** வேலூர் தொகுதி அலமேலுமங்காபுரம் பெருமுகை ஆதிதிராவிட நலத் துறை உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானம் இன்மையால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

உறுப்பினர் : **திரு. சி. ஞானசேகரன்:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், அலமேலுமங்காபுரம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 1,174 மாணவ/மாணவிகள் பயிலுகின்றனர். இத்துடன் இப்பள்ளி வளாகத்திலேயே ஆதிதிராவிட நல ஆரம்பப்பள்ளியும், ஒரு கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதில் 768 மாணவ/மாணவிகள் பயிலுகின்றனர். மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளதாலும், பள்ளிக் கட்டடத்தில் இடமின்மையாலும் அருகில் உள்ள காலியிடத்தில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலம் ஐந்து ஓலை ஷெட்டுகள் அமைத்தும், பள்ளி பராமரிப்புத்தொகை மூலம் ஆதிதிராவிடர் நலத் துறை இரண்டு ஓலை ஷெட்டுகள் அமைத்தும் வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. விளையாட்டு மைதானம் இல்லை. தற்சமயம் வகுப்பறைக் கட்டடங்களுக்கு இடையே உள்ள இடத்தில் மாணவ/மாணவியர்கள் விளையாடி வருகின்றனர். விளையாட்டு மைதானம் அமைக்கப்பட வேண்டுமெனில் தனியார் நிலங்களை நில எடுப்பு செய்தால்தான் முடியும். இப்பள்ளியைச் சுற்றியுள்ள இடங்கள் அனைத்தும் வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமானதாக உள்ளது. பள்ளியின் முன்புறம் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. பள்ளியின் பின்புறமும் நீட்டிக்க வழியில்லாமல் உள்ளது. பள்ளியின் கிழக்குப்புறத்தில் வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலமும், மேற்குப் புறத்தில் பட்டா நிலத்தில் கட்டடங்களும் உள்ளன. பொதுவாக, இப்பகுதியில் உள்ள நிலங்கள் மிகவும் அதிகமான விலை உடையவை. அருகில் நிலம் கிடைப்பதும் அரிதாக உள்ளது. இருப்பினும் இப்பள்ளிக்கு இடத்தைப் பெறுவதற்கு பெற்றோர் ஆசிரியர் கழக அமைப்பாளர்களும், மாவட்ட ஆதிதிராவிட



1999 மே 18] [திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு]

நல அலுவலரும் முயன்று வருகின்றனர். வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தைப் பெறுவதற்கும் முயற்சிகள் செய்துவரப்படுகின்றன.

வேலூர் மாவட்டம், பெருமுகை ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளியில் 370-க்கு மேற்பட்ட மாணவ/மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். போதிய கட்டட வசதி உள்ளது. ஆனாலும் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் இல்லை. தேசிய நெடுஞ்சாலை ஓரமாக அமைந்துள்ளதால், பள்ளியின் முன்புறத்தில் மைதானம் அமைக்க எவ்வித சாத்தியக்கூறுகளும் இல்லை. அதேபோன்று பள்ளியின் பின்புறம் கிராமம் அமைந்துள்ளதாலும், மேற்குப்புறம் பாதை உள்ளதாலும், விரிவாக்கம் செய்ய வசதியில்லை. பள்ளியின் கிழக்குப் பகுதியில் பள்ளியின் தேவையினை அனுசரித்து 1.09 ஏக்கர் நிலம் நில எடுப்பு மூலம் 1996 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் நீதிமன்ற வழக்குக் காரணமாக அந்த இடத்தினை அரசு எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருந்து வருகிறது. அந்த இடம் மீளப்பெற எதிர்உரை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கில் அரசுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கப்பெறுமாயின், அந்த இடத்தினை நன்கு பயன்படுத்திக்கொள்ள இயலும் நிலை உள்ளது.

**(iii)** ஈரோடு மாவட்டம், முகாசி அனுமன்பள்ளி கிராமம், கள்ளகவுண்டன்பாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு பாதை வசதியே இல்லாமல் தடுக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள அதிருப்தி நிலை குறித்து

உறுப்பினர் : **திரு. நா. பெரியசாமி:**

அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)**

**அறிக்கை**

ஈரோடு மாவட்டம், முகாசி அனுமன்பள்ளி கிராமம் கள்ளகவுண்டன்பாளையம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு பாதை வசதிக்காக எடுக்கப்பட்ட நில எடுப்பு நடவடிக்கையினை எதிர்த்து நில உடமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த

[திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு] [1999 மே 18

வழக்கு நீதிப்பேராணை மனு எண் 1034/86 மற்றும் நீதிப்பேராணை எண் 9764/93 ஆகிய இரு மனுக்களின்பேரில், வழங்கப்பட்ட பொதுத் தீர்ப்பின்படி மீண்டும் தமிழ்நாடு நிலமெடுப்புச் சட்டம் 31/78-ன்படி நிலமெடுப்பு நடவடிக்கைகள் தொடரப்பட்டு 31-12-1997 அன்று award தீர்ப்பு வழங்கப்பட்டது. மீண்டும் இந்நிலமெடுப்பு நடவடிக்கையிலும் சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண் 18872/97, நாள் 28-1-1998-ல் நில உடமையாளர்களால் சுவாதீனம் பெற தடைபெறப்பட்டது (Dispossession Stay). எனவே, கையகப்படுத்தப்பட்ட நிலத்தை சுவாதீனம் பெற இயலவில்லை.

ஈரோடு மாவட்டம், முகாசி அனுமன்பள்ளி கிராமம், கள்ளகவுண்டன்பாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு வழித்தடம் ஏற்படுத்திக் கொடுக்க இந்நேர்வில் சம்பந்தப்பட்ட வழக்கினை முன்கூட்டியே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

கடந்த 22-1-1999-ல் ஈரோடு ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் சென்னை உயர்நிதிமன்றத்தில் சிறப்பு வழக்குரைஞரைச் சந்தித்தபோது "தடை நீக்கம் செய்யக்கோரும் மனு" (Petition for vacating stay) தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் சம்பந்தப்பட்ட வழக்கினை உடனடியாக விசாரணைக்கு எடுத்து அரசுக்குச் சாதகமான தீர்ப்பினை பெறக் கோரி சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்குரைஞருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. தடையாணையை நீக்கம் செய்ய ஆவன செய்யுமாறு அரசு வழக்குரைஞரை நேரிலும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகையால் பல ஆண்டு காலமாக பாதை வசதி இல்லாமல் அவதிப்பட்டு வரும் ஆதிதிராவிட மக்களுக்கு பாதை வசதி ஏற்படுத்த இந்நேர்வில் சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு டபிள்யு.பி.எண் 18872/97, நாள் 28-1-1998-ல் பிறப்பிக்கப்பட்ட தடையாணையை நீக்கம் செய்து உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்த உடன் மேற்படி ஆதிதிராவிடக் காலனிக்கு பாதை வசதி செய்து கொடுக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 மே 18]

**(liii)** **நாகை மாவட்டம், சீர்காழி வட்டம், பழையாறு மீன்பிடித் துறைமுகம் மண் மேடிட்டுள்ளதால் அங்குள்ள மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல இயலாததால் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து**

உறுப்பினர்கள் : **(அ) திரு. மு. பன்னீர்செல்வம்:**

**(ஆ) திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: (மீன் வளத் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பழையாறு கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரம் மண் மேடிட்டுள்ளதால் படகுகள் மீன்பிடிப்பதற்காக, கடலுக்குச் செல்வதில் தற்பொழுது உள்ள சிரமங்கள் குறித்து கீழ்க்காணும் அறிக்கை அனுப்பலாகிறது.

2. தற்பொழுது சீர்காழி வட்டத்தில் உள்ள பழையாறு கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரம் வடக்கு நோக்கிச் சென்று கொடியம்பாளையம் என்கின்ற கிராமத்திற்கு அருகில் கடலில் கலக்கின்றது. இந்த முகத்துவாரம் தற்பொழுது மேடிட்டு உள்ளதால் மீன்பிடி படகுகள் கடல்நீர்ப் பெருக்கம் (High Tide) ஏற்படும் சமயங்களில் மட்டும் கடலுக்குள் மீன்பிடிப்புக்குச் செல்லவும் மற்றும் மீன்பிடிப்பு முடிந்தபின் ஆற்றுக்குள் திரும்பி வரவும் இயலும். கடலில் நீர்ப்பெருக்கம் (High Tide) இல்லாத சமயங்களில் மீன்பிடி படகுகள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லவோ அல்லது மீன்பிடிப்பு முடிந்து ஆற்றுக்குள் திரும்ப வருவதற்கோ இயலாத நிலை உள்ளது.

3. இதன் காரணமாக பழையாறு மீனவ கிராமத்தவர்கள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரை அணுகி, "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ் கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரத்தை நேராக வெட்டி மீன்பிடி படகுகள் கடலுக்குள் செல்வதற்கும் மற்றும் ஆற்றுக்குத்

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [1999 மே 18

திரும்புவதற்கும் வசதியாக ஏற்பாடு செய்வதற்கு நிதி உதவி கோரினார்கள். அதன்படி கிராம மக்களே கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரத்தை நேராக வெட்டித் திறந்துவிட்டனர். ஆனால், அது சில தினங்களிலேயே தூர்ந்துவிட்டது. அது தற்பொழுது உபயோகத்தில் இல்லை.

4. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரத்தை 17-1-1999 அன்று நேரில் பார்வையிட்டு முகத்துவாரம் தூர்ந்து போகாமல் அதனை எல்லா காலங்களிலும் மீனவர்கள் நிரந்தரமாகப் பயன்படுத்துவதற்கு உரிய வழிவகைகளை மேற்கொள்ளலாம் என்று கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையில் மீன்பிடித் துறைமுக தஞ்சை கோட்டச் செயற்பொறியாளர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரத்தில் ஏற்பட்டுள்ள மணல்மேட்டினை அகற்றுவதற்கு ஏற்கெனவே துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக தோராயமாக ரூ.110.00 இலட்சம் செலவாகும் என சென்னை மீன்பிடி துறைமுகத் திட்ட, வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் மதிப்பீடு செய்துள்ளார். எனினும் ஆய்வுகள் மேற்கொண்டு திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தகவல்களின்படி மீன்பிடி துறைமுகத் திட்ட, வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் மணல் தூர் எடுப்பதற்கு ரூ.57.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரித்து அனுப்பியுள்ளார். இது பரிசீலனையில் உள்ளது.

5. இதற்கிடையில் பூண்டி நீரியல் மற்றும் நீர் அமுத்த மையப் பொறியாளர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க பூண்டி நீரியல் ஆய்வு மையப் பொறியாளர்கள் பழையாறு துறைமுகத்தை 6-4-1999 மற்றும் 7-4-1999 அன்று ஆய்வு செய்து நிரந்தர தீர்வுகாண [முகத்துவாரத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர்கள் (Training Wall) கட்டி நிரந்தரமாக ஆற்றின் ஆழத்தைப் பராமரிக்க] மாதிரி ஆய்வுக்கு தக்க தகவல்கள் சேகரித்துள்ளனர். அவர்களிடமிருந்து அறிக்கையும் மதிப்பீடும் எதிர்பார்க்கப்படுகின்றன.



1999 மே 18]

**(IIv) இராமேஸ்வரத்திலிருந்து விசைப்படகு மூலமாக கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களை நான்கு நாட்களாக கண்டுபிடிக்காததால் அப்பகுதி மக்கள் மத்தியில் நிலவும் பதட்டம் குறித்து**

உறுப்பினர் : **திரு. டி. மணி:**

அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: (மீன் வளத் துறை)**

**அறிக்கை**

கடந்த 3-5-1999 அன்று இராமேஸ்வரம் மீன்பிடித் தளத்திலிருந்து இராமேஸ்வரம் திரு. முத்துராமு என்பவருக்குச் சொந்தமான ஆர்.எம்.எஸ்.1861 என்ற மீன்பிடி விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் திருவாளர்கள் ஆ. முத்துராமலிங்கம் (வயது 26), மு. ஆறுமுகநாதன் (வயது 19), கா. அப்பாதுரை (வயது 21) மற்றும் பா. முத்துராமலிங்கம் (வயது 24) ஆகிய நான்கு மீனவர்களும் 6-5-1999 அன்று காலை வரை கரைக்குத் திரும்பவில்லை என இராமேஸ்வரம் (மண்டலம்) மீன்துறை உதவி இயக்குநர் தெரிவித்ததற்கிணங்க, காணாமல்போன மீனவர்களை கடல் மற்றும் வான் வழியாக உடனே தேடிக் கண்டுபிடிக்குமாறு இந்திய கடற்படை மற்றும் கடலோர காவற்படையினர் கேட்டுக் கொள்ளப்பட்டனர். காணாமற்போன மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் காணப்பட்டால் அவர்களை படகுடன் மீட்டு தக்க உதவிகள் செய்து தமிழகத்திற்கு படகுடன் திரும்ப அனுப்புமாறு இந்திய அரசின் வெளிவிவகாரத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சகங்களும் இலங்கையிலுள்ள இந்திய தூதரகமும் தொலையச்சு செய்தி மூலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக காணாமல்போன நான்கு தமிழக மீனவர்களும் அவர்களுடைய படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் திசைமாறி இலங்கை கடற் பகுதிக்குச் சென்றதாகவும், மீனவர்களை படகுடன் இலங்கை அரசு கைப்பற்றி, இலங்கையில் காவலில் வைத்துள்ளதாகவும் தெரிய வந்தது.

2. இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழக மீனவர்களை படகுடன் விடுதலை செய்து தமிழகத்திற்கு உடனே திரும்ப அனுப்புமாறு இலங்கையிலுள்ள

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [1999 மே 18

இந்திய தூதரகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கடலில் அலை சீற்றமாக உள்ளதால் மீனவர்களை படகுடன் இந்திய கடல் எல்லைக்குக் கொண்டு வந்து இந்திய கடலோரக் காவல் படையிடம் ஒப்படைப்பதில் தாமதம் நேரிட்டுள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. இந்த நான்கு தமிழக மீனவர்களையும் படகுடன் விரைவில் தமிழகத்திற்கு அழைத்து வருவதற்கு அரசு சீரிய முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

3. காணாமல்போன தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதால், அம்மீனவர்கள் காணாமல்போன நாளான 3-5-1999 முதற்கொண்டு அவர்களை தமிழகத்திற்கு மீட்டு அழைத்து வரப்படும் நாள்வரை தமிழக அரசால் நாளொன்றுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. விதி 110-ன் கீழ் அறிக்கை

**அரியலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தொடங்குவது குறித்து பரிந்துரைக்க முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளது பற்றி முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன்கீழ் இங்கே வைக்கப்படுகின்ற அறிக்கை:

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், ஏற்கெனவே நிர்வாக வசதி காரணமாக திருச்சி, கரூர், பெரம்பலூர் என்று மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த மூன்று மாவட்டங்களில் பெரம்பலூர் மாவட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பே அந்த மாவட்ட தலைநகராக அரியலூரை வைத்துக்கொள்ளவேண்டும் என்று அந்தப் பகுதி மக்களும், பெரம்பலூரை வைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தப் பகுதி மக்களும் போராடத் தொடங்கிவிட்டார்கள். அதுகுறித்து தொடர்ந்து இருபகுதி மக்களாலும் பலமுறை பந்த் வேலைநிறுத்தம்



1999 மே 18] [கலைஞர் மு. கருணாநிதி]

போன்ற நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுவிட்டன. இரு மாவட்டத்தையும் சேர்ந்த பல்வேறு பிரிவு மக்களையும் நான் தலைமைச் செயலகத்திற்கே அழைத்து நாமக்கல் கவிஞர் மாளிகையில் 9-1-1997 அன்று பல மணி நேரம் செலவழித்து, இரு தரப்பினரிடையே ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த முயற்சித்தபோதிலும் அது தற்காலிகமான அமைதியை ஏற்படுத்த உதவியதே தவிர அந்த மாவட்டத்தில் எந்த வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்ற முடியாத அளவிற்குப் பல சங்கடங்கள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டேயுள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினையிலே ஓர் அமைதியான சூழ்நிலையை இருபகுதி மக்களிடையேயும் ஏற்படுத்த வேண்டும் என்றால், அரியலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு மற்றொரு மாவட்டமும் இயங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிகின்றது. தற்போது கரூர் மாவட்டத்தில் மூன்றரை சட்டமன்றத் தொகுதிகளும், அரியலூர் பகுதியில் மூன்று சட்டமன்றத் தொகுதிகளும், பெரம்பலூர் பகுதியில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளும் உள்ளன. இதில், திருச்சி மாவட்டத்திலுள்ள உப்பிலியாபுரம் தொகுதியை பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைத்துவிட்டால், கரூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களுமே ஒவ்வொன்றும் தலா மூன்று தொகுதிகள் வீதம் பெற்று தனித் தனி மாவட்டங்களாகத் திகழும். இந்த முடிவை நடைமுறைப்படுத்திட அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துத் தரப்பினரையும் கலந்தாலோசித்து அரசுக்குப் பரிந்துரை தர, முதன்மை ஆணையரும், வருவாய் நிர்வாக ஆணையருமான திரு. பி.எஸ். பாண்டியன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் அரசு பெற்று முறையான அறிவிப்பை வெளியிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9-55

## 5. தகவல் கோரல்

### (அ) தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கைக் கோருதல்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

[1999 மே 18

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உங்களை நான் உட்காருங்கள் என்று சொன்னால், நீங்கள் உட்கார வேண்டும். நீங்கள் அவரைப் பார்த்து ஒன்றும் சொல்லக் கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நேற்றைக்கே சொல்லிவிட்டேன், இதற்கு அனுமதி கிடையாது என்று. நீங்களும் வெளிநடப்புச் செய்து விட்டீர்கள். இன்றைக்கு வந்து, அவையின் நேரத்தை வீணாக்கக் கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்த அறிக்கை பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஒன்றும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அந்த அறிக்கை பெறப்பட்டு, அந்த அறிக்கையிலே இருந்து எடுக்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் அடிப்படையில் இங்கே அவை முன்னவர் அவர்கள் ஏற்கெனவே அந்தக் கருத்துகளை இந்த அவைக்கு வெளியிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் இனிமேல் பேசுவது அவைக் குறிப்பேட்டில் ஏறாது. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பேட்டில் ஏறாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த அறிக்கையின் அடிப்படையில்தான் கல்வி அமைச்சர் இந்த அவையில் கருத்துகளை வெளியிட்டிருக்கிறார் என்று முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அது உங்களுக்கு திருப்தி இல்லையென்றால் நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1999 மே 18]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த அனுமதியை நான் உங்களுக்குக் கொடுக்கவில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காரவில்லை என்றால், உங்களை நான் வெளியேற்றுவேன். அதைத் தவிர வேறு வழியில்லை. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி அவையை விட்டு வெளியேறவும். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பேட்டில் ஏறாது. டாக்டர் கிருஷ்ணசாமி அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன் அல்லவா? அவைக் காவலர்கள் டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்ற வேண்டும்.

(அவைக் காவலர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி அருகே வந்தனர்)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எது கேட்டாலும், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்காதபோது நீங்கள் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) அவைக் காவலர்கள் டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்ற வேண்டும்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

### (ஆ) திரு. தாமரைக்கனி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

**திரு. பி.ஆர் சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1999 மே 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? நீங்களும் வெளியே போக வேண்டுமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. தாமரைக்கனி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்டீர்கள். இதற்குமேல் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன்.

**(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்**

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கோரிக்கை சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஏராளமான உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். அது என்னவென்றால் கோயம்புத்தூரில் ரயில் மறியலுக்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று கடைசி நாள் என்பதால் விதிகளை மாற்ற முடியாது. சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஏராளமான உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை 55-க்கும் மேலே இருக்கின்றன. எடுத்து விவாதிக்கப்பட்ட தீர்மானங்கள் போக, மீதமிருக்கின்ற தீர்மானங்களுக்கான பதில்கள் எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், திரு வி.கே. லட்சுமணனுக்கு என்று தனிச் சலுகை அளிக்க முடியாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இன்றைக்கு என்னவென்றால், அங்கே தொழிலாளர்கள் அத்தனை பேரும் சேர்ந்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் தெரியும். எப்படி இருந்தாலும், அதற்கென்று தனியாக அனுமதி கொடுக்க முடியாது.



1999 மே 18]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நீங்கள் ஒட்டுமொத்தமாக கொடுத்த statement-ஐச் சொல்லுகிறீர்கள். நான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 55-statements எல்லோருக்கும் கொடுத்தாகிவிட்டது. இனிமேல் நான் அனுமதிக்க முடியாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஏராளமான ஆலைகள் மூடப்பட்டு இருப்பதால் தொழிலாளர்கள் எல்லாம் இன்று பெரிய போராட்டங்கள் நடத்தி, இரயில் மறியல் செய்கின்ற அளவுக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அப்பாவு, நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? (குறுக்கீடு) திரு. பி.ஆர் சுந்தரத்திற்கு அனுமதி கிடையாது. திரு. அப்பாவு, நீங்கள் சொல்லுங்கள்.

**(ஈ) கொடுமுடியாறு திட்டம் நிறைவேற்றுதல்**

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் கிடப்பிலே கிடந்த அணைக்கட்டுகளை எல்லாம், இந்த அரசு பொறுப்பேற்றதும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

**திரு. மு. அப்பாவு:** இது தென் மாவட்டத்தைச் சேர்ந்த விஷயம். நான் பேசியதும், அமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். தென் மாவட்டத்தில் கிடப்பிலே கிடந்த நம்பியாறு திட்டம், ஆலந்துரை ஆறு, பொய்கை ஆறு, பச்சை ஆறு திட்டங்களுக்கெல்லாம் புத்துயிர் கொடுத்து, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. களக்காட்டிலே பேசும்போது இந்த மாவட்டத்தினுடைய பணிகளையெல்லாம் 3 மாதங்களுக்கு...

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 3 மாதங்களுக்கு ஒருமுறை வந்து ஆய்வு செய்து இந்தப் பணிகளைச் சிறப்பாக முடித்துத் தருகிறேன் என்றார்கள். அந்த அடிப்படையில் பணிகளும் வேகமாக நடைபெற்றுக்

[திரு. மு. அப்பாவு] [1999 மே 18

கொண்டிருக்கின்றன. ஆனால் கொடுமுடியாறு திட்டம்தான் மிக மோசமான நிலையில் இருக்கிறது. 1-7-1976-ல் கொடுமுடியாறு திட்டத்திற்கு 166 இலட்ச ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 40 இலட்ச ரூபாய் செலவில் அலுவலகம், குடியிருப்புகள் எல்லாம் கட்டப்பட்டு, பின்னர் இந்த அணைக்கட்டுத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. 1986 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் வந்து அந்தப் பணிகளை மீண்டும் ஆரம்பித்தார்கள். 1987-ல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்த வரலாற்றை எல்லாம் பேசுவதற்கு அனுமதி கொடுக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்கிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் சொல்லி முடித்தாகிவிட்டது. நான் இதற்கு மேல் அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் சொல்ல வேண்டிய கருத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் என்று சொன்னால், நீங்கள் உட்கார வேண்டும். உங்கள் கருத்துக்கு அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீண்ட நாட்களாக இருக்கின்ற கொடுமுடியாறு திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் இப்போது செய்யப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதை பொதுப்பணித் துறையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. இம்மாத இறுதிக்குள் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும். ஜூன் மாத இறுதியில் வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) அவை உரிமைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, அவை உரிமைக் குழுவின் தலைவர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவின் சார்பில் உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்மீது



1999 மே 18] [திரு. பரிதி இளம்வழுதி]

எழுப்பப்பெற்ற உரிமைமீறல் பிரச்சினை மீதான குழுவின் அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன். அறிக்கையை அச்சடித்து அளிக்க போதிய கால அவகாசம் இன்மையால் தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கையின் நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அறிக்கை பின்னர் அச்சிடப்பட்டு பேரவை உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. செ. இராமலிங்கம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் 18-வது முதல் 24-வது வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் 20 முதல் 24-வது வரையிலான அறிக்கைகளை அச்சடித்து அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும்.

### (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், குழுவின் தலைவர் திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1998-99ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழு, தான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் செயல்பாடு பற்றிய 94-வது அறிக்கையைக் குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன். மேற்படி அறிக்கை, போதிய கால அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி பெருக்கி நகல்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன், பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999, பேரவையில் அறிமுகம் செய்தல் (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை அழைக்கின்றேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவும், அடுத்துவரும் 8 சட்டமுன்வடிவுகளும் பொது விற்பனை வரி தொடர்பானவை. எனவே கருத்துகளைக் கூற விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் இவை அனைத்துக்கும் சேர்த்து தங்கள் கருத்துகளைக் கூறலாம். இந்தச் சட்டமுன்வடிவுகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. திரு. ஆர் சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் எந்த அரசுமே செய்திருக்காத அளவுக்கு விற்பனை வரித் துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து அதன்மூலமாக நேர்மையான வணிகம் வளரவும், மக்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கச் செய்யவும் சமயத்தில் அரசுக்கு வருவாய் இழப்பு இல்லாமலும், சாமார்த்தியமாக இந்த அரசு செயல்பட்டு வருவதை முதற்கண் நான் மனம் நிறைந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

@17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ஆர். சொக்கர்] [1999 மே 18

ஏதோ ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு சலுகைகளைக் கொடுத்துவிட்டார்கள், அரசாங்கத்தின் பணம் முழுவதையும் எடுத்துக் கொடுத்துவிட்டார்கள் என்று பலர் நினைக்கின்றார்கள். உண்மையிலேயே அது அல்ல. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக சுமார் 5,000 கோடி ரூபாய் வருமானத்துடன் இருந்த இந்த விற்பனை வரித் துறையினுடைய தற்போதைய மொத்த வருமானம் 6,500 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது. ஒரு பக்கம் சலுகைகளைக் கொடுத்தாலும், வருவாய் இழப்பு இல்லாமல் அந்தச் சலுகைகளை வழங்கக்கூடிய அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைவருடைய கருத்துக்களையும் கேட்டு, நல்ல கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்துவதை நாங்கள் வரவேற்கின்றோம். இந்தச் சட்டமுன்வடிவுகளில்கூட இன்று Tax deducted at source, அதாவது தொகையைச் செலுத்தும்போதே வரியை பிடித்தம் செய்து அரசுக்குக் கட்ட வேண்டுமென்று, வருமான வரித் துறையிலே இருப்பது போன்று ஒரு சட்டத்தை, இந்த விற்பனை வரி சட்டத்திலும் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அது உண்மையிலேயே வரவேற்கத்தகுந்த ஒரு முறை. ஏனென்றால், குறிப்பாக works contract போன்ற நிகழ்வுகளில் எல்லாம் பெருமளவுக்கு வரி ஏய்ப்பு இருக்கிறது. அந்த வரி ஏய்ப்பைத் தடுக்கும் நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இதை நாங்கள் முழுமையாக வரவேற்கின்றோம். ஆனால் இதனுடைய நோக்கம் எவ்வளவு நல்ல நோக்கமாக இருந்தாலும் கூட. இதை நடைமுறைப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் அரசுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுதான் சட்டம் வந்திருக்கிறது. இதற்கு இனிமேல் நீங்கள் இலாகா மூலமாக விதிமுறைகளை உண்டாக்குவீர்கள். மிகுந்த எச்சரிக்கையோடு, கவனத்தோடு, வரி ஏய்ப்பை முழுவதுமாகத் தடுக்கக்கூடிய அளவிலே அந்த விதிமுறைகளை நீங்கள் உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக திருச்சியிலே திரு. ஞானராஜ் என்ற நண்பர் ஒருவர் விற்பனை வரி ஆலோசனைக் குழுவிலே உறுப்பினராக இருந்தார். அவர் அடிக்கடி சொல்லுவார். இந்த சிகரெட்டுகளுக்கு எல்லாம் tax போடுங்கள், அப்படிச் செய்தால் நிறைய வருமானம் வரும் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். நான்கூட நினைத்தேன். சிகரெட்டுக்கு நாம் வரி போட முடியாது. ஏனென்றால் அது Central List-க்குப் போய்விட்டது. Textiles, Cigarette, Tobacco போன்றவைகளுக்கு அவர்கள்தான் வரி போட முடியும். அதிலே ஒரு



1999 மே 18] [திரு. ஆர். சொக்கர்]

தொகையை மாநில அரசுகளுக்குக் கொடுப்பார்கள். வரி போட முடியாத பொருட்களுக்கு வரி போடலாம் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாரே என்று நான் நினைத்தேன். அந்த ஆலோசனையைக்கூட, மிகவும் யுக்தியான அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் சிகரெட்டுக்கு நேரடியாகத்தானே நாம் வரி போட முடியாது, Luxury Tax என்று போட்டுவிடலாமே என்று அதற்கு 5 சதவீத வரி போட்ட அந்த முயற்சியை நான் மனம் உவந்து பாராட்டுகிறேன். ஏனென்றால் சிகரெட், பான் மசாலா, liquor போன்ற மக்களுடைய சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய அத்தனைப் பொருட்களுக்கும் மிக அதிகமாக வரிவிதிப்பு செய்வதில் எந்தவிதமான தவறும் இல்லை. அது விலை ஏறும்போது அதை விற்கக்கூடியவர்களுக்கு ஒரு கட்டுப்பாடு வரும், அரசாங்கத்திற்குக் கூடுதலாக வருமானம் வரும். அதை வாங்குபவர்களால் நமக்கு வரி கிடைக்கிறது. அது அவர்களுக்கு ஒரு தண்டனையாக இருக்கட்டும் என்ற அளவிலேகூட அந்த வரி விதிப்பு செய்ததை நான் மனமுவந்து பாராட்டுகிறேன்.

முற்பகல் 10-10

அடுத்தபடியாக Hotel and Jewellery போன்றவைகளுக்கு compounding முறையிலே வரி விதிப்பு இருந்தது. அந்த compounding முறையிலே வரி விதிப்பு இருப்பதால் கண்டிப்பாக அவர்கள் வரி குறைவாகச் செலுத்தலாம். ஆனால், வரியை அவர்கள் நுகர்வோர்களிடமிருந்து வசூலிக்க முடியாது என்று ஒரு சட்டம் இருந்தது. அதை இப்போது மாற்றி compounding முறையில் செலுத்த வேண்டுமென்றாலும் செலுத்தலாம் அல்லது வரி வசூலித்துச் செலுத்தவேண்டுமென்றாலும் செலுத்தலாம் என்ற அந்த option அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது அவர்களுக்கும் ஒரு சலுகைதான்; அரசிற்கும் நிலையான வருமானம் வரும். இதிலே இன்னொரு சிக்கல் என்னவென்றால் முதலிலே நாம் compounding முறையில் போட்டிருக்கிறபோது தெரிந்தோ தெரியாமலோ அந்த option-ஐக் கொடுக்காமல் விட்டுவிட்டோம். option கொடுக்காவிட்டால் மொத்தம் சட்டப்படி தவறு. கடந்த காலங்களில்கூட என்னிடம் வந்து கேட்டார்கள். இது சட்டப்படி தவறு, கோர்ட்டுக்குப் போய் நாம் வாங்கிவிடலாமா, நிறுத்திவிடலாமா என்று சொன்னார்கள். நான் அவர்களிடம் சொன்னேன். இந்த அரசு எவ்வளவோ சலுகைகளை நீங்கள் கேட்டபோதெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. நீங்கள் இப்போது கோர்ட்டுக்குப் போனீர்கள் என்றால், இப்போது 2% என்று

[திரு. ஆர். சொக்கர்] [1999 மே 18

இருப்பதை 20% என்று போட்டுவிடுவோம். இதைத் திருத்திவிடுவோம். இதுவரை நீங்கள் கட்டாமல் இருந்தால் பரவாயில்லை. இனிமேல் வரக்கூடிய காலத்திற்கு 20% கட்ட வேண்டியிருக்கும். கட்டுகிறீர்களா என்று கேட்டேன். என்னங்க இப்படி வம்பு பண்ணுகிறீர்களே என்று சொன்னார்கள். ஆகவே, கேட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய அரசிடம் எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் வணிக குல பெருமக்கள் புரிந்துகொள்ள வேண்டும், புரிந்து நடந்துகொள்ள வேண்டும். அடுத்த ஆண்டு பாருங்கள், அதை rectify பண்ணிவிடுவார்கள் என்று சொன்ன உறுதிமொழியின் பேரில் இந்த அரசு அந்தச் சட்டத்தையும் திருத்தமாகக் கொண்டுவந்திருப்பதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக Form 17 கொடுத்து 3 சதவீத சலுகையில் விற்பனை வரியில் சரக்குகளை வாங்கக் கூடியவர்கள் அதனுடைய conditions-ஐ fulfil பண்ணாமல் வெளி மாநிலத்திற்குச் சரக்குகளை அனுப்புவார்களேயானால் அந்த நேரத்தில் 5 சதவீதமாக, கூடுதலாக 2 சதவீதம் வரி கட்ட வேண்டுமென்ற ஒரு நிலை இருந்தது. அந்த நிலையையும் இப்போது ஒரு சதவீதமாக நீங்கள் குறைத்து வரி விதிப்பு செய்திருப்பதையும் நான் முழு மனதோடு வரவேற்கிறேன். வரவேற்று எத்தனை சொல்கின்றேனோ அதேசமயத்தில் குற்றங்களாக குறைகளாகச் சொல்லக்கூடியதை, உரிய நேரத்திலே நீங்கள் திருத்திக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே சட்டத் திருத்தத்தில் works contract என்று வருகிறது. அந்த works contract-லே சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். கண்டிப்பாக திருத்தங்கள் கொண்டு வரவேண்டியதுதான். ஆனால் அந்த works contract, எப்படி வந்தது என்றால், 1984-லிருந்து constitutional amendment-ல் enabling amendment வந்த பிறகு, தமிழகத்தில் 1986-ல் இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்தே இன்றைய தேதி வரையில் குழப்பம். அந்தக் குழப்பம் 1993 வரைக்கும் ஒரு உச்ச நிலையில் இருந்தது. நீதிமன்றத்திற்கு எல்லாம் போனார்கள். அது தவறு என்றால், பிறகு இன்னொரு rule போட்டார்கள். அதுவும் தவறு என்று சொன்னார்கள். பிறகு, மறுபடியும் மாற்றியதில் 1993-க்குப் பிறகு ஓரளவுக்கு பரவாயில்லை. இருந்தாலும்கூட, இன்று வரையிலும் இந்த Works Contract-லே பல இடங்களில் கோரிக்கைகளும், குழப்பங்களும் வந்தவண்ணமாக இருக்கின்றன. ஆகவே, இலாகா அதிகாரிகளிடம் இதற்குரிய கவனத்தை செலுத்தச் சொல்லி எங்கெல்லாம் Works



1999 மே 18] [திரு. ஆர். சொக்கர்]

contract-லே குழப்பங்கள் இருக்கிறதோ அதற்கு உடனுக்குடன் தெளிவுரைகள் தெளிவாக வழங்க வேண்டுமென்ற அறிவுரையை நீங்கள் வழங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். Sugarcane-க்கு இப்போது Tonnage basis-ல் போட்டிருக்கிறீர்கள். உண்மையிலேயே அதனுடைய implications எனக்குப் புரியவில்லை. Sugarcane வாங்குகிறவர்களுக்கு அதனுடைய நடைமுறையில் ஆதாரமாக இருக்கிறதா அல்லது சிக்கலாக இருக்கிறதா என்பதை நடைமுறையில் பார்த்துத்தான் அதைப்பற்றிக் கூற முடியும் என்று நினைக்கிறேன்.

பிறகு இந்தச் சட்டமுன்வடிவுகளில் 8-ல், எங்களுடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் பாஷையில் சொல்கிறமாதிரி சொன்னால் கடுமையாக எதிர்ப்பது. என்னவென்றால் இதன்மீது அப்பீலுக்குப் போகிறவர்கள் 25 சதவீதம் வரி கட்டிவிட்டுத்தான் போக வேண்டும் என்ற ஒரு சட்டத்தை இப்போது நாம் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டம் நல்ல சட்டம் அல்ல என்பது என்னுடைய பணிவான கருத்து. காரணம் என்னவென்று சொன்னால், இதனுடைய intention என்னவென்றால் நிறைய cases Court-க்குப் போய், அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் lock-up ஆகிவிடுகிறது. அதற்காக 25 சதவீதமாவது கட்டிவிட்டுத்தான் appeal-க்குப் போக வேண்டும் என்று சொல்கிறோம். Appellate Assistant Commissioner-க்கும் Appellate Deputy Commissioner-க்கும் இந்த பவர் ஏற்கெனவே இருக்கிறது. அவர் 25 சதவீதம் கட்டச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம், இல்லை வேண்டாம் என்று சொன்னாலும் விட்டுவிடலாம். இன்னொன்று அதிலே என்ன சட்டம் கொண்டு வருகிறோம் என்றால் A.A.C. வந்து ஒரு அப்பீலை டிஸ்மிஸ் பண்ணி இவ்வளவு வரி கட்ட வேண்டுமென்று சொல்லிவிட்டால், மேல் முறையீடுக்கு, tribunal-க்கோ, Special tribunal-க்கோ போகும்போது, அந்த வரித் தொகை, Disputed tax-ஐ முழுமையாக கட்டிவிட்டுத்தான் அப்பீலுக்குப்போக வேண்டுமென்று இருக்கிறது. இது வந்து Draconian Law. இது தவறான சட்டம். இதை தயவுசெய்து நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

முற்பகல் 10-15

சரி, lock-up-ல் இருக்கிற பணத்தைக் கொண்டு வருவதற்கு நாம் என்ன செய்வது? பிரச்சினையைச் சொல்கிறபோது பிரச்சினைக்கு remedy-யும் சொல்ல வேண்டும். A.A.C.-யிடம் ஒரு கேஸ் வந்தால், இத்தனை நாட்களுக்குள் dispose பண்ண வேண்டுமெண்டுமென்ற

[திரு. ஆர். சொக்கர்] [1999 மே 18

விதிமுறை இப்போது இல்லை. இதை நீங்கள் கொண்டு வந்து விடுங்களேன். அவர்களிடம் அப்பீலுக்கு வந்துவிட்டது என்று சொன்னால், ஒரு மாதத்திற்குள் dispose கொடு; உடனே tax கட்ட வேண்டுமென்று சொல்; இல்லை என்றால், இல்லை என்று சொல் - என்று சொல்லிவிட்டால், இது dispose ஆகிவிடும். அதற்குத் தேவையான A.A.C.-களை நியமிக்க வேண்டும். அதைக் கண்காணிக்க வேண்டும். ஒரு மாதத்திற்கு மேல் எத்தனை கேஸ் பெண்டிங்காக இருக்கிறதோ, அதை விரைவுபடுத்துவீர்கள் என்று சொன்னால், இப்படிச் சட்டம் கொண்டு வருவதைவிட, அது நல்ல பலனைக் கொடுக்கும். இந்தச் சட்டம் கொண்டுவருவதால், இன்னொரு சிக்கல் என்னவென்று சொன்னால், இப்போது Assessing Officer-க்கும், Appellate Assistant Commissioner-க்கும் நீங்கள் enormous power கொடுத்துவிடுகிறீர்கள். அவர்கள் என்ன சொல்வார்கள்? ஏற்கெனவே பல இடங்களில் லஞ்ச ஊழல் இருக்கிறது. நல்ல அதிகாரிகளும் இருக்கிறார்கள்; தப்பு பண்ணுபவர்களும் இருக்கிறார்கள். வணிகர்களிலும் நல்லவர்களும் இருக்கிறார்கள்; தப்பு பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் என்ன செய்வார்கள் என்றால், நீ அப்பீலுக்கு போனால், 25% கட்டிவிட்டுத்தான் போக வேண்டியிருக்கும். அதனால், எனக்கு 10% கொடு; அப்படியென்றால், உனக்குப் போடவில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு Assessing Officer மட்டத்திலும் A.A.C. மட்டத்திலும் லஞ்ச ஊழல் மிக அதிகமாக வளருவதற்குத்தான் இந்தச் சட்டம் உதவி செய்யுமேயொழிய, அரசாங்கத்திற்குப் பணம் வருவதற்கு எந்தவிதத்திலும் இது உதவாது என்பது என்னுடைய பணிவான கருத்து.

அடுத்து, சமாதான் திட்டம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். கண்டிப்பாக இதைக் கொண்டுவர வேண்டும்; வரவேற்கத் தகுந்த நல்ல முயற்சி. இப்போது 50% Tax Liability-யிலே, பிறகு 25% Penalty-யிலே, 25% Interest-லே என்று நாம் கொண்டுவந்து இருக்கிறோம். இது எந்த அளவிற்கு பலன் தரும் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் 6 மாத காலமோ அல்லது ஒரு வருட காலமோ இதை நடைமுறைப்படுத்திப் பார்த்து, பின்னால் தேவையான மாறுதல்களைச் செய்து இந்தச் சட்டத்தை நாம் அமல்படுத்தலாம். இந்தச் சட்டத்தை பிரயோகம் பண்ணுவதில் அதிகாரிகளுக்கு நிறையச் சிக்கல்கள் இருக்கின்றன. இதை easy-யாக பிரயோகம் பண்ணிவிட முடியாது. நாம் என்ன நினைக்க வேண்டுமென்றால், 'நோய் நாடி, நோய் முதல் நாடி' என்கிறமாதிரி, ஏன் இவ்வளவு tax வந்து



1999 மே 18] [திரு. ஆர். சொக்கர்]

dispute-ல் இருக்கிறது; ஏன் இத்தனை கேஸ் pending-காக இருக்கிறது; pending-காக இருக்கிற கேஸ்கள் எல்லாவற்றையும் எடுத்து என்னென்ன காரணங்களினால் pending-காக இருக்கிறது என்பதை analyse பண்ண வேண்டும். அப்படிப் பண்ணுவதில், குறிப்பாக consignment sales காரணமாகவும் மற்றும் C-Form கிடைக்காததனாலேயும் நிறைய cases pending ஆக இருக்கின்றன. வேண்டுமென்றே வரியை ஏமாற்ற வேண்டும் என்று செய்தவர்கள் கிடையாது. Inter-state-க்கு சரக்கு அனுப்புகிறார்கள். சரக்கு வாங்குகிறவர் C-Form கொடுத்து விடுவார் என்று நினைக்கிறார்கள். ஆனால், C-Form கிடைக்கவில்லை. ஆனால், வரி ஏய்ப்பு செய்ய வேண்டும் என்பது நோக்கம் அல்ல. இப்படி இருக்கக்கூடியவர்களுக்கு C-Form கிடைக்கவில்லை என்றாலும்கூட, எந்தமாதிரியான வரி முறையைச் செய்யலாம் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

இதிலே ஒன்று என்ன செய்ய வேண்டும் என்றால், இந்த சமாதான் திட்டத்தில் இன்னொரு வழி என்ன செய்யலாம் என்றால், ஒரு ஓய்வு பெற்ற விற்பனை வரித் துறையில் நல்ல அனுபவம் உள்ள நீதிபதி, பிறகு தனியார் வழக்கறிஞர்கள், பாதிக்கப்பட்டோர் சார்பில் 2, 3 உறுப்பினர்களைப் போட்டு, அவர்களிடம் அப்பீல் பண்ணச் சொல்லி, அவர்களுடைய ஆலோசனைகளை, பரிந்துரைகளை இந்தச் சட்டப்பேரவையில் வைத்து அதை நிறைவேற்றி, அதன் அடிப்படையில் துறையினரே அந்த வழக்குகளுக்கு disposal கொடுக்கலாம்; கமிஷனரே disposal கொடுக்கலாம் என்று நாம் சொல்லிவிட்டோம் என்று சொன்னால், இன்னும் வேகமாக இந்த வழக்குகள் பைசல் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது; அரசாங்கத்திற்கும் அதிகமான அளவுக்கு பணம் வரும். அப்படி இல்லாமல், வெறும் சமாதானம் மட்டும் பண்ணிக்கொண்டு இருந்தீர்கள் என்றால், கடந்த காலத்தில் கல்லறையிலும் சில்லறைகள் தேடினார்களே அரசியல் நீலாம்பரிகள், அவர்கள் இன்று வெற்றி பெற்றுவிடலாம் என்று கண்ணாடியில் பார்த்து கனவு காணுகின்றார்கள்; அந்தமாதிரிதான் இதுவும் போய்விடும். நீங்கள் சமாதான் திட்டம் போட்டு, ரூபாய் வரும் வரும் என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள்; அந்த நீலாம்பரியினுடைய கனவு மாதிரிதான் இது கண்ணாடியிலே, அந்த பணம் இருக்குமேயொழிய, கைக்கு வராது; அவர்களுக்கும் வெற்றி கண்ணாடியிலே இருக்கும்; அவர்களுடைய கைக்கு கிடைக்கப் போவதில்லை. ஆகவே, இவைகளை எல்லாம் சீராய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சொக்கர்] [1999 மே 18

இப்போது எங்களுடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அழகிரி அவர்களுடைய கோரிக்கை. தமிழ் நாட்காட்டிக்கு வரி குறைக்க வேண்டும் என்பதில் 4 சதவீதமாக நீங்கள் வரியைக் குறைத்து இருக்கிறீர்கள்; ஆனால், அதற்கு முற்றிலுமாக வரி விலக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்கின்றார்கள்; அவர்களுடைய கோரிக்கையை நான் உங்கள் முன் சமர்பிக்கின்றேன்.

இன்னொரு burning issue இன்றைக்கு என்னவென்று சொன்னால், கோயம்புத்தூரில் தொழிலாளர்கள் எல்லாம் இரயில் மறியல் பண்ணப் போவதாக ஒரு அதிர்ச்சி தரும் செய்தி இருக்கின்றது; அது எங்கள் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய செய்தி. அங்கே தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, இரயில் மறியல் செய்யப் போகின்றார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய பாதிப்புக்கு நிவாரணம் செய்ய வேண்டும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விற்பனை வரி பற்றியதா?

**திரு. ஆர். சொக்கர்:** Sales Tax பற்றித்தான் பேசுகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Sales Tax பற்றியதா ?

**திரு. ஆர். சொக்கர்:** ஆமாம். அந்தத் தொழிலாளர்களுடைய பாதிப்பு நீங்க வேண்டுமென்றால், அவர்கள் பணிபுரியக்கூடிய அந்த நிறுவனத்திற்கு, விற்பனை வரிச் சலுகை கொடுத்தீர்கள் என்றால், அந்தத் தொழிலாளர்களுடைய பாதிப்பு நீங்கும் என்பது என்னுடைய பணிவான கருத்து. அதையும் நீங்கள் செய்து தர வேண்டுமென்று கூறி, மொத்தத்தில் இந்த அரசு எடுக்கக்கூடிய முயற்சிகளை வரவேற்று அந்த 'appeal'-லிலே 25 சதவீதம் கட்டித்தான் பண்ண வேண்டும் என்கிற அந்த ஒரு சட்டத்தைத் தவிர அனைத்துச் சட்டங்களையும் நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விற்பனை வரியிலே சலுகை கொடுத்தால் தொழிலாளர்கள் இன்றைய இரயில் நிறுத்தப் போராட்டத்தை நிறுத்திவிடுவார்களா? அதற்கு திரு. சொக்கர் அவர்கள் உத்தரவாதம் அளிக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1999 மே 18]

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி எங்களுடைய துணைத் தலைவர் திரு. V.K.L. பகுதி. அந்த உத்தரவாதத்தை அவர்தான் அளிக்க வேண்டும். அவர் சொல்லச் சொன்னதால் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு. (குறுக்கீடு)

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே என்னைப் பேச அனுமதித்தமைக்காக நன்றி. விற்பனை வரி மட்டுமல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதியே கொடுக்கவில்லை. கடைசி நாளில் அனைவரும் எழுந்து நிற்கிறீர்கள். நான் திரு. அப்பாவு அவர்களை அழைத்துவிட்டேன். திரு. வி.கே. லட்சுமணன், சொல்லுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** விற்பனை வரி மட்டுமல்ல. தொழிலாளர்கள் மின்சாரக் கட்டணத்திலேயும் கொஞ்சம் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திலே இதை அவர்கள் ஆராய்ந்து இதில் ஒரு நல்ல முடிவை எடுத்திருப்பதாக நான் அறிகிறேன். ஆகையினால், மைய அரசும் சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. மைய அரசு, இறக்குமதி ஆகிற பஞ்சுக்கு சுங்க வரியைக் குறைக்க வேண்டும். ஏற்றுமதி ஆகிற நூலுக்கு கலால் வரியைக் குறைக்க வேண்டும். இவை இரண்டையும் செய்து மாநில அரசும் இந்த விற்பனை வரிச் சலுகையும், மின்சாரச் சலுகையும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குள்ள கவலையெல்லாம் மில்கள் தொடர்ந்து மூடப்பட்டால் அரசுக்கு வருகிற விற்பனை வரி அடியோடு குறைந்துபோய்விடும். அரசுக்கு வர வேண்டிய மின்சாரக் கட்டணம் அடியோடு குறைந்துபோய்விடும். ஆகையினால்தான் மேலும் மேலும் மில்கள் மூடப்படுகிறபோது, தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள், அரசாங்கமும் பாதிக்கப்படுகிறது என்பதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, இதை கர்நாடக அரசைப் போல தமிழக அரசும் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர். (குறுக்கீடு) திரு. கே. சுப்பராயன், சொல்லுங்கள்.

[1999 மே 18

**திரு. கே. சுப்பராயன்**: பேரவைத் தலைவர் அவர்களே, நானும் விதி 55-ன்கீழ் அறிக்கை கொடுத்திருந்தேன். கடைசி நாள் என்ற காரணத்தால் வரவில்லை. பிரச்சினையைப் பற்றி ஒரேயொரு கருத்துதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் இங்கே இரயில் மறியல் நடப்பது என்பது வெறும் விற்பனை வரிக்கு. அதேமாதிரி தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடிக்கு மட்டும் தீர்வு சொல்வதற்கு அல்ல, அதுவும் ஓர் அம்சம். ஆனால் மத்திய அரசு இதிலே செய்ய் வேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. பெரும்பகுதி மத்திய அரசு செய்வதை மாநில அரசும் நிர்ப்பந்திக்க வேண்டும். மாநில அரசு அளவில் செய்ய வேண்டிய சில பிரச்சினைகள் இதில் இருக்கின்றன. அவற்றைப் பற்றியும் முதலமைச்சர் பதில் அளிக்க வேண்டும். ஆகவே நெருக்கடியை தொழிலாளியின் தலையில் போட்டுவிடக் கூடாது என்பதுதான் நான் முக்கியமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது. முதலமைச்சர் அவர்களும் அன்றைக்கு அவர்களிடத்திலே எச்சரித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, இந்தப் பிரச்சினையிலே அவர்களை அழைத்துப் பேசியாவது ஏதாவது ஒரு வகையிலே தீர்வு காண்பதற்கு மாநில அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கோவையில் இருந்து அதிபர்கள், தொழிற்சங்கத்தினுடைய பிரதிநிதிகள், அரசு சார்பினர் ஆகியவர்கள் கொண்ட முத்தரப்புப் பேச்சு வார்த்தை, கலந்துரையாடல் கடந்த 2, 3 திங்களுக்கு முன்பு இதே கோட்டைப் பகுதியிலே, நாமக்கல்லார் மாளிகையிலே நீண்ட நேரம் நடைபெற்று, அப்போது பல கருத்துகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற சலுகைகள் மாநில அரசின் சார்பில் வழங்கப் பெற வேண்டும் என்று கேட்டபோது, நாங்கள் அவற்றை ஏற்கத் தயாராக இருக்கிறோம், ஆனால் அதிலே பெரும்பகுதிக்கு பொறுப்புடையது மத்திய அரசுதான், மத்திய அரசு அந்தக் கடமைகளைச் செய்ய வேண்டுமென்று அப்போதே எடுத்துக் கூறி அதுகுறித்து மத்திய அரசிற்கு மறுநாளே விரிவாக ஒரு கடிதமும் எழுதி இருக்கிறேன் அவர்களும் தங்களால் இயன்றதைச் செய்வதாகத்தான் சொன்னார்கள். ஆனால் இன்னும் அது நிறைவேறவில்லை.

மத்திய அரசு முன்வந்து, இருக்கின்ற பெரும் சுமையை அவர்கள் சமாளிப்பார்களேயானால் மாநில அரசு தன்னால் இயன்ற எல்லாவிதமான உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மத்திய அரசிற்கு முழுதும்





பொறுப்புடையது என்ற காரணத்தினாலேதான் தொழிலாளர்கள்கூட மத்திய அரசுக்குச் சொந்தமான இரயிலை நிறுத்துகின்ற போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அதிலே சட்டம் ஒழுங்கு, அமைதி கெடாத வகையிலே பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பை மாநில அரசு கொண்டிருக்கிறது.

பொதுவாக, இப்படிப்பட்ட போராட்டங்களில், அறவழிப் போராட்டங்களில்—வேண்டுமென்றே நடைபெறுகின்ற போராட்டங்கள் அல்ல, திட்டமிட்டு அரசுக்கு எதிராக நடத்த வேண்டுமென்று நடைபெறுகின்ற போராட்டங்கள் அல்ல—தங்களுடைய உரிமைகளுக்காக, சலுகைகளுக்காக நடைபெறுகின்ற போராட்டங்களில் அரசு கண்டிப்பாக நடந்துகொள்வதில்லை. அந்தநேரத்திலே சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காக சிலபேரைக் கைது செய்யவோ அல்லது அப்புறப்படுத்தவோ வேண்டியிருந்தாலும்கூட, உடனடியாக விடுதலை செய்துகொண்டு வருவதை இந்த நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்துகொண்டு வருகிறார்கள் என்பதையும் தெரிவித்து, எனவே மாநில அரசு தன்னால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொக்கர், நீங்கள் பேசி முடித்துவிட்டு, நான் அப்பாவு அவர்களைக் கூப்பிட்டு ஆகிவிட்டது. (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய கருணையான approach-க்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே விற்பனை வரித் துறையில் 7 பில்லில் பேசிவிட்டேன். 8-வது பில்லில் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். இந்த power ghani. நாட்டு செக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒவ்வொரு பேச்சுக்கும் இது எந்தெந்த பில் என்று சொல்லித்தான் பேசிக் கொண்டிருந்தீர்களா?

**திரு. ஆர். சொக்கர்:** இல்லை, மொத்தமாகச் சொல்லிவிட்டு, 7 பில் முடிந்து, இப்பொழுது கடைசியாக 8-வது பில். இதற்கு மேல் பேசமாட்டேன். தமிழகத்திலே Power ghani வைத்து, நாட்டு செக்கை வைத்து எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கின்றார்கள். 35 ஆண்டுகளுக்கும் மேலாக Village and Khadi

Industries-ல் பதிவு செய்துகொண்டதால், அவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து, வாங்கக்கூடிய மணிலா பயறுக்கும், உற்பத்தி செய்யக்கூடிய எண்ணெய்க்கும் வரி விலக்கு இருந்தது. இந்த வரிவிலக்குகூட அவர்களுக்கு quantity restriction உண்டு. ஒரு நாளைக்கு ஒரு மூட்டைக்கு மேல் மணிலா பயறை எண்ணெயாக convert பண்ணக்கூடாது. அதற்கு மேல் செய்தால், இந்தச் சலுகை கிடையாது. ஆனால் அந்தச் சலுகை கடந்த காலத்திலே, முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களால் பறிக்கப்பட்டுவிட்டது. 1994-ல் பறிக்கப்பட்டுவிட்டது. அந்தச் சலுகை நீக்கப்பட்டதற்கு அதிகாரிகள் என்ன காரணம் சொன்னார்கள் என்றால், 'இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சலுகையை வைத்து, பெரிய எண்ணெய் உற்பத்தியாளர்கள் வரி ஏய்ப்பைச் செய்துவிடுகிறார்கள்' என்று சொன்னார்கள். இந்தக் காரணம் ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம். ஒருசில இடங்களில் அந்தத் தவறு செய்திருப்பார்கள். அதற்காக அத்தனை பேரும் பாதிக்கக்கூடிய அளவிலே அந்த வரிச் சலுகையை திரும்பப் பெற்றது சரிதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், 'மூட்டைப் பூச்சியைக் கொல்வதற்கு குடிசைக்குத் தீ வைப்பதா' என்று சொன்ன அந்த உதாரணம் இதற்கும் முழுவதுமாகப் பொருந்தும். அதிலே பாவம் என்னவென்றால் கள்ளக்குறிச்சியிலே ஒரு சிறிய இடத்திலே செக்கு போட்டு, அங்கேயே எண்ணெய் உற்பத்தி செய்வதும், குடும்பமும் அங்கேயே தங்கி, சமையல் செய்வதும் அங்கேயே, வசிப்பதும் என்ற அளவிலே அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களெல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு demand issue செய்திருப்பதே, 45 ஆயிரம் ரூபாய்க்குத்தான்; இன்றைக்கு எல்லம் சேர்ந்து. அந்த 45 ஆயிரம் ரூபாயைக்கூட penalty முடியவில்லை. 10 ஆயிரம் ரூபாயைக்கூட அவர்களால் கட்ட பார்க்காதவர்கள் self-employment என்ற முறையில் மொத்தமாகப் இருக்கின்றவர்கள். இதுதான் பிரச்சினை. அவர்கள் வந்துவிட்டது. எப்படி அவர்களை இப்பொழுது காப்பாற்றுவது என்று சொன்னால், G.O.973, dated 27th May 1967-ல் என்ன சொல்லியிருக்கிறது என்றால், ஏதோ ஒரு காரணத்திற்காகத் தெரியாமல, வரியை வசூலிக்காமல் இருந்துவிட்டார்கள் என்றால், அவர்களுக்கு துறை waiver consider பண்ணலாம் என்று அந்த ஆணையில் இருக்கிறது. அந்த ஆணையைப் பயன்படுத்திப் பலருக்குச் சலுகையைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே அவர்களுடைய கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கை பரிதாபமான கோரிக்கை என்பதால், இதை



தயவுசெய்து, அருள்கூர்ந்து அன்புடன் பரிசீலித்து, நிச்சயமாக நிவாரணம் வழங்க வேண்டுமென்ற பணிவான கோரிக்கையோடு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வருவாயில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி இந்த விற்பனை வரி மூலம் இந்த அரசுக்கு வருவாய் கிடைக்கிறது. கிட்டத்தட்ட 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாயை ஈட்டி இருக்கிறது. ஆனாலும்கூட, இன்னும் நிலுவையில் இருக்கிற பணம் சுமார் 1,400 கோடிக்கு மேல் வசூலாகாமல் இருக்கின்றது. ஆனால் முறைப்படி அதிகாரிகள் மனது வைத்து வசூல் செய்தால், கிட்டத்தட்ட பாதிக்கு மேல் அதாவது 7,000 கோடி ரூபாய் என்றால், 10,000 கோடி, 15,000 கோடி ரூபாய்கூட நியாயமான முறையில் வசூல் செய்யலாம். எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

குறிப்பாக என்ன நடக்கிறது என்றால், வருமான வரி என்று சொன்னாலே, ஒரு கடையில், ஆண்டுதோறும் தீபாவளி நேரத்தில் 10,000 ரூபாய் தந்துவிடுங்கள் என்று சொல்லி, குறிப்பாக சில கடைகளை எடுத்திருந்தார்கள். அந்தக் கடைகளுக்குப் போகவே மாட்டார்கள். அவர்கள் சொல்வது, காட்டுவதுதான் கணக்கு. மற்ற கடைகளுக்குத் திடீரென்று ஒருநாள் போவார்கள். வேகமாக 4, 5 ஜீப்பில் ஓடிப் போய் இறங்கி, அங்குள்ள மேசை டிராயரைத் திறந்து, பில்லை எடுத்துக் கொண்டு ஓடி வந்து, ஏதோ, இந்த நாட்டினுடைய இரகசியத்தைப் பாகிஸ்தானுக்குக் கடத்திய மிகப் பெரிய குற்றவாளி மாதிரி அப்படியே பிடித்துக் கொண்டு போய், எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அவர்களும் அதற்கு ஆள் வைத்திருக்கிறார்கள். அதிலே அலுவலக உதவியாளராக வேலை பார்க்கிறவர்கள், 'ஐயாவுக்கு இப்பொழுது நல்ல mood இருக்கிறது, நீங்கள் இப்பொழுது போனால் சரியாக இருக்கும் அல்லது காலையில் வாருங்கள், வீட்டிலே அம்மாவிடம் சொல்லவேண்டும்' என்று கூப்பிட்டுக்கொண்டுபோய், அதற்கு ஒரு rate பேசி முடித்து...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அப்பாவு அவர்கள் வியாபாரிகள் கடுமையாக மோசடி செய்கிறார்கள், ஏமாற்றுகிறார்கள், அதிகாரிகளை விலைக்கு வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதுதானே அவருடைய குற்றச்சாட்டு?

[1999 மே 18

முற்பகல் 10-30

**திரு. மு. அப்பாவு:** அப்படிச் சொல்லவில்லை. நடைமுறையில் வருமான வரித் துறையில் அதிகாரிகளாக இருக்கின்றவர்களைப் பார்த்தால் 5 வருடங்கள் அல்லது 3 வருடங்களுக்குள் அரசியல்வாதிகளை எல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு ஆட்சியில் இருப்பவர்களையெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு மிகப் பெரிய வீடுகளைக் கட்டிவிடுகிறார்கள். அவர்களிடத்திலே பணிபுரியும் சாதாரண பியூன்கூட அந்த அலுவலகத்தில் மினரல் வாட்டர் பயன்படுத்துகிறார். கிராம மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியவில்லை. ஆனால் அந்த அலுவலகத்தில் மினரல் வாட்டர் இருக்கிறது. இந்தச் சட்டத்தை இதே மாதிரி continue செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதைக்கூட மாற்றலாம். இந்த வருடம் மொத்தம் total ஆக எவ்வளவு கட்டியிருக்கிறார் என்று பார்த்து, ஆயிரம் ரூபாய் வரி கட்டியிருந்தால், அடுத்த வருடம் இரண்டாயிரம் ரூபாய் என்று போட்டு, consolidated-ஆக இவ்வளவு தொகை கட்டிவிடுங்கள் என்று சொல்லலாம். அதன் மூலமாக 10 ஆயிரம் கோடி ரூபாய், 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கான வருமானத்தை இந்த வருமான வரியில் பெற்றுவிடலாம். அந்த அளவுக்கு வருமானம் வரக்கூடிய மிக முக்கியமான துறையாகும்.

Practical-ஆக நான் சொல்லுகிறேன். ஒரு சாதாரண விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே செங்கலுக்கு 4 சதவிகித வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அது சட்டத்திலே அப்படியே இருக்கிறது. அதைப் படித்த ஒரு அதிகாரிக்குச் சின்ன சந்தேகம் வந்துவிட்டது. நாங்குனேரியில் இருந்த அதிகாரி 8 சதவிகித வரி என்று மேலே இருந்து சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லி, ஒரு தபால் எழுதி 8 சதவிகிதம் கொடுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். 8 சதவிகிதம் எங்கே? 4 சதவிகிதம் எங்கே? ஒரு மாவட்டத்தில் 4 சதவிகிதம், ஒரு மாவட்டத்தில் 8 சதவிகிதம் என்று இருப்பதைப் பற்றி அறிவதற்காக கோட்டைக்கு வந்து, இங்கே கமிஷனரைப் பார்த்ததில் அவர் எனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார். பிறகு செயலாளரைப் பார்த்தோம், ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். அங்கே போன இடத்திலே வருமான வரித் துறையிலே Same category-யிலேதான் இருந்தது. அவர்கள் உடனே சில விஷயங்கள் குறித்து முடிவெடுக்க முடியாததால் இந்தத் தேதியிலிருந்து 4 சதவிகிதம் என்று சொல்லிவிட்டார்கள். என்ன சார், சட்டத்திலே 4 சதவிகிதம் என்றுதானே இருக்கிறது,



1999 மே 18] [திரு. மு. அப்பாவு]

அதை ஏன் வாங்க மறுக்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்குப் பிறகு திரும்ப ஒரு முறை அழைத்து Cabinet-ல் தான் இதை முடிவு செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். 4 சதவிகித வரி இருந்து அதை ஒழுங்காகக் கட்டிக் கொண்டிருந்த இந்த விவகாரத்தில் 8 சதவிகிதம் என்று சொல்லி image-லேயே அதை மேலே கொண்டுவந்துவிட்டார்கள். ஓடு வாங்குவது யார் என்று தெரியும். சாதாரண கூலிக்காரர்கள்தான் ஓடுகள் வாங்குகிறார்கள். அந்த ஓடுகளை வைத்திருக்கின்ற முதலாளிமார்கள் அந்த வரியைக் கட்டப் போகிறார்களா என்றால் ஒருவரும் வரி கட்டுவது இல்லை. சாதாரண ஏழை, பாழை என்ற அளவில் வருகின்றவர்களிடம்தான் 10 சதவிகிதம், 20 சதவிகிதம் என்று வரி இருந்தாலும் வாங்க வேண்டியிருக்கிறது. 1989-ல் நீங்கள் ஆட்சி செய்தபோது 2 சதவிகிதம் என்று வரி இருந்தது. ஓடு சாதாரண மக்கள் வாங்கக்கூடியது. அதற்கு 4 சதவிகித வரி என்று பழைய ஆட்சியில் மாற்றிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அந்த ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்று சொன்னால் 4 சதவிகித வரியை 2 சதவிகிதம் என்று மாற்ற வேண்டும். ஓடு வாங்குவதும், செங்கல் வாங்குவதும் சாதாரண மக்கள்தான். ஆகவே இந்த வரியைக் குறைக்க வேண்டும். ஏனென்றால் செங்கல் உற்பத்தியாளர்களுக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. முதலமைச்சர் இருப்பதால் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் குளத்தை ஆழப்படுத்துவதற்காக மண்ணை அள்ளிப்போடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அங்கே செங்கலுக்கு மண் அள்ளுவதால் குளம் நல்ல முறையில் தோண்டப்படுகிறது. ஆனால் சாலையிலே வரும்போது Revenue அதிகாரிகள் வண்டியைப் பிடித்துவிட்டால் 15 ஆயிரம் ரூபாய் Penalty போடுகிறார்கள். mines office-க்கு போனால் அதற்குரிய பில்லும் கொடுக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அதைவிட consodidated-ஆக வருடத்திற்கு ஒரு செங்கல்மால் வைத்து இருப்பவர்கள், ஓடு வைத்திருப்பவர்கள் மண்ணுக்கு இவ்வளவு தொகை கட்டுங்கள் என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாததால் அரசுக்கு வரக்கூடிய வருமானமும் வரவில்லை. அதனால் மண்ணை எடுக்கும்போது செங்கல்மால் உரிமையாளர்கள், ஓட்டாச்சி உரிமையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்தச் சட்டத்தில், முன்பு ஆயிரம் ரூபாய் அபராதம் என்று இருந்தது—Permit இல்லாமல் மண் எடுத்துப் போகக்கூடிய செங்கல்மால், ஓட்டாச்சி உரிமையாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் என்று இருந்தது —இப்போது 15 ஆயிரம் ரூபாய் அபராதம் என்று போடப்பட்டு,

[திரு. மு. அப்பாவு] [1999 மே 18

அந்த டிராக்டர், லாரியைப் பிடித்து அப்படியே வைத்துவிடுகிறார்கள். இரண்டு மாதங்கள் வரை வண்டியை ரிலீஸ் செய்யக்கூடாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆற்றுப்படுகையிலே மணல் எடுத்துக்கொண்டு போகக்கூடியவர்களுக்கு, திருட்டுத்தனமாக மணல் எடுத்துக்கொண்டு போகக்கூடியவர்களுக்கு அந்த நடவடிக்கை சரி. ஆனால் மண் எடுத்து மண் பாண்டங்கள் செய்கின்றவர்கள், செங்கல், ஓடு தயாரித்து இலட்சக்கணக்கானபேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற அந்த செங்கல், ஓடு உற்பத்தி செய்கின்றவர்களுக்கு வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் அல்லது 4 சதவிகிதம் என்று நீங்கள் அறிவித்துவிட வேண்டும். ஏற்கெனவே 8 சதவிகிதம் என்று வாங்கி இருப்பதை திரும்பவும் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் சரி என்று சொல்லி, Secretary அனுப்பிவிட்டார்கள். Cabinet-ல் வைத்துதான் முடிவு எடுக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். இதுவரையில் கணக்கு முடிக்கப்படவில்லை. Income Tax Clearance, Sales Tax Clearance வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஒப்பந்தம் வாங்கி வாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அங்கே கொடுக்க முடியவில்லை. சாதாரண விஷயத்தைக்கூட அதிகாரிகள் சிக்கலாக்கி விடவேண்டாம் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். செங்கல், ஓடு உரிமையாளர்கள் உற்பத்தி செய்வதற்காக மண் எடுக்கின்ற குளங்களில் எல்லாம் மண் எடுக்கப்படுவதால் குளங்கள் ஆழப்படுத்தப்படுகின்றன. பொதுப்பணித் துறை குளங்கள் மற்றும் உள்ள இதர குளங்களில் எந்தெந்தக் குளங்களில் மண் எடுக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டு, அந்தக் குளங்களில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கல், ஓடு பற்றி சொல்லுகிறார். அது இரண்டு வகையாகச் செய்யப்படுகிறது. கையால் செய்யப்படுகின்ற செங்கல், இயந்திரத்தின் மூலமாகச் செய்யப்படுகின்ற செங்கல் என்று இருக்கிறது. இயந்திரத்தின் மூலமாகச் செய்யப்படுகின்ற செங்கலுக்குத்தான் வரி 8 சதவிகிதம் என்று போடப்பட்டு, பிறகு 4 சதவிகிதமாக கலைஞர் அவர்களுடைய அரசு குறைத்திருக்கிறது. எனவே, ஏற்கெனவே 8 சதவிகிதம் என்று இருந்ததால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கேட்கிறார்கள். கேட்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. இப்போது



1999 மே 18] [திரு. ஆலடி அருணா]

இருப்பது நான்கு சதவிகிதம்தான். அந்த நான்கு சதவிகிதம்கூட பல இடங்களில் Mechanised tiles, Mechanised செங்களுக்குத்தான். இது அவருடைய வட்டாரத்திலே, வள்ளியூர் வட்டாரத்திலேயும் இருக்கிறது. எங்கள் பாவூர்சத்திரம் வட்டாரத்திலேயும் இருக்கிறது. அது நன்றாகத் தெரியும். அவருக்கும் அந்தத் தொழிலினுடைய nature தெரியும். எனக்கும் அந்தத் தொழிலினுடைய nature தெரியும்.

முற்பகல் 10-35

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விரைவில் பேசி முடித்துவிடுகிறேன். நான் பேசி முடித்துவிட்டால் பிறகு சொக்கர் அவர்கள்தானே முழுவதும் பேச வேண்டும். Sales Tax என்றாலே சொக்கர் அவர்கள்தானே. ஆகவே, செங்கல், ஓடுகள் தயாரிப்பதற்காக எடுக்கப்படும் மண்ணிற்கு, permit இல்லாமல் வந்தால், 15,000 ரூபாய் fine போடுகிறார்கள். இரண்டு மாதங்களுக்கு அந்த வண்டியை எடுக்க முடிவதில்லை. எடுத்தாலும், அந்த வண்டியைப் பயன்படுத்த முடியாது. அந்த செங்கல்மால் வைத்திருப்பவர்களுடைய வீட்டிலே போய்ப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. அவர்களுடைய மனைவியின் காதிலே, கழுத்திலே கம்மல், செயின், ஒன்றுகூடக் கிடையாது. அவ்வளவு பரிதாபமாக, due கூடக் கட்டி இருக்க மாட்டார்கள். ஆகவே, அந்த tractor permit இல்லாமல் வந்தால், பழைய முறை, நம்முடைய முறையிலே ஆயிரம் ரூபாய் spot fine போடலாம். இது என்ன பெரிய குற்றமா? இந்த நாட்டு இரகசியத்தை அயல்நாட்டிற்குக் கடத்திய மிகப் பெரிய குற்றமா அது? மண் எடுக்கிறார்கள். அது குளத்திற்கு நல்லது. ஆகவே, அந்த அடிப்படையிலே அவர்களுக்குக் கருணையோடு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், சொக்கர் அண்ணன், உங்களை மாண்புமிகு சி.எம். கூப்பிடுகிறார்கள். அதைச் சொல்லுங்கள். சி.எம். ஐயா கூப்பிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரைப் பேச அனுமதிக்க வேண்டும் என்பதை முடிவு செய்வது நாங்கள்தான், நீங்கள் பேசுங்கள்.

[1999 மே 18

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரியில், consolidated taxes....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்குமேலே subject இல்லை என்பதற்காக அவரைக் கூப்பிடுகிறீர்களா?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இல்லை. இன்னும் இருக்கிறது. அடுத்து, ஒரு ஊரிலேபோய் ஹோட்டலிலே சாப்பிட்டுவிட்டு, இரவு தங்குகிறோம் என்றால், அதற்கு வரியா கட்டவேண்டும்? ஒரு ஹோட்டலுக்குப் போனால், 500 ரூபாய் ரூம் வாடகை, வரி 50 ரூபாய். ஒரு ஊரிலேபோய் ஹோட்டலிலே நாம் மனைவி, பிள்ளைகளோடு நான்கு நாட்கள் சாப்பிட்டுவிட்டுத் தங்கினால், இந்த நாட்டிலே நீங்கள் வரி கேட்கிறீர்கள். இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தங்கம். வெளி மாநிலங்களிலே தங்கத்திற்கு வரி குறைவாக இருந்ததனாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த வரியைக் குறைத்தீர்கள். அதேமாதிரி தமிழ்நாட்டிலே சிறிய Paint உற்பத்தியாளர்களும் இருக்கிறார்கள். பெரிய paint உற்பத்தியாளர்களும், Asian paints மாதிரியும் பெரிய முதலாளிகளும் இருக்கிறார்கள். இந்த சிறிய paint தயாரிப்பாளர்களுக்கும் 16 சதவிகிதம் வரி. பெரிய paint தயாரிப்பாளர்களுக்கும் 16 சதவிகிதம் வரி. சிறிய paint தயாரிப்பாளர்கள் முதல்வர் அவர்களையெல்லாம் வந்து பார்த்தார்கள். அப்படிப் பார்க்க வந்தபோது, Photo எடுத்த பாக்கியம்தான் கிடைத்தது. வரியைக் குறைத்த மாதிரித் தெரியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த சிறுதொழில் உற்பத்தியாளர்களுக்கு, அந்த paint தயாரிப்பாளர்களுக்குத் தயவு செய்து வரியை......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். 10 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதன்மீது, Point of Order. கடந்த ஆண்டே, சட்டமுன்வடிவின் மீது இந்த bricks and tiles-க்கு எவ்வளவு tax என்பதற்கு நீண்ட விவாதம் நடந்தது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்கூட இருந்தீர்கள். நீங்கள் என்ன



1999 மே 18] [திரு. ஆர் சொக்கர்]

சொன்னீர்களென்றால், "நீங்கள் சொல்வதையெல்லாம் சொல்லி விட்டீர்கள்; அமைச்சர் சொல்ல வேண்டியதைப் பூராவும் சொல்லிமுடித்துவிட்டார், எனவே, உட்காருங்கள்" என்று சொன்னீர்கள். அந்த அவைக் குறிப்பை தயவுசெய்து, அருள்கூர்ந்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் திரும்ப எடுத்துப் படித்தாலே போதுமானது. ஏனென்றால், அதற்கு அதிக நேரம் எடுக்கப்போவதில்லை. I Schedule, Part-B. Entry-9-லே என்ன இருக்கிறது என்றால். Bricks including என்று போட்டு. Country bricks and country tiles made out of baked clay and stoneware, அப்படி இருந்தது என்றால் 4 சதவிகிதம் என்று இருக்கிறது. இதிலே எந்த இடத்திலேயுமே கையினால் செய்யப்பட்டதா; இயந்திரத்தினால் செய்யப்பட்டதா என்று இல்லை. இப்படி ஒரு சட்டம் போட்டுவிட்டால், என்ன பண்ணுவார்களென்றால், சாதாரண Common man, வந்து country bricks, country tiles தயார் பண்ணுவது, கையினால் தயார் பண்ணுவதும் இருக்கும் இயந்திரத்தினால் தயார் பண்ணுவதும் இருக்கும். ஆனால், 4 சதவிகிதம்தான் இருக்கிறது. அப்படி இருந்தது. தெளிவான சட்டத்தைப்போட்டுவிட்டு, அதற்கு நான்கு சதவிகிதமா, எட்டு சதவிகிதமா என்று சொன்னீர்களென்றால், அவர்கள் வசூல் பண்ணிவிடுவார்கள். 4 சதவிகிதம் என்று போட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக நான்கு சதவிகிதம் என்று ஒத்துக்கொண்டு, அதிகாரிகள் கணக்கு முடித்திருக்கிறார்கள். இன்றைக்குத் திடீரென்று ஐந்து வருடம் கழித்து, இல்லை, இல்லை......

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கு சதவிகிதம் என்று கொண்டு வந்ததே, 12-8-1998-லேதான், அதற்கு முன்பு இருந்தது 8 சதவிகிதம்.

**திரு. ஆர். சொக்கர்:** 1998-ல் தான் நான்கு சதவிகிதம் என்று கொண்டு வந்தோம். இதிலே குழப்பம் இருந்ததனாலே, நான்கு சதவிகிதம் என்று நீங்கள் சொன்னீர்கள். நான்கு சதவிகிதம் என்று சொன்னதும் என்ன சொன்னீர்களென்றால், ஏற்கெனவே நான்கு சதவிகிதம் என்று......

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே குழப்பம் ஒன்றும் இல்லை. குழப்பம் உண்டாக்கியதனாலே தான் குழப்பம் ஏற்பட்டது. ஏற்கெனவே 8 சதவிகிதம் என்று சொல்லி இருந்தோம். அதற்குப் பிறகு 4 சதவிகிதம் என்று அரசு குறைத்தது அவ்வளவுதான்.

[1999 மே 18

முற்பகல் 10-40

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருபோதும் அது 8% என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. ஏற்கெனவே 2 சதவிகிதமாக இருந்தது, இப்போது 4 சதவிகிதமாக இருக்கிறது. முன்பு ஓட்டிற்கு மட்டும்தான் வரி இருந்தது. இப்போது செங்கலுக்கும் சேர்த்து வரியாக்கி இருக்கிறோம். Clay, அதாவது களிமண்ணால் செய்யப்படுகின்ற செங்கல், ஓடுகளுக்கு 4 சதவிகித வரி. அதுதான் 1996-97 வரைக்கும் இருந்தது. 1997-லே நாங்குனேரியில் ஒரு ஏ.சி.டி.ஓ. இந்த விவகாரத்தை create பண்ணி, நாங்குனேரியில் இருக்கக்கூடிய மில்களிலிருந்து ஏற்றுமதி பண்ணுவதால், அந்த Sales Tax குறைந்ததனால் இப்படி ஒரு விவகாரத்தை அவர் create பண்ணி, அது இந்த அளவுக்கு வந்து இருக்கிறது. இதிலே ஒரு விஷயமும் இல்லை. 4 சதவிகிதம் என்று எல்லா இடங்களிலும் அடிப்படையாக, அருமையாக இருக்கிறது. ஆகவே அந்த அளவில் செய்ய வேண்டும் என்று கேட்டு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. சி. வேலாயுதன். (குறுக்கீடு) திரு. சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** Minister பேசினார்கள் என்றால் உட்கார வேண்டியதாக இருக்கிறது. கண்டிப்பாக உட்கார வேண்டும். அடுத்து நீங்கள் வேறு உறுப்பினருக்கு வாய்ப்பு கொடுத்தீர்களானால் அதையும் கேட்க வேண்டும். நான் சொல்ல வேண்டியதை முழுவதும் சொல்லவில்லை. இதில் நீண்ட விவரம் சொல்லப்போவதில்லை. நான் மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒரு வேண்டுகோளாகச் சொல்கிறேன். இதுவரையிலும், போன வருடத்தில் நடந்த விவாதம் அதுபற்றிய கோப்பு இப்போது இவ்வளவு சேர்ந்துவிட்டது. அந்தக் கோப்பை நீங்கள் பார்த்து, நீங்கள் என்ன முடிவு எடுக்கிறீர்களோ, மாண்புமிகு முதலமைச்சர் என்ன முடிவு எடுக்கிறார்களோ, அதற்கு முழுவதுமாகக் கட்டுப்பட்டு நாங்கள் இதிலே பேசாமல் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.



1999 மே 18]

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் பேசும்போது செங்கல் தொழிலாளிகள் மிகுந்த ஏழைகள் என்று பேசினார்கள். உண்மையிலேயே அந்தச் செங்கலை, ஓட்டை வாங்குபவர்கள் மட்டும் ஏழைகள் அல்ல, அந்தத் தொழிலைச் செய்யக்கூடியவர்களைப் பார்த்தோம் என்று சொன்னால் அவலமான நிலை. ஆக நாம் போடக்கூடிய இந்த வரியால் பாதிக்கப்படுவது அந்த ஏழைத் தொழிலாளர்கள், இதனால் வயிறு கழுவக்கூடிய தொழிலாளர்கள். எனவே அதற்கு இருக்கக்கூடிய அந்த வரியைக் கண்டிப்பாகக் குறைக்கவேண்டும். அதோடு விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடியது டிராக்டர். நம்முடைய அரசாங்கம் விவசாய மறுமலர்ச்சியைக் கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்படுகிறது. டிராக்டருக்குத் தமிழகத்தில் இறக்குமதி வரி, அதாவது நுழைவு வரி என்று 6% விதிக்கப்படுகிறது. இந்த 6% டிராக்டருக்குண்டான வரியைக் குறைத்தால் விவசாயத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தது மாதிரி அமையும். எனவே அரசாங்கம் இந்த இறக்குமதி வரியை, 6 சதவிகிதத்தைக் குறைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு குளங்களில் இருந்து மண் எடுக்கக்கூடிய விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான குளங்கள் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு மண்ணால் நிரம்பிவிட்டன. அரசாங்கத்தால் அத்தனை குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக முடியாத காரியம். பல குளங்களில் டிராக்டரே உள்ளே போகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட குளங்களைக் கண்டறிந்து அரசாங்கம் அனுமதித்தால் போதுமானது. மண் எடுக்க அனுமதித்தால் இந்த செங்கல், ஓடு, மண்பாண்டங்கள் இவைகளுக்கு மண் எடுக்கக்கூடியவர்கள் அந்தக் குளங்களை ஆழப்படுத்துவதனால் குளத்தினுடைய கொள்ளளவு அதிகமாகிறது. இதன்மூலம் நிலத்தடி நீர் உயருகிறது. வறட்சிக் காலங்களில் அதிகமான பாதிப்பு வராது.

அதோடு அரசுக்கு ஒரு வேண்டுகோளை வைத்து அமைகிறேன். வரக்கூடிய ஜூன் 1 ஆம் தேதி பள்ளிக்கூடங்கள் திறப்பதாக அறிவித்திருக்கிறோம். ஆரம்பப்பள்ளி மாணவர்கள் கத்திரி வெயில் என்று சொல்கிறார்களே, இந்த வெயில் காலத்தில் பள்ளிக்கூடங்களுக்குப் போகும்போது சிரமப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனால் நோய்நொடிகள்கூட வரலாம் அதாவது எனக்கு அனுபவம், சின்னக் குழந்தைகள், அதாவது என்னுடைய தம்பி

[திரு. சி. வேலாயுதன்] [1999 மே 18

மகளுக்கு எல்லாம் கூட இந்த வெயில் காலத்தில் உடல் முழுவதும் பொக்காளம் என்று சொல்வார்கள், இந்த பரு போன்ற நிலை வந்து இருக்கிறது. எனவே குறைந்தபட்சம் அந்த ஆரம்பப்பள்ளிகளை மட்டுமாவது ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் கழித்து திறப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரிச் சட்டத்தின் மீது கருத்து கூறுவதற்கு அனுமதி தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் சொன்னதைப்போல, இந்த அரசு பல பொருட்களுக்கு வரிச் சலுகைகளை எல்லாம் அளித்திருக்கின்றன. இழப்புகளை நிவர்த்தி செய்து, மிகத் திறமையோடு இந்த வரிவிதிப்புகளை எல்லாம் விதித்து, எதற்கெல்லாம் வரி அதிகமாகப் போடலாமோ அதற்கெல்லாம் வரியும் போட்டு, இப்போது தன்னுடைய வருவாயைப் பெருக்கி இருப்பதற்காகப் பாராட்டுகிறோம். அந்த வகையிலே, கேளிக்கை வரியின்கீழ், ஆடம்பர வரியின்கீழ் சிகரெட்டுகளுக்கு, பான் மசாலாவிற்கெல்லாம், வரி போட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இந்த வரி போட்டிருப்பதை இன்னும் அதிகரிக்கலாம். ஏனென்று சொன்னால், அதனால் உடல் தீங்குகளைத் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கொள்ளும்போது அவர்களுக்கு அந்த வாய்ப்பினை மறுக்கின்ற வகையிலே சிகரெட்டுகளுக்கும், பான் மசாலாவிற்கெல்லாம் வரியை அதிகமாகப் போடலாம். அதோடு மட்டுமல்ல, கேரளாவில் இன்றைக்குப் பான்மசாலாவை சுத்தமாகத் தடை செய்திருக்கிறார்கள். எந்த ஒரு இடத்திலும் பான்பராக் போன்றவை விற்கப்படவில்லை. அதுபோன்று நம்முடைய தமிழகத்திலே பான்பராக் போன்றவைகளை நிச்சயமாகத் தடை செய்யலாம். ஏனென்றால் அதன் மூலமாக இப்போது கல்லீரல் கூட வீணாகிவருகிறது என்று மருத்துவ அறிக்கைகள் எல்லாம் சொல்கின்றன. எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதேபோல், விற்பனை வரி சம்பந்தப்பட்ட தகராறுகளைச் சரிசெய்து முடிப்பதற்கு குறிப்பிட்ட கால அவகாசத்தைக் கொடுத்து, அந்த அப்பீலை முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1999 மே 18] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

முற்பகல் 10-45

அதேபோல், மின்செக்கு விவகாரத்திலே அந்த மின்செக்கு வைத்திருப்பவர்கள் நம்முடைய தமிழகத்திலே சுமார் 6 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். முதலில் அவர்கள் காதி கிராமத் துறையின் கீழ் இவ்வளவு காலம் இருந்தார்கள். அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வரிவிலக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்தது. இப்போது வரி விதிக்கப்பட்டு இருப்பதால், அந்தத் தொழில் நசிந்து வருகிறது. 6 ஆயிரம் குடும்பங்கள், கிட்டத்தட்ட 10 அடிக்கு 10 அடி என்ற சதுர அடியிலே உள்ள இடத்திலே அவர்களுடைய மெஷினை வைத்துக்கொண்டு, எலெக்ட்ரிக் மோட்டாரை ஓட்டிக் கொண்டு, ஒரு நாளைக்கு ஒரு மூட்டை கடலையை ஆட்டி, அதிலே எண்ணெய் எடுத்து விற்பனை செய்கிறார்கள். எனவே, விற்பனை வரியிலிருந்து மீண்டும் அவர்களுக்கு அந்த வரிவிலக்குச் சலுகையை அளிக்க வேண்டும். அதோடு ஒரு மூட்டை என்பதை ஒன்றரை மூட்டையாக உயர்த்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கள்ளக்குறிச்சியிலே விற்பனை வரியைக் கட்டாதவர்கள்மீது செப்டம்பர் 15 ஆம் தேதியிலிருந்து ஜப்தி நடவடிக்கைக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே, அரசு தயவுசெய்து — அவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகள்; அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் — அவர்கள்மீது கருணை வைத்து, அந்த ஜப்தி நடவடிக்கையை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? உங்கள் கட்சியில், மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர் பேசினார்கள். திரு. மோகன் கந்தசாமி அவர்களும் இப்போது கேட்கிறார்கள். நீங்களும் கேட்கிறீர்கள். இரண்டு பேர்களிலே யாராவது ஒருவர் கேளுங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் கிடையாது. யாராவது ஒருவர் கேளுங்கள். நீங்களா? அவரா? இரண்டு பேர்களிலே யாராவது ஒருவர் கேளுங்கள். நீங்களா? அவரா?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம்தான். வேறொன்றும் இல்லை. விவசாயிகளுடைய விசைத் தெளிப்பானுக்கு அமைச்சர் அவர்கள் வரியைக் குறைத்திருக்கிறார்கள். முதலில் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இதிலே ஒரு சின்னச் சிக்கல். அந்த விசைத் தெளிப்பானைத் தமிழகத்திலே ஒரே ஒரு நபர், அதுவும் ஒரு விவசாயிதான் தயாரித்துக் கொண்டிருக்கிறார். வெளி மாநிலங்களிலே அதற்கு விற்பனை வரியே இல்லை. ஆகவே, போட்டிருக்கிற இந்த 4 சதவிகிதத்தையும் குறைத்துவிட்டீர்கள் என்றால், வெளி மாநிலங்களுக்கும் நம்முடைய மாநிலத்திலே இருந்து கொண்டுபோய் அதை விற்பதற்குச் சௌகர்யமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன், கடந்த முறை நம்முடைய திரு. சுப்பராயன் அவர்களுடைய பெரிய முயற்சியோடு, நானும் சேர்ந்து கேட்டதற்கு, பனியனுக்கு விற்பனை வரிச் சலுகையை அளித்தீர்கள். ஆனால் அதற்கான ஆணையைப் போடுகிறபோது ஒரு சின்ன தவறு. Retrospective effect என்பதைப் போடாமல் விட்டுவிட்டீர்கள். அதனால் ஒரு வருடத்திற்கான ஏராளமான கணக்குகளை நிலுவையில் வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். அந்த ஆணையை நானும் நடந்து, நடந்து கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அந்த ஆணை என்னுடைய கைக்குக் கிடைக்கவே இல்லை. ஆகவே, அதிகாரிகள் வேண்டுமென்றே பழைய கணக்குகளை வைத்துக்கொண்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இடையிலே கமிஷனர் அவர்கள் ஒரு சின்ன ஆர்டரைக் கொடுத்தார்கள்; அதுவரையிலே நிலுவையில் வைக்க வேண்டும் என்று. ஆகவே, அது நிலுவையில் இருக்கிறது. அந்தக் கணக்குகள் இன்னும் ஏராளமானவை முடிக்கப்படாமல் இருக்கின்றன. 'சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்கமாட்டான்' என்று சொல்வார்கள். ஆகவேதான் சில நேரங்களிலே அதிகாரிகளைக் கடுமையாகச் சாட வேண்டியிருக்கிறது. வியாபாரிகள் அதனால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த ஆணையை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த power sprayer-க்கு வரியே இல்லாமல் செய்தால் — மற்ற எந்த மாநிலத்திலும் வரி இல்லை — மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10-50

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு 26/1999-ல் சமாதான் திட்டத்தைக் கொண்டுவந்து, 1500 கோடி ரூபாயை வசூல் செய்வதற்கு இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய முயற்சியை, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த 26-வது சட்டமுன்வடிவிலே, 9-வது Section-னிலே;

" A certificate of settlement issued under sub-section (1) of Section 8 shall be conclusive as to the dispute to which it relates and no matter covered by such certificate of settlement shall be re-opened in any proceeding of review or revision or in any other proceeding, under the relevant Act. Bar on re-opening of settled cases"

என்று இருக்கிறது. ஆனால், இதற்கு நேர் விரோதமாக 12-வது Section-னிலே;

"Notwithstanding anything contained in Section 9 or Section 10, where it appears to the designated authority that an applicant has obtained the benifit of settlement under this Act by suppressing any material information or particulars or by furnishing any incorrect or false information or particulars, such designated authority, may, for reasons to be recorded in writing and after giving the applicant a reasonable opportunity of showing cause, revoke the certificate of settlement issued under sub-section (1) of Section 8"

என்று இருக்கிறது. ஏற்கெனவே, 9 வது விதியிலே, அதாவது வழக்கு நிலுவையிலே, அதாவது பூசலில் உள்ள — disputed case-அதனால் ஒரு சர்டிபிகேட்டைக் கொடுத்து, முடிவு செய்து விடுமேயானால், ஒரு சர்டிபிகேட்டைக் கொடுத்து, it cannot be re-opened என்று மீண்டும் அதை எழுப்ப முடியாது — it cannot be re-opened என்று Section-9 லே சொல்லிவிட்டு, பிறகு, `notwithstanding anything contained in Section 9 and 10' என்று போட்டு, எப்படியாவது எதாவது ஒரு பொருளை மறைத்து, suppressing the material facts என்று இருந்தால் பிறகு அதை re-open பண்ணலாம் என்று சொல்கிறீர்கள். ஏற்கெனவே பல ஆண்டுகாலமாக நிலுவையில் இருக்கிற காரணத்தால்தான், இதுபோன்ற வழக்குகளை முடிப்பதற்கு Section-ஐக்

கண்டுபிடித்து, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். பிறகு இப்படி, கொண்டு வந்துவிட்டு, நீங்கள் revoke பண்ணலாம் என்று, சொன்னால் மீண்டும் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே போகும். ஆகவே, முதலிலேயே நீங்கள் Certificate கொடுக்கிறபோதே முழுமையாக இதனை ஆய்ந்து முடித்துவிட்டால்தான் நல்லது. இல்லையென்று சொன்னால், ஒரு வழக்கு முடிந்துவிட்ட பின்னால் அதிலே உண்மையான குற்றவாளி, அதாவது ஏற்கெனவே இருக்கக்கூடிய குற்றவாளியை சந்தேகத்தின் அடிப்படையில் விடுதலை செய்துவிட்டால் அந்த உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்துக்கொண்டே போக முடியாது. அந்த வகையிலே நீங்கள் சட்டப் பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டே போவதற்கு வழிவகை செய்யாமல் Bar of re-opening the settled cases என்று இருக்கக்கூடிய Section-9 லேயே முழுமையாக ஆய்ந்து, அது முடிந்துவிட்ட பின்னால் மீண்டும் revoke செய்ய முடியாது என்ற ஒரு நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். எனவே, சட்டச் சிக்கலை இங்கே கொண்டு வரவேண்டாம் என்பதைப் பணிவுடன் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் (குறுக்கீடு) நீங்களே பேச வாய்ப்புக் கேட்டுக்கொண்டிருந்தால் மற்றவர்கள் எல்லாம் எப்படிப் பேசுவது?

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய ஞானசேகரன் அவர்கள் மிகவும் தெளிவான, அழகான ஒரு பிரச்சினையை இங்கு எழுப்பியிருக்கிறார்கள். ஒரு Section-ல் என்ன சொல்லி இருக்கிறீர்கள் என்றால் ஏற்கெனவே pending case-களில் இந்த, இந்த மாதிரி செட்டில் பண்ணிக்கொள்ளலாம் என்று செட்டில் பண்ணிவிட்டால், அது final என்றும் சொல்கிறீர்கள். ஆனால், இன்னொரு இடத்தில் என்ன சொல்கிறீர்கள் என்றால், ஒருவேளை தவறான தகவல்களைக் கொடுத்து அதன் மூலமாக இந்த செட்டில்மெண்ட் செய்யப்பட்டிருந்தால் அதனை மறுபடியும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இதுபற்றி ஒரு தெளிவை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டால் நானும் ஞானசேகரன் அவர்களும் திருப்தியடைவோம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அது எந்த நீதித் துறையாக இருந்தாலும் சரி, ஏதாவது ஒரு முடிவைத் தவறாக எடுத்துவிட்டு,





நியாயமான விவரங்கள் மறைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் உத்தரவைப் பெற்றிருந்தால், ஏமாற்றி மறைமுகமாக suppression of facts என்ற அந்த அடிப்படையில் உத்தரவைப் பெற்றிருக்கிறார் என்று அரசு நாணயத்தோடு கருதுமேயானால் மீண்டும் அதன் அடிப்படையில் அந்த விவரத்தை, அந்த வழக்கைத் திருப்புவதில் எந்தத் தவறும் இல்லை. இது principle of natural justice. எல்லா நீதித் துறைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய வருமானத்தில் அதிகபட்சம் 6500 கோடி ரூபாய்க்கு மேலாக வரக்கூடிய இந்த வருமான வரித் துறையில் இன்னும் சிறப்பாக அதிகாரிகளும் அலுவலர்களும் நிர்வகித்தால் மேலும் அதிகமாகப் பணத்தை வசூலிக்கக்கூடிய வாய்ப்பு மேலும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் பலர் சார்பாக வைக்கக்கூடிய கோரிக்கைகளையெல்லாம் ஏற்றிருக்கக்கூடிய அதேநேரத்தில், 1997 வரை, குறிப்பாக 27-11-1997 வரை தோல் பதனீட்டுப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அந்தத் தோல் பொருட்களுக்கு அதுவரை எந்தவித வரிவிதிப்பும் இல்லாமல், 27-11-1997-க்குப் பிறகு மீண்டும் பழைய நிலையில், ஏற்றுமதி செய்த அத்தனைத் தோல் பொருட்களுக்கும் வரி கட்ட வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து, இந்த ஏற்றுமதி செய்யக்கூடிய அத்தனை தோல் பதனீட்டு தொழிலுக்கும், தோல் பதனீட்டு நிறுவனத்தார்களுக்கும் வரிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே மற்ற மாநிலங்களில் மொத்தமாக தோல்களுக்கு 4 சதவிகிதம் வரி கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களுக்கு முழுமையாக வரிவிலக்கு 1997 வரை இருந்த நிலையை, பழைய வரியைத் தள்ளுபடி செய்து, எதிர்காலத்தில் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய இரசாயனப் பொருட்கள், Chemicals-ஐப் பொறுத்தவரையில் மற்ற இடங்களில்

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [1999 மே 18

4 சதவிகிதம் வரி என்று இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் இங்கே 11 சதவிகிதம் என்று இருக்கும் வரியை 16 சதவிகிதம் என்று மாற்றிய நிலையினால் மற்ற மாநிலங்களோடு போட்டி போடக்கூடிய அளவிற்கு, இங்கே, தமிழகத்திலே இருக்கக்கூடிய Chemicals உற்பத்தியாளர்களுக்கு, இந்த வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்கு முடியவில்லை. ஆகவே மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல அந்த 4 சதவிகித வரியை இதற்கு நிர்ணயிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

(முற்பகல் 10-55

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு வரவில்லை. இருந்தாலும்கூட, என்னுடைய ஏரியாவில் சிறிய. சிறிய தென்னை விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த சிறு, சிறு தென்னை விவசாயிகள் தாங்கள் விற்பனை செய்கிற தேங்காய்களை வெளியே அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வரி 2 சதவிகிதம் இருந்தது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள 1 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாக்கி 1 சதவிகிதம் இருக்கின்றதே, அதிலே நமக்கு என்ன இலாபம் வரப்போகிறது? அவர்கள் கணக்கு வைப்பதிலோ அல்லது வேறு எதிலோ மிகவும் சிரமப்படுகிறார்கள். பெரிய விவசாயிகள் என்றால் பரவாயில்லை. அந்த சிறு, சிறு தென்னை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த ஒரு சதவிகித வரியையும் நீக்க வேண்டுமென்று, அந்த விவசாயிகள் சார்பிலே, தென்னை விவசாயிகள் சார்பிலே கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே பங்குகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், வணிகத் துறையைப் பொறுத்தவரையில், டாக்டர்



1999 மே 18] [திரு. ஆலடி அருணா]

கலைஞர் அவர்களுடைய விழுமிய தலைமையிலே இந்த அரசாங்கம் எந்த அளவிற்குத் தாராளமாக நடந்து வருகிறது, வணிகவரித் துறையிலே சலுகை காட்டுகிறது, எவ்வளவு பெரிய மாற்றங்களை எல்லாம் செய்து வணிகப் பெருக்கத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் துணையாக விளங்குகிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதேநேரத்தில், சில வரிகளைக் குறைக்க வேண்டும்; நீக்க வேண்டும்; மாற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்தையும் அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், கடந்த காலத்தில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அரசு எந்த அளவுக்கு வரிச் சலுகையைச் செய்தது; இன்றைக்குப் பொறுப்பிலே இருக்கிற அரசு எந்த அளவுக்கு வரிச் சலுகையைச் செய்துகொண்டு வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். வரிச் சலுகைகள் என்பது இப்போது நீங்கள் சொல்கிற இரண்டு, மூன்று கோரிக்கைகளை நிறைவேற்றி விட்டதனாலேயே அது முடிந்துவிட்ட பிரச்சினை அல்ல. அது ஒரு தொடர்கதையாகத்தான் இருக்கும். என்றாலும், நான் பெருமிதத்தோடும், மகிழ்ச்சியோடும் உங்களிடத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், 1996-ல் பொறுப்புக்கு வந்து இதுவரைக்கும் நாங்கள் சுமார் 602 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகையை அளித்திருக்கிறோம். தமிழகத்தின் வரலாற்றிலேயே எந்த அரசும் இந்த அளவுக்கு வரிச் சலுகையை கொடுத்ததில்லை. இதை மற்றவர்கள் மனதார ஒத்துக்கொள்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திறந்த உள்ளத்தோடு ஒப்புக்கொள்வார்கள் என்பதை நான் தெரிந்து வைத்திருக்கிறேன். என்றாலும், இப்போது இவ்வளவு சலுகைகள் அளித்த பிறகும் நாம் ஒன்றை எதிர்பார்க்கிறோம். இரண்டு கோணங்கள் இருக்கின்றன. வரிச் சலுகை அளித்துவிட்டால் வியாபாரிகள் எல்லாம் நல்ல முறையிலே வரியைச் செலுத்திவிடுவார்கள் என்பது ஒரு கருத்து. இல்லை, கெடுபிடி செய்தால்தான் வரியும் வசூலாகும் என்பது ஒரு கருத்து. இந்த இரண்டிலேயும் ஓரளவிற்குத்தான் உண்மை இருக்குமே தவிர முழுமையான உண்மை இருக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல வரி வசூல் அதிகரித்திருக்கிறதா என்றால் in absoiute terms, மொத்தத்திலே பார்க்கும்போது முன்பிருந்ததைவிட வரி வசூல் இப்போது அதிகமாகி இருக்கிறது என்பதிலே இரண்டுபட்ட கருத்தில்லை. 1994-95-ல் 4,164 கோடியாக இருந்தது. அதற்கு அடுத்த ஆண்டு 5,023 கோடியாக இருந்தது. அதற்கு அடுத்த ஆண்டு 1996-97-ல் 5,786 கோடியாக இருந்தது. ஒரே ஆண்டில் 700 கோடி உயர்ந்தது. ஆனால், அதற்கு அடுத்த ஆண்டு பார்த்தால் 1997-98-ல் 6,062 கோடி தான். அதாவது ஏறத்தாழ

[திரு. ஆலடி அருணா] [1999 மே 18

300 கோடிதான் வரி அதிகமாக வசூல் ஆகியிருக்கிறது. பிறகு, இப்போது 1997-98-ல் எடுத்தால் மறுபடியும் 500 கோடி அதிகமாகி இருக்கிறது. எனவே, சலுகைகள் கொடுத்துவிட்டதனாலேயே வசூல் அதிகமாகி விட்டது என்றல்ல. அந்த விகிதாச்சாரத்தின்படி கூட சில நேரங்களில் வரவில்லை. இதற்கு சலுகைகள் மட்டும் கொடுத்ததே காரணமாக இருக்க முடியாது. வேறு எதுவும் காரணமாக இருக்கலாம்; பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக இருக்கலாம்; ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையும் காரணமாக இருக்கலாம்; அல்லது ரூபாயினுடைய மதிப்பு வீழ்ச்சி அடைந்தது காரணமாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும், இதிலே இன்னும் நாம் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். அதிகமான முறையிலே நாம் இன்னும் இந்த வரி வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் சமாதான் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு இப்போது அறிமுகம் செய்துகொண்டு இருக்கின்றார்கள். இந்தத் திட்டம் 30-9-1999 வரைக்கும்தான். இதற்குள்ளே, இந்தத் திட்டத்திற்குள் வரி குறித்து, குறித்த காலத்திற்குள் அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அதுவும் 22-2-1999-க்குள் எதுபற்றி முடிவு செய்யப்பட்டதோ, அது சம்பந்தப்பட்ட வழக்குகளைத்தான், அதைப் பற்றிய நிலுவையில் இருக்கிற வழக்குகளைத்தான் அந்தச் சமாதான் திட்டத்தின்கீழ் எடுக்க முடியும் என்பதை இந்தத் திட்டத்தின்கீழ் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலிலே disputed tax எவ்வளவோ அதிலே 50 சதவிகிதம் கட்ட வேண்டும். Penalty என்று சொன்னால் அதிலே 25 சதவிகிதம் கட்ட வேண்டும். அப்புறம் interest என்று சொன்னால் 25 சதவிகிதம் கட்டினால் போதும் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய பெருமதிப்பிற்குரிய திரு. சொக்கர் அவர்கள் சொன்னார்கள், இந்தத் திட்டத்தையெல்லாம் நீங்கள் நீதிபதியிடம் கொடுக்காமல் அதிகாரிகளிடத்திலே கொடுக்கிறீர்கள். எனவே, அதிகாரிகள் தாங்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு, லஞ்சம் பெற்றுக்கொண்டு, இந்த வரி வசூல் வாங்கித்தருவார்களா என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவரிடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், ஏற்கெனவே இது disputed tax. எவ்வளவு எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்று துறையின் சார்பில் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. அதைத்தான் இப்போது அவர் எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். எனவே, புதியதாகப் போய் நிர்ணயிக்கப்படப்போவது சில வழக்குகளில்தான். ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. இனி அதிகாரிகள் ஒன்றும் செய்ய முடியாது.



1999 மே 18] [திரு. ஆலடி அருணா]

முற்பகல் 11-00

அந்த disputed tax. அதாவது, தகராறுக்குரிய Tax-ன் அடிப்படையில்தான் செயல்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது மிக,மிகப் பெரும்பான்மையான வழக்குகளில். அதிலே அதிர்ச்சி அளிக்கக்கூடிய உண்மை என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிலுவை என்று எடுத்துக்கொண்டால், முதலிலே 43 கோடி ரூபாய்; அதற்குப் பிறகு 143 கோடி ரூபாய். மொத்தத்திலே 200 கோடி ரூபாய்தான். ஆனால், மொத்தத்திலே நிலுவை என்று சொல்லும்போது வரி பாக்கி மட்டும் கடந்த காலத்திலே என்று எடுத்துக்கொண்டால், 1,771 கோடி ரூபாய். இதற்குத் தண்டம் என்று எடுத்துக்கொண்டால், 1,276 கோடி ரூபாய். வட்டி பாக்கி எவ்வளவு என்றால் 3.50 கோடி ரூபாய் ஆக, இப்போது வரி என்று மொத்தத்திலே Technical-ஆக எடுத்துக்கொண்டால். 2,548.84 கோடி ரூபாய் என்பதை மறந்துவிடக்கூடாது. இவ்வளவு பெரிய தொகை நிலுவையாக இருக்கிறது. இதைப் பெற்றாக வேண்டும். எனவேதான், இந்தச் சமாதான் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை நாங்கள் அமல்படுத்தினால்கூட ஆயிரம் கோடி ரூபாய்தான் கிடைக்கும். நான் வியாபாரப் பெருங்குடி மக்களை மிகப் பணிவோடு வேண்டிக்கொள்வதெல்லாம், இது நல்ல சந்தர்ப்பம், நழுவவிடாதீர்கள். இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பித் திருப்பி இந்தத் திருவிழா வரும் என்று நினைத்துக்கொண்டு, சலுகைகளை அளிப்போம் என்று எண்ணிவிடக்கூடாது. இது முதன்முதலாக இப்போதுதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; அரசுக்கும் உரிய காலத்தில் பணம் வர வேண்டும்; உங்களுக்கும் சிரமம் குறைய வேண்டும் என்ற அடிப்படையில்தான் வணிகப் பெருங்குடி மக்களுக்குத் துணை செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தச் சமாதான் திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. எனவே, இதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களை எல்லாம் நான் வேண்டிக்கொள்கிறேன். மற்றபடி சில சலுகைகள்பற்றிக் கேட்டார்கள். சலுகைகள் எல்லாம் செய்யப்படாது என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இனி அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை; அதற்கடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, இவையெல்லாம் வரவிருக்கின்றன. அப்போது எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தோடு இருந்து நிச்சயமாக உங்களுக்குச் சலுகைகளை அளிப்பார்கள். இதைவிட அதிகமாகக் கூட சலுகைகளை அளிப்பார்கள். எனவே, இப்போது தரப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்தங்களை எல்லாம் ஏற்று ஒருமனதாக

[திரு. ஆலடி அருணா] [1999 மே 18

நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 16 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 16 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, ஆடம்பர வசதி வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு



1999 மே 18] [திரு. ஆலடி அருணா]

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@ 17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1999 மே 18

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1999 மே 18]

**(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத்தலைவர்] [1999 மே 18

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1999 மே 18]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

---

@17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1999 மே 18

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[1999 மே 18

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@ 17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 மே 18]

**பிரிவு-2**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு-2, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தன் திருத்தத்தை மொழியலாம்.

**HON. THIRU ALADI ARUNA:** Deputy Speaker Sir, I move the following amendment to clause 2;

"In Clause 2, in section 7-F proposed to be inserted, in sub-section (1), in item (ii), *for* 'five percent', *substitute* 'four percent'.".

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

**(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1999) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

---

@17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஐ) தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1999)., மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஒ) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1999), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத்தை இயற்றுவதற்கும், நீக்குவதற்கும் அரசுக்கு உள்ள அதிகாரத்தை நாம் மறுக்க முடியாது. ஆனால் இயற்றுவதற்கும், நீக்குவதற்கும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். அந்த நோக்கம், நல்ல நோக்கமாகவும் இருக்க வேண்டும். இங்கே நம்முடைய மென்மையான ஓர் அமைச்சர், இப்படி ஒரு வன்மையான சட்டமுன்வடிவை முன்மொழிந்து விட்டாரே என்ற ஒரு வேதனை எனக்கு. (சிரிப்பு) ஏனென்றால், இதை நிச்சயமாக, அந்தரங்கமாக, இந்தச் சட்டமுன்வடிவை உணர்வுபூர்வமாக இந்த அரசு நிறைவேற்றும் என்று நான் நினைக்கவில்லை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள், அடுத்து வரும் சட்டமுன்வடிவிற்கும் சேர்த்தே பேசிவிடலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** நான், இந்தச் சட்டமுன்வடிவில் மட்டும்தான் பேசுகிறேன். அதில் பேசவில்லை. எனவே, இதனுடைய நோக்கம் என்ன என்பதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிற விஷயத்திலே, "நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள காலி நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, ஒரு சிலரிடம் மட்டும் நகர்ப்புற நிலம் குவிந்து கிடந்து அவர்கள் இலாப நோக்கத்துடன் தக்க வைத்து விற்பது மற்றும் வாங்கிக்கொள்வதில் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்க" இந்தச் சட்டம் வந்தது. இந்தச் சட்டத்தினுடைய ஜனன நோக்கம் என்பது மிக மிக நல்ல நோக்கம். அந்த மிக மிக நல்ல நோக்கம் கொண்ட ஒரு சட்டத்தை நீக்குவது என்பது ஒரு வேதனையான விஷயமா இல்லையா என்பதைத்தான் நான் மாநில அரசின் சிந்தனைக்கு முன்வைக்க விரும்புகிறேன். அதிலும், இந்தச் சட்டம் ஏன் நீக்கப்படுகிறது என்று சொல்கிறபோது, இந்தச் சட்டம் விரும்பிய பலனை அளிக்கவில்லை — விருப்பம் நல்ல விருப்பம் — நல்ல விருப்பம் விரும்பிய பலனை அளிக்கவில்லை.

@17-05-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



அரசு என்ன செய்ய வேண்டும்? நல்ல விருப்பம் அரசுக்கு இருந்தால் அந்த நல்ல விருப்பத்தை, விரும்பியபடி 20 ஆண்டுகள், 22 ஆண்டுகளுக்குப் பின்னரும் நிறைவேறவில்லை என்றால், அந்தச் சட்டத்தை விரும்பியபடி நடைமுறையில் நிறைவேற்றுகின்ற உத்திகளை உருவாக்கக் கடமைப்பட வேண்டுமே தவிர, அதற்குரிய திருத்தங்களை முன்மொழிய வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு, சட்டத்தைக் கைவிடுவது என்பது நல்லதல்ல என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதே தலைநகர் சென்னையில் மூன்று பேருக்கு ஒருவர் குடிசையில் வாழ்கின்றார்கள். மூன்று மக்களில் ஒருவர் நிலமற்று குடிசையில் வாழ்கின்ற ஒரு நிலைமை நீடிக்கிறது. அதிலும், இந்தியாவில், சுதந்தரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பின்னால் —

"பாரத பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்"

என்று சொல்கிறார்கள். ஆனால் — பாரத நாட்டுப் புதல்வனுக்கு அவனுடைய தாயின் மடியில் தலைவைத்துப் படுக்க இடமில்லை. ஒரு குடும்பம் என்றால், 'விவிலியத்திலே' சொல்கிறார்கள், "விண்ணிலே பறக்கின்ற பறவைகளுக்கு மரக்கிளைகளிலே வீடுகள் உண்டு; மண்ணிலே திரிகின்ற நரிகளுக்கு பதுங்குக் குழிகள் உண்டு; மனித குமாரனுக்கு தலைசாய்க்க இடமில்லை" என்று. இந்த நிலை, இந்தியாவில் இப்போதுக்கு நீடிக்கிறது. இந்த நிலையில், சிறிய வீடு கட்டிக்கொள்ள, நிலமற்ற ஏழைகள் கோடிக்கணக்கில் இருக்கிறபோது, அதனுடைய தேவை அதிகரித்துள்ள நிலையில், இந்தச் சட்டத்தை மேலும் இறுக்கிப் பிடிக்க வேண்டும். நகர்ப்புறங்களில் நிலங்களை வளைத்துப் போட்டு வைத்திருக்கிறார்கள் ஆதிக்க சக்திகள். அந்த ஆதிக்க சக்திகளுடைய மென்னியைப் பிடித்து இறுக்கி இழுக்கிற மாதிரி சட்டத்தை மேலும் இறுக்க வேண்டுமே தவிர, கைவிட்டு விடக்கூடாது. அப்படி இறுக்கவில்லை என்றால், ஏழைகளின் இந்தியா பாதிக்கப்பட்டுவிடும். ஏழைகளின் இந்தியாவின் குரலைப் பிரதிபலிப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே, கீழே சொல்வதைப் பார்த்தால், "இந்தச் சட்டம் விரும்பிய பலனை அளிக்கவில்லை" என்றிருக்கிறது.

இன்னொரு விசித்திரம் என்னவென்றால், எனக்கு அது புரியவில்லை. நானும், திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். பொதுமக்களிடையே ஒருமுகமாக நிலவுகிறதாகச் சொல்லப்படுகிறது. நானும் பொதுமக்களில்

ஒருவன். எனக்கு அப்படி ஒரு கருத்து நிலவவே இல்லை. நான் சொல்வது என்னவென்றால் பொது மக்களிடையே ஒருமித்த கருத்து எப்படி நிலவும், நிலவவே இல்லை, நிலவ இயலாது. எனவே, பொதுமக்கள் மத்தியில் என்ன கருத்து நிலவுகிறது என்றால் இந்தச் சட்டம் நீடிக்க வேண்டும் என்ற கருத்துதான் நிலவுகிறது. ஜெயலலிதா அவர்களுக்கு ஆஜரான ராம்ஜெட்மலானி மிக நல்ல மனிதர். இந்தமாதிரி நல்ல விஷயங்களைச் செய்கிற நல்ல மனிதர். அந்த மனிதர் மத்தியில் பொறுப்பேற்றவுடன் ஒரு நல்ல விஷயத்தைச் செய்தார். மத்திய அரசு இந்தச் சட்டத்தை நீக்கியது. ஏனென்றால் அவர்கள் எல்லாம் வேறு வேறு வகைகளிலே வாழ்ந்தவர்கள். கீழே புழுதி மண்ணிலே புரளுகிற ஏழைகளைப்பற்றி அவர் அறிந்திருக்க நியாயம் இல்லை, அதில் அதிர்ச்சி இல்லை. அதனால்தான் மேட்டுக்குடி மக்களுக்கு மேட்டுக் குடிமகன். ஆகவே, அவர் அப்படித்தான் இருப்பார் என்பதில் நான் மாற்று அபிப்பிராயம் கொள்ளவில்லை. ஆனால், பொதுமக்களிடையே ஒரு கருத்து நிலவுகிறது என்பது சரியல்ல. பொதுமக்கள் மத்தியில் என்ன கருத்து நிலவுகிறது என்றால், இந்தச் சட்டம் நீடிக்க வேண்டும் என்பதுதான்.

முற்பகல் 11-20

அதிலே இன்னொரு விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. பொது மக்களிடையே ஒருமுகமாக கருத்தும் நிலவுவதோடு எல்லோருடைய நன்மைக்காகவும் மாநில வளர்ச்சிக்காகவும் இந்தச் சட்டம் வருவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்வது சரி இல்லை. எல்லோருடைய நன்மைக்காகவும் சட்டம் இருந்தால்தான் பயன்படும், அப்படி இல்லையென்றால், நிச்சயமாக அது பயன்படாது. எனவே, நான் மாநில அரசை மிக அதிகமாக வலியுறுத்தி கேட்டுக்கொள்ள விரும்புவது, கோடிக்கணக்கான அளவில் வீடுபெற இயலாது இருக்கக்கூடிய அந்த மக்களின் வீட்டுத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமானால், இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கத்தைச் சென்றடையாததால் இந்தச் சட்டம் விலக்கிக் கொள்ளப்படுகிறது என்பது சரி அல்ல. நல்ல நோக்கத்திற்குக் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தை, அந்த நல்ல நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான வழிமுறைகளை உருவாக்குவதில் மாநில அரசு அக்கறை செலுத்த வேண்டுமே தவிர, அதில் அக்கறை செலுத்தாமல் இந்தச் சட்டத்தை கைவிட்டு விடுவது என்பது தாயே பிள்ளையைக் கைவிட்டு விட்டால் வேறு வழி



இல்லை என்பது போலத்தான் ஆகும். எனவே, தாய் மறுசிந்தனை செய்ய வேண்டும், பிள்ளையைக் கைவிடாதீர்கள். பிள்ளை உங்களைப் பார்த்துத்தான் அழுகிறது. அழுகிற பிள்ளைக்கு தயவுசெய்து மாற்று வழியைச் சொல்லுங்கள், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. டி. சுதர்சனம், நீங்கள் பேசப் போகிறீர்களா? உங்கள் பெயரைக் கொடுக்கவில்லையே! (குறுக்கீடு) சரி, பேசுங்கள். திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் நண்பர் சுப்பராயன் அவர்கள் சொன்னதுபோல நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டாலும்கூட, 23 ஆண்டுகளாக இதன் மூலமாக யார் பயனடைந்தார்கள் என்று பார்க்கிறபோது, பொதுமக்களோ அல்லது நிலம் வைத்திருப்பவர்களோ யாரும் பயனடையவில்லை. அதற்கு மாறாக, சில அதிகாரிகள் பயன் பெற்றார்கள், சில அரசியல்வாதிகள் பயன் பெற்றார்கள். கடந்த 5 ஆண்டுகளிலே, இந்த ஆட்சி வருவதற்கு முன்னாலே இந்தச் சட்டத்தை எப்படியெல்லாம் பயன்படுத்தி, யாரெல்லாம் சின்னாபின்னப்படுத்தினார்கள் என்பதை பல்வேறுபட்ட நண்பர்கள் நன்றாக அறிவார்கள். ஒரு சட்டம் கொண்டு வரப்படுகின்றபோது அதை நல்ல நோக்கத்திற்காகத்தான் கொண்டு வருகிறார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வருகின்றபோது பல்வேறு நல்ல நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதிலே பல திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தந்த சமயத்திற்கு ஏற்றாற்போல, அந்தந்த தன்மைக்கு ஏற்றாற்போல பல்வேறு திருத்தங்கள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டத்தை கைவிடுவது இந்த நேரத்திலே மிகவும் அவசியமான ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தின் மூலமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. நண்பர் சுப்பராயன் அவர்கள் இந்தச் சட்டத்தை இறுக்கிப் பிடிக்க வேண்டுமென்று சொன்னார். இறுக்கிப் பிடித்துப் பார்த்தார்கள். இறுக்கிப் பிடித்துப் பார்க்கிறபோது, அதிலே இருக்கின்ற சந்து பொந்துகளின் வழியாகப் பலப்பேர் தப்பித்துக்கொண்டு விட்டார்கள். நீதிமன்றங்களுக்குப் பல்வேறு வழக்குகள் சென்றிருக்கின்றன. மத்திய அரசினுடைய சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகள் எல்லாம் இப்போது காலாவதியாகப் போகின்றன. யார் இதிலே பாதிக்கப்பட்ப்

போகிறார்கள்? சாதாரண ஏழைகள்தான். நகர்ப்புறங்களிலே, சென்னையை அடுத்த புறநகர்ப் பகுதிகளிலே இருக்கின்ற சாதாரண ஏழைகள்தான் என்ன செய்வார்கள்?

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் சட்டத்தின் நோக்கம் நல்ல நோக்கம் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். அதை நடைமுறையில் நிறைவேற்ற முடியவில்லை, சந்து பொந்துகளில் தப்பித்துக் கொள்கிறார்கள், அதனால்தான் எடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார். நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், சந்து பொந்துகளை அடைந்து விட்டால் தப்பிக்க முடியாது அல்லவா? எனவே, சந்து பொந்துகளை அடையுங்கள் என்று ஓர் ஆலோசனையை உறுப்பினர் கூறலாமே?

**திரு. டி. சுதர்சனம்:** நண்பர் சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போன்று, சந்து பொந்துகளைப் பொறுத்தவரையில் அடைக்கக்கூடிய சந்துகளைத்தான் அடைக்க முடியுமே தவிர, மற்றவற்றை அடைக்க முடியாது. புழல் ஏரியில் ஓட்டை விழுந்தது. இரவோடு இரவாக அடைத்து விட்டார்கள். ஆனால் பல்வேறு இடங்களில் ஓட்டை விழுகின்றபோது அதை அடைக்க முடியாமல் போகிறது. அதுபோன்றுதான், இந்தச் சட்டத்திலே நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. இந்த ஓட்டைகளை அடைக்க முடியாது. மக்களுக்கு உதவாதச் சட்டம், மக்களுக்குத் தேவையில்லாதச் சட்டம், அதனால் இந்தச் சட்டத்தை நீக்கம் செய்ய வேண்டும், நீக்குவது என்பது சாலச் சிறந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் நிறைய நிலம் வைத்திருந்தவர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றிருக்கிறார்கள். சாதாரணமாக, ஏழை எளிய மக்கள் விவசாய நிலம் வைத்திருந்தால், அதிகாரிகள் அவர்களிடம் சென்று, இந்த நிலம் பயிரிடப்படாமல் இருக்கிறது என்று நோட்டீஸ் கொடுப்பார்கள். யாரிடத்திலே கொடுப்பார்கள் என்று பார்த்தால், நிலத்தின் உரிமையாளர்களிடத்திலே கொடுப்பதில்லை. யாரோ ஒருவரிடத்தில் கொடுத்ததாகச் சொல்லி, நோட்டீஸ் கொடுத்ததுபோல கையெழுத்துப் பெற்றுக்கொள்வார்கள், கையெழுத்தைப் பெற்றுக்கொண்டு, திரும்பவும் 9(1) நோட்டீஸ் கொடுப்பார்கள். 9(1) நோட்டீஸ் கொடுத்த ஒரு மாதத்திற்குள்ளாக உடனடியாகக் 10(1) நோட்டீஸ் கொடுப்பார்கள். 10(1) நோட்டீஸ் கொடுத்ததற்குப் பின்னால், இந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டது என்று அறிவித்துவிடுவார்கள். அந்த நிலைமைதான் இருந்தது.



முற்பகல் 11-25

ஆனால் வசதி படைத்தவர்களிடம், அந்த அதிகாரிகள் நேரிலே சென்று இந்த நிலங்களை நாங்கள் எடுக்க வேண்டியிருக்கிறது; இந்த இந்த வழிகளின் மூலமாக எடுக்க வேண்டியிருக்கிறது; நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு ஆலோசனைச் சொல்லி, அந்த நிலங்களை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்வதிலிருந்து தப்பிக்க வைக்கிறார்கள். அது வேறு விஷயம். அதனால் இந்தச் சட்டத்தின் மூலமாக, ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. பயனும் இல்லை என்பது மட்டுமல்லாமல், கடந்த காலத்திலே நடந்த தவறுகள்—விவசாய நிலங்கள், ஓராண்டு காலத்திற்குப் பயிரிடப்படாத நிலங்களுக்கெல்லாம் திடீரென்று 9(1) நோட்டீஸ், 10(1) நோட்டீஸ் என்றெல்லாம் கொடுத்து அரசாங்கமே ஏழை எளியவர்களின் நிலங்களை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதைத் திரும்பவும் அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இரண்டு பேர் தங்களது கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஒருவர் ஆட்களின் தரங்களைப் புரிந்துகொள்வதில் தனக்கு என்று ஒரு தனித் திறமை பெற்றவர் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன். அவர்தான், "அமைச்சர் மென்மையானவர், எப்படி வன்மையான ஒரு சட்டத்தை அவரால் கொண்டுவர முடிகிறது" என்று கேட்டார். மென்மையானவராக இருந்தால், வன்மையான சட்டங்கள் வராது. அப்படிக் கொண்டுவர வேண்டுமென்று சுப்பராயன் போன்றவர்கள் விரும்பினாலும் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை இந்த நேரத்திலே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக - Lands - நிலங்கள் மாநிலங்களுக்குத்தான் சொந்தம். அது Urban நிலமாக இருந்தாலும் சரி, Rural நிலமாக இருந்தாலும் சரி, 1976-இல் நெருக்கடி நிலையின்போது மத்திய அரசு ஒரு மசோதாவைக் கொண்டுவந்து நகர்ப்புற நிலங்களையெல்லாம் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

அப்போது தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தது. மத்திய அரசு கொண்டு வந்த மசோதாவை ஒவ்வொரு மாநில அரசும் தீர்மானம் போட்டு Adapt செய்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் அப்போது சட்டமன்றம் இல்லாததால் அப்போது அதைச் செய்யவில்லை. Urban Land Ceiling காரணமாகக் கைப்பற்றப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரையில் Exemption என்ற பெயரால் Corruption அதிகமாகிவிட்டது. ஊழலை அதிகரிப்பதற்கான ஒரு முக்கிய சாதனமாகவே இது ஆகிவிட்டது. எனவே, ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது இதை நீக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள். அதற்குக் காரணமாகச் சொல்லப்படுவது, இதுதான். "இது மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கக்கூடியது. இதன் காரணமாக ஊழல் அதிகமாகிறது." உச்சவரம்பின் காரணமாக எந்தப் பலனும் ஏற்படவில்லை. இதன் காரணமாக வெற்று நிலங்கள்தான் அதிகமாக இருந்ததே தவிர அந்த இடங்களில் யாரும் கட்டடங்கள் கட்ட முடியவில்லை. சென்னை போன்ற நகரங்களில் இதன் காரணமாக நிலத்தின் விலை அதிகமாகிவிட்டது. சாதாரண, நடுத்தர மக்கள் இடங்களை வாங்க முடியாமல் தத்தளித்தார்கள். எனவே, நகர்ப்புறங்களில் உள்ள சாதாரண நடுத்தர மக்கள் "இந்தச் சட்டத்தை எடுத்துவிட்டால் நிலங்களின் விலை குறையும் என்றும் லஞ்சம் ஒழிக்கப்படும்" என்றும் நினைத்தார்கள். எனவே, ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது — மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்தை இங்கே ஈர்க்கின்றேன் — திரு. முரசொலி மாறன் தலைமையிலே அமைச்சரவைக் குழு, Group of Ministers அமைக்கப்பட்டு, இது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. அந்த ஐக்கிய முன்னணி அமைச்சரவையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் அமைச்சர்களாகவே இருந்தார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்திரஜித் குப்தா, எனது அருமை நண்பர், சதுரானந்த மிஸ்ரா. முரசொலி மாறன் குழுவிலேயே சதுரானந்த மிஸ்ரா இடம் பெற்றிருந்தார். அந்தக் குழு இந்தச் சட்டத்தை நீக்கலாம் என்று முடிவெடுத்தது. அந்த முடிவெடுப்பதற்காகப் பெரிதும் காரணமாக இருந்தவர்கள் யார் என்றும், இந்த வெற்றிகரமான திட்டத்திற்கு யார் காரணம் தெரியுமா என்றும் கேள்வி கேட்டு முரசொலி மாறன் அவர்களின் படத்தையும், நிதி அமைச்சராக இருந்த ப. சிதம்பரம் அவர்களின் படத்தையும் Economic times, Business Standard போன்ற



ஏடுகள் எல்லாம் போட்டு, நடக்க முடியாத காரியத்தை எல்லாம் நடத்திக் காட்டியதாகச் செய்தியும் வெளியிட்டு பாராட்டி எழுதியிருந்தார்கள்.

முற்பகல் 11-30

பின்னர் இந்தக் குழுவின் முடிவு நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதற்கு முன்பாக ஐக்கிய முன்னணி ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. அமைச்சரவையிலே நிறைவேற்றப்பட்ட அந்த முடிவு நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்படாமல் போய்விட்டது.

இருந்தாலும் பாரதிய ஜனதா அரசு வந்த பிறகு அதனை முற்போக்கானத் திட்டம் என்று கூறி, நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே, இந்த முடிவை இந்திய அளவில் எடுத்ததில் தி.மு.க.-விற்குப் பெருமை உண்டு. த.மா.கா.-விற்கும் பெருமை உண்டு. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர்கள் அதனை எதிர்க்கவில்லை. அமைச்சரவையில் இருந்தபோது அவர்கள் நினைத்திருந்தால் அதைத் தடுத்திருக்க முடியும். இந்தச் சட்டத்தை முன்பு கொண்டுவந்த காரணத்தால் வெற்று நிலங்கள்தான் இருந்தன. வைக்கோல் போரைப் பாதுகாக்கும் நாய், தானும் சாப்பிடாது, மாட்டையும் தின்ன விடாது என்பதைப் போலத்தான் அந்தச் சட்டம் இருந்தது. இப்போது இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சாதாரண, நடுத்தர மக்களுக்குப் பெரிதும் பயன்படும்; நிலத்தின் விலை வீழ்ச்சி அடையும்; வெற்று இடங்கள் எல்லாம் கட்டடங்களாகும்; முக்கியமாக லஞ்சம் ஒழியும். From today onwards the prices of Urban Lands will crash to the benefit of all classes of people. இன்று முதல் சென்னை மாநகரில் நிலங்களின் விலை வீழ்ச்சி அடையும். அதன்மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைவர். This is the greatest gift to Tamil Nadu and India by the D.M.K. தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் தி.மு. கழகம் அளித்த மிகப் பெரிய பரிசாகும் இது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

துணை சபாநாயகரை மட்டுமல்ல, இங்கே வீற்றிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரையும் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[1999 மே 18

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



1999 மே 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஒ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1999), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

முற்பகல் 11-35

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிற அதேநேரத்தில் ஒரு சிறு திருத்தத்தை மட்டும் என்னுடைய கருத்தாக இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். நிலம் கையகப்படுத்துகின்ற விஷயத்தில் இதுநாள்வரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 5 இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும் 10 ஏக்கருக்கு மிகாமலும்தான் அவர் நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்ற நிலை இருக்கின்றது. அதை மாற்றி, 25 இலட்சம் ரூபாயாகவும், 40 ஏக்கராகவும் உயர்த்தி இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டு இருக்கின்றது. ஆனால், இதைப் பார்க்கின்றபோது

@ 17-05-1999ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

40 ஏக்கருக்கு கணக்குப் பார்த்தால், ஏக்கர் ஒன்றுக்கு 62,500 ரூபாய்தான் வருகின்றது. குறிப்பாக, கோவை நகரைச் சுற்றியுள்ள பல இடங்களில் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக நிலத்தின் மதிப்பு இருக்கிறது. எனவே, அங்கே 62,500 ரூபாய்க்கு நிலம் கிடைப்பது நிச்சயமாகச் சாத்தியம் இல்லை. எனவே, இந்த 25 இலட்சம் ரூபாய் என்பதை, ஏக்கருக்கு 1 இலட்சம் ரூபாய் வீதம், 40 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அதேபோல, நில நிர்வாக ஆணையருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்ற அந்த வரம்பினையும் 40 இலட்சம் ரூபாயிலிருந்து 75 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்படையாகவே இந்த நிலத்தை கையகப்படுத்தக்கூடிய விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சரவையும் கொஞ்சம் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், எப்பொழுதுமே தமிழகம் முழுவதிலுமே Government rate என்று ஒன்று இருக்கிறது. அதேபோல, அந்த இடத்திலே, market rate என்று ஒன்று இருக்கிறது. நம்முடைய அரசு நிலத்தைக் கையகப்படுத்த முனைகிறபோது, அங்கு இருக்கக்கூடிய Government rate-லிருந்து ½ மடங்கு சேர்த்து. 1½ மடங்கு கொடுத்து பிரைவேட் negotiation-லே வாங்கலாம் என்ற அளவிற்குத்தான் முன்வந்து இருக்கிறதேயொழிய, market rate-ஐ இந்த அரசு மறந்துவிடுகிற காரணத்தாலே, இருக்கக்கூடிய நில உடைமைதாரர்கள் அத்தனைபேரும் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றுவிடுகிறார்கள். அதனால்தான் வழக்குகள் பெருகிக்கொண்டே போகின்றன. நாம் நிலத்தை எடுப்பது, ஆதிதிராவிடர் நலத் துறைக்கானாலும் சரி அல்லது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கானாலும் சரி அல்லது அரசு அலுவலகங்கள் போன்றவற்றிற்கு கையகப்படுத்த முனைகிறபோதும் சரி, அந்த நிலம் நமக்குக் கிடைக்காமலேயே போய்விடுகிறது. ஆகவே, பொதுவாக அரசு, நிலத்தை வாங்குகிறது என்று சொன்னாலே, அடிமாட்டு விலைக்குத்தான் வாங்க வருகிறது என்று பயந்துகொண்டு எல்லோரும் நீதிமன்றத்திற்கு முதலில் போய்விடுகிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அங்கு இருக்கக்கூடிய market rate-ஐக் கொடுத்து வாங்குவதற்கு இந்த



அரசு தயாராகிவிடும் என்று சொன்னால், இந்த வழக்குகள் எல்லாம் குறையும். முறையீடு போன்ற பிரச்சினைகள் வராது. நாம் எந்த நோக்கத்திற்காக நிலத்தை எடுக்கிறோமோ அதற்கு நிலம் உடனடியாகக் கிடைத்துவிடும் என்பதை நான் அரசுக்குத் தெரிவித்து, இந்த நிலத்தை கையகப்படுத்தக்கூடிய விஷயத்தில், Government rate-லிருந்து கூடுதலாக ½ மடங்கு கொடுத்து, 1½ மடங்கு விலை கொடுத்து வாங்கலாம் என்ற நியதியைக் கொண்டு வரவேண்டும் என்றும் market rate-ஐக் கொடுத்து வாங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்றும் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்த மாவட்ட ஆட்சியருக்கும் நில நிர்வாக ஆணையருக்கும் உள்ள நிதி அதிகார வரம்பினை உயர்த்துகின்ற ஒன்றைப்பற்றி நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாறும் என்ற கொள்கையைத் தவிர மற்றவை எல்லாம் மாறும் என்ற தத்துவத்திற்கு ஏற்ப, மாறிவரும் சமுதாயச் சூழலில் நாமும் இந்தச் சட்ட திட்டங்களை மாற்றிக்கொள்ள வேண்டியக் கட்டாயத்தில் இருக்கிறோம். தன்னிகரில்லா தமிழக முதல்வரின் பொன்னான ஆட்சியில் இந்தத் தமிழகமே ஒரு தொழில் பூங்காவாக பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது. உற்பத்திக்கு அடிப்படைத் தேவைகளில் முக்கியமானது நிலமாகும். தொழிற்சாலைகளுக்காகவும், நிலக்கரிச் சுரங்கங்களுக்காகவும், அகல இரயில் பாதைகளுக்காகவும், அனல் மின் நிலையங்களுக்காகவும் இப்போது ஏராளமான நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்படுகின்றன. ஏழை எளியவர்களின் நலனை முன்னிட்டு வீட்டுமனைப்பட்டா, வளர்ச்சித் திட்டங்கள், மத்திய அரசுத் திட்டங்கள் போன்றவைகளுக்காகவும் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நிலத்தின் மதிப்பும் பணத்தின் மதிப்பும் எதிரும் புதிருமாக இயங்கி வரும் நிலையில், நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நில நிர்வாக ஆணையருக்கும் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள நிதி வரம்பு அதிகாரங்கள் போதுமானதாக இல்லை. இந்த நிலங்களைக் கையகப்படுத்துவதில் தாமதமும், நடைமுறைச் சிக்கல்களும் சில நேரங்களில் ஏற்படுகின்றன. நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு அளித்த

பரிந்துரையின்பேரில், மாவட்ட ஆட்சியருக்கு தற்போது இருக்கும் அதிகபட்ச நிதி வரம்பான ரூபாய் 5 இலட்சம் மதிப்பும், 10 ஏக்கா பாப்பும் என்பதை ரூபாய் 25 இலட்சம் மதிப்பும் 40 ஏக்கர் பரப்பும் என உயர்த்தி, நில நிருவாக ஆணையருக்கு இருக்கும் அதிகபட்ச நிதி வரம்பான ரூபாய் 5 இலட்சத்திற்கு மேலும் 20 இலட்ச ரூபாய்க்கு மேற்படாமலும் என்பதை 25 இலட்சத்திற்கு மேற்பட்டு 50 இலட்ச ரூபாய்க்கு மேற்படாமலும் என்றும், 20 ஏக்கர் பரப்பளவிற்கு மேற்படாமல் என்பதை 75 ஏக்கருக்கு மேற்படாமல் என்றும் நிதி அதிகாரங்களை உயர்த்தி ஆணையிட அரசு முடிவெடுத்துள்ளது. மேற்படி முடிவிற்கு சட்டவடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துமாறு உள்ள 1896 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் (மையச் சட்டம் 1/1894) 4(1)(ஏ) எனும் பிரிவின், ஏ மற்றும் பி எனும் கூறுகளைத் தற்போது செய்யப்பட இருக்கும் சட்டத் திருத்தம் மாற்ற வழிவகை செய்கின்றது. அதற்கான திருத்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 17-05-1999ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக (குறுக்கீடு) முதலிலே பேசவில்லை என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் ஏற்கெனவே கிராம சபாவிற்கும் அங்கேயிருக்கக்கூடிய உள்ளாட்சி மன்றத்திற்கும் விளம்பரப் போர்டுகளை எல்லாம் அவர்கள் வைப்பதற்கு, அவர்கள் வரி விதிப்பதற்கு, லைசென்ஸ் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரேயொரு இடத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தலுக்கு நிற்கிறபோது, அவர்களுக்கு மட்டும் நீங்கள் விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பற்றி அதிலே சொல்லப்படவில்லை. தற்போது நாடாளுமன்றத் தேர்தல்தான் உடனடியாக வரப்போகிறது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு உரிய உறுப்பினர்கள் போர்டு வைத்தால், அவர்களுக்கு வரிவிதிக்கிற நிலைமை வந்துவிடும். அவர்களிடம் அனுமதி பெற வேண்டும் என்கிற நிலைமை வந்துவிடும். ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, பொதுவாக நாடாளுமன்றத் தேர்தலையும், சட்டமன்றத் தேர்தலோடு இணைத்து, அதற்கான விளம்பர போர்டுகள் —உள்ளாட்சிகளுக்கு இப்போது இடைத் தேர்தல்கள்கூட வரவிருக்கிறது. அதற்குக்கூட போர்டு வைப்பார்கள் — அதற்கும் வரிவிதிக்கப்படக் கூடாது; லைசென்ஸ் கேட்கக் கூடாது. ஆகவே தேர்தல் என்றாலே, அவை எல்லாவற்றிற்கும் விதிவிலக்குக் கொடுத்துவிடலாம் என்ற ஒரு நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறையை ஏற்று, இந்த விதியிலே இடம் பெறச் செய்யலாம் என்பதைத் தெரிவித்து, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

53-108—43

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 10. அரசினர் தனித் தீர்மானங்கள்

### (அ) மாநிலங்களின் பொதுக் கடன் மற்றும் அதனோடு தொடர்புடைய இடைநிகழ்வுகள் அனைத்தையும் முறைப்படுத்த இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியானச் சட்டம் கொண்டுவர நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் தனித் தீர்மானங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மாநிலங்களின் பொதுக் கடன், மற்றும் அதனோடு தொடர்புடைய, அல்லது அதன் துணையான அல்லது அதன் இடைநிகழ்வுகள் அனைத்தையும் முறைப்படுத்த இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியானதொரு சட்டம் இருப்பது நலம் என்று தமிழ்நாடு சட்டப் பேரவை கருதுவதாலும்;

அத்தகைய சட்டத்தின் நுதல்பொருள், முக்கியமாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 7-வது அட்டவணையல் பட்டியல்-II-ஐச் சேர்ந்த 43-வது பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளுக்குத் தொடர்புடையதாக இருப்பதாலும்;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 249 மற்றும் 250 ஆம் பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ளதைத் தவிர மற்றபடி, மேற்சொன்ன பட்டியல் II-ன் 43-வது பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் குறித்து, மாநிலங்களுக்காக, இத்தகையதொரு சட்டத்தை இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதாலும்;



1944 ஆம் ஆண்டு பொதுக் கடன் சட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் சார்பாக இந்திய ரிசர்வ் வங்கி திரட்டும் கடன்களுக்குப் பொருந்தக் கூடியது என்பதாலும்;

இந்திய ரிசர்வ் வங்கி, அரசுப் பிணையங்களைப் பெற்றிருப்பவர்களுக்குத் திறமையான மேம்பட்ட சேவை அளிப்பதற்கு ஏதுவாக, 1944 ஆம் ஆண்டு பொதுக் கடன் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக, 'அரசுப் பிணையங்கள் சட்டம்' என்னும் புதியதொரு சட்டத்தை இயற்றுவது நலமாயிருக்கும் என்று கருதப்படுவதாலும்;

தற்போது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252-வது பிரிவைச் சேர்ந்த பகுதி (1)-ன்படி, அரசுப் பிணையங்கள், மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் துணையான அல்லது இடைநிகழ்வுகள் அனைத்தையும் சட்டத்தின் மூலம் முறைப்படுத்திட நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கலாம் என இப்பேரவை இதனால் தீர்மானிக்கிறது."

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான தமிழ்நாடு சட்டம் 1920-ன் இணைப்புப் பட்டியலில் ஆளுநரால் செய்யப்பட வேண்டிய வரைவுத் திருத்தங்களுக்கு ஒப்புதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 மே 18

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான (தமிழ்நாடு சட்டம் V-1920) IV ஆம் இணைப்புப் பட்டியலின் பகுதி-1 என்பதில் 11 ஆம் மற்றும் 28 ஆம் விதிகளை விட்டுவிடுகின்ற, 12 ஆம் விதியை மாற்றியமைக்கின்ற மற்றும் 26-B எனும் விதியைப் புகுத்துகின்ற மேற்சொன்ன சட்டத்தின் 305 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாடு ஆளுநரால் செய்யப்பட வேண்டியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின் 305-A எனும் பிரிவினால் கோரப்படுகின்றவாறு ஒப்புதலளிக்கப்படுகிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

## வரைவுத் திருத்தங்கள்

*1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான (தமிழ்நாடு சட்டம் V-1920) IV ஆம் இணைப்புப் பட்டியலில் பகுதி-L என்பதன்கீழ்,-*

(i) *11 ஆம் விதி விட்டுவிடப்படுதல் வேண்டும்;*

(ii) *12 ஆம் விதியில் "9, 10 அல்லது 11" என்றிருக்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "9 அல்லது 10" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;*

(iii) *26-A எனும் விதிக்குப் பின்பு, பின்வரும் விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—*

*"26-B வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழுவினால் எடுக்கப்படும் முடிவினை எதிர்த்துச் செய்து கொள்ளப்படும் மேல்முறையீடு எதுவும், சம்மந்தப்பட்ட மாவட்ட நீதிமன்றத்தில் வரிவிதிப்பு மேல்முறையீட்டுக் குழுவின் ஆணை பெறப்பட்டுள்ள தேதியிலிருந்து முப்பது நாள் கால அளவுக்குள்ளாக தாக்கல் செய்து கொள்ளப்படலாம்"; மற்றும்*

(iv) *28 ஆம் விதி விட்டுவிடப்படுதல் வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1999 மே 18] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 11. தனி நபர் தீர்மானம்

**தனியார் துறை பேருந்து நிறுவனத் தொழிலாளர்கள் மத்திய, மாநில அரசுகள் இயற்றியுள்ள சட்டங்களின் பயன்களைப் பெற முழுமையான செயல்முறை நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க முத்தரப்புக் குழு அமைக்கக் கோருதல்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனி நபர் தீர்மானம், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் உள்ள தனியார் துறை பேருந்து நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 40,000 தொழிலாளிகள் மத்திய, மாநில அரசுகள் இயற்றியுள்ள சட்டங்களின் பயன்களைப் பெற முடியாத வண்ணம் பேருந்து நிருவாகங்களால் தடுக்கப்பட்டு வருகின்றனர். இச்சட்டங்கள் தனியார் துறை பேருந்து நிறுவனங்களில் செயல்முறைப்படுத்தாத நிலை தொடர்ந்து நிலவி வருகிறது.

எனவே, தனியார் துறை பேருந்து நிறுவனங்களில் இச்சட்டங்களை முறையாக செயல்முறைக்குக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை முழுமையாக ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைக்க முத்தரப்புக் குழு ஒன்றினை இம்மாநில அரசு நியமிக்க வேண்டும் என்று இப்பேரவை கோருகிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

முற்பகல் 11-50

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவசியமும், தேவையும் அதிகரித்து இருக்கின்ற காரணத்தால், நான் இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையிலே முன்மொழிந்து இருக்கின்றேன். ஒரு விசித்திரமான நடைமுறை அனுபவம் என்னவென்று கேட்டால், தமிழகத்தில் தனியார் துறையில் 40 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு எத்தகைய உரிமைகள், சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று சட்டம் தெளிவாக வரையறுத்திருக்கிறது. சட்டம் வரையறுத்திருக்கிற உரிமைகளையும், சலுகைகளையும் தொழிலாளிகளுக்கு நிருவாகம் கொடுக்கின்றதா, அமல்படுத்துகின்றதா என்பதைக் கண்காணிக்கவும், அமல்படுத்துவதற்கான நிலைமைகளை மேற்கொள்வதற்கு Enforcement Wing செயல்படுகிறது. ஆனால் சட்டங்கள் நிறைவேறுவது இல்லை. தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. தனியார் நிறுவனங்களில் 40 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். இந்த 40 ஆயிரம் தொழிலாளர்களுக்கு எத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று சட்டமும் தெளிவாக வரையறுத்து இருக்கிறது. சட்டத்தை அமல்படுத்துவதற்கென்று அரசுத் துறையிலே Enforcement Wing-ம் இருக்கிறது. ஆனால் சட்டம் செயல்படவில்லை. இது ஆச்சரியமாக இல்லையா? ஏன் இந்த நிலை? நடைமுறையில் தொழிலாளர்கள் உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட குறிப்பிடுகிறார்கள், சட்டத்தை எடுத்துவிடலாமா என்று. சட்டத்தை எடுத்துவிடுவது அல்ல. சட்டங்களை அரிக்கின்ற பெரும் கரையான்களாக இந்தத் தனியார் முதலாளிகள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி மரக்கட்டைகளை கலையான் செல்லரிக்க வைத்து விடுகிறதோ அதைப்போல சட்டங்களையே செல்லரிக்க வைக்கின்ற கரையான்கள்தான் இந்தத் தனியார் மோட்டார் முதலாளிகள். இந்தத் தனியார் மோட்டார் முதலாளிகள் பல்வேறு நடவடிக்கைகளில் சட்ட விரோதமாக செயல்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, நீங்கள் பார்ப்பீர்களேயானால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் புதிய ஆட்சி





அமைந்ததற்குப் பின்னால் தமிழ்நாட்டில் விழிப்படைந்த தனியார் பஸ் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தொழிற்சங்கம் அமைத்தார்கள். தொழிற்சங்கம் அமைத்ததற்காகவே 500 தொழிலாளர்கள் வேலையிலிருந்து சட்டவிரோதமாக நீக்கப்பட்டுவிட்டார்கள். இந்தியாவிலே தொழிலாளர்கள் தங்கள் குறைகளை வெளிப்படுத்திக்கொள்வதற்காக, உரிமைகளை வலியுறுத்துவதற்காக தொழிற்சங்கம் அமைத்துக்கொள்ளலாம் என்று 1926 ஆம் ஆண்டிலேயே, வெள்ளைக்காரன் காலத்திலேயே சட்டம் வந்துவிட்டது.

ஆனால் இன்றைக்கு 1999-ஆம் ஆண்டிலே தொழிற்சங்கத்தை உருவாக்கியதற்காக, தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக, தொழிற்சங்கரீதியாக தங்களின் சட்டரீதியான உரிமைகளை வலியுறுத்தியதற்காக இந்தத் தனியார் பேருந்து முதலாளிகள் 500 தொழிலாளர்களை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அது பல்வேறு கட்டங்களைக் கடந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இதில் விசேஷமாகத் தலையிட்டு 3 மூத்த அமைச்சர்களின் தலைமையில் முதலாளிகளின் சங்கப் பிரதிநிதிகளையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து ஒரு சுமூகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலே சொல்லப்பட்ட ஆலோசனைகளையும் தனியார் முதலாளிகள் எடுத்துக் கொள்ளவில்லை; நிறைவேற்றவில்லை. அதேமாதிரி இறுதியாக, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்திய இறுதிக்கட்ட நிலையில், தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை வேலைக்கு எடுத்துக்கொண்டு மற்ற பிரச்சினைகளுக்கு ஒரு சட்டரீதியான தீர்வு காண்பது என்று முடிக்கப்பட்டது. அதிலேயும் அமைச்சர் அவர்களிடத்திலே அவர்கள் ஒப்புக்கொண்டபடி அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். நான் இங்கே ஏன் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து வலியுறுத்துகிறேன் என்று சொன்னால், 3 மிக முக்கியமான பிரச்சினைகளுக்காக வலியுறுத்துகிறேன். ஒன்று, சங்கம் சேர்வது என்பது Fundamental right ஒரு தொழிலாளி சங்கரீதியாகச் செயல்படுவது அடிப்படை உரிமை. அந்த அடிப்படை உரிமையை மறுக்கிறார்கள் இந்தத் தனியார் மோட்டார் முதலாளிகள். இந்தத் தனியார் மோட்டார் முதலாளிக்ள் மறுப்பது மட்டுமல்ல. சட்டரீதியான உரிமைகளை அனுபவிக்க

முயன்றதைச் சட்ட விரோதக் குற்றம் என்கிறார்கள். சட்டரீதியான உரிமைகளை அனுபவிப்பது குற்றமா? சட்டரீதியான உரிமைகளை வழங்கவேண்டுமென்று வலியுறுத்தினால் குற்றமா? இல்லை. ஆனால், வலியுறுத்தியதைக் குற்றச் செயலாகக் கருதி dismiss செய்கின்றார்கள். இந்த dismiss சட்டவிரோதமானது. இது தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றிருக்கிறது. தமிழ்நாடு தனியார் மோட்டார் முதலாளிகளைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. மிகுந்த செல்வாக்கு படைத்தவர்கள். அதிகார மட்டத்திலிருந்து கீழே வரை சர்வ செல்வாக்கையும் செலுத்துகின்ற ஆற்றல் படைத்தவர்கள்தான் இந்தத் தனியார் முதலாளிகள். எனவே, நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது, திரும்பவும் நினைவுபடுத்துவது, தமிழ்நாட்டில் 40 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; இந்தத் தனியார் பஸ் கம்பெனிகளில். இந்த 40 ஆயிரம் தொழிலாளர்கள் எவ்வளவு சிரமத்திற்கு ஆளாகிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்லுகிறேன். அவர்களுடைய Driving Licence-ஐ நிர்வாகமே வாங்கி வைத்துக்கொள்ளும். சட்டப்படி ஒரு தொழிலாளி வேலைக்குச் சேர்ந்தால், எந்தத் தேதியிலிருந்து அந்தத் தொழிலாளி வேலைக்குச் சேர்ந்தான் என்பதற்குரிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். அந்த அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்குமேயானால் அந்தத் தொழிலாளி சட்டரீதியாக தன்னுடைய சர்வீஸை நீதிமன்றத்திலே நிரூபித்து, சட்டரீதியான உரிமைகளைப் பெற வாய்ப்பு இருக்கும். ஆனால் எல்லா முதலாளிகளும், Driving Licence-ஐ சட்ட விரோதமாக வாங்கி வைத்துக்கொள்வதோடு, இந்த அடையாள அட்டையை—வேலைக்குச் சேர்ந்த தேதியைக் குறிப்பிடுகின்ற அடையாள அட்டையை—வழங்குவதில்லை. அதுமட்டுமல்ல. அந்த முதலாளிகள் வெற்று பேப்பர்களிலே கையெழுத்து வாங்கி வைத்துக்கொள்கிறார்கள்.

பத்து பேப்பர்களிலே கையெழுத்து வாங்கி வைத்துக்கொண்டு, என்ன நடக்கிறது என்று சொன்னால், அந்தப் பேப்பர்களைப் பயன்படுத்தி பிரச்சினை வருகிறபோது இராஜிநாமா செய்ததாக, எழுதிவிடுகிறார்கள். அதுவும் பெரிய பிரச்சினை, தொழிற்சங்க இயக்கத்திற்கு ஒரு சவாலாக இருப்பது இந்தத் தனியார் முதலாளிகள்தான். இவர்கள் எந்தவகையிலேயும் தப்பித்துக் கொள்கிறார்கள். அரசியல் செல்வாக்கை, அந்த எம்.எல்.ஏ., இந்த எம்.எல்.ஏ. என்று இரண்டு பேரைப் பிடித்துக்கொள்கிறார்கள். வேறு வகையிலே செல்வாக்கைச் செலுத்திவிடுகிறார்கள். முதலாளிகளுக்கு ஆதரவான சிலபல வேலைகளெல்லாம் வந்துவிடுகின்றன.





இவற்றையெல்லாம் தடுப்பதற்கு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் போன்றவர்கள்கூட தீர்மானத்தை ஆதரித்து. அடுத்ததாகப் பேசுவார் என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஏன் அவரைக் கூப்பிடுகிறீர்கள்? நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரித்துப் பேசுவார் என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்த மாதிரி தொழிலாளர்கள் தொழிற்சங்கம் வைத்திருப்பதால், இதில் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், தொழிலாளர்களுக்கு ஆதரவான தீர்மானம் என்பதால், அவர் ஆதரிப்பார், ஆதரித்துப் பேசுவார் என்று நான் அனுமானிக்கிறேன்; அவ்வளவுதான். நடக்காமல்கூட போகலாம். அது வேறு விஷயம். ஆனால், இந்த மாதிரி தொழிலாளர்கள் சட்டப்படியான உரிமைகளை நிறைவேற்றுவதற்கு, சட்டப்படியான உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்வதற்கு சங்கடப்படுவதால் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் ஒரு உதாரணத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். என்னவென்றால், பல இடங்களிலே தொழிலாளர்கள் தொழிற்சங்கம் வைப்பார்கள். அப்படி வைத்த உடன், "நீ வேலைக்கு வரவேண்டாம்" என்று நிறுத்தி விடுகிறார்கள். துரதிருஷ்டம் என்னவென்று தெரியுமா? வேலைக்கு வேண்டாம் என்று தொழிலாளியை நிறுத்திவிடுவது ஒரு நொடிப்பொழுதில். சட்ட விரோதத்தை ஒரேயொரு நொடியில் அந்த முதலாளி, காலண்டர் காகிதங்களைக் கிழித்து, சுருட்டி, தெருவிலே வீசி எறிவதைப்போல, வேலை செய்துகொண்டிருக்கிற தொழிலாளியை சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்து விடுவார். இந்த முதலாளி செய்தது சட்ட விரோதம் என்று நிரூபிப்பதற்கு தொழிலாளி வாழ்க்கை முழுவதும் சுப்ரீம் கோர்ட் வரைக்கும் சென்று போராட வேண்டியிருக்கிறது. செத்து சுண்ணாம்பு ஆகிவிடுவான் அந்தத் தொழிலாளி; அவ்வளவு சங்கடம் இருக்கிறது.

இதிலே ஒரேயொரு பிரச்சினை என்னவென்றால், தொழிலாளி வேலைக்குச் சேர்ந்தவுடன்—எந்தத் தேதியில் என்று—உதாரணமாக 18-5-1999-ல் இந்தத் தொழிலாளி வேலைக்குச் சேர்ந்துள்ளார் என்று நிர்வாகத்தின் சீல் இட்டு, அடையாள அட்டை கொடுத்து விட்டோமானால், வேலைநீக்கம் செய்வது சட்ட விரோதமாக

தடுக்கப்பட்டுவிடும். முற்றாகத் தடுக்கப்பட்டுவிடும். அப்படியானால் இது ஒரு must என்று வரவேண்டும். It is a must என்று போடுவோமானால், இது கட்டாயம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் அடையாள அட்டையை Joining date போட்டுக் கொடுத்திருந்தால், கோர்ட்டிலே போய் இந்த தேதி வேலைக்குச் சேர்ந்தேன், சங்கம் வைத்ததால் என்னை நீக்கிவிட்டார்கள் என்று Evidence-ஐ Produce செய்து, தன்னுடைய நியாயத்தைச் சட்டரீதியாக நிலைநிறுத்திக் கொள்கிற வாய்ப்பு தொழிலாளிக்குக் கிடைக்கும் என்பதால், இப்படியெல்லாம் பல ஆலோசனைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, நிறைவாக மறுபடியும் நான் கோர்த்துச் சொல்கிறேன்; 40,000 தொழிலாளர்கள் தனியார் பேருந்துகளில் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு அமலாக்க வேண்டிய சட்டங்கள் எழுத்து வாரியாக எண்ணி, எண்ணி நிறைவேற்றப்பட்டுவிட்டன. அந்தச் சட்டங்கள் ஒழுங்காக நிறைவேறியிருக்கிறதா என்பதை கண்காணிக்க Enforcement Wing-ம் இருக்கிறது. ஆனால், நிறைவேறவில்லை. ஏன் நிறைவேறவில்லை என்பதை ஆலோசிக்க வேண்டுமா? இல்லையா? எனவே, ஆலோசிப்பதற்கு ஒரு கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்கள் நியாயத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக 4, 5 இடங்களில் போராடியபோது, அவர்கள் மீது Section 506/2-ன்கீழ் வழக்கு போடப்பட்டு அவர்களெல்லாம் சிறைக்குச் சென்றார்கள். பாவம் அந்தத் தொழிலாளர்கள், வேலையை விட்டு நிறுத்தப்பட்டதை எதிர்த்துப் போராடியதாலே பாதிக்கப்பட்டுவிட்டார்கள். அந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் வாங்க வேண்டுமென்று வலியுறுத்தினோம். ஆனால், கடைசியாக நீதிமன்றத்திலே என்ன ஆகிவிட்டது என்றால், வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. எனவே, இப்படி நெருக்கடியிலும், சிக்கலிலும் இருக்கின்ற இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஒரு முத்தரப்புக் குழுவைக் கட்டாயம் போட, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அங்கீகரிக்க வேண்டுமென்று நான் முன்மொழிந்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகளுடைய சட்டங்களின்படி பயன்கள், தனியார் துறை பேருந்து நிறுவனங்களிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குப் போய்ச் சேரவில்லை, 40,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன்பெற முடியாமல் தனியார் துறை பேருந்து நிறுவனங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முதலாவது குற்றச்சாட்டாகச்



சொல்லியிருக்கிறார். இது ஒரு பொதுவான குற்றச்சாட்டாக இருக்கிறதே தவிர, குறிப்பிட்டு எந்தெந்த நிறுவனங்கள், எந்த எந்தப் பகுதிகளில் அதுபோன்று தொழிலாளர்களுடைய சட்டங்கள் அவர்களுக்குப் போய்ச் சேராமல், தடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் உதாரணத்தின் மூலமாக, எடுத்துக்காட்டுகள் மூலமாக, ஆதாரத்தோடு specific-ஆக இந்த அவையிலேகூட சொல்ல வேண்டாம்; தனிப்பட்ட முறையிலே புகார் கொடுத்தால், துறை அதுகுறித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போலவே, உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையின் சார்பாக சட்டங்கள் அமல் நடத்தப்படுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொல்வது, உண்மைக்குப் புறம்பான தகவலாகும். எந்த ஒரு சட்டத்தையுமே முழுமையாக அமல்நடத்துகிறபோது சிலர் ஒத்துழைக்காமல் இருக்கலாம்; நிர்வாகத் தரப்பிலும் இருக்கலாம், அது இயற்கையானதும்கூட. அப்படிப்பட்ட நேரத்திலே அரசு சட்ட விதிகளுக்குட்பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமே விதிமுறைகளைச் சொல்லியிருக்கிறது. ஒன்று அபராதம் செலுத்த வேண்டும்; அல்லது சிறை தண்டனை பெற வேண்டும்; அவர்கள் மீது வழக்குப்போட்டு அந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இதற்காக துறையினுடைய அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். உதாரணத்திற்காகப் புள்ளிவிவரத்தோடு சொல்கிறேன். முறையான ஆய்வுகள் 5021 நடைபெற்றிருக்கின்றன. விடுமுறை ஆய்வுகள் 514 நடைபெற்றிருக்கின்றன. சிறப்பு ஆய்வுகள் 937 நடைபெற்றிருக்கின்றன. திடீர் ஆய்வுகள் 327 நடைபெற்றிருக்கின்றன. 1992 ஆம் ஆண்டிலே மட்டும் 636 பேர்மீது (வேலை அளிப்பவர்கள் மீது) வழக்கு போடப்பட்டு 1,76,940 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், சட்டங்கள் அமல்நடத்தப்படவில்லை என்று சொன்னால் இந்த வழக்குகளைப் போட்டிருக்க முடியாது, இந்த அபராதமும் செலுத்தியிருக்க முடியாது.

நண்பகல் 12-00

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் 5766 தனியார் பேருந்துகள் இருக்கின்றன. ஒரு பேருந்தை ஓட்டுவதற்கு Conductor இரண்டு, Driver இரண்டு என்று நான்கு பேரும் ஒரு Cleaner-ம் சேர்த்து 5 பேர் இருக்க வேண்டும். 5766 பேருந்துகள் என்றால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர் தமிழ்நாட்டில் இருக்க வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை நான் உண்மையிலேயே அழுத்தி வலியுறுத்திக் கேட்க விரும்புகின்றேன். இந்த 30 ஆயிரம் பேர் வேலை செய்வதாக தனியார் பஸ் நிறுவனங்கள் சட்டப்படியான Registers வைத்திருக்கின்றன என்பதை அவர்கள் நிரூபிப்பார்களா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த Motor நிறுவனமாக இருந்தாலும் இந்தச் சட்டத்தின்படி அவர்கள் Registration செய்து Certificate வைத்திருக்க வேண்டும். இதுசம்பந்தமான துறை ஆய்வாளர்கள் கேட்கிறபோது பரிசீலிக்கிறபோது அந்த Certificate-ஐக் கொடுக்க வேண்டும். அதுபோலவே, அடையாள அட்டைகளும், Service புத்தகங்களும் வழங்க வேண்டும். ஆய்வு என்று குறிப்பிடுவது அதைத்தான். மாண்புமிகு உறுப்பினரை இப்போது நான் கேட்கிறேன், இந்த ஊரில் இந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்களிடம் இதுபோன்ற Certificate இல்லை என்று இதுவரையிலும் அவர் புகார் கொடுக்கவில்லை. இனியும் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். பொதுவாக Certificate கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்றால் அதுகுறித்து நாங்கள் ஆய்வு செய்து கொண்டுதான் இருக்கிறோம். இந்த நிறுவனத்திலே இன்னாரிடத்திலே Certificate இல்லை என்று தொழிற்சங்கத்தின் மூலமாக தாராளமாக நீங்கள் புகார் கொடுக்கலாம். அது மட்டும் அல்ல. குறைந்தபட்சக் கூலியாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதுசம்பந்தமாக ஏறத்தாழ 20 Company-கள் மீது Claim Petition போட்டு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது தொழிலாளர் நலனுக்கான சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களை எங்களுடைய துறை அமல்நடத்தி வருகிறது. அதிலே சில குறைபாடுகள் இருப்பின், அமல் நடத்துவதில் நிருவாகம் ஒத்துழைக்கவில்லை என்று சொன்னால் வழக்குகளைப் போட்டு அபராதத்தைப் பெறுகிறோம். இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கு தயாராக இருக்கிறோம். பொதுவான



குற்றச்சாட்டுகளைச் சொல்லாமல் குறிப்பிட்ட குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் நடவடிக்கை எடுக்கிறோம்.

அடுத்து, இந்தச் சட்டங்கள் அமலாக்கம் செய்யப்படவில்லை, 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பொதுவான புகார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது State Labour Advisory Board என்று ஓர் அமைப்பு இருக்கிறது. தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அது தான் Supreme Body. கொள்கைகளை உருவாக்குகிற அமைப்பு. பல்வேறு பிரச்சினைகளை அதில் நாம் பேசியிருக்கிறோம். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், அரசாங்கத்தின் சார்பாக, தொழிற்சங்கங்களின் சார்பாக, தொழிலாளர் பிரதிநிதிகள் சார்பாக, அதைப்போல நிருவாகத்தின் சார்பாக ஒரு சட்ட அமலாக்கம் நடைபெற்றிருக்கிறதா இல்லையா என்பதற்கு இந்த State Labour Advisory Board மூலமாகவே நாம் விவாதிக்க முடியும். இதில் அரசாங்கம் கலந்து கொள்கிறது. நானும் கலந்து கொள்கிறேன், அமைச்சர் என்ற முறையில். தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். நிருவாகம் கலந்துகொள்கிறது. இந்த 40,000 பேர் பாதிக்கப்பட்ட விவகாரத்தையும், இவர்களுக்கு இந்தச் சட்டம் சரியாக அமல்நடத்தப்படாத விவகாரத்தையும் ஆதாரத்தோடு நீங்கள் அங்கே சொன்னால் அதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே, இதற்கு மட்டும் முத்தரப்பு என்று சொன்னால் சரியாக இருக்குமா? இதற்காக ஏராளமான, அதாவது 30-க்கும் மேற்பட்ட சட்டங்கள் இருக்கின்றன. நாளைக்கு வந்து, இந்தச் சட்டமும் அமல் நடத்தப்படவில்லை; எனவே இதற்கு ஒரு முத்தரப்புக் கமிட்டி போடுங்கள் என்று சொன்னால், முத்தரப்புக் கமிட்டிகள்தான் முழுக்க முழுக்க இருக்கும். வருகிற 8 ஆம் தேதி SLAB Meeting நடைபெற இருக்கிறது. அதிலே பேசிக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அடுத்து, மாண்புமிகு உறுப்பினருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, கலைஞருடைய அரசு ஏற்பட்டதற்குப் பிறகுதான், இந்த Bus தொழிலாளர்களுடைய பிரச்சினைகளையும் பரிவோடு நாம் கவனித்து வருகிறோம். 5 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும்

நிறுவனத்திற்கு மட்டுமே இந்தச் சட்டம் பொருந்தும். ஆனால் இப்போது ஒரு ஆள் இருந்தாலும்கூட இந்தச் சட்டம் பொருந்த வேண்டுமென்று சொல்லி, டெல்லியிலுள்ள மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் சட்டத் திருத்தம் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்திற்கு டெல்லிக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. அரசு 3 மாத Notification கொடுத்து, ஒருவர் இருந்தாலும், அந்தத் தொழிற்சாலைக்கு இது செல்லும் என்று செய்ய சட்டத்திலேயே, மத்திய சட்டத்திலேயே வழிவகை இருக்கிறதே? அந்த வழிவகையின்படி, தொழிலாளர் நலத் துறை ஒரு Notification விட்டு அவற்றைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சட்ட ரீதியான பிரச்சினை. Section 3(4)-லே,

"It applies to every motor transport undertaking employees..... 5 or more .... motor transport workers...." என்றிருக்கிறது. இதற்கு mere notification போதுமா? அல்லது amendment தேவையா என்று கலந்து, அதை விவாதித்துதான் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர், திரும்பவும் அதை வலியுறுத்திச் சொல்கிற காரணத்தினால், மறு view சொல்கிறபோது, நாங்களும் சட்டத் துறையைக் கலந்து, அதிகாரிகளைக் என்ற வகையில் மீண்டும் நாங்கள் பரிசிலிக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், நான் இன்னொன்றையும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, தனியார் முதலாளிகளைப் பொறுத்தமட்டிலே, கரையான்களாக இருந்து சட்டங்களை அவர்கள் செல்லரிக்கச் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அது சில இடங்களிலே இருந்தாலும் அதைத் தடுக்கிற முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாக, தனியார் Motor போக்குவரத்து நிறுவனங்களிலே, தொழிற்சங்கங்கள் வைத்துக் கொள்கிற உரிமை இல்லை என்பதை நான் முழுக்க முழுக்க மறுக்கிறேன். காரணம், இதுவரைக்கும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் புகாரைச் சொல்லி வந்திருக்கிறார்கள். அவர் தொழிற்சங்கத்



தலைவர். எந்த இடத்திலே தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்பட்டாலும், Industrial Disputes Act, Section 25-லே, புகார் கொடுத்தால், விசாரித்து, வழக்குத் தொடர்வதற்கு வசதியாக இருக்கும். 6 மாதம் சிறைத் தண்டனை அல்லது 500 ரூபாய் அபராதம் என்று ஒரு பிரிவு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திலே பேசுவதை நான் வரவேற்கிறேன். ஆனால், வெளியிலே, இதற்கு என்று துறை இருக்கிறது; இதற்கு என்று சட்டம் இருக்கிறது; நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறது. இதுவரைக்கும் அவருடைய தொழிற்சங்கத்தின் சார்பாக அருள்கூர்ந்து— நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டாலும்— அவர்கள் புகார் மனு கொடுக்கவில்லை. இனிமேலாவது அவர்கள் கொடுக்க வேண்டும். நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்றையும் நான் தெரிவிக்கவிரும்புகிறேன். un-labour practice எதுவாக இருந்தாலும், தொழிலாளர்களுக்கு விரோதமாக எதுவாக இருந்தாலும், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

தனியார் Motor போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பற்றி இங்கே பேசினார்கள். பலமுறை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுரை வழங்கி, இதுகுறித்துப் பேசுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் 10-5-1997-லே, 24-5-1997-லே மற்றும் 18-7-1997-லே பேசினோம். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், நானும் பேசினோம். அது மட்டுமல்ல; எங்களுடைய Commissioner அவர்களும் பல மண்டலங்களுக்குச் சென்று இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். நாங்களும் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். கடைசியாக 427 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்; அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்; குறைந்தது இவ்வளவு பேர்களையாவது வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அவர்களும் எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். மீதி, பிரச்சினைகள் காரணமாக, Tribunal-க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தொழிற்சங்கத்தின் சார்பாக தியாகராஜன் அவர்கள் இந்த முடிவை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆகவே, நான் திரும்பச் சொல்வது, 40 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைக்குப் புறம்பான தகவல்; துறை செயல்படவில்லை என்பது உண்மைக்குப் புறம்பான தகவல்; இன்னும் சொல்லப்போனால், தொழிற்சங்க உரிமை

மறுக்கப்படுகிறது என்பதும் உண்மைக்குப் புறம்பான தகவல்; ஆதாரத்தைச் சொல்லுங்கள்; நடவடிக்கை எடுக்க கலைஞர் அரசு என்றும் தயார். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன்.

பிற்பகல் 12-10

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விஷயங்களுக்கு பதில் சொல்வது அவசியம் என்று நான் கருதுகிறேன். ஆனால், சுருக்கமாக முடித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இதை ஒரு பிரச்சினையாக ஆக்க விரும்பவில்லை. அதனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டது உண்மைக்குப் புறம்பானது என்று சொன்னார்கள். அதற்கு ஒரு நான்கு வரிகளுக்கு முன்னால், அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 427 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பது குறித்து கண்டறியப்பட்டது என்று குறிப்பிடுகிறார்கள். ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் தொழிற்சங்க உரிமையை வலியுறுத்துவதற்காக, இந்தத் தொழிலாளரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை என்று சொன்ன அமைச்சர், அந்த மூச்சு முடிப்பதற்கு முன்னாலேயே அடுத்து ஒரு வரியைச் சொல்கிறார். என்ன சொல்கிறார் என்றால் நான் சொன்ன விஷயத்தைச் சொல்கிறார். ஆகவே, அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். நானூற்றிச் சொச்சம் பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பது எந்தக் காரணத்திற்காக? தொழிற்சங்க உரிமைகளை வலியுறுத்தியதற்காக, தொழிற்சங்கத்தை ஏன் தொழிலாளி வைத்தான்? அரசு இயற்றிய சட்டத்தை நிருவாகம் அமலாக்கவில்லை என்பதால்; அரசுச் சட்ட அமலாக்க, மருக்கிறது என்பதால், அவர்கள் தொழிற்சங்கத்தை வைத்தார்கள். தொழிற்சங்கம் வைத்தால் வேலைநீக்கம் செய்யப்பட்டு விட்டார்கள். அந்த வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலைத்தான் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர் சொன்ன பதிலிலேயே, வேலை நீக்கம் செய்யப்பட்டது, நம்முடைய மாண்புமிகு மூத்த அமைச்சர் ஆற்காட்டார் அவர்களும் அதிலே பங்கு பெற்றார்கள், நம்முடைய மாண்புமிகு பொன்முடி அவர்களும் பங்குபெற்றார்கள். அவர்கள் எல்லாம் இருந்து பழிவாங்கப்பட்டதைப் பார்த்தார்கள். இன்னும் சொல்கிறேன், Petitions எல்லாம் போடலாம், அதெல்லாம் நடக்கபோவதில்லை, நடப்பதற்கான



வழியே இல்லை. அதனால்தான் இதை நான் வலியுறுத்தினேன். நான் திரும்பச் சொல்வது என்னவென்றால் பழி வாங்கப்பட்டிருப்பது உண்மை. அந்தத் தொழிலாளிகள் அப்பாவி தொழிலாளிகள். தங்களுடைய உரிமையை எப்படி நிலைநாட்டிக்கொள்வது என்ற சட்ட ஞானம் அற்றவர்கள். அந்தச் சட்ட ஞானத்தை பெற்றுள்ளவர்களைப் பயன்படுத்திக்கொள்கிற காசு வலிமையற்றவர்கள். இப்படி பல நெருக்கடிகள், சிக்கல்கள் இருக்கின்றன. அப்படியெல்லாம் சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் என்பதால் எதிர்த்து ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காகவே சொல்லவில்லை. உண்மையிலேயே இதைச் செய்வது அவசியம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. மனம் இருந்தால் செய்யலாம்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாறி, மாறி பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அவர் ஒரு தீர்மானத்தை வலியுறுத்த....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** ஒரு தவறான தகவல் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன், வேறு ஒன்றும் சொல்லவில்லை. பேச்சை continue பண்ணவில்லை; மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச்சைத் தொடரவில்லை, பேசிவிட்டேன். ஒரே ஒரு தகவலை மட்டும் இங்கு நான் சொல்ல விரும்புகிறேன். தொழிற்சங்க உரிமைகளை மறுத்த காரணத்தாலே இந்த 427 தொழிலாளர்கள் நீக்கப்பட்டார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பான தகவல். ஒழுங்கு நடவடிக்கை காரணமாக நீக்கம் செய்யப்பட்டவர்கள் 6 பேர்; குற்ற வழக்கிலே சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் என்ற பிரச்சினையின் அடிப்படையிலே 49 பேர்; அதுபோலவே கடுமையான குற்ற அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற முறையிலே 40 பேர்; மீண்டும் எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று வலியுறுத்தாதவர்கள் 25 பேர்; பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் எங்கே போனார்கள் என்ற விவரமே தெரியாதவர்கள் 8 பேர். இப்படிப் பல்வேறு தலைப்புகளிலே பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தாலும், அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இப்போது ஏறத்தாழ 98 தொழிலாளிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எல்லோருமே ஒப்புக்கொண்டோம், ஆனால், இப்போது பேச்சு வார்த்தைக்குப் பிறகு

48 பேர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்பதற்காக, தீர்ப்பாயத்திற்கு விடப்பட்டிருக்கிறது. தொழிற்சங்க உரிமையால் அவர்கள் நீக்கப்பட்டார்கள் என்று அவரும் சரி, அவருடைய சங்கத் தலைவரும் சரி புகார் கொடுக்கவில்லை. ஆனால், நீக்கப்பட்டதற்கு உள்நோக்கம் இது என்று விளக்குகிறார்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் சொல்கிற சொல்லுக்கு பொறுப்பு ஏற்க வேண்டும். நாங்களே கைப்பட எழுதி, 8 சட்டமன்ற உறுப்பினர்கள் கைப்பட எழுதிக்கொடுத்து இருக்கின்றோம். எங்களுடைய A.I.T.U.C. யூனியன் சார்பில் எந்த எந்த நிறுவனங்களில் தனியார் முதலாளிகள் சட்டவிரோதமாக தொழிலாளர்களை நீக்கியிருக்கிறார்கள் என்ற பட்டியலைப் போட்டுக் கொடுத்திருக்கிறோம். பெயர் வாரியாகக் கொடுத்திருக்கிறோம். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. கடைசியில் திரும்பி கலைஞர் அரசுக்கு என்ற அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குள் அவர் போய்விடக்கூடும் என்பதால் நான் அதையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. நான் கேட்கிற கேள்விக்கு என்னிடம் அவர் பதில் சொல்லலாம், பதில் சொல்லவில்லையென்றால் விட்டுவிடலாமே தவிர, பிரச்சினையைத் திசை திருப்பி, பந்தை திசை திருப்பியடிப்பது நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், நீங்கள் உங்களுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறீர்களா?

**திரு. கே. சுப்பராயன்:** அரசு தரப்பில் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்து நான் வலியுறுத்த விரும்பவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வலியுறுத்துகிறீர்களா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை வலியுறுத்துகிறேன். ஆனால் அரசு நிலை என்னவென்று தெளிவாக இன்னும் சொல்லவில்லை.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்திற்கும் இங்கே நடைபெற்ற விவாதத்திற்கும் பெரும்





இடைவெளி இருப்பதாகவே நான் கருதுகின்றேன். ஏனென்றால், சுப்பராயன் அவர்கள் கருதுவது அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு இருப்பது போன்ற உரிமைகள் தனியார் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் இருந்திட வேண்டும், அது இல்லாதபட்சத்தில் அவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடுகிறது என்று குறிப்பிட்டு 40,000 தொழிலாளர்கள் சார்ந்துள்ள தனியார் போக்குவரத்துத் துறைகளிலே உள்ள தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக ஒரு சட்டம் அமைய வேண்டும், அதைப்பற்றி யோசிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் என்பதுதான். அது தான் அவருடைய தீர்மானம். ஆனால், நடைபெற்ற விவாதம், ஏற்கெனவே நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே எவையெவை உண்மையானவை, எவையெவை உண்மை அற்றவை, என்பவைபற்றி நீண்டுபோய்விட்ட காரணத்தால் நான் அவருக்குச் சொல்கின்றேன், தனியார் பேருந்துகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுடைய பாதுகாப்பைக் கவனிக்க, அந்தப் பாதுகாப்பைத் தருவதற்கு என்னென்ன வழிகளில் அரசு முயற்சி எடுக்கலாம் என்பதைப் பற்றி நிச்சயமாக யோசிப்போம் என்பதை எடுத்துக்கூறி, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தின் அடிப்படையிலே நான் தீர்மானத்தைத் திரும்பப் பெறுகிறேன். வலியுறுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களின் தனி நபர் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு மற்றும் நியமனம்

### (1) மதிப்பீட்டுக் குழு-உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1999-2000 ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:-

1. திரு. அ.லெ. சுப்பிரமணியன்
2. திரு. தி.ப. ஆறுமுகம்
3. திரு. பால. ஆனந்தன்
4. திரு. டி. கருப்புசாமி
5. டாக்டர் ஆ. ஞானசேகரன்
6. திரு. பே. மாரி அய்யா
7. திரு. ஜி.பி. வெங்கிடு
8. திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
9. திரு. த. பூவேந்தன்
10. திரு. மா. இராமச்சந்திரன்
11. திரு. ந. பாண்டுரங்கன்
12. திரு சு. சிவராஜ்
13. திரு. எ. தெய்வநாயகம்
14. திரு. க. மணிவர்மா
15. திரு. ஜி. பழனிசாமி
16. திரு. சி. வேலாயுதன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1999-2000 ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்கு பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 196-ன்கீழ் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.



(2) பொதுக் கணக்குக் குழு-உறுப்பினர்கள் தேர்வு

1999-2000 ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:-

1. திரு. வி.கே. லட்சுமணன்
2. திரு. ம. முத்துராமலிங்கம்
3. டாக்டர் வை. இராமசாமி
4. திரு. ஆர். சிவராமன்
5. திரு. பி. இராசமாணிக்கம்
6. திரு. பா. கோபால்
7. திரு. கொ.வீ. நன்னன்
8. திருமதி வாசுகி முருகேசன்
9. திருமதி ஆர். சரஸ்வதி
10. திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்
11. திரு. இ. புகழேந்தி
12. திரு. சி. ஞானசேகரன்
13. திரு. ஆர்.ஆர். சேகரன்
14. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்
15. திரு. கே. சுப்பராயன்
16. திரு. முகம்மது கோதர் மைதீன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1999-2000 ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

நிதித் துறைக்கு பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 204-ன்கீழ் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (3) பொது நிறுவனங்கள் குழு-உறுப்பினர்கள் தேர்வு

1999-2000 ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:-

1. திரு. வ. வேலுசாமி
2. திரு. குத்தாலம் பி. கல்யாணம்
3. திரு. தங்கம் தென்னரசு
4. திரு. ஏ. இராமலிங்கம்
5. திரு. இ.ஜி. சுகவனம்
6. திரு. ஆர். தமிழ்ச்செல்வன்
7. திரு. பெ.சு. திருவேங்கடம்
8. திரு. கே.எம். விஜயகுமார்
9. திரு. பி.என். சுப்பிரமணி
10. திரு. சீ.வெ கிருஷ்ணன்
11. திரு. ந.பூ. இராமஜெயம்
12. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
13. திரு. பா. வேல்துரை
14. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்
15. திரு. ம. அப்துல் லத்தீப்
16. திரு. லா. சந்தானம்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக



இருப்பதால், 1999-2000 ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 214-ன்கீழ் திரு. வ. வேலுசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

பிற்பகல் 12-20

### (4) உரிமைக் குழு - உறுப்பினர்கள் தேர்வு

1999-2000 ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. சுப. தங்கவேலன்
2. டாக்டர் மு தேவராஜன்
3. திரு. கே.கே. வீரப்பன்
4. திரு. ம. சண்முகம்
5. திரு. இரா. ஆவுடையப்பன்
6. திரு. இரா. மகேந்திரன்
7. திரு. ஏ.எம். ராமசாமி
8. திருமதி சுப்புலட்சுமி செகதீசன்
9. திரு. மு.பெ. சாமிநாதன்
10. திரு. டி. சுதர்சனம்
11. திரு. ந. கருப்பண்ண உடையார்
12. திரு. எஸ். திருநாவுக்கரசு
13. திரு. நா. பெரியசாமி
14. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக

[பேரவைத் தலைவர்] [1999 மே 18

இருப்பதால், 1999-2000 ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். பேரவை விதி 227(3)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(5) பேரவை அலுவல் ஆய்வுக்குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆண்டிற்கான பேரவை அலுவல் ஆய்வுக் குழுவிற்கு (Business Advisory Committee) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்
7. அரசு தலைமைக் கொறடா
8. திரு. ஆர். சொக்கர்
9. திரு. ஜி. பழனிசாமி
10. திரு. ம. அப்துல் லத்தீப்
11. திரு. இரா. தாமரைக்கனி
12. திரு. எஸ். திருநாவுக்கரசு
13. திரு. ஐ. கணேசன்
14. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்
15. திரு. லா. சந்தானம்
16. திரு. சி. வேலாயுதன்
17. திரு. டி. மணி
18. டாக்டர் க. கிருஷ்ணசாமி
19. திரு. பி. வெங்கடசாமி



1999 மே 18] [பேரவைத் தலைவர்]

பேரவை விதி 231 (1)-ன் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவர் ஆவார்.

(6) சட்டவிதிகள் ஆய்வுக் குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவிற்கு (Committee on Delegated Legislation) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்.

1. திரு. ஏ. ராசேந்திரன்
2. திரு. வெ.அ. ஆண்டமுத்து
3. திரு. துரை. சந்திரசேகரன்
4. திரு. ரா. சேதுநாதன்
5. திரு. குழந்தை தமிழரசன்
6. திரு. மு. பன்னீர்செல்வம்
7. திரு. வி. முத்து
8 திரு. த. நடராசன்
9. திரு. இரா. மணிமாறன்
10. திரு. ஆர். சொக்கர்
11. டாக்டர் பத்மா
12. திரு. ஜி. நிஜாமுதீன்

பேரவை விதி 240-ன்கீழ், திரு. ஏ. ராசேந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(7) அரசு உறுதிமொழிக் குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு (Committee on Government Assurances) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்.

1. திரு. கே. ரவி அருணன்
2. திரு. கே. ஆர். ஜி. தனபாலன்
3. திரு. இரா. பெர்னார்டு
4. திரு. மு. ந. ஜோதிக்கண்ணன்
5. திரு. ரெ. செல்வம்

[பேரவைத் தலைவர்] [1999 மே 18

6. திரு. ஆர். சிவானந்தம்
7. திரு. பா. துரைசாமி
8. திரு. வி. பி. இராசன்
9. திரு. தா. உதயசூரியன்
10. திரு. பி.ஆர். சுந்தரம்
11. திரு. வை. சிவபுண்ணியம்
12. திரு. என். ஆர். அழகராஜா

பேரவை விதி 249 (1)-ன்கீழ் திரு. கே. ரவி அருணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

### (8) பேரவை விதிகள் குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆண்டிற்கான பேரவை விதிகள் குழுவிற்கு (Committee on Rules) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்
7. அரசு தலைமைக் கொறடா
8. திரு. அன்பில் பொய்யாமொழி
9. திருமதி கோமதி சீனிவாசன்
10. திரு. ஏ.ஜி. சம்பத்
11. திரு. வீ. தமிழ்மணி
12. திரு. ப. பாலசுப்பிரமணியன்
13. திரு. ஜி. கே. மணி
14. திரு. எஸ். எஸ். மணி நாடார்
15. திரு. கே. ஆர். இராமசாமி
16. திரு. கே. தங்கமணி
17. திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்



1999 மே 18] [பேரவைத் தலைவர்]

பேரவை விதி 256 (1)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

### (9) அவைக் குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு (House Committee) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்.

1. திரு. எல். மூக்கையா
2. திரு. க. கன்னையன்
3. திரு. சி. கோபு
4. திரு. கோ. சண்முகம்
5. திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்
6. திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்
7. திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்
8. திரு. எஸ். டேவிட் செல்வின்
9. திரு. அ.ல. தங்கவேல்
10. திரு. உ. திசைவீரன்
11. திரு. கோ. நயினா முகமது
12. திரு. வி. பெருமாள்
13. டாக்டர் அ. மணி
14. திரு. ச. அழகிரி
15. திரு. ச. புரட்சிமணி
16. திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்
17. திரு. லி. அய்யலுசாமி
18. திரு. பி. வெங்கடசாமி

பேரவை விதி 253(1)-ன்கீழ் திரு. எல். மூக்கையா அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

### (10) மனுக்கள் குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆண்டிற்கான மனுக்கள் குழுவிற்கு (Committee On Petitions) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்.

1. திரு. பா.மு. முபாரக்
2. திரு. வ. அன்பழகன்
3. திரு. பா. அருண்குமார்
4. திரு. அ. அசோகன்
5. திரு. வி.ஜி. தனபால்
6. திரு. ச. நாகரத்தினம்
7. திரு. பொ. முருகேசன்
8. திரு. கோ. மோகனதாசன்
9. திரு. மு. அப்பாவு
10. திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்
11. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்

பேரவை விதி 261(3)-ன்கீழ் திரு. பா.மு. முபாரக் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

### (11) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு (Committee on Papers Laid on the Table of the House) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்.

1. திரு. ஐ. கணேசன்
2. திரு. ஆர். காந்தி
3. திரு. ஏ. கோதண்டம்
4. திரு. வெ. கோவிந்தன்
5. திரு. ஆர். சக்ரபாணி
6. திரு. ச. அழகுவேலு



7. திரு. ஜி. சொக்கலிங்கம்
8. திரு. கோ. தளபதி
9. திரு. டி. அமரமூர்த்தி
10. டாக்டர் அ. செல்லக்குமார்
11. திரு. டி. மணி

பேரவை விதி 268(2)-ன்கீழ் திரு. ஐ. கணேசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

பிற்பகல் 12-25

### (12) பேரவை நூலகக் குழு-உறுப்பினர்கள் நியமனம்

1999-2000 ஆண்டிற்கான பேரவை நூலகக் குழுவிற்கு (Library Committee) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:-

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. திரு. கோ. இளங்கோ
3. டாக்டர் காஞ்சனா கமலநாதன்
4. திரு. எஸ்.கே. வேதரத்தினம்
5. திரு. ச.க. வெங்கடேசன்
6. திரு. என். பெரியசாமி
7. திரு. சி.டி. தண்டபாணி
8. திருமதி ஆன் டி' மான்டி
9. திரு. ஆ.மு. முனிரத்தினம்
10. திரு. ப. மோகன் கந்தசாமி

பேரவை விதி 264(3)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார்.

[1999 மே 18

## 12. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மாத காலம் நம்முடைய கூட்டத் தொடர் நடந்து, இன்று இறுதி நாள். மரபின் அடிப்படையில் சில புள்ளிவிவரங்களை வைப்பது வழக்கம்.

இந்த இரண்டு மாதங்களிலே பல முக்கிய நிகழ்வுகள் நடந்ததை நாம் அனைவரும் அறிவோம்.

குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் ஒருவர் தாக்கப்பட்டு, அதன் காரணமாக எழுந்த சட்டப் பிரச்சினையில், நீதிமன்றமா, சட்டமன்றமா என்ற பிரச்சினை இன்றும் தீராமல் இருப்பது இந்தக் கூட்டத் தொடரிலே நடந்ததுதான்.

பேரவைத் தலைவர் என்ற முறையில், இதிலே கடுமையாக நின்று போராட வேண்டுமென்ற கருத்து எனக்கு இருந்தாலும், நீண்ட பல ஆண்டுகள் இந்தச் சட்டமன்றத்திலேயே- அதிக ஆண்டுகள்- பேரவை உறுப்பினராக இருந்து- பழுத்த அனுபவத்தின் காரணமாக- நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களின் அறிவுரைப்படி, நிதானத்தைக் கடைபிடித்து, அதன் காரணமாக நீதிமன்றம் மட்டுமல்லாமல், எல்லாப் பத்திரிகைகளும் இந்த நிதானம் வரவேற்கத்தக்கது என்று பாராட்டும், ஒரு நல்ல சூழ்நிலையிலே இறுதியாகப் பேரவையின் இறையாண்மைக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இந்த நல்ல பாதையிலே சென்றதற்கு வழிகாட்டிய மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பதினோராவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 17-2-1999 அன்று தொடங்கி 24-2-1999 வரை நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் 17-3-1999 அன்று தொடங்கி இன்று 18-5-1999 வரை நடைபெற்றுள்ளது.

| | |
|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட) .. | 48 |
| மாலையிலும் பேரவை கூடிய நாள் .. | 1 |

அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் 182 மணி 03 நிமிடம்



1999 மே 18] [பேரவைத் தலைவர்]

மேதகு ஆளுநர் அவர்கள் 17-2-1999 அன்று பேரவையில் உரையாற்றினார்கள்.

| | |
|---|---|
| ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. | 5 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் .. | 39 |

உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் 9 மணி 26 நிமிடம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் 1 மணி 27 நிமிடம்

*நிதி அலுவல்கள்:*

1999-2000 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 17-3-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

| | |
|---|---|
| வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. | 6 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் .. | 34 |

உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் 9 மணி 6 நிமிடம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் 1 மணி 52 நிமிடம்

| | |
|---|---|
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள் | 28 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 304 |

உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் 55 மணி 8 நிமிடம்

மானியக் கோரிக்கைகள் விவாதத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள்— அதிகமாகப் பேசுகின்றவர்கள் யார் என்று நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும் - அதிலே முதலிடம் பெறுகின்றவர் நம்முடைய வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன். 2 மணி நேரம் 12 நிமிடம். அதற்குப் பிறகு திரு. பி. ஆர். சுந்தரம், திரு. டி. மணி, திரு. ஜி.கே. மணி, திரு. சி. வேலாயுதன், திரு. ஐ. கணேசன்,

திரு. ம. அப்துல் லத்தீப், திரு. கே. சுப்பராயன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. நா. பெரியசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. லா. சந்தானம், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. மு. அப்பாவு, திரு. வி.கே. லட்சுமணன், திரு. பி. வெங்கடசாமி, இவர்கள் அனைவரும் ஒரு மணி நேரத்திற்கு மேலே இந்த மானியக் கோரிக்கைகளிலே பேசியவர்கள்.

பிற்பகல் 12-30

திரு. சி. ஞானசேகரன், பேசிய மானியக் கோரிக்கைகள் 8, பேசிய நேரம் 2 மணி, 12 நிமிடம். இது இந்தச் சட்டமுன்வடிவில் பேசியது அல்லாமல். ஏனென்றால் இன்றைக்காவது என்னைப் பேச விடுங்கள் என்று நேற்று கேட்டார். அதற்காகத்தான் சொல்கிறேன். (சிரிப்பு) ஆரம்பத்திலேயிருந்து பேசிக்கொண்டிருக்கிற ஒரே உறுப்பினர் அவர்தான். திரு. பி.ஆர். சுந்தரம், 8 மானியக் கோரிக்கைகளில் பேசியிருக்கிறார். 1 மணி நேரம் 40 நிமிட நேரம் பேசியிருக்கிறார். திரு. டி. மணி, (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு) 10 மான்னியக் கோரிக்கைகளில் 1 மணி 39 நிமிட நேரம் பேசியிருக்கிறார். திரு. ஜி.கே. மணி, பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் 10 மானியக் கோரிக்கைகளில் 1 மணி 38 நிமிட நேரம் பேசியிருக்கிறார். திரு. சி. வேலாயுதன், பாரதிய ஜனதா கட்சி, பேசிய மானியக் கோரிக்கைகள் 10, பேசிய நேரம் 1 மணி 34 நிமிடம். திரு. ஐ. கணேசன் பாட்டாளி மக்கள் கட்சி, பேசிய மானியக் கோரிக்கைகள் 5, பேசிய நேரம் 1 மணி 32 நிமிடம். திரு. அப்துல் லத்தீப், நான்கு மானியக் கோரிக்கைகள், 1 மணி நேரம் 30 நிமிடம் பேசியிருக்கிறார். திரு. கே. சுப்பராயன், 6 மானியக் கோரிக்கைகளில் 1 மணி 29 நிமிடம், திரு. எஸ். திருநாவுக்கரசு, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க உறுப்பினர், பேசிய மானியக் கோரிக்கைகள் 4, பேசிய நேரம் 1 மணி 26 நிமிடம். திரு. நிஜாமுதீன், பேசிய மானியக் கோரிக்கைகள் 9, பேசிய நேரம் 1 மணி 24 நிமிடம். திரு. நா. பெரியசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பேசிய மானியக் கோரிக்கைகள் 7, பேசிய நேரம் 1 மணி 19 நிமிடம். அதைப்போல், டாக்டர் க. கிருஷ்ணசாமி, புதிய தமிழகம், 6 மானியக் கோரிக்கைகளில் 1 மணி 16 நிமிடம். திரு. ஜி. பழனிசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 5 மானியக் கோரிக்கைகள், 1 மணி 13 நிமிடம், திரு. லா. சந்தானம், பார்வர்டு பிளாக், 6 மானியக் கோரிக்கைகள், 1 மணி 08 நிமிடம் பேசியிருக்கிறார்கள். திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், தமிழ் மாநில





காங்கிரஸ், 5 மானியக் கோரிக்கைகளில் 1 மணி 04 நிமிடம். எதிர்க் கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன், தமிழ் மாநில காங்கிரஸ், 3 மானியக் கோரிக்கைகளில் 1 மணி 04 நிமிடம் பேசியிருக்கிறார்கள். இது எதிர்க் கட்சித் தலைவர் என்பதற்கு அப்பாற்பட்டு பேசியது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், 6 மானியக் கோரிக்கைகளில் 1 மணி 02 நிமிடம், திரு. மு. அப்பாவு, தமிழ் மாநில காங்கிரஸ், 5 மானியக் கோரிக்கைகள், 1 மணி 02 நிமிடம், திரு. வி.கே. லட்சுமணன், தமிழ் மாநில காங்கிரஸ், 4 மானியக் கோரிக்கைகள், 1 மணி நேரம் 01 நிமிடம், திரு. பி. வெங்கடசாமி, 7 மானியக் கோரிக்கைகளில் 55 நிமிடம் பேசியிருக்கிறார்கள்.

விவாதங்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதிலளித்த மொத்த நேரம் 20 மணி 22 நிமிடங்கள். அதில் மாண்புமிகு முதலமைச்சர் மட்டும் 2 மணி 50 நிமிடங்கள் பதிலளித்துள்ளார்கள். இதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. ஆளுங்கட்சிக்குப் பொதுவாக வாய்ப்புகள் மிகவும் குறைவாகத்தான் இருந்தன என்பதை மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். காரணம் இந்த அவையில் பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர்கள் நீங்கலாக மொத்தமுள்ள உறுப்பினர்களில் 67.30 சதவீதம் உறுப்பினர்களைப் பெற்று ஆளுங்கட்சி பெரும்பான்மையாக உள்ளது என்பதையும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் பேசிய 39 உறுப்பினர்களில், ஆளுங்கட்சியினர் 12 பேர்தான். அதாவது 30.76 சதவீதம். உறுப்பினர்கள் பேசிய மொத்த நேரத்தில் ஆளுங்கட்சியினர் எடுத்துக் கொண்ட நேரம் 23.32 சதவீதம்தான்.

அதேபோன்று வரவு செலவுத் திட்டப் பொது விவாதத்தில் பேசிய 34 உறுப்பினர்களில் ஆளும் கட்சியினர் 13 பேர்தான். அதாவது 38 சதவீதம். மொத்த நேரம் அவர்கள் எடுத்துக் கொண்டது 28.93 சதவீதம். 28 நாட்கள் நடைபெற்ற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் 304 உறுப்பினர்கள் பேசி உள்ளார்கள். அவர்களில் ஆளும் கட்சியினர் 93 பேர்தான், அதாவது 30.59 சதவீதம். ஆளும் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கைப்படி 67 சதவீதம் இருந்தாலும் விவாதங்களைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மிக அதிக அளவுக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதற்குப்

பெரும் காரணமாக இருந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். வினாக்கள் விடைகளைப் பொறுத்தவரையும் இதுபோன்ற நிலையே உள்ளது.

இந்தக் கூட்டத் தொடரில், ஆளுங்கட்சியில் 41 பேரும், பிரதான எதிர்க் கட்சியான தமிழ் மாநில காங்கிரசில் 7 பேரும், பாட்டாளி மக்கள் கட்சியில் ஒருவரும் எந்த விவாதத்திலும் பங்கேற்க வாய்ப்புப் பெறவில்லை.

வெட்டுத் தீர்மானங்கள்

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | .. | 4706 |
| அனுமதிக்கப்பெற்றவை | .. | 4404 |
| அவையில் முன்மொழியப் பெற்றவை | .. | 873 |
| இறுதித் துணை மானியக் கோரிக்கைக்குப் பெறப்பட்டவை. | | 306 |
| அவை முன் வைக்கப்பட்டவை | .. | 166 |
| விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள். | | 61 |

வினாக்கள் - விடைகள்

சென்ற ஆண்டு வரவு செலவுக் கூட்டத் தொடர் முடிவுற்ற 30-5-1998 முதல் 17-5-1999 வரை சுமார் ஓராண்டில் சட்டமன்ற உறுப்பினர்களிடம் இருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் - 9095.

| | | |
|---|---|---|
| அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | .. | 101 |
| அனுமதிக்கப்பெற்றவை - மொத்தம் | .. | 4865 |
| உடுக்குறியிட்டவை | .. | 2348 |
| உடுக்குறியிடாதவை | .. | 2503 |

பிற்பகல் 12-35

அனுமதிக்கப்பெற்றவர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ஐ. கணேசன்-பா.ம.க. | .. | 2132 |
| 2. | திரு. ஜி.கே. மணி-பா.ம.க. | .. | 1275 |



| | | | |
|---|---|---|---|
| 3. | திரு. மா. இராமச்சந்திரன்-தி.மு.க. | .. | 916 |
| 4. | திரு கே. சுப்பராயன்-இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | .. | 870 |
| 5. | திரு. கே. ரவி அருணன்-த.மா.கா. | .. | 678 |

உடுக்குறியிட்டவை

| | | |
|---|---|---|
| அவையில் விடையளிக்கப்பட்டவை | .. | 772 |

அவற்றில் அதிக அளவில் மூல வினாக்கள் கேட்டவர்கள்

| | | |
|---|---|---|
| திரு. ஐ. கணேசன் | .. | 35 |
| திரு. கே. சுப்பராயன் | .. | 28 |
| திரு. ஜி.கே. மணி | .. | 25 |
| திரு. க. மணிவர்மா | .. | 21 |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | .. | 21 |
| திரு. கே. ரவி அருணன் | .. | 20 |
| திரு. செங்கை சிவம் | .. | 20 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | .. | 18 |
| திரு. ஆர்.ஆர். சேகரன் | .. | 17 |
| திரு. சி. ஞானசேகரன் | .. | 16 |
| மாண்புமிகு முதலமைச்சர் தன் கீழுள்ள துறைகள் சார்பாக விடையளித்தவை | .. | 15 |
| மற்ற அமைச்சர்களின் வினாக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கூடுதல் விளக்கம் அளித்த நிகழ்வுகள் | .. | 12 |
| மொத்த துணை வினாக்கள் | .. | 1293 |

அதிக துணை வினாக்கள் கேட்டவர்கள்

1. திரு. கே. சுப்பராயன்
2. திரு. சி. ஞானசேகரன்

3. திரு. ஐ. கணேசன்
4. திரு. வை. சிவபுண்ணியம்
5. திரு. டி. மணி
6. திரு. ஜி.கே. மணி
7. திரு. கே. ரவி அருணன்
8. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
9. திரு. மீ.அ. வைதியலிங்கம்
10. திரு. க. மணிவர்மா
11. திரு. அ.வ. அப்துல் நாசர்
12. திரு. செங்கை சிவம்
13. திரு. லா. சந்தானம்
14. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்
15. திரு. இரா. மணிமாறன்
16. திரு. மு. அப்பாவு.

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் .. 39

வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் .. 23

நீட்டிக்கப்பட்ட நேரம் .. 2 மணி 7 நிமிடங்கள்

உடுக்குறியிடாதவை .. 964

உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் .. 722

*சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்:*

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருள்கள் குறித்து சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற வகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவை .. 32



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தவை .. 18

எடுத்துக்கொள்ளப்பட்ட நேரம் .. 16 மணி 13 நிமிடங்கள்

பங்குகொண்ட உறுப்பினர்கள் .. 163

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் அவையில் எழுப்பப்பெற்றவை .. 2

உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டவை .. 2

*அரசினர் சட்டமுன்வடிவுகள்:*

வரப்பெற்றவை .. 38

நிறைவேற்றப்பெற்றவை .. 37

இவற்றில், மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவதைத் தடுக்கும் அரசினர் தனித் தீர்மானம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதாகும்.

**விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்:**

மொத்தம் அளிக்கப்பட்டவை .. 14

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்தவை .. 5

**அரசினர் தனித் தீர்மானம்:**

வரப்பெற்றவை .. 4

நிறைவேற்றப்பெற்றவை .. 4

**தனி உறுப்பினர் தீர்மானம்:**

வரப்பெற்றவை .. 2

விவாதிக்கப்பெற்றவை .. 1

**பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்த அறிக்கைகள்:**

பொதுக் கணக்குக் குழு .. 49

பொது நிறுவனங்கள் குழு .. 22

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டுக் குழு | .. | 9 |
| மனுக்கள் குழு | .. | 6 |
| அரசு உறுதிமொழிக் குழு | .. | 2 |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | .. | 1 |
| சட்டவிதிகள் ஆய்வுக் குழு | .. | 1 |
| அவை உரிமைக் குழு | .. | 1 |
| விதிகள் குழு | .. | 1 |

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்:

| | | |
|---|---|---|
| (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும் | .. | 192 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் | .. | 277 |
| அவற்றில் விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் | .. | 3 |
| உயர்மட்டக் குழு அறிக்கைகள் | .. | 3 |

இக்கூட்டத் தொடரில், 17-2-1999 முதல் அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல் பின்வருமாறு:

1. திரு. அ. அசோகன்
2. திரு. லி. அய்யலுசாமி
3. திரு. ச. அழகுவேலு
4. திரு. வ. அன்பழகன்
5. திரு. பால. ஆனந்தன்
6. டாக்டர் வை. இராமசாமி
7. திரு. ந.பூ. இராமஜெயம்
8. டாக்டர் காஞ்சனா கமலநாதன்
9. திரு. ஏ. கோதண்டம்



10. திருமதி கோமதி சீனிவாசன்
11. திரு. சி. சண்முகம்
12. திருமதி ஆர். சரஸ்வதி
13. திரு கே. சுந்தர்
14. திரு. கே. சுப்பராயன்
15. திரு. செங்கை சிவம்
16. திரு. குழந்தை தமிழரசன்
17. திரு. ஆர். தமிழ்ச்செல்வன்
18. திரு. வீ. தமிழ்மணி
19. திரு. உ. திசைவீரன்
20. திரு. பெ. சு. திருவேங்கடம்
21. திரு. கொ.வீ. நன்னன்
22. திரு. மு. பன்னீர்செல்வம்
23. திரு. ந. பாண்டுரங்கன்
24. திரு. இ. புகழேந்தி
25. திரு. டி. மணி
26. திரு. செ. மதிவாணன்
27. திரு. ச.க. வெங்கடேசன்
28. திரு. மீ.அ. வைதியலிங்கம்
29. திரு. சி. வெ. கிருஷ்ணன்

மொத்தம் 29 பேர். இவர்களில் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் 26 பேர். மற்ற கட்சியினர் 3 பேர்.

இந்தப் பட்டியல், உறுப்பினர்கள் வருகைப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். மாண்புமிகு அமைச்சர்கள் இப்பதிவேட்டில் கையொப்பம் இடுவதில்லை என்பதால்

அவர்கள் அனைத்து நாட்களும் அவைக்கு வருகை புரிந்திருந்தாலும் அவர்களது பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடல் நலம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட 2,3 நாட்கள் தவிர, அநேகமாக அனைத்து நாட்களும் அவைக்கு வந்து விவாதங்களில் பங்கு கொண்டு பல விளக்கங்களை அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல நேரங்களில் தன் உடல்நிலை குறித்து மருத்துவர்கள் தெரிவித்த ஆலோசனையைக்கூட புறக்கணித்துவிட்டு, பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொண்டுள்ளார்கள். திருமணம் போன்ற விழாக்களுக்குச் செல்லவேண்டியிருந்தால், தான் அவைக்குக் காலதாமதமாக வர நேரிடும் என்று என்னிடம் முன்கூட்டியே அறிவிப்பார்கள். ஆனால், அத்தகைய நாட்களிலும்கூட வழக்கம்போல அவை தொடங்குவதற்கு முன்னரே என்னுடைய அறைக்கு வந்துவிட்டு 'சீக்கிரம் முடித்துவிட்டு வந்துவிட்டேன்' என்று சொல்வார்கள். அந்த அளவுக்குச் சட்டமன்ற நடவடிக்கைகளில் பவளவிழா கொண்டாடும் இந்த வயதிலும் தொடர்ந்து அவர் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

சட்டமன்ற நடவடிக்கைகளிலே அவர் காட்டும் பொறுப்புணர்ச்சியையும் கடமையுணர்ச்சியையும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பின்பற்ற வேண்டுமென்று பேரவைத் தலைவர் என்ற முறையிலே நான் விரும்புகிறேன்.

*பார்வையாளர்கள்:*

*பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்:*

| | | |
|---|---|---|
| ஆண்கள் | .. | 11,772 |
| பெண்கள் | .. | 930 |

பேரவைத் தலைவர் மாடம் மற்றும் பேரவைத் தலைவர் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள வரிசைகளில் அனுமதிக்கப் பெற்றவர்கள் 8767.

20-2-1999 அன்று இலங்கைத் தூதர் திரு. பே. மங்கல மூணசிங்கே பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுற்றார்.



*நூலகம்:*

| | | |
|---|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | .. | 704 |
| வழங்கப்பெற்ற நூல்கள் | .. | 730 |
| இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள் | .. | 637 |

*நடவடிக்கைக் குறிப்புகள்:*

| | | |
|---|---|---|
| இக்கூட்டத் தொடரில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் இன்றி) | .. | 955 |
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள் | .. | 10161 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | .. | 3079 |
| தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | .. | 995 |

*சிறப்பு அம்சங்கள்:*

பொருளாதாரம் மற்றும் மாநில வரவு-செலவு மேலாண்மை குறித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விளக்க, கருத்தரங்கம் ஒன்று ஏப்ரல் திங்கள் 7 மற்றும் 8 தேதிகளில் மாலையில் நடைபெற்றது.

தென் மாவட்ட மக்களின் மேம்பாட்டுத் திட்டங்களை வகுக்க உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது, தமிழ்நாடு மின்வாரியத்தில் சுமார் 11,000 ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நிரந்தரம் செய்தல், 1000 பெண் காவலர்கள் உட்பட 5000 காவலர்களை இந்த ஆண்டு நியமித்தல், கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு அளித்தல், புதியதாக அரியலூர் மாவட்டம் ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல் போன்றவை குறிப்பிடத்தக்க அறிவிப்புகளாகும்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொலைபேசிப் படி, ரெயில்வே பயணச் சலுகை ஆகியவற்றை உயர்த்தியதற்கும், வரலாற்றிலேயே முதல் முறையாக தொகுதி உறுப்பினர்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்ட முடிவு செய்துள்ளதற்கும், முன்னாள் சட்டமன்ற

உறுப்பினர்களுக்கு மருத்துவப்படி வழங்கியதற்கும், ஓய்வூதியத்தை அதிகரித்ததற்கும், அவர்கள் மறைவுக்குப் பிறகு வாரிசுதாரருக்கு குடும்ப ஓய்வூதியம் அளிக்கவிருப்பதற்கும் உறுப்பினர்களின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பேரவை முன்னவர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பேரவைக் கூட்டத் தொடர் சிறப்பாக நடந்து முடிய உதவி செய்த அனைத்து உறுப்பினர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களில் முதன்மையாக, அவையை நடத்துவதில் எனக்கு அனைத்து வகைகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து, எனக்குப் பாதையைக் காட்டி அழைத்துச் சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கட்சித் தலைவர்கள், எனக்கு உறுதுணையாக இருந்த பேரவை மாற்றுத் தலைவர்களான திரு. சி.டி. தண்டபாணி, டாக்டர் காஞ்சனா கமலநாதன், திரு. பெ. ஆசையன், டாக்டர் ஆ. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகும்.. அரசு தலைமைக் கொறடா மற்றும் மற்ற கட்சிக் கொறடாக்களுக்கும் எனது நன்றி.

இக்கூட்டத் தொடர் நல்லமுறையில் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. டி. சாலமன் ஜெயபால் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் இதர அலுவலர்கள்,. நிருபர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் இத்தருணத்தில் எனது நன்றியும் பாராட்டும்.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் ஒலிபெருக்கி மற்றும் இதர வசதிகள் செய்த பொதுப்பணித் துறையினருக்கும், பேரவைக் காவலர்களுக்கும், மின்னணு கடிகாரத்தைப் பராமரித்த திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும் நன்றி.

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளை நாட்டு மக்களுக்கு உடனுக்குடன் எடுத்துச் சென்றதில் பத்திரிகைகளுக்கும், வானொலி,



தொலைக்காட்சிகள் மற்றும் செய்தி நிறுவனங்களுக்கும் மிகப் பெரிய பங்கு உண்டு. சட்டமன்றத்தில் எவ்வளவுதான் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றாலும், அந்த உணர்வுகளையெல்லாம் செய்திகளாக நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற மிக உயர்ந்த, உன்னதப் பணியினைச் செய்திட்ட அந்தச் செய்தி அமைப்புகளுக்கும், செய்தியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த சட்டமன்றக் கூட்டம் 6 மாதங்கள் கழித்துத்தான் கூடும்.

அதற்கு இடையிலே என்ன அரசியல் மாற்றங்கள் ஏற்படும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்பாக பேசிய நேரத்தில், அரசியலிலே நிலை எப்படி மாறினாலும், கடந்த மூன்றாண்டுக் காலமாக, இங்கே இருக்கின்ற பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள், எப்படி நாம் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் நடந்து கொண்டோமோ, அதைப்போல தொடர்ந்து நல்ல முறையிலே நாம் அனைவரும் செயலாற்ற வேண்டுமென்ற தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் விருப்பத்தையும், என்னுடைய விருப்பமாகத் தெரிவித்து, அரசியலில் எந்த மாறுபாடு ஏற்பட்டாலும், இங்கே காட்டுகின்ற தோழமை உணர்வோடு தொடர்ந்து இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

எல்லாவற்றுக்கும் மேலாக இரண்டு வார காலத்தில் தனது 76-வது பிறந்த நாளைக் கொண்டாட இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 60 ஆண்டுக் காலமாக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் தொண்டு செய்தவர்கள். அரசியலிலே எந்த நிலை மாறினாலும், அவர்கள் தொடர்ந்து நல்ல உடல் நலத்தோடு தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று, நல்வாழ்த்தினை-பேரவையின் எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்-பேரவையின் சார்பிலே, எல்லா உறுப்பினர்களின் சார்பிலே, பேரவைத் தலைவர் என்ற முறையிலே என் சார்பிலும்-தெரிவித்து மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 13. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது.

வணக்கம்.

பின்னர், பேரவை 12-47 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.



## 14. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

190. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்.)

191. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் முதல் ஆண்டறிக்கை (1993ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்.)

192. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1998-99ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு [1948ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

261. டாக்டர் க. கிருஷ்ணசாமி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் பிரச்சினை மீதான உரிமைக் குழுவின் அறிக்கை.

262. மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை, 1998-99.

263. மதிப்பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

264. மதிப்பீட்டுக் குழுவின் இருபதாவது அறிக்கை, 1998-99.

265. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை, 1998-99.

266. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை, 1998-99.

267. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை, 1998-99.

268. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை, 1998-99.

Y21'.21'·1 N94.6



269. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை, 1998-99.

270. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (15-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

271. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (16-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

272. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (17-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை)

(உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

273. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (18-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை)

(உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

274. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (19-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை)

(உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

275. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (20-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 122 வரை)

(உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

276. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (21-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 14 வரை)

277. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின்மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண்கள் 1 முதல் 54 வரை)

2,21,201

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.